# டில்லி சுல்தானியத்தின் வரலாறு

டி. ஆர். இராமச்சந்திரன்,

ாட்டுப் பாடநூல் நிறுவனம்

9660

த. பா. நி. (க.வெ.) வரிசை எண் — 775

# டில்லி சுல்தானியத்தின் வரலாறு

(கி. பி. 1320 முதல் 1526 வரை)

## இரண்டாம் பாகம்

(மேற்பட்டப் படிப்பிற்குரியது)

ஆசிரியர்

பேராசிரியர் டி.ஆர். இராமச்சந்திரன், எம்.ஏ., எம்.லிட்.,

வரலாற்றுத்துறைத் தலைவர்,

பச்சையப்பன் கல்லூரி,

சென்னை.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—November, 1977
Number of copies—1000

T.N.T.B.S. (C.P.) No. 775

© Government of Tamilnadu

Bharathiar University
Library
9660
D R RAMACHANDRAN

**HISTORY OF THE DELHI SULTANATE**

(From 1320 to 1526 A.D.)—PART II

T. R. RAMACHANDRAN

**Price Rs. 8-60**

Published by the Tamilnadu Textbook Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

*Printed by*
MEIPPORUL PRINTERS,
20, Konnur High Road,
Ayanpuram, Madras-600 023.

# அணிந்துரை

*(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)*

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினேழாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன் வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகமும் சென்னைப் பல்கலைக் கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப் பிட்டுச் சொல்ல வேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணித வியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளி யியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூலநூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இருவகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான டில்லி சுல்தானியத்தின் வரலாறு (கி.பி. 1320 முதல் 1526 வரை) (இரண்டாம் பாகம்) என்னும் இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 775ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 810 நூல்கள் வெளிவந்துள் ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் ‘மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட’த் தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம்பெற வேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கலையியற் பாடங்களை யும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங் களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளரவேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு, ஆற்றல் எளிதாக, விரைவாக வளர வேண்டும் என்பதுதான். ‘எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்’ என்னும் குறிக்கோளை நிறை வேற்றவேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக!

செ. அரங்கநாயகம்

# பொருளடக்கம்


பக்கம்

1. துக்ளக்குகள் ... 1

தோற்றம் — கியாஸ் உத்தீன் துக்ளக்.

2. முகமது பின் துக்ளக் ... 22

பொதுக் கருத்துகளும் மனப்பான்மையும் — ஆட்சிமுறை சார்ந்த நடவடிக்கைகள் — அன்னிய நாடுகளின் மீதான படையெடுப்பு — கலகங்கள் — மதிப்பீடு.

3. பிரூஸ் ஷா ... 87

போர் நடவடிக்கைகள் — உள்நாட்டு நிருவாகம் — மதிப்பீடு.

4. பிரூஸ் ஷாவிற்குப் பின்னர் ஆண்ட துக்ளக் அரசர்கள் ... 115

தைமூரின் படையெடுப்பு.

5. சையத்து அரசர்கள் ... 132

கிஸிர்கான் — முபாரக் ஷா — முகமது ஷா — அலாவுத்தீன் ஆலம் ஷா.

6. லோடி அரசர்கள் ... 182

பஹ்லூல் லோடி — சிக்கந்தர் லோடி — இப்ராஹீம் லோடி.

ABBREVIATIONS ... 239

பிழைதிருத்தம் ... 239

# 1. துக்ளக்குகள்

## தோற்றம்

'துக்ளக்' என்பது ஒரு குடும்பம்; அல்லது ஓர் இனத்தைக் குறிக்கும் சொல் எனச் சிலர் கூறுகின்றனர்[1]. வேறு சிலர் இஃது ஒரு தனி மனிதனுடைய பெயராகும் என்று கூறுகின்றனர். அமீர்குஸ்ரூ, தம்முடைய துக்ளக் நாமாவில் 'உம்முடைய பெயர் துக்ளக் காஜி' என்றும், அக் காலத்தில் வாழ்ந்த மங்கோலியத் தலைவர் ஒருவர் 'துக்ளக்' என்ற பெயரை வைத்துக் கொண்டிருந்தார் என்றும் கூறியுள்ளார்[2]. அந்த அரச குலத்தின் முதல் அரசர் பெயர் சுல்தான் துக்ளக், இரண்டாவது அரசரின் பெயர் சுல்தான் முகமது என்று அஃபீப் எழுதியுள்ளார்[3]. அந்த அரச குலத்தின் இரண்டாவது அரசர் முகமது பின் துக்ளக் என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டுள்ளார். அதற்குத் துக்ளக்கின் மகன் முகமது என்று பொருள்[4]. அவருக்குப் பின், பட்டமெய்திய வர்கள் துக்ளக் என்ற சொல்லைத் தங்கள் பெயருடன் இணைத்துக் கொள்ளவில்லை[5]. அது குடும்பம் அல்லது இனத்தினுடைய பெயராக இருந்திருந்தால், அக் குலத்தைச் சார்ந்த அரசர்கள் அனைவரும் துக்ளக் என்ற சொல்லை எப்போதும் பயன்படுத்தி இருப்பார்கள். நாணயங்களும் சாசனங்களும் துக்ளக் என்பது ஒரு தனி மனிதனின் பெயர் என்பதை வலியுறுத்துகின்றன. சில நேரங்களில் தனி மனிதனுடைய பெயர் ஒரு குடும்பத்திற்கு அளிக்கப்படுவதுண்டு. அந்த முறையைப் பின்பற்றித் துக்ளக், அவரைப் பின்தொடர்ந்த அரசர்கள் ஆகியோரைத் துக்ளக் அரச குலத்தினர் என்று கூறலாம்.

அடுத்த பிரச்சினை துக்ளக்குகள் யார் என்பதாகும். சுல்தான் துக்ளக், துருக்கிய இனங்களுள் ஒன்றான கரோனு இனத்தைச் சார்ந்தவர் என்று இபின் பதூதா கூறுகிறார். கரோனு துருக்கியர்கள் துருக்கிஸ்தானத்திற்கும் சிந்து மாநிலத்திற்கும் இடையேயுள்ள மலைப்பாங்கான இடங்களில் வாழ்ந்து வந்த தாகவும் அவர் கூறுகிறார். இந்த விவரங்களை ஷெயிக்ருக்னுத்தீன்

[1] CHI, III 127 f. n.
[2] Tughluqnamah, p. 138.
[3] Tarikh-i-Firuzshahi, p. 27.
[4] H C I P., V, p. 52.
[5] *ibid.*

மூல்தானி என்ற புகழ்பெற்ற சுராவர்த்தி ஞானியிடமிருந்து அறிந்ததாகவும் அவர் கூறியுள்ளார்[1]. கரோனுக்கள் ஒரு கலப்பட சாதியினர் என்று மார்கோ போலோ என்ற அயல் நாட்டுப் பயணி கூறுகிறார். கரோனுக்கள் தாதாரிய தந்தைகளுக்கும் இந்தியத் தாய்மார்களுக்கும் பிறந்தவர்கள் என்றும், இந்த அயோக்கியர்களின் அரசர், நகோடர் என்று அழைக்கப் படுகிறார் என்றும் அவர் கூறியுள்ளார்[2]. மார்கோ போலோவின் கருத்தை நாம் ஏற்க இயலாது. ஏனெனில், பாரசீக மங்கோலியர்கள்பற்றிய வரலாறுகளில் கரோனுக்கள் பெயர் அடிக்கடி கூறப்பட்டுள்ளது. 10,000 கரோனுக்கள் அடங்கிய ஒரு படைப் பிரிவு இருந்ததாக நாம் அறிகிறோம். தாரீக்-இ-ரஷீதியில் இரு மங்கோலிய வகுப்புகள்பற்றிய குறிப்புகள் உள்ளன. அவர்கள் ஒருவரை ஒருவர் கேலிப்பெயரைக் கொண்டு அழைத்துவந்தார்கள். ஷகடைகள், கரவானுக்கள் என்ற பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டனர். தாரீக்-இ-ரஷீதியை மொழிபெயர்த்த நே இலியாஸ் என்பவர், இதைப்பற்றி விசாரித்தபோது, மத்திய ஆசியாவில் வாழ்ந்து வந்தவர்களுள் ஒரு பகுதியினர் கரோனுக்கள் என தெரியவந்தது என்று கூறுகிறார். தொடக்க காலத்தில் மங்கோலியர்கள் பாரசீகத்தின்மீது படையெடுத்த போது கரோனுக்கள் முக்கிய பங்கினை வகித்தனர் என்றும் அப்போது தெரியவந்ததாகக் கூறியுள்ளார்[3]. 'கரோனு' என்பது, சமஸ்கிருத கரனு என்ற சொல்லிலிருந்து பிறந்தது என்றும் அச் சொல் க்ஷத்திரிய தகப்பனுருக்கும் சூத்திரத் தாயாருக்கும் பிறந்தவரைக் குறிக்கும் என்றும் மிஜிக் (Mzik) கூறியுள்ளார். மேற்கூறியவற்றிலிருந்து அந்நிய நாட்டு வரலாற்றாசிரியர்கள் கரோனுக்களை மூன்று இனத்தவர்களோடு—அதாவது துருக்கியர், மங்கோலியர், இந்தியர்—இணைத்துக் கூறியுள்ளார்கள் என்பது புலப்படும். அதே நேரத்தில் கரோனுக்களை அவர்கள் கலப்படச் சாதியினராகக் கூறியிருக்கின்றனர் என்பது தெரியவரும்.

இந்திய முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் கரோனுக்களைப்பற்றி எழுதாதது ஒரு குறையாகும். ஃபெரிஷ்டா லாகூருக்குச் சென்று சுல்தான் துக்ளக்கின் பிறப்பைப்பற்றி விசாரித்தபோது, அவர் துருக்கிய தந்தைக்கும் ஒரு ஜாத் பெண்ணுக்கும் பிறந்தவர் என்பதாகக் கூறப்பட்டதாம். இம்மாதிரியான திருமணங்கள் அப்போது நடைபெற்றன என்பதில் ஐயமில்லை. சுல்தான்

[1] Ibn-Batuta, Paris Ed. III, p. 201.

[2] Cordier, Travels of Marco Polo I, p. 98.

[3] Elias and Ross, A History of the Moghuls of Central Asia, Appendix B, pp. 76 - 77.

பிருஸ்ஷாவின் சகோதரன் ஒரு இரஜபுத்திரப் பெண்ணை மணங் கொண்டார் என்பதை நாம் அறிகிறோம்.

இப் பிரச்சினையைப்பற்றிப் ஃபெரிஷ்டா நமக்களித்திருக்கும் விவரங்களை, அன்னிய நாட்டு வரலாற்றாசிரியர்கள் நமக்களித் திருக்கும் விவரங்களோடு பொருத்திப் பார்க்கும்போது, கரோனுக்கள் துருக்கிய இனத்தவர்களுடன் இரத்தத் தொடர்பு கொண்டவர்கள் என்பது புலனாகும். அவர்களைத் துருக்கித் தந்தையர்களுக்கும் துருக்கியரல்லாத தாய்மார்களுக்கும் பிறந் தவர்கள் என்று கருதுவதும் தவறாகாது[1].

## கியாஸ்உத்தீன் துக்ளக் (கி. பி. 1320—1325)

### முந்திய வாழ்க்கை

துக்ளக் அரச குலத்திற்கு அடிகோலியவர் கியாஸ் உத்தீன் துக்ளக். அவருடைய முதற்பெயர் காஜீ மலிக் அல்லது காஜீ பேக் துக்ளக் என்பதாகும். அலாவுத்தீன் காலத்தில் துக்ளக், கோராசானிலிருந்து இந்தியாவிற்கு வந்தார் என்று இபின் பதூதாவும், ஷம்ஸ் - இ - சிராஜ் அஃபீப்பும் கூறுகின்றனர். அவர் அன்னிய நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்ததாகத் துக்ளக் நாமாவில் யாதொரு குறிப்பும் இல்லை. பால்பனுடைய காலத் திற்குப் பிறகு தம்முடைய தந்தை இந்தியாவிற்கு வந்தார் என்று சுல்தான் முகமது பின் துக்ளக் எழுதியுள்ளார். டில்லியில் பல நாள் வேலை தேடி அலைந்துவிட்டு, இறுதியில் ஜலாலுத்தீன் கல்ஜியிடம் வேலைக்கமர்ந்தார் என்று துக்ளக் நாமா கூறுகிறது. அவருடைய தாயார் ஒரு ஜாத் பெண்மணி என்பதை ஏற்றுக் கொண்டால், அவர் அன்னிய நாட்டிலிருந்து வந்தாரென்பதை நாம் ஒப்புகொள்ள இயலாது. வீரத்துடன் போரிட்டுப் புகழ் எய்தினார். அலாவுத்தீன் காலத்தில்தான் அவர் பதவி உயர்வையும் அதிகமான புகழையும் பெற்றார். அப்போது அவர் எல்லைக் காவல் பொறுப்பை ஏற்று இருந்தார். முதலில் மூல்தான் ஆளுநராகவும், பின்னர் தீபால்பூர் ஆளுநராகவும் இருந்து, டில்லி சுல்தானியத்திற்கு அருந்தொண்டு ஆற்றினார். வெள்ளம் போல் திரண்டு வந்த மங்கோலியர்களை அவர் பலமுறை புறமுதுகிட்டு ஓடச்செய்தார். எல்லையிலிருந்த நகரங்களுக்குத் தக்க பாதுகாப்பு அளித்தார். மூல்தானில் இருந்த ஒரு மசூதியில் அவர் மங்கோலியருக்கு எதிராக 29 வெற்றிகளை அடைந்ததாகப் பொறிக்கப்பட்டிருந்தது என்று இபின் பதூதா கூறுகிறார்[2]. ஆனால், துக்ளக் நாமாவில் 18 வெற்றிகளே குறிப்பிடப்

[1] A CHI-V, p. 461. [2] Rehla, II, p. 29.

பட்டுள்ளன[1]. பரனி 20 வெற்றிகளை அவர் அடைந்ததாகக் கூறியுள்ளார்[2]. ஆனால், அவர்களுள் ஒருவர்கூட வெற்றிப் பட்டியலை நமக்களிக்கவில்லை. அவை, சிறு சண்டைகளாக இருக்கக்கூடும்[3]. அலாவுத்தீன் அவரிடம் மிகுந்த மரியாதை வைத்திருந்தார். எனவே, அலாவுத்தீனுடைய ஆதரவு தமக்குக் கிடைக்கவில்லையென்றால், அரசப்பதவியைத் தாம் அடைந்திருக்க முடியாது என்று துக்ளக் அரசெய்தியபோது கூறினார்[4]. அலாவுத்தீன் இறந்த பிறகு, மலிக்காபூர் மனம் போனபடி ஆட்சியை நடத்தியபோது இவ்வளவு பெருமையைப் பெற்ற மலிக்துக்ளக் ஏதும் செய்யாது இருந்தார் என்பதை அறியும்போது நாம் வியப்படைகிறோம். முபாரக் கல்ஜியின் காலத்தில் மலிக் துக்ளக் ஒரு முக்கியமான அரசியற் பணியினை மேற்கொண்டார். ஆயின் உல்முல்க் மூல்தானி, அவருடைய அதிகாரிகள் ஆகியோருக்கு முபாரக் கல்ஜி முறைப்படி சுல்தானகப் பதவி யேற்றார் என்பதை எடுத்துக்கூறி, அவர்களை குஜரத்தின்மீது படையெடுத்துச் செல்லும்படி சுல்தானுடைய சார்பில் வேண்டிக் கொண்டார். அதைப்பற்றி நாம் முன்னரே கண்டறிந்துள்ளோம்[5]. குஸ்ருகான் சுல்தானகப் பதவியேற்றபோது அவருக்கு எதிராக ஓர் இயக்கத்தைத் தொடங்கி அவரை ஒழித்துக் கட்டினார்[6].

குஸ்ருகானைத் தோற்கடித்த பிறகு, டில்லி அரியணை காலியாகிவிட்டது. மலிக் துக்ளக்கை அதில் அமரவேண்டும் என்று மலிக்குகளும் அமீர்களும் வேண்டினார்கள் என்று முன்பு கவனித்தோம். காஜி மலிக் துக்ளக், முதலில் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்கவில்லையென்றும், பராம் அய்பா கிஷ்லூகானை அரச பதவியை ஏற்றுக்கொள்ளும்படி துக்ளக் கேட்டுக் கொண்டார் என்றும் இபின் பதூதா கூறுகிறார். அப்போது காஜி மலிக் பின்வருமாறு கூறியதாகத் துக்ளக் நாமாவில் நாம் காண்கிறோம். 'என்னை முக்கியமானவராக யாரும் கருத இயலாது. மிகத் தாழ்ந்த நிலையில் இருந்த என்னைத் தூக்கிவிட்ட பெருமை ஜலாலுத்தீனையே சாரும். அதனால்தான், நான் சுல்தானுடன் நெருக்கமாக வர இயன்றது. அவரை நான் விழி கொட்டாமல் வைரம் போன்ற கூரிய கத்தியுடன் பாதுகாத்து வந்தேன்.' அதன் பிறகு அவருடைய வாழ்க்கை வரலாற்றை

[1] Tughluqnamah, p. 138.
[2] Tarikh-i-Firuzshahi, p. 416.
[3] ACHI, p. 426.
[4] Tughluqnamah, p. 137.
[5] முன்னே பார்க்கவும், பக்கங்கள் 576—578.
[6] முன்னே பார்க்கவும், பக்கங்கள் 610—618.

விவரிக்கலானார். ஜலாலுத்தீன் இறந்த பிறகு, அவர் மீண்டும் கஷ்டப்பட நேர்ந்ததென்றும், அலாவுத்தீனுடைய கருணையால் அவர் வாழ்க்கை மீண்டும் ஒளிபெறத் தொடங்கியதென்றும் உலூக்கானிடம் அவர் சாகும்வரை பணியாற்றிவிட்டுப் பின்னர் அலாவுத்தீனிடம் வேலைக்கமர்ந்தார் என்றும், அவர் அடைந்த பதவி உயர்வுகள் அனைத்துக்கும் அலாவுத்தீனே காரணமாவார் என்றும் கூறினார். அந்த நேரத்தில் அங்குக் கூடியிருந்த பிரபுக்கள் இடைமறித்து, அவருடைய திறமையைப்பற்றி அவர்கள் நன்கு அறிவார்கள் என்றும், இரன்தம்பார் அரசனுடைய படைகளுள் மூன்றில் இரண்டு மடங்குப் படைகளை மலிக் துக்ளக் அழித்ததைப் பற்றியும், துக்ளக் என்ற பெயருடைய மங்கோலியத் தலைவரை அவர் தோற்கடித்ததுபற்றியும், ராய்பொம்பலைத் தோற்கடித்து, அவரிடமிருந்து பெருஞ்செல்வத்தைக் கைப்பற்றியதைப்பற்றியும் அவர்கள் அறிவார்கள் என்றும் கூறினார்கள். பல்லாயிரக்கணக் கான உயிர்களைக் குடித்த போர்களில் கலந்துகொண்டு, உயிரிழக் காமல் போர்க்களத்திலிருந்து அவர் மீண்டு வந்தார் என்றால், கடவுள் அவருக்காக மாபெரும் பணி ஒன்றனை வைத்திருக்கிறார் என்று பொருள் என்றும் அவர்கள் கூறினார்கள். ஆகவே, அவர் தாம் அரியணையில் அமரவேண்டும் என்றும் வற்புறுத்தினார்கள். அதற்கும் துக்ளக் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. அவருடைய வில்லும் அம்பும்தாம் அவருடைய மகுடமும் அரியணையுமாகும் என்றும் கல்ஜி குடும்பத்தைச் சார்ந்தவர்களுள் எவரேனும் உயிருடன் இருந்தால், அவரை அழைத்து அரியணையில் அமர்த்தும் படியும், இல்லையெனில் திறமை வாய்ந்த மலிக்குகளுள் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும்படியும் கூறினார். அவர் தீபால்பூரில் இருக்க விரும்பவதாகவும், அவருக்கென்று அவருடைய கத்தியும், மங்கோலியர்களும் இருக்க, அவர் வேறெதையும் விரும்பவில்லை யென்றும், மணிமகுடம், அதை அணிய வேண்டியவர் ஆகிய வற்றைப்பற்றி அவர்கள்தாம் கவனித்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறினார். அதைக் கேட்ட பிரபுக்கள் அவர் காலில் விழுந்து மீண்டும் கெஞ்சினார்கள். அச் சமயத்தில் முடிவாக ஒரு கருத்தைத் துக்ளக்கிற்குக் கூறினார்கள். அதாவது, துக்ளக் புரட்சியை வெற்றிகரமாக நிறைவேற்றியமையால், துக்ளக்கின் மதிப்பு உயர்ந்துவிட்டது. அந்த நிலையில் வேறொருவர் சுல்தா னாகப் பதவியேற்க நேர்ந்தால், மலிக் துக்ளக்மீது அவர் பொறாமை கொள்ள நேரும். ஆகவே, அவர் மலிக் துக்ளக்கை ஒழித்துவிட முயற்சிப்பார் என்று கூறினார்கள். அதற்குப் பல சான்றுகளையும் எடுத்தியம்பினார்கள். இதற்குப் பதில்கூற இயலாது, மலிக் துக்ளக் அவர்களுடைய விருப்பப்படி அரியணையில் அமர்ந்துகொண்டு கியாஸ்உத்தீன் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார்.

பட்டமெய்தியவுடன் கியாஸ்உத்தீன் துக்ளக் தமது அரசாங்கத்தைத் திருத்தி அமைத்தார். தமது சகோதரன் மகனை அசரத் உத்தீனுக்கு 'நாயப் பர்பேக்' பதவியையும், மற்றொரு சகோதரன் மகனை மலிக் பஹா உத்தீனுக்கு 'அர்ஸ்-இ-மமாலிக்' பதவியையும், தமது மருமகனை மலிக் ஷாதிக்கு வருவாய் அமைச்சவையின் மேற்பார்வையாளர் பதவியையும் அவர் அளித்தார். 'சதர் - இ - ஜஹான்' என்ற பட்டம் காஜி கமால் உத்தீனுக்கு வழங்கப்பட்டது. காஜி-ஷம்ஸ்-உத்தீன் டில்லியின் காஜியாக நியமிக்கப்பட்டார். சுல்தானுடைய மூத்த மகனை, மலிக் பக்ருத்தீனுக்கு 'உலுக்கான்' பட்டத்தையும், மற்ற நான்கு பிள்ளைகளுக்கு 'பஹ்ராம்கான்', 'ஜபர்கான்', 'மாமூத்கான்' 'நஸ்ரத்கான்' என்ற பட்டங்களையும் வழங்கினார். பஹ்ராம் அய்பாவிற்குக் 'கிஷ்லுகான்' என்ற பட்டத்தை அளித்ததுடன் அவரைச் சகோதரனாகவும் பாவித்து வந்தார். ஊச், மூல்தான் ஆகிய இரு இக்தாக்களை அவர் நிருவகித்து வர அனுமதி வழங்கப்பட்டது. சுல்தானுடைய வளர்ப்புப் பிள்ளையான தாதார் கானுக்குத் 'தாதார் மலிக்' என்ற பட்டமும் 'ஜபராபாத்' என்ற இக்தாவும் அளிக்கப்பட்டன. குத்லூகான் தேவகிரியின் நாயப் வசீராக நியமிக்கப்பட்டார். அவருடைய சகோதரன் மக்களுள் ஒருவரான கமால்உத்தீன் பிரூஸுக்கு யாதொரு பதவியும் வழங்கப்படவில்லை. அவருடைய இளமையே அதற்குக் காரணமாக விருக்கக்கூடும். சுல்தானுடைய இரு சகோதரர்களான அபுபகர், ரஜப் ஆகியோருக்கும் பதவியோ பட்டமோ அளிக்கப்பட்டதாக நமக்குச் செய்தி கிடைக்கவில்லை. ஒரு வேளை அதற்குள் அவர்கள் இறந்து விட்டிருக்கக்கூடும்.

### நிருவாகம்பற்றிய சீர்திருத்தங்கள்

கியாஸ்உத்தீன் துக்ளக் பட்டத்திற்கு வந்தபோது ஆட்சி முறை சீர்குலைந்து இருந்தது. அதற்கு முக்கிய காரணம் அரசாங்கத்திற்குப் போதிய பணம் இன்மையேயாகும். அரசாங்கக் கருவூலத்தை குத்புத்தீன் முபாரக்கும், குஸ்ரூஷாவும் தங்களுக்கு ஆதரவு தேடும் பொருட்டு, அதிகாரிகளுக்கும் படைவீரர்களுக்கும் பணத்தை வாரி இறைத்துக் காலியாக்கி விட்டனர். அலாவுத்தீன் ஏற்படுத்திய வருவாய் முறை சீரழிந்துவிட்டது. அரசாங்கத்தினுடைய வருவாயைப் பெருக்கினாலன்றி நிருவாகத்தைச் சரிவர நடத்த இயலாது என்பதை அவர் உணர்ந்தார். ஆகவே, அரச பதவியை ஏற்ற உடனே நிதிப் பிரச்சினையைக் கவனிக்கலானார். அதனை எதிர்கொள்ளுவதற்காக வருவாய் முறையைச் சீர்திருத்துவதற்கான திட்டம் ஒன்றைத் தீட்டினார். விவசாயிகள்மீது சுமத்தப்படும் வரி மிக அதிகமாகவோ மிகக்

குறைவாகவோ இருத்தல் கூடாது என்பது அத் திட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றாகும். வரிச்சுமை மிக அதிகமாக இருந்தால், விவசாயிகள் பயிரிடுவதை நிறுத்திவிடக்கூடும் என்பதையும், மிகக் குறைவாக இருந்தால் அவர்கள் பொருளை மிச்சப்படுத்த இயலும் என்பதையும், அதன் விளைவாக அவர்கள் கலகத்தில் ஈடுபட இயலும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். அலாவுத்தீனுடைய வருவாய்பற்றிய சீர் திருத்தங்கள் விவசாயிகளை ஒட்டாண்டிகளாக ஆக்கிவிட்டன. பயிர்த்தொழிலை மேற்கொள்ளுவதற்கு வேண்டிய உற்சாகம் அவர்களிடமிருந்து மறைந்துவிட்டது. தரிசு நிலங்களை விளை நிலங்களாக்க அவர்கள் விருப்பங் கொள்ளவில்லை. அதனால் விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. அதன் விளைவாக அரசாங்க வருமானம் குறைந்து விட்டது. ஆகவே, கியாஸ் உத்தீன், முதல் வேலையாக விவசாயிகளின் வரிச்சுமையைக் குறைத்திடுவதற்கான திட்டத்தை வகுக்கலானார். நிலங்களை அளந்து, ஒரு பிஸ்வா நிலத்திலிருந்து கிடைக்கும் விளைச்சலைக் கணக்கிட்டு, வரி நிர்ணயிக்கும் முறை இப்போது நீக்கப்பட்டது. அதற்குப் பதிலாக, விளைச்சலைப் பங்கிட்டுக் கொள்ளும் முறை கொண்டு வரப்பட்டது. சரியான விளைச்சல் ஏற்படாத காலத்தில் இம்முறை விவசாயிகளுக்கு நன்மை பயப்பதாக இருந்தது. விளைநிலம், பயிர்விளையா நிலம் என்று பாகுபடுத்தவேண்டிய அவசியம் இப்போது அரசாங்கத்திற்கு ஏற்படவில்லை. அதனால், அதனுடைய வேலை குறைந்தது.

விவசாயிகளிடமிருந்து அரசாங்கம் எவ்வளவு நிலவரியாக வசூலித்தது என்பதைப்பற்றிப் பரனி நமக்குத் தெளிவாகக் கூறவில்லை. பத்தில் அல்லது பதினொன்றில் ஒரு பங்கிற்குமேல் வரி விதிக்கக் கூடாது என சுல்தான் அறிவித்ததாகப் பரனி கூறுகிறார்[1]. மொத்த விளைச்சலில் பத்தில் அல்லது பதினொன்றில் ஒரு பங்கு வரியாக விதித்தார் என்று இதற்குப் பொருள் கூறலாம். ஏற்கனவே விதிக்கப்பட்ட வரித்தொகையில் பத்தில் அல்லது பதினொன்றில் ஒரு பங்கிற்குமேல் கூடுதலாக வரி விதிக்கக் கூடாது என்றும் இதற்குப் பொருள் கூறுகின்றனர். அலாவுத்தீன் காலத்தில் இரண்டில் ஒரு பங்கு வரியாக வசூலிக்கப் பட்டது. முபாரக் கல்ஜி, மக்கள்மீது சுமத்தப்பட்டிருந்த வரிப் பளுவைக் குறைத்துவிட்டார் என்பதை அறிகிறோம். அதாவது, அவர் காலத்தில் விளைச்சலில் ஒரு பாதிக்குக் குறைவாக வரி விதிக்கப்பட்டிருக்க வேண்டும். ஐந்தில் ஒரு பங்கை வரியாக வசூலித்து இருக்கக்கூடும்[2]. அலாவுத்தீன் காலத்தில் மிக அதிகமான

1. Barani, p. 429. [2]ACHI, p. 467.

வரியும், முபாரக் காலத்தில் மிகக் குறைவான வரியும் விதிக்கப் பட்டிருந்தன. கியாஸ் உத்தீன் நடுத்தரமான அளவு முறையைக் கையாளுவதென முடிவு செய்தார். அரசாங்கக் கருவூலம் காலி யாகி விட்டமையால், வரியை உயர்த்தினாலன்றி அரசாங்கத்தை நடத்துவதற்குப் போதுமான பணம் பெற இயலாது என்பதை அவர் அறிந்தார். வரியை உயர்த்தும்போது விவசாயிகள் பயிர்த் தொழிலை விட்டொழிக்கும் அளவிற்கு உயர்த்தி விடக்கூடாது என்று அவர் எண்ணினார். இவற்றை நாம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, அவர் பத்தில் அல்லது பதினொன்றில் ஒரு பங்கை வரியாக அளிக்க வேண்டும் என்று கூறியிருக்க முடியாது. முபாரக் கல்ஜியின் காலத்தில் விதிக்கப்பட்ட அளவை கியாஸ் உத்தீன் அப்படியே வைத்துக்கொண்டிருக்க வேண்டும். அதே நேரத்தில் போதுமான பணம் பெற வரி உயர்வுக்கு வழி செய்து இருத்தல் வெண்டும். அந்த வரி உயர்வு முன்னைய வரி அளவில் பத்தில் அல்லது பதினொன்றில் ஒரு பங்கிற்கு மேலாக உயர்த்தக் கூடாது என்று அறிவித்திருக்கக்கூடும். வரியைப் படிப்படியாக உயர்த்த வேண்டும் என்றும், வரி உயர்வால் விவசாயம் செய்யப் படுகின்ற நிலத்தின் அளவு குறையக் கூடாது என்றும், விவசாயி களின் வளத்தைக் குறைக்கும் வகையில் அஃது உயர்த்தப்படக் கூடாது என்றும் திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டது. வரியை வசூலிக்கும் போது விவசாயிகளை அதிகாரிகள் துன்புறுத்தக் கூடாது என்பதற்காகப் பல விதிமுறைகளை அவர் வகுத்தார்.

அலாவுத்தீன் கிராமத் தலைவர்களைப் படாத பாடுபடுத்தி விட்டார் என்று முன்னர்க் கண்டோம். கிராமத் தலைவர்களையும் விவசாயிகளையும் சமநிலையில் வைத்தார். கியாஸ்உத்தீன் துக்ளக், கிராமத் தலைவர்கள் அரசுக்கு ஆற்றிவந்த தொண்டின் அருமையை நன்கறிந்தார். அவர்கள்தாம் அரசுக்குச் சேரவேண்டிய வரியை வசூல் செய்து கொடுத்து வந்தனர். ஆகவே, அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளையும் சலுகைகளையும் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கும்படி ஆணையிட்டார். அவர்களுடைய நிலங் களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. அதே நேரத்தில் அவர்கள் அரசாங்கத்தைப் புறக்கணிக்காதவாறும் அதற்கு எதிராகக் கலகம் செய்யாதவாறும் பார்த்துக்கொண்டார்.

முக்தாக்கள், ஆளுநர்கள் ஆகியோர் வரி வசூலிக்கும் போது கையாளவேண்டிய முறைகளை அவர் நிர்ணயித்தார். ஆளுநர்களும் முக்தாக்களும் தங்கள் ஆட்சிப் பகுதியில் வசூலிக் கப்பட்ட வரியில் பத்தில் அல்லது பதினொன்றில் ஒரு பங்கு அல்லது 20-ல் அல்லது 22-ல் ஒரு பங்கு ஊதியமாகப் பெற

அனுமதித்தார். சம்பளத்திற்கு மேல் ½ சதவீதம் கூடுதலாக வரிப்பணத்திலிருந்து எடுத்துக்கொள்ள வரி வசூலிப்பவர்களுக்கும் உதவியாளர்களுக்கும் அனுமதி தந்தார். அதற்கு மேலாக எடுத்துக்கொண்டால், அவர்களை மானபங்கம் செய்ய உத்தர விட்டார். அவர்கள் அதிகமாக எடுத்துக்கொண்ட பணமும் திருப்பி எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்கண்ட ஏற்பாட்டின் வாயிலாக முக்தாக்களும், ஆளுநர்களும் நியாயமாகவும் நாணய மாகவும் நடக்க வழி ஏற்படுத்தப்பட்டது. விவசாயிகளுக்கு வரி வசூலிப்பவர்கள் அளித்துவந்த தொல்லைகள் குறைந்தன. கிராமத் தலைவர்கள், தாங்கள் செலுத்த வேண்டிய வரியை விவசாயிகள் தலையில் போடுவதும் நின்றுவிட்டது. ஏனெனில், அவர்களுடைய நிலத்திற்கு இப்போது வரி செலுத்தவேண்டுவதில்லை. அவருடைய வருவாய்பற்றிய சீர்திருத்தங்கள் அரசாங்கக் கருவூலத்திற்குப் போதிய அளவு பணத்தைக் கொண்டுவந்து சேர்த்தன. அதனால், அரசியல் துறையில் அமைதி ஏற்படுத்துவதற்கான திட்டத்தை அவர் மேற்கொள்ள இயன்றது.

## இராணுவச் சீர்திருத்தங்கள்

அலாவுத்தீன் உண்டாக்கிய பலம் பொருந்திய படை அவர் இறந்தபிறகு அழிவை நாடிச் செல்லத் தொடங்கியது. அரசாங்கத்திற்குப் படைப்பலம் இன்றியமையாதது என்பதை கியாஸ்உத்தீன் நன்கறிந்திருந்தார். எனவே, படையைத் திருத்தி யமைத்து, அதன் வாயிலாக அதன் பலத்தைப் பெருக்கத் திட்டம் தீட்டினார். அத் திட்டத்தின் முக்கியக்கூறு, படைவீரர் களைத் திருப்தியாக வைத்திருத்தலேயாகும். தம் குழந்தைகளை விடப் படைவீரர்களை அவர் அதிகமாக நேசித்தார். தந்தைக்குரிய பொறுப்புடன் அவர்களுடைய நலன்களில் அக்கறை கொள்ள லானார். அவர்களுடைய ஊதியப் பணத்தைப் பிறர் எடுத்துக் கொள்ளாதவாறு பார்த்துக் கொண்டார். படையினுடைய போர் ஆற்றல் குன்றுதிருக்க அலாவுத்தீனுடைய குதிரைகளுக்குச் சூடுபோடும் முறையையும், முழுவிவரப் பதிவேடுகளைத் தயாரிக்கும் முறைமையும் பயன் தரத்தக்க வகையில் நடை முறைப்படுத்தினார். அதன் பயனாகத்தான், அவர் பிற நாடுகளின் மீது படையெடுக்க இயன்றது.

## போர் நடவடிக்கைகள்

கியாஸ்உத்தீன் பட்டமெய்தியபோது டில்லி சுல்தானுடைய மதிப்பும் அதிகாரமும் பெருமளவில் குறைந்து விட்டிருந்தன. சிந்து மாநிலம் பெயரளவில் டில்லியின் ஆட்சிக்குட்பட்ட மாநில மாக இருந்தது. அதனுடைய ஆளுநர் அமர், தட்டாவைக்

கைப்பற்றிக்கொண்டு தம் விருப்பம் போல் ஆட்சி செய்து வந்தார். ஆயின் உல்முல்க் மூல்தானி, குஜரத்திலிருந்து திரும்பி அழைக்கப் பட்ட பின்பு, குஜரத் மாநிலத்தில் குழப்பநிலை உருவாகியது. இரஜபுத்திரர்கள், டில்லி அரசுக்குத் தொல்லைகள் கொடுத்து வந்தனர். வங்காளத்தில் பகதூர் ஷா, அட்டகாசச் செயலில் ஈடுபட்டிருந்தார். திர்ஹுத்தும், ஜாஜ் நகரும் பலம்பொருந்திய இந்து அரசர்களிடம் தொடர்ந்து இருந்துவந்தன. தக்காணத்தில் தெலிங்கானு அரசர், டில்லிக்குக் கீழ்ப்படிந்து நடப்பதை நிறுத்தி விட்டார், பத்ரகோட் கோட்டையைத் தாக்கலானுர். இந்தத் தாக்குதல், முன்னர் அவர் டில்லி அரசுடன் மேற்கொண்டிருந்த உடன்பாட்டினுக்கு முற்றிலும் புறம்பானதாகும். மாபாரிலும் மூஸ்லிம் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது. இந்தவகையான அரசியல் நிலையில் டில்லியின் மதிப்பும் அதிகாரமும் குறைந்துவிட்டதில் வியப்பென்ன இருக்கிறது ?

வருவாய்பற்றிய சீர்திருத்தங்களின் வாயிலாகப் போதிய பணத்தைப் பெற்றபிறகு, படைச்சீர்திருத்தம் மேற்கொண்டார். படைப்பலம் பெருகியவுடன் அரசியல் நிலையினைச் சீர்படுத்தி, டில்லி அரசின் மதிப்பையும் அதிகாரத்தையும் நிலைநிறுத்த முற்பட்டார். முதலில் வாரங்கல் நோக்கிப் படை அனுப்பி வைத்தார். உலூக்கான் படைக்குத் தலைமை தாங்கினுர். 1321-ல் டில்லியில் இருந்து புறப்பட்டு, முதலில் தேவகிரி சென்றுர். அங்கிருந்து புறப்பட்டு வாரங்கல் சென்றுர். வழியில் அவருக்கு எந்த விதமான எதிர்ப்பும் ஏற்படவில்லை. வாரங்கல் முற்றுகை யிடப்பட்டது. கோட்டைக்குள்ளிருந்தவர்கள் உறுதியுடன் போரிட்டனர். ஆகவே, முற்றுகை ஆறுமாதங்களாக நடை பெற்றது. கோட்டைக்குள்ளிருந்த உணவுப் பொருள்கள் தீர்ந்து விட்டமையாலும் வெளியிலிருந்து அவற்றைப் பெற இயலாமை யாலும் கோட்டைக்குள்ளிருந்தவர்கள் மிகவும் கஷ்டப்பட்டனர். எனவே, பிரதாப ருத்ர தேவா சமாதானம் நாடினுர். கப்பம் கட்டுவதற்கு அவர் ஒப்புதல் தெரிவித்தார். ஆனுல், உலூக்கான் வாரங்கலை டில்லி அரசுடன் இணைத்துகொள்ள விரும்பியதால், சாமாதானத்திற்கு இசையவில்லை.

வாரங்கல் படையெடுப்பின்போது உலூக்கான், சுல்தானுக் கெதிராகக் கலகம் செய்ய முற்பட்டார் என்று இபின் பதூதா கூறுகிறுர். ஆனுல், அத்தகைய எண்ணம் உலூக்கானுக்கு ஏற்படவில்லை என்று பரனியும் இசாமியும் கூறுகின்றனர். ஆயினும், படையினரிடையே அப்போது ஒரு குழப்பம் ஏற்பட்டது என்று மட்டும் அவர்கள் கூறுகின்றனர். அக் குழப்பத்திற்கு

முக்கிய காரணம் உபயத் என்பவராவார். உபயத் ஒரு ஜோதிடர். வாரங்கல் கோட்டை ஒரு குறிப்பிடட நாளில் உலூக்கான் கை வசமாகிவிடும் என்று முன்கூட்டியே அறிவித்தார். குறித்த நாள் வந்தது. ஆனுல், கோட்டை உலூக்கானுடைய கையில் சிக்க வில்லை. அதனுல், உலுக்கான் கோபமடையக்கூடும் என்று எண்ணித் தாம் உயிர் தப்புவதற்காகப் படைவீரர்களைக் கலகம் செய்யத் தூண்டினுர். அப்போது சுல்தான் இறந்துவிட்டதாகவும் உலூக்கான் அச்செய்தியை அவர்களிடமிருந்து மறைத்துவிட்டார் என்றும், இன்னும் சிறிது நேரத்தில் அதிகாரிகளை உலூக்கான் தொலைத்துவிடுவாரென்றும் கூறினுர். அவற்றை உண்மையென நம்பிப் படைத் தலைவர்கள் பலர் பாசறையைவிட்டுத் தங்கள் பரிவாரங்களுடன் சென்றுவிட்டனர். அதையறிந்ததும் வாரங்கல் படை உலூக்கானைத் தாக்கியது. அத் தாக்குதலை எதிர் கொள்ள இயலாது உலூக்கான் தேவகிரிக்கு ஓடிவிட்டார். அதை யறிந்த சுல்தான் திரும்பிவந்த அமீர்களைக் கடுமையாகத் தண்டித்தார். மற்றும் சிலர், இந்து அரசர்கள் அல்லது ஜமீன் தார்கள் கைகளில் சிக்குண்டு உயிரிழந்தனர்.

தலைநகரில் மற்ருெருபடை திரட்டப்பட்டது. அப் படையைச் சுல்தான் உலூக்கானிடம் அனுப்பிவைத்து வாரங்கலை மீண்டும் முற்றுகையிடுமாறு கட்டளையிட்டார். அப் படையுடன் புறப் பட்டு உலூக்கான் முதலில் பீடாரைக் கைப்பற்றினுர். மீண்டும் வாரங்கல் முற்றுகை தொடங்கப்பட்டது. ஐந்து மாதங்கள் கழிந்தும் உலூக்கானுல் கோட்டையைக் கைப்பற்ற இயலவில்லை. பசி, பிணி ஆகியவற்றினுல் பீடிக்கப்பட்ட வாரங்கல் படை முடிவில் சரணடைந்தது. கோட்டையைக் கைப்பற்றிய பிறகு, டில்லிப் படைகள் வீடுகளைக் கொள்ளையடித்தன; பொதுக் கட்டடங்களைத் தரைமட்டமாக்கின. பிரதாபருத்ரதேவா டில்லிக்கு அனுப்பப்பட்டார். போகும் வழியில் அவர் இறந்தார். தெலிங்கானு டில்லி அரசுடன் இணைக்கப்பட்டது. வாரங்கலுக்குச் சுல்தான்பூர் என்ற பெயர் சூட்டப்பட்டது. நிருவாகத்தை ஒட்டித் தெலிங்கானு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. பழைய இந்து அதிகாரிகளைப் பதவியில் தொடர்ந்திருக்க அனுமதி வழங்கப் பட்டது. பழைய அமைச்சர்கள் மரியாதையாக நடத்தப் பட்டனர். கோயில்கள் இடிக்கப்படவில்லை. ஆயினும், தெலிங்கானுவில் டில்லியின் ஆதிக்கம் உறுதியாக ஏற்படுத்த இயலவில்லை என்பதை இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும். வாரங்கலைக் கைப்பற்றிய பிறகு குத்தி, குந்த் ஆகிய இடங் களையும் அவர் வென்ருர். மற்ருெரு படைத்தலைவர் இராஜ மஹேந்திரத்தைக் கைப்பற்றினுர். 1323-ல் மதுரையைத்

துருக்கியர்கள் கைப்பற்றியதாகப் பாண்டிய வரலாற்ருசிரியர் கூறுகிருர். ஆகவே, உலூக்கான் அல்லது அவரது படைத் தலைவர்களுள் ஒருவர் மதுரைக்குச் சென்றிருக்கக்கூடும் என ஊகிக்கலாம். இவ் வெற்றியைப்பற்றிய குறிப்புகளை முஸ்லிம் வரலாற்ருசிரியர்கள் நமக்கு அளிக்காதது வியப்பூட்டுவதாக உள்ளது.

வாரங்கல் படையெடுப்பைத் தொடர்ந்து உலூக்கான் ஜாஜ் நகரையும் தாக்கினுர். இரண்டாம் பானுதேவா, ஜாஜ் நகரை அப்போது ஆண்டு வந்தார். பானுதேவா வாரங்கல் அரசருக்கு உதவி செய்தார். அதுவே முஸ்லிம் படையெடுப்புக்கு முக்கிய காரணமாக இருக்கக்கூடும். ஜாஜ்நகர் எல்லையை அடைந்தபோது அவருடைய முன்னேற்றத்தை ஒரியாப் படைகள் தடுத்தன. அப்போது ஏற்பட்ட போரில் ஒரியாப்படை தோல்வி கண்டது. பல யானைகளும் பலவகையான பொருள்களும் உலூக்கான் கைகளில் சிக்கின. இராஜமஹேந்திரத்தில் கிடைத்திருக்கும் சாசனத்தில், ஒரியாவில் உலூக்கான் அடைந்த வெற்றிகள் இடம் பெற்றுள்ளன. உலூக்கானை 'உலகத்தின் கான்' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான்காவது நரசிம்மவர்மனுடைய பூரி செப்பேடுகளில் பானுதேவா கியாஸ் உத்தீனைத் தோற்கடித்ததாகக் கூறப்பட்டுள்ளது. அதனுல், உலூக்கான் முதலில் வெற்றி அடைந்தார் என்பதும், பிறகு அவர் பானுதேவாவிடம் தோல்வியுற்ருர் என்பதும் புலனுகும். ஆகவே தான், அவர் வேகமாக ஒரிசாவிலிருந்து திரும்பி விட்டார் என்று கூறப்படுகிறது.

கியாஸ்உத்தீன் காலத்தில் மங்கோலியர்கள், டில்லி அரசைத் தாக்கினுர்கள். ஷிர்முகல் என்பவரின் தலைமையின்கீழ் இரண்டு மங்கோலியப்படைகள் சிந்து நதியைக் கடந்து முன்னேறி வந்தன. அச் செய்தியை அறிந்ததும் கியாஸ்உத்தீன் மலிக் ஷாதி என்பவரின் தலைமையின்கீழ் ஒரு படையைச் சமானுவிற்கு அனுப்பி வைத்தார். சமானுவின் ஆளுநரான குர்ஸ்ஹாஸ்ப்பும் மலிக் ஷாதியும் மங்கோலியர்களை இரண்டு போர்முனைகளில் சந்தித்துத் தோற்கடித்தார்கள். மங்கோலியர்கள் பலர் சிறைப் பட்டனர்.

அதையடுத்துக் குஜரத்தில் ஏற்பட்ட கலகத்தை ஒடுக்குவதில் கியாஸ்உத்தீன் தம் கவனத்தைச் செலுத்தினுர். மலிக் ஷாதியின் தலைமையின்கீழ் குஜரத்திற்குப் படை அனுப்பிவைக்கப்பட்டது. கலகக்காரர்கள் வசமிருந்த கோட்டையை மலிக் ஷாதி முற்றுகை

யிட்டார். கலகக்காரர்கள் நடன மாதர்களைப்போல் வேடமணிந்து மலிக் ஷாதியின் பாசறைக்குச் சென்று அவரைக் கொன்று விட்டார்கள். அதன் விளைவாக, டில்லிப் படையில் குழப்பம் ஏற்பட்டது. டில்லிப் படைகள் சிதறி ஓடின. குஜரத் படையெடுப்புத் தோல்வியில் முடிவுற்றது.

அதன் பின்னர், வங்காளத்தில் ஏற்பட்டிருந்த குழப்பநிலையை ஒழித்துக்கட்ட கியாஸ்உத்தீன் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1322-ல் வங்காள அரசர் ஷம்ஸ்உத்தீன் பிரூஸ்ஷா இறந்தார். அதையடுத்து அவருடைய நான்கு பிள்ளைகளும் பதவிக்காகப் போட்டியிட்டனர். அவர்களுள் கியாஸ்உத்தீன் பகதூர், மிகுந்த பேராசையுடையவராக இருந்தார். லக்னோதியிலிருந்து தமது சகோதரனை ஷிஹாபுத்தீனைத் துரத்தி விட்டார். மற்றொரு சகோதரனை குத்லூகானைக் கொன்று விட்டார். நாசிர்உத்தீன் என்ற பிறிதொரு சகோதரனைப் பலவாறு துன்புறுத்தினார். ஆகவே, ஷிஹாபுத்தீனும், நாசிர்உத்தீனும் கியாஸ்உத்தீன் துக்ளக்கினுடைய உதவியை நாடினார்கள். சில பிரபுக்களும் கியாஸ் உத்தீன் துக்ளக்கைச் சந்தித்துப் பகதூரின் கொடுங்கோலாட்சியிலிருந்து அவர்களை விடுவிக்குமாறு சுல்தானைக் கேட்டுக் கொண்டனர். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு, டில்லியின் ஆதிக்கத்தை வங்காளத்தின்மீது மீண்டும் நிலைநாட்ட கியாஸ்உத்தீன் படையுடன் வங்காளத்திற்குச் சென்றார். புறப்படுவதற்கு முன், தாம் டில்லியில் இல்லாதபோது அரச காரியங்களைக் கவனிக்கப் பகர ஆட்சிக் குழு ஒன்றை அமைத்தார். அதில் தம் மகன் உலூக்கான் இடம் பெற வேண்டும் என்பதற்காக அவரைத் தக்காணத்திலிருந்து திரும்பி அழைத்துக்கொண்டார். டில்லியிலிருந்து புறப்பட்டுக் கியாஸ்உத்தீன் துக்ளக், திர்ஹூத்தை அடைந்தார். நாசிர்உத்தீன், கியாஸ்உத்தீன் துக்ளக்கை திர்ஹூத் எல்லையில் சந்தித்துத் தம்முடைய சகோதரனின் விரும்பத்தகாத செயல்களை எடுத்துக் கூறினார். அவற்றைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்ட பிறகு, சுல்தான், பஹ்ராம்கான் தலைமையில் ஒரு படையை லக்னோதிக்கு அனுப்பி வைத்தார். பகதூர் போரில் தோல்வியுற்றார். அவர் போர்க்களத்திலிருந்து தப்பி ஓடியபோது பிடிபட்டார். நாசிர்உத்தீன், லக்னோதிக்கு அரசராக நியமிக்கப்பட்டார். அதற்குப் பதிலாக, நாசிர்உத்தீன் ஆண்டுதோறும் கப்பம் கட்டுவதாக வாக்குறுதியளித்தார். சத்காவ்ன், சோனார் காவ்ன் ஆகியவை தாதார்கானின் பொறுப்பில் விடப்பட்டன.

வங்காளத்திலிருந்து திரும்பும்போது சுல்தான், திர்ஹுத்தைத் தாக்கினுர். திர்ஹுத்தின் அரசர் காட்டிற்கு ஓடினுர். அவரைத் துரத்திச் சென்ற சுல்தானுடைய படைகள் அரும்பாடுபட்டு ஒரு கோட்டையைச் சென்றடைந்தன. அதனைக் கைப்பற்ற அவர்களால் இயலாது போயிற்று. ஆகவே, அவர்கள் கோப மடைந்து அங்கிருந்த நிலங்களை அழித்தும், மக்களைக் கொன்றும் பழிதீர்த்துக்கொண்டனர். திர்ஹுத்தை அகமத்கானுடைய பொறுப்பில் விட்டுவிட்டுத் தலைநகரை நோக்கிச் சுல்தான் புறப்பட்டார்.

### கியாஸ்உத்தீனின் மரணம்

வங்காளம், திர்ஹுத் ஆகியவற்றின்மீது அவர் மேற்கொண்ட படையெடுப்புகளை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு, வேக மாகத் துக்ளக்காபாத்தை நோக்கி வந்தார். தம் மகன் சந்தேகத்திற்கு இடந்தரும் வகையில் நடந்து வருகிருர் என்றும், மக்கள் மன அமைதியை இழந்துள்ளார்கள் என்றும் அவருக்குச் செய்தி எட்டியது. எனவே, அவர் வேகமாகப் படை நடத்திக் கொண்டு வந்தார். அவர் தலைநகரை நெருங்கியதும் என்ன நடந்ததென்பதை இபின் பதூதா கூறுகிருர். தாம் புதிதாகத் தோற்றுவித்த துக்ளக்காபாத் நகரத்தை நெருங்கியதும் உலூக்கானுக்குச் சில ஆணைகளை இட்டார். அதாவது, நல்ல நேரத்தில் நகருக்குள் நுழைய வேண்டும் என்பதற்காகத் துக்ளக்காபாத்திலிருந்து 3 அல்லது 4 கரோக்கள் தூரத்தில் இருந்த ஆப்கன்பூர் என்ற சிறிய கிராமத்தில் ஒரு தற்காலிக அரண்மனையை அமைக்கவேண்டும் என்று ஆணையிடப்பட்டது. அதை அறிந்ததும் உலூக்கான் 3 நாள்களில் ஓர் அரண்மனையை அவசரம் அவசரமாகக் கட்டிமுடித்தார். அக் கட்டட வேலை மலிக்ஸாதா அகமத் பின் அயாஸ் என்பவரின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்றது. அக் கட்டடம் மரத் தூண்களின்மேல் எழுப்பப்பட்டது. சுல்தான் ஆப்கான்பூர் வந்ததும் உலூக்கான் அவரைத் தக்கபடி வரவேற்று அரண்மனைக்குள் அழைத்துச் சென்றுர். சுல்தான் தம்முடைய விருந்தினர்களுக்கு உணவளித்து விட்டு அவர்களை அனுப்பிவிட்டார். அவர்கள் சென்றபிறகு, உலூக்கான் சுல்தானை அணுகித் தம்முடைய யானைகளை அவருக்கு முன்னுல் நடத்திச் செல்ல அனுமதி கோரினுர். சுல்தான் உடனே அனுமதி கொடுத்தார். அப்போது ஷெயிக்ருக்னுத்தீன் சுல்தானுடன் இருந்தார்.

அப்போது உலூக்கான் அவரை நெருங்கி, தொழுகைக்கு நேரமாகிவிட்டது; ஆகவே, அவரைத் தொழுகை நடத்தும்படி

கூறினர். ஷெயிக்ருக்னுதீன் அந்த வேண்டுகோளை ஏற்றுத் தொழுகை நடத்தச் சென்றுவிட்டார். முன்னரே ஏற்பாடு செய்தபடி யானைகளை ஒரு குறிப்பிட்ட திசையிலிருந்து அழைத்து வந்தனர். அரண்மனையில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு யானை வந்ததும், அரண்மனை அப்படியே குமுறிவிட்டது. அரண்மனை யைக் கட்டும்போது இந்தமாதிரியாக அது குமுறி விழுவதற்கு ஏற்றபடி கட்டவேண்டும் என்று கட்டட மேற்பார்வையாளருக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. கட்டடம் நொறுங்கிவிழுந்தபோது ஏற்பட்ட பேரிரைச்சல் தொழுகைக்குச் சென்றுகொண்டிருந்த மௌலானைவைத் திரும்பிவரச் செய்தது. திரும்பி வந்தபோது மௌலானு கட்டடம் கீழே சிதறி விழுந்திருப்பதைக் கண்டார். மண்வெட்டிகளையும், களைபிடுங்கிகளையும் கொண்டுவரும்படி உலூக்கான் கட்டளையிட்டுக்கொண்டிருப்பதையும் கண்ணுற்ருர். அதே நேரத்தில் அவற்றைக் கொண்டு வருவதில் எவ்வளவு தாமதம் செய்யவேண்டுமோ அவ்வளவு தாமதம் செய்யும்படி சைகை செய்தார் என்றும், அந்திப்பொழுது நெருங்கும்வரை அவை கொண்டுவரப்படவில்லையென்றும் மௌலானு இபின் பதூதாவிற்குக் கூறினர். இறுதியில் சுல்தானுடைய உடல் தோண்டி எடுக்கப்பட்டது. அப்போது அவர் தம்முடைய மகனை மரண தேவதையின் பிடியிலிருந்து காப்பாற்றுவதற்காக அவர் மீது குனிந்து படுத்துக்கொண்டிருந்தார். அவரைத் தோண்டி எடுத்தபோதே அவர் உயிர் பிரிந்துவிட்டிருந்தது என்பர் சிலர். உயிருடன் எடுக்கப்பட்டார் என்றும் அதன்பின்னர் அவர் கொலை செய்யப்பட்டார் என்றும் சிலர் கூறுன்றனர். அன்றிரவே துக்ளக்காபாத் நகருக்கு வெளியே அவர் கட்டிவைத்த சமாதிக் குழியில் அவர் அடக்கம் செய்யப்பட்டார். இவையே இபின் பதூதா, ஆப்கன்பூரில் நடந்த கோர சம்பவத்தைப்பற்றி நமக்குத் தருகின்ற விவரங்களாகும்.

இபின் பதூதா தருகின்ற செய்திகளில் எவ்வளவு உண்மை இருக்கிறது என்பதை அறிவதற்கு முன்பு, சில உண்மைகளை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இந்த நிகழ்ச்சி நடந்து எட்டு ஆண்டுகள் கழிந்த பின்னர், இபின் பதூதா இந்தியாவிற்கு வந்தார். தாம் பிறரிடம் கேட்டு அறிந்தவற்றையே அவர் கூறியுள்ளார். வேறு சான்றுகளை அவை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. இந்தக் கதையின் ஒரு பகுதியை மௌலானு ருக்னுத்தீனிடமிருந்து தாம் அறிந்ததாக அவர் கூறியுள்ளார். தாம் அறிந்தவற்றைத் தம் ஊர் திரும்பிய பிறகு, தாம் சொல்ல மற்ருெருவரை எழுதச் சொல்லியுள்ளார். அதனுல், ஞாபக மறதியாக அவர் சிலவற்றைக் கூறியிருக்கக்கூடும்.

மேலும், தொடக்கத்திலிருந்தே அவர் உலூக்கானின் நோக்கங்களைச் சந்தேகக் கண்களுடன் பார்த்து வந்தார். எனவே, அவரைக் குற்றவாளியாக்கவேண்டும் என்ற எண்ணத்தில் உலூக்கானுக்கும் சுல்தானுக்கும் இடையே வேற்றுமை வளர்ந்து வந்தது என்று கூறலானார். பல நிகழ்ச்சிகள் அதற்குச் சான்றுகளாகக் கூறப்பட்டுள்ளன. காஜி மலிக், ஆரம்பத்தில் சுல்தான் பதவி தமக்கு வேண்டாமெனக் கூறினார். அப்போது பஹ்ராம் அய்பா அப் பதவியை அவர் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால், அஃது உலூக்கானுக்கு அளிக்கப்படும் எனக் கூறினார். அவரது கூற்று, காஜி மலிக்குக்குச் சந்தேகத்தைத் தோற்றுவித்தது. அதையடுத்து உலூக்கான், முதல் வாரங்கல் படையெடுப்பின்போது கலகம் செய்ய முற்பட்டார். மூன்றாவது, சுல்தானுக்குப் பிடிக்காத நிஜாமுத்தீன் அவுலியாவுடன் உலூக்கான் நெருங்கிப் பழகினார். ஒரு முறை நிஜாமுத்தீன் மேலாதிக்க உரிமையை உலூக்கானுக்குக் கொடுப்பதாகக் கூறினார். அவர் இறந்த பிறகு, அவரது சடலத்தை உலூக்கான் தாங்கிச் சென்றார். நான்காவதாக, உலூக்கான் தந்தையின் விருப்பத்திற்கு மாறாக அடிமைகளை அதிக அளவில் வாங்கி வந்தார். மேற்கூறிய நிகழ்ச்சிகளை வைத்துக் கொண்டு சுல்தானுக்கும் உலூக்கானுக்கும் இடையே தொடக்கத்திலிருந்தே பகை உணர்ச்சி வளர்ந்து வந்தது என்றும், அதுவே அவரைக் கொல்லுவதற்குக் காரணம் என்றும் கூறி, 'உலூக்கான் தம் தந்தையையே கொன்றுவிட்ட மாபாவி' என்று சிறிதும் அச்சம் கொள்ளாமல் இபின் பதூதா கூறியுள்ளார்.

இந்தப் பகையுணர்ச்சியை அடிப்படையாக வைத்துக் கொண்டு, அவர்மீது பழி சுமத்துவது சரியன்று. ஏனெனில், அத்தகைய பகையுணர்ச்சி ஏற்பட்டிருக்கவில்லை என்பதற்கும் தக்க ஆதாரங்களை நாம் கூற இயலும். நாசீர்உத்தீன் குஸ்ருஷாவின் ஆட்சிக் காலத்தில் உலூக்கான் அமீர்பேக் என்ற பதவியை வகித்திருந்தார் என்று முன்னர்க் கண்டோம். அரண்மனையில் ஏற்பட்டுவரும் சம்பவங்கள் அவருக்குப் பிடிக்கவில்லை. உடனே அதைவிட்டு வெளியேறினார். அப்போது நேராகத் தம் தந்தையிடமே சென்றார். அதன் பிறகு, தம் தந்தைக்கும் குஸ்ருஷாவிற்கும் நடைபெற்ற போராட்டத்தில் தந்தைக்கு உறுதுணையாக நின்று வெற்றி தேடித் தந்தார். அந்தச் சேவையைப் பாராட்டும் வகையில் மலிக்துள்ளக் உலூக்கான் என்ற பட்டத்தை அவருக்களித்தார். தெலிங்கானா படையெடுப்பிற்கு உலூக்கானே தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். படையெடுப்பின்போது உலூக்கான் கலகம் செய்ய முற்பட்டார் என்ற காரணத்திற்காக அமீர்கள் பலர் பாசறையை விட்டு வெளியேறினார்கள் என்று

கூறப்படுகிறது. கியாஸ்உத்தீன் துக்ளக் அவர்களைத் தண்டித்த தாக நாம் அறிகிறோமேயொழிய, உலூக்கானைத் தண்டித்ததாக அறியமுடியவில்லை. மேலும், இரண்டாவது முறையும் உலூக் கானையே படைக்குத் தலைவராகச் சுல்தான் நியமித்தார். வங்காளப் படையெடுப்பை மேற்கொண்டபோது உலூக்கானைத் தக்காணத்திலிருந்து வரவழைத்துப் பகர ஆட்சிக் குழுவில் இடம் பெறச் செய்தார். ஷெயிக் நிஜாமுத்தீன் அரசியலில் தலையிட்ட தாக நமக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. அரச சபைகளுக்கு அவர் செல்வதில்லை. அப்படிப்பட்ட ஒருவர் அரசியலில் ஈடுபட்டு உலூக்கானுடைய மனத்தில் அரசியல் ஆசைகளை வளர்த்தார் என்றும், அத்தகையோருடன் தம்மகன் நெருங்கிப் பழகுவதைக் கண்டு மகனிடம் பகையை வளர்த்தார் என்றும் கூறுவது பொருத்தமாகாதன்றோ?

இந் நிகழ்ச்சியைப்பற்றிய குறிப்புகளை இசாமியின் வாயி லாகவும் நாம் அறிகிறோம். இனி, அவர் தரும் குறிப்புகளைச் சிறிது கவனிப்போம். சுல்தான் யமுனை ஆற்றங் கரையை அடைந்தபோது, உலூக்கான் ஆற்றைக் கடந்து பேரரசுப் படையை நோக்கிச் சென்றார். சுல்தானைக் கண்டதும் குதிரை யிலிருந்து இறங்கித் தம்முடைய தந்தையின் தாள் தொட்டு வணக்கம் செலுத்தினார். அவர் நீண்ட நாள்கள் வாழவேண்டும் என்று பிரார்த்தனை செய்தார். தாம் செய்த தவறுகளை மன்னிக் கும்படி சுல்தானை வேண்டினார். உடனே இளவரசரை மார்புறத் தழுவ வேண்டும் என்ற எண்ணம் சுல்தானுக்கு ஏற்படவில்லை. ஏனெனில், இளவரசைப்பற்றி நல்ல செய்திகள் சுல்தானுக்கு எட்டவில்லை. அதன்பிறகு சுல்தான், உலூக்கான் தாமாகவே நிர்மாணித்திருந்த அரண்மனைக்குள் சென்றார். அங்கு ஆசனத்தில் அமர்ந்தபிறகு, தமக்குமுன்னால் யானைகளை அணிவகுத்துச்செல்லச் செய்யும்படி சுல்தான் கட்டளையிட்டார். அதனால், தரை ஆட்டங் கண்டது. புதிதாகக் கட்டப்பட்ட அரண்மனை நொறுங்கியது. அதனடியில் சிக்கிய சுல்தான் உயிரிழந்தார். இறுதியில் அகமத் அயாஸுடன் சேர்ந்து சுல்தானைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டியதற்காக இசாமி உலூக்கானைக் கண்டனம் செய்துள்ளார்.

பரனி, இந் நிகழ்ச்சியைப்பற்றி வெகு சுருக்கமாகக் கூறியுள் ளார். ஆப்கான்பூரில் அமைக்கப்பட்டிருந்த மரத்தாலான அரண்மனைக்குச் சென்ற பிறகு அனைவரும் உணவருந்தினர்கள். மலிக்குகளும் அமீர்களும் கைகளைக் கழுவுவதற்காக வெளியே வந்தனர். அப்போது ஆகாயத்திலிருந்து பூமியில் வாழ்ந்து வந்த மக்கள்மீது பேரிடி விழுந்தது. அதன் விளைவாக அரண்மனையின்

கூரை திடீரெனக் கீழே விழுந்தது. அதன் கீழே உட்கார்ந்திருந்த சுல்தான், அதனடியில் சிக்கிக்கொண்டு உயிரிழந்தார். அவருடன் இருந்த 5 அல்லது 6 பேர்களும் இறந்தனர். பரனி தரும் விவரங்கள் நமக்குப் பயன்படுவனவாக இல்லை. அப்போது என்ன நடந்ததென்பதை அவர் தெளிவாக நமக்குக் கூறவில்லை. பேரிடி விழுந்தது. அல்லது பேரிடி போன்ற ஆபத்து வந்தது என்ற இரு விதமான பொருளை அவர் கூறுவதிலிருந்து பெற இயலும். பேரிடி என்பது பொருத்தமாக இல்லை. இந் நிகழ்ச்சி பிப்ரவரி—மார்ச் மாதங்களில் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பர் சிலர்; சாதாரணமாக அம் மாதங்களில் இடி ஏற்படுவதில்லை. இரண்டாவதாக இந் நிகழ்ச்சி நடைபெற்றிருக்க வேண்டும் என்று ஈஸ்வரி பிரசாத் கூறுகிறார். மே மாதத்தில் நடந்திருக்கவேண்டும் என்று A. M. உசேன் கூறுகிறார். பிப்ரவரி—மார்ச் மாதங்களில் இடி ஏற்படுவதில்லை என்று ஈஸ்வரி பிரசாத் கூறுகிறார். மே மாதத்தில் வெப்பக் காற்று வீசியது என்று உசேன் கூறுகிறாரேயொழிய, இடி ஏற்பட்டதாக அவர் கூறவில்லை. ஆகவே, இரண்டாவதாக அளிக்கப்பட்டிருக்கும் பொருளே பொருத்தமாக உள்ளது. அதாவது இடி போன்ற ஒரு பெரிய ஆபத்து அப்போது ஆகாயத்திலிருந்து பூமிக்கு வந்தது என்பதாகும். அந்த ஆபத்து யாதென்பதைப் பரனி விளக்கவில்லை. எனவே, அவருடைய சான்று நமக்குப் பயன்படாது. எஞ்சியிருப்பவை இபின் இ-பதூதா, இசாமி அளிக்கும் சான்றுகளேயாகும். அவை உலூக்கானைக் குற்றவாளியாக உறுதிப்படுத்துகின்றன.

தற்கால வரலாற்றாசிரியர்களுள் சிலர், உலூக்கானைக் குற்றவாளியாகக் கருதுகின்றனர். தந்தைக்கும் மகனுக்கும் பல காரணங்களால் கருத்து வேறுபாடு வளர்ந்திருந்தது. அதைப்பற்றி முன்பே கவனித்துள்ளோம். அவற்றுள் மிக முக்கியமான ஒன்று, நிஜாமுத்தீன் அவுலியாவிடம் கியாஸ்உத்தீன் கொண்டிருந்த வெறுப்பும் உலூக்கான் கொண்டிருந்த நட்புமாகும். அதன் விளைவாக ஒரு சதித் திட்டம் உருவாக்கப்பட்டது. அதைப்பற்றி நிஜாமுத்தீனும் அறிந்திருந்தார். ஆகவேதான், சுல்தான் வங்கத்திலிருந்து திரும்பியபோது தாம் நகருக்குள் வருவதற்கு முன் நிஜாமுத்தீன் நகரைவிட்டுச் சென்றுவிடவேண்டும்; என்று ஆணையிட்டபோது, அவர் நகரை விட்டுச் செல்லாது இருந்தார். அப்போது அவருடைய நண்பர்கள் சுல்தான் டில்லிக்கருகே வந்துவிட்டார் என்று கூறியபோது, 'டில்லி இன்னும் வெகு தூரத்தில் உள்ளது' என்று பதில் அளித்தார். அவர் டில்லி வந்து சேர மாட்டார் என்பதை அவர் அவ்வாறு மறைத்துக் கூறினார். அவர் கூறியது போலவே அவர் டில்லியைப் போய்ச் சேரவே இல்லை.

இதிலிருந்து சுல்தானைக் கொல்லுவதற்கான திட்டம் ஏற்கனவே வகுக்கப்பட்டுவிட்டது என்பது தெரிகிறது. ஆப்கன்பூர் அரண்மனையை உலூக்கான் தாமாகவே கட்டினார் என்று இசாமி கூறுகிறார். அதைக் கட்டிய அகமத் அயாஸ் கட்டடம் இடிந்துபோனதற்குத் தண்டனை அடைவதற்குப் பதிலாகப் பதவி உயர்வைப் பெற்றார். தம் திட்டத்தை நிறைவேற்றுமுன் மௌலானாவை உலூக்கான் அங்கிருந்து தொழுகைக்குப் போகும்படி கூறினார். யானைகளைக் கொண்டு வந்து நிறுத்தி, அவற்றைக் கொண்டு கட்டடத்தை அழிக்கத் திட்டம் போட்டிருந்தபடியால்தான், அவற்றை அரண்மனை முற்றத்திற்கு அழைத்துவர உலூக்கான் அனுமதி கோரினார். கட்டடம் இடிந்து விழுந்த பிறகு, இடிந்து விழுந்த கட்டடப் பொருள்களை அப்புறப்படுத்துவதில் காலதாமதம் செய்தார். குற்றுயிராய்க் கிடந்த சுல்தானை வெளியே யெடுத்த பிறகு, அவருக்குச் சிகிச்சை அளிப்பதற்குப் பதிலாகக் கொலை செய்துவிட்டனர்.

A. M. உசேன் போன்ற ஆசிரியர்கள், அவர் குற்றமற்றவர் என்று கூறுகின்றனர். அதற்கு அவர்கள் பின்வரும் சான்றுகளைத் தருகின்றனர். உலூக்கானுக்கும் கியாஸ்உத்தீனுக்கும் பகை ஏற்பட்டிருக்கவில்லை. அதைப்பற்றி முன்பே கண்டுள்ளோம். அரண்மனையைச் சுல்தானுடைய ஆணைக்கேற்ப உலூக்கான் கட்டினார். யானைகளை முற்றத்திற்குக் கொண்டு வரும்படி கூறியது சுல்தானேயாவார். கியாஸ்உத்தீன் இறந்த பிறகும் கூட, உலூக்கானுக்கும் அவருடைய தாயாருக்கும் இடையே ஏற்பட்டிருந்த பாசம் சிறிதும் குறையவில்லை. கணவனைக் கொன்றவன் மகனாக இருப்பினும் அவனை எந்த மனைவியாவது வெறுக்காமல் இருக்கமுடியுமோ? உலூக்கான் பட்டமெய்திய போது அவருடைய சகோதரர்கள் ஒருவர்கூட அரசுரிமைக்குப் போட்டியிடவில்லை. தந்தையைக் கொன்றுவிட்டு ஒரு மகன் பட்டமெய்துவதைக் கண்டு, மற்றப் பிள்ளைகள் வாளாவிருப்பது கடினமன்றோ? பட்டமெய்திய பிறகு, பணம் கொடுத்து மலிக்குகள் முதலானவர்களின் விசுவாசத்தை அவர் பெற்றதாக நமக்குச் சான்றுகள் கிடைக்கவில்லை.

மேற்கூறியவற்றிலிருந்து இதைப் பற்றி நாம் திட்டவட்டமாக எதையும் கூறுவதற்கில்லை என்பது புலனாகும். ஆயினும், ஈஸ்வரி பிரசாத் கூறியதுபோல, உலூக்கானுக்கும் கியாஸ்உத்தீன் மரணத்திற்கும் சம்பந்தம் உண்டோ இல்லையோ! அவரது மரணம் நிச்சயமாகத் திட்டமிடப்பட்ட சதியின் விளைவே அன்றி, எதிர்பாராத விபத்தால் அன்று.

மதிப்பீடு : சுல்தான் கியாஸ்உத்தீன் துக்ளக் மிகத் தாழ்ந்த நிலையிலிருந்து தம் சொந்த முயற்சியாலும் திறமையினுலும் மிக உயரிய நிலையைப் படிப்படியாக அடைந்தவர்களுள் ஒருவராவார். மிகத் திறமை வாய்ந்தவர். எதையும் ஆலோசித்து முடிவுக்கு வரும் திறன் உடையவர். உணர்ச்சிவயப்பட்டு எதையும் செய்துவிட மாட்டார். நெருக்கடிக் காலங்களில் திடச் சித்தத்துடன் இருப்பார். இளகிய மனத்தையுடையவர். எல்லோரையும் அன்பாக நடத்தும் மனப்போக்குடையவர். அக் காலத்தில் அரச குடும்பத்தினரிடையே காணப்படும் தீய குணங்கள் அவரிடமில்லை. பெண்கள் விஷயத்தில் மிகக் கண்டிப்புடன் நடந்துகொண்டார். எளிய வாழ்க்கையை விரும்பினுர். அவர் ஒரு மிதவாதி, மக்களுடைய நன்மையையே இறக்கும்வரை கோரி வந்தார். அறிவாற்றல் மிக்கிருந்தவராகையால், அவர் எந்தக் காரியத்தையும் செவ்வனே செய்துமுடிப்பார். 'அவருடைய தொப்பியின் கீழ் நூறு தலைப்பாகைகளை அணிந்திருப்பதாக அவர் காட்சியளித்தார்' என்று அமீர்குஸ்ரூ கூறியுள்ளார்.

கியாஸ்உத்தீன் துக்ளக், ஒரு சிறந்த போர் வீரராகவும் அனுபவமிக்க படைத்தலைவராகவும் விளங்கினுர். அவர் ஓர் ஒப்புயர்வற்ற நிருவாகியாகவும் திகழ்ந்தார். தம்முடைய அதிகாரிகள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளைத் தொகுத்தளித்தார். திறமை வாய்ந்தவர்களையே உயர் பதவிகளில் அமர்த்தினுர். ஊழலை ஒழித்தார். அவர் வருவாய்த் துறையில் கொண்டு வந்த சீர்திருத்தங்கள் விவசாயிகளுக்கு நன்மையை உண்டாக்கின. ஒரு நாளைக்கு இருமுறை அரசவையைக் கூட்டி நியாயம் வழங்கினுர். பாரபட்சமற்ற வகையில் நீதிவழங்கி, மக்களிடையே சட்டத்திற்கு உயர்ந்த மதிப்பைக் தேடித் தந்தார். காவல் துறையைத் திருத்தி அமைத்து, நாட்டில் அமைதியை நிலை நாட்டினுர். திருடர்கள் பயம் அவர் காலத்தில் குறைந்து விட்டது.

இஸ்லாமிய மதத்தில் மிகுந்த பற்றுக் கொண்டிருந்தார், இந்து மதத்தை வெறுத்தார். இந்துக்களிடம் கடுமையாக நடந்து கொண்டார். கோயில்களை இடிப்பது, சிலைகளை உடைப்பது போன்ற காரியங்களைச் செய்ய அவர் தயங்கியதில்லை. முஸ்லீம்களைத் திருப்திப்படுத்துவதற்கு மேற்கண்டவற்றைச் செய்து வந்தார் என்றுலும், அதிலும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குமேல் அவர் போனதில்லை. குஸ்ருஷாவிடமிருந்து உலாமாக்கள் தகாத முறையில் பெற்ற பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி வற்புறுத்தினுர்.

கியாஸ்உத்தீன் கட்டடக் கலை வளர்ச்சிக்கு அரிய தொண்டாற்றியுள்ளார். அவர் துக்ளக்காபாத் என்னும் நகரை நிர்மாணித்தார். அந் நகருக்கு எதிரே அவர் சிவப்புக் கற்களையும் சலவைக் கற்களையும் கொண்டு கட்டுவித்த சமாதியும் அவரது கட்டடக் கலையின் சிறப்பை அறிவிக்கிறது.

அலாவுத்தீன் இறந்தபிறகு, டில்லி சுல்தானியம் இழந்துவிட்ட மதிப்பையும் அதிகாரத்தையும் மீண்டும் நிலைநிறுத்திய பெருமை கியாஸ்உத்தீனைச் சாரும். அலாவுத்தீனுக்குப் பிறகு நிலைகுலைந்து போன ஆட்சி முறைக்குப் புத்துயிர் அளித்தவரும் அவரேயாவார்.

# 2. முகமது பின் துக்ளக் (1325-1351)

கியாஸ்உத்தீன் துக்ளக் இறந்த மூன்று நாள்களுக்குப் பின்னர் உலூக்கான் அரியணை ஏறினார். வரலாற்றாசிரியர்கள் அவரைப் பலவாறு அழைக்கின்றனர். முகமது துக்ளக், முகமது பின் துக்ளக், முகமது ஷா, கியாஸ் உத்தீன் துக்ளக் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறார். உலூக்கானைத் தமது பின்னுரிமையாளராகத் தேர்ந்தெடுத்திருந்தமையால், அவர் பட்டமெய்தியபோது எவரும் அவரை எதிர்க்கவில்லை. நாற்பது நாள் துக்கம் கொண்டாடிய பிறகு, முகமது டில்லியிலிருந்த தௌலத்கானாவில் முடிசூட்டிக்கொள்ள துக்ளக்காபாத்திலிருந்து புறப்பட்டார். அந்த நன்னாளையொட்டி நகரமெல்லாம் அலங்கரிக்கப்பட்டது. அரசருடைய ஊர்வலம் நகர வாயிலுக்குள் நுழைந்தபோது பொன்னும் வெள்ளியும் வாரி இறைக்கப்பட்டன. மக்கள் அனைவரும் அவரை வாழ்த்தினார்கள். அவர் பட்டமெய்திய உடன், முகமது என்ற பெயரைச் சூட்டிக்கொண்டார். அப்போது தாம் கியாஸ்உத்தீன் துக்ளக்கினுடைய வழியைப் பின்பற்றி நடக்கப் போவதாகவும், வயதில் மூத்தவர்களைத் தம் தந்தையர்களாகவும், சிறியவர்களைத் தம்முடைய சகோதரர்களாகவும் பாவித்து நடக்கப் போவதாகவும் வாக்குறுதியளித்தார்.

முகமதுவினுடைய ஆட்சியைப்பற்றி நாம் அறிந்துகொள்ள நமக்கு மூன்று சமகால வரலாற்றாசிரியர்களின் நூல்கள் கிடைத்துள்ளன—பரனி, இசாமி, இபின்-இ-பதூதா. அவர்கள் நமக்கு விரிவாக நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறியுள்ளனர் என்றாலும், அந் நிகழ்ச்சிகள் சரியான முறையில் தொகுத்தளிக்கப்படவில்லை, அவற்றின் தேதிகளும் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, அவற்றைச் சரியானபடி வரிசைப்படுத்திக் கூற இயலாத நிலையில் உள்ளோம். மேலும், சில முக்கியமான சீர்திருத்தங்கள் எந்த நோக்கங்களுடன் கொண்டுவரப்பட்டன என்பதையும் அவற்றின் தன்மையையும் நாம் அறிவதற்கில்லை.[1] அதன் விளைவாக அவருடைய ஆட்சியைச் சரியான முறையில் புரிந்துகொண்டு, அதனை ஒழுங்காக அமைத்துக் கூற இயலவில்லை. அவருடைய குணாதிசயங்களையும் சரிவரப் புரிந்து கொள்ளாது, வரலாற்றாசிரியர்கள் அவற்றைப்பற்றிப் பலவிதமாக விவாதம் செய்துள்ளனர்.

[1] HCIP, V, 61.

அரசெய்திய பிறகு, முதல் வேலையாக அரசாங்கப் பதவி களையும், கௌரவப் பட்டங்களையும் தம்முடைய ஆதரவாளர் களுக்கு அளித்தார். அவருடைய அரசாங்கத்தில் மலிக்பிருஸ் நாயப் - இ - பர்பெக்காகவும், மலிக் அயாஸ் குவாஜா - இ - ஜஹானாகவும், மலிக் காபுல் மலிக் கபீராகவும், மலிக் சர்தெஸ் ரஸி உல் முல்க்காகவும், மலிக் பின் தார் கல்ஜி காதர்கானாகவும், லக்னோதியின் இக்தாதாராகவும், மலிக் ஹசாமுத்தீன் அபராஜா நிஜாம் உல் முல்க்காகவும், மலிக்-இஸ் உத்தீன் யஹியா பன்தத் ஆஜம் உல் முல்க்காகவும், சத்கோயான் இக் தாதாராகவும், மௌலானா கவாமுத்தீன் குத்லூகான் பட்டத்துடன் வக்கீல் தாராகவும், முகமது, அலப்கான் என்ற பட்டத்துடன் குஜரத் இக்தாதாராகவும், மௌலானா நஜாமுத்தீன் அலிம் உல் முல்க் காகவும், கமாலுத்தீன் சதர் - இ - ஜஹானாகவும், நிஜாமுத்தீன் கமல்சுர்க் முக்லிஸ-ல் முல்க்காகவும், ஷிஹாப் சுல்தானி தாஜ் உல் முல்க்காகவும், மௌலானா யூசுப் தவானுல் முல்க்காகவும், மலிக் கிரான் சப்தருல் முல்க்காகவும், மலிக் பேசி சர்தாவத்தாரா கவும், மலிக் ஷிஹாப்புத்தீன் அபுராஜா மலிக்கு துஜ்ஜார் என்ற பதவியுடன் நோசரியின் இக்தாதாராகவும் நியமிக்கப்பட்ட னர்.[1] மேற்கண்டவர்களே அவரது ஆளும் வகுப்பாக இருந்து ஆட்சியை நடத்துவதற்கு அவருக்கு உதவினர்கள்.

முகமதுவின் ஆளும் வகுப்பு ஏழு உட்கூறுகளைக் கொண் டிருந்தது: (1) அலாவுத்தீன் காலம் தொடங்கிச் சுல்தானிடம் பணியாற்றிவரும் அதிகாரிகளின் குடும்பங்கள், (2) இஸ்லாமிய மதத்தில் புதிதாகச் சேர்ந்துகொண்டு உயர் பதவியை அடைந்த வர்கள்; (3) அந்நியர்கள்; (4) சமயத்தொண்டில் ஈடுபட் டிருந்த குடும்பங்கள்; (5) ஆப்கானியர்கள்; (6) சத அமீர்கள். (7) இந்துக்கள்.[2]

பழைய பிரபுக்கள் வரிசையில் மூன்று முக்கியமானவர்களை இங்குக் குறிப்பிடலாம்—வசீராகப் பணியாற்றிவந்த குவாஜா-இ-ஜஹான், குத்லூகான், ஆயின் உல் முல்க். முகமதுவின் கொள்கைகளை வரையறுப்பதில் அகமது அயாஸ் முக்கியமான பங்கினை ஏற்றிருந்தார். குத்லூகான் முகமதுவின் ஆசிரயராக இருந்தமையால், அவர் மிக்க மரியாதையுடன் நடத்தப்பட்டார். 1335-ல் அவர் தௌலத்தாபாத்தின் வசீராக நியமிக்கப் பட்டார். அப் பதவியைத் திறம்பட வகித்துத் தென்னிந்தி யாவில் ஏற்பட்ட கலகங்களை ஒடுக்குவதற்கான ஆற்றலை அவர்

[1] Yahya Sirhindi, Mubarak Shahi, 98.
[2] ACHI, 562.

பெற்றிருக்கவில்லை. அளவு மீறிய எச்சரிக்கையுடன் அவர் நடந்துகொண்டமையால், தென்னிந்தியாவில் பல பகுதிகளை டில்லி சுல்தான் இழக்க நேர்ந்தது. ஆகவே, அவரை டில்லிக்குத் திருப்பி அழைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. ஆயின் உல் முல்க் ஒரு சிறந்த நிருவாகி. செயலாற்றல் மிக்கவர். அதே நேரத்தில் நன்ருகக் கற்றறிந்தவர். பாரசீக மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தார். இந்துஸ்தானி பிரபுக்களுக்கு அவர் தலைவராக இருந்தார் என்று இபின்-இ-பதூதா கூறியுள்ளார். ஆகவே, அவர் அந்நிய அமீர்களின் வெறுப்பைச் சம்பாதிக்க நேர்ந்தது. அந்நிய அமீர்கள் அவரை ஏதேனும் ஓர் இக்கட்டில் சிக்கிவிடுவதற்கான தருணத்தை எதிர்பார்த்தவண்ணமிருந்தனர்.

இந்து மதத்தை விட்டு இஸ்லாம் மதத்தைத் தழுவி உயர் பதவிகளை அடைந்தவர்களுள் அஸீஸ் உத்தீன் கம்மர், கவாமுல் முல்க் ஆகியோர் முக்கியமானவர்களாவார்கள். அஸீஸ் உத்தீன் மாளவத்தின் ஆளுநராகப் பணியாற்றி வந்தார். கவாமுல் முல்க் மக்பூர் உயர் குடும்பத்தைச் சார்ந்தவர், அவரை இஸ்லாமிய மதத்தில் சேர்த்துவிட்டவர் சுல்தானேயாவர். அவர் வாரங்கலைச் சேர்ந்தவர். பல முக்கியமான பதவிகளை அவர் வகித்திருந்தார். ஒருமுறை மூல்தானின் ஆளுநராகவும் பணியாற்றி வந்தார். சுல்தானுடைய இறுதிக் காலத்தில் டில்லியில் நாயப் வஸீராகப் பணியாற்றி வந்தார். அரச குடும்பங்களைச் சார்ந்த பலரும் சுல்தானின் கீழ்ப் பணியாற்றி வந்தனர். அவர்களுள் கம்பிலி அரசருடைய பிள்ளைகள் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள், இவர்களிடத்தில் சுல்தான் அதிகமான நம்பிக்கையைக் கொண்டிருந்தார்.

அந்நியர்களிடத்திலும் சுல்தான் மிகுந்த பற்றுக்கொண்டு அவர்களுக்குப் பல சலுகைகள் காட்டிவந்தார். நிருவாகத்தில் அவர்களுக்கு முக்கியமான பொறுப்புகளை அளித்தார். அந்நியர்களிடத்தில் அன்பாக இருந்து, அவர்களை ஆளுநர்களாக நியமிப்பது சுல்தானுடைய வழக்கம் என்று இபின்-இ-பதூதா கூறியுள்ளார். அமைச்சர்கள், நீதிபதிகள் போன்ற உயர் பதவிகளை அந்நியர்களுக்கே அவர் பெரும்பாலும் அளித்துவந்தார். அவர்களை 'ஆயிஸா என்று அழைக்கவேண்டும்', என்று சுல்தான் ஆணையிட்டிருந்தார். 'ஆயிஸா' என்பதற்கு மேம்பட்டவர்கள் என்று பொருள்.

முகமது காலத்தில்தான் ஆட்சிமுறையைச் சார்ந்த பணிகளில் சமயச் சார்புடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். முதலில் கலீபாக்கள், மத குருமார்களை

அரசியல் பணிகளில் ஈடுபடுத்தியிருந்தனர் என்பதால், முகமதுவும் அவ்வாறே செய்ய முற்பட்டார். ஆனல், அவர் காலம் மாறி விட்டதென்பதை அறியவில்லை. அப்போதைய நிலைமையில் அரசுப்பணி, சமயப்பணி ஆகியவற்றினுக்கு வெவ்வேருன பயிற்சி தேவைப்பட்டதென்பது அவருக்குப் புரியவில்லை. ஷெயிக்முயீஸ் உத்தீன் குஜராத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டபோது, அங்கு ஒரு நெருக்கடி நிலை உருவாகியிருந்தது. அதனை எதிர்கொள்வதற் குரிய படைப் பயிற்சியோ, நிருவாகப் பயிற்சியோ அவர் பெற்றிராமையினுல், கலகக்காரர்கள் அவரைக் கொன்றுவிட் டனர். அதேபோன்று பஹ்ராம் அய்பாவுடன் போர் செய்ய நேர்ந்தபோது ஷெயிக் இமாத் உத்தீன் கொல்லப்பட்டார். ஷெயிக் ஷிஹாப்புத்தீன் என்ற முஸ்லிம் சமயக்குரவரை வருவாய் அதிகாரிகளிடமிருந்து நிலுவைப் பணத்தை வசூலிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டது. சித்திரவதை போன்ற வழிகளைக் கைக்கொண் டாலொழிய அதனை வசூலிக்க இயலாது. அந்த வகையான முறைகளை ஷிஹாபுத்தீன் கையாள முடியவில்லை. ஏனவே, முகம்மதுவின் இந்தவகையான பரீட்சார்த்தமான நடவடிக் கைகள் தோல்வியில் முடிந்தன. முஸ்லிம் சமயப் பணியாளர்கள் நிருவாகத்தில் சிறந்து விளங்கவில்லையாதலால், அவர்கள் அரசியலிலிருந்து மெதுவாக விலகிவிட்டனர்.[1]

சில ஆப்கானிய குடும்பங்கள் உயர்பதவிகளை வகித்திருந்தன. அவர்களுள் மலிக்மக், மலிக் சாஹுலோதி ஆப்கன் ஆகியவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள். அவர்கள் யாவரும் சுல்தா னுக்கு விசுவாசமாக இருந்தனர் என்று கூற இயலாது.

இறுதியாக, முகமதுவின் காலத்தில் பல இந்துக்கள் முக்கிய மான பதவிகளை வகித்திருந்தனர். சாயிராஜ் என்ற இந்து வசீர் பதவியை வகித்திருந்ததாகக் கூறப்படுகிறது. தாரா என்ற மற்ருெரு இந்து, தக்காணத்தின் நாயப் வசீராகப் பணிபுரிந்து வந்தார். செவான் ஆளுநராக ரதன் என்ற மற்ரேர் இந்து, பணியாற்றி வந்திருந்தார். பிரன்ராய் என்பவர், குல்பர்காவின் ஆளுநராகச் செயற்பட்டு வந்தார். இந்துக்களை உயர் பதவிகளில் அமர்த்தியதால், பழைய முஸ்லிம் பிரபுக்கள் தங்களுடைய ஏகபோக உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டனவாகக் கருதிப் பல கலகங்களைத் தொடங்கினர்கள்.

இந்த ஏழு வகையான கூறுகள் ஒன்றுபட்டுச் செயற்பட வில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலையில் இழுத்துச்

[1] ibid, 563-54

சென்றனர். ஆகவே, நிருவாகம் சரிவர நடத்த இயலாது போயிற்று. அதுவே அவருடைய கொள்கைகளும் திட்டங்களும் நிறைவேருது போனதற்கு முக்கியக் காரணமாகும்[1]. எனினும், அவருடைய அரசாங்கம் 'சிறுபான்மையினரின் அரசாங்கம்,' என்ற எண்ணத்தைத் தோற்றுவிப்பதற்குப் பதிலாகப் பலதிறப் பட்ட சமுதாயக் கூறுகளின் பிரதிநிதிகளால் நடத்தப்பட்டு வரும் அரசாங்கமாக அது தோற்றமளித்தது. அந்தவகையாக முகமது, தம் அரசாங்கத்திற்கு ஒரு பலத்தைத் தேடித்தந்திருந்தார் என்று கூறப்படுகிறது.

### முகமதுவின் பொதுக் கருத்துகளும் மனப்பான்மையும்

டில்லி அரியணையில் வீற்றிருந்து ஆட்சி செலுத்திய அரசர் களுள் முகமது பின் துக்ளக்கினுடைய நடவடிக்கைகளும் குணுதி சயங்களும் போன்று வேறெந்த அரசருடைய நடவடிக்கைகளும் குணுதிசயங்களும் வரலாற்று ஆசிரியர்களுடைய மனத்தைக் குழப்பிவிடவில்லை. அக் கால வரலாற்ருசியர்களும் தற்கால வரலாற்ருசிரியர்களும் அவருடைய நடவடிக்கைகளேயும் குண நலன்களேயும்பற்றி விரிவாக விவாதித்துள்ளனர். அதன் விளேவாக, அவர்களிடையே மாறுபட்ட கருத்துகள் தோன்றியுள்ளன. அவற்றை நாம் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டுமெனில், முதலில் முகமதுவின் பொதுக் கருத்துகளேயும், மனப்பான்மையையும் பற்றி நாம் தெரிந்துகொள்வது அவசியமாகும். முதலாவதாக, அவர் பிரச்சினேகளேப் புதியவகையில் எதிர்கொள்வதில் பேரார்வம் காட்டிவந்தார். இரண்டாவதாக, அவர் இந்தியாவை ஒரு குடைக்கீழ்க் கொண்டுவர எண்ணிஞர். எல்லாப் பகுதி களேயும் ஒரேமாதிரியான நிருவாக முறையின்கீழ்க் கொண்டுவர வேண்டும் என்று விரும்பிஞர். வடக்கு, தெற்கு என்றவாறு மக்களேப் பிரித்துப் பேச வாய்ப்பு அளிக்காதவாறு இந்தியாவை ஒன்றுபடுத்திவிட வேண்டும் என்பது அவருடைய பேரவா ஆகும். மூன்ருவதாக, அவர் இந்தியாவிற்கு வெளியேயும் தம் ஆதிக்கத்தை நிலேநாட்ட விரும்பிஞர். அதற்கேற்ப மத்திய ஆசியாவின் அரசியல் நிலேமையும் சீர்கேடுற்று இருந்தது. அவர் கொண்டிருந்த உயரிய பேரரசுக் கொள்கையைப் பரனி மிக அழகாகப் பின்வருமாறு எடுத்துக் கூறியுள்ளார். 'உலகத்தின் நான்கில் ஒரு பங்கு அவருடைய அடிமைகளின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்ட பிறகும், உலக மக்கள் யாவரும் அவருக்குக் கீழ்ப்படிந்துவிட்ட பிறகும், உலக முழுவதிலும் உள்ள மக்கள் அவருக்கு வரி செலுத்த இசைந்த பிறகும், யாரேனும் ஒருவர், ஏதேனும் ஒரு தீவில் ஒரு சிறு நிலப்பகுதி அல்லது ஏதேனும் ஒரு

[1] ibid, 565.

நாட்டில் ஒரு சிறு நிலப்பரப்பு அவருடைய ஆதிக்கத்தின் கீழ் இன்னும் கொண்டுவரப்படவில்லை என்று அவரிடம் கூறிவிட்டால், அதையும் அவர் வெல்ல முற்படுவார்', என்று கூறியுள்ளார். மேலும் அவர் அலக்சாந்தரைப் போல நாடுகளை வெல்வதோடு திருப்தி அடையமாட்டார் என்றும், 'சால மோனைப்போல் உலக மக்களையும் 'ஜின்' (Jin)களையும் ஆள விருப்பப்பட்டார்,' என்றும் கூறியுள்ளார். சுல்தானாக மட்டு மன்றித் தீர்க்கதரிசியாகவும் இருந்து எல்லா நாடுகளில் வாழ்ந்திருந்த மக்களுக்குக் கட்டளைகளைப் பிறப்பித்து வர வேண்டும் என்று அவர் எண்ணினார். நான்காவதாக, முகமது ஷா அந்நிய நாடுகளுடன் அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் ஆகிய துறைகளில் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பினார். ஆசியாவின் பலபகுதிகளிலிருந்து தூதுவர்கள் டில்லிக்கு வந்தனர். ஈராக்கின் அரசரான மூசா, சீனாவில் ஆட்சி செலுத்தி வந்த தோகன் தைமூர், கோராசமின் அரசியான துராபக் ஆகியோர் டில்லிக்குத் தூதுவர்களை அனுப்பிவைத்தனர். சிரியாவினுடைய இளவரசர் அமீர் சைஃபுத்தீனும் அவர் காலத்தில் டில்லிக்கு வந்தார்; ஈரானை ஆண்டுவந்த சுல்தான் அபு சையத்கான், ஒரு தூதுவரை டில்லிக்கு அனுப்பிவைத்தார். சீனப் பேரரசர், முகமதுவிற்கு நிறைய பரிசுகளைத் துர்சி என்ற தூதுவரின் மூலமாக அனுப்பிவைத்தார். துர்சியுடன் 15 பேர்களும், நூறு பணியா ளர்களும் வந்ததாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. முகமதுவும் அதைவிடப் பெரிய தூதுக்குழுவையும் பல பரிசு களையும் சீனாவிற்கு அனுப்பிவைத்தார். ஒரு கோடி டங்காக்களைச் சுல்தான் முகமது ஈரானுக்கு அனுப்பிவைத்து அவற்றைப் புண்ணிய நகரங்களுக்கு பகிர்ந்தளிக்கும்படி அபு சையத்கானைக் கேட்டுக்கொண்டார்.

ஐந்தாவதாக, அவர் சமயம்பற்றிய விஷயங்களில் பகுத்தறிவு வாதியாக விளங்க முற்பட்டார். சமயம்பற்றிய கருத்துகள் ஒவ்வொன்றையும் ஆராய்ந்து உண்மையை அறிய விரும்பினார். இதை வரலாற்றாசிரியர்கள் தவறாகக் கருதினார்கள். அவருடைய பகுத்தறிவு வாதத்தை நாஸ்திக வாதமாகக் கருதத் தலைப்பட்டனர். அதன் விளைவாக, அவர் இஸ்லாமிய மதத்தில் நம்பிக்கை இழந்து விட்டார் என்று அவர்கள் கூற ஆரம்பித்து விட்டனர். அது தவறான கருத்தாகும். தம் மக்களைத் தொழுகைகளைச் சிறிதும் பிறழாமல் நடத்தி வரவேண்டும் என்று அவர் வற்புறுத்தி வந்தார் என்றும், கூட்டுத் தொழுகைக்கு வாராதவர்களைத் தண்டித்தார் என்றும் இபின்-இ-பதூதா கூறி யுள்ளார். ஒவ்வொரு நாளும் காலைத் தொழுகைக்குப் பிறகு, அவர்

தத்துவம்பற்றிய விவாதங்களை மேற்கொள்ளுவார். முஸ்லிம் உலமாக்கள் மட்டுமன்றி, முஸ்லிம் அல்லாத அறிஞர்களையும் அவர் அக் கூட்டங்களுக்கு வரவழைத்து அவர்களுடன் விவாதம் நடத்தி வந்தார். சமண மதத்தைச் சார்ந்த அறிஞர்களுடன் அவர் விவாதம் மேற்கொண்டதைப்பற்றிச் சமணக் குறிப்புகள் கூறு கின்றன. 'ஜீனபிரபாசூரி' என்ற சமணப் பெரியார் சுல்தானுடன் நள்ளிரவுவரை பேசிக்கொண்டிருந்ததாக நாம் அறிகிறோம். ஏனைய சமயத் தலைவர்களை அவர் ஆதரித்து வந்தார். ஜீன பிரபாசூரிக்கு ஓராயிரம் பசுக்களை அவர் கொடுத்தார். ராஜசேகரா போன்ற சமணக் கல்விமான்களுக்கும் அவர் பணத்தை வாரி வழங்கி யுள்ளார். ஏனைய மதத்தினர்களிடம் அவர் வெறுப்புக் கொண்ட தில்லை. அவர்களுடைய சடங்குகளிலும் விழாக்களிலும் அவர் கலந்து கொள்வார். இந்துக்களுடைய முக்கியமான பண்டிகை களுள் ஒன்றாகக் கருதப்படும் ஹோலிப் பண்டிகையில் கலந்து கொண்ட முதல் முஸ்லிம் அரசர் இவரேயாவார். முஸ்லிம்களுள் சிலர், இந்து யோகிகளின் சீடர்களாக மாறினர். மற்றும் சிலர் அவர்கள் பின்னாலேயே திரிந்து வந்தனர். அத்தகைய காட்சிகள் அவரை யோகிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி தூண்டவில்லை. பாலாதீனாவிலுள்ள சத்ருன்ஜயா கோயில் களுக்கும், கிர்னாரிலுள்ள கோயில்களுக்கும் அவர் சென்று வந்தார். சத்ருன்ஜயா கோயிலில் ஒரு சமணத் தலைவர் என்னென்ன சமயச் சடங்குகளைச் செய்வாரோ அவை யாவற் றையும் அவர் செய்தார். சமணத் துறவிகள் தங்குவதற்காக ஓர் இல்லத்தைக் கட்டும்படி அவர் ஆணையிட்டார். அவருடைய கட்டளையின் பேரில் பசுவிற்கு ஒரு கோயில் கட்டப்பட்டதாகக் கல்வெட்டுகள் நமக்கு அறிவிக்கின்றன. அறிவு பற்றிய செய்திகளில் அவர் அளித்திருந்த சுதந்தரத்தின் விளைவாகப் பல சமயக் கூடங்கள் வளர்ச்சியுற்றன.

பதின்மூன்றாம், பதினான்காம் நூற்றாண்டுகளில் மங்கோலி யர்கள் முஸ்லிம்களின் ஆதிக்கத்தை அழித்து வந்தனர். அதன் விளைவாக, முஸ்லிம்களிடையே இரு இயக்கங்கள் தோன்றின. அரசியல் பலத்தை மீண்டும் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபடு வதற்குப் பதிலாக, முஸ்லிம்களின் ஆன்மீகப் பலத்தை அதிகமாக்கி அதன் வாயிலாக முஸ்லிம் சமுதாயத்திற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்பது ஒரு சாராரின் கருத்து. இக் கருத்தை முஸ்லிம் ஞானிகள் (mystics) வலியுறுத்தினார்கள். அப்போது ஏற்பட் டிருந்த பாதகமான சூழ்நிலையிலிருந்து முஸ்லிம்களை மீட்பதற்கு முஸ்லிம் சமுதாயத்தின் மக்கள், அரசர், உலமாக்கள் போன்ற உட்கூறுகள் அனைத்தையும் ஒன்றாகக் கொண்டு வருவதற்கான

இயக்கம் ஒன்று அவசியமென்றும், அரசியல் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றினாலன்றி முஸ்லிம் சமுதாயம் முன்போல் தழைத்தோங்குவதற்கு வழியில்லை என்றும் வேறு சிலர் வற்புறுத்தினார்கள். இரண்டாவதாகக் கூறப்பட்டுள்ள கருத்தை முகமது பின் துக்ளக் ஏற்றுக்கொண்டதாக நமக்குத் தெரிகிறது. அதன் விளைவாக அவர் சமயம், அரசு ஆகிய இரண்டும் 'இரட்டைப் பிறப்புகள்' என்று கூறியுள்ளார். அரசு வேறு, சமயம் வேறு என்றும், ஆகவே அரசுடன் சமயத்தலைவர்கள் தொடர்பு கொள்ள வேண்டுவதில்லை என்றும், அரசு, அவர்களைக் கட்டுப் படுத்த இயலாதென்றும் முஸ்லிம் சமய ஞானிகள் கூறினார்கள். அதை மறுக்கவே முகமது மேற்கண்டவாறு பேசியுள்ளார் என்று கூறப்படுகிறது. முகமது, தமது நாணயங்களில் 'நபிகளுக்குள் கடைசியாகத் தோன்றியவருடைய கர்ண பரம்பரையைப் புதுப்பிக்கிறவர்' என்று தம்மைக் குறிப்பிட்டு வந்தார்.

மேற்கண்டவற்றிலிருந்து அவர் பின்னால் கூறப்பட்ட கருத்தை முற்றிலும் ஏற்றுக்கொண்டாரென்றோ அல்லது, முஸ்லிம் ஞானிகளை முழுமையாக வெறுத்தார் என்றோ நாம் கூற இயலாது. ஏனெனில், அவர் தம்முடைய நன்மைக்காக ஞானிகள் கருத்தைப் பற்றி ஒரு புத்தகத்தை எழுதும்படி ஷெயிக் ஷர்ப்புத்தீனைக் கேட்டுக் கொண்டார்.

அரசினுடைய ஆதிக்கத்தையும் லௌகீக வாழ்க்கையையும் வெறுத்து வந்த ஷெயிக் அலாவுத்தீனுடைய சீடராக முகமது இருந்து வந்தார் என்றால், அது சுல்தான் ஞானிகளிடம் கொண்டிருந்த மதிப்பை வெளிப்படுத்துகிறது. ஷெயிக்ருக்னுத்தீன் மூல்தானியின் பாதங்களைத் தொட்டு வணங்கினார் என்பதையும் நாம் அறிகிறோம். அதுமட்டுமன்றி அவருடைய வேண்டுதலின் பேரில் மூல்தானில் கலகம் செய்தவர்களைத் தண்டிக்காது விட்டு விட்டார். ஆஜ்மீரிலுள்ள ஷெயிக் முயீன் உத்தீன் சிஷ்டியினுடைய சமாதிக்குச் சென்று வணக்கம் செலுத்திய முதல் டில்லி சுல்தான் அவரேயாவர். பாரெய்க்கிலுள்ள சாலார் மசூத் காஜியினுடைய சமாதிக்குச் சென்று அதனைப் பாதுகாத்து வந்தவர்களுக்கு ஏராளமான பொருளைத் தந்தார். பல முஸ்லிம் ஞானிகளுக்குச் சமாதிகளைக் கட்ட பொருளுதவி செய்தார். ஆகவே, ஞானிகளையோ அவர்களுடைய சமயக் கொள்கைகளையோ அவர் வெறுக்கவில்லை என்பது விளங்கும். அரசுக்கும் சமயத்திற்கும் சம்பந்தமில்லை ; அரசினிடமிருந்து சமயம் பிரிந்து தனித்துச் செயற்படவேண்டும் என்ற ஞானிகளுடைய கொள்கையைத் தான் அவர் எதிர்த்தார். அவருடைய திட்டங்களுக்கு ஞானிகள்

உதவ வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். ஞானிகளுடைய திறமை வீண் போகக் கூடாது என்பதற்காக அவர்களுள் பலரை நிருவாகத்தில் ஈடுபடுத்தினர். தம்முடைய சகோதரிகளையும் பெண்களையும் அவர்களுடைய குடும்பத்தினர்களுக்கு மண முடித்து வைத்தார்[1].

'திறமை உள்ளவர்களுக்கே பதவி' என்ற கொள்கையின் அடிப்படையில் அவர் அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்று எண்ணினர். எனவே, கீழ்ச்சாதி மக்கள் பலரை உயர்ந்த பதவி களில் அவர் அமர்த்தினர், அவர்களுள் அஜீஸ் கம்மர் ஒருவ ராவார்[2]. அவர்கள் யாவரும் நன்ருகக் கற்றறிந்தவர்கள்; திறமை வாய்ந்தவர்கள். நிருவாகம் சரிவர நடக்க வேண்டு மென்ருல், எல்லா வகைப்பட்டவர்களின் ஆதரவும் துணையும் அவசியமென்று அவர் உணர்ந்தார். ஆகவே, அவர் இந்துக் களையும் நிருவாகப் பணிகளில் பெருவாரியாக ஈடுபடுத்தினர். இந்துக் கல்விமான்களையும் கவிஞர்களையும் அவர் பேணி வந்தார்.

இத்தகைய முற்போக்குக் கருத்துகளைக் கொண்டவருடைய வரலாற்றை அறிய நாம் பெரும்பாலும் பரனியின் உதவியை நாட வேண்டியுள்ளது. பரனியோ ஒரு பிற்போக்குவாதியாகவே இருந்து வந்துள்ளார். எனவே, அவர் முகமதுவின் திட்டங்களில் பொதிந்திருந்த மேலான கருத்துகளை நமக்கு எடுத்துக் கூறத் தவறி விட்டார். இதைக் கருத்தில் வைத்துக்கொண்டு முகமதுவின் அரசியல் வாழ்க்கையைப் படித்தாலொழிய, அவரைப்பற்றிச் சரியாகப் புரிந்து கொள்ள இயலாது.

## ஆட்சிமுறை சார்ந்த நடவடிக்கைகள்

### (I) தோவாப் பகுதியில் வரி உயர்த்துதல்

அக்கால வரலாற்ருசிரியர்களுள் பரனி மட்டுமே தோவாப் பகுதியில் வரி உயர்த்தியதைப்பற்றி நமக்குக் கூறியுள்ளார். தேதிகளைக் குறிப்பிடும்போது பரனி மிகவும் அசட்டையாக இருந்து விட்டமையால், இந் நிகழ்ச்சி எந்த ஆண்டில் ஏற்பட்டது என்பதுபற்றித் தற்கால வரலாற்ருசிரியர்களிடையே மாறுபட்ட கருத்துத் தோன்றியுள்ளது. கி. பி. 1326-27ஆம் ஆண்டில் இது நடைபெற்றிருத்தல் வேண்டும் என்று தற்கால ஆசிரியர்களுள் சிலர் கருதுகின்றனர்[3]. வேறு சிலர் கி. பி. 1329-1330-ல் நடந்திருக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

[1] Ibid, 491 - 497.
[2] Barani, Tarikhi Fimz guaki, p. - 505.
[3] ஈஸ்வரி பிரசாத், Garuna Turks, 67 - 68.

தோவாப்பில் வரி உயர்த்தியதற்குக் காரணங்கள் எவையாக இருக்கும் என்பதிலும் கருத்து வேறுபாடு தோன்றியுள்ளது. 'அரசாங்கக் கருவூலம் காலியாகி விட்டமையால், வரி உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது' என்று பரனி கூறுகிறார். அது மட்டுமன்றித் தோவாப் மக்களை அவர் தண்டிக்க வேண்டும் எனக் கருதியதால் வரியை உயர்த்தினார் என்றும் அவர் கூறியுள்ளார். தோவாப் பகுதி மிகவும் செழிப்பாக இருந்தமையால், அங்கிருந்த மக்கள் செல்வச் செழிப்புடன் விளங்கினார்கள். தேவைக்கு மேலாக அவர்களிடம் பணம் நடமாடியதால், அவர்களின் கலகச்செயல்களைப்பற்றிச் சிந்திக்க நேரம் கிடைத்தது. எனவே, தோவாப் பகுதியில் கலகக்காரர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

அவர்களுடைய செல்வாக்கை அழிக்கவேண்டுமெனில், அவர்களிடமிருந்த பணத்தை முதலில் பறிக்கவேண்டும் என்று முகமது எண்ணினார். ஆகவே, அவர் அங்கிருந்தோர்மீது விதிக்கப்பட்டிருந்த வரிச்சுமையை அதிகமாக்கினார். இந்த வகையான நோக்கத்தோடு வரியை அதிகப்படுத்துவதென்பது புதிதாகக் காணப்படவில்லை. அலாவுத்தீன் கிராமத் தலைவர்களை எவ்வளவு கொடூரமாக நடத்தினார் என்பதை முன்னர்க் கண்டுள்ளோம். ஆகவே, முகமதுவின் நோக்கங்களில் குறை காண இயலாது என்பது தெளிவாகும்.

இனி வரியை எந்த அளவு உயர்த்தினார் என்பதைக் கவனிப்போம். வரியை ஒன்றுக்குப் பத்தாகவும், இருபதாகவும் உயர்த்தினார் என்று பரனி கூறுகிறார். அதன் விளைவாக, அரசாங்க அதிகாரிகள் பல தீர்வைகளை (cesses) புதிதாக வசூலித்தனர். அதாவது, விவசாயிகள் நிலத்திலிருந்து பெற்ற வருமானத்திற்கும் அவர்கள் செலுத்திய வரிக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. இக் கருத்தைக் கார்டனர் பிரௌன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். வரிச்சுமை மிக அதிகமாக இருந்ததென்று சொல்வதற்கில்லை என்பது அவரது கருத்தாகும். மூன்று அல்லது நான்கு மடங்கு வரியைப் பெருக்கினார் என்று பிரிஷ்டா கூறுகிறார். அலாவுத்தீன் காலத்தில் விளைச்சலில் பாதிப்பங்கினை வரியாகச் செலுத்தி வந்தார்கள். அவருக்குப்பின் ஆண்ட அரசர்கள் காலத்தில் அது ஐந்தில் ஒரு பங்காயிற்று. கியாஸ் உத்தீன் துக்ளக் வரியைச் சிறிதளவு உயர்த்தினார். எனவே, முகமது பின் துக்ளக், இரண்டில் ஒரு பங்கிற்கு மேல் வரியை உயர்த்தி இருக்க முடியாது என்பது தெளிவாகும். ஆகவே, வரிச்சுமையைச் சுமக்க இயலாத அளவு அவர் பெருக்கவில்லை.

ஆயினும், வரி உயர்வு தோவாப் மக்களுக்குத் தாங்கொணுத துன்பத்தை அளித்தது. வரியை உயர்த்திய நேரத்தில், தோவாப்பில் மழை பெய்யாமையால், விளைச்சல் பாதிக்கப் பட்டது. எனவே, பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருந்த மக்கள், வரியைக் கொடுக்க இயலாது தவித்தனர். அதை அறியாது சுல்தான்வரியை உயர்த்தியதோடு அதனை எவ்வாறேனும் வசூலிக்க வேண்டுமெனக் கட்டளையிட்டார், அதனுல், வரியைக் கொடுக்க இயலாமையால், தங்கள் நிலங்களைப் பயிரிடாது காடுகளுக்கு ஓடி விட்டனர். அதனுல் பயிர்த்தொழில் பாதிக்கப்பட்டது. டில்லி மக்களுக்குப் போதிய தானியங்கள் கிடைக்கவில்லை. டில்லியிலும் தோவாப்பிலும் பஞ்சம் தாண்டவமாடியது. அதனுல், கோப முற்ற சுல்தான், தம் படைகளை அனுப்பிக் காடுகளில் ஒளிந்து கொண்ட விவசாயிகளைக் கண்டு பிடித்து அவர்களை மீண்டும் நிலங் களைப் பயிரிடும்படி செய்யவேண்டும் என்று கட்டளையிட்டார். மிருகங்களை வேட்டையாடுவதைப் போல மக்களை வேட்டை யாடினுர் என்று பரனி மிகைபடக் கூறுகிறுர். இரக்கமின்றி அவர்களைச் சுல்தான் தண்டித்து இருக்கக்கூடுமேயொழிய மிருகங்களை வேட்டையாடுவதைப் போல அவர் அவர்களை வேட்டையாடியிருக்க மாட்டார். தாம் வரியை உயர்த்திய போது தோவாப் பகுதியில் மழை சரியாகப் பெய்யவில்லை என்பது அவருக்கு வெகுநாள் கழித்துத் தெரியவந்தபோது அதிகாரிகளை அழைத்து அங்குக் கிணறுகளை வெட்டச் செய்தார். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கடனுதவி அளிக்க ஏற்பாடு செய்தார். ஆனுல், அவை உரியகாலத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்காமையால், பஞ்சத்தின் கொடுமையான விளைவுகளி லிருந்து அவர்களைக் காப்பாற்ற இயலாது போயிற்று.

தோவாப் பகுதியில் வரி உயர்த்தியதால், மக்கள் சொல்ல முடியாத துன்பத்தை அடைந்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் இறந்தனர். பயிர்த் தொழில் நாசமாயிற்று. நல்ல நோக்கங் களோடு மேற்கொள்ளப்பட்ட ஒரு நடவடிக்கை மக்களுக்குப் பெருந்துயரை அளிப்பதற்கு முக்கியக் காரணம் சுல்தானுடைய பொறுமையின்மையேயாகும்.

### (ii) தலைநகர் மாற்றம்

தலைநகர் மாற்றத்திற்கு வரலாற்றுசிரியர்கள் பலவிதமான காரணங்களைக் கூறுகின்றனர். முகமது பின் துக்ளக்கின் ஆட்சி தொடங்கியபோது டில்லிப் பேரரசு வட இந்தியாவில் மட்டு மன்றித் தென்னிந்தியாவிலும் பரவியிருந்தது. ஆகவே, டில்லி யிலிருந்து தெற்கு மாநிலங்களைக் கட்டுப்படுத்துவதென்பது

கடினமான காரியமாக இருந்தது. ஆகவே, பேரரசின் மையப் பகுதியிலுள்ள ஓரிடத்தில் தலைநகரை மாற்றிவிட்டால் ஆட்சியைத் திறம்பட நடத்த இயலும் என்று எண்ணினார். தேவகிரி, பேரரசின் மையத்தில் இருந்ததால், தலைநகரைத் தேவ கிரிக்கு மாற்றிவிடச் சுல்தான் முடிவு செய்தார். தேவகிரியி லிருந்து டில்லி, குஜராத், லக்னோதி, சத்காவ்ன், திலங், மாபார், துவார சமுத்திரம், கம்பிலா ஆகியவை சமதூரத்தில் இருந்தன. எனவே, அவர் தலைநகரைத் தேவகிரிக்கு மாற்ற முடிவு செய்தார் என்று பரனி கூறுகின்றார்.

பரனி தரும் காரணத்தை நாம் ஏற்றுக்கொள்வது சற்றுக் கடினமாக இருக்கிறது. 'டில்லியிலிருந்து தேவகிரியைக் கட்டுப் படுத்தி வர இயலவில்லை என்றால், தேவகிரியிலிருந்து டில்லியைக் கட்டுப்படுத்தி வருவது கடினமல்லவா' என்று சிலர் கூறுகின்றனர்[1]. மேலும், பரனி குறிப்பிட்டிருக்கும் இடங்கள் யாவும் தேவகிரிக்குச் சமதூரத்தில் இருந்தனவாகக் கூறுவது, அவர் இந்தியாவின் புவி அமைப்பைப்பற்றி நன்கு அறிந்திருக்க வில்லை என்பதைப் புலனாக்குகிறது. ஆனால், ஒன்று மட்டும் நாம் நிச்சயமாகக் கூற இயலுகிறது. அதாவது, நிருவாகத் திறனை அதிகமாக்கும் நோக்கத்துடன் இந் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதென்பதாகும்.

டில்லி மக்களைத் தண்டிப்பதற்காகத் தலைநகரை மாற்ற முயற்சித்தார் என்று இபின்-இ-பதூதா கூறுகின்றார். டில்லி மக்கள் அவரைப் பலவாறாகத் திட்டிக் கடிதங்களை எழுதி, அவற்றை யாரும் படிக்காதவாறு முத்திரையிட்டு, இரவு நேரத்தில் அவருடைய ஆலோசனை மண்டபத்தில் போட்டு விடுவார்கள். அக் கடிதங்கள் அடங்கிய உறைகளின்மீது 'அரசர்மீது ஆணையாக அரசரைத் தவிர, வேறு எவரும் படிக்கக் கூடாது' என்று எழுதி வைத்தனர். அக் கடிதங்களைப் பிரித்துப் படித்த போது அவற்றில் தம்மைப்பற்றி அவதூறாக எழுதியிருப்பதை அறிந்தார். ஆகவே, டில்லி நகரத்தை அழித்து விடுவதென முடிவு செய்தார். அதற்காக டில்லி மக்கள் அனைவரையும் டில்லியை விட்டுத் தேவகிரிக்குச் செல்லுமாறு உத்தரவிட்டார்.

இபின்-இ-பதூதாவின் கருத்துகளை நாம் ஏற்க இயலாது. ஏனெனில், 'டில்லி மக்களுக்குச் சொந்தமாக இருந்த எல்லா வீடுகளையும் சுல்தானே வாங்கிக்கொண்டு அவற்றிற்குரிய விலையையும் கொடுத்துவிட்டார்' என்று இபின்-இ-பதூதாவே

1 ACHI, 506.

கூறியுள்ளார். டில்லி மக்களுக்கு நஷ்டமும் மனக் கஷ்டமும் ஏற்படக்கூடாது என்பதற்காக அவர் அந்த ஏற்பாட்டினைச் செய்தார். அவர்களைத் தண்டிக்கவேண்டுமென்று அவர் எண்ணியிருந்தால், அவர்களுடைய சொத்துகளை அவர் வாங்கியிருக்க மாட்டார். டில்லியிலிருந்து மக்கள் தேவகிரிக்குச் சென்றபோது அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை அமைத்துக் கொடுத்தார். தேவகிரியிலும் அவர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தித் தந்தார். மேலும், அவரைத் திட்டி எழுதப்பட்ட கடிதங்கள், அவர் தலைநகரை மாற்றுவதென முடிவு செய்த பிறகு எழுதப்பட்டவைகளாக இருக்குமேயொழிய, அதற்குமுன்னர் எழுதப்பட்டவையாக இருக்க நியாயமில்லை. எனவே, டில்லி மக்களைத் தண்டிப்பதற்காகத் தலைநகரை மாற்றினர் என்பதை நாம் ஏற்கமுடியாது.

'டில்லி மக்களின் நடத்தைமீது சுல்தான் சந்தேகம் கொண்டார். ஆகவே, அவர்களை மகராஷ்டிரத்திற்குத் துரத்திவிடவேண்டும் என்று சுல்தான் எண்ணினர். அதனால் தான் தலைநகரை மாற்ற முடிவு செய்தார்' என்று இசாமி கூறுகிறார். இக் கருத்தையும் நாம் ஏற்பதற்கில்லை. டில்லி மக்களுக்கும் சுல்தானுக்கும் இடையே வெறுப்புணர்ச்சி ஏற்பட்டிருந்தது என்பதை மெய்ப்பிக்க இசாமி அரும்பாடு பட்டிருப்பினும் அவருடைய வாசகர்களை அவரால் தம் கூற்றினை நம்பவைக்க இயலவில்லை.

தற்கால வரலாற்றாசிரியர்கள் தரும் விளக்கங்களைச் சற்றுக் கவனிப்போம். பேராசிரியர் ஹபீப் தரும் விளக்கத்தை முதலில் கவனிப்போம். மலிக்காபூர், தக்காணத்தில் நான்கு படையெடுப்புகளை நடத்தினர். ஆயினும், தக்காண அரசுகளுள் ஒன்றுகூட டில்லி அரசுடன் இணைக்கப்படவில்லை. முபாரக் ஷா காலத்தில்தான் தக்காணத்தில் முதன்முதலாக முஸ்லிம்களுடைய ஆட்சி அமைக்கப்பட்டது. யாதவர்களை ஒழித்துவிட்டுத் தேவகிரியை டில்லி அரசருடைய நேரடி ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வந்தனர். தேவகிரி பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொன்றும் ஒரு சத அமீரின் பொறுப்பில் விடப்பட்டது. அவர்களுடைய ஆட்சிப் பகுதியில் அமைதியை நிலைநாட்டுவதும் வரி வசூலிப்பதும் அவர்களுடைய முக்கியப் பணியாகும். முஸ்லிம் அதிகாரிகளும், அவர்களுடன் வந்த அலுவலர்களும் பணியாட்களும் தவிர, வேறு முஸ்லிம்கள் தேவகிரியில் வாழ்ந்து வரவில்லை. தேவகிரிக்குத் தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் இந்து அரசுகள் ஏற்பட்டிந்தன. இந்து அரசுகள் தம்முடைய மதிப்பை இழந்துவிட்டபோதிலும்

பலத்தை மட்டும் இழக்காதிருந்தன. அவர்கள் யாவரும் ஒன்றுபட நேர்ந்தால், தேவகிரியில் அமைக்கப்பட்டிருந்த முஸ்லிம் ஆட்சி ஒரு நொடிப் பொழுதில் அழிந்துவிடக்கூடும். எனவே, முதலில் தேவகிரியைச் சுற்றியிருந்த நாடுகளை ஒடுக்கு வதில் டில்லி சுல்தான்கள் கவனம் செலுத்தினர்கள். கியாஸ் உத்தீன் காலத்தில் வாரங்கலை அவர்கள் வென்றனர்கள். வாரங்கலிலும் சத அமீர்கள் நியமிக்கப்பட்டனர். ஆயினும், நிலைமை திருப்திகரமாக அமையவில்லை. இந்து மக்கள் மட்டு மன்றிச் சத அமீர்களும் டில்லியின் ஆதிக்கத்தை வெறுக்கலாயினர். அதுமட்டுமன்றி, அதற்கு வடக்கே டில்லி அரசரின் ஆளுகைக்குட் பட்டிருந்த குஜராத், மாளவம் ஆகிய இடங்களிலும் முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தமையால், அங்கிருந்தும் முஸ்லிம் ஆட்சி அழிக்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. ஆகவே, தக்காணத்தில் அமைக்கப்பட்டிருந்த முஸ்லிம் ஆட்சி நிலையாக இருந்தாலொழிய, வட இந்தியாவில் குஜராத், மாளவம் ஆகிய இடங்களிலும் முஸ்லிம் ஆட்சி நிலை பெற வழியில்லை என்பதை முகமது பின் துக்ளக் உணர்ந்தார். தக்காணத்தில் முஸ்லிம் ஆட்சி நிலைபெறச் செய்ய அவருக்கு ஒரு வழி மட்டுமே புலப்பட்டது. அதாவது, அங்கு முஸ்லிம் ஆதிக்கத்திற்கு ஆதரவு தர ஒரு முஸ்லிம் மக்கள் கூட்டத்தை உருவாக்கவேண்டும் என்பதாகும். டில்லியில் வாழ்ந்து வந்த மக்களைத் தக்காணத்திற்கு அழைத்துச் சென்று அங்கு அவர்களைக் குடியேறச் செய்வதால், அப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு காண இயலும் என்று அவர் எண்ணினர். அவர்களை அங்குக் குடியேறச் செய்துவிட்டால் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடாது என்றும், அதைத் தொடர்ந்து அங்குள்ள மக்களை இஸ்லாம் மதத்தைத் தழுவச் செய்வதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் எண்ணினர். சமயப் பிரச்சாரம் ஒன்றைத் தொடங்கித் தக்காணத்திலிருந்த மக்களை இஸ்லாம் மதத்தைத் தழுவச் செய்வதற்காக இஸ்லாமிய மதத் தலைவர்களைத் தக்காணத் திற்கு அழைத்துச் செல்லுவது அவசியமாயிற்று. இந்த வகை யான பிரச்சாரத்திற்கு டில்லியிலிருந்த சமயத் தலைவர்களே தகுதி வாய்ந்தவர்கள் என அவர் கருதினர்[1].

'தேவகிரியை முஸ்லிம் கலாச்சாரத்தின் தலைமையிடமாக்க வேண்டும் என்றும், அதனை முஸ்லிம் குடியேற்ற நகரமாக அமைக்கவேண்டும் என்றும் முகமது விரும்பினர்' என்று கியார்-உல்-அவுலியா கூறுகிறது. இதனை நம் கருத்தில் ஏற்றுப் பார்க்கும்போது, தமது அரசியல் நோக்கத்தை நிறைவேற்று

[1] Aligarh Mafazuia, July 1930, p. 1-11.

வதற்காக இந்த மாதிரியான ஒரு திட்டத்தை முகமது வகுத்திருக்கக்கூடும் என்று நாம் எண்ணவேண்டியதாயிருக்கிறது.[1]

கார்ட்னர் பிரௌன், பின்வரும் விளக்கத்தைத் தந்துள்ளார். முகமது பின் துக்ளக் தக்காணத்தைத் தமது நேரடி ஆட்சியின் கீழ்க் கொண்டு வர முடிவு செய்தார். ஆகவே, தக்காணத்தில் மற்றொரு தலைநகரை அமைத்தால், அதனை எளிதாகக் கட்டுப் படுத்தி வர இயலும் என்று அவர் எண்ணினார். மேலும், முகமது பின் துக்ளக் பட்டமெய்தியபோது டில்லி அரசினுடைய புவி ஈர்ப்புத் தானம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நகர்ந்துவிட்டது. அதற்கு ஒரு காரணம் பஞ்சாப் மாநிலம், தனது முக்கியத்துவத்தை இழந்துவிட்டமையேயாகும். மங்கோலியரின் இடைவிடாத தாக்குதல்களும், அப்போது அங்கு ஏற்பட்ட வெள்ளமும் பஞ்சாபின் அழிவிற்குக் காரணங்களாகும். அகில இந்திய பேரரசைத் தாங்கிக் கொள்ளுவதற்கான பொருளாதாரச் செழிப்பைப் பஞ்சாப் இழந்துவிட்டமையால், பொருளாதாரச் செழிப்புமிக்க வேறோர் இடத்திற்குத் தலைநகரை மாற்றுவது அவசியமாயிற்று. தக்காணத்தின் செல்வச் சிறப்பை முகமது பின் துக்ளக் நன்கறிவார். அலாவுத்தீன், மலிக்காபூர் ஆகியோர் தக்காணத்தில் கொள்ளையடித்த பொருள்களின் மதிப்பை அறியாதார் யார்? A. M. உசேன், இக் கருத்தை ஏற்க மறுக்கின்றார். மங்கோலியர்களின் படையெடுப்பு, வெள்ளம் ஆகியவை பஞ்சாபின் முக்கியத்துவத்தைக் குறைத்துவிட்டன என்று கூறினும், அவை தலைநகரத்தை மாற்றுவதற்கு முக்கியக் காரணங்களாகும் என்று ஏற்றுக்கொள்ள இயலாது[2].

சமகால வரலாற்றாசிரியர்கள், தற்கால வரலாற்றாசிரியர்கள் ஆகியோர் அளித்துள்ள காரணங்களை ஆராய்ந்து பார்க்குமிடத்து, ஆட்சிமுறை காரணமாகத் தலைநகரை மாற்றினார் என்ற கருத்தே ஏற்றுக்கொள்ளும் வகையில் இருக்கிறது என்பது புலனாகும். பேரரசின் பல பாகங்களில் கலகங்கள் தோன்றி வந்தன. ஆகவே, டில்லிக்கு வெகுதூரத்திலுள்ள மாபார் போன்ற பகுதிகளை டில்லியிலிருந்து கட்டுப்படுத்துவது கடினமாயிற்று. எனவே, திறமையாகச் செயலாற்றுவதற்குப் பேரரசின் மையத்தில் தலைநகரை அமைப்பது உசிதமாகும் என முகமது அறிந்திருந்தார். தக்காணத்தில் குர்ஸ்ஹாஸ்ப்பின் கலகத்தை அடக்கிய உடனே, இத் திட்டத்தைப்பற்றி அவர் யோசிக்கலானார் என்பதை அறியும் போது, இந்த வகையான கருத்தில் அடங்கி இருக்கும் உண்மை

1 A.M. Hussain, loc. cit., p-108.
2 Op. Cit., p. 109.

நன்கு புலப்படும். ஆகவே, உயரிய நோக்குடன் தலைநகர் மாற்றும் திட்டத்தை மேற்கொண்டார் என்பது சொல்லாமலேயே விளங்குகிறதன்றோ ?

தலைநகரை மாற்றும் திட்டத்தை அவசரம் அவசரமாக நிறைவேற்ற முற்பட்டார். அதனால் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை அவர் ஆராய்ந்து அறிய முற்படவில்லை என்ற குற்றச் சாட்டு முகமதுவின்மீது சுமத்தப்பட்டுள்ளது. ஆனால், அது சரியன்று. தேவகிரிக்குத் தலைநகரை மாற்றவேண்டும் என்ற பிரச்சினை எழுந்தபோது, முகமது தமது ஆலோசகர்களை அழைத்து அவர்களுடைய யோசனைகளைக் கேட்டார். அதுபோது அவர்கள் 'உஜ்ஜனியைத் தலைநகரமாக்கலாம்' என்று யோசனை கூறினார்கள். தேவகிரியைப்பற்றி முகமது நன்கு அறிந்திருந்தார். அஃது இராணுவ நடவடிக்கைகளுக்கு உகந்தவாறு அமைந்திருந்தது. அதனுடைய எழிலைப்பற்றி அமீர் குஸ்ரு ஏற்கனவே எழுதியிருந்தார்.

உலகத்திலுள்ள சிறப்பான நகரங்களுள் தேவகிரி ஒன்றாகக் கருதப்பட்டது. தென்னிந்தியாவில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதிலும், நிருவாகம்பற்றிய செயல்களை மேற்கொள்ளுவதிலும் நேர்ந்திருந்த இன்னல்களை முகமது நன்கு அறிந்திருந்தமையால், முடிவில் தேவகிரியையே தலைநகராகத் தேர்ந்தெடுத்தார். மேலும், தலைநகரை மாற்றும் திட்டத்தை மக்களின் நன்மையைக் கருதி அவர் படிப்படியாகச் செயல் படுத்தினார். அத் திட்டம் வெளிப்படுத்தி இரண்டு ஆண்டுகள் கழிந்தபின்னரே, அது நடைமுறைப்படுத்தப்பட்டது[1]. டில்லியிலிருந்து தேவகிரிக்குச் செல்லும் சாலையில் இரண்டு மைல் இடைவெளி விட்டுத் தங்குமிடங்களை அமைக்கச் செய்தார். வழி நெடுகச் சாலையின் இரு ஓரங்களிலும் மரங்களை நடச் செய்தார். சாலையின் இரு பக்கங்களிலும் மக்களைக் குடியேறச் செய்து, தேவகிரி செல்லும் மக்களுக்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்துதவ ஏற்பாடு செய்தார். இடையில் வாழ்ந்திருந்த மக்களுக்கு நிலங்களைக் கொடுத்தார். டில்லியில் வீடு வாசல்களை வைத்திருந்தவர்களுக்கு அவற்றின் மதிப்புக்கேற்றவாறு பணம் கொடுத்து அவற்றை வாங்கினார். டில்லியை விட்டுச் செல்வதால், அவர்கள் பொருள் நஷ்டம் அடையக்கூடாது என்பது அவருடைய ஆசை. தேவகிரி செல்வோருக்குப் பிரயாணத்தின்போது, போதுமான வசதிகளையும் வண்டிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். தேவகிரியை வந்தடைந்தவுடன் அவர்களுக்கு உணவு, இருக்கை ஆகியவற்றை இலவசமாக அளிக்க உத்தரவிட்டார். டில்லியை

1 ACHI, p. 510.

விட்டுப் புறப்படும்போதும், தௌலதாபாத்தை (தேவகிரி) அவர்கள் வந்தடைந்தபோதும் சுல்தான் அவர்களுக்கு ஏராள மான பரிசுகளை வழங்கினார் என்று பரனி கூறுகின்றார்[1].

தௌலதாபாத்தை நிர்மாணிப்பதிலும் அவர் மிகுந்த அக்கறை காட்டி வந்தார். நகரத்தைப் பல பகுதிகளாகப் பிரித்தார். ஒவ்வொரு வகுப்பினருக்கும் ஒரு பகுதியை அவர் ஒதுக்கிவிட்டார். படை வீரர்கள், வசீர்கள், செயலாளர்கள், நீதிபதிகள், கல்விமான்கள், ஷெயிக்குகள், வியாபாரிகள், கை வினைஞர்கள் ஆகியோருக்குத் தனித்தனிப் பகுதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். ஒவ்வொரு பகுதியிலும் மசூதிகள், அங்காடிகள், பொதுக் குளியலிடம் போன்றவை கட்டப்பட்டன. ஒவ்வொரு பிரிவும் மற்றப் பிரிவுகளின் உதவியின்றி வாழவகை செய்தார்[2]. மேற்கூறியவற்றிலிருந்து திடீரென ஏதோ ஒரு முடிவுக்கு வந்து, தலைநகரை மாற்றிவிட்டார் என்ற கருத்து எவ்வளவு பொய்யானது என்பது விளங்கும். தலைநகரை மாற்றிவிடத் தீர்மானித்த பிறகு, அவர் தலைநகர் மாற்றத்தை எவ்வளவு சுமுகமாக நிறைவேற்ற இயலுமோ, அவ்வளவு சுமுகமாக நிறைவேற்றுவதற்காக எல்லா ஏற்பாடுகளையும் மேற்கொண்டார் என்பது நன்கு விளங்குகிறது. அதனால், மக்கள் அவதியுறக் கூடாது என்பதற்காக அவரால் இயன்ற அளவு முயற்சி செய்துள்ளார் என்பதை அறியும்போது, தலைநகர் மாற்றம் டில்லி மக்களைத் தண்டிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்று கூறுவது சரியாகாது என்பதும் விளங்கும்.

டில்லி மக்கள் அனைவரையும் தேவகிரிக்குச் செல்லும்படி யாகக் கட்டளையிட்டாரா இல்லையா என்பதுபற்றி வரலாற்றாசிரி யர்களிடையே கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன. டில்லியி லிருந்த படைவீரர்கள் தங்களுடைய குடும்பத்தினர் புடைசூழ மனைவி, மக்கள், வேலைக்காரர்கள் ஆகியோருடன் டில்லியை விட்டுப் போகும்படி வற்புறுத்தப்பட்டனர். 'அவர்கள் சென்ற பிறகு, ஒரு பூனை அல்லது நாயைக்கூட டில்லியில் காணவில்லை' என்று பரனி கூறுகிறார். டில்லியிலிருந்த மக்கள் அனைவரையும் அவர் தேவகிரிக்குப் போகும்படி கட்டளையிட்டார் என்றும், டில்லி மக்கள் அக் கட்டளைக்கிணங்க மறுத்துவிட்டனர் என்றும், ஆகவே, மூன்று நாள்களுக்குள் டில்லியை விட்டு அனைவரும் சென்றுவிட வேண்டும் என்று மக்களுக்கு அறிவிக்கத் தம் அதிகாரிகளை அனுப்பினார் என்றும் இபின்-இ-பதூதா கூறுகிறார்.

[1] Tarikh--i-Fimzshai, p. 474.
[2] Masalik-Ul-Apsar, Eng. tr. by Otto Sias, 18-19.

மேலும், சில விவரங்களை இபின்-இ-பதூதா நமக்குக் கூறியுள்ளார். சுல்தானுடைய கட்டளைக்கிணங்க பெரும்பாலான மக்கள் டில்லியை விட்டுச் சென்றனர். ஆனால், சிலர் தங்களுடைய இல்லங்களில் ஒளிந்துகொண்டனர். ஆகவே, அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்கும்படி தமது அடிமைகளை அவர் அனுப்பினார். அச் சமயத்தில் ஒரு முடவனையும் ஒரு குருடனையும் அவர்கள் கண்டுபிடித்தனர். அவர்களை அரசர் முன் கொண்டுவந்து நிறுத்தியபோது, முடவனை மன்ஜலிக்கில் (கவண் எறி இயந்திரம்) இட்டு ஆகாயத்தில் வீசி எறிந்து கொல்லும்படி உத்தர விட்டார். குருடனைத் தேவகிரிக்கு இழுத்துச் செல்லும்படி கட்டளையிட்டார். வழியில் அக் குருடனுடைய உடல் முழுவதும் தேய்ந்து போயிற்று. அவனுடைய கால்களுள் ஒன்றுமட்டுமே தேவகிரியைச் சென்றடைந்தது. இதையறிந்ததும் டில்லி மக்கள் அனைவரும் நகரைவிட்டு வெளியேறினார்கள். நகர் ஒரு பாலைவன மாகக் காட்சியளித்தது. இரவு வந்தபோது சுல்தான் தமது அரண் மனையின்மீது ஏறிக்கொண்டு டில்லி நகரைப் பார்வையிட்டார். ஓர் இடத்தில்கூட விளக்கு வெளிச்சமோ அடுப்பிலிருந்து, கிளம்பும் புகையோ அவருடைய கண்களுக்குப் படவில்லை. எனவே, அவர் மிக்க மகிழ்ச்சியடைந்து, 'இப்போதுதான் என் மனம் மகிழ்ச்சியடைகிறது; என்னுடைய மனம் சாந்தியடைகிறது' என்று கூறினார். இவையே இபின்-இ-பதூதா நமக்குத் தரும் விவரங்களாகும்.

டில்லி மக்கள் தௌலதாபாத்திற்குச் செல்லும்படி சுல்தான் கட்டாயப்படுத்தினார் என்றும், அவர்கள் ஆறு பெருங் கூட்டங் களாகக் கூடித் தௌலதாபாத் சென்றனர் என்றும் இசாமி கூறுகிறார்.[1] முதலில் சுல்தானுடைய தாயார், அரச குடும்பத் தினை நிருவாகம் செய்துவந்த அதிகாரிகள், அமீர்கள், மலிக்குகள், அடிமைகள் ஆகியவர்களும் குதிரைகள், யானைகள், கருவூலங்கள் ஆகியவையும் தேவகிரிக்கு மாற்றப்பட்டன. அதன் பிறகு சையத்துகள், ஷெய்க்குகள், உலமாக்கள், முக்கியஸ்தர்கள் ஆகியோரை அழைத்துவரச் செய்து, அவர்களைத் தேவகிரிக்குப் போகும்படி கட்டளையிட்டார்[2]. அதையடுத்து, 'எல்லா மக்களும் தௌலதாபாத்திற்குச் செல்லவேண்டும்' என்று சுல்தான் கட்டளையிட்டார் என்று யஹியா சிர்ஹிந்தி கூறுகிறார்[3].

தற்கால வரலாற்றாசிரியர்களுள் சிலர், டில்லி மக்கள் அனைவரையும் அவர் தேவகிரிக்குச் செல்லும்படி உத்தரவிட்டார்

1 Futuh us Sabatin, p. 449.
2 Tarikh-i-Mubarak Shahi, p. 98.
3 Tarikh-i-Mubarak Shai, p. 102.

என்ற கருத்தை ஏற்க மறுக்கின்றனர். இந்துக்களை அவர் நகரை விட்டு வெளியேறுமாறு வற்புறுத்தவில்லை என்பதை இரண்டு சாசனங்கள் நமக்கு அறிவிக்கின்றன. 1327ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட சாசனம் ஒன்றில் டில்லிக்கருகேயுள்ள நாரெய்ஞ என்னுமிடத்தில் ஒரு பிராமணர் ஒரு கிணற்றைத் தோண்டியதாகக் கூறப்பட்டுள்ளது. 1328ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட மற்றொரு சாசனத்தில் 'அக்ரோதகா' என்னும் இடத்தில் வாழ்ந்துவந்த இந்து வியாபாரிகளின் செழுமையை விளக்குகிறது. 'அக்ரோதகா' என்பது, ஆக்ரா வியாபாரிகள் டில்லியில் தங்கியிருந்த இடமாகும். இவ்விரு சாசனங்களிலிருந்து டில்லியில் வாழ்ந்திருந்த இந்துக்கள், தலைநகர மாற்றத்தினால் பாதிக்கப்படவில்லை என்பது புலனாகிறது[1]. முஸ்லிம்களுள் உயர்மட்டத்தில் இருந்தவர்களை அவர் தேவகிரிக்குப் போகும்படி கட்டாயப்படுத்தினார். ஏனெனில், அவர்கள் தாம் தெற்குத் தலைநகருக்குத் தேவையான முக்கியச் சமுதாயக் கூறாக விளங்கியிருந்தனர்[2].

தேவகிரியை முகமது பின் துக்ளக், தலைநகரமாக்க முற்படவேயில்லை என்ற ஒரு கருத்து வரலாற்றாசிரியர்களிடையே நிலவி வருகிறது. தௌலதாபாத், இரண்டாவது நிருவாக மைய இடமாக இருந்ததேயன்றித் தலைநகரமாக விளங்கவில்லை என்று சிலர் கூறுகின்றனர். டில்லிப் பேரரசுக்கு இரண்டு தலைநகரங்கள் இருந்தன. டில்லி, தேவகிரி (குவ்வத் உல் இஸ்லாம்)—என்று அல் கல்கஷந்தி (Al Qualshaudi) கூறுகிறார்[3]. மேலும், 1329-1330-ல் வெளியிடப்பட்ட நாணயம் ஒன்றில் 'தக்த்கா-இ-டில்லி' என்ற வாசகத்தைக் காண்கிறோம். அதற்கு அடுத்த ஆண்டில் வெளியிடப்பட்ட நாணயம் ஒன்றில் 'தக்த்கா-இ-தௌலதாபாத்' என்ற வாசகத்தைப் பார்க்கிறோம். எனவே, டில்லியும், தேவகிரியும் இரண்டு தலைநகரங்களாக விளங்கியிருத்தல் வேண்டும் என்பது புலனாகும். மேலும், டில்லியிலிருந்த மக்களைத் தேவகிரிக்கு அனுப்பிவைத்த பிறகு, டில்லியில் சில நிர்மாணப் பணிகளைத் திட்டமிட்டு மேற்கொண்டார் என்பதை நாம் அறிகிறோம்[4].

மேலும் கி.பி. 1327-1330 ஆகிய இரண்டு ஆண்டுகளில் டில்லி அரண்மனையில் அவ்வப்போது சுல்தான் தங்கியிருந்தார் என்றும், எப்போதும் அரண்மனையில் சந்தடியிருந்து வந்தது என்றும் கூறப்படுகிறது[5]. மேற்கூறியவற்றிலிருந்து டில்லி

1 A. M. Husain, loc. cit., pp. 110-112.
2 ACHI, p. 511.
3 An Arab Account of India in the 14th Century, p. 30.
4 HCIP, p. 67.
5 N. B. Ray, Journal of Indian History, XX, p. 170.

தன்னுடைய தலைநகர அந்தஸ்தை எக் காலத்திலும் இழக்கவில்லை என்பதை அறியலாம்.

தலைநகர மாற்றத்தினால் ஏற்பட்ட விளைவுகளைச் சற்றுக் கவனிப்போம். சுல்தானிடம் மக்களுக்கு வெறுப்புணர்ச்சி ஏற்பட்டது. மக்களுக்கு அவர்மீது இருந்த பற்றும், மதிப்பும், நம்பிக்கையும் மறைந்துவிட்டன. அதற்குக் காரணம் அவர்கள் அடைந்த மாளாத் துயரமேயாகும். அப்போது மக்கள் அடைந்த துயரத்தைப்பற்றிச் சமகால வரலாற்றாசிரியர்கள் அளித்திருக்கும் குறிப்புகள் சிலவற்றை முதலில் கவனிப்போம்.

பரம்பரைப் பரம்பரையாக டில்லியில் வாழ்ந்து வந்த மக்கள், டில்லியை விட்டுத் தேவகிரி செல்லவேண்டும் என்று அரசர் இட்ட கட்டளையை அறிந்ததும், அவர்கள் மனமுடைந்து போனார்கள் என்றும், அதன் காரணமாகப் பலர் இறந்தனர் என்றும், பயணத்தின் கொடுமையைத் தாங்காது பலர் போகும் வழியிலேயே இறந்து விட்டனர் என்றும், மீண்டும் தேவகிரியிலிருந்து டில்லிக்குச் செல்லும்படி சுல்தான் உத்தரவிட்டபோது, மேலும் பலர் வழியில் மாள நேர்ந்தது என்றும் பரனி கூறுகிறார். தேவகிரி பயணத்தைக் கோடைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டமையால், பூமி பழுக்கக் காய்ச்சிய இரும்பு போலச் சூடாக இருந்தது என்றும், அதன்மீது நடந்து சென்ற டில்லி மக்கள் பலர் உயிரிழந்தனர் என்றும் இசாமி கூறுகிறார். அவ்வாறு இறந்தவர்களுள் இசாமியினுடைய வயதான தாத்தாவும் ஒருவராவர். டில்லி மக்கள், தேவகிரியைச் சௌகரியமாகச் சென்றடைய வேண்டும் என்பதற்காகச் சுல்தான் பல ஏற்பாடுகளைச் செய்திருந்தார் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

ஆயினும், நாற்பது நாள்கள் பிரயாணம் மேற்கொண்ட மக்கள், போக்கு வரவுச் சாதனங்கள் வளர்ச்சி பெறாத காலத்தில் மிகவும் கஷ்டப்பட்டிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. மேலும், பல ஆண்டுகள் காலமாக ஆண்டு அனுபவித்து வந்த இல்லங்களை விட்டு இஸ்லாம் மதத்தில் பற்றுக்கொண்டிராத மக்கள் மத்தியில் இனம் புரியாத ஒரு சூழ்நிலையில் வாழவேண்டுமே என்ற எண்ணம் அவர்களை உறுத்திக்கொண்டேயிருந்தது. மேலும், வெப்பநிலையும் அவர்களுக்கு எதிராக இருந்தது. குடி தண்ணீர் கிடைக்காது அவர்கள் அவதியுற்றனர். எனவே, மக்களுடைய கஷ்டங்கள் பன்மடங்காக உயர்ந்தன.

தலைநகரை மாற்றியதால் மட்டுமே மக்கள் கஷ்டத்திற்குள்ளாகவில்லை. வெப்பநிலை, பழைய வீட்டு நினைப்பு, மனைவி மார்களும் மக்களும் படும் கஷ்டத்தை நேரில் பார்க்கின்றநிலை,

புதிய இடத்தில் என்ன நேருமோ என்ற அச்சம், சுல்தான் எந்த வகையாகத் தங்களை நடத்துவாரோ என்ற பயம் ஆகியவை அவர்களுடைய துயரத்தைப் பெருக்கின[1]. சுல்தானுடைய கட்டளையை மீறி டில்லியிலேயே தங்கிவிட முயற்சித்தவர்களை அவர் கடுமையாகத் தண்டித்தார் என்று சமகால வரலாற்றுசிரியர்கள் கூறியுள்ளனர். அவற்றைப் பற்றி முன்னரே கூறியுள்ளோம். அவை பெரும்பாலும் மிகைபடுத்திக் கூறப்பட்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்பட்டாலும், அவற்றினை ஆதாரமற்றவை என்று தள்ளிவிடவும் முடியாது.

டில்லிநகரின் பெருமையையும் வளமையையும் இந்த நடவடிக்கை குறைத்து விட்டது என்று சமகால வரலாற்றுசிரியர்கள் கூறியுள்ளார்கள். 170 அல்லது 180 ஆண்டுகளாக டில்லி நகரம் வளர்ந்து செழிப்புற்ற நிலைக்கு அப்போது வந்திருந்தது. பாக்தாத், கெய்ரோ ஆகிய நகரங்களுக்கீடாக அது சிறப்புப் பெற்றிருந்தது. டில்லி நகரமும் அதனோடு இணைந்திருந்த ஸறுக்களும், நகர்ப்புற பகுதிகளும் சேர்ந்து 4 அல்லது 5 கரோக்கள் பரப்பளவு நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. அவையாவும் இப்போது அழிந்து விட்டன. அதனுடைய கட்டடங்களிலும் அரண்மனைகளிலும் ஒரு நாய் அல்லது ஒரு பூனையைக்கூட காண இயலாத அளவு அஃது அழிந்து போயிற்று. உலக மக்களின் பொறுமைக்கு இலக்காகியிருந்த நகரம் இப்போது சீரழிந்து விட்டது என்று பரனி கூறியுள்ளார். உலகிலுள்ள பெரிய நகரங்களுள் ஒன்றாக டில்லி கருதப்பட்டது என்றும், தாம் அந் நகருக்குள் நுழைந்த போது வெறுமையாகக் கிடந்தது என்றும், அங்குமிங்குமாக ஒரு சிலரே வாழ்ந்து வந்தனர் என்றும் இபின்-இ-பதூதா கூறியுள்ளார்.

தற்கால வரலாற்றுசிரியர்களுள் சிலர் மேற்கண்ட தகவல்கள் மிகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன என்று கருதுகின்றனர். கி. பி. 1334-ல் டில்லியில் ஏராளமான மக்கள் வாழ்ந்து வந்ததாக இபின்-இ-பதூதா கூறுகிறார். டில்லி நகரம் முழுமையாக அழிந்து விட்டிருந்தால் நான்கு ஆண்டுகளுக்குள் அது மீண்டும் ஜனநெருக்கம் மிகுந்த நகரமாக மாறி இருக்க முடியாது என்று அவர்கள் வாதாடுகின்றனர். இக் கருத்தை ஏற்பதற்கு முன் இபின்-இ-பதூதா தலைநகர மாற்றத்தைப்பற்றி முன்பு கூறியிருப்பதை நாம் நினைவிற்குக் கொண்டுவரவேண்டும். அதாவது, நகரம் வெறுமையாகி விட்டது; அங்கும் இங்குமாக மக்கள் சிலர் மட்டுமே வாழ்ந்து வந்தனர் என்பதாகும். தலைநகரை மாற்றிய பிறகு மாநிலங்களிலிருந்து மக்களை வரவழைத்து டில்லியில்

[1] ACHI, p. 513.

குடியேறச் செய்தார் என்று இபின்-இ-பதூதா கூறியுள்ளார். டில்லி ஒரு பெரிய நகரமாக இருந்தமையால், அக் காரியத்தை நிறைவேற்ற இயலவில்லை என்று இபின்-இ-பதூதா கூறியுள்ளார். மேலும், தலைநகரை மாற்றிய பிறகும் டில்லியில் பல கட்டடங்களைக் கட்டுவித்தார் என்று கூறப்படுகிறது. அஃது உண்மையெனில், டில்லி வெறுமையாகி விட்டது என்று கூறுவது சரியாகாது என்று அவர்கள் கூறுகின்றனர். டில்லி மக்கள் முற்றிலும் நகரைவிட்டுநீங்கவில்லை யென்ருலும் டில்லி நகரம் பொலிவிழந்து இருந்தது என்பதில் கருத்து வேறுபாடு தோன்றுவதற்கில்லை.

தலைநகர மாற்றத்தின் விளைவாக வடக்கு, தெற்குப் பகுதிகளைப் பிரித்திருந்த தடைகள் அகற்றப்பட்டன. இஸ்லாமிய மதமும், கலாச்சாரமும் தெற்கே வேகமாகப் பரவுவதற்கு இது துணை புரிந்தது. தேவகிரிக்கு வந்த முஸ்லிம்கள் பலர் உயிரிழந்தனர் என்று முன்னர்க் கண்டோம். அதனால், பல சமாதிகள் தோன்றின. இந்தச் சமாதிகளைக் கண்டு தரிசிக்க இறந்தவர்களின் உறவினர்கள் வடக்கேயிருந்து தெற்கு நோக்கி வரலானார்கள். அவர்களுடைய இதயங்கள் தெற்கிலுள்ள மண்ணுடன் இணைக்க இச் சமாதிகள் கருவிகளாக அமைந்து விட்டன[1]. அதன் விளைவாக வடக்கும் தெற்கும் இணைய வழி ஏற்பட்டது.

1335-37ஆம் ஆண்டுகளில் முகமது பின் துக்ளக் தௌலதாபாத்திலிருந்த மக்களை டில்லிக்குத் திரும்பும்படி கட்டளையிட்டார். ஆட்சிமுறை சார்ந்த நடவடிக்கைகளுள் மற்றொன்று இவ்வாருகத் தோல்வியில் முடிவுற்றது. உயரிய நோக்கங்களுடன் தொடங்கப்பட்ட இந்த நடவடிக்கை முகமதுவின் பொறுமையின்மையின் காரணமாகத் தோல்வியடைந்தது.

### (iii) அடையாளப்பணம்

கி. பி. 1329-30ஆம் ஆண்டில் முகமது பின் துக்ளக், அடையாளப் பணத்தைப் புழக்கத்தில் கொண்டு வந்தார். அக் காலத்தில் வெள்ளி நாணயங்களும் செப்பு நாணயங்களும் புழக்கத்தில் இருந்தன. வெள்ளி நாணயங்களை டங்காக்கள் என்றும் செப்பு நாணயங்களை ஜிடால்கள் என்றும் வழங்கி வந்தனர். வெள்ளி டங்கா ஒவ்வொன்றும் 140 குண்டுமணி எடை அளவு இருந்தது. முகமது பின் துக்ளக், வெங்கல நாணயங்களை அச்சிட்டு அவற்றை வெள்ளி நாணயங்களுக்குப் பதிலாகப் பயன் படுத்தவேண்டும் என்று கட்டளையிட்டார். வெள்ளி நாணயத்

[1] ACHI, p. 515.

திற்கு எவ்வளவு மதிப்பு இருந்ததோ அந்த மதிப்பு வெங்கல நாணயத்திற்கும் அளிக்கப்படவேண்டும் என்று அவர் அறிவித்தார். அதனை நாம் 'அடையாள நாணயம்' என்று கூறுகிறோம். இந்த அடையாள நாணயங்களைச் செப்பு கொண்டு தயாரித்தார் என்று பரனி கூறியுள்ளார். பித்தளை அல்லது வெங்கலத்தில் செய்யப்பட்டன என்று பிரிஷ்டா கூறுகிறார். நமக்குக் கிடைத்திருக்கும் அடையாள நாணயங்களைக் கொண்டு பார்க்குமிடத்து பிரிஷ்டா கூறுவதே சரியானதாகத் தோன்றுகிறது.

முகமது பின் துக்ளக்கின் அடையாள நாணயங்களுக்கும் மற்ற நாணயங்களுக்கும் இடையே சில வேறுபாடுகளைக் காணலாம். அடையாள நாணயங்களில் அரபு மொழியிலும் பாரசீக மொழியிலும் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மற்ற நாணயங்களில் அவை அரபு மொழியில் பொறிக்கப்பட்டுள்ளன. அடையாள நாணயங்களிலுள்ள வாசகங்கள் அனைவருக்கும் புரியும்படியாகவும் தெளிவாகவும் பொறிக்கப்பட்டன, மட்ட உலோகங்களைக் கொண்டு செய்யப்பட்ட சாதாரண நாணயங்களில் அவை தெளிவாகப் பொறிக்கப்பட்டிருக்கவில்லை[1]. அடையாள நாணயங்களில் 'சுல்தானுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்களாவார்கள்', 'கடவுளுக்கும். நபிகள் நாயகத்திற்கும், அதிகாரப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்கும் கீழ்ப்படிந்து நடவுங்கள்' போன்ற வாசகங்களைப் பொறித்து, தெய்வத்தின் பேரால் அந்த நாணயங்களைப் புழக்கத்திற்குக் கொண்டு வருவதால், அவற்றை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று அவர் கருதினார்[2].

அடையாள நாணயமுறை உலகத்தின் பல பாகங்களில் அக் காலத்திலேயே புழக்கத்தில் இருந்து வந்தது. சீனாவில் குப்லாய்கான் காகிதத்தாலான அடையாள நாணயத்தைப் புகுத்தினார். நாணயத்திற்கான காகிதம், மை ஆகியவற்றை மிகக் கவனமாகத் தேர்ந்தெடுத்தார். ஆகவே, மற்றவர்கள் அதனை அச்சிட இயலவில்லை. ஈரானில் கைக்கதுகான் என்பவர், 1295ஆம் ஆண்டில் அடையாள நாணயத்தைப் புகுத்தினார். அவ்விருவருடைய முயற்சிகளுள் குப்லாய்கானுடைய முயற்சியே வெற்றி பெற்றது. இவ் விருவருடைய முயற்சிகளை முகமது பின் துக்ளக் அறிந்திருக்க வாய்ப்பு உண்டு. எனவே, அவர்களைப் பின்பற்றி அடையாள நாணயமுறை இந்தியாவில் புகுத்த அவர் திட்டமிட்டிருக்கக்கூடும்.

[1] ACHI, p. 515 - 516.
[2] Ibid.

இனி, அடையாள நாணய முறையை ஏன் கொண்டுவந்தார் என்பதைப்பற்றிக் கவனிப்போம். முகமது பின் துக்ளக், அயல் நாடுகளை வெல்லவேண்டும் என்று எண்ணினர். அதற்காக ஒரு படையைத் திரட்டவேண்டியதாக இருந்தது. அதற்குப் பணம் தேவைப்பட்டது. கருவூலத்திலுள்ள வெள்ளியை அதற்குப் பயன்படுத்திக்கொண்டு நாணயங்களை மட்ட உலோகங்களைக் கொண்டு தயாரிக்க முற்பட்டார். முகமது பின் துக்ளக், தாராள மனப்பான்மையுடையவர்; தர்ம சிந்தையுடையவர். எனவே, பணத்தை வாரி இறைத்துவிட்டார். அதனல், கருவூலம் காலியாகிவிட்டது. எனவே, அடையாள நாணயங்கள் புகுத்த வேண்டியதாயிற்று. அடையாள நாணய முறையை முகமது புகுத்தியதற்கு, இந்த வகையான விளக்கத்தைப் பரனி நமக் களித்துள்ளார். அரசாங்கக் கருவூலம் காலியாகிவிட்டது என்ற வாதத்தை நாம் ஏற்க இயலாது. ஏனெனில், அடையாள நாணய முறை தோல்வியடைந்துவிட்டது என்று அறிந்தவுடன் சுல்தான், எல்லா அடையாள நாணயங்களையும் திரும்பப் பெற்றுக்கொண்டு அவற்றிற்குப் பதிலாகத் தங்க, வெள்ளி நாணயங்களைக் கொடுத்தார் என்று பரனி கூறியுள்ளார். காலி யாகிவிட்ட கருவூலத்திலிருந்து அடையாள நாணயங்களுக்குப் பதிலாகத் தங்கம், வெள்ளி நாணயங்கள் எங்கிருந்து வந்தன என்ற கேள்விக்கு நாம் பதில் கூற இயலாத நிலையில் உள்ளோம்.

புதிதாக ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்வதில் சுல்தா னுக்குப் பெருத்த ஆர்வம் ஏற்பட்டிருந்தது. அதன் விளைவாகத் தான் அடையாள நாணய முறை நடைமுறைப்படுத்தப்பட்டது என்பர் சிலர். அடையாள நாணய முறையைப் பொறுத்த அளவில் அது முற்றிலும் உண்மையன்று. உண்மை என்னவெனில், அவர் எந்தப் பிரச்சினையையும் ஆராய்ந்து, அதனுடைய மூலக் காரணத்தை அறிந்து அதனை முழுமையாக எதிர்கொள்ள விரும் பினர். அப்போது வெள்ளி கிடைப்பதரிதாக இருந்தது. இந்தியா வில் மட்டுமன்றி, உலக முழுவதிலும் வெள்ளிக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. ஆகவேதான், வெள்ளி நாணயத்தின் எடை சிறிது சிறிதாகக் குறைந்து வந்தது. முகமது பின் துக்ளக்கின் காலத்தில் பல புதிய நாணயச் சாலைகள் தொடங்கப்பட்டன. ஆகவே, அதிகமான வெள்ளி தேவைப்பட்டது. இராணுவ நடவடிக்கைகள், தலைநகர் மாற்றம் ஆகியவற்றை முன்னிட்டுப் பொருட் செலவு அதிகமாயிற்று. அவற்றை ஈடு செய்ய அடையாள நாணயங்களை அச்சிட்டார்.

அடையாள நாணயங்கள் நல்ல எண்ணத்துடன் வெளியிடப் பட்டன என்பதில் ஐயமில்லை. அடையாள நாணயமுறை

அவருடைய அரசியல் திறத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. எனினும், இந்தத் திட்டமும் தோல்வியடைந்தது. அதற்குச் சில காரணங்கள் கூறப்படுகின்றன. பொதுமக்கள் அடையாள நாணயங்களைத் தம் இல்லங்களில் அச்சிடுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எல்லா இடங்களிலும் எளிதாகக் கிடைக்கக்கூடிய உலோகத்தையும் சாதாரணக் கைவினைஞர்களிடம் காணப்படுகின்ற கருவிகளையும் கொண்டு அரசாங்கம் அடையாள நாணயங்களை அச்சிட்டது என்று எட்வர்ட் தாமஸ் கூறுகிறார். அரசாங்க நாணயச் சாலை அச்சிட்ட நாணயத்திற்கும் சுமாரான திறமையைக் கொண்டிருந்த ஒரு கைவினைஞன் தயாரித்த நாணயத்திற்கும் வேறுபடுத்திக் காட்டுவதற்கு யாதொரு அமைப்பும் ஏற்படுத்தப் படவில்லை. சாதாரண மக்கள் இந்த அடையாள நாணயங்களை வரம்பின்றி அச்சிடுவதைத் தடுப்பதற்கு யாதொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை[1]. இக் கருத்தைச் சிலர் ஏற்க மறுக்கின்றார்கள். அடையாள நாணயங்களை அச்சிடுவதற்கு ஒரு தனி முறையான கலப்பு உலோகம் பயன்படுத்தப்பட்டது. அந்த உலோகத்தைத் தயாரிக்கும் முறையைப் பொதுமக்கள் எளிதாக அறிந்துகொள்ள இயலாது. அவ்வாறிருந்தும் அது தோல்வியுற்றதென்றால், அதற்குப் பொறுப்பு மக்களேயன்றி சுல்தான் அல்லர்.

அக் காலத்தில் பொன், வெள்ளி நாணயங்களை மக்கள் உறைத்துப் பார்த்து வாங்குவது வழக்கம். அந்த மாதிரியாக அடையாள நாணயத்தையும் உறைத்துப் பார்த்திருப்பார்களேயானால், அவர்கள் போலி அடையாள நாணயங்களை எளிதில் கண்டுகொள்ள முடிந்திருக்கும். மக்கள் இவ்விதமாக உறைத்துப் பார்த்து அடையாள நாணயங்களை வாங்குவார்கள் என்று சுல்தான் எதிர்பார்த்திருந்தமையால், அவர் போலி நாணயங்களைத் தயாரிப்பதைத் தடை செய்வதற்கான நடிவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. அதன் விளைவாகப் போலி அடையாள நாணயங்கள் ஏராளமாக அச்சிடப்பட்டன. அவை உண்மையான அடையாள நாணயங்களுடன் இரண்டறக் கலந்து விட்டன. பொது மக்களுக்கு அடையாள நாணயங்களின்மீது ஏற்பட்டிருந்த நம்பிக்கை குறைந்துவிட்டது. தூரத்திலுள்ள மாநிலங்களில் அந் நாணயங்களின் மதிப்புப் பாதியாகக் குறைந்து விட்டது. போலிக்கும் உண்மைக்கும் வேறுபாடு காண்பது கடினமாக இருந்தமையால், தலைநகரிலிருந்த மக்கள் அடையாள

1 Edward Thomas, Chronicles of the Patham Kings p. 246.

நாணயங்களைத் தண்டனைக்கு அஞ்சிப் பெற்றுக்கொள்ளத் தயக்கம் கொண்டனர். அவற்றைப் பெற்றுக் கொண்டவர்களுள் சிலர், அவற்றை வீசி எறியத் தலைப்பட்டனர். மற்றும் சிலர், அவற்றை உருக்கிப் பாத்திரம் செய்ய முற்பட்டனர். ஆனால், அரசாங்கம் யாரையும் தண்டிக்கவில்லை. போலி நாணயங்கள் வைத்திருப்பவர்களுள் பலர், குற்றமற்றவர்கள் என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருந்தது. எனவே, போலி நாணயத் தயாரிப்பாளர்கள் முன்னைவிட அதிக உற்சாகத்துடன் செயல்படலாயினர்[1]. ஒவ்வோர் இந்துவின் வீடும் நாணயச் சாலையாக மாறியது என்று பரனி கூறியுள்ளார். அடையாள நாணயமுறை தோல்வியடைந்ததற்கு மற்றொரு காரணம் இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி நிலையாக ஏற்படுத்தாமையாகும்[2].

ஓர் அரச குலத்தினரை மற்றோர் அரச குலத்தினர் வீழ்த்தி விட்டு அரசுரிமையைப் பெறுவது சாதாரண நிகழ்ச்சியாக இருந்தது. ஓர் அரச குலத்தவர் வெளியிட்ட அடையாள நாணயங்களை மற்றவர் ஏற்றுக்கொள்வார்களோ என்ற ஐயம் ஏற்பட்டிருந்தது. மக்கள் வெள்ளி நாணயங்களைப் பதுக்கி வைக்கலானார்கள். தங்கள் கைகளில் வெள்ளி டங்காக்கள் இருப்பினும், அவற்றைப் பொருட்களை வாங்குவதற்கோ, வரி கட்டுவதற்கோ செலவிட மனம் வரவில்லை. ஆகவே, அடையாள நாணயம் வெளியிடுவதற்கான முக்கியமான நோக்கம் நிறைவேறாது போயிற்று[3].

அடையாள நாணயமுறை பல தீமைகளைத் தோற்றுவித்தது. மக்களிடையே சுல்தானுடைய எண்ணங்களில் சந்தேகம் தோன்றலாயிற்று. ஏற்கனவே, செப்பு நாணயங்கள் பெருமளவில் புழக்கத்திலிருந்தன. மேலும் புதிதாக வெங்கலம் அல்லது பித்தளை நாணயங்களை அவர் புகுத்தியபோது எழுத்தறிவில்லாத மக்கள், தங்களிடமிருக்கும் செல்வம் அனைத்தையும் சுல்தான் சுரண்டப் பார்க்கிறார் என்று எண்ணமிடலானார்கள். அதனால், கலகங்கள் பல தோன்றின. அடையாள நாணயங்கள் பல கலகக்காரர்களுக்குப் போர்க் கருவிகளை எளிதாக வாங்குவதற்குப் பெரிதும் உதவியாக இருந்தன. வாணிபம் பாதிக்கப்பட்டது. அயல் நாட்டு வணிகர்கள் பொருட்களை இந்தியாவிற்குக் கொண்டு வரத் தயக்கம் காட்டினர்.

அடையாள நாணயங்கள் எதிர்பார்த்த பலனை அளிப்பதற்குப் பதிலாக, நாட்டில் குழப்பத்தை விளைவித்து வந்தன என்பதை

1 The Political Theory of the Delhi Sultanete p-129.
2 A M. Hussain, loc cit. p. 135.
3 ACHI, 519.

அறிந்ததும், சுல்தான், எல்லா அடையாள நாணயங்களையும் அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட்டு, அவற்றுக்குப் பதிலாக அவற்றின் மதிப்புக்கேற்றவாறு பொன், வெள்ளி நாணயங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு உத்தரவிட்டார். அதுபோது அரசாங்கம் வெளியிட்டிருந்த அடையாள நாணயங்கள் மட்டுமன்றி, மக்கள் அச்சிட்ட போலி நாணயங்களும் அரசாங்கக் கருவூலத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. அவற்றை உண்மையான அடையாள நாணயங்களிலிருந்து பிரித்துக் காண்பதரிதாக இருந்தமையால், அவற்றினுக்குப் பதிலாகத் தங்க, வெள்ளி நாணயங்களை அரசு அளிக்க வேண்டியதாயிற்று.

## முகமதுவின் அந்நிய நாடுகளின் மீதானபோர் ஏற்பாடுகள்

### (i) காலனூர் படையெடுப்பு

முகமது பின் துக்ளக் அரசெய்திய உடனே அவர் காலனூர், பெஷாவர் ஆகிய இடங்களை வெல்லுவதற்கான முயற்சியை மேற்கொண்டார். இந்த முயற்சி தர்மாஷீரீனுடைய படையெடுப்பைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டிருக்கவேண்டும். அப் படையெடுப்பை மேற்கொள்ளுவதற்கு முன்பு, தம்முடைய படை வீரர்களுக்கு ஓராண்டுச் சம்பளத்தை முன்பணமாகக் கொடுத்து அவர்களுக்குத் தேவையான போர்க்கருவிகளையும் குதிரைகளையும் வாங்கிக் கொள்ளும்படி கட்டளையிட்டார். அதன் பிறகு, அவர் லாகூருக்குப் படைநடத்திச் சென்றார். லாகூரில் அவர் தங்கி விட்டுப் படைகளை மட்டும் பெஷாவருக்குச் செல்லும்படி ஆணையிட்டார். இந்தியப் படையினர் மங்கோலியர் ஆட்சிப் பகுதிகளுக்குச் சென்று அவற்றைக் கொள்ளையிட்டனர். காலனூரையும் பெஷாவரையும் அவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். சுல்தானின் பெயரில் அங்கு குத்பா வாசிக்கப் பட்டது. அங்கு உணவுத் தானியங்களைப் பெறுவது கடினமாக இருந்தமையால், மிருகங்களின் இறைச்சியை உண்டு வாழ வேண்டியதாக இருந்தது. விரைவில் டில்லிப் படையினர் அத்தகைய உணவுமீது வெறுப்புக் கொள்ளலானார்கள். ஆகவே, அவர்கள் லாகூர் திரும்பி சுல்தானுடைய படையுடன் சேர்ந்து கொண்டனர். லாகூரில் சில மாதங்கள் தங்கி எல்லையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளைச் சுல்தான் மேற்கொண்டார். சுல்தானுக்குக் கீழ்ப்படிந்து நடக்கத் தவறிய அதிகாரிகளைக் கடுமையாகத் தண்டித்தார்[1].

[1] Fulish-us Salatin, pp 423-424., ACHI, p. 500.

(ii) கோராசான் படையெடுப்பு

முகமது பின் துக்ளக், தமது ஆட்சியின் தொடக்கத்தில் கோராசான்மீது படையெடுப்பு நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். கோராசான் என்ற சொல்லை அக் காலத்தவர்கள் தெளிவாகப் பயன்படுத்தி வராமையால், அவர் எந்தப் பகுதியின் மீது படையெடுத்துச் செல்லத் திட்டமிட்டார் என்பதை உறுதியாகக் கூற இயலாது. இந்தியாவிலுள்ள எல்லா அந்நியர்களும் கோராசானியர்களே என்று இபின்-இ-பதூதா கூறுவதிலிருந்து மேற்கூறியவற்றிலுள்ள உண்மை ஓரளவு புலப்படும்.

அவர் பட்டமெய்தியபோது மத்திய ஆசியாவிலும் பாரசீகத்திலும் வலிமை பொருந்திய ஆட்சி ஏதும் அமைக்கப்படவில்லை. பலம் பொருந்திய இல்கான்களுடைய ஆதிக்கம் அழிந்துபோய் விட்டது. அப்போது கோராசானை அபு சையத் என்பவர் ஆண்டு வந்தார். அவர் அரசாளத் தகுந்த வயதை எட்டியிராமையால், அமீர் சாபன் (Chaupan) என்பவர், அரச காரியங்களைக் கவனித்து வந்தார். அமீர் சாபனின் ஆதிக்கத்தை அபு சையத் விரும்பவில்லை. எனவே, அவருடைய மகளைத் தமக்கு மணமுடித்துத் தர மறுத்தபோது, அபு சையத் அவரைக் கொன்றுவிட்டார். அமீர் சாபனின் மறைவு பாரசீகத்தில் குழப்பத்தை உண்டாக்கியது. மங்கோலியர்களும் எகிப்தியர்களும் பாரசீகத்தைத் தாக்கத் தலைப்பட்டனர். அந்த நேரத்தில் சில மலிக்குகளும், சிற்றரசர்களும் முகமதுவை அணுகி, ஈரான், துரான் ஆகிய இடங்களைக் கைப்பற்றிக்கொள்ளும்படி வேண்டினார்கள் என்று பிரிஷ்டா கூறுகிறார். அதுபோது அவர்கள் கோராசானில் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்ப நிலையை எடுத்துக் கூறி, அஃது எந்த வகையில் அவரது படையெடுப்பை வெற்றிகரமாக முடித்துக்கொடுக்கும் என்பதையும் வலியுறுத்தினார்கள். இந்த வாய்ப்பைப் பயன் படுத்திக்கொண்டு முகமது, தமது ஆதிக்க எல்லையை விரிவுபடுத்த முற்பட்டார். இந்தியா வந்த அயல் நாட்டவர்களுக்கும், அயல் நாட்டில் வாழ்ந்துவந்த மக்களுக்கும், அவர் வெகு தாராளமாகப் பரிசுகளை வழங்கினார் என்று முன்னர்க் கண்டோம். அந்நாட்டு மக்களின் ஆதரவைப் பெற்று அங்குத் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டவே அவ்வாறு வாரி வழங்கினார் என்று சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்[1].

இப் படையெடுப்பை மேற்கொள்ளுவதற்கு அவர் செய்த ஏற்பாடுகளைப்பற்றிப் பரனி நமக்குச் சில குறிப்புகளைத் தந்துள்ளார். 370,000 குதிரை வீரர்களைக் கொண்ட ஒரு பெரும்

[1] ACHI, p. 521.

படையைச் சுல்தான் திரட்டினர். படைவீரர்களுக்குச் சம்பளங் களைப் பணமாகவும், இக்தாக்களாகவும் வழங்கினர். அம்புகள், குதிரைகள் போன்ற போருக்கு வேண்டிய பொருள்களை வாங்கு வதற்கு ஒரு பெரிய தொகையை ஒதுக்கினர். பொதுமக்களின் ஆதரவைப் பெறுவதற்காக, டில்லி மக்களையும் பிரபுக்களையும் ஒரு கூட்டத்திற்கு வரவழைத்தார். சமயத் தலைவர்களும் அதில் கலந்துகொள்ளும்படி வேண்டினர். அந்தக் கூட்டத்தில் பேசும் போது சுல்தான், தாம் செங்கிஸ்கானுடைய வழித்தோன்றல் களை ஒழிக்க மேற்கொள்ளவிருந்த படையெடுப்புக்கு மக்கள் ஆதரவு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும், அவர் வேற்று நாட்டரசர்களுடன் உடன்பாடு செய்துகொண்டு அவர்களுடைய ஆதரவையும் பெற முற்பட்டார்.

இந்த முன்னேற்பாடுகள் யாவும் வீணுயின. ஓராண்டு கழித்துக் கோராசான் படையெடுப்பிற்காகத் தோற்றுவிக்கப் பட்ட படை கலைக்கப்பட்டுவிட்டது. அதற்குச் சில காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவது, எகிப்திய அரசர் அபு சையத்துடன் நட்பு கொள்ள ஆரம்பித்தார். ஆகவே, முகமதுவிற்கு உதவி செய்ய முன்வரவில்லை. இரண்டாவதாக, தர்மாஷீரினைப் பதவியி லிருந்து அவரது பிரபுக்கள் நீக்கிவிட்டனர். ஆகவே, அபு சையத் துக்குத் தர்மாஷீரினல் ஏற்படவிருந்த ஆபத்து நீங்கிவிட்டது. அதனல் அவருடைய பலம் பெருகியது. மூன்ருவதாக, இந்துகுஷ் மலையைக் கடந்து வெகு தூரத்திலுள்ள நாட்டின்மீது படை யெடுத்துச் செல்வதால் ஏற்படவிருந்த இன்னல்கள் சிறிது சிறிதாக அவருக்குத் தெரியவந்தது. எனவே, படையெடுப்பு வெற்றியடையாது என்பதை அவர் புரிந்துகொண்டார். படை யெடுப்பை மேற்கொள்ளுவதற்கு முன்பே, அவர் பெரும் பணத் தைச் செலவழித்துவிட்டார். அடுத்த ஆண்டில் படையெடுப்பை மேற்கொள்ளுவதற்குப் போதிய பணம் அவரிடம் இல்லை. அந்த ஓராண்டுக் காலத்தில் அப் படைக்குப் போதிய பயிற்சி கிடைக்கும் வகையில் போர் நடவடிக்கைகளில் அதனை ஈடுபடுத்த வாய்ப்பு இல்லாமற் போயிற்று. ஆகவே, அதனுடைய போர்த் திறமையில் சுல்தானுக்கு நம்பிக்கை ஏற்படாது போயிற்று.

கோராசான் படையெடுப்பு முயற்சி சில தீய விளைவுகளை உண்டாக்கியது. அவருக்குப் பொருள் நஷ்டத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவாக, நாட்டு மக்களுக்குத் துன்பம் ஏற்பட்டது. படையைக் கலைத்துவிட்ட போது வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடியது. ஆகவே, மக்கள் அவதியுற்றனர். திட்டத்தைக் கைவிட்டமையால், மக்கள் பெருத்த ஏமாற்றத்

திற்குள்ளானுர்கள். முகமதுவிடம் அதிருப்தி ஏற்பட அஃது ஒரு காரணமாகும்.

கோராசான் படையெடுப்பு ஒரு பைத்தியக்கார முயற்சி என்று சிலர் கூறுகின்றனர். தற்கால வரலாற்ருசிரியர்கள், அம் முயற்சியை அவர் மேற்கொண்டமைக்குத் தக்க காரணங்கள் இருந்தனவென்றும், அதனைப் பைத்தியக்காரச் செயலாகக்கருதக் கூடாது என்றும் கூறுகின்றனர். அன்னிய நாடுகளை வெல்ல வேண்டும் என்ற ஆசை ஒவ்வொரு பேரரசர் மனத்திலும் எழுவது இயற்கையேயாகும். முகமது பின் துக்ளக்கின் வலிமையும் மதிப்பும் மிக உயர்ந்த நிலையில் இருந்தன. அவரது நிலையில் இருப்பவர் எவராயினும் அத்தகைய திட்டத்தை வகுப்பது நியாயமேயாகும். மேலும், கோராசானில் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பம் அவருக்குச் சாதகமாக இருப்பதை அவர் உணர்ந்தார். எனவேதான், அப் படையெடுப்புக்கு ஏற்பாடு செய்தார் எனக் கூறுவாருமுண்டு. ஆனால், இக் கருத்தை நாம் ஏற்க இயலாது. மலையைக் கடந்து படை நடத்திச் செல்லுவதி லுள்ள கஷ்டங்கள், வெகு தூரத்திலுள்ள இடங்களை வென்று நிரந்தரமாகத் நமது ஆட்சியின்கீழ் வைப்பதிலுள்ள இடை யூறுகள், அப் படையெடுப்பை நடத்துவதற்குப் போதுமான பொருளைத் திரட்டுவதிலுள்ள இன்னல்கள் போன்றவற்றைப் பற்றி அவர் முதலில் சிந்திக்காது, படையெடுப்பு ஏற்பாட்டினை மேற்கொண்டது பைத்தியக்காரச் செயலாகக் கருதவில்லை என்ருலும், அறிவீனச் செயல் என்று கருதுவதில் தவறில்லை.

(iii) காராசல் படையெடுப்பு

கோராசான் படையெடுப்பைக் கைவிட்டுவிட்டபோதிலும் அயல்நாடுகளை வென்று தம் ஆதிக்கத்தை அங்கு நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணத்தை மட்டும் அவர் கைவிடவில்லை என்பது, அவர் காராசல் படையெடுப்பு எடுத்துக் காட்டுகிறது.

சீனுவினுடைய பெருஞ் செல்வத்தைப்பற்றிக் கேள்வியுற்ற முகமது பின் துக்ளக், அதனை அடக்கியாள எண்ணங்கொண்டார். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முதலில் இமாசலப் பகுதியை வெல்லுவது அவசியம் என்பதை அவர் அறிந்தார் என்று பிரிஷ்டா கூறுகிருர். அவரது கருத்தை ஏற்றுத் தற்கால ஆசிரியர்களுள் சிலர், அவர் சீனுமீது படையெடுத்துச் சென்ருர் என்று கூறியிருக்கின்றனர். ஆனுல், சமகால வரலாற்ருசிரியர் களுள் ஒருவரான பரனி, இந்தியாவிற்கும் சீனுவிற்கும் இடையே யுள்ள காராசல் அல்லது காராஜல் மலைப்பகுதியை வெல்ல

வேண்டும் என்று சுல்தான் முடிவு செய்தார் என்று கூறுகிறார்[1]. டில்லியிலிருந்து 10 நாள் பிரயாண தூரத்தில் இருந்த மலைப் பகுதியை வெல்வதற்குப் படையொன்றை முகமது அனுப்பி வைத்தார் என்று இபின்-இ-பதூதா கூறுகிறார். காராசல் என்பதைத் தற்கால வரலாற்றாசிரியர்கள் பலவாறாக எழுதியுள்ளனர். காராசல், காராஜல், பாராஜல், காராசீல். 'காராசல்' என்பது, இமாசல் என்ற வார்த்தையிலிருந்து பிறந்ததாகச் சிலர் கூறுகின்றனர். வேறு சிலர், இது குமாசல் அல்லது கூர்மாசல் என்ற சொல்லிலிருந்து பிறந்திருக்க வேண்டும் என்கிறார்கள். 'கூர்மாசல்' அல்லது 'குமாசல்' என்பது, தற்காலக் குமாயோன் பகுதியைக் குறிக்கிறது. ஆகவே, காராசல் என்பது இமாலய மலையின் அடிவாரத்தில் குமாயோன் பிரதேசத்திலுள்ள ஒரு பகுதி எனக் கருதலாம்[2]. குமாயோன், கார்வால் பகுதியை அக் காலத்தில் இரஜபுத்திரர்கள் ஆண்டு வந்தனர். அவர்கள் சந்திர குலத்தைச் சார்ந்தவர்கள்.

இப் படையெடுப்பிற்குக் கீழ்க்காணும் காரணங்கள் கூறப்படுகின்றன. கோராசனை வெல்வதற்குத் திரட்டிய படைகளின் ஒரு பகுதியைக் காராசலுக்கு அனுப்பி வைத்தார் என்றும், கோராசனை வெல்வதற்குமுன், காராசலைத் தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தால், தமது படைகள் எளிதாகக் கோராசனுக்குச் செல்ல இயலும் என்று சுல்தான் எண்ணினார் என்றும் பரனி கூறியுள்ளார். இந்த வகையாக, கோராசன் படையெடுப்புடன் காராசல் படையெடுப்பை இணைத்துக் கூறுவதைத் தற்கால வரலாற்றாசிரியர்கள் ஏற்க மறுக்கின்றனர். ஏனெனில், கோராசனைச் சென்றடைவதற்கான வழியின் குறுக்கே காராசல் அமைந்திருக்கவில்லை.

முகமது பின் துக்ளக்கின் ஆட்சியின் தொடக்கத்தில், சீனர்கள் இமயமலைப் பகுதிகளில் தோன்றியிருந்த இரஜபுத்திர நாடுகளைத் தாக்கி, அங்குத் தங்களுடைய மேலாதிக்கத்தை ஏற்படுத்தி வரலாயினர். அதன் விளைவாகத் தமது பேரரசுக்கு ஆபத்து விளையக்கூடும் என்று சுல்தான் அறிந்தார். ஆகவே, காராசல் நோக்கிப் படையெடுத்தார் என்று இபின்-இ-பதூதா கூறியுள்ளார். வட எல்லையைப் பாதுகாக்க எல்லையோரங்களில் தக்க அரண் பாதுகாப்புகளை அமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியே காராசல் படையெடுப்பு என்பது தெளிவாகும். மேலும், குமாயோன், கார்வால் பகுதியில் இருந்த இரஜபுத்திர

[1] தாலீக் இபிருஸ்ஷாயி, p. 477.
[2] HCI, p. 73.

அரசுகள், சுல்தானுக்கு எதிராகக் கலகம் செய்து அவருடைய பிடியிலிருந்து தப்பியோடியவர்களுக்குப் புகலிடம் தந்து வந்தன. எனவே, அவற்றை அடக்குவது அவசியமாயிற்று. காராசல் அந்தப்புர மங்கையர்களை அடையவே இப் போர் ஏற்பாட்டினைச் செய்தார் என்று ஹாஜி உத்தபீர் கூறுகிறார்[1]. முகமதுவின் குணநலன்களைப்பற்றி அறிந்தவர்கள் அக் கருத்தினை ஏற்க மாட்டார்கள். நாகர்கோட் படையெடுப்பின் ஒரு பகுதியாக, சர் உல்ஸ்லி ஹெய்க் இதனைக் கருதுகிறார்[2]. நாகர்கோட் படையெடுப்பை முகமது பின் துக்ளக்கே முன்னின்று நடத்தினார் என்று தெரிய வருகிறது. காராசல் படையெடுப்பை முகமது, தாமே முன்னின்று நடத்தவில்லை என்பதை அறியும்போது இவ்விரண்டும் வெவ்வேறான படையெடுப்புகள் என்பது புலனாகும்.

சுல்தான் ஒரு பெரிய படையைக் காராசலுக்கு அனுப்பி வைத்திருக்க வேண்டும் என்று தெரிய வருகிறது. 100,000 குதிரை வீரர்களையும் கணக்கற்ற காலாட் படையினரையும் அனுப்பி வைத்தார் என்று இபின்-இ-பதூதாவும், இசாமியும் கூறுகின்றனர். 80,000 பேர்களை அப்படை கொண்டிருந்ததாக பதோனி கூறுகிறார். இப் படைக்கு குஸ்ரூ மலிக் தலைமை தாங்கினார்[3].

படை புறப்பட்டுச் செல்லுவதற்கு முன் சுல்தான், படைத் தலைவருக்குப் போதிய அறிவுரைகளை வழங்கினார். டில்லியை விட்டுச் சென்ற படை, சம்பல் என்னுமிடத்தைக் கைப்பற்றிய பிறகு, இமயமலைப் பிரதேசத்தைச் சென்றடைந்திருக்கக் கூடும். மலைப்பாதைகளின் ஊடாகச் செல்ல நேர்ந்தபோது குஸ்ரூ மலிக், சுல்தானுடைய அறிவுரைக்கேற்ப இராணுவ நிலையங்களை வழிநெடுகக் குறிப்பிட்ட இடைவெளி விட்டு அமைத்தார். முன்னேறிச் செல்லும் படைகளுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்கச் செய்வதற்கும் பின்வாங்க நேர்ந்தபோது தகுந்த பாதுகாப்பு இடங்களாகச் செயற்படுவதற்கும் இவை அமைக்கப் பட்டன. இவற்றின் உதவி கொண்டு சுல்தானுடைய படைகள் ஜிதியாவைக் கைப்பற்றின. குஸ்ரூ மலிக், ஜிதியாவைச் சுற்றி யுள்ள பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டு, மேலும் முன்னேறிச் சென்று வாரங்கலைக் கைப்பற்றினார். அச் செய்தியை அறிந்ததும் சுல்தான், அவ்விடத்திற்கு ஒரு காஜியையும் ஒரு காதீப்பையும் அனுப்பி வைத்து, அதன் வாயிலாக அவ்விடத்தைத் தமது ஆட்சிப்

1 Vol. III, p. 877.
2 J.R.A. S, July, 1922.
3 இசாமி, ஃபுதூஉஸ் சாலாதீன், 467.

பகுதியில் இணைத்து விட்டதாக அறிவித்தார். மேலும், அதற்கு மேல் முன்னேறிச் செல்ல வேண்டாம் என்று குஸ்ரூ மலிக்குக்குச் செய்தி அனுப்பினார். குஸ்ரூ மலிக், சுல்தானுடைய வார்த்தைகளை மதியாது படையை நடத்திக்கொண்டு திபேத்தை அடைந்தார். முன்னர், முகமது பின் பக்தியார் கல்ஜிக்கு ஏற்பட்ட கதி மலிக் குஸ்ருவிற்கும் ஏற்பட்டது. இடைவிடாது மழை பெய்யத் தொடங்கியது. அதையடுத்து, 'பிளேக்' என்னும் கொள்ளை நோய் பரவியது. வந்த வழியே திரும்பிச் சென்ற படைமீது மலைவாசிகள் உச்சியிலிருந்து கற்களை உருட்டி விட்டனர். அதனால், படைமுற்றிலும் நாசமாயிற்று. பத்துப் பேர்கள் மட்டுமே உயிருடன் திருப்பினார்கள் என்று பரனி கூறியுள்ளார். இபின்-இ-பதூதா மூவரே திரும்பினார்கள் என்று கூறுகிறார்.

காராசல் படையெடுப்புச் சுல்தானுடைய மதிப்பைக் குறைத்து விட்டது. அவருடைய படைப்பலத்தையும் குறைத்துவிட்டது. அதனால், மக்கள் கலகம் செய்ய தைரியம் கொண்டனர். அதன் விளைவாகப் பேரரசின் பல பகுதிகள் டில்லியின் ஆதிக்கப் பிடியி லிருந்து நழுவிவிட்டன. அதே நேரத்தில் சுல்தானுடைய அதிகாரம் இமயமலைப் பகுதியில் நிலைநாட்டப்பட்டதென்பதை நாம் இங்குக் கூறாமல் இருக்கமுடியாது. மலைமீது வாழ்ந்திருந்த மக்கள், மலையின் அடிவாரப் பகுதியில் நிலங்களை வைத்திருந்தனர். அவை யாவும் இப்போது சுல்தானுடைய அதிகாரத்தின்கீழ் வந்துவிட்டன. ஆகவே, அவருடைய அனுமதியின்றி அவர்கள் அவற்றைச் சாகுபடி செய்ய இயலாது. எனவே, அவர்கள் சுல்தானுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டனர். சுல்தானுக்கு ஆண்டுதோறும் கப்பம் கட்டிவர அவர்கள் இசைந் தார்கள்[1]. அதற்குப் பதிலாகச் சுல்தான், அவர்களுக்குப் பாது காப்பளிக்க இசைந்தார். எனவே, சுல்தானுடைய படைகள் பெருஞ் சேதத்திற்குள்ளான போதிலும், சுல்தானுடைய நோக் கங்கள் முழு அளவு நிறைவேறவில்லை யென்றாலும், ஓரளவாவது நிறைவேறியது என்பது புலனாகும்.

## (iv) கோந்தானாவை வெல்லுதல்

கோந்தானா என்பது, தேவகிரிக்கு அருகே இருந்த கோட்டை களுள் ஒன்றாகும். அதனை நாக் நாயக் என்பவர் ஆண்டுவந்தார். தேவகிரியிலிருந்து படையுடன் புறப்பட்டு அதனை முற்றுகை யிட்டார். நாக் நாயக் எட்டு மாதங்கள் முற்றுகையைச் சமாளித்தார். இறுதியில் சுல்தானுக்கு அடிபணிந்தார்.

[1] Rehba, 98-99.

(v) நாகர்கோட் படையெடுப்பு

நாகர்கோட் என்பது, காங்ரா மாவட்டத்திலுள்ள புராதன நகரமாகும். அஃது இரஜபுத்திரர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்தது. இப் படையெடுப்பைப்பற்றிப் பாதர் சாச் (Bader Chach) நமக்குச் சில குறிப்புகள் அளித்துள்ளார். இக் கோட்டை, 1337-ல் கைப்பற்றப்பட்டிருக்கக்கூடும். இப் படையெடுப்பைச் சுல்தானே முன்னின்று நடத்தினர். வடவெல்லை தக்க முறையில் பாதுகாக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தினல் மேற்கொள்ளப்பட்ட பல படையெடுப்புகளுள் இஃதும் ஒன்ருகும். அப் படையெடுப்பின்போது சுல்தான் இந்துக்களைத் துன்புறுத்தவில்லையென்றும், அவர்களுடைய கோயில்களுள் முக்கியமானதாகக் கருதப்பட்ட ஜ்வாலாமுகி கோயிலை அழிக்க அனுமதிக்கவில்லை என்றும் அறிகிருேம்.

மங்கோலியர் படையெடுப்பு: கி. பி. 1327-ல் அலாவுத்தீன் தர்மாஷீரின் கான் என்ற மங்கோலியத் தலைவர், இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார். அவர் ஷகடை பிரிவைச் சார்ந்தவர். அவர், முதலில் புத்த மதத்தைப் பின்பற்றி வந்தார். பின்னர், அவர் இல்லாமிய மதத்தைத் தழுவினர். மங்கோலியர்கள் முதலில் சிந்துவைத் தாக்கினர்கள் என்றும், அதையறிந்ததும் சுல்தான் உடனடியாகப் போர் ஏற்பாடுகளைச் செய்தார் என்றும், டில்லிப் படைகள் போருக்குத் தயாராவதற்குள் மங்கோலியர்கள் மீரத்தை அடைந்துவிட்டனர் என்றும், அதைக் கேட்டதும் யூசாப் புக்ரா என்பவரை 10,000 வீரர்களுடன் மங்கோலியர்களை எதிர்கொள்ளும்படி மீரத்துக்குச் சுல்தான் அனுப்பினர் என்றும், போர் நடைபெற்றபோது மங்கோலியர்களுடைய சங்கநாதம் டில்லிப் படைகளை மயக்கமுறச் செய்துவிட்டது என்றும், இறுதியில் தர்மாஷீரின் தோற்கடிக்கப்பட்டு விரட்டப்பட்டார் என்றும் இசாமி கூறியுள்ளார்[1]. பின்வாங்கிச் சென்ற தர்மாஷீரினைச் சுல்தான், கலனேர்வரை துரத்திச் சென்ருர் என்றும், அங்குத் தமது படைகளை எல்லைப் பாதுகாப்பிற்காக மலிக் முஜீருத்தீன் அபுராஜாவின் தலைமையின்கீழ் விட்டுவிட்டு, டில்லி திரும்பினர் என்றும் யஹியா சிர்ஹிந்தி கூறுகிருர்[2]. இந்தியாவை வெல்லவேண்டும் என்ற நோக்கத்துடன் படை நடத்திக்கொண்டு இந்தியா வந்தார் என்றும், லம்கான், மூல்தான் ஆகிய இடங்களின் வழியாக டில்லிக்கருகே வந்தார் என்றும், சுல்தான் அவருக்கு அடிபணிந்து பெருஞ் செல்வத்தைக் கொடுத்துச் சமாதானத்தைச் செய்துகொண்டார் என்றும், குஜராத், சிந்து

1 Rituh-us-Salatui, 462-365.

2 Tarishi-Mubarak Shahi, p. 101.

ஆகிய இடங்களைக் கொள்ளையிட்டுப் பல பேர்களைச் சிறை பிடித்துக்கொண்டு, தம் நாடு திரும்பினார் என்றும் பிரிஷ்டா கூறுகிறார்.

இபின்-இ-பதூதா வேறுவிதமான தகவல்களை நமக்களித்துள்ளார். செங்கிஸ்கானுடைய கட்டளைகளை மீறி, தர்மாஷீரின் நடந்துகொண்டமையால், அவர் அரசுரிமையை இழந்தார் என்றும், அதனால், அவர் சிந்துவிற்கு ஓடி அங்குத் தலைமறைவாக வாழத் தொடங்கினார் என்றும், அது சுல்தானுடைய காதுக் கெட்டியது என்றும், ஒரு வைத்தியருடைய துணையைக்கொண்டு தர்மாஷீரினை அடையாளம் கண்டுவரச் செய்தார் என்றும், அதன் பிறகு அவர், சுல்தானுடைய முன்னிலையில் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார் என்றும், அப்போது இறந்துபோன தர்மாஷீரின் போல நடித்ததற்காக அவரை மிகவும் கோபித்துக் கொண்டார் என்றும் இபின்-இ-பதூதா கூறுகிறார். 1332ஆம் ஆண்டில் அவர் கொல்லப்பட்டார் என்பதைச் சுல்தான் அறிந்திருந்தமையால், அவ்வாறு பேசியிருக்கக்கூடும். அதன் பிறகு, போலி தர்மாஷீரின் இந்தியாவை விட்டு வெளியேற்றப் பட்டார்.

தற்கால வரலாற்றாசிரியர்களுள் ஈஸ்வரி பிரசாத், பிரிஷ்டாவின் குறிப்புகளை உண்மையென ஒப்புக்கொள்ளுகிறார். சர் உல்ஸ்லி ஹேய்க், மங்கோலியர் படையெடுத்து வந்ததை ஏற்றுக்கொள்ளுகிறார். ஆனால், சுல்தான் அவரிடம் சரணடைந்தார் என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றார். தர்மாஷீரின் இந்தியாவின்மீது படையெடுத்து வரவில்லை. 1326ஆம் ஆண்டில் கஜினுக்கு அருகே அமீர் சாபன் என்பவரிடம் தோல்வியுற்றார். ஆகவே, தம் படையுடன் பஞ்சாப் நோக்கி ஓர் அகதியாக வந்தார். மூல்தான் வழியாக அவர் டில்லிக்கு வந்தார். சுல்தான், அவர்மீது இரக்கம் கொண்டு 5,000 தினார்களைக் கொடுத்து உதவினார். அதைப் பெற்றுக்கொண்டு அவர் டில்லியிலிருந்து திரும்பிச் சென்றுவிட்டார் என்று கூறுகிறார். இக் கருத்தை மற்ற ஆசிரியர்கள் ஏற்க மறுக்கின்றனர். ஏனெனில், இதற்கு ஆதாரமாகத் தகுந்த சான்றுகளை அவர் நமக்களிக்கவில்லை[1]. எனவே, முகமது துக்ளக்கின் ஆட்சிக் காலத்தில் மங்கோலியர் படையெடுத்துவந்தனர் என்பதில் ஐயமில்லை. அவரது காலத்தில் நடைபெற்ற முதல் அன்னியப் படையெடுப்பு அதுவேயாகும். அதுவே கடைசிப் படையெடுப்புமாகும்.

[1] HCIP, p. 71.

## முகமது பின் துக்ளக் காலத்தில் ஏற்பட்ட கலகங்களும் அவற்றின் விளைவுகளும்

முகமது பின் துக்ளக்கின் ஆட்சிக் காலத்தில் பதினெட்டுக் கலகங்கள் நடைபெற்றன. அவற்றுள் முதலாவது, பஹா உத்தீன் குர்ஸ் ஹாஸ்ப்பின் கலகமாகும். பஹா உத்தீன் குர்ஸ் ஹாஸ்ப் முகமதுவின் சகோதரியினுடைய மகனுவார். கியாஸ் உத்தீன் துக்ளக் இறந்த பிறகு, முகமதுவிற்கு அடங்கி நடக்க உறுதிமொழி அவர் எடுத்துக்கொள்ள மறுத்து விட்டார் என்று இபின்-இ-பதூதா கூறுகிருர்[1]. அவருக்கு 'குர்ஸ் ஹாஸ்ப்' என்ற பட்டத்துடன் சாகர் மானியத்தையும் முகமது அளித்ததாக இசாமி கூறுகிருர். சாகர், தக்காணத்தில் குல்பர்காவிற்கு அருகேயுள்ளது. குர்ஸ் ஹாஸ்ப் விரைவில் செல்வாக்கையும், பெருஞ் செல்வத்தையும் பெற்ருர். ஆகவே, அக்கம்பக்கத்தில் இருந்த ஏனைய மானியதார்களைத் தாக்கி வந்தார். சுல்தானுடைய மனப்போக்கு மாறிவிட்டது என்ப தற்காக அவர் கலகம் செய்தார் என்று கூறப்படுகிறது. அவருடைய கலகத்தைப்பற்றிய செய்தியைச் சுல்தான் அறிந்ததும் குவாஜா-இ-ஜஹான் அகமது அயாஸ் என்பவரைக் கலகத்தை அடக்குவதற்காக குஜராத்திலிருந்து அனுப்பிவைத்தார். பேரரசரின் படைகள் தம்மை ஒடுக்குவதற்காக வருகின்றன என் பதை யறிந்த குர்ஸ் ஹாஸ்ப், தேவகிரியிலிருந்து மேற்கு நோக்கி நகர்ந்து, அகமது அயாஸைப் போர்க்களத்தில் சந்தித்தார். முதலில் குர்ஸ் ஹாஸ்ப் வெற்றி பெற்ருர். ஆனல், அவருடைய படைகளுள் ஒரு பகுதி டில்லிப் படையுடன் சேர்ந்துகொண்ட தால், அவர் படுதோல்வி அடைய நேர்ந்தது. ஆயினும், போர்க் களத்திலிருந்து தப்பித் தம் குடும்பத்தினருடன் சாகர் சென்ருர். அங்கிருந்து தப்பியோடி கம்பிலி அரசரிடம் புகலிடம் நாடினர். கம்பிலி அரசர் அவருக்குப் புகலிடமளிக்க ஒத்துக்கொண்டார். டில்லிப் படைகள் குர்ஸ் ஹாஸ்ப்பைப் பின்தொடர்ந்து, கம்பிலியை அடைந்தன. இதற்கிடையில் முகமது பின் துக்ளக் தேவகிரி வந்து சேர்ந்தார். அங்கிருந்து கம்பிலியில் போர் நடத்திவந்த தம் படைகளுக்கு உதவி செய்யலானர்.

இரண்டு மாதங்களாகக் கம்பிலி அரசர் முஸ்லிம் படை களுடன் போராடினர். இறுதியில் டில்லிப் படைகள் அவருடைய கோட்டைக்குள் புகுந்தன. எனவே, கம்பிலி அரசரும், குர்ஸ் ஹாஸ்ப்பும் அங்கிருந்து 'ஆனகுண்டி' என்ற கோட்டைக்கு ஓடினர்கள். டில்லிப் படைகள் அவர்களை விடாது பின்தொடர்ந்து

[1] Rehla, 95.

ஆனகுண்டியை முற்றுகையிட்டனர். ஏறக்குறைய ஒரு மாத காலமாகக் கம்பிலி அரசர் வீரத்துடன் போரிட்டு உயிர் துறந்தார். அதற்கு முன்பாகத் தீ மூட்டி அவருடைய மனைவிமார்களையும், பெண்களையும் அதில் குதிக்கச் செய்தார். ஆனகுண்டியைக் கைப்பற்றிய பிறகு, அகமது அயாஸ் கம்பிலி அரசரின் பதினொரு பிள்ளைகளைச் சிறைப்படுத்திச் சுல்தானிடம் அனுப்பிவைத்தார். சுல்தான் அவர்களை அன்புடன் நடத்தினார். அவர்கள் யாவரும் இஸ்லாமிய மதத்தைத் தழுவிக்கொண்டனர். அவர்களை முக்கியமான பதவிகளில் நியமித்து அவர்களிடம் தாம் கொண்டிருந்த நம்பிக்கையைச் சுல்தான் வெளிப்படுத்தினார். அவர்களுள் ஒருவன், முஹர்தார் (Muhrdar) பதவியை வகித்திருந்தார். அரசர் அருந்தும் நீரைப் பாதுகாக்கவேண்டியது அவருடைய பொறுப்பாகும். கம்பிலி, டில்லி சுல்தானியத்துடன் இணைக்கப்பட்டது. அதனை ஒரு தனி மாநிலமாக அமைத்து மலிக் முகமதுவை அதனுடைய ஆளுநராக நியமித்தார்.

கம்பிலி அரசர், பகைவர்களைச் சமாளிக்க இயலாது என்பதை அறிந்ததும் தம்மிடம் அடைக்கலம் நாடியவருக்குத் துன்பம் ஏற்படக்கூடாது என்பதற்காக அவரை ஹோய்சள அரசரிடம் அனுப்பி வைத்தார் என்று இபின்-இ-பதூதா கூறுகிறார்[1]. கம்பிலி முற்றுகை நடந்துகொண்டிருந்தபோது குர்ஸ் ஹாஸ்ப் தப்பித்து ஓடுவதற்காக நான்கு குதிரைகளைத் தயாராக வைத்திருந்தார் என்றும், கோட்டை, பகைவர் வசம் சிக்குவது திண்ணம் என்று அவர் அறிந்தபோது, தம் குடும்பத்தினருடன் தப்பியோடி விட்டார் என்றும் இசாமி கூறுகிறார். ஆனகுண்டியை விட்டுச் சென்ற குர்ஸ் ஹாஸ்ப் துவாரசமுத்திரம் சென்றார். அதன் அரசரான மூன்றாம் பல்லாளா, கம்பிலி அரசருக்கு ஏற்பட்ட கதி தமக்கும் ஏற்படக்கூடாது என்பதற்காக, குர்ஸ் ஹாஸ்ப்பைச் சிறைபிடித்து முஸ்லிம் படைத் தலைவரிடம் அனுப்பிவைத்தார். அதுமட்டுமன்றிச் சுல்தானுடைய மேலாதிக்கத்தையும் அவர் ஏற்றுக்கொண்டார் என்று பிரிஷ்டா கூறுகிறார்[2]. கி.பி. 1327-ல் முஸ்லிம்கள் துவாரசமுத்திரத்தை அழித்தனர் என்று சில சான்றுகள் நமக்கு அறிவிக்கின்றன. கி. பி. 1328ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட சாசனம் ஒன்றில் மூன்றாம் பல்லாளா, சுதந்திரமான அரசராகச் செயற்பட்டு வந்தார் என்று கூறுகிறது. இவ் விருவிதமான கருத்துகளை நாம் மனத்தில் கொண்டு பார்க்குமிடத்து, மூன்றாம் பல்லாளா முஸ்லிம்களுடன் போர் புரிந்து தோல்வியடைந்த பிறகே அவர்களுக்குக் கீழ்ப்படிந்தார் என்பதும்

[1] Rehla, 97.
[2] Tutuh us Salatin, 429.

அதன் பிறகு, அவருடைய இராச்சியத்தின் ஒரு பகுதியை அவருக்கு முஸ்லிம்கள் திருப்பிக் கொடுத்திருக்க வேண்டும் என்பதும் அறியலாம். குர்ஸ் ஹாஸ்ப்பின் கலகம் டில்லி சுல்தான்களுடைய ஆட்சியைக் கம்பிலியிலும், துவாரசமுத்திரத்தின் ஒரு பகுதியிலும் நிலைநாட்டுவதற்குத் துணை புரிந்தது என்பதை அறியலாம். முகமது துக்ளக்கின் காலத்தில்தான் டில்லியின் ஆதிக்கம் தென்னிந்தியாவில் அதிகமளவு பரவியிருந்தது என்பதை அறிதல் வேண்டும். தென்னிந்தியாவில் மலபார் கரையோரப் பகுதிகளைத் தவிர, ஏனைய பகுதிகள் முஸ்லிம்களின் அதிகாரத்திற்குட் படுத்தப்பட்டன.

கைது செய்யப்பட்டுத் தம்முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்ட குர்ஸ் ஹாஸ்ப்பின் தோலை உரித்து, அவரைக் கொல்லும்படி சுல்தான் கட்டளையிட்டார். அதன் பின்னர், அவருடைய உடலைத் துண்டு துண்டாக வெட்டி அரிசியுடன் சேர்த்துச் சமைக்கும்படி உத்தரவிட்டார். அவ்வாறு சமைக்கப்பட்ட உணவின் ஒரு பகுதியை அவருடைய மனைவிக்கும் குழந்தைகளுக்கும் அனுப்பி வைத்தார். மற்றொரு பகுதியைப் பெண் யானைக்குக் கொடுக்கும் படி செய்தார். அவருடைய தோலை எடுத்து அதில் வைக்கோலை நிரப்பி நாட்டிலுள்ள முக்கிய நகரங்களில் ஊர்வலமாக எடுத்துச் செல்லும்படி கட்டளையிட்டார். இந்த வகையான கொடூரச் செயல் மக்களுடைய உள்ளத்திலே பயத்தையும் வெறுப்பையும் தோற்றுவித்தன.

குர்ஸ் ஹாஸ்ப்பின் கலகத்தின்போது ஒரு போற்றுதற்குரிய நிகழ்ச்சி நடைபெற்றது. கல்யானில் உள்ள மதுகேஷ்வர் கோயிலையும், சிவலிங்கத்தையும் சில முஸ்லிம் போர் வீரர்கள் அழிக்க முற்பட்டனர். அக் கோயிலின் தர்மகர்த்தா அகமது அயாஸைச் சந்தித்து, வழிபாட்டுச் சிலையைத் திரும்பிக் கொடுத்து விடுமாறு கேட்டார். அகமது அயாஸும் அதற்கிணங்கினர். கோயிலில் வழிபாடு நடத்துவது, விண்ணப்பதாரர்களின் கடமை யாதலின் அவர்களை அப் பணியினை மேற்கொள்ள விடுவது அரசினுடைய கடமையாகும் என்று அகமது அயாஸ் எண்ணினர். இதிலிருந்து முகமதுவினுடைய சகிப்புத் தன்மை நன்கு விளங்கு கிறது. கல்யான் கல்வெட்டு இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது.

மூல்தானின் ஆளுநரான பஹ்ராம அய்பா கிஷ்லூகான் மற்றொரு கலகத்தைத் தொடங்கினர். பஹா உத்தீன் குர்ஸ் ஹாஸ்ப்பினுடைய தோலை உரிக்குமாறு சுல்தான் கட்டளை யிட்டார் என்று முன்பு கண்டோம். உரிக்கப்பட்ட தோலுக்குள்

வைக்கோலை அடைத்து அதனைப் பல நகரங்களுக்குக் கொண்டு சென்று, மக்களுக்குக் காட்டும்படி சுல்தான் கட்டளை யிட்டிருந்தார். அதனையும், கியாஸ்உத்தீன் பகதூருடைய சவத்தையும் மூல்தானுக்குக் கொண்டு சென்றபோது, பஹ்ராம் அய்பா அவற்றைக் குழிதோண்டிப் புதைக்கும்படி ஆணையிட்டார். இதனைச் சுல்தான் விரும்பவில்லை. ஆகவே, தம்மை வந்து சந்திக்கும்படி பஹ்ராம் அய்பாவிற்கு சுல்தான் கட்டளையிட்டார். பஹ்ராம் அய்பா வர மறுத்துவிட்டார். அதைத் தொடர்ந்து அவர் கலகம் செய்தார் என்று இபின்-இ-பதூதா கூறுகிறார். இதனை நாம் ஏற்றுக் கொள்ள இயலாது என்பதற்குச் சில காரணங்கள் கூறப்படுகின்றன. குர்ஸ் ஹாஸ்ப்பின் கலகம் ஒடுக்கப்பட்ட ஐந்து ஆண்டுகள் கழித்துக் கியாஸ் உத்தீன் பகதூருடைய கலகம் ஏற்பட்டது. ஆகவே, மேற்கண்ட இரு சவங்களும் ஒரே நேரத்தில் மூல்தானுக்குக் கொண்டு செல்லபட்ட தென்பது உண்மையாகாது. மேலும், இக் காரணத்தை வேறெந்த வரலாற்றாசிரியரும் தம் நூலில் குறிப்பிடவில்லை.

சுல்தான் தேவகிரிக்குச் சென்ற பிறகு, இக் கலகம் ஏற்பட்ட தென்று பரனி கூறியுள்ளார். அதன் காரணத்தை அவர் கூறவில்லை. வேறு சில ஆசிரியர்கள் இக் கலகத்தைப்பற்றிக் கூறும்போது, தேவகிரியைத் தலைநகரமாக மாற்றியதை அடுத்து இஃது ஏற்பட்டது என்கிறார்கள். தலைநகர மாற்றத்தைச் சில அமீர்கள் எதிர்த்தனர். அவர்களுள் அய்பா ஒருவராவார். ஆகவே, அவருடைய குடும்பத்தினரைத் தேவகிரிக்கு அழைத்து வரும்படி அலிக்தாதீ என்பவரைச் சுல்தான், மூல்தானுக்கு அனுப்பிவைத்தார். அலிக்தாதீ அய்பாவை மரியாதையுடன் நடத்தவில்லை. எனவே, அய்பாவின் மருமகப்பிள்ளை அவரோடு சண்டையிட்டு அவரைக் கொன்றுவிட்டார். நிலைமை மோசமாகிவிடவே, அய்பா வேறு வழியின்றிக் கலகம் செய்யத் தொடங்கினார் என்று யஹியா சிர்ஹிந்தி கூறுகிறார்[1].

இக் கலகம் 1328-ல் நடைபெற்றிருக்கக்கூடும். கலகம் பற்றிய செய்தி சுல்தானுக்கு எட்டியதும், அவர் தேவகிரியி லிருந்து உடனே புறப்பட்டு டில்லி சென்றார். அங்குப் படை யொன்றைத் திரட்டிக்கொண்டு மூல்தான் சென்றார். அபோஹர் என்னுமிடத்தில் போர் நடைபெற்றது. அதுபோது சுல்தான் தமது விதானத்தின்கீழ் இமாத்உத்தீனை அமரச் செய்துவிட்டு ஒரு படையுடன் மறைந்துகொண்டார். இமாத்உத்தீன் தோற்றத்தில் சுல்தானைப்போலவே இருந்தார். எனவே, அவரைக்

1 Mubarak Shahi p. 100.

கொன்றுவிட்டதும் பஹ்ராம் அய்பா, தாம் முழு வெற்றி அடைந்துவிட்டதாக எண்ணிப் போர்க்களத்திலிருந்து சென்று விட்டார். அப்போது சுல்தான், தமது மறைவிடத்தைவிட்டு வெளியே வந்து பஹ்ராம் அய்பாவைத் தாக்கினர். அய்பா போரில் உயிரிழந்தார். மூல்தான் மக்களைக் கொன்றுவிட வேண்டும் என்று சுல்தான் எண்ணினர். ஷெயிக்ருக்னுத்தீன் அப்போது தலையிட்டு, சுல்தானுடைய கோபத்தைத் தணித்தார்.

அடுத்தது கமால்பூர் கலகமாகும். சிந்துவிலுள்ள கமால் பூரில் அதனுடைய காஜியும், காதீப்பும் சேர்ந்து கலகம் விளைவித்தனர், தமது வசீரான குவாஜா ஜஹானை கமால் பூருக்குச் சுல்தான் அனுப்பிவைத்தார். கலகம் எளிதில் அடக்கப் பட்டுவிட்டது. காஜியும், காதீப்பும் கைது செய்யப்பட்டனர். அவர்களை உயிருடன் தோலையுரித்துக் கொல்லுமாறு சுல்தான் கட்டளையிட்டார்.

அடுத்த கலகத்தைக் கியாஸ்உத்தீன் பகதூர் தொடங்கினர். இந்தக் கலகம் 1330-ல் நடந்திருக்கக்கூடும். முகமது பின் துக்ளக் பட்டமேறியபோது, கியாஸ்உத்தீன் பகதூர் டில்லிச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார், பட்டமெய்தியதும் முகமது அவரை விடுதலை செய்து, அவரைச் சோனர் காவ்னின் ஆளுநரா கவும், பஹ்ராம்கானை லக்னேதியின் ஆளுநராகவும் நியமித்தார். கியாஸ்உத்தீனைப் பகதூர் சுல்தானுக்குக் கீழ்ப்படிந்து நடக்கச் செய்யவேண்டும் என்பதற்காக அவருடைய மகனை டில்லி அரசவைக்குப் பிணையாக அனுப்பிவைக்கும்படி சுல்தான் கட்டளை யிட்டார். இந்த ஒரு நிபந்தனையைத் தவிர, ஏனைய நிபந்தனைகளை கியாஸ்உத்தீன் பகதூர் ஏற்றுக்கொண்டார். ஆயினும், சுல்தா னுக்குக் கியாஸ்உத்தீன்மீது அவநம்பிக்கை ஏற்பட்டது. எனவே, தாதார்கான் தலைமையின்கீழ் ஒரு படையை வங்காளத்திற்கு அனுப்பிவைத்தார். பஹ்ராம்கான் அவருடன் சேர்ந்து கியாஸ் உத்தீன் பகதூருடன் போரிட்டார். போரில் கியாஸ்உத்தீன் பகதூர் தோல்வியுற்றுர். தப்பி ஓட முயற்சித்தபோது அவரைக் கைது செய்தனர். அவருடைய தோலையும் உரிக்கச் செய்து அத னுள் வைக்கோலை அடைத்து நாடு முழுவதிலும் அதனை ஊர்வல மாகக் கொண்டு செல்லும்படி சுல்தான் கட்டளையிட்டார்.

1333 — 1334ஆம் ஆண்டில் சேவானில் ஒரு கலகம் ஏற்பட்டது. ரதன் என்ற ஓர் இந்து, அதனுடைய ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார். சுல்தானுடைய அதிகாரிகளுள், ஊனர், கைசர்-இ-ரூமி என்ற இருவர் ரதனுடைய முன்னேற் றத்தைக் கண்டு பொறுமைப்பட்டனர். எனவே, அவர்கள்

ஒரு சதித்திட்டத்தைத் தீட்டி, ரதனைக் கொன்றுவிட்டனர். அதையடுத்து 12 இலட்சம் பெறுமான அரசாங்கச் சொத்துகளை அவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். ஊனூர் சேவானுக்கு அதிபதியானூர். தமது உயிருக்கு ஆபத்து நேருமோ என்ற அச்சத்தினுல் ஊனூர் சேவானைவிட்டு ஓடிவிட்டார். எனவே, கலகக்காரர்கள் கைசர்-இ-ரூமியைத் தங்கள் தலைவராக ஏற்றுக்கொண்டனர். அதையறிந்த மூல்தானின் ஆளுநரான இமாத்-உல்-முல்க்சார்டெஸ் என்பவர், படையுடன் சேவான் சென்று கலகக்காரர்களைத் தோற்கடித்தார். பிடிபட்ட கலகக் காரர்களைக் கொன்று, அவர்களுடைய சடலங்களை நகர மதில் களின்மீது நடப்பட்ட கழிகளில் ஆணி அடித்து மாட்டிவிட்டார். இக் காட்சியை இபின்-இ-பதூதா நேரில் கண்டதாகக் கூறி யுள்ளார்.

அடுத்த கலகம் தோவாப்பில் ஏற்பட்டது. அக் கலகத்திற்கு முக்கியக் காரணம் தோவாப் பகுதியில் வரியை உயர்த்தியதே யாகும். அதைப்பற்றி முன்னரே கண்டுள்ளோம்.

1334-ம் ஆண்டில் மாபாரில் ஒரு பெரிய கலகம் தோன்றியது. அக் கலகத்திற்குத் தலைமை தாங்கியவர் சையத் அஸன் ஷா என்பவ ராவர். தோவாப்பில் ஏற்பட்ட கலகம் மாபார் கலகத்திற்கு வித்திட்டது என்று கூறப்படுகிறது. தோவாப் கலகத்தின் காரண மாகச் சுல்தான், அதிக நாட்கள் தோவாப்பில் தங்க நேர்ந்தது. சுல்தானுடைய அதிகாரிகள், தேவகிரியிலுள்ள தங்கள் இல்லங் களுக்கு விரைவாகச் சென்றுவிடவேண்டும் என்று விருப்பங் கொண்டனர். ஆகவே, சையத் அசன்ஷாவைக் கலகம் செய்யத் தூண்டிவிட்டிருக்கக்கூடும். அதன் பொருட்டாவது சுல்தான் தேவகிரி திரும்பிவிடுவார் என்று அவர்கள் எண்ணியிருக் கலாம். மேலும், கோராசான் படையெடுப்பைக் கைவிட்ட பின்னர், சில படைகளை மாபாருக்கு அனுப்பி, அங்குத் தம்முடைய ஆட்சியைப் பலப்படுத்தவேண்டும் என்று சுல்தான் எண்ணினூர். அவ்வாறு அனுப்பப்பட்ட படை, மாபாரிலேயே தங்கிவிட்டது. அப் படையை வைத்துப் பராமரிக்க மைய அரசு, சையத் அஸன்ஷாவிற்கும் பணம் ஏதும் கொடுக்கவில்லை. அப் பணத்தை மைய அரசிடமிருந்து கோரிப் பெறுவதற்குப் பதிலாகத் தேவையான பணத்தைப் பெறச் சுதந்திரமாகச் செயற்படுவ தெனத் தீர்மானித்தார்[1]. டில்லியிலிருந்து மாபார் வெகு தூரத்தில் இருப்பதால், தம்மை எளிதில் அடக்கமுடியாது என்று

1. A. M. Husain. Rise and Fall of Mohamed Pin Tughlagh, p.p. 159-160.

சையத் அஸன் ஷா எண்ணினர். மேலும், தோவாப், மாளவம், கிழக்குப் பஞ்சாப் ஆகிய இடங்களில் ஏற்பட்டிருந்த பஞ்சம், மைய அரசைப் பலவீனப்படுத்திவிட்டது என்ற செய்தி சையத் அஸனுக்கு எட்டியிருந்தது. இவை யாவும் மாபாரில் கலகம் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கின. கலகம்பற்றிய செய்தியை அறிந்ததும் சுல்தான் கன்னோசியிலிருந்து உடனே டில்லி திரும்பினர். எட்டு நாள்கள் அங்குத் தங்கியிருந்து தேவையான படையுடன் மாபார் நோக்கிப் புறப்பட்டார். தேவகிரியில் ஓரிரு மாதங்கள் தங்கிய பிறகு, அவர் பீடாருக்குச் சென்றார். பீடாரில் இருக்கும்போது ஒரு கொள்ளை நோய் ஏற்பட்டது, படை வீரர்கள் பலர் நோயினால் பீடிக்கப்பட்டு இறந்துவிட்டனர். சுல்தானையும் அந் நோய் பற்றிக்கொண்டது. எனவே, அவர் தௌலதாபாத் திரும்பிவிட்டார். மாபாரில் ஏற்பட்ட கலகத்தை அடக்கும் முயற்சி கைவிடப்பட்டது. தென்னிந்தியாவில் டில்லியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட முதல் பகுதி மாபாரேயாகும். சையத் அஸன்ஷா, மதுரைச் சுல்தானியத்தைத் தொடங்கி வைத்தார். இதற்கிடையில் தௌலதாபாத் தனது முக்கியத்துவத்தை இழக்கலாயிற்று. சுல்தான் டில்லிக்குத் திரும்பிவிடத் தீர்மானித்தார். அவர் தௌலதாபாத்தைவிட்டகலுவதற்குமுன், தக்காணத்தில் சில ஏற்பாடுகளைச் செய்தார். மகராஷ்டிராவையும் தௌலதாபாத்தையும் குத்லூகானின் பொறுப்பில் விட்டுவைத்தார். மலிக் காபூல் தெலிங்கானவை ஆளும் பொறுப்பைப் பெற்றார். ஷிஹாம் சுல்தானுக்கு நஸ்ரத்கான் என்ற பட்டத்தை அளித்துப் பீடாரை ஆண்டுவர அனுமதி வழங்கினர். மூன்று ஆண்டுகளுக்குள் அவர் சுல்தானுக்கு ஒரு கோடி டங்காக்கள் அளிக்க வேண்டும் என்று சுல்தான் அவருக்குக் கட்டளையிட்டார்.

எட்டாவது கலகத்தை மசூத்கான் தொடங்கினர். மசூத்கான், சுல்தானுடைய ஒன்றுவிட்ட சகோதரன். அவர், தம் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால், அவரைக் கொன்று விடும்படி சுல்தான் உத்தரவிட்டார். அவருடைய தாயாரை, விபசாரம் செய்த குற்றத்திற்காகக் கல்லால் அடித்துக் கொல்லும்படி சுல்தான் கட்டளையிட்டார். அதுவே அவருடைய கலகத்திற்குக் காரணமாகும்.

அடுத்த கலகம் லாகூரில் ஏற்பட்டது. இக் கலகத்தின் தலைவர் ஹுலாஜுன் என்பவராவர். இவர் ஒரு மங்கோலியர். முகமது பின் துக்ளக்கின் கீழ்ப் பணியாற்றி வந்தார். லாகூரின் ஆளுநரான மலிக் தாதாரைத் தந்திரமாகக் கொன்று விட்டு,

லாகூரில் தமது சொந்த ஆட்சியை நிறுவினார். வசீர் குவாஜா-இ-ஜ்ஹான் படை நடத்திச் சென்று ரவி நதிக் கரையில் கலகக் காரர்களைத் தோற்கடித்தார். ஹுலாஜுன் தப்பி ஓடி விட்டார். இக் கலகம் கி.பி. 1335-ல் ஏற்பட்டிருக்கக் கூடும்.

அடுத்த கலகம் தௌலதாபாத்தில் நடைபெற்றது. மலிக் ஹோஷங் கலகத்திற்குத் தலைமை தாங்கினார். சுல்தான் தெலிங் கானாவில் கொள்ளை நோயினால் பீடிக்கப்பட்டு இறந்தார் என்ற செய்தியே இக் கலகம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்தது. ஹோஷங், பக்கத்திலிருந்த புராப்ரா என்ற இந்து அரசரிடம் புகலிடம் நாடினார். சுல்தான் புராப்ராவினுடைய நாட்டைத் தாக்கினார். ஆனால், அதனை அவரால் கைப்பற்ற இயலவில்லை. ஹோஷங்கை சுல்தானிடம் ஒப்படைக்கவும் புராப்ரா இசைய வில்லை. இறுதியில் தேவகிரியின் ஆளுநர் வாயிலாக ஹோஷங்கைத் தாம் மன்னித்து விட்டதாகச் சுல்தான் சொல்லி அனுப்பினார். ஹோஷங் அம் மன்னிப்பை ஏற்றுக் கொண்டு டில்லி சென்று சுல்தானைக் கண்டார். சுல்தான் அவரைக் கண்டதும் மட்டிலா மகிழ்ச்சி அடைந்தார்.

அடுத்த கலகம் மிக முக்கியமானதாகும். முஸ்லிம்களின் ஆதிக்கத்திற்குட்படுத்தப்பட்டிருந்த இந்துக்கள், தெலிங்கானா, ஆந்திரா, கிருஷ்ணா, துங்கபத்திரா நதிகளுக்குத் தெற்கேயுள்ள பகுதிகள் ஆகிய இடங்களில் சுதந்திரம் பெறவேண்டிக் கலகம் செய்தனர். இந்தச் சுதந்திரப் போராட்டத்தைப்பற்றி முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் நமக்குப் போதுமான தகவல்களை அளிக்க வில்லை. ஆகவே, அக் கால இந்து குறிப்புகளை வைத்துக்கொண்டு நாம் அப் போராட்டத்தின் தன்மையை அறிய வேண்டியதாய் இருக்கிறது. முதன்முதலில் இந்து எதிர்ப்பைத் தொடங்கியவர் பொரலய நாயகர் என்பவராவர். அவர் தெற்கு ஆந்திர தேசத்திலுள்ள முசுனூறு என்னுமிடத்தைச் சார்ந்தவராவர். இந்து தர்மத்தைக் காப்பாற்றவும், இந்து கடவுள்களை மக்கள் மீண்டும் வழிபடுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கும், பிராமணர்களையும் பசுக்களையும் பாதுகாப்பதற்கும் முஸ்லிம் களுக்கு எதிராகக் கலகம் செய்தார். அத்தங்கி, கொண்டவீடு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட ரெட்டி அரசினுடைய தலைவரான பொரலயவேமா என்பவரும், எருவாவில் ஆட்சி செலுத்தி வந்த தெலுங்கு சோடா அரசரான பக்தி ராஜாவும் அவருக்கு ஆதரவளித்தார்கள். இந்த வகையாகத் தக்காணத்தில் இருந்த இந்து தலைவர்கள் யாவரும் ஒன்றுகூடி முஸ்லிம்களின் ஆதிக்கத்தை எதிர்க்கத் தொடங்கியது இப் போராட்டத்தின்

சிறப்பாகும். தலைவர்கள் மட்டுமன்றி, மக்கள் பலரும் அவ் வியக்கத்தில் கலந்து கொண்டனர். ஆகவே, முஸ்லிம்கள் தொடர்ந்து பல போர்களில் தோற்கடிக்கப்பட்டனர். கடற்கரை யோரத்திலுள்ள ஆந்திர மாவட்டங்களிலிருந்து முஸ்லிம் படைகள் துரத்தியடிக்கப்பட்டன. அதன்பிறகு, பொரலய நாயகா, கிழக்குக் கோதாவரி மாவட்டத்திலுள்ள ஏகபல்லி என்னுமிடத்தில் தமது சுதந்திர அரசை நிறுவினர்.

பொரலய நாயக்காவிற்குப்பின், அவருடைய சகோதரன் மகன், காபய நாயகா அல்லது கனய நாயகா அல்லது கிருஷ்ண நாயகா அரசுரிமையைப் பெற்றார். அவர் அரசியல் அறிவு மிக்கவர். எனவே, அரசியல் நிகழ்ச்சிகளைப்பற்றி நன்கு அறிந்து கொண்டிருந்தார். மாபாரில் சுல்தானுக்கு எதிராகத் தோன்றிய கலகம் வெற்றியடைந்துவிட்ட செய்தியைக் கொண்டு சுல்தானுடைய பலவீனத்தையும் காலத்தின் போக்கையும் புரிந்து கொண்டார். எனவே, சிறிதும் காலம் தாழ்த்தவில்லை. 75 தலைவர்களைக் கொண்ட ஒரு கூட்டணிக்கு ஏற்கனவே அவர் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார். முஸ்லிம்களை எதிர்க்க அதுமட்டும் போதாதென உணர்ந்து, தென்னிந்தியாவில் இருந்த இந்து அரசர்களையும் தம்முடன் சேர்த்துக்கொண்டு ஒரு கூட்டணியைத் தோற்றுவிக்க முற்பட்டார். அதற்காக இந்து அரசர்களைச் சந்திக்கப் புறப்பட்டார். முதலில் அவர் மூன்றும் வீர பல்லாளரைச் சந்தித்தார். இந்துக்களின் மதத்தையும், அரசியல் சுதந்திரத்தையும் காப்பாற்றுவதற்காக மேற்கொள்ளப் படவிருந்த புனிதப் போரில் கலந்து கொள்ளத் தமது ஒப்புதலை அவர் தெரிவித்தார். காபயாவிற்குத் துணையாக ஒரு படையை அனுப்ப ஒப்புக் கொண்டார். தம் நாட்டின் வடவெல்லையில் படைகளை நிறுத்தி, அவற்றைப் பலப்படுத்தவும் ஒப்புக் கொண்டார். அதன்பிறகு, காபய நாயகா, திலிங் (Tiling) என்னும் இடத்தின்மீது படையெடுத்துச் சென்றார். அங்குள்ள இந்துக்களைக் கலகம் செய்யும்படியாகத் தூண்டிவிட்டார். மலிக் மக்பூல் இவ் வெதிர்ப்புகளைச் சமாளிக்க இயலாது வாரங்கலை விட்டு ஓடினர். அதன் விளைவாக வாரங்கல் விடுதலை பெற்றது. அதன் பின்னர், காபய நாயகாவும் மூன்றும் பல்லாளாவும் மாபாரின் வட மாவட்டங்களைத் தாக்கனர்கள். தொண்டை மண்டலத்திலிருந்து முஸ்லிம்களை விரட்டி அடித்தார்கள். அதன் பின்னர், தொண்டை மண்டலத்தை வென்று மண் கொண்டான் சாம்புவராயா என்பவரைக் காஞ்சியில் இருந்து அதனை ஆண்டு வர ஏற்பாடு செய்தனர்.

இதற்கிடையில் கிருஷ்ணா நதிக்குத் தெற்கேயுள்ள பகுதிகளிலும் சுதந்திரப் போராட்டம் தொடங்கப்பட்டது. சாளுக்கிய சோமதேவா அதற்குத் தலைமை தாங்கினார். பொரலயவேமாவும் ஏனையோரும் அவருக்கு உதவி அளித்தனர். பல போர்களில் வெற்றி வாகை சூடிப் பல கோட்டைகளை அவர் கைப்பற்றினார். அப்போது கம்பிலியின் ஆளுநராக இருந்த மலிக் முகமது, அவரை அடக்க இயலவில்லை. கம்பிலி மக்களின் கலகத்தைப் பற்றி நூனிஸ், தமது குறிப்புகளில் எழுதிவைத்துள்ளார். 'கம்பிலி மக்கள், வரி செலுத்துவதைத் தவிர்த்துவிட்டனர். அதுமட்டுமன்றி, மலிக் முகமதுவின் தலைமையிடத்தை முற்றுகையிட்டு, அவருக்கு உணவுப் பொருட்கள் கிடைக்காதவாறு செய்துவிட்டார்கள்' என்று அவர் கூறியுள்ளார்.

தென்னிந்தியாவில் ஏற்பட்டிருந்த நிலைமையைச் சுல்தான் விரைவில் அறியலானார். நிலைமையை எதிர்கொள்ளுவதற்குச் சுல்தான் ஒரு புதிய முறையைக் கண்டுபிடிக்கலானார். இதற்கு முன்பு கம்பிலியிலிருந்து கைப்பற்றிச் செல்லப்பட்ட அதிகாரிகளுள் இருவரைக் கம்பிலிக்கு ஆளுநராகவும், உதவி ஆளுநராகவும் அனுப்பிவைத்து, அவர்களின் உதவியால் கலகத்தை அடக்கத் திட்டமிட்டார். எனவே ஹரிஹரர், புக்கர் என்ற இரு சகோதரர்களை இப் புதிய திட்டத்திற்குப் பயன்படுத்தினார். அவர்களையும் மூன்றும் வீர பல்லாளரும், சோமேஸ்வராவும் எதிர்த்தனர். அதன் விளைவாக அவ்விரு சகோதரர்களும் காட்டுக்குள் ஓட வேண்டியதாயிற்று. அங்கு வித்யாரண்யர் என்ற மாமுனிவரின் அறிவுரைக்கேற்ப அவ் விருவரும் ஆனெகுண்டியில் தங்களுடைய இருப்பிடத்தை அமைத்துக் கொண்டனர். அங்கிருந்து கொண்டு அவர்களுக்கு ஏற்பட்ட எதிர்ப்பைச் சமாளித்து வந்தனர். ஹரிஹராவும், புக்கரும் கம்பிலியைச் சேர்ந்தவர்கள். கம்பிலி, சுல்தானுடைய ஆட்சியின் கீழ் வந்தபோது அவர்கள் டில்லிக்குக் கொண்டு செல்லப் பட்டனர். அங்கு அவர்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவும்படி வற்புறுத்தப்பட்டனர். டில்லியிலிருந்து கம்பிலிக்கு இப்போது சுல்தானுடைய ஆளுநராகவும் உதவி ஆளுநராகவும் வந்திருந்தனர். வேதாரண்யாவைச் சந்திக்க அவர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டபோது அவர்கள் இஸ்லாம் மதத்தைக் கைவிட்டு விட்டு மீண்டும் இந்து மதத்தில் சேர்ந்துவிட்டனர். அவர்களைச் சுற்றிலும் எழுந்திருந்த சுதந்திரப் போராட்டத்தில் அவர்களும் கலந்துகொள்ள முடிவு செய்தனர். அதுமட்டுமன்றி அவ் வியக்கத்திற்குத் தலைமை தாங்கவும் தீர்மானித்தார்கள். இதுவே விஜயநகரப் பேரரசு தோன்றுவதற்குக்

காரணமாகும். அந்தந்த ஊர்களைச் சார்ந்தவர்களைக் கொண்டு அந்தந்த ஊர்களில் தோன்றிய கலகங்களை எளிதாக அடக்கிவிட இயலும் என்று மனப்பால் குடித்துக் கொண்டிருந்த முகமது பின் துக்ளக் ஏமாற்றமடைந்துவிட்டார். கி. பி. 1338ஆம் ஆண்டுக்குள் தக்காணத்தின் பெரும் பகுதியை அங்கு ஏற்பட்ட கலகங்களின் காரணமாக இழந்து விட்டார்.

ஹன்சி, சிர்சா ஆகியவற்றின் ஆளுநரான சையத் இப்ராஹீம் என்பவரும் கலகம் செய்தார். அவருடைய ஆட்சிப் பகுதிகளின் வழியாகச் சென்ற அரசாங்கப் பொருட்களைக் கொள்ளையடித் தார். இறுதியில் அவர் பிடிபட்டுச் சுல்தானுடைய ஆணையின் பேரில் கொலையுண்டார்.

கியாஸ்உத்தீன் பகதூருடைய கலகத்தை அடக்கிய பிறகு, முகமது பின் துக்ளக், தாதர்கானைச் சோனர் கோயானுக்கு ஆளுந ராகவும், மலிக் பைதாரை லக்னோதிக்கு ஆளுநராகவும் நியமித் தார். தாதர்கான் இறந்தபின்னர், மலிக் பைதாரைக் கொன்று விட்டு, பக்ருத்தீன் என்பவர் வங்காளத்தில் கலகம் செய்தார். அதன் விளைவாகச் சோனர் கோயானையும், லக்னோதியையும் டில்லி அரசு இழந்துவிட்டது. அவற்றை மீண்டும் தமது ஆட்சியின் கீழ்க் கொண்டுவர சுல்தான் மேற்கொண்ட முயற்சி வீணாயிற்று.

சுனமிலும், சமானாவிலும் இந்துக்கள் கலகம் செய்தனர். நிலவரியை விவசாயிகள் செலுத்த மறுத்தனர். அதுவே கலகத் திற்கு முக்கியக் காரணமாகும். முகமது பின் துக்ளக், தாமே நேரில் சென்று கலகத்தை அடக்கினார். கலகத்தின் தலைவர்கள் டில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அவர்களுள் பலர், இஸ்லாமிய மதத்தைத் தழுவினார்கள் என்று பரனி கூறுகிறார். இக் கலகம் தோன்றுவதற்குச் சில சையத்துகளும் முஸ்லிம்களும் காரணம் என்றும், ஆகவே அவர்களைச் சுல்தான் கொன்று விட்டார் என்றும், அதன் பின்னர், இந்துக்களுக்குச் சில சலுகை களைச் சுல்தான் கொடுத்தார் என்றும் பதோனி கூறுகிறார். இக் கலகத்தை இந்துக்கள் தொடங்கிய கலகமாகவே கொள்ள வேண்டும் என்பது தற்கால வரலாற்றாசிரியர்களின் கருத் தாகும்[1].

1338-ல் காராவில் நிஜாம் மாயீன் என்பவர், கலகம் செய் தார். பல இலட்சம் டங்காக்களை டில்லி அரசுக்குச் செலுத்துவ தாகக் கூறி, காராவில் வரி வசூலிக்கும் உரிமையைப் பெற்றார். ஆனால், அதில் பத்தில் ஒரு பங்குப் பணத்தைக்கூட அவர்

1 A. M. Husani, op. cit., p. 165.

அதுவரை செலுத்தவில்லை. அதற்கான தண்டனையிலிருந்து தப்புவதற்காக அவர் கலகம் செய்தார். சுல்தான் அலாவுத்தீன் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டு, தம்மைச் சுதந்திரம் பெற்ற அரசராக அறிவித்துக்கொண்டார். அப்போது அவுத்தின் ஆளுநராக இருந்த ஆயின் உல்முல்க்கும், அவருடைய சகோதரர்களும் கலகக்காரர்களை அடக்கினார்கள். மாயினுடைய தோலை உரித்து அதனுள் வைக்கோலை நிரப்பி, அதனை டில்லிக்கு அனுப்பி வைத்தார்கள்.

1338—9-ல் தாஜ் உல் நஸ்ரத்கான், பீடாரில் கலகம் செய்தார். ஒரு கோடி டங்காக்களைக் கொடுப்பதாக அவர் வாக்குறுதி அளித்தமையால், அவருக்குப் பீடார் மானியமாக வழங்கப்பட்டது. அப் பணத்தை அவரால் கட்டமுடியவில்லை. விவசாயம் வளர்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. ஆகவே, அவரும் தண்டனைக்குப் பயந்து கலகம் செய்தார். குத்லூகான் அக் கலகத்தை அடக்கி அவரைச் சிறை பிடித்தார்.

அலி ஆதில் ஷா நாது என்பவர், குல்பர்காவில், 1339ஆம் ஆண்டில் கலகம் செய்தார். அலி ஆதில் ஷா, அலாவுத்தீன் கில்ஜியினுடைய படைத்தலைவரான ஜபர்கானுடைய சகோதரன் மகனாவார். குத்லூகானின்கீழ்ப் பணியாற்றி வந்த சத அமீர்களுள் அவர் ஒருவர். குல்பர்காவில் வரி வசூலிக்கும் உரிமை அவருக்களிக்கப்பட்டிருந்தது. அந்தப் பணியை முன்னிட்டு அவர் குல்பர்க்காவிற்குச் சென்று, அங்கிருந்த இந்து முக்தாவான பீரான் (Bhiran) என்பவரைக் கொன்று, அங்குத் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினார். எனவே, குத்லூகான் அவருக்கு எதிராகப் படை நடத்திச் சென்று அவரைத் தோற்கடித்தார். அதன் பின்னர், அவரைச் சிறைப்படுத்தி டில்லிக்கு அனுப்பி வைத்தார். சுல்தான் அவரை நாடுகடத்திவிட்டார். சிலநாள் கழித்துச் சுல்தானுடைய அனுமதியைப் பெறாமல் அவர் திரும்பி வந்தார். அதற்காக அவர் மரண தண்டனை அடைய நேர்ந்தது.

அடுத்த முக்கியமான கலகம், அவுத்தின் ஆளுநரான ஆயின் உல் முல்க்கினுடையதாகும். ஆயின் உல் முல்க் சுல்தானுடைய நெருங்கிய நண்பர்களுள் ஒருவர். தோவாப் பகுதியில் பஞ்சம் ஏற்பட்டபோது அவர், அவுத், ஜப்ராபாத் ஆகியவற்றின் ஆளுநராக நியமனம் பெற்றார். அவுத்தில் திறமையான ஆட்சியை ஏற்படுத்திச் சுல்தானுடைய நன்மதிப்பைப் பெற்றுவிட்டார்.

மேலும், சமயம் நேர்ந்தபோதெல்லாம் சுல்தானுக்கு வேண்டிய உதவியைச் செய்துவந்தார். காராவில் நிஜாம் மாயீன் கலகம் செய்தபோது, தாமே அதனை அடக்கினார். சுல்தான் பஞ்ச நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஒவ்வொரு நாளும் 50,000 மணங்கு கோதுமையும் அரிசியும் அவர் சுல்தானுடைய பாசறைக்கு அனுப்பிவைத்தார். ஆயின் உல் முல்க்கின் செல்வாக்குப் பெருகப் பெருக, சுல்தானுக்கு அவர்மீது சந்தேகம் ஏற்பட்டது. ஆயின் உல் முல்க்கின் செய்கைகளுள் சில, அவருடைய சந்தேகத்தை மேலும் வளர்த்துவிட்டன. 'பஞ்சகாலத்தில் எவரும் தங்கள் இருப்பிடத்தை விட்டுச் செல்லக்கூடாது' என்று சுல்தான் கட்டளையிட்டிருந்தும் பலர் அவுத்திக்குச் சென்றனர். இதனைத் தடுக்க ஆயின் உல் முல்க் யாதொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. அரசாங்கப் பணத்தைக் கையாடிவிட்டு டில்லியிலிருந்து ஓடியவர்களுக்கு அவர் புகலிடம் அளித்தார். ஆகவே, அவரைத் தௌலதாபாத்திற்கு மாற்றிவிடச் சுல்தான் முடிவு செய்தார்.

ஆயின் உல் முல்க்கினுடைய செல்வாக்கினைக் குறைக்கவே சுல்தான் அந்த முடிவினை மேற்கொண்டார் என்று ஆயின் உல் முல்க்கைச் சுற்றியிருந்தவர்கள் கூறினார்கள். அதனை நம்பி ஆயின் உல் முல்க், சுல்தானுடைய கட்டளையை நிறைவேற்றாதிருந்தார். அதை அறிந்ததும் தவறான பாதையில் அழைத்துச் செல்லுகின்ற ஆதரவாளர்களை ஆயின் உல் முல்க் போற்றி வருவது சரியன்று என்று சுல்தான் ஒரு செய்தியை ஆயின் உல் முல்க்கிற்கு அனுப்பிவைத்தார். அச் செய்தி, ஆயின் உல் முல்க்கினுடைய சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தியது. ஆகவே, தம் சகோதரர்களுடன் தப்பியோட முயற்சித்தார். ஆயின் உல் முல்க்குடன் வாழ்ந்துவந்த அடிமை ஒருவரின் வாயிலாக இச் செய்தியைச் சுல்தான் அறிந்துகொண்டார். சுல்தான் டில்லிக்குச் சென்று போதிய படையைத் திரட்டிக்கொண்டு திரும்பிவந்து கலகக்காரர்களுடன் போர் செய்யத் திட்டமிட்டார். ஆனால், அவருடன் இருந்த அந்நிய அமீர்கள் உடனடியாகக் கலகக்காரர்களைத் தண்டிப்பதே உசிதமான செயல் என்று சுல்தானுக்கு அறிவுரை கூறினார்கள். அந்நிய அமீர்களுக்கு ஆயின் உல் முல்க்கைக் கண்டால் சிறிதும் பிடிக்காது. ஏனெனில், அவர் இந்திய அமீர்களின் தலைவராக விளங்கினார். அந்நிய அமீர்களின் அறிவுரையை ஏற்றுச் சுல்தான், தோவாப்பிலிருந்து கொண்டே அக்கம் பக்கத்து நகரங்களில் இருந்த படைகளைத் தருவிக்கலானார். பின்னர், கன்னோசிக்குச் சென்று, அங்குத் தமது படைகளை ஆயத்தமாக வைத்துக்கொண்டார். ஆயின் உல் முல்க்கும்

அவருடைய சகோதரர்களும் சுல்தானுடைய பாசறையைத் தாக்க முற்பட்டனர். அப்போது தவறுதலாக, வசீருடைய பாசறையைத் தாக்கிவிட்டனர். வசீருடைய படையில் அந்நிய நாட்டு அமீர்களும் வீரர்களும் அதிகமாக இருந்தனர். அவர்கள் வீராவேசத்துடன் போரிட்டு ஆயின் உல் முல்க்கைத் தோற்கடித்தனர். ஆயின் உல் முல்க்கினுடைய முக்கிய ஆதரவாளர்களுள் ஒருவர் அவரைக் காட்டிக்கொடுத்து விட்டமையால், அவர் தப்பியோட இயலாது பகைவரிடம் சிக்கிக்கொண்டார். அவருடைய சகோதரர்கள், ஆற்றைக் கடக்கும்போதோ அல்லது போரிலேயோ இறந்திருக்கக்கூடும். ஆயின் உல் முல்க் எருதின் மீது ஏற்றப்பட்டு ஊர்வலமாக ஆடையின்றி அழைத்துச் செல்லப்பட்டார். வழிநெடுகக் கூடியிருந்த அமீர்களும், மலிக்குகளும், அவருடைய பிள்ளைகளும் அவர்மீது துப்பினார்கள். பலவாறாக அவரைப் பார்த்து ஏளனம் செய்தார்கள். அவருடைய ஆதரவாளர்கள் சிலரை யானைகளைக் கொண்டு மிதிக்கச் செய்து பின்னர், அவர்களுடைய சதைகளை எடுத்து ஆயின் உல் முல்க்கின் மீது வீசி எறிந்தனர். சில நாட்கள் கழித்து ஆயின் உல் முல்க்கைச் சுல்தான் மன்னித்து அவரைத் தோட்டத்தின் மேற்பார்வையாளராக நியமித்தார். அவருக்குக் கௌரவ ஆடையையும், குதிரையையும் அளித்தார். அரசாங்கக் கிடங்குகளிலிருந்து அவருக்கு உணவுப் பொருட்களை வழங்கவும் ஏற்பாடு செய்தார். ஏனெனில், சுல்தான் அவருடைய சேவையை இழக்க விரும்பவில்லை. ஆயின் உல் முல்க்கை ஒரு விலை மதிக்கமுடியாத மணியாகக் கருதினார். அவரை மீண்டும் பதவியில் அமர்த்துவதால், தமக்கு எதிர்ப்பு ஏற்படக்கூடும் என்று சுல்தான் உணர்ந்தபோதிலும் அவரை இழக்க விரும்பவில்லை. எனவே, தம்முடைய அரசவையினரை ஒரு நாள் கூட்டி, விலையுயர்ந்த மணியொன்று சேற்றில் விழுந்து விட்டால் என்ன பண்ணுவீர்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள், 'அதைப் பொறுக்கி எடுத்துக் கொள்வோம்' என்று பதில் அளித்தார்கள். அதைக் கேட்டதும் ஆயின் உல் முல்க் ஒரு மணி; அவரைச் சூழ இருந்தவர்கள் சேற்றுக்குச் சமமானவர்கள். அவரை அவர்களிடமிருந்து பிரித்துவிட்டமையால், அவரைத் தம்முடனே வைத்துக்கொள்வதென்று முடிவு செய்துவிட்டதாகச் சுல்தான் அவர்களிடம் கூறினார்[1].

கி. பி. 1341ஆம் ஆண்டில் மூல்தானின் ஆளுநரான பஹ்ஜாத் என்பவரைக் கொன்றுவிட்டு, ஷாஹூ ஆப்கன் மூல்தானின் ஆட்சியாளரானார். ஆகவே, அவரை ஒடுக்குவதற்கு முகமது பின் துக்ளக் டில்லியை விட்டுப் புறப்பட்டார். போகும்

1 Habib, Tarikh-i-Firusz Shai, p. 408.

வழியில் சுல்தானுடைய தாயார் இறந்து விட்ட செய்தி சுல்தானுடைய காதுக்கு எட்டியது. அதையறிந்தும் அவர் போர் ஏற்பாட்டினைக் கைவிடவில்லை. தீபால்பூரை அடைந்த போது ஷாஹூ ஆப்கன், மூல்தானை விட்டு ஓடிவிட்டார் என்ற செய்தியைச் சுல்தான் அறிந்தார். அதையடுத்துத் தம் நாட்டி லுள்ள ஆப்கானியர்கள் அனைவரையும் கைது செய்யும்படி உத்தரவிட்டார்.

முகமது பின் துக்ளக்கின் இறுதிக் காலத்தில் சத அமீர்களின் கலகங்களை அடக்குவதற்கே அவர் தம் காலத்தைச் செலவிட வேண்டியதாயிற்று. மங்கோலியர்களும் துருக்கியர்களும் தங்க ளுடைய படைகளைப் பதின்மடங்கான முறையின் (decimal system) அடிப்படையில் பிரித்திருந்தனர். அவ்வாறு பிரிக்கப்பட்ட பகுதி களுக்குத் தலைவர்களாக விளங்கியவர்களுள் சிலரைச் சத அமீர்கள் என்று அழைத்தனர். தொடக்கத்தில் சத அமீர்கள் இராணுவ அதிகாரிகளாக விளங்கினார்கள் என்பது புலனாகும். அந்த முறை இந்தியாவில் பயன்படுத்தப்பட்டபோது, இராணுவப் பணி களுடன் சிவில் பணிகளும் அவர்களுக்கு அளிக்கப்பட்டன. சத அமீர்களுடைய பொறுப்பின்கீழ் நூறு கிராமங்கள் ஒப்படைக்கப் பட்டிருந்தன. அக் கிராமங்களில் வரிவசூலிப்பது அவர்களுடைய பணிகளுள் ஒன்றாகும். அதுமட்டுமன்றி, அவர்கள் ஒவ்வொரு வரும் நூறு போர் வீரர்களுக்குத் தலைவர்களாகவும் இருந்தனர். சத அமீர்களுள் பெரும்பாலானவர்கள் சுயநலக்காரர்களாகவும் கலகம் விளைவிப்பவர்களாகவும் இருந்தனர். பழிபாவத்திற்கு அவர்கள் அஞ்சுவதில்லை. பிறரைக் கலகம் செய்யும்படி தூண்டு வதில் அவர்களுக்கு இணையாக எவரும் இலர். அவர்கள் அந்நிய முஸ்லிம்களாக இருந்தனர். இந்த வகையான சத அமீர்களை அடக்குவதற்கு முகமது பின் துக்ளக், புதிய திட்டம் ஒன்றைக் கொண்டு வந்தார். அதன்படி, தக்காணம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. மலிக் சர்தாவத்தார், மலிக் முகிலிஸ் உல் முல்க், யூசுப் புக்ரா, அஸீஸ் கம்மர் ஆகியோர் அவற்றினுக்குத் தலைவர் களாக நியமிக்கப்பட்டனர். அவர்கள் யாவரும் தௌலதா பாத்தில் அமர்த்தப்படவிருந்த வசீருக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்தார். இமாத் உல் முல்க் சர்தெஸ் வசீராக நியமிக்கப்பட்டார். அவர் உடனே அங்குச் செல்ல இயலாமையினால், குத்லூகானின் சகோதரரான அலிம் உல் முல்க்கைச் சுல்தான் அனுப்பி வைத்தார். அவருக்கு உதவியாக, தாரா (Dhara) என்பவரை உதவி வசீராகச் சுல்தான் நியமித் தார். இத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கு முன்பாகவே தக்காணத்திலும் குஜராத்திலும் சத அமீர்கள்

சுல்தானுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். அதற்கான காரணங்களை முதலில் ஆராய்ந்து அறிவது நலமாகும்.

தௌலதாபாத்தின் ஆளுநரான குத்லூகானை அங்கிருந்து சுல்தான் திருப்பி அழைத்துக் கொண்டார். அவருடைய திறமையைப்பற்றி வரலாற்றுசிரியர்கள் மாறுபட்ட கருத்தினைத் தெரிவித்துள்ளார்கள். சிலர், அவருடைய சேவைகளைப் பாராட்டியுள்ளனர். ஆனால், தக்காணத்தில் ஏற்பட்டிருந்த பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு வேண்டிய திறமை அவருக்கு இல்லை என்றும், அதனால், தக்காணத்தில் அரசாங்க வருவாய் குறைந்துவிட்டதென்றும் பரனி கூறியுள்ளார். அதனால், அவரைத் திருப்பி அழைத்துக் கொண்டார் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். சுல்தானுடைய கோபத்திலிருந்து மக்களைக் காப்பாற்றுபவர் என்று பெயர் குத்லூகானுக்கு ஏற்பட்டிருந்தது. அத்தகைய ஓர் அதிகாரியைச் சுல்தான் திருப்பி அழைத்துக் கொண்டபோது, அவ்வப்போது சுல்தானுடைய கோபத்திற்கு இலக்காகி வந்த சத அமீர்கள் அதிருப்தி அடைந்ததில் வியப்பேதுமில்லை.

சுல்தானுடைய புதிய திட்டத்தின்படி அஸீஸ் கம்மார் என்பவர், மாளவத்தின் ஆளுநர் பொறுப்பை ஏற்க டில்லியிலிருந்து புறப்பட்டார். கீழ்ச்சாதியில் பிறந்த அஸீஸ் கம்மார், பெருமையுடனும் வலிமையுடனும் விளங்க வேண்டும் என்பதற்காக அவருக்கு ஏராளமான பணத்தைக் கொடுத்தார். அஸீஸ் கம்மார், மாளவத்திற்குச் செல்லும்போது பின்வரும் முறையில் அவருக்கு அறிவுரை வழங்கினார்.

'நாட்டின் எல்லாத் திசைகளிலும் கலகங்கள் தோன்றுவதை நீ நன்றாகப் பார்க்கலாம். கலகத்தில் ஈடுபடுபவர்கள் தாமாகக் கலகம் செய்வதில்லை. அவர்கள் அனைவரும் சத அமீர்களின் தூண்டுதலாலேயே கலகம் செய்கின்றனர். என்று நான் கேள்விப்படுகிறேன். சத அமீர்கள், கொள்ளைப் பொருளில் பங்கு கொள்வதற்காகக் கலகக்காரர்களை ஆதரிக்கின்றனர். ஆகவே, தாரில் (Dhar) சத அமீர்களுள் யாரேனும் ஒரு குறும்புக்காரனைப் பார்க்க நேரின், அவனை உன்னால் முடிந்த அளவு ஒழித்துக் கட்டு. அதற்காக எந்த வழியை வேண்டுமானாலும் பின்பற்றலாம்' என்று கூறினார். எனவே, அஸீஸ் கம்மார், மாளவம் வந்ததும் ஒரு பயங்கர ஆட்சியைத் தொடங்கினார். 89 சத அமீர்களை முதலில் கொல்லுவித்தார். யாரேனும் ஒரு சத அமீரைக் கண்டு விட்டால், அவர்மீது உடனே அஸீஸ் கம்மார்

சந்தேகம் கொண்டார். அதன் விளைவாக, தௌலதாபாத் தொடங்கி குஜராத் வரையில் உள்ள பகுதிகளில் வாழ்ந்திருந்த மக்கள் பீதியுற்றனர். அதையறிந்த சுல்தான் மட்டிலா மகிழ்ச்சி யடைந்து, ஒரு சிறப்பு ஆடையை அஸீஸ் கம்மருக்கு அனுப்பி வைத்து அவரைக் கௌரவித்தார். அதுமட்டுமன்றி, முக்கிய அதிகாரிகளையும் பிரபுக்களையும் அழைத்து அவர்களையும் அவரைப் பாராட்டிப் பரிசளிக்க ஏற்பாடு செய்தார். அவையாவும் சத அமீர்களுக்கு ஓர் உண்மையை விளக்கின. அதாவது, அவர்களைச் சுல்தான் எவ்வாறேனும் ஒழித்துவிட முற்பட்டுள்ளார் என்பதே யாகும். ஆகவே, இதுகாறும் மறைமுகமாக சுல்தானுக்கு எதிராக நடந்து வந்த சத அமீர்கள் வெளிப்படையாகவும் கூட்டாகவும் கிளர்ச்சி செய்வதென முடிவு கட்டினார்கள்.

கி. பி. 1345ஆம் ஆண்டில் குஜராத்திலுள்ள சத அமீர்கள் புரட்சியில் ஈடுபட்டனர். முக்பில் என்பவர், அப்போது குஜராத்தின் உதவி வசீராகப் பணியாற்றி வந்தார். காஜி ஜலாலையும் ஆப்கானியர்கள் சிலரையும் கைது செய்யும்படி சுல்தான் அவருக்குக் கட்டளையிட்டார். இந்தச் செய்தி ஆப்கானியர்கள் காதுக்கு எட்டியது. முக்பிலைக் கொல்ல வேண்டும் என்று எண்ணியிருந்த 300 ஆப்கானியர்கள் உடனே கலகம் செய்தனர். காம்பேவைத் தாக்கி, அரசாங்கக் கருவூலத்தைக் காலிசெய்து விட்டனர் என்று இபின்-இ-பதூதா கூறுகிறார். சுல்தானுடைய கட்டளைக்கிணங்க பலரை முக்பில் கொன்றுவிட்டமையால், காஜி ஜலால் போன்றவர்கள் ஓரிடத்தில் கூடிச் சுல்தானுக்கு எதிராகக் கலகம் செய்வதென முடிவு கட்டினார்கள் என்று இசாமி கூறியுள்ளார். குதிரைகளையும் பணத்தையும் எடுத்துக்கொண்டு முக்பில் டில்லிக்குப் போய்க் கொண்டிருந்தபோது பரோடா, தபோயி ஆகிய இடங்களிலிருந்த சத அமீர்கள் அவரை இடைமறித்து, அவற்றைக் கொள்ளையடித்தார்கள் என்றும், கொள்ளையடித்த பொருளைக் கொண்டு பெரிய ஒரு கலகம் செய்ய சத அமீர்கள் திட்டமிட்டனர் என்றும் பரனி கூறுகிறார். அவர்களுடைய வீரச் செயல்பற்றிய செய்தி குஜராத் முழுவதிலும் காட்டுத் தீயைப்போல் பரவியது.

கலகக்காரர்களின் நான்கு தலைவர்கள்—ஜுரன்பல், காஜி ஜலால், ஜலால், இபின்-இ-லாலா ஆகியோர் ஜல்லு-காம்பேக்குச் சென்றனர். அங்குச் சிறையிலடைக்கப்பட்டிருந்த தகியை (Taghi) கலகக்காரர்கள் விடுவித்தனர். அவரை ஐந்தாவது தலைவராகவும் ஏற்றுக்கொண்டனர். ஆனால் தகி, அவர்களுடைய பிடியிலிருந்து தப்பி, அன்ஹில்வாராவை அடைந்து, முக்பில்

பக்கத்தில் சேர்ந்துகொண்டார். மேற்கண்ட நிகழ்ச்சிகளை அஸீஸ் கம்மர் அறிந்ததும், சுல்தானுடைய கட்டளைகளுக்காகக் காத்திராமல் முக்பிலுக்கு உதவிசெய்ய மாளவத்தைவிட்டு நீங்கினார். கலகக்காரர்களுக்கும் முக்பிலுக்கும் இடையே ஏற்பட்ட போரில் கலகக்காரர்கள் வெற்றிபெற்றனர். 6,000 பேர்களைக் கொண்ட பேரரசுப் படைகள் 700 குதிரை வீரர்களை மட்டுமே கொண்ட கலகக்காரர்களிடம் தோல்வியுற்றது வியப்பாக இருக்கிறது. போரில் அஸீஸ் கம்மர் கொல்லப் பட்டார். பேரரசுப் படைகளிடமிருந்த பெரும் பொருளைக் கைப்பற்றி, அதனைத் தங்களிடையே கலகக்காரர்கள் பகிர்ந்து கொண்டனர். கலக்காரர்களின் வெற்றி சுல்தானுடைய எதிர்ப்பாளர்களின் கைகளை ஓங்கச் செய்தது.

'கலகக்காரர்களின் மாபெரும் வெற்றி சுல்தானைத் தட்டி எழுப்பிவிட்டது. அவர் ஒரு பெரும் படையைத் திரட்டிக் கொண்டு குஜராத் நோக்கிப் புறப்பட்டார்' என்று இசாமி கூறுகிறார். ஆனால், கலகம் தொடங்கிய உடனேயே சுல்தான் குஜராத்திற்குப் புறப்பட்டார் என்றும், அவர் சுல்தான்பூரை அடைந்தபோது அஸீஸ் கம்மரின் மறைவைப்பற்றிய செய்தியை அறிந்தார் என்றும் பரனி கூறியுள்ளார்.

முகமது பின் துக்ளக்கின் ஆட்சிக் காலத்தில் பல கலகங்கள் தோன்றின. அக் கலகங்களுக்கும் சத அமீர்களுடைய கலகத் திற்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. சத அமீர்கள் அதிகார வர்க்கத்தின் கீழ்ப்படியில் இருந்தனர். எனவே, அவர்களை அடக்கும் பொறுப்பைச் சுல்தானே ஏற்றுக்கொள்வது அவருடைய பெருமைக்கு இழுக்கை உண்டாக்கிவிடும் என்று சிலர் கருதி னார்கள். அவ்வாறு கருதியவர்களுள் ஒருவரான குத்லுகான், கலகக்காரர்களை அடக்கும் பொறுப்பைத் தம்மிடம் ஒப்படைக்கு மாறு சுல்தானை வேண்டினார். சுல்தான் அதற்கிசைய மறுத்து விட்டுத் தாமே படையுடன் புறப்பட்டுச் சென்றார். அதற்கு முன்பாக ஜெயிக் முயீஸ்உத்தீன் என்பவரைக் குஜராத்தின் ஆளுநராக நியமித்து அவருக்கு மூன்று இலட்சம் டங்காக்களைக் கொடுத்து, அதனை ஒரு படையைத் திரட்டுவதற்குப் பயன் படுத்துமாறு கட்டளையிட்டார்.

கலகக்காரர்களை அடக்குவதற்குச் சுல்தான் கையாண்ட முறையைப்பற்றிச் சமகால வரலாற்றாசிரியர்களான இசாமியும் பரனியும் நமக்குத் தெளிவாக விளக்கியுள்ளனர். குஜராத்திற்கு நேராகச் செல்வதற்குப் பதிலாக, அவர் ஆங்காங்கே சில நாள்கள்

தங்கியிருந்து படைகளைத் திரட்டி அவற்றைப் பல திசைகளில் அனுப்பிவைத்தார். ஏனெனில், கலகக்காரர்கள் ஓர் இடத்தில் தங்களுடைய பலம் முழுவதையும் ஒருமுகப்படுத்துவதற்குப் பதிலாக, அவர்கள் பல இடங்களில் சிதறியிருந்து ஆங்காங்கே சுல்தானுக்கு எதிர்ப்பினைத் தோற்றுவித்து வந்தனர். ஆகவே தான், சுல்தான்பூரில் சில நாள்களும், பின்னர் நாகோரில் சில நாள்களும் தங்கியிருந்தார். நாகோரில் இருந்தபோது அஸாம் மலிக் என்பவரை அவர் புரோச்சுக்கு (Broach) அனுப்பி வைத்தார். அதன் பின்னர், மவுன்ட் அபு (Mt. Abu) என்னு மிடத்திலிருந்து அன்ஹில்வாராவிற்கு ஷெயிக் முயீஸ்உத்தீனை அனுப்பிவைத்தார். புரோச்சிலிருந்து மலிக் முக்பீல் என்ப வரைத் தௌலதாபாத்திற்கு அனுப்பிவைத்தார்.[1] அதை யடுத்துச் சுல்தான், தபோயி, பரோடா ஆகிய இடங்களுக்கு ஒரு முன்னணிப் படையை அனுப்பிவைத்தார். அப்போது அப் படையினருக்கும், கலகக்காரர்களுக்கும் நடைபெற்ற சண்டையில் பல கலகக்காரர்கள் உயிரிழந்தனர். கலகக் காரர்கள் சிலர் தங்கள் குடும்பத்தினருடன் தௌலதாபாத்திற்கு ஓடிவிட்டனர்.

இதற்கிடையில் அஸாம் மலிக், தம் படையுடன் புரோச் சென்றடைந்தார். சுல்தானுடைய படைகள் முழுவதும் புரோச் வந்துவிட்டதாகக் கலகக்காரர்கள் தவறுக எண்ணிவிட்டனர். எனவே, 3 அல்லது 4 மாதங்களாகக் காம்பேயில் அசைக்க முடியாத நிலையில் இருந்த கலகக்காரர்கள் புரோச்சைத் தாக்கிப் பேரரசின் படைகளைத் தோற்கடித்துவிட்டால் முழுமையாக வெற்றி பெற்றுவிடலாம் என்று எண்ணிப் புரோச்சை நோக்கிப் புறப்பட்டு அதனை அடைந்தனர். புரோச் அவர்களுடைய முற்றுகைக்கு உள்ளாயிற்று. புரோச் கோட்டையின் அதிபதியான கமர் (Gamar) என்பவரை எக் காரணத்தை முன்னிட்டும் கோட் டையைவிட்டு வெளியே வரக்கூடாது என்று சுல்தான் உத்தர விட்டிருந்தார். அக் கட்டளைக்கிணங்க கமர், கோட்டையை விட்டு வெளியே வராதிருந்தார். கலகக்காரர்கள் பொறுமையை இழந்தார்கள்; இறுதியில் ஜல்லு ஆப்கான், கோட்டை வாயிலைத் தாக்க முற்பட்டார். அந்த நேரத்தில் ஹெயிக்ஷடா ஹமீத் என்பவர், சுல்தான் அளித்திருந்த கட்டளையைப் பொருட்படுத் தாது, ஜல்லு ஆப்கானுடன் போர்புரிய கோட்டைக்கு வெளியே ஓடிவந்தார். போர் நடந்துகொண்டிருந்த வேளையில் ஜல்லு ஆப்கானுடைய குதிரை கால் இடறி விழுந்தது. சுல்தானுடைய படைகள் அவரைச் சூழ்ந்துகொண்டு அவருடைய தலையைக்

[1] ACHI, p. 546.

கொய்தனர். அதையறிந்ததும் ஏனைய படை வீரர்களும் கோட்டையிலிருந்து வெளியே ஓடிவந்து கலகக்காரர்களுடன் போரிட்டனர். ஜல்லு ஆப்கானுடைய மறைவு ஜுரான்பால், காஜி ஜலால் ஆகியோருக்குப் பயத்தை உண்டாக்கிவிட்டது. எனவே, அவர்கள் பக்லானு அரசரான மன்தேவா (Man Dava) விடம் புகலிடம் நாடினார்கள். மன்தேவா முதலில் அவர்களை அன்புடன் வரவேற்றுப் பின்னர், அவர்கள் வைத்திருந்த பொருள் யாவற்றையும் பறித்துக்கொண்டார். அவர்களைத் துரத்திச் செல்லும் பணியினை முக்பிலுக்கு சுல்தான் அளித்தார். ஏனைய கலகக்காரர்களைச் சுல்தான் நர்மதை நதிக்கரையில் சந்தித்து அவர்களைத் தோற்கடித்தார். பலர் போரில் உயிரிழந்தனர். அவர்களுடைய சொத்துகளை முக்பீல் கைப்பற்றிக் கொண்டார். புரோச்சில் முக்பீல் சிலகாலம் தங்கியிருந்தார். அப்போது புரோச்சிலிருந்த சத அமீர்கள் பலரை அவர் கொன்றார். அவருடைய கத்திக்கு இரையாகாமல் சிலர் தப்பினார்கள். அவ்வாறு தப்பியவர்களுள் சிலர், தௌலதாபாத்திற்கு ஓடினார்கள். மற்றும் சிலர், குஜராத்திற்கு ஓடிவிட்டனர். சில நாள்களில் சுல்தானும் புரோச்சை அடைந்தார். அங்கிருந்த மக்கள் கலகக்காரர்களுக்குப் பேருதவியாக இருந்தனர் என்பதை அவர் அறிந்தபோது அவர்கள்மீது தாங்கமுடியாத வரிச்சுமையை ஏற்றினார்.

அதையடுத்து தௌலதாபாத்தில் இருந்த கலகக்காரர்களைப் பற்றிய தகவல்களை சுல்தான் அறிய முற்பட்டார். அதற்காகப் பலருடைய வெறுப்புக்கு உள்ளாகியிருந்த ஓர் அதிகாரியை தௌலதாபாத்திற்கு அனுப்பிவைத்தார். மற்றொருவரை தாரு (Dhar)க்கு அனுப்பினார். அவர்களுடைய நடவடிக்கை தேவகிரி முஸ்லிம்களிடையே ஒரு பரபரப்பை உண்டாக்கியது. அந்தச் சமயத்தில் சுல்தான், தம் அதிகாரிகளுள் மூவரைத் தௌலதா பாத்திற்கு அனுப்பினார். தேவகிரியில் இருந்த சத அமீர்களுள் முக்கியமானவர்களை 1,500 குதிரை வீரர்களுடைய பாது காப்புடன் புரோச்சுக்கு அனுப்பி வைக்கும்படி அவர்கள் வாயிலாக தேவகிரி ஆளுநருக்கு ஒரு கட்டளையை அனுப்பினார். சத அமீர்களும் புரோச் நோக்கிக் காவலுடன் புறப்பட்டனர். சிறிது தூரம் சென்றபிறகு நூருத்தீன், இஸ்மாயில், மக் ஆப்கன் ஆகியோரின் தலைமையின் கீழ்க் கலகம் செய்தனர். அவர்களுக்குக் காவலாக வந்த படைத்தலைவர்கள் கொல்லப்பட்டனர். அதன் பிறகு, அவர்கள் தேவகிரி வந்தனர். இரண்டு நாள்களாகக் கலகக்காரர்களுக்கும், அலிம் உல் முல்க்கிற்கும் நடைபெற்ற போர் யாருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. மூன்றும்

நாளன்று அலிம் உல் முல்க் சிறையிலடைக்கப்பட்டார். பின்னர், அவர் குற்றவாளியல்லர் என்பதை அவர்கள் உணர்ந்தனர். எனவே, அவர் விடுவிக்கப்பட்டார். ஆயினும், தேவகிரியை ஆளும் பொறுப்பை அவரிடம் ஒப்படைப்பதற்குப் பதிலாக, ஹசன் என்பவரிடம் ஒப்படைக்க முடிவு கட்டினார்கள். ஹசன் அப்போது தேவகிரியில் இல்லாமையால், அவர் வரும்வரை தேவகிரியினை ஆளும் பொறுப்பு இஸ்மாயிலுக்கு அளிக்கப்பட்டது. சுல்தான், 'நாசிர் உத்தீன்' என்ற பட்டத்துடன் தேவகிரியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். நூருத்தீன் வசீராக நியமிக்கப் பட்டார். தேவகிரி கருவூலத்திலிருந்த பொருளைக் கொண்டு படைவீரர்கள் ஒவ்வொருவருக்கும் 15 மாதச் சம்பளம் கொடுக்கப் பட்டது. இவ்வாறாக முதல் முஸ்லிம் அரசு தக்காணத்தில் தோன்றியது.

மேற்கண்ட செய்தியை அறிந்ததும் சுல்தான் தாங்கொணாத துயரத்தை அடைந்தார். மூன்று நாள்கள் அவர் இரவும் பகலும் தூக்கமில்லாமல் அவதியுற்றார். ஒரு பெரிய படையைத் திரட்டிக் கொண்டு கலகக்காரர்களை அடக்க முற்பட்டார். கலகக்காரர் களும் போர் ஏற்பாடுகளைப் பெருமளவில் மேற்கொண்டனர். இந்த முறை சுல்தான் திட்டமிட்டுப் போர்செய்து வந்தமையால், அவரை வெல்லுவது கடினமாயிற்று. கலகக்காரர்கள் முடிவில் தோல்வியுற்றனர். அவர்களுடைய ஆதரவாளர்களுள் பலர் இறந்தனர். இஸ்மாயில் மக் ஆப்கன், தேவகிரியிலிருந்து தாராகருக்கு ஓடிவிட்டார். சுல்தானுடைய படைகள் அவரைச் சூழ்ந்துகொண்டன, ஹசன் கஸ்ரு, மிராஜ் என்னுமிடத்திற்கு ஓடிவிட்டார். அங்கு வேறு கலகக்காரர்கள் சிலர் அவருடன் சேர்ந்துகொண்டனர். மற்றும் ஒருமுறை சுல்தானுடன் போர் புரிய அவர்கள் படையைத் திரட்டலானார்கள். தௌலதா பாத்தில் சுல்தான் சிலகாலம் தங்கியிருந்து அதனுடைய நிருவா கத்தைத் திருத்தியமைத்தார். இதற்கிடையில் குல்பர்க்காவி லிருந்த கலகக்காரர்களையும் அடக்க மலிக் சர்தெஸ் என்பவரைச் சுல்தான் அனுப்பிவைத்தார்.

தௌலதாபாத்தில் சிறிதுகாலம் தங்கிவிட்டுப் பின்னர், சுல்தான் புரோச்சுக்குச் சென்றார். தௌலதாபாத்தின் பாது காப்பை முன்னிட்டு ஒரு பெரிய படையையும் அவர் அங்கு நிறுத்தி வைத்தார். அவர் தௌலதாபாத்தை விட்டுச் சென்ற சில காலத்திற்குள் ஹசன் கஸ்ரு, தௌலதாபாத்தைத் தாக்கி அதனைக் கைப்பற்றிக்கொண்டு சுல்தான் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். இஸ்மாயில் மக் ஆப்கன் அவரைச்

சுல்தானாக ஏற்றுக்கொண்டார். இவ்வாறாக, ஹசன் கஸ்ரு பாமினி அரசைத் தக்காணத்தில் நிறுவினார்.

அடுத்த முக்கியமான கலகம் தகி (Taghi) யினுடைய தலைமை யின்கீழ் நடைபெற்றது. இவர் கியாஸ் உத்தீன் துக்ளக்கினுடைய அடிமைகளுள் ஒருவர். முகமது பின் துக்ளக், அவரை முதலில் அரசவை மேற்பார்வையாளராக நியமித்திருந்தார். பின்னர், அவரை வசீருடைய படை அதிகாரிகளுள் ஒருவராக நியமித்தார். கடமையைச் சரிவர நிறைவேற்றாத காரணத்திற்காக அவர் நாடு கடத்தப்பட்டார். ஜலால் கலகம் செய்தபோது, அக் கலகத்தை அடக்க சுல்தானுக்கு உதவி புரிந்தார். அதற்காகச் சுல்தான் அவரை மன்னித்து மீண்டும் அவருக்கு அரசவை மேற்பார்வை யாளர் பதவியை அளித்தார். தௌலதாபாத்தில் சத ஆமீர்கள் கலகம் செய்தபோது சுல்தான் தக்காணம் செல்லவேண்டியதாக ஆயிற்று. அந்த நேரத்தில் தகி குஜராத்திலுள்ள சத அமீர் களுடன் சேர்ந்துகொண்டு மீண்டும் கலகம் செய்தார். அன்ஹில் வாராவின் ஆளுநரான ஷெயிக் முயீஸ் உத்தீனை அவர் கொன்றார். அதையடுத்து, அவர் புரோச்சை முற்றுகையிட்டார். எனவே, முகமது பின் துக்ளக், மீண்டும் குஜராத் செல்ல நேர்ந்தது. தகியின் கலகத்தை அடக்குவது அவருக்குப் பெரிய காரியமாகத் தோன்றவில்லை. ஏனெனில், தகி மிகப் பலம் பொருந்தியவராக விளங்கவில்லை. மேலும், கர்னல் (Karnal) என்னுமிடத்தை ஆண்டுவந்த தலைவர், தகியை உயிருடன் பிடித்துச் சுல்தானிடம் ஒப்படைக்க முயற்சித்தார். அதை அறிந்து தகி, குஜராத்தை விட்டுத் தட்டா நோக்கி ஓடலானார். குஜராத்தில் சிலகாலம் தங்கியிருந்து, அங்கு அமைதியை எற்படுத்தும் பணியினை சுல்தான் தீவிரமாக மேற்கொண்டார்.

அதன்பின்னர், தகியைப் பின்தொடர்ந்து அவரைக் கைது செய்யவேண்டும் என்று முடிவு செய்தார். புரோச்சிலிருந்து தகி முதலில் காம்பே சென்றார். அங்கிருந்து அவர் அசவால் (Asawal) என்னுமிடத்திற்கு ஓடினார். அவ் விடத்தை நோக்கிச் சுல்தான் வருவதை அறிந்து, பதனுக்குச் (Patan) சென்றார். அப்போது சுல்தான் அவரை முந்திச் சென்று தோற்கடித்தார். ஆயினும், அவருடைய பிடியிலிருந்து தப்பித்துக்கொண்டு அவர் முதலில் பதானுக்கும், பின்னர் கிர்னாருக்கும் ஓடினார். இறுதியில் தட்டாவினை ஆண்டுவந்த சுமாராக்களிடம் சரண் புகுந்தார். முகமது அவரை விடாது பின் தொடர்ந்து கத்தியவார் சென்றார். அங்கு அவர் நோய்வாய்ப்படவே, சில நாள்கள் தங்கியிருந்து, பின்னர் தட்டாவிற்குச் சென்றார். அப்போது அவர் மீண்டும்

நோய்வாய்ப்பட்டுச் சோந்தா (Sonda) என்னுமிடத்தில் 1351ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 20ஆம் தேதி உயிர் நீத்தார். அவரது மறைவைப்பற்றிக் குறிப்பிடும்போது பதோனி பின்வருமாறு எழுதியுள்ளார் : 'இறுதியில் சுல்தான் மக்களிடமிருந்தும் மக்கள் சுல்தானிடமிருந்தும் விடுதலைபெற்றனர்'.

### மதிப்பீடு

முகமது பின் துக்ளக்கினுடைய குண நலன்கள், கொள்கைகள் ஆகியவற்றைப்பற்றி வரலாற்றாசிரியர்களிடையே மாறுபட்ட கருத்துகள் தோன்றியுள்ளன. எல்லாச் சமகால முஸ்லிம் வரலாற்றாசிரியர்களும் பிற்கால முஸ்லிம் வரலாற்றாசிரியர்களும் அவரை 'ரத்த வெறி கொண்ட கொடுங்கோலர்' என்று கூறியுள்ளனர். அக் கருத்தைத் தற்கால வரலாற்றாசிரியர்கள் சிலர் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால், சமீப காலத்தில் வரலாற்றாசிரியர்கள் சிலர், அக் கருத்தை மறுத்து அவர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளிலிருந்து அவரை விடுவிக்கப் பெரு முயற்சி எடுத்துக்கொண்டுள்ளனர், இவ் விரு கருத்துகளையும் ஆராய்ந்து பார்க்குமிடத்து, இவ் விரு சாராரும் மிகைபடுத்திக் கூறியுள்ளனர் என்பது புலனாகிறது. அவரை முற்றிலும் கெட்டவர் என்று கூறுவதும், மிக நல்லவர் என்று கூறுவதும் சரியாகா. ஒருசில பண்பு நலன்கள் நமது கண்டனத் திற்கும், மற்றும் சில குணநலன்கள் நமது பாராட்டிற்கும் உரியனவாகின்றன என்பது தெளிவாக விளங்கும்.

ஒரு சிறந்த அரசருக்குரிய குணநலன்கள் அவரிடம் காணப் பட்டன. கடுமையாக உழைப்பதற்கு அவர் எப்போதுமே அஞ்சியதில்லை. சத அமீர்களையும், தகியையும் அவர் அடக்கு வதற்கு மேற்கொண்ட முயற்சிகள் அதனை நன்கு புலப்படுத்து கின்றன. எப்போதுமே சுறுசுறுப்பாக அவர் பணியாற்றி வந்தார். நாட்டு விவகாரங்களை மேற்பார்வையிடும் பணியினை ஓய்வு ஒழிச்சல் இன்றி மேற்கொண்டு வந்தார்.

அவர் ஒரு சிறந்த படைத்தலைவர். போர் நடவடிக்கைகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளும் மனப்பாங்குடையவர். ஒரு போர் வீரருக்குரிய கம்பீரமான தோற்றத்தை அவர் பெற்றிருந்தார். கட்டான உடலமைப்புடன் அகலமானதும் உறுதியானதுமான கைகளையும் அவர் பெற்றிருந்தார். பிறருடைய கைகளை அவர் தம் கைகளால்பற்றிக் கொள்ளும்போது, மற்றவர்களுடைய கைகள் வெடவெட என ஆடும் என்று கூறப்படுகிறது. எந்த உடையை அவர் அணிந்து கொண்டாலும் அவர் இளமை

மிடுக்குடன் விளங்குவார். உடல் வலிமையுடன் உள்ள உறுதியையும் அவர் கொண்டிருந்தார். எதற்கும் அஞ்சாத நெஞ்சம் படைத்திருந்தார். அவர் தம், வாழ்நாளின் பெரும் பகுதியைப் போரிடுவதிலேயே செலவழித்து வந்தார். முபாரக் கல்ஜியினுடைய ஆட்சிக் காலத்தில் தொடங்கிய அவரது போர் வாழ்க்கை, தட்டா போர் நடவடிக்கையின்போது முடிவுற்றது. அதற்கிடையில் அவர் கணக்கிலடங்காப் போர்களில் கலந்து கொண்டிருந்தார். அவரைப்போல, வேறொரு டில்லி சுல்தான் போர் நடவடிக்கைகளைத் தாமே முன்னின்று நடத்தியதில்லை என்று கூறின் அது தவறாகாது. அவர் காலத்தில் ஏற்பட்ட எண்ணிறந்த கலகங்களைத் தாமே முன்னின்று அடக்கினார்.

முகமது பின் துக்ளக், ஒரு சிறந்த அரசியல் மேதையாகவும் விளங்கினார். அந்நிய நாடுகளுடன் அவர் மேற்கொண்ட அரசியல், கலாச்சாரத் தொடர்புகள் அவருடைய அரசியல் மேன்மையை விளக்குகின்றன. அவர் காலத்தில்தான் டில்லிப் பேரரசின் எல்லை உச்சக் கட்டத்தை எய்தியது. மிகப் பரந்த பேரரசைப் போக்குவரவுச் சாதனங்கள் மிக அதிக அளவில் வளராத காலத்தில் கட்டுப்படுத்தி வருவதென்பது எளிதான காரியமன்று. தமது திறமை முழுவதையும் பயன்படுத்தி, முகமது தம் பேரரசைத் தம் நேரடி மேற்பார்வையின்கீழ் நிருவகித்து வந்தார் என்றால், அஃது அவருடைய அரசியல் திறமையை எடுத்துக்காட்டுகிறது. நிருவாகம் சார்ந்த சில சீர்திருத்தங்கள் தோல்வியுற்றன என்பது உண்மையே. ஆனால், அவற்றின் தோல்விகளுக்குக் காரணங்களை அவரது திட்டங்களில் காண இயலாது என்பதை முன்பே கண்டுள்ளோம். தோல்விகளை அவர் சில நேரங்களில் அடைய நேர்ந்தபோதிலும், அவரிடத்தில் மக்கள் கொண்டிருந்த மரியாதை குறைந்திருந்ததாக நாம் அறியவில்லை. அவரைக் கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எவருக்கும் ஏற்படவில்லை. அவருடைய அதிகாரிகள் அவருக்குத் துரோகம் இழைக்க நினைக்கவில்லை, அவர் இறந்த பிறகு கூட, அவருடைய குடும்பத்தினருக்கு அரசுரிமையை அளித்து முகமதுவினிடம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த பற்றைப் புலப்படுத்தினார்கள்.

நற்குணங்கள் பல அவரிடம் காணப்படுகின்றன. குடிப் பழக்கம் அவருக்கு ஏற்பட்டிருக்கவில்லை. தம்முடைய மக்களும் மதுபானங்களை அருந்தக்கூடாது என்று அவர் கட்டளையிட்டார். பெண்கள் விஷயத்தில் அவர் மிகக் கண்டிப்பாக நடந்து கொண்டார். இராணுவப் பாசறைகளில் பெண்கள் தங்குவதற்கு அவர் அனுமதிக்கவில்லை. ஆயினும், அவர் நாட்டியங்கள்,

பாட்டுக் கச்சேரிகள் ஆகியவற்றைக் கண்டும் கேட்டும் ரசித்து வந்தார்.

முகமது பின் துக்ளக், தாராள மனப்பான்மை உடையவராக இருந்தார். பிரபுக்கள், அறிஞர்கள், சமயத்தலைவர்கள் ஆகியோருக்குத் தாராளமாகப் பொருளுதவி செய்து வந்தார். ஏழை எளியவர்களுடைய துயரத்தைப் போக்கப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஒவ்வொரு நாளும் ஏறக்குறைய 40,000 பிச்சைக்காரர்களுக்கு அவர் அன்னமிட்டு வந்தார். விதவைகளுக்கும், அனாதைகளுக்கும் அவர் விடுதிகள் கட்டினார். நோயாளிகளுக்கு மருத்துவ மனைகளை அமைத்துக் கொடுத்தார். அவருக்கு நேரம் கிடைத்தபோது மருத்துவ மனைகளுக்குச் சென்று நோயாளிகள் பக்கத்தில் அமர்ந்துகொண்டு அவர்களுக்கு ஆறுதல் சொல்லி வருவதுண்டு.

தந்தையைக் கொன்ற மாபாவி என்று பலர் அவரைத் தூற்றுகின்றனர். அஃது உண்மை என ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், அதற்காக அவர் வருத்தமுற்று, அதற்கு ஈடு செய்யும் வகையில் தம் தந்தையின் பெயரைத் தம்முடைய நாணயங்களில் பொறித்து வைத்தார். தாயாரிடத்தில் அவர் மிகுந்த பற்றும், மரியாதையும் கொண்டிருந்தார். பெரியவர்களிடத்தில் அவருக்கு மிக்க மரியாதை உண்டு.

முகமது பின் துக்ளக், ஒரு சிறந்த கல்விமான்; கூரறிவு கொண்டவர்; நினைவாற்றல் மிக்கவர்; எளிதில் புரிந்து கொள்ளும் ஆற்றல் கொண்டவர்; பல கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்; தர்க்கம், தத்துவம், கணக்கியல், வானவியல், அறிவியல் ஆகியவற்றில் அவர் சிறந்து விளங்கினார்; மருத்துவக் கலையிலும் அவர் சிறப்பெய்தி இருந்தார்; பாரசீகக் கவிதைகளை நன்கு அறிந்திருந்தார். எனவே, அவர் கடிதங்களை வரையும் போது பாரசீகக் கவிதைகள் பலவற்றை மேற்கோள் காட்டுவார். அவரே பல கவிதைகளை இயற்றியுள்ளார். மிக அழகாக எழுதும் கலையில் அவர் தேர்ச்சி பெற்றிருந்தார். சொற்போரிலும் அவர் சிறந்து விளங்கினார். அவருடன் விவாதங்களை மேற்கொள்ளுவதற்கு முன், கற்றுணர்ந்த அறிஞர்களும் தக்க முன்னேற்பாடுகள் செய்து கொள்வார்கள் என்று கூறப்படுகிறது.

ஒருதலையற்ற நீதியை வழங்குவதில் அவருக்கு மிக்க ஆர்வம் இருந்தது. பாரபட்சமற்ற நீதி வழங்கியதைப்பற்றிய கதைகள் பல நமக்குக் கிடைத்துள்ளன. ஒருமுறை அவருக்கெதிராக

வழக்கு ஒன்று தொடரப்பட்டது. ஆகவே, சுல்தான் காஜியி னுடைய வழக்கு மன்றத்திற்குச் செல்லும்படியான நிலை ஏற்பட்டது. அப்போது அவர் காலணி ஏதுமின்றி நேராக வழக்கு மன்றத்திற்குச் சென்று காஜிமுன் தலை வணங்கி நின்றார். அவர் அங்குச் செல்வதற்கு முன்பே, தாம் அங்குச் செல்லும்போது காஜி தம் இருப்பிடத்திலிருந்து எழுந்திருக்கக் கூடாது என்று கண்டிப்பான உத்தரவிட்டிருந்தார். தீர்ப்பு, சுல்தானுக்கு எதிராக அளிக்கப்பட்டது. சுல்தான் நஷ்ட ஈட்டுத் தொகை யைச் செலுத்திக் காஜி அளித்த தீர்ப்பிற்கு மதிப்பளித்தார்.

சுல்தானை நற்குணங்களின் பொக்கிஷமாக மட்டும் கருத இயலாது. அவரிடம் சில தீய பண்புகளும் குடிகொண்டு இருந்தன. அவற்றுள் ஒன்று, அளவுமீறிய கொடூரத் தன்மை யாகும். குற்றமற்ற முஸ்லிம்கள் பலரின் உயிரைக் குடித் துள்ளார் என்றும், அவருடைய அரண்மனை ஓரத்தில் எப்போதும் ரத்த ஆறு ஓடிக்கொண்டிருந்தது என்றும் பரனி கூறியுள்ளார். அவரைப்பற்றிக் குறிப்பிடும்போது சில ஆசிரியர்கள், அவருக்குக் 'கொலைக்காரன்' என்ற அடைமொழியுடன் குறிப்பிட்டுள்ளனர். இபின்-இ-பதூதா, அவருடைய கொலைக்காரத் தன்மையை விளக்கும் வகையில் பல குறிப்புகளை நமக்குத் தந்துள்ளார். 'இரத்தம் சிந்துவதற்கு அவர் எப்போதும் அஞ்சியதில்லை' என்றும், 'அவருடைய கோட்டை வாயிலின் முன்னால், மனித னுடைய சடலத்தைக் காணாத நாள் ஏதுமில்லை' என்றும் அவர் கூறியுள்ளார். அதுமட்டுமன்றிக் கோட்டை வாயிலின் முன்னால் கிடந்த சடலங்களை அவரே நேரில் பலமுறை பார்த்தார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவம் ஒன்றை அவர் கூறியுள்ளார். ஒரு நாள் கோட்டை வாயிலின் முன்னால் அவர் வந்தபோது, அவருடைய குதிரை தடுமாற்றம் அடைந்தது என்றும், ஆகவே, அவர் சுற்றும் முற்றும் பார்த்தார் என்றும், அப்போது வெள்ளையாக ஏதோ ஒன்று அவர் கண்களுக்குத் தென்பட்டது என்றும், 'அது என்ன' என்று அவர் வினவியபோது, 'அது மூன்று துண்டுகளாக வெட்டப்பட்ட மனித உடல்' என்று அவருடைய தோழர்கள் பதிலளித்தனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

சிறியதும், பெரியதுமான எல்லாக் குற்றங்களுக்கும் அவர் தண்டித்து வந்தார். அறிஞர்களையும் உயர்குடியார்களையும் அவர் தண்டிக்காது விட்டு வைக்கவில்லை. ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கானவர்கள் சங்கிலிகளால் பிணிக்கப்பட்டு அர சவைக்கு அழைத்துவரப்பட்டனர். அதுபோது கொல்லப்பட

வேண்டியவர்கள் கொல்லப்பட்டனர். சித்திரவதைக்குள்ளாக்கப் பட வேண்டியவர்கள் சித்திரவதைக்குள்ளாயினர், அடித்து நொறுக்கப்பட வேண்டியவர்கள் அடித்து நொறுக்கப்பட்டனர் என்று பொதுவாகக் கூறியுள்ளார். அதையடுத்து, அதை விளக்க அவர் பல சான்றுகளைத் தந்துள்ளார். சுல்தானுடைய சகோதரர்களுள் ஒருவர், கலகம் செய்தார் என்ற குற்றத்திற்காக அவரைக் கொல்லுவித்தார் என்பதும், அவருடைய தாயாரை விபச்சாரக் குற்றத்திற்காகக் கல்லெறிந்து கொல்லும்படியாக உத்தரவிட்டார் என்பது பற்றியும் நாம் முன்னரே கூறியுள்ளோம். சுல்தானுக்குச் சேவை செய்ய மறுத்துவிட்ட ஷெயிக் ஷிஹாப்புதீன் என்ற மறைஞானியினுடைய தாடியைப் பிய்த்து எறியும்படி மதிப்புக்குரிய இஸ்லாமிய சட்ட நிபுணர் ஒருவருக்குக் கட்டளையிட்டார் என்றும், அவர் அதைச் செய்ய மறுத்துவிட்டபோது அவருடைய தாடியைப் பிய்த்து எறியும்படி கட்டளையிட்டார் என்றும் நாம் அறிகிறோம்.

பல ஆண்டுகள் கழித்து மீண்டும் அரசருக்குச் சேவை செய்வதற்காக அவர் அழைக்கப்பட்டார். அப்போது அவர், ஒரு கொடுங்கோலரிடம் சேவை மேற்கொள்ள விரும்பவில்லை என்று கூறினார். அதையறிந்த சுல்தான் கோபமடைந்து அவரை அரசவைக்கு வரவழைத்து விசாரித்தார். அப்போது அவர், அரசரைக் கொடுங்கொலர் என்றும் அதற்குப் பல சான்றுகளை அவர் அளிக்க இயலும் எனறும் கூறினார். அதனைக் கேட்ட சுல்தான், அவரைச் சங்கிலியால் பிணிக்கச் செய்து நான்கு நாள்கள் உணவின்றிப் பட்டினிப் போடச் செய்தார். அதற்கும் அவர் அசைந்து கொடுக்கவில்லை. ஐந்தாம் நாள் அவருக்கு உணவு அளிக்கச் சுல்தான் கட்டளையிட்டார். அவர் உணவு உட்கொள்ள மறுத்தபோது, மனிதனுடைய மலத்தைக் கரைத்து அவர் வாயில் வலுக்கட்டாயமாக ஊற்றச் செய்தார்[1].

ஒரு சமயம் சிந்துவைச் சார்ந்த இரு சட்ட வல்லுநர்கள், ஏதோ சில வார்த்தைகளைச் சுல்தானுக்கு விரோதமாகக் கூறினர்கள். அதை அவர்கள் ஒப்புக்கொள்ள மறுத்தனர். எனவே, அவர்களைப் படுக்க வைத்து, அவர்களுடைய மார்பின் மீது பழுக்கக்காய்ச்சிய இரும்புத் துண்டுகளை வைக்கச்செய்தார். அவ் விரும்புத் துண்டுகளை எடுத்துவிட்டபோது அவற்றுடன் தோலும் உரிந்து வந்துவிட்டன. சாம்பலும் மூத்திரமும் கலந்து அக் காயத்தின்மீது இடச் செய்தார். அதன் பின்னர், அவர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அக் குற்றத்தைத்

[1] HBIP, p-84.

தாமாகவே ஒப்புக்கொண்டதாக அவர்கள் கூறியமையால், அவர் மேலும் சித்திரவதைக்குட்படுத்தப்படுவது தடுக்கப்பட்டது[1].

ஒருமுறை இரு உறவினர்கள் கலகக்காரர்களுக்கு உதவி செய்த குற்றத்திற்காக அவர்களைக் கம்புகளில் கட்டிவைத்து அம்புகளால் துளைத்துக் கொல்லும்படி கட்டளையிட்டார். அவர்கள் கொல்லப்பட்ட பிறகு, சுல்தானுடைய அதிகாரிகளுள் ஒருவர், அக் காட்சியைக் காணப் பொறுது, அவ்விருவரும் அவ் வகையில் தண்டிக்கப்பட்டது நியாயம் அன்று என்று கூறினர். அதையறிந்ததும் சுல்தான், கோபமடைந்து அவ் வதிகாரிக்கு இருநூறு கசையடிகள் கொடுக்கும்படி கட்டளை யிட்டார். பின்னர், அவ் வதிகாரியைச் சிறையிலிடச் செய்து அவருடைய சொத்துகளைப் பறிமுதல் செய்தார்.

தற்கால வரலாற்றாசிரியர்களுள் சிலர், அவர்மீது சுமத்தப் பட்டிருக்கும் இவ்வகையான பழிகளை மட்டுப்படுத்திக் கூறி யுள்ளார்கள். சுல்தான் மிகக் கொடூரமான தண்டனைகளை வழங்கினர் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். ஆனல், கடுமையான தண்டனைகள் வழங்குவது அக் காலத்தில் சர்வ சாதாரணமாக நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி என்றும், அதற் காக அவரைமட்டும் குறை கூறுவதென்பது சரியன்று என்றும் கூறியுள்ளார்கள். இதனை நாம் ஏற்றுக்கொள்ள இயலாது. சுல்தானுடைய கொடூரச் செயல்களைப்பற்றி இபின்-இ-பதூதா நமக்கு விளங்கக் கூறியுள்ளார். இபின்-இ-பதூதா, பல நாடுகளுக்குச் சென்று வந்தார். அந் நாடுகளிலும் இத்தகைய கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டிருக்குமேயானல், அவற்றைப்பற்றிப் பெரிதாக எழுதியிருக்கமாட்டார். முகமது பின் துக்ளக்கிற்கு அடுத்தபடியாக அரியணையில் அமர்ந்த பிரூஸ் ஷா முகமதுவிடம் மிக்க மரியாதையைக் கொண்டிருந்தார். எனவே, அவர் பட்டமெய்திய பிறகு, முகமது பின் துக்ளக்கின் கொடூரச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கி, அவர்களிடமிருந்து அவர்கள் திருப்தியடைந்துவிட்ட தாகக் கடிதங்களை வாங்கிக் கொண்டார். இதிலிருந்து முகமது பின் துக்ளக் அளவுமீறிய கொடூரச் செயல்களில் ஈடுபட்டார் என் பதை அவரைப் பாராட்டி வந்த பிரூஸ் ஷாவே எண்ணியிருத்தல் வேண்டும். முகமது பின் துக்ளக், வேண்டுமென்றே அளவுமீறிய கடுஞ்செயல்களில் ஈடுபட்டார் என்று பரனிக்கும் முகமது பின் துக்ளக்கிற்கும் இடையே நடந்த உரையாடலின் வாயிலாக நாம் அறிகிறோம். அதுபோது மக்கள் அரச துரோகச் செயல்

1 Ibid.

களில் ஈடுபடுகின்றனர் என்று அவருக்குத் தோன்றிவிட்டால், அவர்களைக் கடுமையாகத் தண்டித்து வந்ததை அவரே ஒப்புக் கொள்கிறார். கீழ்ப்படியாதவர்களைக் கொலை செய்யவும் அவர் அஞ்சியதில்லை. அதுமட்டுமன்றி, இந்த வகையான தண்டனைகளை அவர் உயிர் உள்ள வரையிலும் அளித்து வருவார் என்றும் அல்லது கலகம் செய்யும் மனப்பான்மையை விட்டொழித்து நாணயமாக நடக்கும்வரை இந்த வகையாகத் தண்டித்து வருவதை நிறுத்த மாட்டார் என்றும் அவர் கூறினார்[1]. தற்கால வரலாற்றாசிரியர்கள் இதனை மனத்தில் கொண்டு, சுல்தானுடைய கடுமைக்குக் காரணம் மக்களே என்றும், சுல்தானியம் சீரழியாது பாதுகாக்கப்படவே இவ்வாறு நடந்து கொண்டார் என்றும் கூறுகின்றனர். காரணம் எதுவாயினும், அவர் அளவு மீறிய கடுமையுடன் நடந்துகொண்டார் என்பது தெளிவாகிறது.

நடைமுறைக்கொவ்வாத திட்டங்களை வகுத்து, அவற்றைச் செயல்படுத்த முனைந்தார் என்பது அவர்மீது சுமத்தப்படுகின்ற இரண்டாவது குற்றச்சாட்டாகும். அவர் ஒரு பைத்தியக்காரர். கனவுலகில் சஞ்சாரம் செய்பவர். புதிதான செயல்களை மேற் கொள்ளுவதில் அவருக்குப் பேரார்வம் ஏற்பட்டிருந்தது. தம் மனம் போன போக்கில் நடக்க விருப்பங்கொண்டவர் என்று பலவாறாக இவரைப்பற்றிக் கூறுகின்றனர். தற்கால வரலாற்றா சிரியர்கள் சிலர், அவருடைய திட்டங்கள் உயரிய நோக்கங்களுடன் மேற்கொள்ளப்பட்டன என்பதை எடுத்துக்காட்டியுள்ளனர். அவை தோல்வியுற்றதற்குப் பல காரணங்களைக் கூறுகின்றனர். மக்கள், அவற்றின் மேன்மையைப் புரிந்து கொள்ளவில்லை. அவை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட்டி ருக்கவில்லை. சுல்தான் பெரும்பாலும் பொறுமையின்றி நடந்து கொண்டார். அவருக்குப் போதிய அனுபவ அறிவும் வருங் காலத்தை நன்கு உணர்ந்து அதற்கேற்ப திட்டத்தைத் தீட்டுவ வதற்குரிய மனப்பக்குவத்தையும் அவர் பெற்றிருக்கவில்லை. தமது திட்டங்களை நடைமுறைப்படுத்துவதைப்பற்றி அவர் பெரும்பாலும் கலந்து ஆலோசனை மேற்கொண்டதில்லை. அவருடைய திட்டங்கள் மக்களுக்கு ஏற்படுத்திய தொல்லைகளை நாம் கவனிக்கும்போது மேற்கண்ட குறைகள் மன்னிக்க முடியா தனவாகத் தோன்றுகின்றன. அவரிடத்தில் காணப்பட்ட ஒரு நற்பண்பு யாதெனில், அவருடைய திட்டங்கள் பெருந் துன்பத்தை அளிக்கின்றன என்பதை அறிந்ததும், அவர் அத் திட்டங்களைக் கைவிட்டு விட்டார். அதனால், மக்கள், மேலும் துன்பமடைவது தடுத்து நிறுத்தப்பட்டது[2].

[1] HCIP. p-85. [2] HCIP. p-85.

முகமது பின் துக்ளக்கிற்குச் சமயப் பற்றில்லை என்பது மற்றொரு குற்றச்சாட்டு. கடவுள் இருக்கிறார் என்பதிலும், நபிகள் நாயகத்திடமும் அவர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார் என்பது, அவருடைய சுயசரிதையிலிருந்தும் அவருடைய நாணயங்களில் இருந்தும் தெரிகிறது[1]. இஸ்லாமிய மதத்தினர் கையாளவேண்டிய சமய சடங்குகளை அவர் சிறிதும் வழுவாமல் பின்பற்றி வந்தார். இஸ்லாமிய மறைஞானிகளிடத்தில் அவருக்குப் பற்று ஏற்படவில்லை. அதுவே அவரிடம் காணப்பட்ட பெருந் தவறு என்று சமயப் பற்றுளர்கள் கருதினார்கள். மேலும் அவர், ஏனைய மதத்தினரிடத்தில் அன்பாக நடந்து கொண்டார். கி.பி. 1323-ல் அவரது அவைக்கு விஜயம் செய்த சமண அறிஞர் ஜீன பிரபாசூரியைக் கௌரவமாக நடத்தினார். அவரைத் தம் பக்கத்திலேயே அமரச் செய்து அவருக்குப் பெருஞ் செல்வத்தையும் நிலத்தையும், குதிரைகளையும் யானைகளையும் கொடுக்க முன் வந்தார். ஆனால், ஜீன பிரபாசூரி, அவற்றை ஏற்க மறுத்துவிட்டார். அதற்காகச் சுல்தான் அவரைப் பாராட்டியதோடு, சமணத் துறவிகள் தங்குவதற்காக ஒரு விடுதியைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்தார். மேலும், அவரை யானை மீது அமரச் செய்து மலிக்குகள் புடைசூழவும், நாட்டியக்காரர்களும் பாடகர்களும் முன்னே செல்லவும் ஊர்வலமாக அவருடைய இல்லத்திற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார்[2]. இந்துக்களுக்குச் சாதகமாக நடந்துகொண்டார் என்றும், யோகிகளுடன் அவர் இரகசியமாகத் தொடர்பு கொண்டிருந்தார் என்றும் கூறப்படுகிறது[3]. இவையனைத்தும் மரபு வழுவாத சமயவாதிகளின் வெறுப்பைத் தூண்டிவிட்டது. எனவே, அவர்கள் மக்களைக் கலகம் செய்யத் தூண்டினார்கள். கலகத்திற்குக் காரணமாக இருந்த தலைவர்களை அவர் கடுமையாகத் தண்டித்தார். மக்கள் அவர்மீது மேலும் அதிகமான வெறுப்பைக் கொள்ளத் தொடங்கினார்கள். மேற்கூறியவற்றிலிருந்து இஸ்லாமிய மதத்தில் அவர் பற்றுக்கொள்ளாமையினால், முஸ்லிம்களிடத்தில் கடுமையாக நடந்து கொண்டார் என்று கூறுவது பொருந்தாது என்பது புலனாகும். முஸ்லிம்கள் பலருடைய இரத்தம் சிந்துவதற்குக் காரணம் அவருடைய ஈவு இரக்கத் தன்மையேயாகும்[4]. அதுவே அவரிடம் காணப்பட்ட பெருங் குறையாகும். டில்லி சுல்தானியம் அழிவுற்றதற்கு முகமது பின் துக்ளக்கினுடைய குணநலன்களும், கொள்கைகளும் ஒரு காரணமாக அமைந்திருந்தன என்பதை எவரும் மறுக்க இயலாது.

1 ibid.
2 HCIP. p-86 quoting PIHC V, 296.
3 HCIP. p-86.
4 Ibid.

# 3. பிரூஸ் ஷா (கி. பி. 1351)

## முந்திய வாழ்க்கை

கி.பி. 1309ஆம் ஆண்டில் கமால் உத்தீன் பிரூஸ் பிறந்தார். அவருடைய தந்தையின் பெயர் ரஜாப். அவர், சுல்தான் கியாஸ் உத்தீன் துக்ளக்கினுடைய சகோதரராவார். பிரூஸினுடைய தாயார் பெயர் நளா. அவர், ஓர் இரஜபுத்திர இளவரசியாவார். பிரூஸினுடைய தந்தைக்கும் தாயாருக்கும் நடந்த திருமணத்தைப்பற்றி நாம் அஃபீபினுடைய வாயிலாக அறிகிறோம். கியாஸ் உத்தீன் துக்ளக், தீபால்பூர் ஆளுநராக இருந்தபோது, அபுஹர் என்னுமிடத்திற்குத் தலைவராக இருந்த ரன்மல் பட்டி (Ranmal Bhatti) என்பவருக்கு அழகான பெண் ஒருத்தி இருப்பதை அறிந்தார். அப் பெண்ணைத் தம் சகோதரனுக்கு மணமுடித்து வைக்க விரும்பினார். ரன்மல் அதற்கு இசைய மறுத்துவிட்டார். எனவே, ரன்மல் செலுத்தவேண்டிய வரிப்பண நிலுவைகளை உடனடியாகச் செலுத்தவேண்டும் என்று கியாஸ்உத்தீன் கூறினார். அதனால், ரன்மலினுடைய குடும்பத்தினர் மிக்க கஷ்டத்திற் குள்ளானார்கள். ஒரு நாள் ரன்மலும் அவருடைய தாயாரும் இதைப்பற்றி விவாதித்துக்கொண்டிருந்தனர். அதனை பீபி நளா ஒட்டுக்கேட்க நேர்ந்தது. தம்மால் தம் குடும்பத்தினருக்கு ஏற்பட்டிருந்த கஷ்டங்களை அவர் உணர்ந்தார். எனவே, தாம் ரஜாப்பை மணக்க விரும்புவதாகத் தம் தந்தையிடம் சென்று, தம்மை மங்கோலியர்கள் சிறைபிடித்துச் சென்றுவிட்டதாக எண்ணி, ரஜாப்பினிடம் தம்மை அனுப்பிவைக்கும்படி கூறினார். சுல்தான் இச் செய்தியைக் கேட்டு மன அமைதி கொண்டார். தம்முடைய குடும்பத்தினரும், மக்களும் நன்றாக வாழும் பொருட்டு ஒரு பெருந் தியாகத்தைச் செய்தவரின் மகனாக பிரூஸ் பிறந்தார். பிரூஸுக்கு ஏழு வயதாக இருந்தபோது அவருடைய தந்தை காலமானார். அன்றுமுதல் மலிக் துக்ளக், பிரூஸைத் தம் சொந்த மகனைப்போல நடத்திவந்தார். முகமது பின் துக்ளக் பட்டமெய்தியபோது பிரூஸுக்கு வயது பதினெட்டு. எனவே, அவருக்கு அரசியல் பணிகளில் பயிற்சி அளிக்கத்தக்க ஏற்பாடுகளை முகமது செய்துகொடுத்தார். அமீர்-இ-ஹஜீப் என்ற பதவியைப் பிரூஸ் சில காலம் ஏற்றிருந்தார். பிரூஸுக்குப் போதிய

இராணுவப் பயிற்சி அளிக்கப்படவில்லை. முகமதுவிடம் பிரூஸுக்கு மிகுந்த பற்று ஏற்பட்டிருந்தது. எனவே, அவர் உயிருடன் இருந்தவரையில் அவரிடம் விசுவாசத்துடன் நடந்து கொண்டார். அவர் இறந்த பிறகும் அவரிடம் கொண்டிருந்த பற்றுச் சிறிதும் குறையவில்லை.

**அரசுரிமை பெறுதல்**

தட்டாவில், போர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போது முகமது பின் துக்ளக் இறந்துவிட்டார் என்று முன்பு கண்டோம். முகமதுவிற்கு ஆண் குழந்தை ஏதும் பிறக்கவில்லை. மனிதாபிமான உணர்ச்சிகள் அவரிடம் தோன்றாமைக்கு அதுவே ஒரு காரணம் என்றும் இசாமி கூறியுள்ளார். அவருக்குப்பின் பட்டமெய்தவேண்டியவர் யார் என்பதைப்பற்றியும் திட்டவட்ட மாக முகமது அறிவிக்கவில்லை என்று வரலாற்றாசிரியர்கள் பலர் கூறியுள்ளனர்[1]. தலைவரில்லாத படை, தாறுமாறாக நடக்கக் கூடும் என்பதைப் படை அதிகாரிகள் உணர்ந்தனர். யாதொரு சேதமும் இன்றிப் படையைக் கட்டுப்பாட்டுடன் டில்லிக்குக் கொண்டுபோகவும், சிந்துவில் இருந்த கலகக்காரர்களிடமிருந்து படைகளைக் காப்பாற்றவும், முகமதுவின் வேண்டுகோளுக் கிணங்கி அவருக்கு உதவியாக வந்த மங்கோலியக் கூலிப்படைகள் டில்லிப் படையினரைக் கொள்ளை அடிக்காதவாறு பார்த்துக் கொள்ளவும் ஒரு தலைவரை உடனடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிற்று. எனவே, பிரூஸைச் சுல்தானாகத் தேர்ந் தெடுத்தனர். சுல்தானைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அரசாங் கத்தின் உயர் அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவ்வுரிமையை அப்போது ஒரு சிலரே பயன்படுத்த இயன்றது. டில்லியில் உள்ள அதிகாரிகளையும், மாநில ஆளுநர்களையும் கலந்து ஆலோசித்து முடிவு செய்வதற்கு அப்போது நேரம் இல்லை. ஆயினும், அவர்கள் செய்த முடிவு அனைவரும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருந்தது.

பிரூஸ், முகமது பின் துக்ளக்கின் குடும்பத்தைச் சார்ந்தவர். முகமது பின் துக்ளக்கிற்கு ஆண் குழந்தை பிறக்கவில்லை. அக் குடும்பத்தைச் சார்ந்தவர்களுள் பிரூஸே மிகச் சிறந்தவராகக் காணப்பட்டார், முதலில் பிரூஸ், சுல்தான் பதவியை ஏற்கத் தயங்கினார். அந்த நேரத்தில் பிரூஸின் வளர்ப்பு மகனான தாதர்

1 " தமக்குப்பின் பிரூஸ் பட்டமெய்தவேண்டும் ", என்று முகமது அறிவித்திருந் தார் என்று பரனி கூறியுள்ளார். இதனை நாம் ஏற்க இயலாது. ஏனெனில், முகமது இறந்த இரண்டு நாள்கள் கழிந்த பின்னரே பிரூஸ் பட்டமெய்தினார் என்றும் பிரபுக்களின் வேண்டுதலின்பேரில் அரசரானார் என்றும் நாம் அறிகிறோம். முகமது தமது விருப்பத்தை முன்னரே அறிவித்திருந்தால் இவை ஏற்பட வழியில்லை."

கான், அவருடைய கையைப் பற்றிக்கொண்டு அவரை வலுக் கட்டாயமாக அரியணையில் அமர்த்தப்போவதாகக் கூறினார். அதன்பிறகே சுல்தானாகப் பொறுப்பேற்க அவர் இசைந்தார். அரசெய்திய உடனே அவர் குதாவந்த் ஷடாவினிடம் சென்றார். குதாவந்த் ஷடா முகமதுவின் சகோதரியாவார். முகமது இறந்த பிறகு, தம்முடைய மகனே பட்டத்திற்கு வரவேண்டும் என்று அவர் கூறினார். பிரபுக்கள் அவரைச் சமாதானப்படுத்தி பிரூஸைச் சுல்தானாக ஏற்றுக்கொள்ளும்படி கூறினார்கள். அவருடைய மகனை தாவர் மலிக் என்பவருக்கு அமீர்-இ-ஹஜீப் பதவியை அளிப்பதாக வாக்குக் கொடுத்தார்கள். எனவே, குதாவந்த் ஷடாவிடம் பிரூஸ் சென்றபோது, அவ்வம்மையார் அவரை மார்புறத் தழுவி ஓர் இலட்சம் டங்காக்கள் மதிப்புள்ள குலாவை (Kulab) அவருக்கு அணிவித்து, அவரைச் சுல்தானாக ஏற்றுக் கொண்டார்.

பிரூஸ், அரசுரிமையைப் பெற்ற அடுத்த நாளே படை, கட்டுப்பாட்டுடனும் ஒழுங்காகவும் புறப்பட்டுச் செல்லத் தொடங்கியது. முகமதுவின் மறைவைப் பயன்படுத்திக்கொண்டு டில்லிப் பேரரசுப் பகுதிகள் சிலவற்றை மங்கோலியர்கள் கைப்பற்றிக்கொண்டனர். அவற்றை மீட்கப் படையொன்றை அவர் அனுப்பிவைத்தார். அதன் விளைவாக மங்கோலியர்கள் டில்லியின் ஆட்சிப் பகுதியிலிருந்து விரட்டப்பட்டனர். டில்லிப் படைகளுக்குத் தொல்லை கொடுத்துவந்த தட்டா கலகக்காரர் களும் தம் இல்லங்களுக்குத் திரும்பிவிட்டனர். படை, சிவிஸ்தானத்தை அடைந்தபோதுதான், பிரூஸின் பெயரில் குத்பா வாசிக் கப்பட்டது. அதையடுத்து, பிரூஸ் பட்டமெய்திய செய்தியை நாட்டு மக்களுக்கு அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டன. நாட்டிலுள்ள உயர் அதிகாரிகளுக்குச் சிறப்பு உடைகளைச் சுல்தான் அனுப்பிவைத்தார். அதையடுத்துச் சில உயர் பதவிகளைத் தம்முடைய நெருங்கிய உறவினர் களுக்குக் கொடுத்தார். தம் மாற்றாந்தாயின் மகனை இப்ராஹீமை அமீர்-இ-ஹஜீப்பாக நியமித்தார். தமது அடிமை களுள் ஒருவரான பஷீரை, அரீஸ்-இ-மமாலிக் என்ற பதவியில் அமர்த்தினார். சிவிஸ்தானத்திலிருந்து புறப்பட்ட படை, பக்கர் வழியாகச் ஊச்சை சென்றடைந்தது. அங்கிருந்து படை புறப் பட்டபோது டில்லியில் குவாஜா-இ-ஜஹான் கலகம் ஒன்றைத் தொடங்கியுள்ளார் என்ற செய்தி அவர் காதுக்கெட்டியது.

குவாஜா-இ-ஜஹான் அப்போது டில்லியின் வசீராகப் பொறுப்பேற்றிருந்தார். ஆறு வயது நிரம்பிய பாலகன் ஒருவனை

அரியணையில் அமர்த்தி அவன் சுல்தானுடைய மகன் என்று அனைவருக்கும் தெரிவித்தார். ஆகவே, எல்லா அதிகாரிகளையும் அச் சிறுவனைச் சுல்தானாக ஏற்றுக்கொள்ளும்படி கூறினார். அச் செய்தியைப் பிரூஸ் அறிந்தபோது, அவர் மௌலானா கமால் உத்தீன் போன்றவர்களை அழைத்துக் காலஞ்சென்ற சுல்தானுக்கு ஆண்மகவு பிறந்திருந்ததா என்று விசாரித்தார். முகமது விற்கு ஆண்மகவு பிறந்திருந்தாலும்கூட, பிரூஸ் சுல்தானாக நியமிக்கப்பட்டுவிட்டமையால், அந்த நியமனத்தை ஏற்றுத் தொடர்ந்து சுல்தான் பதவியில் இருப்பதே உசிதமான செயலாகும் என்றும் அவர்கள் அறிவுரை கூறினார்கள்[1]. இதிலிருந்து முகமதுவிற்கு ஓர் ஆண்மகவு பிறந்து இருந்தது என்று தெரியவருகிறது எனச் சிலர் கூறுவர். சமகால, தற்கால வரலாற்றாசிரியர்களுள் பலர், இக் கருத்தை ஏற்க மறுக்கின்றனர். குதாவந்த் ஷடா தம்முடைய மகனை அரசராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார் என்று முன்னர்க் கண்டோம். முகமதுவிற்கு ஓர் ஆண் குழந்தை பிறந்திருந்தால், அவர் தம்முடைய மகனுக்கு அரசுரிமையை அளிக்கவேண்டும் என்று வற்புறுத்துவதற்கு இயலாதல்லவா? மேலும், பிரூஸை முகமது தம்முடைய பின்னுரிமையாளராக நியமித்தார் என்று பரனியும் அஃபீபும் கூறியுள்ளனர். முகமதுவிற்கு ஆண்மகவு பிறந்திருந் தால் பிரூஸைப் பின்னுரிமையாளராக அவர் நியமிப்பதில் நியாய மில்லை அல்லவா? மேலும், முகமதுவிடம் மிகுந்த பற்றுடையவர். ஆகவே, மறைந்துபோன சுல்தானுடைய மகனைத் தள்ளிவிட்டுத் தாமே அரசராக எண்ணியிருந்தார் என்று கூறுவதும் சரியாகாது. எனவே, தமது ஐயத்தைப் போக்கிக் கொள்வதற்குச் சமய அறிஞர்களைக் கலந்து ஆலோசனை நடத்தியதில் வியப்பேதும் இல்லை. அதன் பிறகு, அவர் படைத்தலைவர்களிடம் டில்லியில் ஏற்பட்டிருந்த அரசியல் நிலைமையைக் கூறினார். 'சுல்தான் முகமதுவிற்கு ஆண் குழந்தையேயில்லை; அவருக்கு ஒரே ஒரு மகள் மட்டுமே பிறந்தாள்' என்று திட்டவட்டமாகக் கூறினார்கள். ஆகவே, 'அரசுரிமையைப் பிரூஸ் பெறுவதில் தவறேதும் இல்லை', என்றுஅவர்கள் கூறினார்கள்.

மேற்கண்ட கலகத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம். இக் கலகத்திற்குத் தலைமை தாங்கியவர் குவாஜா-இ-ஜஹான் முகமது அயாஸ். அவருக்கு அப்போது வயது 84. இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குரிய பயிற்சியை அவர் பெற்றிருக்கவில்லை. ஓர் அம்பு கூட அவர் அதுகாறும் எய்ததில்லை என்று கூறப்படுகிறது. அவர் பிரூஸிடம் மிகவும்

[1] Briggs, I, pp. 444 and 447.

அன்பாக இருந்தார். அவருடைய மனைவியும் பிரூஸை மிகவும் நேசித்தார். அத்தகைய ஒருவர், மூன்றுவது நபரை அரச பீடத்தில் அமர்த்தியது ஏன் என்று ஒரு கேள்விக் குறி எழுந்துள்ளது. முகமது பின் துக்ளக் சிந்துவில் போர் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தபோது, முகமது அயாஸ் தமது அடிமைகளுள் ஒருவரை அங்கு அனுப்பி வைத்தார். அவர் திரும்பி வந்து, சுல்தான் இறந்துவிட்டாரென்றும் பிரூஸையும், தாதார்களையும் அங்குக் காணவில்லையென்றும், அவர்களை மங்கோலியர்கள் கைப்பற்றிக் கொண்டனரா அல்லது அவர்கள் கொல்லப்பட்டனரா என்பது தெரியவில்லை என்றும் கூறினர். பிரூஸ் இறந்துவிட்டதாக எண்ணி வேறொருவரை அரியணையில் அமர்த்தினர் என்று கூறப்படுகிறது[1]. இக் கருத்தினை ஏற்றுக் கொள்வதில் சில சங்கடங்கள் உள்ளன. ஓர் அடிமை தமக்குக் கொண்டுவந்த செய்தி உண்மையா இல்லையா என்பதை ஆராய்ந்து பாராமல், அவசரம் அவசரமாக ஒரு பாலகனை, வயதிலும் அனுபவத்திலும் மூத்த முகமது அயாஸ் அரியணையில் அமர்த்தியதற்கு மேற்கண்ட விளக்கம் பொருத்தமாகத் தோன்ற வில்லை. மேலும் பிரூஸ், சுல்தானுகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற செய்தி டில்லி மக்களின் காதுக்கெட்டியபோது, உயர் அதிகாரிகளுள் பலர், மலிக் மக்பூல் காவாமுல்க்கின் தலைமையின் கீழ்க் கூடி, பிரூஸைச் சுல்தானுக ஏற்றுக்கொண்டதாக அறிவித்து அவருக்குக் கடிதங்களையும் எழுதினர்கள். முகமது அயாஸின் நடத்தைக்கு மேலே கூறப்பட்டுள்ள விளக்கம் சரியானதாக இருப்பின், பிரூஸ் உயிருடன் இருக்கிருர் என்பதை அறிந்ததும் ஏனைய உயர் அதிகாரிகளைப் போலத் தாமும் பிரூஸைச் சுல்தானுக ஏற்றுக் கொண்டதாக அறிவிக்கும் வகையில் அவர் கடிதம் எழுதியிருக்கவேண்டும். அதற்குமாருக, அவர் பிரூஸுடன் போர் புரியத் தயாரானுர். அரசாங்கக் கருவூலத்தில் போதிய பணமின்மையால், அவர் அரசாங்கத்தின் கைவசமிருந்த பொன், வெள்ளி, மணிகள் ஆகியவற்றை விற்க முற்பட்டார்.

இதற்கிடையில் பிரூஸினுடைய பலம் நாளுக்கு நாள் பெருகி வந்தது. தகியினுடைய கலகத்தைப் பிரூஸினுடைய படைத் தலைவர்கள் அடக்கிவிட்டனர். தகி கொல்லப்பட்ட செய்தி சுல்தானுக்குப் பெருமகிழ்ச்சியை உண்டு பண்ணியது. இந்துத் தலைவர்களும், தனமின் ஆளுநரான மாமூத்பெக்கும், மூல்தானைச் சார்ந்த அயின் உல்முல்க் மஹ்ருவும், காவாமுத்தீனும் அவர் பக்கம் சேர்ந்துகொண்டனர். சர்சுதியைச் சார்ந்த வணிகர்களும், வட்டிக் கடைக்காரர்களும் அவருக்குப் பொருளுதவி

1 ACHI, p. 570.

செய்தனர். இறுதியில் பிரூஸ் தன்ஸ்வா என்ற இடத்தை அடைந்தார். முகமது அயாஸ், பிரூஸுடன் போர் புரிவதற்குப் பதிலாக, அவரிடம் சரணடைவது என்று முடிவு கட்டினர். அவரை மன்னித்து விடுவதென்று சுல்தான் தீர்மானித்தார். ஆனால், ஏனைய பிரபுக்கள் அவரை மன்னிக்க விரும்பவில்லை. இறுதியில் முகமது அயாஸைத் தாங்கள் விரும்பியவாறு தண்டிக்கலாம் என்று பிரூஸ் அறிவித்தார். பிரூஸினுடைய அதிகாரிகள் அவரைச் சமானவின் இக்தாதராக நியமித்து அவரை அங்கு அனுப்பிவைத்தனர். அவருடன் கூடவே ஓர் அதிகாரியையும் அனுப்பி வைத்தனர். தம்மைக் கொல்லவே அவர் அனுப்பப் பட்டுள்ளார் என்பதை முகமது அயாஸ் அறிந்துகொள்ள வெகு நேரம் பிடிக்கவில்லை. எனவே, தம்முடைய நண்பர்களுள் ஒருவரை அழைத்துத் தம்மைக் கொன்றுவிடும்படி வேண்டிக் கொண்டார். இவ்வாறாக, முகமது அயாஸின் கலகம் முடிவுற்றது. அதன் பிறகு, டில்லி குச் சென்றார். மலிக் மக்பூல் கவாமுல்க் வசீராக நியமிக்கப்பட்டார்.

## பிரூஸின் போர் நடவடிக்கைகள்

### வங்கத்தில் கலகம்

முகமது பின் துக்ளக் இறந்த செய்தியைக் கேட்டதும் ஹாஜி இலியாஸ் மேற்கு வங்கத்தில் ஷம்ஸ் உத்தீன் என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டு சுதந்திர ஆட்சியை நிறுவினர். அதையடுத்து அவர், தமது நாட்டை மேற்கு நோக்கி விரிவு படுத்த முயன்றார். முதலில் திர்ஹூத்தைத் தாக்கினர். அதன் பிறகு, காசி வழியாகப் பாரெய்குக்குச் சென்றார். அப்போது தமது உடல்நிலை சீரடைய வேண்டும் என்பதற்காக அங்கிருந்த சாலார் மசூத் காஜியினுடைய சமாதியில் பிரார்த்தனை செய்யவே அங்குப் போவதாக அவர் கூறினர். ஹாஜி இலியாஸினுடைய நடவடிக்கைகள் சுல்தானுக்குக் கோபமூட்டின. எனவே, அவர் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு 1353ஆம் ஆண்டில் வங்காளம் நோக்கிப் புறப்பட்டார். உதயசிங், சம்பாரன் போன்ற இந்துத் தலைவர்கள் பிரூஸுக்குத் தக்க உதவிகளை அளித்தார்கள். திர்ஹூத் தலைவரும் பிரூஸுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் கப்பம் கட்டவும் ஒப்புக்கொண்டார். தங்களிடமுள்ள படைவீரர்கள் அனைவரையும் சுல்தானுக்குக் கொடுத்துதவ முன் வரும் வங்க அதிகாரிகளுக்கும், இந்துத் தலைவர்களுக்கும் அளிக்கப்பட்டிருந்த மானியங்களை இரு மடங்காக உயர்த்துவதாகச் சுல்தான் அறிவித்தார். பகைவருக்கு

உதவி செய்த குற்றத்திற்காக அவர்கள் தண்டனை அடையக் கூடாதென்பதற்காக, வங்காளம் முழுமையும் தமக்கே உரிய தென்றும், ஆகவே வங்கமக்கள் தம்முடைய குடிமக்களாவார்கள் என்றும் அவர் கூறினார்[1].

கோசி நதிக்கரையில் பிரூஸைச் சந்தித்து, அவரது முன்னேற்றத்தைத் தடை செய்ய வேண்டுமென ஹாஜி இலியாஸ் திட்டமிட்டார். ஆனால், பிரூஸ், அவருடைய திட்டத்தை முறியடித்து வேறுவழியாக வங்காளம் நோக்கிச் சென்றார். எனவே, இலியாஸ் தம்முடைய தலைநகர் நோக்கி ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது. பின்னர், அங்கிருந்து இக்தலா கோட்டைக்குச் சென்றார். இக்தலா கோட்டையை அடைந்த பிரூஸ், பகைவரைக் கோட்டைக்கு வெளியே வரச்செய்ய ஒரு தந்திரத்தைக் கையாண்டார். பிரூஸினுடைய படையினர், தங்களுடைய பாசறையை விட்டுப் பயந்து ஓடுவது போல் பாசாங்கு செய்தனர். அதை உண்மையென நம்பி, பின்வாங்கிச் சென்ற படைகளை இலியாஸ் துரத்திச் சென்றார். 90,000 பேர்களைக் கொண்ட சுல்தானுடைய படையுடன் 10,000 பேர்களைக் கொண்ட படையைக் கொண்டு எங்ஙனம் இலியாஸ் வெற்றிகாண இயலும்? வங்காளப்படை தோற்றுப் போய் இக்தலாவிற்குத் திரும்பி விட்டது. இக்தலா நகரம் பிடிபட்டது. 180,000 வங்காளியர் கொல்லப்பட்டனர்.[2]

அக் காட்சியைக் கண்ணுற்ற சுல்தான் கண்களில் நீர்மல்க தங்களுக்கும் தங்களுடைய குடும்பத்தினருக்கும் பிழைப்பைத் தேடுவதற்காகப் போரில் கலந்து கொண்ட குற்றத்திற்காக அவர்கள் கொல்லப்பட்டனர் என்று வருத்தத்துடன் கூறினார். அதையடுத்துக் கோட்டை முற்றுகையிடப்பட்டது. அப்போது கோட்டை மதில்களின்மீது இருந்துகொண்டு முஸ்லிம் பெண்கள் தங்களை ஒன்றும் செய்யாமல் காப்பாற்றவேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களுடைய கூக்குரலும் அழுகையும் சுல்தானுடைய உள்ளத்தை உருக்கிவிட்டன. திக்கற்ற அப் பெண்களைத் தம் படையினரின் கைகளில் சிக்க விட்டால் அதனால், அவர்களுக்கு ஏற்படவிருந்த ஆபத்தை நன்கு உணர்ந்திருந்தார். எனவே, அவர் இக்தலாவிலிருந்து திரும்பிவிட்டார். இக்தலாவிற்கு ஆஜாத்பூர் என்ற பெயரையும் பண்டுவாவிற்குப் பிரூஸாபாத் என்ற பெயரையும் சூட்டினார். வங்காளத்தைவிட்டு நீங்குவதற்குமுன் தம் படை

1. ACHI, p 583 quoting Insha-i-Mahru, 15-17, No. 6.
2. Ibid, p 584 quoting Ismi.

யினர்கள் கைப்பற்றிய வங்காளியர்கள் அனைவரையும் விடுவித்தார். இலியாஸ், இக்தலாவிலிருந்துகொண்டு தொடர்ந்து ஆட்சி செலுத்தி வந்தார். அவர் உயிரோடிருந்தவரை இருவரும் ஒருவருக்கொருவர் பரிசுகளைப் பரிமாறிக்கொண்டனர். இவற்றிலிருந்து சுல்தான் வங்காளத்தினுடைய சுதந்திரத்தை ஏற்றுக் கொண்டிருக்கவேண்டும் என்பது புலனாகிறது.

1359ஆம் ஆண்டில் பிரூஸ், இரண்டாவது முறையாக வங்காளத்தின்மீது படையெடுத்துச் சென்றார். 1357ஆம் ஆண்டில் பிரூஸ் ஹிசார்பிரூஸாவில் இருந்தபோது, ஜபர்கான் என்பவர் அவரைச் சந்தித்து இலியாஸ்மீது புகார் செய்தார். ஜபர்கான் சோனார் கோயான் சுல்தானான பக்ருத்தீன் என்பவரின் மருமகனாவார். இலியாஸ் பக்ருத்தீனைத் தாக்கிக் கொன்றுவிட்டார் என்றும், எனவே சுல்தான் பிரூஸ், தமக்கு நியாயம் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். தீர விசாரிக்காமல் யாதொரு முடிவையும் அளிக்கப்போவதில்லை என்று சுல்தான் அறிவித்தார். அதே நேரத்தில் ஜபர்கானுக்கு உதவி வசீர் பதவியை அளித்து, அவர் சௌகரியமாக வாழ வழிசெய்தார். இதற்கிடையில் இலியாஸ் இறந்துவிட்ட செய்தி சுல்தானுடைய காதுக்கெட்டியது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு, வங்காளத்தைத் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வர முற்பட்டார். 1359ஆம் ஆண்டில் 80,000 குதிரைவீரர்கள் 470 யானைகள் கொண்ட படையுடன் பிரூஸ் வங்காளத்திற்குப் புறப்பட்டார். அவுத், கன்னோசி வழியாகச் சென்று, கும்தி நதிக்கரையை அடைந்து, அங்கு ஒரு நகரை உண்டாக்கினார். தமது அன்புக்குரிய முகமதுவின் நினைவாக அதற்கு ஜான்பூர் என்ற பெயரைச் சூட்டினார். முகமது ஒருசமயம் மலிக் ஜூனா என்று அழைக்கப்பட்டார் என்பதை நாம் நினைவுகூர்தல் அவசியமாகும். இதற்கிடையில் இலியாஸின் மகன் சிக்கந்தர். வங்காளத்தின் சுல்தானாகப் பதவியேற்றார். அவர், பிரூஸுக்குத் தக்க சமாதானம் கூறத் தவறியமையால், பிரூஸ் தமது படைகளை முன்னேறும்படி கட்டளையிட்டார். சிக்கந்தர் இக்தலா கோட்டைக்குள் புகுந்து கொண்டார். பிரூஸ் கோட்டையை முற்றுகையிடும்படி ஆணையிட்டார். கோட்டையின் ஒரு பகுதி சரிந்து விழுந்தது.

டில்லிப் படைகள் கோட்டைக்குள் புகுந்து போராட வேண்டுமெனத் துடித்தனர். ஆனால், பிரூஸ் இன்னும் ஒருநாள் காத்திருக்கும்படி கூறினார். தம் படைகள் கோட்டைக்குள் செல்லாமலேயே கோட்டையைத் தம் வசமாக்கவேண்டும் என்பது அவரது விருப்பமாகும். கோட்டைக்குள்ளிருந்த முஸ்லிம்

பெண்களின் கற்பு சூறையிடப்படாதபடி தடுக்கவேண்டும் என்று சுல்தான் எண்ணினார். அன்றிரவே வங்காளியர்கள் தங்களுடைய கோட்டையின் இடிந்துபோன பகுதியைச் சரிசெய்துவிட்டனர். எனவே, முற்றுகை மேலும் நீடிக்கத் தொடங்கியது. இதற்கிடையில் சிக்கந்தரும் தம் மக்களின் துயரைப் போக்க சுல்தானுடன் சமாதானம் நாடினார். சோனார்கோயானை ஜபர்கானுக்குக் கொடுக்கவேண்டும் என்று பிரூஸ் வற்புறுத்தினார். சிக்கந்தர் அதற்கிணங்கினார். அதையடுத்து பிரூஸ் சிக்கந்தருக்கு அரசருக்குரிய உடையையும் மணிமுடியையும் அனுப்பி வைத்தார். ஜபர்கான், சுல்தானுடைய அதிகாரிகளுள் ஒருவராக இருப்பதே மேலாகும் என்று எண்ணினார். ஆகவே, அவர் சோனார்கோயான் அரச பதவியை நிராகரித்தார். சிக்கந்தர், ஆண்டுதோறும் கப்பம் செலுத்திவர இசைந்தார். வங்காளப் படையெடுப்பு, பிரூஸுக்கு யாதொரு பயனையும் அளிக்கவில்லை என்பதை ஒருவாறாக நாம் அறிய இயலும்.

வங்காளப் படையெடுப்பை முடித்துக்கொண்டு பிரூஸ் டில்லி திரும்பினார். ஜான்பூரை அடைந்தபோது ஒரிசாவைத் தாக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. மூஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் அதனை ஜாஜ்நகர் என்று அழைத்துவந்தனர். கியாஸ் உத்தீன் துக்ளக் ஆட்சி செய்தபோது, உலூக்கான் அதனைத் தாக்கி டில்லியின் ஆதிக்கத்தை அதன்மீது திணித்தார் என்று முன்பு கண்டோம். அதுமுதல் ஒரிசாவின் மன்னர் ஆண்டுதோறும் யானைகளைத் தவறாமல் சுல்தானுக்கு அனுப்பிவந்தார்.

1359ஆம் ஆண்டில் பிரூஸ் வங்காளத்தின்மீது இரண்டாவது முறையாகப் படையெடுத்தபோது, ஒரிசாவின் மன்னரான மூன்றாவது வீரான் பானுதேவா வங்காள சுல்தானுடைய பக்கத்தில் சேர்ந்துகொண்டார். டில்லி ஆதிக்கத்தை ஏற்கவும் மறுத்துவிட்டார். இவையே பிரூஸின் ஒரிசா படையெடுப்பிற்குக் காரணங்களாகும். ஒரிசா மன்னரின் துரோகச் செயலைக் கண்டிக்கவே இப் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது எனச் சிலர் கூறுகின்றனர்[1]. கஜமதி அரசரை ஒழிக்கவேண்டும் என்பதற்காகவும், இஸ்லாமிய மதத்தில் நம்பிக்கைக் கொள்ளாதவர்களைக் கொலை செய்வதற்கும், அவர்களுடைய கோயில்களை இடித்துத் தள்ளுவதற்காகவும், யானை வேட்டை மேற்கொள்ளுவதற்கும், காண்போர் மனத்தைக் கவரக்கூடிய வனப்புமிகு நாட்டைக் கண்டுகளிப்பதற்கும் இப் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டதாக சிராத்-இ-பிரூஸ்ஷாயி நமக்குக் கூறுகிறது.

1 ACHI, p. 592.

வரலாற்றாசிரியர்கள் சிலர், யானை வேட்டைக்காக இப் படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டது என்று கூறுகின்றனர்[1]. இதற்குச் சில காரணங்கள் கூறப்படுகின்றன. போர் முடிந்த பிறகு, பதம்தலாவில் சுல்தான் யானை வேட்டையில் இறங்கினார். சிலைகளை அவர் உடைக்கவில்லை, கோயிலை இடிக்கவில்லை. ஜகன்னாதரின் உருவச்சிலையின் அழகில் மயங்கிவிட்டமையால், அதனைத் தமது பொருட்காட்சியில் வைக்கவே அவர் அதனை டில்லிக்குக் கொண்டு சென்றார். இக் கருத்தை நாம் ஏற்க இயலாது. பிரூஸ் எதனையும் சிந்தித்து முடிவை மேற்கொள்ளும் தன்மையுடையவர். அத்தகைய ஒருவர், யானை வேட்டைக்காக வெகுதூரத்திலுள்ள முன்பின் பார்த்தறியாத நாட்டிற்குக் காடுகளையும் மலைகளையும் கடந்து செல்லுவது என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை.

ஜகன்னாதருடைய கோயிலை அழித்ததுபற்றியும், அவருடைய உருவச்சிலையை அவமானப்படுத்தியதுபற்றியும் சிராத்-இ-பிரூஸ் ஷாயியில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மேலும், பிரூஸினுடைய மதவெறியைப்பற்றி நமக்குப் பல விவரங்கள் கிடைத்துள்ளன. எனவே, யானை வேட்டையின்பொருட்டு ஒரிசா சென்றார் என்பது பொருத்தமாக இல்லை. ஒரிசாவைக் கைப்பற்றச் சென்றார் என்பதற்கும் நமக்குச் சான்றுகள் கிடைத்தில. போரின் முடிவில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் அத்தகைய நோக்கம் இருந்ததாக யாதொரு குறிப்பையும் நாம் காணமுடியாது. எனவே, சமய காரணத்திற்காக இப் படையெடுப்பை மேற்கொண்டிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது[2].

கி.பி. 1360ஆம் ஆண்டில் ஜான்பூரை விட்டுப் புறப்பட்ட பிரூஸ், முதலில் பீகார் சென்றார். அங்கிருந்து புறப்பட்டுப் பச்செட் வழியாகச் சிகார் (Sikher) என்னுமிடத்தை அடைந்தார். சுல்தானுடைய வருகையை அறிந்ததும் அதனுடைய அரசர் ஓடிவிட்டார். பகைவரிடம் சிக்கிய அவரது மகளைச் சுல்தான், தமது வளர்ப்பு மகளாக ஏற்றுக்கொண்டார். ஆனால், தலைநகரிலிருந்த படை, வீரத்துடன் போரிட்டு இறுதியில் சரணடைந்தது. அதன்பின்னர், ஒரிசாவின் எல்லைக்குள்ளிருந்த தினன்நகர் என்னுமிடத்தை அடைந்தார். தம்மை எதிர்த்தவர்களைத் தோற்கடித்துவிட்டுப் பிரூஸ், மேலும் முன்னேறிக் கினியா நகரை அடைந்தார். அங்கிருந்து புறப்பட்டுச் சுல்தான், கட்டக்

1 JASB, N.S., XIX p. 288.
2 HCIP, p. 92.

மாவட்டத்தை அடைந்தார். சுல்தானிடம் போர் செய்வதை விடத் தப்பி ஓடுவதே மேல் எனக் கருதி, வீரான் பானுதேவா சாரங்கார் கோட்டையிலிருந்து ஓடிவிட்டார். கோட்டைக் காவலர்கள் தங்களால் இயன்ற அளவு போரிட்டு முடிவில் சரணடைந்தார்கள். அதன்பிறகு, பிரூஸ் கட்டக் நகருக்குச் சென்று பூரியிலுள்ள ஜகன்னாதர் கோயிலை அழித்தார். அங்கிருந்த சிலைகளை அவமானப்படுத்தினார். அதையடுத்து அதற்கருகில் உள்ள தீவில் புகலிடம் தேடிய 100,000 பேர்களைக் கொல்லும்படி உத்தரவிட்டார். அவர்களுள் தப்பிப்பிழைத்த பெண்களை அடிமைகளாகக் கைப்பற்றிக்கொண்டார். அதன்பிறகு, பதம் தலாவில் யானை வேட்டையை மேற்கொண்டார். இறுதியில் ஓரிசாவின் மன்னருடன் ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டார். அதுபோது சுல்தானுடைய முன்னிலையில் வீரான் பானுதேவா மண்டியிட்டு ஒவ்வோர் ஆண்டும் யானைகளைத் தவறாமல் அனுப்பி வைப்பதாக ஒப்புக்கொண்டார். சுல்தானும் அரசருக்குரிய சிறப்பு ஆடைகளை அனுப்பிவைத்து அவரைக் கௌரவப்படுத்தினார்.

சுல்தானுடைய படைகள் டில்லி திரும்பிச் செல்லும்போது பல இன்னல்களுக்கு உள்ளாயின. வழிகாட்டிகள் வழி தவறி விட்டனர். ஆறு மாதங்கள்வரை மலைகள், காடுகள்[1] ஆகிய பகுதிகளில் திரிந்து அலைந்து இறுதியில் டில்லி அடைந்தனர். பசியினாலும் அலைச்சலினாலும் அவர்கள் மிகவும் களைத்துப் போனார்கள்[1].

## நாகர்கோட் படையெடுப்பு

'நாகர்கோட்', மலையின்மீது அமைக்கப்பட்ட நகரமாகும். அதன் கோட்டையைக் காஸ்ரா என்று அழைத்து வந்தார்கள். அதனை முகமது பின் துக்ளக் வென்று தம் ஆதிக்கத்தை அங்கு நிலைநாட்டினார். ஆனால், அங்கு முஸ்லிம் ஆதிக்கம் வெகுநாள் நீடிக்கவில்லை. அதன் அரசர் டில்லியின் ஆதிக்கத்தை ஒழித்துச் சுதந்திரமாகச் செயற்படலானார். பிரூஸின் படையெடுப்புக்கு அது முக்கியக் காரணங்களுள் ஒன்றாகும்[2]. நாகர்கோட்டில் தான் புகழ்மிக்க ஜுவாலாமுகி கோயில் எழுப்பப்பட்டிருந்தது. ஆயிரக்கணக்கான இந்துக்கள் அக் கோயிலுக்குச் சென்று வழிபாடு செலுத்தி வந்தனர். மதவெறி பிடித்த பிரூஸுக்கு இது பிடிக்கவில்லைபோலும். படையெடுப்பின்போது ஜுவாலா முகி கோயிலில் திரளாகக் கூடியிருந்த இந்துக்களை நோக்கி

1 E & D III, p. 315.

2 HCI, p. 94-95; Eswari Prasad. Medieval India, p. 309.

'மூட்டாள்களே! மனவலிமை அற்றவர்களே!! இந்தக் கல்லை நீங்கள் எப்படி வழிப்பட்டு வரக்கூடும். எங்களுடைய மதத்தின் விதிகளைக் கடைப்பிடிக்காதவர்கள் நரகத்திற்குப் போவது திண்ணம் என்று எங்களுடைய மறைநூல் கூறுகிறது' என்று கூறினார்[1]. இதிலிருந்து அவருடைய படையெடுப்பின் காரணத்தை ஒருவாறு புரிந்துகொள்ள இயலும்.

சுல்தான் பிரூஸ் படையெடுத்து வருவதை அறிந்த நாகர் கோட் அரசர், காஸ்கரா கோட்டைக்குள் புகுந்துகொண்டார். எனவே, டில்லிப் படைகள் நகரத்தைக் கொள்ளையிடத் தொடங்கின. கோயில்கள் பல அழிக்கப்பட்டன. ஜுவாலாமுகி கோயில் அவர்களுடைய தாக்குதலின் முக்கிய இலக்காக அமைந்துவிட்டது. ஜுவாலாமுகி கோயிலில் இருந்த உருவச் சிலைகளைச் சுல்தான் உடைத்து, அவற்றைப் பசுவின் இறைச்சியுடன் கலந்து பைகளில் நிரப்பிப் பிராமணர்களின் கழுத்துகளில் அப் பைகளைத் தொங்கவிட்டார். பிரதான சிலையை மதினாவிற்கு அனுப்பிவைத்தார் என்று பிரிஷ்டா கூறுகின்றார். பிரூஸ், பிரதான உருவச்சிலையின்மீது பொன்னாலான குடையைப் பிடித்தார் என்று சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர். மற்றும் சிலர், பிரதானசிலை ஏதும் அங்கு இல்லை என்று கூறுகிறார்கள். கோயிலின் கர்ப்பக்கிரகத்தில் 3 அடி ஆழமுள்ள ஒரு சதுரமான குழியிருக்கிறது என்றும், அதன் மத்தியில் உள்ள ஓர் ஓட்டையில் தீக்குச்சியைக் காண்பித்தால் அதிலிருந்து வெளி வருகின்ற வாயு தீப்பற்றிக்கொண்டு கொழுந்துவிட்டெரியும் என்றும், அந்த ஓட்டையை அன்னையின் வாயாகக் கருதுகிறார்கள் என்றும், அங்குச் சிலை ஏதும் இல்லை என்றும் சிலர் கூறுகின்றனர். தலையில்லாத ஓர் உருவச்சிலை பவான் கோயிலில் இருப்பதாக அவர்கள் கூறுகின்றனர். ஆகவே, சிலைமீது குடைபிடித்தார் என்று கூறுவது முற்றிலும் பொய்யான செய்தியாகும்.

காஸ்க்ரா கோட்டையின் முற்றுகை 6 மாத காலம் நீடித்தது. ஒரு நாள் பிரூஸ், முற்றுகை ஏற்பாடுகளைக் கண்காணித்து வரும்போது, காஸ்க்ரா அரசரை நேரில் காண நேர்ந்தது. சுல்தானைக் கண்டதும் அவர் தம் கைகளைக் கூப்பி வணக்கம் செலுத்தினார். சுல்தான், உடனே தம்முடைய கைக்குட்டையை ஆட்டி, அவரைக் கீழே இறங்கி வரும்படி சைகை காட்டினார். நாகர்கோட் அரசரின் அமைச்சர்கள் அவரைச் சுல்தானிடம் செல்லும்படி அறிவுரை கூறினார்கள். சுல்தானுடைய முன்னிலையில் சென்றதும், காஸ்க்ரா அரசர் அவரது காலடியில்

[1] E & D., III. p. 318.

வீழ்ந்து வணக்கம் செலுத்தினார். சுல்தான் அவரது முதுகைத் தட்டிக் கொடுத்து, அவருக்குச் சிறப்பு ஆடையை அணிவித்தார். கோட்டைக்குத் திரும்பியவுடன் நாகர்கோட் அரசர், சுல்தானுக்குப் பரிசுகளை அனுப்பி வைத்தார். டில்லியின் மேலாதிக்கத்தை அவர் ஏற்றுக்கொண்டார். அதற்குப் பதிலாகக் காஸ்க்ரா அரசருடைய முன்னோர்கள் அனுபவித்து வந்த அதிகாரம் முழுவதையும் அவர் தொடர்ந்து அனுபவித்து வரச் சுல்தான் அனுமதி வழங்கினார்[1].

## தட்டா படையெடுப்பு

கி. பி. 1365ஆம் ஆண்டில் பிரூஸ், தட்டாவின்மீது படையெடுத்துச் சென்றார். அப் படையெடுப்புக்குப் பல காரணங்கள் உண்டு முதலாவதாக, அவர், நம் நாட்டுடன் சிந்துவை இணைத்துத் தமது ஆதிக்கத்தை விரிவுபடுத்தவேண்டும் என்று எண்ணினார். இரண்டாவதாக, முகமது பின் துக்ளக்கினுடைய தட்டா படையெடுப்புத் தோல்வியுற்றபோது பேரரசினுடைய மேன்மை ஓரளவு குறைந்துவிட்டது. அதனை ஈடு செய்யும் வகையில் பிரூஸ் படையெடுத்துச் செல்ல முற்பட்டார். மூன்றாவதாக, முகமதுவின்மீது பிரூஸுக்கு ஏற்பட்டிருந்த அன்பின் காரணமாக அவருடைய தோல்வியைப் பழி தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று பிரூஸ் எண்ணினார். நான்காவதாக, சிந்துவில் இருந்த தலைவர்களின் அட்டகாசச் செயல்கள் பொறுக்கமுடியாத அளவு பெருகிவிட்டன. கீழ்ச் சிந்து, தட்டா ஆகியவற்றை அப்போது அலாவுதீன் ஜூனுவும், சத்ருதீன் பன்பினுவும் ஆண்டு வந்தனர். மூல்தான் ஆளுநரான அயின்-இ-மஹ்ரூவிற்குப் பன்பினு அடிக்கடி தொல்லை கொடுத்து வந்தார். அதுமட்டுமன்றி, மங்கோலியர்களை மூல்தானைத் தாக்கும்படி தூண்டிவிட்டார். அவர்களைத் தண்டிக்கும் பொருட்டு பிரூஸ், தட்டாவின்மீது படையெடுத்துச் சென்றார். 90,000 குதிரை வீரர்களையும், 470 யானைகளையும் அழைத்துக்கொண்டு அவர் புறப்பட்டார். முதலில் அவர் சிலிஸ்தான், பக்கர் நகரங்களுக்குச் சென்றார். 5,000 படகுகளைக் கொண்டுவரச் செய்தார். படகுகள் ஆற்றில் மிதந்து வர, பிரூஸும் அவரது படையினரும் கரையோரமாகச் சென்று தட்டாவை அடைந்தார்கள். தட்டா முற்றுகையின்போது சுல்தானுடைய குதிரைகள் பல கொள்ளைநோய் கண்டு இறந்தன. போதிய உணவுப்பொருள்கள் இல்லாமையால் படையினர் மிகவும் கஷ்டப்பட்டனர். அந்த நேரத்தில் தட்டா படையினர் கோட்டையிலிருந்து வெளியேறிச் சுல்தானுடைய படையினைத் தாக்கினார்கள். அதிர்ஷ்டவசமாக, அப்போது ஏற்பட்ட கடுமை

[1] ACHI p. 595.

யான காற்று அவர்களைக் காப்பாற்றிவிட்டது. தட்டாவை அப்போது கைப்பற்ற இயலாது என்பது சுல்தானுக்குத் தெளிவாயிற்று. ஆயினும், அதைக் கைப்பற்றாமல் டில்லிக்குத் திரும்பிச் செல்லவும் அவருக்கு மனமில்லை. எனவே, குஜராத்திற்குச் சென்று, ராபி பயிர்கள் அறுவடைக்குத் தயாராக இருக்கும்போது தட்டா வருவதென முடிவு செய்தார்.

குஜராத் செல்லும் வழியில் சுல்தானுடைய படைகள் மிகுந்த கஷ்டங்களுக்குள்ளாயின. உணவுப்பொருள்கள் கிடைப்பது அரிதாகிவிட்டன. அவருடைய வழிகாட்டிகள் வேண்டுமென்றே அவரைக் கட்சைச் சார்ந்த சதுப்பு நிலத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு உப்புநீரைத் தவிர, வேறெதையும் அவர்கள் காண இயலவில்லை. அவர்களுடைய குதிரைகள் அனைத்தும் செத்து மடிந்தன. ரான்பகுதியைக் கடந்தபிறகு, அவர்கள் ஒரு பாலைவனத்தைக் கடக்க நேர்ந்தது. இறுதியில் மழை பெய்து அவர்களைக் காப்பாற்றிவிட்டது. முடிவில் அவர்கள் குஜராத்தை அடைந்தனர். அப்போது பிரூஸின் சகோதரியின் கணவரான நிஜாம் உல் முல்க் அமீர் உசேன், குஜராத்தின் ஆளுநராகப் பணியாற்றி வந்தார். அவரிடத்தில் அப்போது இரண்டு கோடி டங்காக்கள் இருந்தன. அவர் சுல்தானுக்கு உரிய நேரத்தில் பணத்தையும் உணவுப்பொருள்களையும் கொடுத்துதவத் தவறிவிட்டார் என்பதற்காக அவரை டில்லிக்கு அனுப்பிவிட்டு, குஜராத்தைத் தமது நேரடி நிருவாகத்தின்கீழ்க் கொண்டுவந்தார். குஜராத்தின் கருவூலத்திலிருந்த இரண்டு கோடி டங்காக்களைத் தமது படையினைப் பலப்படுத்துவதற்குப் பயன்படுத்திக் கொண்டார். டில்லியிலிருந்து கான்-இ-ஜஹான் சுல்தானுக்குத் தேவைப்பட்ட பொருள்களை அனுப்பிவைத்தார். ஆயினும், வீரர்கள் பலர் சுல்தானுடைய படையிலிருந்து விலகிச் செல்லலானார்கள். சுல்தான், அவர்கள் விலகிச் செல்வதைத் தடுக்கவில்லையென்றாலும், அவர்களுக்கு உரிய தண்டனைகளை அளிக்குமாறு அரசுக்குக் கட்டளையிட்டார். அதற்காக அவர்களுக்களிக்கப்பட்ட சம்பளங்களையோ, மானியங்களையோ அவர் திரும்பிப் பெற முயற்சிக்கவில்லை. தட்டா படையெடுப்பின் காரணமாக, அவர்கள் பட்ட துன்பத்தினைப்பற்றிச் சுல்தான் நன்கு அறிந்திருந்தமையால், அவர்களைக் கடுமையாகத் தண்டிக்க சுல்தான் விரும்பவில்லை.

எஞ்சியிருந்த படையுடன் சுல்தான் தட்டாவின்மீது மீண்டும் படையெடுத்துச் சென்றார். புறப்படுவதற்கு முன், குஜராத்தை ஆளும் பொறுப்பை ஜபர்கானுக்கு வழங்கினார். எதிர்பாராத விதமாகச் சுல்தான் சிந்து மாநிலத்தை அடைந்தபோது, அங்கிருந்த மக்கள் நிலைகுலைந்து நதியைக் கடந்து ஓடத் தொடங்கினார்கள்.

எனவே, அவர்கள் விட்டுச்சென்ற கிராமங்களையும், அறுவடைக்குத் தயாராக இருந்த தானியங்களையும் எளிதில் கைப்பற்றிக்கொள்ள இயன்றது. ஆற்றைக் கடந்து மறுகரையை அடைந்து தட்டா மக்களை அடக்குவது சுல்தானுடைய அடுத்த நடவடிக்கையாக இருந்தது. ஆற்றைக் கடக்கும்போது, பிரூஸ் கொண்டுவந்த படகுகள் அனைத்தையும் அவர்கள் கைப்பற்றிக்கொண்டு சென்று விட்டமையாலும், எண்பது கரோக்கள் தூரம்வரை அவர்களுடைய ஆதிக்கம் வலுவுடன் விளங்கியமையாலும், சுல்தானுடைய படைகளுள் ஒரு பகுதி வடக்கே பக்கர்வரை சென்ற பிறகே ஆற்றைக் கடக்க இயன்றது. அதன்பிறகு, ஆற்றோரமாக வந்து தட்டா மக்களை மேற்குப் பகுதியிலிருந்து தாக்கலானார்கள். தட்டா மக்களுக்கும் டில்லிப் படைகளுக்கும் இடையே போர் நடந்தபோது சுல்தான், மறு கரையிலிருந்து கொண்டு அப் போரைக் கவனித்து வந்தார். போரினால் ஏற்பட்ட புழுதி சுல்தானுடைய கண்களை மறைத்துவிட்டது. எனவே, அங்கு என்ன நடக்கிறது என்பதை அவர் அறிய வாய்ப்பு இல்லாது போயிற்று. தமது படைகள் வெகு தூரம் பிரயாணம் செய்து களைப்படைந்துவிட்டமையாலும், படையிலிருந்து பலர் விலகி விட்டமையாலும் தமது படைகள் தோல்வி அடைந்துவிடுமோ என்ற ஐயம் அவருக்கு ஏற்பட்டது. எனவே, தமது படைகளைத் திரும்பிவிடும்படி கட்டளையிட்டார். ஏறக்குறைய 480 கரோக்கள் வரை படைகள் அணிவகுத்துச் சென்றும் யாதொரு வெற்றியையும் காணாமல் திரும்பி வந்துவிட்டன. இதற்கிடையில் தட்டாவில் பஞ்சம் தோன்றியது, எனவே, பிரூஸிடம் சரணடைவதைத் தவிர, அவர்களுக்கு வேறு வழி புலப்படவில்லை. மேலும் டில்லியிலிருந்து உதவிப் படைகள் வரத் தொடங்கின. தட்டாவின் ஜாம் (Jam), பன்பினா ஆகியோர் நிபந்தனையின்றிச் சரணடைந்தனர்[1]. அவ் விருவரையும் டில்லிக்கு அழைத்துச்சென்று, அங்கு அவர்கள் சௌகரியமாக வாழ்வதற்கு வேண்டிய வசதிகளை ஏற்பாடு செய்துகொடுத்தார். கீழ்ச் சிந்து மாகாணத்தை ஜாமினுடைய மகனுக்கும், பன்பினாவினுடைய சகோதரனுக்கும் அளித்து, அவர்களை ஆண்டுதோறும் கப்பம் கட்டி வரும்படி ஆணையிட்டார். சில காலத்திற்குப்பிறகு, பன்பினாவின் சகோதரன் கிளர்ச்சி செய்தார். எனவே, பிரூஸ், ஜாமை தட்டாவிற்கு அனுப்பிவைத்து அவரது கலகத்தை ஒடுக்கினார்.

1 சில வரலாற்றாசிரியர்கள் ஜாம் பன்பினா என்பது ஒரே ஒரு நபரைக் குறிக்கும் பெயர் என்பர். (மீர் மசூம், தாரீக்-இ-மசூமி, எலியட், I, p. 226) ஷம்ஸ்-இ-சிராஜ் அபீப், ஜாம் வேறு, பன்பினா வேறு என்ற வகையில் கூறியுள்ளார். தற்கால வரலாற்றாசிரியர்களுள் ஈஸ்வரி பிரசாத், ஜாம் பன்பினா ஒரே ஒரு நபரைக் குறிப்பதாகவும், B. P. சக்ஸேனா, ஜாம் வேறு பன்பினா வேறு என்றும் கூறியுள்ளனர்,

1377ஆம் ஆண்டில் இதாவா ஜமீந்தார்கள் கலகம் செய்தனர். ஆனால், அக் கலகத்தைச் சுல்தான் எளிதில் அடக்கி, விட்டார்.

1380ஆம் ஆண்டில் பிரூஸ், கதேஹர்மீது படையெடுத்துச் சென்றார். கதேஹரை (ரோஹில்கண்டு) அப்போது கர்கு (Kharku) என்பவர் ஆண்டு வந்தார். அவர் பதோனின் ஆளுந ரான சையத் முகமது என்பவரையும் அவருடைய இரு சகோதரர் களையும் கொன்று விட்டார். அதற்குப் பழிவாங்குவதற்காகச் சுல்தான் படை நடத்திச் சென்றார். சுல்தான் படைநடத்தி வருவதை அறிந்த கர்கு, கதேஹரை விட்டுக் குமாயோனுக்கு ஓடினார். கதேஹரில் இருந்த இந்துக்கள் பலரை ஈவு இரக்கமின்றிக் கொன்றுவிட்டுச் சுல்தான் கர்குவைப் பின் தொடர்ந்து சென்றார். கர்குவைக் கைப்பற்ற இயலவில்லையென்றாலும் சுல்தான், இந்துக்கள் பலரைப் பிடித்துக் கொல்லுவித்தார். 23,000 பேர்களை அடிமைகளாக்கினார். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை முஸ்லிம் படைகள் கதேஹருக்குச் சென்று அதனை அழித்துவரு வதற்காக ஆப்கானியர் ஒருவரை நியமித்தார். அந்தப் பணி சரிவர நிறைவேற்றப்பட்டு வந்ததா என்பதைக் கவனிக்க, சுல்தானே ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை கதேஹர் சென்று வந்தார். அதன் விளைவாக கதேஹரில் பயிர்த்தொழில் நசித்தது. மக்கள் பீதியால் உறக்கமின்றித் தவித்தனர்.

**பிரூஸின் உள்நாட்டு நிருவாகம்**

நிருவாகத்துறையில் அவர் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். அவற்றுள் சில, நமது பாராட்டுக்கு உரியானவாக இருக்கின்றன. வேறு சில சீர்திருத்தங்களும் நடவடிக்கைகளும் கண்டனத்திற்குரியனவாக இருக்கின்றன. சில நடவடிக்கைகள் மக்களுடைய இன்பத்தையும் நலத்தையும் பெருக்கும் வகையில் அமைந்துள்ளன. மற்றும் சில, நிருவாகத் திறனைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளன. ஆகவே, அவை பேரரசின் அழிவிற்கு அடிக்கல்லாக இருந்தமையைக் காண்கிறோம்.

அவரது நிருவாகம்பற்றிய நடவடிக்கைகளுள் முதலாவதாக நாம் குறிப்பிட வேண்டியது வருவாய்ப்பற்றியதாகும். மலிக் மக்பூல் என்பவரை வசீராக நியமித்தார். ஆளுநர்கள் சமர்ப் பித்த கணக்குகளை அவர் ஒவ்வொரு நாளும் மிகக் கவனமாகப் பரிசீலனை செய்தார். அரசாங்கக் கருவூலத்தில் பணத்தைக் கொண்டு சேர்ப்பதே அவரது முக்கிய நோக்கமாக இருந்தது. அன்றாட அரசியல் காரியங்களையும் அவரே கவனித்துவந்தார்.

அலாவுத்தீன் காலத்தில் ஒழிக்கப்பட்ட ஜாகீர்முறை பிரூஸ் காலத்தில் புதுப்பிக்கப்பட்டது. பேரரசு பல மானிலங் களாகப் பிரிக்கப்பட்டது. அரசாங்க அதிகாரிகள் சம்பளத்

திற்குப் பதிலாக மானியங்களைப் பெற்றனர். படைப்பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் அனைவருக்குமே பிரூஸ் மானியங்களை வழங்கினார். மானியதாரர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த மானியங்களிலிருந்து கிடைத்த வரிப்பணத்தில் பாதிப்பங்கையே பெற்று வந்தனர். நிலவரி வசூலிப்பதில் அவர்களுக்கு யாதொரு பங்கும் அளிக்கப்படவில்லை. அரசினர் அமர்த்தியிருந்த வரிவசூல் அதிகாரிகளே அப் பணியைத் தொடர்ந்து செய்துவந்தனர். மானியதாரர்கள் தங்களுக்கு அளிக்கப்படவேண்டிய தொகையை பெறுவதற்குக் கிராமங்களுக்குச் செல்வர். அப்போது அரசாங்க அலுவலர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தொகையில் பாதிப்பகுதியைக் கொடுத்து விடுவார்கள். சில சமயங்களில் மானியதாரர்கள் கிராமங்களுக்குச் செல்வதற்குப் பதிலாக, அவர்களுக்களிக்கப்பட்டிருந்த பத்திரங்களைத் தரகர்களிடம் விற்றுவிடுவார்கள். தரகர்கள் பத்திரத்தில் குறிக்கப்பட்டிருந்த தொகையில் மூன்றில் ஒரு பகுதியை அவர்களுக்குக் கொடுத்து விடுவார்கள். இவ்வாறாக, இப் பத்திரங்களை வாங்கி வந்த தரகர் பலர் பெருஞ் செல்வத்தை ஈட்டிவிட்டனர். மானியதாரர்களுக்கு நிருவாகத்தில் யாதொரு பங்கும் அளிக்கப்படவில்லை. அரசாங்கப் பணியாளர்களுக்கும் சில நேரங்களில் சம்பளத்திற்குப் பதிலாக மானியங்கள் வழங்கப் பட்டன. அவர்களுடைய அதிகாரத்திற்குட்பட்டிருந்த பகுதி களில் கிடைக்கும் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதி அவர் களுக்குச் சம்பளமாக அளிக்கப்பட்டது; அவர்கள் அதிகமான வரிகளை வசூலித்தும், அரசுக்குச் செலுத்தவேண்டிய தொகையைச் செலுத்தாமலும் பெரும்பொருள் ஈட்டினார்கள். இந்த மானி யங்கள் யாவற்றையும் பிரூஸ், பரம்பரைச் சொத்தாக மாற்றி விட்டார். ஒரு போர் வீரர் இறந்து விட்டால், அவரது பதவி அவருடைய பிள்ளைக்கு நிரந்தரமாக அளிக்கப்படவேண்டும் என்று பிரூஸ் கட்டளையிட்டார். அப் போர் வீரருக்குப் பிள்ளை யாரும் இல்லையெனில், அஃது அவரது மருமகப்பிள்ளைக்கு அளிக்கப் படவேண்டும் என்றும், மருமகப்பிள்ளை இல்லையென்றால் அவரது அடிமைக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும், அடிமையும் இல்லை யெனில் அக் குடும்பத்தைச் சார்ந்த பெண்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் கூறினார். வயதான வீரர்கள் தங்களுக்குப் பதிலாகத் தம் மைந்தர்களையோ வேறு ஆட்களையோ அனுப்ப அனுமதி வழங்கினார். இந்த ஏற்பாடு, சிவில் பணியில் ஈடுபட் டிருந்த மானியதாரர்கள் விஷயத்திலும் நடைமுறைப்படுத்தப் பட்டது. ஓர் அதிகாரிக்குப் பல பிள்ளைகள் இருக்க நேர்ந் தால், அவர்களுள் யாருக்கு அப் பதவி அளிக்கப்படவேண்டும் என்பதை அரசு முடிவு செய்தது.

அரசாங்கத்தினை நடத்த பணம் மிகவும் அவசியம். இப் பணத்தைப் பெற அரசு பல வரிகளை விதித்து வந்துள்ளது. அவற்றுள் முக்கியமானது நிலவரியாகும். இந்த நிலவரித் தொகை ஆண்டுதோறும் மாறுபட்டுவந்தது. நிலவரியாக அரசு பெறக் கூடிய தொகையை முன்கூட்டியே அஃது அறிந்துகொள் வது நல்லது என்று கருதப்பட்டது. எனவே, பிரூஸ், குவாஜா ஹிசாமுத்தீன் ஜுனெய்த் என்பவரைப் பிரதம வரி நிர்ணயிப் பாளராக நியமித்தார். அவர், ஆறு ஆண்டுக் காலமாக நாடு முழுவதையும் சுற்றிப்பார்த்து நிலவரிபற்றிய தகவல்களைச் சேகரித்தார். பின்னர், தாம் அறிந்தவற்றை ஓர் அறிக்கையின் வாயிலாக அரசுக்குச் சமர்ப்பித்தார். ஆண்டுதோறும் ஆறு கோடியே எண்பத்தைந்து டங்காக்களை அரசு தனக்குச் சொந்த மான நிலத்திலிருந்து (கலீசா) வரியாகப் பெறவேண்டும் என்று அதில் குறிப்பிட்டிருந்தார். இந்த மதிப்பீட்டினைச் செய்யும்போது அவர் நிலங்களை அளக்கவில்லை. மேலும், அதிலிருந்து கிடைத்த தானியத்தின் அளவை அவர் அடிப்படையாகக் கொண்டு அந்தத் தொகையை அவர் நிர்ணயிக்கவில்லை. அதற்கு மாறாக, ஆங்காங்கே அவருக்குக் கிடைத்த தகவல்களை மனத்தில் கொண்டு அவர் கொண்ட தோராய மதிப்பே அந்தத் தொகையாகும். எனவே, அவருடைய மதிப்பீடு மிகச் சிறந்ததெனக் கொள்ள இயலாது எனினும், அரசுக்குச் செலுத்தவேண்டிய நிலவரித் தொகை நிலையாக வரையறுக்கப்பட்டு விட்டது. ஆண் டொன்றுக்கு அரசுக்குக் கிடைக்கவேண்டிய தொகை எவ்வளவு என்பது திட்டவட்டமாகப் புலப்படுத்தப்பட்டுவிட்டது. இதுவே பிரூஸின் முக்கியச் சாதனையாகும்.

வரி வசூல்முறை சரியானபடி அமைக்கப்பட்டிராமையால், குடியானவர்கள் பல தொல்லைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந் தனர். அவர்களுடைய துயரத்தைப் போக்கப் பல நடவடிக் கைகளை பிரூஸ் மேற்கொண்டார். நிலவரிச் சுமை குறைக்கப் பட்டது. மாநில ஆளுநர்கள் பதவியேற்கும்போது அரசுக்கு ஒரு தொகையைச் செலுத்தி வந்தனர். இத் தொகையை அவர்கள் குடியானவர்களிடமிருந்து வசூலித்தனர். ஆகவே, குடியான வர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாயினர். ஆளுநர்கள் பதவி யேற்கும்போது செலுத்தவேண்டிய கட்டணத்தைப் பிரூஸ் ரத்துச் செய்தார். பல்வேறு நியாயமற்ற வரிகளையும் அவர் நீக்கி ஞர். 23 வரிகள் நீக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. திருக்குரா னில் கூறப்பட்டிருந்த கிராஜ், உஷர், தர்கத், ஜகாத், ஜிசியா, காம்ஸ் என்ற 6 வரிகளை மட்டுமே அவர் வசூலிக்க அனுமதி வழங்கினர். கிராஜ் (Khiraj) என்பது நிலவரியாகும். இது மூஸ்லிம் அல்லாதவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது. ஐந்தில்

ஒரு பங்கு முதல் இரண்டில் ஒரு பங்குவரை இது வசூலிக்கப் பட்டது. உஷர் (Ushr) என்பது முஸ்லிம்களிடமிருந்து வசூலிக்கப் பட்ட நிலவரியாகும். விளைச்சலில் பத்தில் ஒரு பங்கை முஸ்லிம்கள் நிலவரியாகச் செலுத்தி வந்தனர். தர்கத் (Tarkat) என்பது வாரிசு அற்ற நிலமாகும். வாரிசு இன்றி ஒருவர் இறக்க நேர்ந்தால் அவரது நிலம் அரசுக்குச் சொந்தமாகும். ஜகாத் (Zakat) என்பது முஸ்லிம்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட $2\frac{1}{2}$ சதவீதச் சொத்து வரியாகும். அதாவது ஒரு முஸ்லிமிடம் ஓராண்டுக் காலம் ஏதாவது சேமிப்புத் தொகை இருந்தால், அதன்மீது $2\frac{1}{2}$ சதவீதம் அவர் அளிக்கவேண்டிய தொகையாகும். இப் பணத்தைச் சமய காரியங்களுக்காக அரசு செலவிட்டு வந்தது. ஜிசியா என்றால், முஸ்லிம்கள் அல்லாதார்மீது சுமத்தப்பட்ட தலைவரி என்று சாதாரணமாகக் கூறப்படுகிறது. பரனி போன்ற ஆசிரியர்கள் நிலவரி அல்லாத வரியே ஜிசியா என்று கூறுகின்றனர். காம்ஸ் (Khams) என்பது, போரில் கொள்ளையிடப் பட்ட செல்வத்தில் ஐந்தில் ஒரு பங்காகும். இவையன்றி அரசு, பாசன வரியையும் வசூலித்து வந்தது. விளைச்சலில் பத்தில் ஒரு பங்கு பாசன வரியாக வசூலித்துவந்தது. இந்த வரியை உலமாக்களின் அனுமதி பெற்ற பிறகே வசூலித்தார் என்பதை நாம் அறிதல் வேண்டும். இவையன்றி, வேறு வரிகளை வசூலித்து வந்த அதிகாரிகள் மிகக் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். பலவகையான சுங்க வரிகளையும் அவர் நீக்கினார். மேற்கண்ட நடவடிக்கைகள் விரும்பத்தக்க விளைவுகள் பலவற்றை உண்டாக்கின. வரிச்சுமை குறைக்கப்பட்டமையால், தரிசாகக் கிடந்த நிலங்கள் பயிரிடப்பட்டன. நிலவரி நிரந்தரமாக நிர்ணயிக்கப்பட்டமையால், குடியானவர்கள் உற்சாகத்துடன் பயிர்த்தொழிலில் ஈடுபட்டனர். ஆகவே, பயிர்த்தொழில் பெருகியது. உயர்ரகத் தானியங்கள் பயிரிடப்பட்டன. அரசாங்கத்தின் வருவாய் பெருகியது; மக்கள் சந்தோஷமாக வாழலாயினர். அவர்களுடைய வீடுகளில் தானியங்கள் நிரம்பி வழிந்தன; அணிகலன்களை அணியாத பெண்களை அவர் காலத்தில் பார்க்க இயலாது. உரிய காலத்தில் மழை பொழிந்தமையால் உணவுப் பொருட்களின் உற்பத்தி பெருகியது. விலைவாசி குறைந்தது[1]. கூலிகளும் குறைந்தன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | கோதுமை | 1 | மணங்கு | 6 | ஜிடால்கள் |
| 2. | பார்லி | 1 | ,, | 4 | ,, |
| 3. | தானியம் | 1 | ,, | 4 | ,, |
| 4. | பருப்பு | 10 | சேர் | 1 | ,, |
| 5. | நெய் | 1 | சேர் | $2\frac{1}{2}$ | ,, |
| 6. | சக்கரை | 1 | ,, | 3.3 | ,, |

விற்றதாக அபீப் கூறுகிறார்.

அவருடைய வருவாய்பற்றிய கொள்கையில் சில குறைகளும் இருந்தன. குடிமக்களிடமிருந்து வரியை அரசு நேரடியாக வசூலிக்கவில்லை. அதற்கென இடையீட்டாளர்கள் (Farmans) இருந்தனர். அவர்கள் மக்களிடமிருந்து வரி வசூலிக்கும்போது மிகக் கடுமையாக நடந்துகொண்டனர். மக்கள் வரியாகச் செலுத்திய பணம் முழுவதும் அரசுக்குக் கிடைக்கவில்லை.

திருக்குரானில் கூறப்பட்டிருக்கும் கருத்துகளின்படி பிரூஸ் நியாயம் வழங்கினார். தலைநகரில் பிரதம காஜி ஒருவர் நியமிக்கப்பட்டார். ஒவ்வொரு முக்கியமான நகரிலும் ஒரு காஜி அமர்த்தப்பட்டிருந்தார். தீர்ப்பு வழங்குவது அவர்களுடைய முக்கியப் பணியாகும். சட்டத்தை விளக்குவதற்காக முப்டிகள் (Mupti) நியமிக்கப்பட்டிருந்தனர். இத் துறையில் பிரூஸ் ஆற்றிய சிறந்த தொண்டு சித்திரவதையைத் தடுத்ததேயாகும். குற்றவாளியிடமிருந்து உண்மையைத் தருவிக்க இந்த முறை பெரிதும் பயன்படுத்தப்பட்டு வந்தது. குற்றமற்ற முஸ்லிம்கள் பலர் வீணாக வேதனைக்குள்ளாக்கப்பட்டனர். எனவே, தம் நாட்டில் இனி முஸ்லிம்களும், ஏனையோரும் சித்திரவதைக்குட்படுத்தப்படலாகாது என அவர் அறிவித்தார். கடுமையான தண்டனைகளும் நீக்கப்பட்டன.

பிரூஸ், ஒரு பெரும் படையை வைத்திருந்தார். அஃது ஏறக்குறைய 90 ஆயிரம் குதிரை வீரர்களைக் கொண்டிருந்தது. படை வீரர்கள் கருணையுடன் நடத்தப்பட்டனர். அவர்களுக்கு எல்லா விதமான சௌகரியங்களும் செய்துகொடுக்கப்பட்டன. படை வீரர்கள் இரு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தனர்—படைத் துறையில் முறையாக (Regulars) அமர்த்தப்பட்டவீரர்கள், முறையாக அமர்த்தப்படா (Iregulars) வீரர்கள். முறையாக அமர்த்தப்பட்டவர்களுக்கு அரசு மானியங்களை வழங்கியது. ஏனையோருக்குப் பணம் கொடுத்தது. குதிரை வீரர்கள் சிறந்த குதிரைகளை வைத்திருப்பதற்காகப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிறந்த குதிரைகளைமட்டுமே பதிவு அலுவலகங்களுக்குக் கொண்டுவர வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். போர் வீரர்களுக்கு அவர் காட்டிய பரிவு முடிவில் படையினுடைய திறத்தைக் குறைத்துவிட்டது. வயதானவர்களும் ஊனமுற்றோரும் தங்களுக்குப் பதிலாகத் தங்களுடைய பிள்ளைகளையோ, மருமகப்பிள்ளைகளையோ போருக்கு அனுப்பலாம் என்று பிரூஸ் கூறியபோது, நல்ல முறையில் போர் செய்யக்கூடியவர் பலர் வீட்டிலேயே தங்கிவிட்டனர். அதனாலும் படையின் போர்த் திறமை பாதிக்கப்பட்டது.

நாட்டு மக்களின் நன்மையைக் கோரி, பிரூஸ் பல திட்டங்களைக் கொண்டு வந்தார். அவற்றுள் முதலாவது, அவர்களுடைய கடன்களைப்பற்றியதாகும். முகமது பின் துக்ளக், ஏறக்குறைய 2½ கோடி டங்காக்களைப் பலருக்குக் கடனாக வழங்கியிருந்தார். அவர்களுள் பலர், விவசாயத்திற்காகக் கடன் வாங்கியிருந்தனர் அக் கடன்களை அவர்களால் திருப்பித்தர இயலவில்லை. ஏனெனில், அவர்களுள் பலர் அத் தொகையைத் தீயவழிகளில் செலவு செய்து விட்டனர், பிரூஸ் பட்டமெய்தியவுடன் அக் கடன்களை ரத்துச் செய்துவிட்டார். வறுமையில் வாடிக்கொண்டிருந்த விவசாயிகள் பலர் அதனால் பயனடைந்தனர். முகமது பின் துக்ளக்கினுடைய கொடூரச் செயல்களினால் அவதியுற்ற பலருடைய துன்பங்களை பிரூஸ் தீர்த்துவைக்க அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கினார்.

எளிய குடும்பத்தைச் சார்ந்த பெண்களின் திருமணம் வறுமையின் காரணமாகத் தடைப்படக்கூடாது என்ற எண்ணத்தினால் அவர் திவான்-இ-கைராத் (Diwan-i-Chairat) என்ற புதிய துறையை அமைத்தார். இந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் மணம் செய்துகொடுக்க இயலாமல் தவித்து வந்த பெற்றோர்களின் விண்ணப்பங்களை ஆராய்ந்து, தக்க பண உதவிகளை அவர்களுக்கு வழங்கினார்கள். வறுமையில் வாடி வந்த மக்களுக்குத் உதவி செய்ய திவான்-இ-இஸ்திகாக் (Istih-qaq) என்ற துறையை தோற்றுவித்தார். ஆண்டுதோறும் இந்தத் துறைக்கு 36 லட்சம் டங்காக்கள் அளிக்கப்பட்டன. ஏறக்குறைய 4,200 பேர்கள் இந்தத் துறையினிடமிருந்து உதவி பெற்றுவந்தனர். வேலையின்றித் தவித்த மக்களுக்கு உதவும் பணியினையும் அரசு மேற்கொண்டது. அதற்காக, ஒரு நிறுவனம் தொடங்கப்பட்டது. டில்லியின் கொத்தவால் நகரில் இருந்த வேலையற்றவர்களைத் தேடிக் கண்டு பிடித்து அவர்களை அரசர் முன்னிலையிலேயோ, நீதிமன்றத்திலேயோ கொண்டுவந்து நிறுத்தினர். அரசு தன்னால் இயன்ற உதவியை அவர்களுக்கு அளித்தது. அவர்களுள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களை அரண்மனை வேலைகளில் அமர்த்தியது. மற்றவர்களுக்குப் பிரபுக்களிடம் அடிமை வேலை செய்வதற்கு வழிவகை செய்து கொடுத்தது.

பிரூஸ் ஷா 36 காரகானுக்களை[1] அமைத்திருந்தார். அவை இரண்டு வகைப்படும்-ரதிபி, காயிர் ரதிபி என்பன. ரதிபி என்பது, மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உணவு தயாரிக்கும் தொழிற்கூடமாகும். காயிர் ரதிபி என்பது மனித சக்தியைக் கொண்டு பொருட்களைத் தயாரிக்கும் கூடமாகும். ரதிபி கார்கானுக்கள் பல இருந்தன. மாதந்தோறும் 160,000 டங்காக்கள் அவற்றை நடத்துவதற்காகச் செலவிடப்பட்டு வந்தன. ஒவ்வொரு கார்

1 அரசாங்க தொழிற்கூடங்களுக்குக் கார்கானுக்கள் என்று பெயர்.

கானுவிற்கும் ஓர் இயக்குநர் தலைமை வகித்தார். அவர்கள் அனைவருக்கும் மேலாக ஒரு தலைமை இயக்குநரும் நியமிக்கப்பட்டிருந்தார். ஒவ்வொரு கார்கானுவின் கணக்குகளைக் கவனிக்க ஒரு திவான் அமர்த்தப்பட்டார். இந்தக் கார்கானுக்கள் பலருக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்தன.

டில்லிக்கருகே சுல்தான் பிரூஸ், ஒரு தர்ம மருத்துவமனையைக் கட்டி வைத்தார். அங்குத் திறமைமிக்க மருத்துவர்கள் பணியாற்றி வந்ததோடு, நோயாளிகளுக்கு மருந்தும், உணவும் இலவசமாக வழங்கப்பட்டன[1].

அடிமைகளை வாங்குவதிலும், அவர்களைப் பராமரிப்பதிலும் பிரூஸ் மிகுந்த அக்கறையைக் காட்டி வந்தார். ஒவ்வொரு நகரத்தைத் தாக்கும்போது அங்குக் கிடைக்கக்கூடிய அழகுள்ள வாலிபர்களைப் பிடித்துத் தமக்கு அனுப்பிவைக்குமாறு பிரூஸ் தமது ஆளுநர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். அதன் விளைவாக, 180,000 அடிமைகளை அவர் சேகரித்துவிட்டார். அவர்களைக் கவனிக்க ஒரு துறையைத் தோற்றுவித்தார். அவர்களுள் சிலரைப் பிரூஸ் பிரபுக்களிடம் ஒப்படைத்து அவர்களைத் தக்க முறையில் வளர்த்து வரும்படி செய்தார். வேறு சிலருக்குக் கல்விப் பயிற்சி அளித்துவந்தார். மற்றும் சிலரை மெக்காவிற்குப் புனித யாத்திரை செய்ய அனுப்பினர். மற்றும் சிலர் மாநிலத் தலைநகரங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். ஒவ்வோர் அடிமைக்கும் சம்பளங்கள் வழங்கினர். சிலர் தங்கள் சம்பளத்தைப் பணமாகப் பெற்று வந்தனர். மற்றவர்களுக்கு நிலவரி வசூலித்துக் கொள்ளும் உரிமை வழங்கப்பட்டது. அவர்களுடைய சம்பளம் 10 முதல் 100 டங்காக்கள்வரை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அவர்களுள் பலர் பெருஞ் செல்வத்தை ஈட்டினர்கள். ஏறத்தாழ, 12,000 அடிமைகள் கைத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். 40,000 பேர்கள் சுல்தானுடைய காவல்காரர்களாகப் பணியாற்றினர். அவர்கள் இல்லாத அமைச்சும், துறையும், கார்கானுவில் இல்லை என்று கூறுவது மிகையாகாது. எனினும், அவர்கள் சுல்தானுக்கு விசுவாசமானவர்களாகக் காணப்படவில்லை.

பொதுப் பணிகள் பலவற்றைச் சுல்தான் ஏற்றுக்கொண்டு நாட்டு மக்களின் வாழ்வை வளம் பெறச்செய்தார். நீர்ப்பாசனத்திற்காக இரு பெரும் கால்வாய்களை வெட்டினர். அவற்றுள் ஒன்று சட்லெஜ் நதியிலிருந்தும், மற்றது யமுனை நதியிலிருந்தும் வெட்டப்பட்டன என்று அபீப் கூறுகிறர். யஹியா, நான்கு

1. Elliot. V & III, p. 361.

கால்வாய்கள் வெட்டப்பட்டதாகக் கூறுகிறார். அவற்றுள் முக்கியமானது 150 மைல் நீளமுள்ள யமுனை-ஹிஸ்ஸார் கால்வாயாகும். அடுத்தது சட்லெஜ் ஆற்றையும், காக்ராவையும் இணைத்த 96 மைல் நீளமுள்ள கால்வாயாகும். காக்ராவிலிருந்தும் யமுனையிலிருந்தும் இரு கால்வாய்கள் பிரூஸாபாத்வரை வெட்டப்பட்டன. சிர்மூர் மலைப்பகுதியிலிருந்து ஹான்சிவரையிலான வறண்ட பகுதியை வளம்படுத்த மற்றொரு கால்வாய் வெட்டப்பட்டது. நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க அவர் 50 அணைகளையும் 30 ஏரிகளையும் அமைத்தார். 150 கிணறுகளையும் அவர் வெட்டினார்.

புதிய நகரங்களை நிர்மாணிப்பதில் அவர் மிகுந்த கவனத்தைச் செலுத்தினார். 300 நகரங்களை அவர் படைத்ததாக நாம் அறிகிறோம். அவற்றுள் பதேபாத், ஹிஸ்ஸார், பிரூஸ்பூர், ஜான்பூர், பிரூஸாபாத் குறிப்பிடத்தக்கனவாகும். பல மசூதிகளையும். மடங்களையும், அரண்மனைகளையும், சத்திரங்களையும் அவர் கட்டுவித்தார். நூற்றுக்கணக்கான கைவினைஞர்களை அரசு வேலைக்கமர்த்தியிருந்தது. அவர்களுடைய வேலைகளை மேற்பார்வை செய்வதற்கு ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். பல தோட்டங்களை அவர் அமைத்தார். 1,200 புதிய தோட்டங்களை அவர் அமைத்ததாகக் கூறப்படுகிறது. இத் தோட்டங்களின் வாயிலாக அரசு கணிசமான தொகையை வருமானமாகப் பெற்று வந்தது.

வரலாற்றுச் சிறப்புமிக்க பழைய சின்னங்களைப் பாதுகாப்பதிலும் பிரூஸ் மிகுந்த கவனத்தைச் செலுத்தி வந்தார். அசோகர் காலத்து இரண்டு கற்றூண்களை அவர் பழுதுபடாமல் டில்லி நகருக்குக் கொண்டுவந்து சேர்த்தார். அவற்றுள் முதலாவது கிஸிராபாத் என்னுமிடத்திலிருந்தும், மற்றது மீரத்திலிருந்தும் கொண்டுவரப்பட்டன. கிஸிராபாத்திலிருந்து கொண்டுவரப்பட்ட கற்றூண் பிரூஸாபாத்தில் அமைக்கப்பட்ட மசூதியின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டது. மற்றது தற்கால டில்லி நகருக்கு அருகேயுள்ள குன்றின்மீது நிறுத்தப்பட்டது. கற்றுணர்ந்த பிராமணர்களை அழைத்து அதில் பொறிக்கப்பட்டிருந்த செய்திகளைப் படித்துப் பொருளுணர்த்துமாறு கட்டளையிட்டார்

பிரூஸ், புதிய நாணயங்களைப் புகுத்தியதாக அபீப் கூறுகின்றார். அவற்றுள் இரண்டு முக்கியமானவையாகும் — ஆதா (அரைஜிடால்) பிக் (கால்ஜிடால்). வெள்ளி, செம்பு ஆகியவற்றைக் கலந்து இவற்றைத் தயார் செய்தார். கீழ்ப்படியிலிருந்த மக்களின் சௌகரியத்திற்காக இந்த நாணயங்கள் வெளியிடப்பட்டன.

கல்வியை வளர்ப்பதிலும் பிரூஸ் மிக்க கவனத்தைச் செலுத்தி வந்தார். கல்விமான்களுக்குப் போதிய உதவித் தொகைகளை வழங்கினார். வரலாறு பாடத்தில் அவருக்கு மிகுந்த பற்று ஏற்பட்டிருந்தது, அவர் காலத்தில்தான் பரனியும், அபீபும் தங்களுடைய வரலாற்று நூல்களை எழுதினார்கள். சட்டம், மதம் ஆகியவற்றைப்பற்றிய நூல்களும் இவர் காலத்தில் எழுதப் பட்டன. சமஸ்கிருத நூல்கள் பல, பாரசீக மொழியில் எழுதப் பட்டன. பல கல்லூரிகளைப் பிரூஸ் கட்டுவித்தார். 50 மதராஸாக்களை அவர் கட்டியதாகக் கூறப்படுகிறது. ஒவ்வொரு கல்லூரியிலும் ஒரு மசூதி கட்டப்பட்டது.

பிரூஸ், சுன்னி மதப் பிரிவினையைப் பின்பற்றி வந்தார். ஆயினும், பிற மதத்தினரை அவர் துன்புறுத்தவில்லை என்பது ஒரு சாராரின் கருத்தாகும். குறிப்பாக, இந்துக்களிடம் அவர் கடுமையாக நடந்துகொள்ளவில்லை என்று ஒரு சிலர் கூறு கின்றனர். அதற்கு ஆதாரமாகச் சில நிகழ்ச்சிகளை அவர்கள் எடுத்து இயம்புகின்றனர். அவர் கைப்பற்றிய எல்லா இந்து அரசு களில் இருந்த கோயில்களையும், உருவச் சிலைகளையும் அழித்தார் என்பதற்குப் போதிய சான்றுகள் நமக்குக் கிடைக்கவில்லை. ஜுவாலாமுகி கோயிலை அழித்ததுபற்றி அபீப், தம் வரலாற்று நூலில் குறிப்பிடவில்லை. அக் கோயிலில் அமைக்கப்பட்டிருந்த சிலையின்மீது பிரூஸ், பொன்னாலான குடையைப் பிடித்ததாக ஒரு கதை வழங்கி வந்தது. காஸ்ரா நூல் நிலையத்திலிருந்த சமஸ் கிருதப் புத்தகங்களைப் பாரசீக மொழியில் எழுதும்படி ஆணை யிட்டார்.

ஆனால், இந்துக்களைத் துன்புறுத்தினார் என்பதற்கு நமக்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. பிரூஸ், தாம் எழுதிய 'புதூஹாத்-இ- பிரூஸ்ஷாயி' என்னும் நூலில் மனித வர்க்கத்தை இரு பிரிவுகளாகப் பிரித்துள்ளார். முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதார். முஸ்லிம்களுடைய நன்மையைக் கோருவதே தமது நோக்கமாகும் என்று அவர் அதில் திட்டவட்டமாகக் கூறி யுள்ளார். சித்திரவதையைத் தடை செய்யும்போது, பிரூஸ் முஸ்லிம்களுடைய இரத்தத்தைத் தாம் சிந்த விரும்பவில்லை யென்றும், அவர்களைச் சித்திரவதைக்குள்ளாக்கலாகாது என்றும் அறிவித்தார். முஸ்லிம் பெண்களுடைய திருமணத்திற்குமட்டுமே அவர் உதவி செய்ய முன் வந்தார் என்று நாம் முன்னரே கண்டோம். சுருங்கக் கூறின், அவரது ஆட்சி முஸ்லிம்களுக்காக நடத்தப்பட்ட ஆட்சி என்பதில் ஐயமேதும் இல்லை. சமயக் காரணத்திற்காக இந்துக்களைத் துன்புறுத்தியதற்குப் பிரூஸ்

சில நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறியுள்ளார். டில்லியிலும் அதைச் சுற்றிலும் அமைக்கப்பட்ட கோயில்களை அழித்து, இந்து சமயத் தலைவர்களைக் கொன்றதாகவும், இந்துக்களைக் கசையால் அடித்ததாகவும் அவர் கூறியுள்ளார். மலூ என்னும் இடத்தில் ஒரு குளம் இருந்தது. அங்குச் சிலை வழிபாடு நடந்து வந்தது. ஆண்டுக் கொருமுறை இந்துக்கள் அக்கிராமத்திற்குச் செல்வது வழக்கம். அங்கு ஆயிரக் கணக்கானவர்கள் கூடி வழிபாடு நடத்துவார்கள். சில முஸ்லிம்களும் அங்குச் செல்லத் தொடங்கினார்கள். அதைப்பற்றிச் சுல்தான் அறிந்ததும் அவரே அக் கிராமத்திற்கு நேரில் சென்று, அந்த வழிபாட்டிற்குக் காரணமாக இருந்த தலைவர்களைக் கொல்லும்படி உத்தரவிட்டார். கோயிலை இடித்துத் தள்ளினார். அந்த இடங்களில் மசூதிகளைக் கட்டினார் என்று அவரே குறிப்பிட்டுள்ளார். வேறொரு நிகழ்ச்சியைக் குறிப்பிடும்போது, புதிய கோயில்களைக் கட்டிய காரணத்திற்காக இந்துக்கள் பலரை அரண்மனை வாயிலின் முன் கொல்லுவித்தார் என்றும், அவர்களுடைய வேதப் புத்தகங்களைக் கொளுத்திவிட்டார் என்றும் அவரே கூறியுள்ளார்.

பிரூஸின் மதவெறியைப்பற்றி அபீப் சில சம்பவங்களைக் குறிப்பிட்டுள்ளார். டில்லியில் இருந்த பிராமணர் ஒருவர், தம் வீட்டில் ஒரு சிலையை வைத்துப் பகிரங்கமாக வழிபட்டுவந்தார். முஸ்லிம் பெண்கள் பலர், அவர் வீட்டிற்குச் சென்று அச் சிலையை வழிபட்டு வந்தனர். பிரூஸ், அப் பிராமணரை அழைத்து வரச் செய்து உயிருடன் கொளுத்திவிட்டார். ஜுவாலாமுகி உருவச் சிலைமீது பிரூஸ், குடையைப் பிடித்தார் என்ற கதையை அபீப் ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளார். அதுமட்டுமன்றி, இந்துக்களுடைய வழிபாட்டுச் சிலையொன்று அவரது கைகளில் கிடைத்தால், அதனை உடனே உடைத்தெறிவார் என்று அபீப் தெளிவாகக் கூறியுள்ளார். ஒரு கல்லைத் தெய்வமாகக் கருதி, அதனை வழிபட்டு வந்ததற்காக இந்துக்களைப் பழித்துப் பேசினார் என்று அபீப் கூறுகிறார். முஸ்லிம் அல்லாதாரை அழிக்கவும், கோயில்களை இடிக்கவும் ஜாஜ்நகர்மீது படையெடுத்தார் என்று சிராத்-இ-பிரூஸ் ஷாயி என்னும் நூல் நமக்கு அறிவிக்கிறது. பூரியில் இருந்த ஜகந்நாதர் சிலை அவர் கையில் சிக்கியபோது அதன் மூக்கில் துளை போடுமாறு கட்டளையிட்டார் என்றும் பின்னர், அதனைக் கீழே போட்டு மிதித்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. ஜுவாலாமுகியில் இருந்த சிலைகளை உடைத்து அவற்றுடன் பசுவின் இறைச்சியைக் கலந்து அக் கலவையைப் பைகளில் அடைத்து, அப் பைகளைப் பிராமணர்களின் கழுத்தில் தொங்க விட்டார் என்றும், பிரதான சிலையை மதினாவிற்கு அனுப்பி

வைத்தார் என்றும் நாம் அறிகிறோம். மேலும், அவர் காலத்தில் ஜிசியாவரி மிகக் கடுமையாக வசூலிக்கப்பட்டது. பிராமணர்களும் அதனைச் செலுத்த வேண்டுமென்று வற்புறுத்தினர். பிராமணர்கள் அதற்கிசைய மறுத்துத் தங்களை மாய்த்துக் கொள்வதாக அச்சுறுத்தினர்கள். சுல்தான் அதற்கு அசையாது போகவே, அவர்கள் பலநாள் உண்ணுநோன்பு மேற்கொண்டனர். இறுதியில் டில்லி மக்கள் அவர்களுடைய சார்பில் அவ்வரியைச் செலுத்த இசைந்தனர். அதன் பின்னர், பிராமணர்களின் வேண்டுகோளுக்கேற்ப அவ்வரியின் சுமை சிறிது குறைக்கப்பட்டது. இஸ்லாம் மதத்தைத் தழுவ முன் வந்த இந்துக்களுக்கு அவர் பல சலுகைகளைக் காட்டினர். இவ்வாறாகப் பலரை இஸ்லாமிய மதத்தில் சேர்த்தார். இந்தியாவை முஸ்லிம்கள் வென்ற பிறகு இவர் காலத்தில்தான்–அரசாங்கம் மதத்தைப் பரப்பும் பணியினைத் தீவிரமாக மேற்கொண்டது. எனவேதான், இவர் காலத்தில் இந்துக்கள் அதிகமான வேதனைக்குள்ளானார்கள்.

இந்துக்கள் மட்டுமன்றி, 'சுன்னி' பிரிவைச் சாராத முஸ்லிம்களும் துன்புறுத்தப்பட்டனர். 'ஷியா' மதத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டிருந்தவர்களை அவர் கடுமையாகத் தண்டித்தார். அவர்களுடைய சமயப் புத்தகங்களைத் தீக்கிரையாக்கினர். சூபிகளும் இதே போன்று நடத்தப்பட்டனர்.

மேற்கூறியவற்றிலிருந்து பிரூஸ் ஷா, மத விஷயத்தில் சகிப்புத் தன்மையைப் பெற்றிலர் என்பதும், அவர் மதவெறியில் இதற்கு முன் ஆண்ட டில்லி அரசர்களை மிஞ்சி விட்டார் என்பதும் தெளிவாகும்.

மதிப்பீடு: பரனி, அபீப் ஆகிய சமகால வரலாற்று ஆசிரியர்கள், பிரூஸ் துக்ளக்கை வெகுவாகப் புகழ்ந்துள்ளனர். அவர் நீதி தவறாதவர் என்றும், கருணையுள்ளம் படைத்தவர் என்றும், மக்களின் நலத்தைப் பேணும் நல்லரசர் என்றும் வானளாவப் புகழ்ந்துள்ளனர். எலியட், எல்பின்ஸ்டன் போன்ற தற்கால வரலாற்றாசிரியர்கள் அவருடைய அரும் பணிகளைக் கருத்தில் கொண்டு டில்லி சுல்தானியத்தின் அக்பர் என்று அவரைப் பாராட்டியுள்ளனர். அக்பருடைய ஆட்சி தொடங்குவதற்குமுன் முஸ்லிம் ஆட்சியின் சிறந்த காலப் பகுதியினைப் பிரூஸினுடைய ஆட்சி முடித்து வைக்கிறது என்று தற்கால வரலாற்றாசிரியர் ஒருவர் கூறியுள்ளார். டில்லியை ஆண்ட சுல்தான்களுள் கடைசிப் பெருமைமிக்க மன்னர் பிரூஸ்ஷா என்பதில் கருத்து வேறுபாடு தோன்ற வழியில்லை. ஆயினும், அவரை அக்பருக்கு ஒப்பிடுவ

தென்பது சரியன்று. அக்பரிடம் காணப்பட்ட பரந்த மனப் பான்மையில் நூறில் ஒரு பங்குகூட அவரிடம் காணமுடியாது என்று ஈஸ்வரி பிரசாத் கூறியுள்ளார்[1]. பிரூஸ் ஷா, அக்பர் ஆகியோருக்கு இடையே ஷெர்ஷா தோன்றி இந்தியாவிலே ஒரு சிறந்த முஸ்லிம் ஆட்சியை ஏற்படுத்தியதை வரலாற்றாசிரியர்கள் சிலர் மறந்து விட்டனர். ஷெர்ஷாவின் ஆட்சி, பிரூஸ் ஆட்சியை விட எந்த விதத்திலும் தாழ்ந்ததன்று. எல்லா வகையிலும் பிரூஸைவிட ஷெர்ஷாவே உயர்ந்தவராவார் என்று கூறு வாருமுண்டு. இவ்விரு கருத்துகளையும் நாம் அப்படியே ஏற்றுக் கொள்ளவும் இயலாது.

மக்களுடைய நன்மையைப் பெரிதாகக் கருதிச் செயல்பட்ட ஒரு சில அரசர்களுள் பிரூஸும் ஒருவர் என்பதை நாம் மறுக்க இயலாது. அவரது வருவாய்பற்றிய கொள்கை, அவர் செய்து கொடுத்த நீர்ப்பாசன வசதிகள், அவர் அமைத்த தோட்டங்கள், மக்களுடைய பொருளாதாரநிலையை உயர்த்தின என்பதில் ஐயமில்லை. மக்களுடைய வேதனையைப் போக்க அவர் கையாண்ட முறைகள் அவருடைய ஆட்சியின் பெருமையை உயர்த்திவிட்டன. அவரது அரசு நிலையானதாக அமைந்துவிட அவை உதவின. இஸ்லாமிய மதத்தில் அவருக்கு மிகுந்த பற்று ஏற்பட்டிருந்தது. அவர் காலத்தில் மக்கள் அமைதியாகவும் செல்வச் செழிப்புடனும் மன நிறைவுடனும் வாழ்ந்து வந்தனர். விலைவாசி குறைந்து இருந்தது. ஆனால், அவரது ஆட்சியில் பல குறைகளும் இருந்தன. பிரூஸ், தம்மை முஸ்லிம்களின் மன்னராகக் கருதினாரேயன்றி, ஒரு தேசீய அரசராகக் கருதவில்லை. டில்லி சுல்தானியம் முஸ்லிம் களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஆட்சியாகவே அவர் எண்ணினார். அவரது நலம் பயக்கும் நடவடிக்கைகள் யாவும் முஸ்லிம்களின் துயரத்தைப் போக்கவே கொண்டுவரப்பட்டன. முஸ்லிம்களே அதிகாரப் பீடத்திலிருந்து ஆட்சி செலுத்தி வந்தனர். இந்துக் களுக்கு அரசியலில் முக்கியமான பங்கு ஏதும் அளிக்கப்படவில்லை. அதற்கு மாறாக, அவர்கள் சமய காரணத்திற்காகப் பலவித இன்னல்களுக்கு உள்படுத்தப்பட்டனர். அவர் காலத்தில் இஸ்லாமிய மத குருக்கள் அரசியலைக் கட்டுப்படுத்தி வந்தனர். திருக்குரானில் கூறியுள்ளபடி ஆட்சி நடத்தப்பட்டு வந்தது. அது முஸ்லிம்களின் ஆதரவை அவர் பெற உதவியது. ஆனால், அவர் இந்துக்களிடம் காட்டிய வெறி அவர்களுடைய எதிர்ப்பைத் தூண்டி விட்டது. அவருடைய நிருவாகத்தில் கடுமையைக் காண இயலாது. திறமையற்ற அரசுப் பணியாளர்களுக்கு யாதொரு

[1] History of Medieval India, p. 281.

தண்டனையும் அளிக்கப்படவில்லை. நிருவாகத்தில் காணப்பட்ட ஊழல்களை அவர் கண்டும், காணாதது போல் இருந்துவிட்டார் பிரபுக்களுக்கு அவர் தேவைக்கு மீறிய சலுகைகளைக் காட்டினார். படைவீரர்களுக்கு அவர் காட்டிய சலுகைகள் படையின் போர்த் திறத்தைக் குறைத்துவிட்டது. முஸ்லிம்கள்மீது அவர் போர் தொடுக்க விரும்பவில்லை. அது முஸ்லிம்களை அவருக்கெதிராகப் போர் தொடுக்க ஊக்குவித்தது. டில்லி சுல்தானியத்தின் அழிவிற்கு இஃது ஒரு முக்கியக் காரணமாகும். அவர் சிறந்த போர் வீரரும் அல்லர். ஆகவே, முஸ்லிம் அரசுக்குத் தேவையான புகழை அவரால் சம்பாதித்துக் கொடுக்க இயலவில்லை. அடிமைகள் விஷயத்தில் அவர் காட்டிய பரிவும் சுல்தானியத்தின் அழிவிற்கு ஒரு காரணமாகும். அவர் சேகரித்து வைத்த அடிமைகள் அவரிடம் விசுவாசம் காட்டுவதற்குப் பதிலாக, அவருடைய சந்ததியார்களை அழிப்பதில் உற்சாகத்தைக் காட்டினார்கள். மேற்கூறியவற்றிலிருந்து அவர் மக்களிடையே பெற்றிருந்த செல்வாக்கிற்குக் காரணமாக இருந்த நடவடிக்கைகளே சுல்தானியத்தின் அழிவிற்குக் காரணமாகி விட்டனவென்பது நன்கு புலப்படும். அத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒருவரை அக்பருக்கு ஒப்பிட்டுப் பேசுதல் சரியன்று என்பது வெள்ளிடைமலை.

# 4. பிரூஸ் ஷாவிற்குப் பின்னர் ஆண்ட துக்ளக் அரசர்கள்

பிரூஸினுடைய இறுதிக் காலத்தில் அவருடைய மூத்த மகனான முகமது வசீராகவும், பின்னர் இணைச்சுல்தானாகவும் பொறுப்பேற்றார். கி.பி. 1388-ல் பிரூஸி அடிமைகள் கலகம் செய்தனர். முகமது அவர்களுடன் போரிட்டு அவர்களிடம் தோல்வியுற்றார். அதன் பின்னர், அவர் சிர்மூர் மலைப்பகுதிக்கு ஓடிவிட்டார். எனவே, துக்ளக் ஷா என்பவரை பிரூஸ் இணைச் சுல்தானாக நியமித்தனர். இவர் ஃபத்கானுடைய (Fathkhan) மகனாவார். கி.பி. 1388ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ஆம் நாள் பிரூஸ் காலமான உடனே துக்ளக் ஷா அரசப் பொறுப்பை முழுமையாக ஏற்றுக்கொண்டார். அதனை அறிவிக்கும் வகையில் இரண்டாவது கியாஸ் உத்தீன் துக்ளக் ஷா என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார்.

பட்டம் எய்திய பிறகு, முதல் வேலையாகப் படையொன்றை முகமதுவிற்கு எதிராக அனுப்பிவைந்தார். முகமது அதனிடமிருந்து தப்பித்துக்கொண்டு நாகர்கோட் சென்றார். துக்ளக் ஷாவிற்கு அரசியல் அனுபவம் சிறிதும் கிடையாது. தம்மைச் சூழ்ந்திருந்த ஆபத்தை உணராமல் அவர், தம் காலத்தைக் குடிப்பதிலும் களியாட்டத்திலும் செலவிட்டு வந்தார். இந்த வகையான சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு பிரூஸி அடிமைகள் தங்களுடைய செல்வாக்கைப் பெருக்கிக்கொண்டனர். கி. பி. 1389-ல் அவர்கள் சுல்தானுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து துக்ளக் ஷாவைக் கைப்பற்றி, அவருடைய தலையைச் சீவினார்கள். அதையடுத்து அபுபக்கர்ஷாவை அவர்கள் சுல்தானாக நியமித்தனர். பிரூஸி அடிமைகளின் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய ருக்னுத்தீன் ஜுண்டா வசீராகப் பொறுப்பேற்றார்.

அபுபக்கர்ஷா தம்முடைய ஆதரவாளர்களின் துணைகொண்டு முதலில் பிரூஸி அடிமைகளின் பிடியிலிருந்து தப்பினார்,

ஜுனைடாவும் அவரது ஆதரவாளர்களும் கொல்லப்பட்டனர். அதனையடுத்து அவர் முகமதுவுடன் போரிட நேர்ந்தது. கி.பி. 1389-ல் சமானாவில் ஏற்பட்ட கலகத்தைப் பயன்படுத்திக் கொண்டு முகமது சமானாவில் இரண்டாவது முறையாகச் சுல்தான் பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். அங்கிருந்து அவர் டில்லி நோக்கிப் படை நடத்திச் சென்றார். பிருஸி அடிமைகள் அனைவரும் அவருக்கு விரோதமாக இருந்தமையால், அவர் டில்லியி லிருந்து விரட்டப்பட்டார். அதன் பின்னர், அவர் ஜாலேசரில் (Jalesar) தமது அரசை நிறுவினார். அங்கிருந்துகொண்டு மீண்டும் டில்லிமீது படையெடுத்தார். மறுபடியும் அவர் தோல்வியுற்றார். அவரது தோல்விக்குப் பிருஸி அடிமைகளே காரணமாக இருந் தமையால், மாவட்டங்களில் வாழ்ந்துவந்த பிருஸி அடிமைகளைக் கொன்று விடும்படி உத்தரவிட்டார். கி.பி.1390-ல் முகமதுவின் மகனான ஹுமாயூன்கான் டில்லியைத் தாக்கினார். அவரும் தோல்வியடைந்தார். அபுபக்கர்ஷாவை டில்லி மக்கள் மட்டுமே ஆதரித்து வந்தனர். டில்லியைச் சுற்றியிருந்த மாவட்ட அதி காரிகள் முகமதுவை ஆதரித்தனர். இந்த நிலையில் அபுபக்கர்ஷா டில்லியை விட்டு ஜாலேசர் நோக்கிப் படையெடுத்தார். அந்தச் சமயம் பார்த்து முகமது டில்லிக்கு விரைந்து அதனைக் கைப்பற்றிக் கொண்டார். அச்செய்தியை அறிந்ததும் அபுபக்கர் உடனே டில்லிக் குத் திரும்பினார். டில்லியிலிருந்த பிருஸி அடிமைகள் இப்போது முகமதுவை ஆதரிக்கத் தலைப்பட்டனர். இந்தத் திடீர் மாற்றத் திற்கு முக்கியக் காரணம், அவர்களுடைய தேவைகளை அபுபக்கர் ஷா நிறைவேற்றி வைக்கத் தவறியமையேயாகும். அஃது அவ ருடைய தவறு என்று சொல்வதற்கில்லை. அவரது ஆதிக்கம் டில்லியில் மட்டுமே ஏற்படுத்தப்பெற்றிருந்தமையால், அவரிடம் போதிய பணமில்லாது போயிற்று. எனவே, அபுபக்கர் மேவாத் திற்கு ஓடிவிட்டார். விரைவில் பிருஸி அடிமைகள் தங்களுடைய தவறை உணரலாயினர். முகமது திறமைமிக்கவராக இருந் தமையால், பிருஸி அடிமைகள் அபகரித்துக்கொண்ட யானைகளை அவர்களிடமிருந்து பறித்துக்கொண்டார். மேலும், பல இன்னல் களுக்கு உட்படுத்தப்படுவதற்கு முன்னர், அவரிடமிருந்து தப்பித்துக்கொள்வதே மேலெனக் கருதி, அவர்கள் டில்லியை விட்டு ஓடிவிட்டனர். எஞ்சியிருந்தவர்கள் டில்லியிலிருந்து அகற்றப்பட்டனர். அதன்பின்னர், ஹுமாயூனையும், தமது வசீரான இஸ்லாம்கானையும் அபுபக்கரைப் பிடித்து வருவதற்காக முகமது அனுப்பிவைத்தார். மஹேந்திரி என்னுமிடத்தில் 1391-ல் நடைபெற்ற போரில் அபுபக்கர் தோல்வி அடைந்தார். அபுபக்கர் சரணடைந்தார். அம்ரோஹா கோட்டையில் சில காலம் சிறை வாசத்திற்குப்பின் அபுபக்கர் காலமானார்.

அதன் பிறகு, முகமது தமது கவனத்தைத் தோவாப் பகுதியிலிருந்த இந்துத் தலைவர்களை அடக்குவதில் செலுத்திவந்தார். அவர்களுள் பலரைச் சுல்தானுடைய படைத் தலைவர்கள் தந்திரமாகக் கொன்றுவிட்டனர். 1394-ல் முகமது இறந்தார்.

அவருக்குப்பின், அவரது இரண்டாவது மகனான ஹுமாயூன், சுல்தான் அலாவுத்தீன் சிக்கந்தர்ஷா என்ற பட்டத்துடன் டில்லி அரியணையில் அமர்ந்தார். 1 மாதம் 16 நாட்கள் அரசாண்ட பின், அவர் உயிர் நீத்தார். அவருக்குப் பின்னர், நாசிர் உத்தீன் மாமூத் பட்டம் எய்தினார். அவர் காலத்தில் முக்கியமான மாநிலங்கள் யாவும் சுதந்திரமடைந்தன. அவருடைய வசீரான குவாஜா-இ-ஜஹான், கன்னோசி முதல் பீஹார் வரையிலான பகுதிகளை ஆளும் உரிமையுடன் கிழக்குப் பகுதியின் சுல்தான் என்ற பட்டத்தையும் பெற்றார். இவ்வாறாக, ஜான்பூரில் ஷர்க்கிகளின் (Sharqi) ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. மேற்குப் பகுதியில் சாரங்கான் (Sarangkhan) என்பவர், தீபால்பூரில் தமது ஆட்சியை நிறுவினார். சமோதலா (Samothala) என்ற இடத்தில் ஷெய்கா கோகர் (Shaika Khokar) என்பவரைத் தோற்கடித்து லாகூரில் தமது ஆட்சியை ஏற்படுத்தி அதற்குத் தமது இளவல் ஆடில்கான் என்பவரை ஆளுநராக நியமித்தார். பின்னர், அவர் மூல்தானின் ஆளுநரான கிஸிர்கான் என்பவரைத் தோற்கடித்து மூல்தானைக் கைப்பற்றினார். பின்னர், சமானாவின் ஆளுநரான காலிப்கான் (Ghalib Khan) என்பவரையும் தோற்கடித்தார். தோற்று ஓடிய காலிப்கான் தாதர்கானிடம் புகலிடம் நாடினார். குஜராத், மாளவம், காண்டேஷ் ஆகிய மாநிலங்களும் சுதந்திரம் பெற்றன.

நாசிர் உத்தீன் மாமூத் காலத்தில் மூன்று அதிகாரிகள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அவர்களுள் முகர்ரப்கான் என்பவரை டில்லியில் விட்டுவிட்டு, சாதத்கான் என்ற மற்றோர் அதிகாரியுடன் சுல்தான், குவாலியருக்குச் சென்றார். அங்கு சாரங்கானுடைய சகோதரனான மல்லு இக்பால் கான் லோதியும் ஏனைய அமீர்களும் சேர்ந்து சாதத்கானைக் கொல்ல முயற்சி செய்தனர். அதையறிந்துகொண்ட சாதத்கான், சூழ்ச்சிக்காரர்கள்மீது தாக்குதல் நடத்தினார். மல்லு அதிலிருந்து தப்பிக் கொண்டு டில்லிக்குச் சென்று, அங்கு முகர்ரப்கானுடைய ஆதரவை நாடினார். எனவே, சாதத்கான் மாமூத்தை அழைத்துக்கொண்டு டில்லி வந்தார். மூன்று மாதங்கள் டில்லி முற்றுகையிடப்பட்டு வந்தது. இறுதியில் இம்முற்றுகை சுல்தானுக்காக வன்றிச் சாதத்கானுக்காக நடத்தப்பெற்று வருகிறது என்று

சுல்தானுடைய படைகள் உணரலாயின. எனவே, அவர்கள் முகர்ரப்கானுடன் உடன்பாடு செய்துகொண்டனர். சாதத்கான் பிரூஸாபாத்திற்கு ஓடினார். அங்கு நாசீர் உத்தீன் நஸ்ரத்ஷா என்பவரைச் சுல்தானாக முடிசூட்டுவித்தார். அவர், பிரூஸினுடைய மகனான ஃபகத்கானுடைய மகனாவார். நஸ்ரத்ஷா பெயரளவிற்கு அரசராக இருந்தார். அதிகாரம் முழுவதும் சாதத்கானுடைய கைகளிலே இருந்துவந்தது. திடீரென்று ஒருநாள் ஏற்பட்ட கலகத்தின் காரணமாகச் சாதத்கான் டில்லிக்கு ஓடி முகர்ரப்கானுடைய ஆதரவை நாடவேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது முகர்ரப், சாதத்கானைக் கைது செய்து கொன்றுவிட்டார். எனினும், பிரூஸாபாத்தில் சாதத்கான் அமைத்த போட்டி அரசு தொடர்ந்து செயற்பட்டு வந்தது. தாதர்கான் வசீராக இருந்து அவ் வரசினை நடத்தி வந்தார். டில்லியில் ஆட்சி செலுத்திவந்த நாசீர் உத்தீன் மாமூத்தின் ஆதரவாளர்களுக்கும் பிரூஸாபாத்தில் அரசு செலுத்திவந்த நஸ்ரத்ஷாவின் ஆதரவாளர்களுக்கும் இடையே இடைவிடாது போர் நடந்து வந்தது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, மல்லு இக்பால்கான் முகர்ரப்கானுடன் சண்டையிட்டுக்கொண்டு நஸ்ரத்ஷா பக்கம் சேர்ந்து கொண்டார். சில நாள்களுக்குப் பிறகு, நஸ்ரத்ஷாவிற்கு எதிராக அவர் சூழ்ச்சி செய்யலானார். அதை அறிந்ததும் நஸ்ரத் பானிப்பட்டிற்கு ஓடித் தாதர்கானுடன் சேர்ந்துகொண்டார். பிரூஸாபாத் மல்லூ இக்பாலின் கைவசமாயிற்று. அதையடுத்து, அவர் முகர்ரப்கானைக் கொன்றுவிட்டுச் சுல்தான் மாமூத்தைத் தம்முடைய கட்டுக்குள் கொண்டுவந்தார். பின்னர், தாதர்கானுடன் போர்புரிய ஆயத்தமானார். பானிப்பட், மல்லூகான் கைவசமாயிற்று. தாதர்கான், தம் தாய்நாடான குஜராத்திற்குத் திரும்பிவிட நேர்ந்தது. நஸ்ரத்ஷா தோவாப் பகுதிக்கு ஓடிவிட்டார். இவ்வாறாக, டில்லியில் மாமூத்தினுடைய பெயரில் மல்லூகானுடைய ஆட்சி நிலைநாட்டப்பட்டது. அந்த நேரத்தில் தான் தைமூரின் இந்தியப் படையெடுப்பும் ஏற்பட்டது.

### தைமூரின் படையெடுப்பு (கி.பி. 1398-1399)

டெல்லி சுல்தானியத்தின் அழிவிற்கு ஒரு காரணமாக அமைந்திருந்த தைமூர், 736ஆவது ஹிஜ்ரா ஆண்டு ஷாபான் மாதம் 25ஆம் நாளன்று, 1336ஆம் ஆண்டு ஏப்ரல் 9ஆம் நாள் செவ்வாய்க்கிழமை சாமர்கண்டு நகருக்குத் தெற்கே நாற்பது மைல் தூரத்திலுள்ள டிரான்ஸ் ஆக்ஸி[1]யானாவிலுள்ள கேச்

[1] டிரான்ஸ் ஆக்ஸியானா என்பது, ஆக்லஸ், ஜகார்தெஸ் ஆகிய இரு நதிகளுக்கு இடையேயுள்ள பகுதியாகும்.

அல்லது ஷஹார்-இ-சப்ஸ் என்னும் நகரில் பிறந்தார். அவரது முழுப்பெயர் 'அமீர் தைமூர் கூர்கான்' என்பதாகும். கூர்கான் என்பது, 'கூர்க்' என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். 'கூர்க்' என்றால், ஓநாய் என்று பொருள். அவரது குடும்பத்தின் சின்னம் ஓநாய் என்பதால், கூர்கான் என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது. அவரது தந்தையின் பெயர் அமீர் துர்காய். அவர் துருக்கி இனத்தைச் சார்ந்த பர்லாஸ் வகுப்பைச் சார்ந்தவராவார். அவர், கேர் நகரத்தைச் சுற்றியிருந்த பகுதியை ஆண்டு வந்தார். அவரது தாயார் பெயர் தகீனுகாதூன் என்பது. அவருக்கு 'சாஹிப்-இ-கிரான்' என்ற பட்டப்பெயரும் உண்டு. 'சாஹிப்-இ-கிரான்' என்பதற்கு அதிர்ஷ்ட தேவதை என்று பொருள். சகடைகானிடம் அமைச்சர் பணியாற்றி வந்த தமது முப்பாட்டனை கராசார் நூயான் என்பவரின் பராமரிப்பின்கீழ் அவர் கல்வி பயின்றார். கி.பி. 1361ஆம் ஆண்டில் தமது 25ஆவது வயதில் தந்தையை இழந்தார். அதற்கடுத்த ஆண்டு அவர் தமது நாட்டைவிட்டு ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது. 1363ஆம் ஆண்டு ஒரு சீஸ்தானிய படையுடன் போரிடும்போது அவரது காலில் ஓர் அம்பு தைத்து அவருக்கு நிரந்தரமான ஊனத்தை ஏற்படுத்திவிட்டது. அதுமுதல் அவர் நொண்டி நொண்டி நடக்கலானார். ஆகவே, அவரது துருக்கியப் பகைவர்கள் அவரை அக்ஸக்-தைமூர் (நொண்டி தைமூர்) என்று அழைக்கலாயினர். பாரசீகர்கள் அவரை தைமூர்-இ-லாஸ் (நொண்டி தைமூர்) என்றனர். ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் அவரை தாமர்லேன் என்று குறிப்பிடலானார்கள். கி.பி. 1370-ல் அவர் டிரான்ஸ் ஆக்ஸியானாவினைத் தமது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவந்தார். அதைத் தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் அவர் இடைவிடாது போர் செய்து வந்தார். இந்த நாற்பது ஆண்டுகளில் அவர் ஒரு போரில்கூடத் தோல்வியுற்றதில்லை என்பது இங்குக் குறிப்பிடுதற்குரியதாகும். இப் போர்களின் விளைவாக, மேற்கே டார்டனல்ஸ் நீர்சந்தி முதல் கிழக்கே டில்லி வரையிலுள்ள பகுதியில் அவர் தமது ஆட்சியை நிறுவினார். அவரது வாழ்க்கையின் இறுதி நாள்களில் அவர் இந்தியாமீது படையெடுத்து வந்தார்.

தைமூரின் இந்தியப் படையெடுப்புக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. போர் புரிவதிலும், நாடு சேர்ப்பதிலும் அவருக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. இந்தியாவின் எல்லைவரை தமது இராச்சியத்தை விரிவுபடுத்திவிட்ட பிறகு, மத்திய ஆசியாவின் தன்னிகரற்ற தலைவருக்கு இந்தியாவை வெல்ல வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டதில் வியப்பேதும் இல்லை.

மேலும், அலக்சாண்டரைப்போல் இந்தியாவில் வெற்றிவாகை சூடிப் புகழடைய வேண்டும் என்ற அவா அவருக்கிருந்தது[1].

படையெடுப்பைத் தொடங்குவதற்குமுன் அவர், போர் ஆலோசனைக் குழுவொன்றைக் கூட்டினார். அதில் படைத் தலைவர்களும், உலாமாக்களும் பங்கு கொண்டனர். அதுபோது பீர்முகமது இந்தியாவின் செல்வத்தைப்பற்றித் தைமூரிடம் கூறினார். ஷாருக், பரந்து கிடந்த இந்திய நாட்டினைக் கைப்பற்று வதால் ஏற்படக்கூடிய அனுகூலங்களை விவரித்தார். இஃது அவரது படையெடுப்பிற்கு ஒரு காரணமாக அமைந்திருக்கக்கூடும். போர் ஆலோசனைக் கூட்டத்தில் தைமூர் பேசும்போது இஸ்லாமிய மதத்தில் நம்பிக்கை கொண்டிராத இந்திய மக்களை இஸ்லாமிய மதத்தில் சேர்ப்பதே தமது படையெடுப்பின் முக்கிய நோக்க மாகும் என்று அவர் திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இந்தியா விலுள்ள கோயில்களை அழித்து, வழிபாட்டுச் சிலைகளை உடைத்து, இந்திய நாட்டினைத் தூய்மைப்படுத்தப் போவதாக அவர் அப்போது குறிப்பிட்டார். அவ்வாறு செய்வதன் வாயிலாக, அவரும் அவரது வீரர்களும் கடவுளின் முன்னால் காஜி (ghazi) களாகத் திகழவேண்டும் என்ற ஆசை அவருக்கு ஏற்பட்டிருந்தது என்பதை அவரது பேச்சிலிருந்து அறிந்துகொள்ளுகிறோம். இதிலிருந்து இஸ்லாமிய சமயத்தைப் பரப்பும் பொருட்டே அவர் இந்தியாவின்மீது படையெடுத்தார் என்று நாம் கூறத் தோன்றும். தைமூர் சிலை வழிபாட்டை வெறுத்ததாக நமக்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. சிலை வழிபாடு செய்து வந்த துருக்கியர் பலர் அவரது படையில் சேர்ந்திருந்தனர். நெருப்பை வழிபட்டு வந்த பாரசீகர்களும் அவரது படையில் இருந்தனர். படையெடுப்பின்போது அவரது வீரர்கள் தங்க ளுடைய வழிபாட்டுச் சிலைகளைத் தம்முடன் எடுத்துச் சென்ற தாக நாம் அறிகிறோம். கோயில்களை இடித்தபோது அவர் கழி பேருவகை அடைந்ததாக நாம் அறிவதற்கில்லை. மேலும், இந்துக்கள் மட்டுமன்றி முஸ்லிம்கள் பலரும் அவர் கைகளில் சிக்கி அவதியுற்றனர். இவற்றைக்கொண்டு பார்க்குமிடத்துச் சமயத்தைப் பரப்புதலே முக்கியமான நோக்கம் என்று சொல்வதற்குச் சற்றுத் தயங்கவேண்டி இருக்கிறது. எனவே, இந்தியாவின் செல்வத்தைக் கொள்ளை அடிக்கவேண்டும் என்ற எண்ணமும், இஸ்லாமிய மதத்தைப் பரவச் செய்ய வேண்டும் என்ற நோக்கமும் கலந்ததன் விளைவே தைமூரின் இந்தியப் படையெடுப்பு என்று கூறுவது பொருத்தமாகும். வேறு சில காரணங்களையும் நாம் கூற இயலும். பிரூஸ் ஷாவிற்குப்

1 K. S. Lal Twilight of the Sultanate, p. 15

பிறகு இந்தியாவில் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பம் அவரை ஊக்குவித்திருக்கக்கூடும். அதைப்பற்றி நாம் முன்பே கவனித்துள்ளோம்.

படையெடுப்புக்கு உடனடியான காரணம் பீர்முகமது உதவி கோரித் தைமூருக்கு அடிக்கடி அனுப்பிவைத்த முறையீடுகளே யாகும். மத்திய ஆசியாவினை வென்ற பிறகு, தமது பேரரான பீர்முகமதுவைக் குந்தூஸ், பக்லான், காபூல், கஜினி, காந்தஹார் ஆகியவற்றினுக்கு 1397-ல் ஆளுநராக நியமித்து அவரைக் கிழக்கு நோக்கிப் படையெடுத்துச் சென்று மேலும் பல நாடுகளை வெல்லும்படி அவர் கூறியிருந்தார். அதற்கிணங்க பீர்முகமது ஊச் நகரத்தை வென்றார். பின்னர், மூல்தானைத் தாக்கினார். மூல்தான் அப்போது சாரங்கான் கைவசமிருந்தது. சாரங்கான் அதனுடைய கோட்டையைப் பலப்படுத்தி வைத்திருந்தார். எனவே, அதனைக் கைப்பற்றுவது சற்றுக் கடினமாக இருந்தது. ஆகவே, அவர் அடிக்கடி உதவிகோரி, தைமூருக்கு முறையீடுகள் பல செய்துவந்தார். தமது பேரனைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமே தைமூரை அவரது தலைநகரிலிருந்து வெளிப் படுமாறு செய்தது.

கி.பி. 1398ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் தைமூர் சாமர் கண்டை விட்டு 92,000 பேர்கள் கொண்ட படையுடன் புறப் பட்டார். அவர் ஆப்கானிஸ்தானத்தை அடைந்தபோது, சியா போஷ்கள் (Siyah-poshes), கதோர் (kator) மக்கள் ஆகியோர் முஸ்லிம்களுக்கு இழைத்துவரும் கொடுமைகளைப்பற்றி அறிந்தார். எனவே, அவ்விரு இன மக்களையும் அடக்குவதற்குத் தம் படைகளை அனுப்பிவைத்தார். கதோர்க் கோட்டை தரைமட்டமாக்கப் பட்டது. அவர்களுடைய வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அவர்களுள் பலர் கொல்லப்பட்டனர். அவர்களுடைய பெண்டு பிள்ளைகள் பலர் அடிமைகளாக்கப்பட்டனர். அதையடுத்துத் தைமூர் சியா போஷ்களைத் தாக்கி, அவர்களுடைய நகரங்கள் சிலவற்றைக் கைப்பற்றினார். அதன் பின்னர், ஆப்கானிஸ் (Afghanis) என்ற மக்கள் கூட்டத்தைத் தாக்கினார். கி.பி. 1398ஆம் ஆண்டு செப்டம்பர் 20ஆம் நாள் அவர் சிந்து நதியை தன்கோட் என்னுமிடத்தில் கடந்தார். காஷ்மீர் அரசரான சிக்கந்தர்ஷா தைமூருக்கு அடிபணிந்தார். தைமூர், அங்கிருந்து புறப்பட்டு ஜீலம் ஆற்றை அடைவதற்குள் இந்திய ஜமீன்தார்கள் பலரும், ராஜாக்களும் அவரது நட்பை நாடினார்கள். ஜீலம் நதியைக் கடந்த பின்னர், 'துலம்பா' என்ற கோட்டையை அவர் எளிதில் வென்றார்.

துலம்பா மக்களிடமிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை இழப்பீடாகப் பெற்றுக்கொண்டு ஷாபூருக்குச் சென்றார். அங்கிருந்து கொண்டு ஜிஸ்ரத் கோக்கரைத் தாக்கினார். இறுதியில் கோக்கர்கள் தைமூருக்குப் பணிந்துவிட்டனர். பின்னர், ரவி ஆற்றைக் கடந்து தைமூரின் படைகள் தீபால்பூர் நோக்கிப் புறப்பட்டன. இதற்கிடையில் பீர்முகமது மூல்தானைக் கைப்பற்றிவிட்டுத் தைமூருடன் சேர்ந்து கொண்டார். தீபால்பூர் மக்கள் ஒரு காலத்தில் பீர்முகமதுவிற்கு அடிபணிந்திருப்பதாக வாக்களித்திருந்தனர். ஆனால், சில காலத்திற்குள் அவ்வாக்குறுதியை அவர்கள் மீறித் தீபால்பூரின் ஆளுநரான முஸாபிர் காபுலீ (Musafir Kabuli) என்பவரைக் கொன்று விட்டனர். அச் செய்கைக்காகத் தைமூர் அவர்களைத் தண்டிக்க முற்பட்டார். அதையறிந்ததும் தீபால்பூர் மக்கள் பத்னீர் (Bhatnir) கோட்டைக்குள் புகுந்து கொண்டனர். பத்னீர் அப்போது இரஜபுத்திரர்களிடமிருந்தது. அதன் தலைவர் துல் சந்த் அல்லது துல்சின் என்பவராவார். தைமூருடைய முற்றுகையைச் சமாளிக்க இயலாது துல்சந்த் சரணடைந்தார். பத்னீர் கோட்டையில் புகலிடம் நாடிய தீபால்பூர் மக்கள் அனைவரையும் தைமூரிடம் ஒப்படைக்கத் துல் சந்த் இசைந்தார். தீபால்பூர் அகதிகளைத் தைமூர் மிகக் கடுமையாகத் தண்டித்தார். அதைக் கண்ட துல் சந்தின் சகோதரனும் மகனும் கோட்டைக்குள் சென்று தைமூரை எதிர்க்கலானார்கள். துல் சந்தை முதலில் கொன்று விட்டுத் தைமூர் பத்னீர் கோட்டையை மீண்டும் முற்றுகையிடலானார். துல் சந்தின் சகோதரர் முற்றுகையின் கடுமையைத் தாங்கமுடியாமல் தைமூரிடம் சரணடைந்தார். தைமூருக்கு இழப்பீடாகப் பெருந் தொகை அளிக்க அவர் இசைந்தார். அத் தொகையினை வசூலிக்கும்போது ஏற்பட்ட சிறு பூசலின் காரணமாகப் பத்னீர் சூறையாடப்பட்டது. ஒரு மணி நேரத்திற்குள் 10,000 இந்துக்கள் கொல்லப்பட்டனர். அக் கோட்டையிலிருந்த பொருள்கள் யாவற்றையும் தைமூரின் படைகள் கைவசப்படுத்திக்கொண்டன. அங்கிருந்த வீடுகள் யாவும் தீக்கிரையாக்கப்பட்டன. பத்னீர் கோட்டை தரைமட்டமாக்கப்பட்டது. இந்த வகையான அழிவு வேலையில் தைமூர் ஈடுபட்டிருந்தபோது, அவரது படையின் ஒரு பகுதி தீபால்பூர், சமானு ஆகியவற்றின் வழியாக டில்லி நோக்கி முன்னேறியது.

கி. பி. 1398ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் நாளன்று தைமூர் பத்னீரை விட்டுப் பிரோஸாபாத் நோக்கிப் புறப்பட்டார். பிரோஸாபாத்தைக் கைப்பற்றிக் கொண்டு சிர்சுதியைச் (Sirsuti) சென்றடைந்தார். பின்னர், பதேபாத், அஹ்ரோனி

ஆகியவற்றைக் கைப்பற்றினார். வழியில் அவர் பல ஜாட்டு மக்களைக் கொன்றார். காகர் (Khagar) நதியை அவர் அடைந்த போது அவர் முன்கூட்டியே அனுப்பி வைத்த படை அவருடன் சேர்ந்துகொண்டது. டிசம்பர் இரண்டாம் நாள் தைமூரின் படைகள் துக்ளக்பூரை அடைந்தன. அவர் வருவதற்குள் அங்கிருந்த மக்கள் நகரை விட்டு வெளியேறிவிட்டனர். அங்கிருந்து டில்லிக்கு நேராகச் செல்வதற்குப் பதிலாக, அவர் யமுனையைக் கடந்து லோனி கோட்டையைத் தாக்கி அதனைக் கைப்பற்றினார். அங்கிருந்த இந்துக்கள் பலர் கொல்லப்பட்டனர். டில்லிக்கருகேயுள்ள கங்கை, யமுனை ஆறுகளுக்கிடைப்பட்ட பகுதிகளை அவரது படைகள் தாக்கி மக்களிடையே குழப்பத்தையும் பீதியையும் உண்டாக்கின. அங்கிருந்த மக்களுள் பலர் பாதுகாப்பை நாடி டில்லிக்கு ஓடினார்கள். ஏனையோர் மலைப் பகுதிகளில் புகலிடம் நாடினார்கள். இதற்கிடையில் தைமூர் 700 பேர்களுடன் புறப்பட்டுப் போர் செய்வதற்கு ஏற்ற இடம் எதுவென்பதை ஆராயலானார். அந்த நேரத்தில் டில்லியை ஆட்சி புரிந்து வந்த மல்லூகான் அவரைத் தாக்கினார். எதிரிகளின் படைஎண்ணிக்கை, தம் படையைவிட இருபதுபங்கு அதிகமாகஇருந்தமையாலும்,எதிர்பாரதவிதமாகத் தாக்கப்பட்டமையாலும், தைமூர் ஒரு நிமிடம் நிலைகுலைந்து நின்று விட்டார். விரைவில் தம்மைச் சமாளித்துக்கொண்டு தம் படை நிலைக்கு வேகமாகத் திரும்பினார். அப்போது ஏற்பட்ட சிறு சண்டையில் தைமூரின் படைகள் எதிரிகளின் தாக்குதலை வெகு சிரமத்துடன் சமாளிக்க வேண்டியதாயிற்று. இவற்றையெல்லாம் கவனித்து வந்த 50,000 பேர்களுக்கு மேலான தைமூரின் இந்துக் கைதிகள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து விட்டனர். அடுத்து நடைபெறவிருந்த போரில் டில்லிப்படைகளே வெல்லும் என்ற உணர்ச்சி அவர்களிடம் மேலிட்டெழுந்தது. அந்த மகிழ்ச்சியை அவர்களால் மறைக்க முடியவில்லை. அதையறிந்ததும் தைமூரின், 50,000[1] கைதிகளைப் பாசறையில் தங்கவிட்டு எதிரிகளுடன் போர் புரிவது ஆபத்தானது என்று அனைவருமே கருதினர். எனவே, தம்படை வீரர்கள் தம்மிடமிருக்கும் கைதிகள் அனைவரையும் கொன்று விடவேண்டும் என்று ஆணையிட்டார். தம் வாழ்நாளில் ஒரு சிட்டுக் குருவியைக்கூடக் கொன்றிராத மௌலானா நசீர் உத்தீன் உமர், தைமூருக்குப் பயந்து தம் கைகளாலேயே தம் கைதிகள் 15 பேரைக் கொன்றுவிட்டார். இந் நிகழ்ச்சி 1398 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ஆம் நாள் நடைபெற்றது.

[1] 100,000 பேர்கள் இருந்தனர் என்று சிலர் கூறுகின்றனர். History and Culture of the People India, Vol VI, p.119

டிசம்பர் 14 ஆம் நாள் தைமூர் தம்படை முழுவதையும் நடத்திக்கொண்டு யமுனையைக் கடந்து பிரோஸாபாத்தில் பாசறையை அமைத்தார். சுல்தான் மாமூத்தும் போருக்கு ஆயத்தமானார். டில்லிப்படைகள் தைமூர் படைகளைவிட எண்ணிக்கையில் குறைந்திருந்தன. 10,000 குதிரை வீரர்களும், 40,000 காலாட் படையினரும், 125 யானைகளும் அப்போது மாமூத்தின் கைவசமிருந்தன. மேலும் அவருக்கு ஏனைய இந்திய அரசர்களிடமிருந்து உதவி கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லாதிருந்தது. டிசம்பர் 16ஆம் நாள் போர் மூண்டது. அன்று மாலைக்குள் டில்லிப்படைகள் தோற்கடிக்கப்பட்டன. மாமூத்தும் மல்லூகானும் மிகுந்த சிரமத்துடன் டில்லிக் கோட்டைக்குள் ஓடினர். பின்னர், மாமூத் குஜராத் நோக்கியும் மல்லூகான் பரன் நோக்கியும் டில்லியை விட்டு ஓடினார்கள். அதற்கடுத்த நாள் டில்லி மக்கள் தைமூரை அணுகி அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாக வாக்குறுதியளித்தனர். ஜும்மா மசூதியில் அவருடைய பெயரில் பிரார்த்தனை நடத்தப்பட்டது. கோட்டை மதில்களின்மீது அவரது கொடி பறக்கவிடப்பட்டது. புது அரசு அமைக்கப்பட்டுவிட்டதென்பதைப் பறைசாற்றி அறிவித்தனர்.

மக்கள் தங்கள் இல்லங்களையும், கடைகளையும் நன்கு அலங்கரித்துத் தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். அறுபத்து மூன்று வயதை எட்டி விட்ட தைமூர், களியாட்டத்தில் மூழ்கி விட்டார். அந்தச் சமயத்தில் வீரர்கள் சிலர், கற்கண்டு வாங்கும்போது கடைக்காரரிடம் வம்பு செய்தனர். அதையடுத்து அக் கடையினை அவர்கள் கொள்ளையடித்தார்கள். இவ்வாறாகத் தொடங்கிய சிறுபூசல் டில்லியில் பெருங் குழப்பத்தை ஏற்படுத்தி விட்டது. தைமூரின் வீரர்கள் பொதுமக்களை ஈவு இரக்கமின்றிக் கொன்றனர். கடைகளையும் வீடுகளையும் கொள்ளையடித்தனர். பலரைக் கைது செய்தனர். இந்த வகையான கொடூரச் செயல்கள் மூன்று நாட்கள் நடைபெற்றன. நான்காம் நாளன்று தம்முடைய படை வீரர்களைக் கட்டுப் படுத்த இயலாமல் ஜும்மா மசூதியில் புகலிடம் நாடிய மக்களைக் கொன்று விடுமாறு தைமூர் கட்டளையிட்டார். இவையனைத்திற்கும் தாம் பொறுப்பல்லர் என்றும், இவையாவும் கடவுளின் செயல் என்றும் டில்லி மக்களுடைய எதிர்ப்பே அவர்களுடைய அழிவிற்குக் காரணமென்றும் அவர் தம் சுயசரிதையில் எழுதியுள்ளார்[1].

பெருஞ்சேதத்திற்குட்படுத்தப்பட்ட டில்லியிலிருந்து மேலும் பொருளைக் கொள்ளையடிக்க இயலாது என்று அறிந்த தைமூர்,

1. Elliot, III, p. 447

டிசம்பர் 31ஆம் நாள் டில்லியை விட்டு வடக்கு நோக்கிப் புறப் பட்டார். ஜனவரி நான்காம் நாள் மீரத்தை அடைந்தார். மீரத்தின் ஆளுநரான மலிக் இலியாஸ் ஆப்கன், தைமூரை எதிர்த்துப் போராடினார். இறுதியில் மீரத் தைமூரின் கைவசமா யிற்று. இலியாஸ் ஆப்கன் கொல்லப்பட்டார் என்றும். மீரத் கோட்டை தீக்கிரையாக்கப்பட்டது என்றும் ஜாபர்நாமா கூறு கிறது[1]. ஆனால், தைமூர் இந்தியாவைச் விட்டுச் சென்ற பிறகு, இலியாஸ் ஆப்கன், நஸ்ரத் ஷாவுடன் சேர்ந்து கொண்டார் என்று நாம் அறிகிறோம்[2]. அதன் பின்னர், தைமூர் துக்ளக்பூரை அடைந்தார். அவரை வழிமறித்து அவருடன் போர் புரிய பலர் துடியாய்த் துடித்தனர். அவர்களுள் முபாரக்கான் ஒருவராவார். 10,000 வீரர்களுடன் அவர் போருக்கு ஆயத்தமானார், தைமூர், எதிர்பாராத விதமாக அவரைத் தாக்கி அவரது வீரர்கள் பலரைக் கொன்றார். இதற்கிடையில் லாகூரிலிருந்து ஷாயிகா கோக்கர் பெரும்படையுடன் புறப்பட்டு வந்து தைமூரைத் தாக்கினார். தைமூரின் படைகள் பெருஞ்சேதத்திற்குள்ளாயின. ஆயினும், வெற்றிச் செல்வி தைமூர் பக்கமே இருந்துவிட்டாள். இலியாஸ், முபாரக்கான், ஷாயிகா கோக்கர் ஆகியோர் முஸ்லிம்கள் ஆவார்கள். ஆயினும், அவர்கள் தைமூரை எதிர்த் தமையால் முஸ்லிம் அல்லாதவர்கள் ஆகிவிட்டனர் என்றும், எனவே, அவர்களுடன் போரிட்டு அவர்களை அழித்து விடுவதில் தவறில்லை என்றும் அவர் கருதினார். 1399 ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் நாள் அவர் இந்துக்களின் புனிதத் தலமான ஹரித் துவாரைச் சென்றடைந்தார். ஹரித்துவார் மக்கள் அவருக்கு அடிபணிய மறுத்துவிட்டார்கள். எனவே, தைமூர் அவர் களுடன் போரிட நேர்ந்தது. கடும்போருக்குப் பின்னர், இந்துக்கள் போர்க்களத்தினின்றும் ஓட்டம் பிடித்தனர். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தைமூர் இந்துஸ்தானத்தை விட்டு நீங்குவ தென்று முடிவு செய்தார்.

தைமூரின் திடீர் முடிவுக்குச் சில காரணங்கள் கூறப்படு கின்றன. அவர் சென்ற இடங்களைப் பஞ்சமும் நோயும் பீடித் திருந்தன. அவருடைய படைத்தலைவர்களும், பிள்ளைகளும் மேலும் போர் புரிய விருப்பங்கொள்ளவில்லை. அவருடைய பேரரசின் பல பகுதிகளில் கலகங்கள் ஏற்பட்டன. இந்தியாவில் தமது அரசை நிறுவ வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இல்லை. இறுதியாக, அவர் முடக்குவாத நோயினால் துன்பத்திற்குள்ளாகி யிருந்தார். ஆகவே, அவர் இந்தியாவை விட்டுச் செல்வதென்று

1. Elliot V, p 130 - 132
2. K. S. Lal, Twilight of the sultanate, p. 32

முடிவு கட்டினர். மேலும், போர் செய்ய விரும்பவில்லையாதலால், அவர் ஆபத்து நிறைந்த வழிகளைத் தவிர்த்து இமய மலையின் அடிப்பாகத்தின் வழியாக நாடு திரும்பலானர். ஆயினும், கொள்ளை, கொலை ஆகிய செயல்களை மட்டும் அவர் கைவிடவில்லை. ஏனெனில், முஸ்லிம் அல்லாதாரைக் கொலை செய்வது கடவுள்பணி என்பது அவரது அசைக்கமுடியாத நம்பிக்கையாகும்.

திரும்பிப் போகும் வழியில் பஹ்ரோஸ் என்பவருடைய ஆட்சிப் பகுதியைத் தாக்கி, அங்கு வாழ்ந்த மக்களிடமிருந்த செல்வத்தைக் கொள்ளையடித்தார். அதன் பின்னர், ரதன் சிங் என்பவரைத் தாக்கினர். அதையடுத்து அவர் நாகர்கோட்டைக்குச் சென்றர். காங்க்ரா அல்லது நாகர்கோட் வழியாகச் சென்றுரே யொழிய அதனைக் கைப்பற்றவில்லை என்பதை நாம் அறிதல்வேண்டும். சிவாலிக் குன்றுகளைக் கடந்து இறுதியில் தைமூர் ஜம்முவை அடைந்தார். அங்கு பையிலா (Baila) ஜம்மு, பாவோ(Bao) ஆகிய நகரங்களைச் சூறையாடினர். இதற்கிடையில் ஷாயிகா கோக்கரைத் தண்டிக்க அவர் லாகூருக்கு அனுப்பிய படைகள் திரும்பி வந்து அவருடன் சேர்ந்து கொண்டன. ஷாயிகாவும், அவரது மகன் ஜஸ்ரத்தும் பிடிபட்டனர். 1399ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 5ஆம் நாள் தைமூர் நடத்திய தர்பார் கூட்டத்தில் ஷாயிகாவின் சிரம் அறுக்கப்பட்டது. அதே கூட்டத்தில் கிஸிர்கான் என்பவரை மூல்தான், தீபால்பூர், லாகூர் ஆகியவற்றின் ஆளுநராகத் தைமூர் அமர்த்தினர். தாம் டில்லியில் கைது செய்து வந்தவர்களுள் கட்டடக் கலை நிபுணர்கள் கைவினைஞர்கள் ஆகியோர் நீங்கலாக ஏனையோரை அவர் விடுவித்துவிட்டு நாடு திரும்பினர்.

**விளைவுகள் :** டில்லி நகரம் பெருஞ்சேதத்திற்குள்ளாயிற்று. மக்கள் தொகை பெருமளவில் குறைந்து விட்டது. தைமூரின் கத்திக்கு இரையாகாமல் தப்பிப் பிழைத்துக்கொண்டவர்கள் பஞ்சம், கொள்ளை நோய் ஆகியவற்றின் பிடிகளில் சிக்கி மடிந்தனர். துக்ளக் பேரரசு தைமூரின் படையெடுப்பிற்கு முன்பே அழிவை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருந்தது என்பது உண்மையே. தைமூரின் படையெடுப்பு அதனுடைய அழிவைத் துரிதப்படுத்திவிட்டது. அப் படையெடுப்பு நாட்டில் குழப்பத்தையும் அமைதியின்மையையும் ஏற்படுத்திவிட்டது. அவற்றை நீக்கி அதற்குப் புத்துயிர் கொடுக்கவல்ல தலைவர் தோன்றுதது அதன் துரதிர்ஷ்டமேயாகும்.

தைமூரின் படையெடுப்பு இந்தியாவின் வளத்தை அழித்து விட்டது. தைமூரின் படையெடுப்பால் இந்தியாவில் ஏற்பட்ட பொருள் நஷ்டத்தை அளவிடுவது அரிய செயலாகும். விவசாயமும் வாணிபமும் அழிவுற்றன.

தைமூரின் படையெடுப்புப் பிற்காலத்தில் முகலாயப் பேரரசு தோன்றுவதற்கு வழிகாட்டியாக அமைந்து விட்டது என்று கூறுவது மிகையாகாது.

தைமூரின் படையெடுப்பு இந்துக்களையும் முஸ்லிம்களையும் மிக நெருக்கமாகப் பிணைத்துவிட்டது என்று டாக்டர் K. S. லால் குறிப்பிட்டுள்ளார்.[1] தைமூர் சென்றவிடங்களில் எல்லாம் இந்துக்களும் முஸ்லிம்களும் தோளோடு தோள் நின்று எதிர்த்தனர். அவ்விரு வகுப்பினர், தங்களுக்கிடையே ஏற்பட்டிருந்த வேறுபாடுகளைச் சிறிது மறக்க இப் படையெடுப்புத் துணை செய்தது.

டில்லியை விட்டுத் தைமூர் புறப்பட்டுச் சென்றபிறகு, நஸ்ரத்ஷா பிரோஸாபாத்தைக் கைப்பற்றிக்கொண்டார். மல்லூ இக்பால்கான் உயிருடன் இருக்கும்வரை தமக்குப் பேராபத்துக் காத்திருக்கும் என்று நஸ்ரத்ஷா உணர்ந்தார். தைமூரிடம் தோல்வியடைந்த பிறகு, மல்லூ இக்பால், பரனுக்கு ஓடிவிட்டார் என்று முன்னர்க் கண்டோம். ஆகவே, மல்லூ இக்பால்கானுக்கெதிராகப் பரனுக்கு (Baran) ஒரு படையை அனுப்பிவைத்தார். மல்லூ இக்பால் அப்படையைத் தோற்கடித்துவிட்டு, 1399ஆம் ஆண்டு ஜனவரி மாதம் டில்லி நோக்கி வந்தார். அதே நேரத்தில் நஸ்ரத்ஷா இறந்துவிடவே, அவரது வேலை எளிதாயிற்று. டில்லி இக்பால் கைவசமாயிற்று. அதையடுத்து டில்லியைச் சுற்றியிருந்த பகுதிகளை வென்று டில்லி சுல்தானின் ஆதிக்கத்தை நிலை நாட்ட முற்பட்டார். பயானுவை ஆண்டுவந்த ஷம்ஸ்கான் ஆஹதியைத் (Shamskhan Auhadi) தோற்கடித்தார். பின்னர், கதேஹரை வென்று அதன் அரசரிடமிருந்து கப்பம் பெற்றார். பிறகு, ஜான்பூரின் ஆளுகைக்குட்பட்டிருந்த கன்னோசியைத் தாக்கினார். ஜான்பூரை ஆண்டு வந்த முபாரக்ஷா ஷர்க்கி அவருடைய முன்னேறத்தைக் கன்னோசிக்கு அருகே தடுத்து நிறுத்தினார். இரு படைகளும் இரண்டு மாதங்கள் எதிர் எதிராகப் போர்கோலம் பூண்டு நின்றிருந்தன. இறுதியில் போர் புரியாமல் இக்பால் டில்லி திரும்பினார், அதற்கு முக்கிய காரணம் அவரது படைகளின் ஆதரவு அவருக்கு முழுமையாகக் கிடைக்காமையேயாகும். இதற்கிடையில் கிஸிர்கான் சுல்தானியத்தைக்

1. Op. cit., p. 42.

கைப்பற்ற மூல்தானில் ஏற்பாடுகள் செய்யலானார். அச் செய்தி மல்லூ இக்பாலின் அச்சத்தை மேலும் அதிகமாக்கியது. இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபடுவதற்கு அவருக்கு ஒரே ஒரு வழிதான் புலப்பட்டது. அதாவது, தைமூரின் படையெடுப்பின்போது குஜராத் ஓடிவிட்ட மாமூத்ஷாவை டில்லிக்கு அழைத்து வந்து அவரை அரியணையில் வைத்துக்கொண்டு அதிகாரம் முழுவதையும் தாமே செலுத்தி வருவதேயாகும். அந்த நேரத்தில் மாமூத்ஷா மாளவத்திலுள்ள தார் என்னும் நகரத்தில் இருந்தார். குஜராத் மன்னர் தமக்குப் போதியஉதவி அளிக்கத் தவறிவிட்டமையால், ஏற்பட்ட மனவருத்தத்திலிருந்து விடுபட இதுவே தக்க சமயம் என்று மாமூத்ஷா எண்ணினார். கி. பி. 1401-ல் மாமூத்ஷா டில்லி திரும்பினார். சுல்தான் மாமூத்திற்குத் தக்க வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆயினும், அதிகாரம் முழுவதையும் இழந்து இக்பாலின் கைப்பொம்மையாக இருக்க அவருக்கு விருப்பமில்லை. எனவே, இக்பாலின் பிடியிலிருந்து விலகுவதற்குத் தக்க சமயத்தை எதிர்நோக்கியிருந்தார்.

கி.பி. 1402 ஆம் ஆண்டில் மல்லூ இக்பால், மீண்டும் ஜான்பூர் மீது படையெடுத்துச் சென்றார். அப்போது மாமூத்ஷாவையும் கூடவே அழைத்துச் சென்றார். ஜான்பூரின் அரசரான இப்ராஹீம் ஷர்க்கி போர்த்திறம் மிக்கவர். எனவே, அவரைத் தோற்கடிப்பதென்பது எளிதான காரியமாக மல்லூ இக்பாலுக்குத் தோன்றவில்லை. இந்த நிலையில் சுல்தான் மாமூத் ஒருநாள் வேட்டைக்குப் போவதாகக் கூறிச் சென்று இப்ராஹீம் பக்கம் சேர்ந்து கொண்டார் அதனால் மல்லூ இக்பாலின் நிலை மோசமாயிற்று. எனவே, அவர் டில்லிக்குத் திரும்பி விட்டார். மல்லூ இக்பாலை விட, இப்ராஹீம் ஷர்க்கி எந்த விதத்திலும் மேலானவராகச் சுல்தான் மாமூத்திற்குத் தோன்றவில்லை. அதே நேரத்தில் அவரைவிட்டு விட்டு மல்லூ இக்பால் பக்கம் மீண்டும் சேர்ந்து கொள்வதும் சுல்தானுக்குச் சரியாகப் புலப்படவில்லை. எனவே. அவர் கன்னோசியைத் தாக்கி அதனைத் தன் கைவசமாக்கிக்கொண்டு அங்குத் தமது அரசை ஏற்படுத்திக்கொண்டார். ஜான்பூர் அரசரும் கன்னோசியை மாமூத்ஷா ஆண்டுவருவது தமக்கு நல்லதென்று எண்ணி அவரைக் கன்னோசியில் ஆட்சி செலுத்திவர அனுமதித்துவிட்டார்.

இதற்கிடையில் மல்லூ இக்பால், குவாலியர்மீது படையெடுத்துச் சென்றார். தைமூரின் படையெடுப்பின்போது குவாலியர் சுதந்திரம் பெற்றது. எனவே, அதனை மீண்டும் டில்லியின் ஆட்சியின்கீழ்க் கொண்டு வந்து அதன் வாயிலாகத் தம்முடைய மதிப்பை உயர்த்திக்கொள்ளவேண்டும் என்று

மல்லூ இக்பால் கருதினர். ஆனல், அப் படையெடுப்புத் தோல்வியில் முடிவுற்றது. கி.பி. 1405-ல் தைமூர் இறந்த செய்தி மல்லூ இக்பாலுக்குக் கிடைத்தது. அந்த வாய்ப்பினைப் பயன் படுத்திக்கொண்டு தைமூரின் ஆளுநரான கிஸிர்கானை வெல்லு வதற்கான முயற்சியை மேற்கொண்டார். சமானுவின் ஆளு நரான பஹ்ராம்கான், மல்லூ இக்பாலுடன் சேர்ந்து கொண்டார். மூல்தானுக்குப் போகும் வழியில் பஹ்ராம் கானின்மீது சந்தேகம் கொண்டு அவரைக் கொன்றுவிடுமாறு மல்லூ இக்பால் கட்டளை இட்டார். அதன் விளைவாக மல்லூ இக்பாலின் படைப்பலம் குறைந்துவிட்டது. அஜோதன் என்னு மிடத்தில் நடைபெற்ற போரில் மல்லூ இக்பால் கொலை யுண்டார்.

மல்லூ இக்பால் இறந்த செய்தியைக் கேட்டதும் தௌலத் கான் போன்ற முக்கியமான பிரபுக்கள் கன்னேசிக்குத் தூது அனுப்பிச் சுல்தான் மாமூத்தை டில்லிக்கு வரும்படி அழைத் தார்கள். அவ்வைழப்பை ஏற்று 1405ஆம் ஆண்டின் இறுதியில் மாமூத் ஷா டில்லி திரும்பினர். தௌலத்கானும் அவரைச் சார்ந்த பிரபுக்களும் தக்க வெகுமதிகள் பெற்றனர். தோவாப் பகுதியினை ஆளும் பொறுப்பு தௌலத்கானுக்கு வழங்கப்பட்டது.

டில்லி அரியணையில் மீண்டும் அமரும் வாய்ப்பினைப் பெற்ற மாமூத் ஷா, உடனடியாக இரு பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டி இருந்தது. அவற்றுள் முதலாவது, இப்ராஹீம் ஷர்க்கிபற்றிய தாகும். கன்னேசியைவிட்டு வெளியேறும்போது சுல்தான் மாமூத், அதனை மலிக் மாமூத் தர்மதி என்பவரின் கையில் ஒப்படைத்தார். அந்தச் சமயத்தினைப் பயன்படுத்திக்கொண்டு இப்ராஹீம் ஷர்க்கி, கன்னேசியைக் கைப்பற்றிக்கொள்ளும் நோக்கத் துடன் படை நடத்திக்கொண்டு கன்னேசிக்குச் சென்றார். உடனே சுல்தான் மாமூத்தும் படைதிரட்டிக்கொண்டு கன்னேசிக்குச் சென்றார். இரு படைகளும் சில காலம் ஒன்றுக்கு ஒன்று எதிரெதிராக நின்று விட்டுப் போரிடாமலேயே திரும்பி விட்டன. அடுத்த பிரச்சினை கிஸிர்கானைப்பற்றியதாகும். ஜான்பூர் அரசருடன் போர்புரியச் செல்லுவதற்கு முன்னர் சுல்தான் மாமூத், சமானுவை ஆண்டுவந்த பைராம்கானை அடக்கு வதற்காகத் தௌலத்கான் தலைமையின்கீழ்ப் படையொன்றை அனுப்பி வைத்தார். தௌலத்கான் முதலில் வெற்றி கண்டார். சமானு கிஸிர்கானுடைய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்ட பகுதி

களில் ஒன்றாக இருந்தமையால், பைராம்கானின் தோல்வி கிஸிர்கானை உலுக்கி விட்டது. எனவே, அவர் படையொன்றை நடத்திக்கொண்டு மூல்தானிலிருந்து சமானா நோக்கிப் புறப் பட்டார். அதையறிந்ததும் தௌலத்கான், பீதியுற்று டில்லி நோக்கி ஓடிவிட்டார். இத் தோல்வி சுல்தானின் பெருமையை மேலும் குலைத்துவிட்டது. இப்ராஹீம் ஷர்க்கி, இவ் வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு கன்னோசியைக் கைப்பற்றிக் கொண்டார். டில்லி பிரபுக்கள் பலர், இப்ராஹீம் பக்கம் சேர்ந்து கொண்டனர். டில்லியைத் தாக்க அதுவே தக்க சமயமென்று உணர்ந்து இப்ராஹீம் ஷர்க்கி, தம் படைகளை டில்லி நோக்கி நடத்திச் சென்றார். போகும் வழியில் சம்பல் என்னுமிடத்தைக் கைப் பற்றிக் கொண்டார். யமுனையைக் கடந்து டில்லியைத் தாக்கும் நேரத்தில் குஜராத் அரசர் ஜான்பூரைத் தாக்க படை நடத்திச் சென்று கொண்டிருக்கிறார் என்ற செய்தி இப்ராஹீமின் காதுக் கெட்டியது. எனவே, மேலும் காலத்தைத் தாழ்த்த விருப்ப மின்றி ஜான்பூரை நோக்கி இப்ரஹீம் ஷர்க்கி விரைந்தார். மாமூத் ஷாவை நோக்கி வந்த பேராபத்து ஒருவாறு நீங்கி விட்டது. மாமூத்ஷா சம்பலை மீண்டும் தம் கைவசப்படுத்திக் கொண்டார். இந்த வெற்றியால் கிடைத்த பெருமையைப் பயன்படுத்திக்கொண்டு மேற்கில் கிஸிர்கான் கைப்பற்றிக் கொண்ட பகுதிகளை மீட்க மாமூத்ஷா முயன்றார். கி.பி. 1408-ல் ஹிஸார்பிருஸாவைத் தாக்கி, அதனைத் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்தார். அதையறிந்ததும் கிஸிர்கான் படையுடன் புறப்பட்டு டில்லியை நோக்கிச் சென்றார். மலிக் துபாவைத் தோவாப் பகுதிக்கு அனுப்பி அதனை அழிக்குமாறு கட்டளையிட்டு விட்டுக் கிஸிர்கான் டில்லியை முற்றுகையிட்டார். போதிய உணவு கிடைக்காத காரணத்தால், கிஸிர்கான் டில்லி முற்றுகையைக் கைவிட நேர்ந்தது. ஆயினும், இப் படையெடுப்பு கிஸிர்கானுக்கு ஓர் அரிய உண்மையை விளக்கியது. டில்லியில் மாமூத் ஷாவின் ஆட்சி ஆட்டங்கண்டு விட்டது என்பதும், அதனை ஒழித்துத் தமது ஆட்சியை ஏற்படுத்துவதென்பது எளிதான காரியமாகும் என்பதுமே அந்த உண்மையாகும். அன்று முதல் டில்லியைக் கைப்பற்றுவதை அவர் தமது நோக்கமாகக் கொண்டு அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டார். கி.பி. 1412ஆம் ஆண்டில் அவர் மீண்டும் டில்லியை முற்றுகையிட்டார். உணவுப் பொருள் பற்றாக்குறை காரணமாக மீண்டும் முற்றுகையை அவர் கைவிட்டார். நாள் தோறும் மோசமாகிக் கொண்டே வந்த நிலைமையைச் சீராக்க மாமூத்ஷா முயற்சி ஏதும் மேற்கொள்ளவில்லை. கி.பி. 1412-ல் கைதால் என்னுமிடத்தில் சுல்தான் மாமூத் இறந்தார். ஏறக்

குறைய 18 ஆண்டுகள் அவர் ஆட்சி செலுத்தினர்.[1] இந்த 18 ஆண்டுகளும் அவர் பெயரளவு அரசராகவே இருந்தார். அவருடன் துக்ளக் அரசர்களின் ஆட்சி முடிவுற்றது.

சுல்தான் மாமுத்ஷா இறந்த பிறகு, டில்லி பிரபுக்கள் தௌலத்கானைச் சுல்தானாக ஏற்றுக்கொண்டனர். ஆனால் கிஸிர், தமது உரிமையை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. எனவே, தான் கி.பி. 1414-ல் டில்லிமீது படையெடுத்துச் சென்றார். நான்கு மாதங்கள் முற்றுகைக்குப் பிறகு டில்லி சரணடைந்தது. தௌலத்கான் சிறைபிடிக்கப்பட்டு, ஹிஸார்பிருஸாவில் சிறை வைக்கப்பட்டார். சில காலத்திற்குப் பின் அவர் கொல்லப் பட்டார். கிஸிர்கான் சுல்தானாகப் பதவியேற்றுச் சையத் அரசர்களின் ஆட்சியைத் தொடங்கி வைத்தார்.

1. 20 ஆண்டுகள் 2 மாதங்கள் ஆட்சி செய்ததாக வரலாற்றாசிரியர்கள் கூறியுள்ளனர். இது சரியன்று. (Dr.K.S. Lal, Op. Cit, p. 59).

# 5. சையத்து அரசர்கள்
## (கி. பி. 1414 முதல் 1451 வரை)

### தோற்றம்

முகமது நபியின் வழித் தோன்றல்கள் சையத்துகள் என்று அழைக்கப்பட்டனர். டில்லியை ஆண்ட சையத்துக் குல அரசர்களுள் முதலாவது அரசரான கிஸிர்கான் முகமது, நபியின் வழித் தோன்றல்களுள் ஒருவர் என்பது யஹியா பின் சிர்ஹிந்தியினுடைய கருத்தாகும். அதற்குச் சான்றாக, ஒரு நிகழ்ச்சியினை ஆசிரியர் நமக்கு அளித்துள்ளார். அதாவது, ஒரு சமயம் கிஸிர்கானுடைய தகப்பனாரான சுலைமானின் வளர்ப்புத் தந்தையான மலிக்நஸீர் உல் முல்க் மர்தான் தௌலத் என்பவரது ஜலாலுத்தீன் புகாரி என்ற பெயருடைய ஒரு இஸ்லாமியத் சமயத் தொண்டர் வருகை தந்தார். உணவருந்தும் வேளை நெருங்கிய போது மலிக் மர்தான், சுலைமானை அழைத்துச் சமயத்தொண்டர் கைகளைக் கழுவுவதற்கு நீர்க்குவளையையும், விசிப்பலகையையும் கொண்டுவருமாறு கட்டளையிட்டார். அதைக் கேட்ட அத் தொண்டர், சுலைமான் ஒரு சையத் என்பதனால், அத்தகைய இழிவான வேலைகளை அவருக்கு இடுவது சரியன்று என்று கூறியதாக யஹிதா தமது நூலில் குறிப்பிடுகிறார்.

மேலும், கிஸீர்கான் நற்பண்புகள் பல கொண்டிருந்தார். அவர் பேச்சு தவறாதவர்; இரக்கமுடையவர்; தாராள மனப்பான்மை கொண்டவர்; விருந்தினரை அன்புடன் உபசரிக்கும் பண்புடையவர்; அடக்கமே உருவானவர்; கடவுள் பற்று மிக்கவர். இவை யாவும் ஒரு சையத்துவிடம் காணப்படுகின்ற நற்பண்புகளாதலின், கிஸிர்கானையும் ஒரு சையத்தாக மதிக்கவேண்டும் என்பது யஹியாவின் கருத்தாகும். ஆனால், இக் கருத்தினை ஏற்பதில் சில சிக்கல்கள் உண்டு. முதலாவதாக, கிஸிர்கானையும், நபிகள் நாயகத்தின் குடும்பத்தினரையும் இணைத்து ஒரு மூதாதை மரபுப் பட்டியலை அவர் நமக்கு அளிக்கவில்லை. அத்தகைய ஒரு பட்டியலைத் தயாரிப்பதற்கு வேண்டிய செய்திகளை யஹியா அறியாதிருக்கக்கூடும். ஆனால், கிஸிர்கான் ஒரு சையத்து

என்பதில் அவருக்கு அசையா நம்பிக்கையிருந்திருப்பின், அவரே ஒரு பட்டியலைத் தோற்றுவித்து இருக்கக்கூடும். அதன் வாயிலாகக் கிஸிர், ஒரு சையத் என்பதை புலப்படுத்தியிருக்கக்கூடும். ஆனால், அவருக்கே அதில் நம்பிக்கை ஏற்படாத காரணத்தால் தான், அம் முயற்சியில் அவர் ஈடுபட வில்லை என்று ஒரு சிலர் கருது கின்றனர். மேலும், பிற்காலத்தில் தோன்றிய வரலாற்று ஆசிரியர்கள் இதைப்பற்றி எழுதவில்லை. ஹமீத்கானின் தாரீக்-இ-முகம்மதி என்ற நூலிலும் கிஸிர்கானின் மூதாதை மரபுப் பட்டியலைப்பற்றிய குறிப்பினை நாம் காண இயலவில்லை.

அதுமட்டுமன்றித் தைமூர், தமது அரசியல் வாழ்க்கையைத் தொடங்கியபோது முஸ்லிம்களை ஆளும் உரிமை சையத்துகளுக்கே உரித்தாகும் என்றும், அந்த உரிமையை அவர்கள் தமக்கு அளித்துள்ளனர் என்றும் கூறினர். தைமூரின் ஆதரவினால் மூல்தான் ஆளுநர்ப் பதவியை மீண்டும் பெற்ற கிஸிர்கான், தைமூரின் வழியில் செல்ல முற்பட்டிருக்கக்கூடும் என்றும், ஆகவே, அவர் சையத்துகளுள் ஒருவராகக் கருதப்பட்டாரேயன்றி உண்மையில் அவர் சையத்து அல்லர் என்றும் கூறுவர் சிலர்.

மேலே கூறியவற்றிலிருந்து கிஸிர்கானை ஒரு சையத்து என்று திட்டவட்டமாகக் கூற இயலாது என்பது தெளிவாகும். ஆயினும், அவரது பரம்பரையைச் சார்ந்தவர்களைச் சையத்துகள் என்ற பெயரைத் தவிர, வேறு பெயர் கொண்டு அழைப்பதற்குத் தகுந்த காரணங்கள் நமக்கு இன்னும் கிடைக்கவில்லை என்பதையும் நாம் அறிதல் வேண்டும்.

சையத்துகள் ஏறக்குறைய 37 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர். இவர்கள் காலத்தில் ஒருமுகப்படுத்தப்பெற்ற வலுப் பொருந்திய முடியாட்சி என்ற கருத்து மறையலாயிற்று. அதற்குப் பதிலாக, மாநில சுயஆட்சி என்னும் கருத்து வலுவடையத் தொடங்கியது. இவர்களுக்கு முன்பு ஆண்ட கில்ஜி, துக்ளக் அரசர்கள் காலத்தில் பேரரசுக் கொள்கை கொடிகட்டிப் பறந்தது. டில்லி சுல்தான்களின் ஆட்சிப் பரப்பெல்லைகளை விரிவு படுத்துவதற்காகப் பல போர்கள் மேற்கொள்ளப்பட்டன. சையத்துகள் காலத்தில் பல போர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டபோதிலும், அவை யாவும் ஜமீந்தார்கள், குறுநில ஆட்சியாளர்கள் (Chieftains) ஆகியோரின் கலகங்களை அடக்குவதற்காக மேற்கொள்ளப்பட்டனவேயன்றி, உயரிய அரசியல் காரணத்துக்காக அன்று. மேலும், அப் போர் ஏற்பாடுகள் முழுமனத்துடன் மேற்கொள்ளப்படவில்லை. கலகக்காரர்கள், தாங்கள் செலுத்தத்

தவறிய கப்பப் பணத்தைக் கட்டியவுடன் போர் நிறுத்தப்பட்டன. சில சமயங்களில் கப்பம் கட்டுவதாக வாக்களித்துப் போர் செய்வதிலிருந்து கலகக்காரர்கள் தப்பி விட்டனர். மேலும், இவர்கள் காலத்தில் வரிவசூலிப்பதற்குக்கூட, போர்முறை கையாளப் பட்டது. கத்திமுனையைக் காட்டித்தான் வரி வசூலித்தல் வேண்டும் என்ற ஓர் இழி நிலை அரசுக்கு ஏற்பட்டது. அதுமட்டுமன்றி, டில்லி சுல்தானின் ஆட்சி, டில்லியும், அதைச் சுற்றி 200 மைல் தூரம் வரையிலுமுள்ள பகுதி ஆகியவற்றில் மட்டுமே பரவியிருந்தது. மேலும் தங்களுடைய ஆட்சியின் பரப்பெல்லையை அவர்கள் விரிவாக்க முற்படவில்லை. ஆகவேதான், இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் டில்லி சுல்தானியத்தின் வீழ்ச்சி வரலாற்றில் ஒரு முக்கியக் கட்டமாகக் கருதுகிறோம். அதைத் தவிர, வேறெந்தச் சிறப்பையும் இவர்கள் காலத்தில் நாம் காண இயலாது.

**கிஸிர்கான் (கி.பி. 1414—1421):** கிஸிர்கானினுடைய முன்னோர்கள் முதன்முதலில் அரேபியா நாட்டிலிருந்து வந்திருக்கக் கூடும். பின்னர், அக் குடும்பத்தினர் மூல்தானில் குடியேறினார்கள். நாளடைவில் அவர்கள், மூல்தான் ஆளுநரான மலிக் மர்தான் தௌலத்திடம் வேலைக்கமர்ந்தனர். மலிக்மர்தான், முதலில் காரா, மஹோபா பகுதிகளுக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தார்: பிரூஸ்ஷா ஆட்சிக் காலத்தில் மேற்கே மங்கோலியப் படையெடுப்புத் தீவிரமடைந்தபோது மேற்குப் பகுதியை ஆள அனுபவமும் ஆற்றலும் நிறைந்த ஓர் உயர் அதிகாரி தேவைப்பட்டார். அத் தேவையைப் பூர்த்தி செய்யவல்லவர் மர்தான் அன்றி வேறெவரும் இல்லை என்பதை அறிந்த பிரூஸ், உடனே மர்தானை அப் பதவியில் அமர்த்தினார். நிருவாகத் திறமையுடன் கடவுள் பற்றும்கொண்டிருந்த மர்தான், கிஸர்கானின் தந்தையான மலிக் சுலைமானைத் தத்து எடுத்துக்கொண்டார். பிரூஸ்ஷா தாம் மர்தானிடம் கொண்டிருந்த அன்பைக் காட்டும் வாயிலாகச் சுலைமானைக் காரா, மஹோபா பகுதிகளுக்கு இக்தாதராக நியமித்தார். மர்தான் இறந்தபிறகு, அவரது மகன் மலிக் ஷெய்க் மூல்தான் ஆளுநரானார். மலிக் ஷெய்க், வெகுநாள் உயிரோடிருக்கவில்லை. அவருடைய மறைவிற்குப் பிறகு, சுலைமான், அவர் வகித்துவந்த பதவியில் நியமிக்கப்பட்டார். சுலைமானுடைய மறைவிற்குப் பின்னர், கிஸிர்கான் மூல்தானின் ஆளுநரானார். இவர்கள் அனைவரும் பிரூஸ் ஷா காலத்திலேயேமூல்தான் ஆளுநர்ப் பொறுப்பினைப் பெற்றார்கள் என்று யஹியா தமது நூலில் கூறியுள்ளார். இது சரியன்று. பிஹமீத்கானி என்ற வரலாற்று நூலில் காணும் குறிப்புப்படி பிரூஸ் ஷா, தமது இறுதிக் காலத்தில் மர்தானை மூல்தான் ஆளுநராக நியமித்தார், மர்தான்

அப் பதவியினை அபுபக்கர்ஷாவினுடைய ஆட்சிக் காலத்திலும் வகித்துவந்தார். கிஸிர்கான் அப் பதவியினைச் சுல்தான் முகமது ஷாவின் காலத்தில் பெற்றார்.

கி. பி. 1395-96 ஆம் ஆண்டில் கிஸிர்கானுக்கும் மல்லூ இக்பால் கானுடைய சகோதரரான சாரங்கானுக்கும் இடையே பூசல் ஏற்பட்டது. அப்போது சாரங்கான் லாகூர், தீபால்பூர் ஆகியவற்றின் இக்தாதராகப் பணியாற்றி வந்தார். அப் பூசலின் விளைவாகக் கிஸிர்கான் மூல்தானை இழக்க நேர்ந்தது. அதன் பின்னர், அவர் மீவாத்தின் மக்தாதரான பகதூர் நஹிர் என்பவரிடம் அடைக்கலம் தேடினார். தைமூர் படையெடுப்புக் கிஸிர்கானுடைய வாழ்வு மீண்டும் மலர்வதற்கு உதவியாக இருந்தது. டில்லியைத் தைமூர் கைப்பற்றியபோது கிஸிர்கானும் வேறு சிலரும் அவருக்கு அடிபணிந்தனர். கிஸிர்கானினால் கவரப்பட்ட தைமூர், அவரிடம் முதலில் டில்லியின் ஆட்சிப் பொறுப்பை அளித்ததாகவும் பின்னர், அவர் இந்தியாவைவிட்டு முடிவாக வெளியேறியபோது மூல்தானையும், தீபால்பூரையும் அவருக்கு அளித்ததாகவும் யஹியா கூறுகிறார். டில்லியுடன் மூல்தானையும், தீபால்பூரையும் சேர்த்து ஆளும் பொறுப்பைப் பெற்றாரா; அல்லது டில்லிக்குப் பதிலாக மூல்தான், தீபால்பூர் ஆட்சிப் பொறுப்பைப் பெற்றாரா என்பதைத் திட்டவட்டமாக நாம் கூற இயலாது. எது எவ்வாறாயினும், இந் நிகழ்ச்சி கிஸிர்கானுடைய வாழ்க்கையில் ஒரு திருப்புக் கட்டமாக அமைந்துவிட்டது. அதன் விளைவாக, அவரது புகழ் மீண்டும் ஒளிவிடத் தொடங்கியது. தைமூரின் படையெடுப்பிற்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் போராட்டத்தில் அவர் கலந்துகொண்டு அதில் வெற்றியடையத் தக்க ஒரு சூழ்நிலையை அஃது அவருக்கு அமைத்துக் கொடுத்தது என்பது உறுதி. அவரது ஆட்சியை டில்லியில் ஏற்படுத்த பலர் தடையாக இருந்தனர். அவர்களுள் முக்கியமானவர்கள் துக்ளக் அரச குலத்தவர்களும், மலிக்குகளும் ஆவார்கள். இனி அவர் எவ்வாறு ஆட்சியைக் கைப்பற்றினார் என்பதைக் கவனிப்போம். தைமூரின் படையெடுப்பிற்குப் பிறகு, டில்லியை நஸ்ரத்ஷா கைப்பற்றினார். ஆனால், அவரது ஆட்சி வெகுநாள் நீடிக்கவில்லை. டில்லியைவிட்டு ஓடிவிட்ட மல்லூ இக்பால் கான், மீண்டும் தலைநகருக்கு வந்து நஸ்ரத்ஷாவை டில்லியிலிருந்து வெளியேற்றினார். மீவாத்திற்கு ஓடிய நஸ்ரத் அங்கு உயிரிழந்தார். இவ்வாறாக, ஒரு முட்டுக்கட்டை அகற்றப்பட்டுவிட்டது. டில்லியைத் தம் வசம் ஆக்கிக்கொண்ட மல்லூ இக்பால், தம் அதிகாரத்தைச் சுற்றியிருந்த பகுதிகளில் நிலைநாட்ட முற்படலானார். ஜான்பூரைக் கைப்பற்ற அவர் மேற்கொண்ட முயற்சி

வீணுயிற்று. அதனுல், தம்முடைய ஆதிக்கத்திற்குப் பங்கம் ஏற்படுமோ என்ற அச்சம் அவருக்கு உண்டாயிற்று. ஆகவே, தம் நிலையை வலுப்படுத்தும் நோக்குடன் கி. பி. 1401 ஆம் ஆண்டு சுல்தான் மாமூத் ஷாவை டில்லி வருமாறு அழைப்பு விடுத்தார். தைமூர் படையெடுப்பின்போது மாமூத்ஷாவும், மல்லூ இக்பால்கானும் அவரை எதிர்த்துத் தோல்வியுற்றனர் என்றும், அதையடுத்து அவர்களிருவரும் டில்லியைவிட்டு ஓடி விட்டனர் என்றும் முன்பே கண்டுள்ளோம். டில்லியைவிட்டு ஓடிய மாமூத்ஷா குஜராத்தில் அடைக்கலம் நாடினுர். ஆனுல், அங்கு அவர் தக்க மரியாதையுடன் நடத்தப்பெறவில்லை. எனவே, அங்கிருந்து மாளவம் சென்றுர். அவர் மாளவத்தில் இருந்தபோதுதான் மல்லூவிடமிருந்து அழைப்பு அவருக்கு வந்தது, அதனை ஏற்று அவர் டில்லிக்கு விரைந்து மீண்டும் டில்லி அரியணையில் அமர்ந்தார். அவர் பெயருக்குத்தான் சுல்தானுக இருந்தார். மல்லூ இக்பாலே உண்மையில் ஆட்சி செலுத்தி வந்தார். இந்த வகையான சூழ்நிலை சுல்தானுடைய மனத்துக்கு உகந்ததாக இருக்கவில்லை. மல்லூவின் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ளத்தக்க தருணத்தை எதிர்நோக்கி யிருந்தார். அந்த நேரத்தில்தான் மல்லூ மீண்டும் ஜான்பூர்மீது படையெடுத்துச் சென்றுர். அவருடன் சென்ற சுல்தான் ஜான்பூர் அரசரான இப்ராஹீம் பக்கம் சேர்ந்துகொண்டு மல்லூவை எதிர்ப்பதெனமுடிவு செய்தார். ஆனுல் இப்ராஹீம் அவரைத் தக்க முறையில் நடத்தவில்லை. எனவே, சுல்தான் கன்னுேசிக்கு ஓடிவிட்டார். மல்லூ இக்பால் கன்னுேசியைத் தாக்கினுர். ஆனுல் அவரால் அதனைக் கைப்பற்ற இயலவில்லை. ஜான்பூர், கன்னுேசி ஆகியவற்றைக் கைப்பற்றும் முயற்சி தோல்வியில் முடிந்துவிட்டமையால், மல்லூ இக்பால், தமது கவனத்தை மேற்குப்பக்கம் திருப்பினுர். அங்குக் கிஸிர்கான் தமது ஆதிக்கத்தைப் படிப்படியாகப் பெருக்கி வந்துகொண்டிருந்தார். மூல்தான், தீபால்பூர், மேற்கு சிந்து ஆகியவற்றில் அவரது செல்வாக்குக் கொடிகட்டிப் பறந்தது. தமக்குப் போட்டியாக கிஸிர்கான் வந்துவிடுவாரோ என்ற அச்சம் மல்லூ இக்பாலிடம் தோன்றியது, ஆகவே, அவருக்கு எதிராகப் போரிடுவது என்று முடிவு செய்தார். அப்போது சமானுவை பஹ்ராம்கான் துருக் பச்சா என்ற பெயருடைய பிரூஸ்ஷாவின் அடிமை ஒருவர் ஆண்டு வந்தார். அவர் கிஸிர்கானுடன் நட்புறவுகொண்டிருந்தார். அந்த நேரத்தில்தான் தைமூர் மறைந்துவிட்ட செய்தி மல்லூவின் காதுகளுக்கு எட்டியது. இதுவே தகுந்த சமயமென அறிந்த இக்பால், சமானுவை நோக்கிப் படைசெலுத்தினுர் (கி. பி. 1405). பஹ்ராம்கான் சமானுவைவிட்டு ஓடிவிட்டார். பின்னர், அவர்

இக்பாலுடன் உடன்பாடு ஒன்றைச் செய்துகொண்டார். அதன்படி கிஸிர்கானுக்கு எதிராக மல்லூவிற்கு உதவி அளிப்பதாகப் பஹ்ராம் வாக்களித்தார். இவ்விருவர்தம் படைகளும் ஒன்றுசேர்ந்து மூல்தானை நோக்கிப் புறப்பட்டன. பஹ்ராம்கானினுடைய நட்பில் சந்தேகம் கொண்ட மல்லூ இக்பால், அவரைப் போகும் வழியில் கொன்றுவிட்டார். பஹ்ராம்கானுக்கு உடந்தையாக இருந்த வேறு சிலர் அமீர்கள் சிறையிலிடப்பட்டனர், அதன் விளைவாக, இக்பாலுடைய படையின் வலிமை குன்றியது. ஆயினும் தொடர்ந்து படை நடத்திச் சென்றார். கி. பி. 1405ஆம் ஆண்டு அஜூதான் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் இக்பால் கொல்லப்பட்டார். அவரது தலையை அவரது சொந்த ஊரான பத்தேபூரின் நகர வாயிலில் பொருத்திவைக்குமாறு கிஸிர்கான் கட்டளையிட்டார். மல்லூவின் மறைவிற்காக டில்லியில் எவரும் வருந்தியதாகத் தெரியவில்லை.

மல்லூ இக்பால், துக்ளக் அரசர்களுக்குச் சேவைபுரிவதிலேயே தம் வாழ்நாளைக் கழித்தார் என்று கூறுவது மிகையாகாது. மேலும், டில்லி சுல்தானியத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுத் தனித்தியங்கத் தலைப்பட்ட பல ஆட்சித் தலைவர்களுடனும் ஜமீந்தார்களுடனும் போரிட்டு அதனைக் காப்பாற்றும் முயற்சியில் தமது காலத்தைச் செலவிட்டார் என்பதனையும் மறுக்க இயலாது. அதுமட்டுமன்றித் தைமூர் படையெடுப்பின் விளைவாகச் சின்னுபின்னமாக்கப்பட்ட டில்லியில் மீண்டும் அமைதி நிலவ அவர் பாடுபட்டார் என்பதையும் மறந்துவிடமுடியாது. அதே நேரத்தில் அவரிடம் சில குறைகளும் காணப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கது மட்டு மீறிய ஆசையாகும். அவர் சுல்தான் பட்டத்தைச் சூட்டிக்கொள்ளவில்லை என்பதும், அவர் தம் பெயரில் நாணயங்களை அச்சிடவில்லை என்பதும், அவர் தம் பெயரில் குத்பாவை வாசிக்கவேண்டும் என்று வற்புறுத்தவில்லை என்பதும் இந்த வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தக்க சூழ்நிலையும் வாய்ப்பும் அவருக்கு ஏற்பட்டிருந்தபோதிலும், அவற்றுள் ஒன்றைக்கூட அவர் மேற்கொள்ளவில்லை என்பதும் உண்மையே. ஆனால், அவர் சுல்தானைத் தம் கைப்பொம்மையாக ஆக்கி அதிகாரம் அனைத்தையும் தாமே செலுத்த முற்பட்டார் என்பதை எவரும் மறுக்க இயலாது. மேலும், கிஸிர்கானை வென்ற பிறகு அரசப் பட்டத்தைச் சூட்டிக்கொள்ள நினைத்தார் என்று பிரிஷ்டா கூறுகிறார். அதிலிருந்தும் அவரை எந்த அளவிற்குப் பதவி மோகம் பிடித்திருந்தது என்பது விளங்கும். குறைகள் பல இருப்பினும் மல்லூ, ஒரு சிறந்த வீரர் என்பதை

மறுக்கவோ மறக்கவோ இயலாது. வாழ்நாள் முழுவதையும் போரிடுவதிலேயே செலவிட்டவர். போர் புரிந்துகொண்டே வீர மரணத்தைத் தழுவினர்,

மல்லூ இறந்துவிட்ட செய்தியை அறிந்த தௌலத்கான் போன்ற சில டில்லி பிரபுக்கள் உடனே மாமூத்ஷாவை டில்லிக்குத் திரும்பி வரும்படி கேட்டுக்கொண்டார்கள். அவர்களுடைய அழைப்பை ஏற்று மாமூத்ஷா டில்லி திரும்பினர். தாம் டில்லி திரும்புவதற்குக் காரணமாக இருந்த தௌலத்கான் லோடிக்கு இடைதுறைப் பகுதியின் ஆளுநர்ப் பதவியை அளித்து அவரைப் பெருமைப்படுத்தினர்.

ஏழு ஆண்டுகள் கழித்து டில்லியை மீண்டும் பெற்ற மாமூத் ஷாவிற்குப் பல இன்னல்கள் காத்திருந்தன. கிழக்கே இப்ராஹீமும், மேற்கே கிஸிர்கானும் அவரை எதிர்த்தார்கள். மாமூத்ஷா கன்னேசியை விட்டுச்சென்ற சில மாதங்களுக்குப் பிறகு, இப்ராஹீம் கன்னேசியைத் தாக்க முற்பட்டார். அதனல், கோபமுற்ற மாமூத், தமது படையைக் கன்னேசி நோக்கிச் செலுத்தினர். இருவரும் போருக்குப் புறப்பட்டபோதிலும் போர் செய்வதற்குத் தயங்கினர்கள். பல நாட்கள் இரு படைகளும் ஒன்றுக்கொன்று எதிரெதிராக நிறுத்தப்பட்டிருந்தன. இறுதியில் இரு படைகளும் தத்தம் தலைநகரை நோக்கிச் சென்று விட்டன. இதற்கிடையில் தௌலத்கான் லோடியின் தலைமையின் கீழ்ச் சமானவை ஆண்டுவந்த பைராம்கான் துருக் பச்சாவிற்கு எதிராக மாமூத் ஒரு படையை அனுப்பிவைத்தார். பைராம்கான், பிரூஸ் ஷாவின் துருக்கிய அடிமைகளுள் ஒருவர் ஆவர். அவர் கிஸிர் கானினுடைய ஆணைக்குட்பட்டுச் சமானவை ஆண்டு வந்தார். சமானவிற்கு அருகே நடைபெற்ற போரில் அவர் தௌலத் கானிடம் தோல்வியுற்றார். அச் செய்தியை அறிந்த கிஸிர்கான் தம் படையை நடத்திக்கொண்டு சமான சென்றார். கிஸிர்கானை எதிர்த்துப் போராட விரும்பாத தௌலத்கான் பின் வாங்கினர். தௌலத்கானுடைய அமீர்கள் சிலர், கிஸிர்கான் பக்கம் சேர்ந்து கொண்டனர். இதற்கிடையில் இப்ராஹீம் மீண்டும் கன்னேசியைத் தாக்கி அதனைக் கைப்பற்றிக்கொண்டார். கன்னேசியிலிருந்து டில்லியைக் கைப்பற்றுவதற்குரிய நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். டில்லி பிரபுக்கள் பலர், அவர் பக்கம் சேர்ந்து கொண்டு அவரது கைகளை வலுப்படுத்தினர்கள். டில்லியைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் மேலும் வலுவடைந்தது. 1407ஆம் ஆண்டில் இப்ராஹீம், டில்லியை நோக்கிப் புறப் பட்டார். வழியில் சம்பல் நகரைக் கைப்பற்றினர், பிறகு டில்லி

நகரை அடைந்தார். அப்போது குஜராத் அரசர், ஜான்பூரைத் தாக்க முயற்சி செய்து வருகிறார் என்ற செய்தி இப்ராஹீம் காதுகளுக்கெட்டியது. மேலும், காலத்தை வீணாக்குவது சரியன்று என்று உணர்ந்த இப்ராஹீம், ஒரு சிறு படையை மட்டும் விட்டு விட்டு ஜான்பூரை நோக்கிப் புறப்பட்டுவிட்டார். மாமூத்ஷா அப் படையினைத் தோற்கடித்துச் சம்பலை மீண்டும் தம் வசமாக்கிக் கொண்டார். இந்த வெற்றி அவரை மேற்குப் பக்கத்தில் தாம் இழந்த பகுதிகளை மீண்டும் பெற ஊக்குவித்தது. கி. பி. 1408ஆம் ஆண்டில் அவர் ஹிஸார்பிரோஸாவைத் தாக்கி அதனுடைய ஆட்சியாளரை அடிபணியச் செய்தார். இவ்வெற்றி அவருக்கு உரியபயனை அளிக்கவில்லையென்றாலும், அது கிஸிர் கானின் கோபத்தைக் கிளற உதவியது. கிஸிர்கான் பதேபாத் நோக்கிப் புறப்பட்டு அங்கு மாமூத் ஷாவிற்கு அடிபணிந்தவர்களை தண்டித்தார். மேலும் இடைதுறைநாட்டைச் சேதப்படுத்தும் நோக்குடன் ஒருசிறு படையையும் அனுப்பி வைத்தார். பின்னர், ரோதாக் வழியாக டில்லி நோக்கித் தாமே புறப்பட்டுச் சென்றார். 1409ஆம் ஆண்டில் சிரியை முற்றுகையிட்டார். உணவுப்பொருள் பற்றாக்குறையின் காரணமாக முற்றுகை தளர்த்தப்பட்டது. இப் படையெடுப்பு பெருவெற்றியை அவருக்கு அளிக்கவில்லையெனினும், டில்லியில் ஏற்பட்டிருந்த சூழ்நிலையைச் சரிவரப் புரிந்துகொள்ளும் வாய்ப்பை அஃது அவருக்கு ஏற்படுத்தித் தந்தது. சுல்தான், மாமூத் ஷாவினைத் தோற்கடித்துத் தாம் டில்லியைக் கைப்பற்றிக்கொள்ளும் நாள் நெருங்கிக்கொண்டு வருகிறதென்பதை அது நன்கு புலப்படுத்தியது. ஆகவே, அது முதற்கொண்டு டில்லியைக் கைப்பற்றுவதற்குத் தீவிர முயற்சி மேற்கொள்ளத் தலைப்பட்டார். கி. பி 1409—10-ல் தௌலாத் கான் லோடியின் பக்கம் போய்ச் சேர்ந்துவிட்ட பைராம்கான், துருக்பச்சாவைத் தாக்கி அவரைத் தமக்கு அடிபணியச் செய்தார். அதனையடுத்து ரோடாக்மீது படையெடுத்தார். தக்க சமயத்தில் டில்லியிலிருந்து போதுமான உதவி கிட்டாத காரணத்தால் அதனுடைய தலைவர் கிஸிர்கானிடம் சரணடைந்தார். 1411—1412ஆம் ஆண்டில் மீண்டும் ரோடாக்கைத் தாக்கினார். அதனையடுத்து மீவாத்தின்மீது படையெடுத்தார். பிரோஸாபாத்தின் ஆளுநர் இக்தியார்கான், கிஸிர்கான் பக்கம் சேர்ந்து கொண்டார். இவ்வாறாக இடைதுறைப்பகுதி கிஸிர்கானின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்டது. இரண்டாவது முறையாக சிரியை முற்றுகையிட்டார். உணவுப் பற்றாக்குறை காரணமாக முற்றுகை கைவிடப்பட்டது. கி. பி. 1412ஆம் ஆண்டில் கிஸிர்கான் மீண்டும் டில்லியை நோக்கிச் சென்றார். அதே ஆண்டில் மாமூத்ஷா இயற்கை எய்தினார். முஸ்லிம் வரலாற்று

ஆசிரியர்கள், அவர் 20 ஆண்டுகள் ஆண்டதாகக் கூறுகின்றனர். ஆனால், அவரது ஆட்சி 18 ஆண்டுகள்தான் நடைபெற்றது. அந்த 18 ஆண்டுகளிலும் அவர் பெயருக்குத்தான் சுல்தானாக இருந்தார். சுல்தானாக வாழவில்லை யென்றாலும் சுல்தானாக இருந்தது அவருடைய நற்பேறாகக் கருதவேண்டும். அவருடைய மறைவுடன் இந்தியாவில் துருக்கியர்கள் ஆட்சி முடிவுற்றது எனலாம். அத்துடன் துக்ளக் அரசர்கள் ஆட்சியும் முடிவுற்றது.

மாமுத்ஷாவின் மறைவிற்குப் பின்னர், டில்லி பிரமுகர்கள் தௌலத்கான் லோடியைச் சுல்தானாக நியமித்தார்கள். கிஸிர் கான் பக்கத்திலிருந்து சில பிரபுக்கள் தௌலத்கான் பக்கத்தில் சேர்ந்துகொண்டனர். ஆயினும் கிஸிர்கான் மனம் தளரவில்லை. மீண்டும் ஒருமுறை டில்லியின்மீது படையெடுத்துச் சென்றார். வழியில் மீவாத்தை வென்றார்; சம்பலை அழித்தார். 1414ஆம் ஆண்டில் 60,000 குதிரைகளுடன் சிரியை முற்றுகையிட்டார். தௌலத்கான் வீரத்துடன் போர் செய்தபோதிலும், சிலருடைய துரோகச் செயலின் காரணமாகச் சிரி, கிஸிர்கான் கையில் சிக்கியது. தௌலத்கான் சிறைப்பட்டார். ஹிஸார் பிரோஸாவில் சிறை வைக்கப்பட்ட தௌலத்கான், பின்னர் கொலையுண்டார். கி. பி. 1414ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் நாள் கிஸிர்கான் டில்லியில் தமது ஆட்சியை நிறுவினார்.[1]

கிஸர்கானின் முதல் வேலை நிருவாகத்தைத் திருத்தி அமைப்பதாயிருந்தது. வலுவற்ற அரசர்கள் தைமூர் படையெடுப்பு, பஞ்சம், பிணி ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட டில்லி மக்களுடைய நன்மதிப்பையும் ஒத்துழைப்பையும் பெறுவதுதமது முதல் நோக்கமாகக் கொண்டார். அதற்காக அவர்களுக்கு ஏராளமான பரிசுகளையும், உதவித் தொகைகளையும் கொடுத்தார். அதன் விளைவாக, டில்லி மக்கள் மீண்டும் வளமான வாழ்க்கையை நடத்தலானார்கள். அடுத்தபடியாகக் கிஸிர்கான் தமக்கு ஆதரவாக இருந்த பிரபுக்களுக்குப் பட்டங்களையும் பதவிகளையும் வழங்கினார். மலிக் துபா என்பவர், தாஜ் உல் முல்க் என்ற பட்டத்தையும் வசீர் பதவியையும் பெற்றார். சையத்து சலீம் ஷஹரான்பூர் இக்தாதராக நியமிக்கப்பட்டார். அவரே கிஸிர் கானின் முக்கிய ஆலோசகராகத் திகழ்ந்தார். மலிக் சுலைமானின் வளர்ப்பு மகனான மலிக் அப்துர் ரஹீம், மூல்தான், பாத்பூர் ஆகியவற்றின் நிருவாகப் பொறுப்பையும் அலா உல் முல்க் பட்டத்தையும் பெற்றார். இக்தியார்கான், இடைத்துறை

1 ஜூன் 6ஆம் நாள் என்று H C I P குறிப்பிடுகிறது. 6ஆவது பகுதி பக்கம் 125 பார்க்க.

நாட்டின் இக்தாதர்களுள் ஒருவராக நியமிக்கப்பட்டார். மலிக் சரூப் ஷாஞ-இ-ஷஹர் (நகரத் தலைவர்) பதவியையும், மலிக்காலூ ஷாஞ-இ-பில் யானைக்காப்பாளர் பதவியையும், காயிருத்தீன் அரிஸ்-இ-மமாலிக் பதவியையும் மலிக் தாவூத் தபீர், செயலர் பதவியையும் பெற்றனர். அதுமட்டுமன்றி, பிரூஸ்ஷாவின் அடிமைகள் அவரவர் இக்தாக்களையும், கிராமங்களையும் தொடர்ந்து தங்களுடைய பராமரிப்பில் வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்டனர். இந்த வகையாகக் கிஸிர்கான் தோற்றுவித்த ஆளும் வகுப்பின் தன்மையை நாம் சரிவர அறிந்துகொள்ளப் போதிய சான்றுகள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆயினும், ஒன்றை மட்டும் கூற இயலும். இல்டுட்மிஷ், கில்ஜிக்கள், துக்ளக்குகள் ஆகியோர் தோற்றுவித்திருந்த ஆளும் வகுப்புகளிடையே நாம் காண்கின்ற ஒற்றுமையுணர்ச்சி இதில் காண இயலாது. இதில் அடங்கியிருந்தோர் பல திறப்பட்ட அரசியல் கருத்துகளைக் கொண்டவர்களாகவும் பலவகைக் கலாச்சாரங்களைத் தழுவியவர்களாகவும் காணப்பட்டனர். அதுவே சையத்துகளின் வலியற்ற தன்மைக்கு உற்றதோர் காரணமாகும்.

அடுத்துக் குறிப்பிட வேண்டியது கிஸிர்கானுடைய பட்டத்தைப்பற்றிய செய்தியாகும். கிஸிர்கான் ஷா, என்ற பட்டத்தைத் தம் ஆட்சிக் காலம் முடியும் வரை சூட்டிக்கொள்ளவில்லை. யஹியா அவரை பந்த்கீ-இ-ரயாத்-இ-ஆலா என்றும், பதோனி அவரை மஸ்னத்-இ-ஆலா என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். பிரிஷ்டா அவரை சையத் கிஸிர்கான் என்று மட்டுமே குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, அவரையும் அவரைச் சார்ந்தோரையும் மக்கள் அரசர்களாக மதிக்கவில்லை என்ற கருத்து வரலாற்று ஆசிரியர்கள் சிலரிடம் நிலவி வருகிறது, அக் கருத்தினுக்கேற்றாற் போல் கிஸிர்கான் டில்லி ஆட்சியுடன் தைமூர், அவருக்குப் பின் பட்டமெய்திய ஷாருக் ஆகியோரின் பெயர்களை இணைத்துப் பேசத் தொடங்கினார். முதல் மூன்று ஆண்டுகள் வரை ஷாருக்கின் பெயரில் குத்பா வாசிக்கப்பட்டு வந்தது. கி, பி. 1417ஆம் ஆண்டில்தான் ஷாருக்கின் அனுமதி பெற்று அவர் பெயருடன் தம் பெயரையும் இணைத்துக் குத்பாவினை வாசிக்கும்படி கட்டளையிட்டார். மேலும், தம் பெயரால் நாணயங்களை அச்சிட்டு அவர் வெளியிடவும் இல்லை. அதற்கு மாறாகப் பிரூஸ்ஷாவும், அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர்களும் வெளியிட்டிருந்த நாணயங்களையே தேதிகளை மட்டும் மாற்றி வெளியிட்டார். ஒவ்வோர் அரசரும் தாம் அறியணையேறியவுடன் தம் பெயரில் நாணயங்களை வெளியிட்டுத் தமது மேலதிகாரத்தை வெளிப்படுத்துவது அக் கால வழக்கமாகும். அத்தகைய நடவடிக்கையைக் கிஸிர்கான் மேற்கொள்ளவில்லை என்பதை நாம் அறியும்

போது, அவருடைய தனித்தியங்கும் அதிகாரத்தில் நமக்கு ஐயம் ஏற்படுவது இயற்கையே. அவரது அதிகாரத்தின் உண்மை நிலையை நாம் அறியவேண்டுமெனில், அவர் எந்த வகையான அரசியல் சூழ்நிலையில் ஆட்சி செலுத்தத் தொடங்கினர் என்பதை உணரவேண்டும். துக்ளக் அரசர்களின் ஆதரவுதான் அவர் முதலில் மூல்தான் ஆளுநர் பொறுப்பைப் பெறுவதற்குக் காரண மாகும் என்றும், மீண்டும் அப் பதவியை அடைய தைமூர் அன்பே காரணமாகும் என்றும் முன்பு கண்டோம். ஆகவே, தைமூரிடமும் ஷாருக்குவிடமும் அவருக்குப் பயமும், பக்தியும் ஏற்பட்டிருந்ததில் வியப்பேதும் இல்லை. ஷாருக்கின் மேலதிகா ரத்தைத் தாம் ஏற்றுக்கொண்டதை அறிவிக்கும் வகையில் அவர் தம் ஆட்சிக் காலம் முடியும்வரை ஷாருக்குவிற்குப் பரிசுகளையும், கப்பப் பணத்தையும் அனுப்பிவைத்தார். மேலும், அவருடைய ஆட்சியின் கீழிருந்த பகுதிகள் பெரும்பாலும் பேராசையும், அதிருப்தியும் கொண்ட துக்ளக் பிரபுக்களின் கைவசமிருந்தன. அவர்களிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக்கொள்ள வலுவான ஓர் அரசரின் ஆதரவு அவசியமாகத் தேவைப்பட்டது. ஆகவே, ஷாருக்குவின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ள நேர்ந்தது. அதுவே துக்ளக்குகளின் நாணயங்களைத் தொடர்ந்து வெளியிடு வதற்கும் காரணமாக அமைந்தது. துக்ளக்குகளிடம் மக்கள் தொடர்ந்து மரியாதை காட்டி வந்தனர். தம்மை ஷா என்று அறிவித்து அம் மக்களின் கோபத்திற்கு தம்மை ஆளாக்கிக் கொள்வதற்குக் கிஸிர்கான் அப்போது விரும்பவில்லை. கிஸிர்கான் துக்ளக்குகளின் சார்பில் ஆட்சி செலுத்துகிறர் என்ற எண்ணம் மக்களிடையே ஏற்படுத்தி, அதன் வாயிலாக அவர்களுடைய நன் மதிப்பைப் பெறவே அவர் ஷா பட்டத்தை ஏற்கவில்லை என்பர் சிலர்.

உண்மை எதுவென்று அறிய நாம் சில உண்மைகளை இங்குக் குறிப்பிடுதல் வேண்டும். குத்பாவில் ஷாருக்குவின் பெயரை இணைத்த கிஸிர்கான், நாணயங்களில் அவரது பெயரைப் பொறிக் காமல் விட்டது ஏன் என்பது விளங்கவில்லை. மேலும், தம் பெயரில் நாணயங்களை அச்சிட்டு வெளியிடாததற்கு வேறு சில காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவதாகப் புதிய நாண யங்கள் வெளியிடுவதற்குத் தேவையான உயர்ந்த ரக உலோ கங்கள் கிடைப்பது அரிதாக இருந்தது. இரண்டாவதாக, துக்ளக்குகளின் நாணயங்கள் சந்தைகளில் நல்ல செல்வாக்குப் பெற்றிருந்தன. அவற்றை மீட்டுப் பெற்று, அவற்றிற்குப் பதிலாகப் புதிய நாணயங்களை வெளியிடுவதால், வாணிகம் பாதிக்கப்படும் என்ற பயம் ஏற்பட்டிருந்தது. இவ்வுண்மை

களைக் கொண்டு கவனிக்குமிடத்துக் கிஸிர்கான் பெயரளவிற்கு மட்டுமே ஷாருக்குவின் மேலதிகாரத்தை ஏற்று இருந்தார் என்பதும், அவர் ஷா பட்டத்தை ஏற்கவில்லையென்றாலும் முழு அதிகாரம் கொண்ட அரசராகவே அவர் செயற்பட்டு வந்தா ரென்பதும் வெள்ளிடை மலையென விளங்கும்.

அவர் ஆற்றவேண்டிய பணிகளுள் மிக முக்கியமான பணி, அவர் தம் அதிகார எல்லையை விரிவுபடுத்துவதாகும். சையத்துகள் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பே, டில்லி சுல்தான்களுடைய அதிகாரப் பிடியிலிருந்து பல பகுதிகள் நழுவி விட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை வங்காளம், தக்காணம், ஜான்பூர், மாளவம், குஜராத் முதலியனவாகும். கிஸிர்கானினுடைய ஆட்சி ஏற்பட்ட போது சிந்து, பஞ்சாப், உத்தரப் பிரதேசம் ஆகியவை அவரது ஆட்சியின்கீழ் ஒன்று சேர்க்கப்பட்டன என்பது உண்மையே. ஆயினும், அவற்றைத் தொடர்ந்து தம் ஆதிக்கத்தின்கீழ் வைத்திருப்பது மிகக் கடினமான செயலாகத் தோன்றியது. அவரது ஆட்சிக் காலம் முழுவதும் இவ்விடங்களில் ஏற்பட்ட கலகங்களை ஒடுக்குவதிலேயே செலவழிக்கப்பட்டது. டில்லி சுல்தான்கள் இழந்து விட்ட பகுதிகளை மீண்டும் பெறுவதற்கான முயற்சியை அவர் எடுக்கத் தவறியதற்கு அஃது ஒரு காரணமாகும். போதிய வருவாய், வாய்ப்பு, வளங்கள் அவரிடம் இல்லாமையும் பிற காரணங்களாகும்.

முதலில் மேற்கு உத்தரப்பிரதேசத்தில் தமது அதிகாரத்தை நிலைநாட்ட அவர் மேற்கொண்ட முயற்சியைப்பற்றிக் கவனிப்போம். கி.பி. 1414ஆம் ஆண்டில் தமது வசீர், தாஜ் உல் முல்க்கின் தலைமையின்கீழ் கதேஹார் எனப்பட்ட ரோஹில் கண்டுவிற்கு ஒரு படையை அவர் அனுப்பி வைத்தார். அப்போது கதேஹாரை ராய் வீராம்சிங் ஆண்டு வந்தார். ரோஹில்கண்டு சூறையாடப்பட்டது, அதன் அரசர் வரிகளையும் கப்பத்தையும் செலுத்துவதாக வாக்களித்தார். அதன் பின்னர், தாஜ் உல் முல்க் பதோனைத் தாக்கினார். அதன் தலைவர் மஹபத்கான் அவருக்கு அடிபணிந்தார். பிறகு கோர், காம்பில், சகேதம், பாதம் ஆகியவற்றின் ஜமீந்தார்களை ஒடுக்கினார். பின்னர், குவாலியர், சியோரி, சந்த்வார் ஆகிய பகுதிகளில் தம்படையை நடத்திச் சென்று அவற்றின் தலைவர்களிட்மிருந்து வரிகளை வசூலித்தார். ஜாலேசரை சந்த்வார் ஜமீந்தாரிடமிருந்து கைப்பற்றி, மீண்டும் முஸ்லிம்கள் கைகளில் அதனை ஒப்படைத்தார். பின்னர், இதாவாவைத் தாக்கி அதனைச் சூறையாடினார். கி.பி. 1415-ல் அவர் டில்லி திரும்பினார். தாஜ் உல் முல்க்கின் போர் நடவடிக்கைகள் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டன. ஆனால்,

அவை நிரந்தரமான பயனை விளைவித்தனவாகக் காணப்படவில்லை. அவர் டில்லி திரும்பியவுடன் அவ்விடங்கள் எல்லாம் பழைய நிலையை அடைந்து விட்டன. ஜமீந்தார்களும், ஆட்சித் தலைவர்களும் வரிகளைச் செலுத்துவதை நிறுத்தி விட்டனர். எனவே, கி.பி. 1416-17ஆம் ஆண்டுகளில் தாஜ் உல் முல்க் பயானு நோக்கி மீண்டும் படையுடன் புறப்பட்டார். போரிடுவது உசிதமன்று என்றுணர்ந்த அதன் தலைவர் கரீம் உல் முல்க் டில்லி படைத்தலைவருக்கு அடிபணிந்தார். குவாலியர் மீண்டும் தாக்கப்பட்டது. இம்முறை அதனை அழிக்குமாறு தாஜ் உல் முல்க் கட்டளையிட்டார். பின்னர், கதேஹார் நோக்கிப் படைகள் புறப்பட்டன. வீராமசிங் கப்பம் செலுத்தி கதேஹாரைக் காப்பாற்றினுர். பின்னர் தாஜ் உல் முல்க் டில்லி திரும்பினுர்.

இதற்கிடையில் கிஸிர்கான், தமது மகனை முபாரக்கானை மேற்குப் பகுதிகளில் தமது ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கு அனுப்பி வைத்தார். முபாரக்கான், அவரது உதவியாளர் மலிக்சதூ நதிரா, சமானுவின் ஆட்சித்தலைவர், ஜிராக்கான் ஆகிய மூவரும் கலந்து பிரோஸ்பூர், சிர்ஹிந்த், பைராம்கான் துருக் பச்சாவினுடைய இக்தாக்கள் ஆகியவற்றில் அமைதியும் ஒழுங்கும் நிலவச் செய்தனர். ஆனுல், முபாரக் திரும்பி வந்த பிறகு பைராம்கானுடைய உறவினர்கள் துகான்ராயின் உதவியுடன் மலிக் நதிராவைத் தாக்கி அவரைக் கொன்று விட்டனர். அதைக் கேட்ட கிஸிர்கான் மலிக் தாவூத், மலிக் ஜிராக்கான் ஆகியோர் தலைமையின்கீழ் ஒரு படையை அனுப்பினுர். அதனையறிந்த துருக் பாச்சாக்கள் மலைச்சரிவுகளை நோக்கிப் பின்னடைந்தனர். ஜிராக் அவர்களைத் துரத்திச் சென்றுர். மலைப்பகுதியிலிருந்த ஜமீந்தார்கள் துருக் பச்சாக்களுக்கு உதவி செய்தமையாலும், மலைப்பாங்கில் போரிடத்தக்க பயிற்சி பெற்றிராமையாலும் ஜிராக்கான் பின் வாங்க நேர்ந்தது.

கி.பி 1416 ஆம் ஆண்டில் கிஸிர்கானுக்கு வேருேர் இடத்தில் ஆபத்து காத்திருந்தது. குஜராத்தின் சுல்தானுன அஹமது ஷா நாகோரை முற்றுகையிட்டார். நாகோர், டில்லி சுல்தானுடைய ஆதிக்கத்தின்கீழ் இருக்கவில்லை என்பது உண்மையே. அதனைக் குஜராத் சுல்தான் கைப்பற்றி விட்டால் அவரது வலிமை மேலும் பெருகி அதனுல் தமக்குப் பேராபத்து உண்டாகும் என்று பயந்த கிஸிர்கான், நாகோரை நோக்கித் தாமே படை நடத்திச் சென்றதில் வியப்பேதும் இல்லை. அஹமது ஷா, நாகோர் முற்றுகையைக் கைவிட்டு மாளவத்தின் தலைநகரான தார் என்னுமிடத்திற்குச் சென்று விட்டார். கிஸிர்கானினுடைய போர் நடவடிக்கையே இதற்குக் காரணம் என்று நாம் உறுதியாகக் கூற இயலாது.

எனினும், இது கிஸிர்கானுக்கு நல்ல பல பயன்களை அளித்தது. சிற்றரசர்கள் பலர் இச் செய்தியைக் கேட்டுக் கிஸிர்கானுக்குத் தாமாகவே அடிபணிய முன்வந்தனர். கிஸிர்கானுக்கு வரிகளையும் கப்பப் பணத்தையும் உடனடியாகச் செலுத்தினர்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் குவாலியர் அரசர், பயானவை ஆண்டு வந்த கரீம் உல் முல்க், ஜெயின் ஆளுநரான இலியாஸ்கான் ஆகியோராவர்.

வெற்றிப் பெருமிதத்துடன் டில்லி திரும்பிய கிஸிர்கான், சதூ நதிராவைக் கொன்று சிர்ஹிந்தை முற்றுகையிட்டு வரும் துகான் ராய்க்கு எதிராக ஒரு படையை ஜூரக் கான் தலைமையின்கீழ் அனுப்பி வைத்தார். ஜூரக் கான் வருவதை அறிந்த துருக் பாச் சாக்கள் முற்றுகையைக் கைவிட்டுப் பின்னடைந்தார்கள். ஜூரக், அவர்களைப் பின் தொடர்ந்து சென்று துகான் ராயிடமிருந்து இழப்பீடாகப் பொருளை வசூலித்தார். டில்லி அரசருடைய தளபதிக்கு அடிபணிந்தார் என்பதற்காகத் துகான் ராய் ஜலந்தர் இக்தாதாராக நியமனம் பெற்றுர்.

இதற்கிடையில் கி.பி. 1418 ஆம் ஆண்டில் கதேஹாரில் வீராமசிங் கிளர்ச்சி செய்தார். மீண்டும் தாஜ் உல் முல்க் படையுடன் கதேஹார் நோக்கிப் புறப்பட வேண்டியதாயிற்று. அது போது வீராமசிங், தம்முடைய நாட்டைத் தாமே அழித்துவிட்டுக் குமாயோன் மலைப்பகுதிக்குள் ஓடிவிட்டார். வீராமசிங்கைச் சிறைபிடிப்பது இயலாத காரியமென்று உணர்ந்த தாஜ் உல் முல்க் கதேஹாரைக் கொள்ளை அடித்துவிட்டு இதாவிற்குச் சென்று அதனை முற்றுகையிட்டார். அதனுடைய ஆட்சியாளர் ராய் சுமேர், கப்பம் செலுத்தித் தமது நாட்டை அழிவினின்றும் காப்பாற்றிக் கொண்டார்.

சில மாதங்களுக்குப் பிறகு, உத்தரப் பிரதேசத்தில் மீண்டும் கலகங்கள் தோன்றின. தாஜ் உல் முல்க்கினுடைய நாசவேலைகளே அவை தோன்றுவதற்கு முக்கியக் காரணமாகும். இம் முறை கிஸிர்கானே படை நடத்திச் சென்றுர். குவாலியர், கதேஹார், இதாவா ஆகியவற்றின் அரசர்கள் அவருக்குக் கீழ்ப்படிய மறுத்து விட்டனர். அதுமட்டுமன்றி, அவரது கடுமையான நடவடிக் கைகள் அவரது நண்பர்களையும் பகைவர்களாக ஆக்கி விட்டன. அவர்களுள் ஒருவர் பதோன் ஆளுநர் மஹபத்கான் ஆவார். ஆகவே, அவர்மீதும் கிஸிர்கான் போர்தொடுக்க வேண்டியதாயிற்று. ஆறுமாதங்களாகப் பதோன் முற்றுகை

நடைபெற்று வந்தது. மஹபத்கானுக்குப் பல அமீர்களும் மலிக்குகளும் உடந்தையாக இருந்தமையால், பதோனைக் கைப் பற்றுவது கடினமாக இருந்தது. ஆகவே, கிஸிர்கான் முற்றுகை யைக் கைவிட்டு டில்லி நோக்கிப் புறப்பட்டார். போகும் வழியில் சந்தேகத்திற்குரிய பிரபுக்களை ஒரு விழாவிற்கு வருகை தருமாறு அழைத்து அவர்களைக் கொன்றுவிட்டார்.

மற்றுமோர் ஆபத்து ஒரு மோசடிக்காரன் வாயிலாக, கிஸிர் கானுக்கு வரவிருந்தது. அந்த மோசடிக்காரன் தன்னைச் சாரங் கான் என்று கூறிக் கொண்டான். சாரங்கான் தைமூர் படை யெடுப்பின்போது கொலையுண்டான். ஆயினும், சில மூடர்கள் அவனது கூற்றை உண்மையென நம்பி அவன் பக்கம் சேர்ந்தனர். அவனை ஆதரித்தால் பயனடையலாம் என்றெண்ணிய சில சுய நலக்காரர்களும் அவன் பக்கம் சேர்ந்து கொண்டனர். அதை யறிந்த கிஸிர்கான், சிர்ஹிந்தின் ஆளுநரான மலிக் சுல்தான் ஷா என்பவரை அந்த மோசடிக்காரனுக்கு எதிராகப் படையெடுத்துச் செல்லுமாறு கட்டளையிட்டார். கி. பி. 1419ஆம் ஆண்டில் சுல்தான் ஷா போருக்கு ஆயத்தமானார். வழியில் துகான் ராயும், ஜூரக் கானும் அவருடன் சேர்ந்துகொண்டனர். போரில் தோல்வி யுற்ற மோசடிக்காரன் மலைப்பகுதியில் ஒளிந்து கொண்டான். இறுதியில் துகான்ராய் அவனைத் தந்திரமாகத் தம்பால் இழுத்துப் பிறகு கொன்றுவிட்டார். இந்த நிகழ்ச்சி கிஸிர்கானுக்கு மன அமைதியை ஏற்படுத்தியது.

அதே சமயத்தில் தாஜ் உல் முல்க், உத்தரப்பிரதேசத்தில் கலகக்காரர்களை அடக்குவதில் முனைந்து ஈடுபட்டிருந்தார். பரன், கோல், இதாவா, சந்த்வார் ஆகிய பகுதிகளைச் சூறையாடினார். கதேஹார், பதோன் ஆகியவற்றின் ஆட்சியாளர்களிடமிருந்து வரி வசூலித்துக்கொண்டு டில்லி திரும்பினார்.

கி. பி. 1420ஆம் ஆண்டில் துகான் ராய் கிஸிர்கானுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். மன்சூர்பூர்வரையிலுள்ள பகுதி களைச் சூறையாடினார். பின்னர், சிர்ஹிந்துக் கோட்டையை முற்றுகையிட்டார். மலிக் காயிர் உத்தீனும், ஜூரக் கானும் துகான் ராயை எதிர்த்துப் போராடிச் சிர்ஹிந்து முற்றுகையை முறியடித் தனர். துகான் ராய் பின்வாங்கிச் செல்ல நேர்ந்தது. அவரைத் துரத்திச் சென்ற சுல்தானுடைய படைகள், சட்லெஜ் நதிக் கரையில் அவரைத் தோற்கடித்தன. துகான் ராய் கோகர்களிடம் சரண்புகுந்தார். ஜலந்தர் ஜூரக் கானுக்கு அளிக்கப்பட்டது.

கி.பி. 1421ஆம் ஆண்டு மேவாத்தில் கலகம் தோன்றியது. கிஸிர்கான் தாமே அங்குப் படை நடத்திச் சென்றார். கலகக் காரர்கள் சிலர் தப்பி ஓடினார்கள். வேறு பலர் சுல்தானுக்கு அடி பணிந்தார்கள். பின்னர்க் குவாலியர், இதாவா ஆகிய இடங் களுக்குச் சென்று தமக்குச் சேரவேண்டிய கப்பப்பணத்தைப் பெற்றார். இதாவாவில் கிஸிர்கான் நோய்வாய்ப்பட்டார். கி.பி. 1421ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் நாள் அவர் டில்லியில் இயற்கை எய்தினார். அதற்குச் சில மாதங்களுக்கு முன் தாஜ் உல் முல்க் காலமானார்.

மதிப்பீடு: கிஸிர்கான் பல நற்பண்புகளைக் கொண்டிருந்தார் திறமையையும், அயராது உழைக்கும் ஆற்றலையும் ஒருங்கே பெற்றிருந்தார்; நேர்மையானவர்; விவேகமுள்ளவர்; பிறருக்கு நன்மை செய்வதில் விருப்பம் கொண்டவர்; அக்காலத்தில் ஒருவரிடம் மிகச் சாதாரணமாகத் தோன்றியிருந்த தீய வழக் கங்களை அவரிடம் காண இயலாது; மக்களுடைய அன்பைப் பெற்றவர். அவர் ஆட்சியின்கீழ் மக்கள் மகிழ்ச்சியுடனும் மன நிறைவுடனும் வாழ்ந்து வந்தனர். ஆகவே, அவர் இறந்தபோது சிறியவரும், பெரியவரும், அடிமைகளும், அடிமை அல்லாதாரும் கறுப்பு உடையணிந்து அவருடைய மறைவிற்காக வருத்தம் தெரிவித்தனர்.[1] அரசர் என்ற முறையில் அவர் கண்ட வெற்றிகள் போற்றுதற்குரியனவாகத் தோன்றவில்லை என்று சிலர் கூறு கின்றனர்[2]. தைமூரின் படையெடுப்பினால் ஏற்பட்டிருந்த குழப் பத்திலிருந்து டில்லி சுல்தானியத்தை அவரால் மீட்க இயலவில்லை என்பதும், டில்லி சுல்தான்கள் பிடியிலிருந்து நழுவிவிட்ட ஜான்பூர் போன்ற பகுதிகளை அவர் மீண்டும் தமது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வருவதற்கு யாதொரு முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பதும், அவர் ஏற்படுத்திய அரசை, அக்காலத்தில் தோன்றி யிருந்த ஏனைய சுதந்தர இந்திய அரசுகளைவிட எல்லா வகையிலும் சிறப்பு வாய்ந்ததாக அமைக்க அவரால் முடியவில்லை என்பதும், கத்தி முனையைக் காட்டித்தான் வரி வசூல் செய்யவேண்டிய அவல நிலையிலிருந்த நிருவாகத்தினைக் காப்பாற்றத் தவறி விட்டார் என்பதும் மறுக்கவியலாத உண்மைகளாகும். மேலும், அவரது செய்கைகள் சில, சையத்துகளின் ஆட்சியை அழித்து விடக் கூடிய திறனைப் பெற்றுவிட்டன. கத்தி முனையைக் காட்டி வரி வசூலிக்கும் முறை அரசின் நிதி நிலையை வெகுவாகப் பாதித்தது. அரசினுடைய ஆண்டு வருமானத்தைக் கணக்கிடுதல் கடினமாகத் தோன்றியது. அவர் காலத்தில் பழைய வெள்ளி,

[1] Ferishta. I, p. 166.
[2] HCIP, Vol. VI, p. 127.

தங்க நாணயங்கள் இந்தியாவிலிருந்து முற்றிலும் மறைந்து விட்டன என்பதை அறியும்போது, நிதிநிலை எந்த அளவுக்குச் சீரழிந்திருந்தது என்பது விளங்கும். அதுமட்டுமன்றி, வரி வசூலிக்க அவர் கையாண்டமுறையை வெறுத்த இக்தாதார்களும் ஜமீன்தார்களும் அடிக்கடி கலகம் விளைவித்தமையால், அவர் ஆப்கானியப் பிரபுக்களின் உதவியை எப்போதும் நாடியிருக்க வேண்டியதாயிற்று. இஃது ஆப்கானியர்களின் வலிமை பெருகுவதற்குக் காரணமாக அமைந்துவிட்டது. அந்த முறையில் வலிமை பெற்றுவிட்ட ஆப்கானியர்கள், சையத்துகளை வீழ்த்தி அரசைக் கைப்பற்றிக்கொண்டதில் வியப்பேதும் இல்லை அல்லவா?

மேலே கூறியவற்றால், அவர் ஆளுந்திறன் அற்றவர் என்று நாம் முடிவு செய்யக்கூடும். ஆனால், அம் முடிவு சரியானது அன்று. மிகச் சாதாரண நிலையிலிருந்த அவர், தமது சொந்த முயற்சியினால் சுல்தான் பதவியைக் கைப்பற்றி ஓர் அரிய சாதனையைப் புரிந்துள்ளார். அதுமட்டுமன்றி, தமது ஆட்சிப் பகுதியில் அமைதியை ஏற்படுத்துவதற்கு இடைவிடாது பாடுபட்டார். மேலும் மூல்தான், தீபால்பூர் போன்ற மேற்குப் பகுதிகளையும், உத்தரப்பிரதேசத்தையும் டில்லி அரசரின்கீழ் ஒன்றாக இணைக்க அவர் தீவிர முயற்சி மேற்கொண்டார். டில்லி சுல்தானியத்தின் ஆட்சிப் பரப்பெல்லையை விரிவுபடுத்தவில்லை என்றாலும், அது மேலும் குன்றிவிடாது பார்த்துக்கொண்ட பெருமை கிஸிர்கானைச் சாரும்.

**முபாரக் ஷா (கி.பி. 1421—1434)**

கிஸிர்கானுக்குப் பிறகு, அவருடைய மகன் முபாரக் பட்டமெய்தினார். அரியணை ஏறியதும் முதல் வேலையாக அவர் ஷா பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். குத்பாவைத் தம் பெயரில் வாசிக்கச் செய்தார். 8 ஆண்டுகள் கழித்து நாணயங்களையும் தம் பெயரில் வெளியிடுமாறு பணித்தார்.

முபாரக் ஷா, தமது ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே பல இன்னல்களைச் சமாளிக்க வேண்டியதாக இருந்தது. முதலில் அவருக்குக் கோக்கர்களால் தொந்தரவு ஏற்பட்டது. கோக்கர்கள் ஜீலம், சீனாப் ஆகிய ஆறுகள் பாயும் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய தலைவர் ஜஸ்ரத் என்பவராவார். அவர் சையத்துகளை வீழ்த்துவதற்கான முயற்சியில் அப்போது ஈடுபட்டிருந்தார். அவருக்குக் காஷ்மீர் அரசரான சுல்தான் ஜெயின்-உல்-அபிதீன் (ஜெய்னுலாப்தீன்) என்பவரும், துகான் ராயும் ஆதரவு அளித்தார்கள். முதலில் அவர்

ஜலந்தரைத் தாக்கினர். ஜஉரக் கான், அவரை எதிர்ப்பது அரிது என்று எண்ணி அவருடன் சமாதானம் செய்துகொண்டார். ஆனல், அவர் கோட்டைக்கு வெளியே வந்தபோது ஜஸ்ரத் அவரைக் கைது செய்து லூதியானவிற்குக் கொண்டு சென்றர். பின்னர், சிர்ஹிந்தைத் தாக்கினர். இச் செய்தியை அறிந்து முபாரக் பெருமழையையும் பொருட்படுத்தாது பஞ்சாப் நோக்கிப் படையுடன் புறப்பட்டார். ஜஸ்ரத் முற்றுகையைக் கைவிட்டு லூதியானவிற்குத் திரும்பினர். அங்கு ஜஉரக் கானை விடுதலை செய்தார். சுல்தான் பகைவரைப் பின்தொடர்ந்து சென்றர். சமானவில் ஜஉரக், அவருடன் சேர்ந்துகொண்டார். லூதியானவை அவர் அடைந்தபோது ஜஸ்ரத் அங்கிருந்த படகுகளின் உதவியால் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருக்கும் சீனப் நதியைக் கடந்து மறுபுறம் சென்றுவிட்டார். படகுகள் அனைத்தும் ஜஸ்ரத் கைகளில் சிக்கிவிட்டமையால், ஆற்றைக் கடக்க வழியின்றி முபாரக் ஷா கரையோரமாகவே மறுகரையில் சென்றுகொண்டிருந்த பகைவர்களைப் பின்தொடர்ந்தார்.

மழை நின்றதும் சுல்தான், ஒரு படையைத் தமக்கு முன் சென்று நதியைக் கடக்குமாறு கட்டளையிட்டார். அப் படை ரூபர் என்னுமிடத்தில் நதியைக் கடந்து ஜஸ்ரத்துக்கு முன்னல் வழிமறித்து நின்றது. இதற்கிடையில் சுல்தானும் ஆற்றைக் கடந்து அவருக்குப் பின்னல் வந்துகொண்டிருந்தார். அந்த நிலையில் ஓடி ஒளிவதைவிட வேறு வழியில்லை என்றுணர்ந்த ஜஸ்ரத், ஜலந்தருக்கு ஓடி அங்கிருந்து காஷ்மீர் மேட்டு நிலத்திலிருக்கும் தல்வாராவிற்குச் சென்றர். அவரது படையினர் பலர், சுல்தானுடைய படைகளின் கைகளில் சிக்குண்டு உயிரிழந்தனர். சுல்தான் ஜஸ்ரத்தைத் துரத்திச் சென்று அவரைச் சிறைப்பிடிக்க முற்பட்டார். ஜம்மு அரசர் இராஜா பீம் அவருக்கு வழிகாட்டிச் சென்றர். சுல்தான் தல்வாராவைக் கைப்பற்றி, அதனை அழித்தார். ஆனல், ஜஸ்ரத் தப்பிச் சென்றுவிட்டார். அவரைத் தொடர்ந்து சென்று அழித்துவிட இயலாது என்பதை அறிந்த சுல்தான், கி.பி. 1422ஆம் ஆண்டில் லாகூர் திரும்பினர். ஒரு மாதம் அங்குத் தங்கி அதன் அரண்களைப் பலப்படுத்திவிட்டுச் சுல்தான் டில்லி திரும்பினர். அதையறிந்த ஜஸ்ரத் மீண்டும் படை திரட்டிக்கொண்டு லாகூரைத் தாக்கினர். லாகூரின் ஆளுநர் மாமூத் ஹசன் அவரது தாக்குதலை முறியடித்தார். ஆகவே, ஜஸ்ரத் கலனூர் சென்றர். ஜஸ்ரத் மீண்டும் போர்க்கோலம் பூண்டதைக் கேட்ட சுல்தான் மலிக், சிக்கந்தர் துபாவின்கீழ் லாகூருக்குப் படையொன்றை அனுப்பிவைத்தார்.

மேலும், ஜஸ்ரத் தப்பியோடாதிருக்கும் வண்ணம் வழிமறித்து நிற்குமாறு இராஜா பீமுக்குக் கட்டளையிட்டார். சிக்கந்தர் மீண்டும் ஜஸ்ரத்தைத் தல்வாராவிற்குத் துரத்தியடித்துவிட்டு லாகூர் சேர்ந்தார்.

கி. பி. 1423-ல் மீண்டும் போர்செய்யத் தொடங்கினர். சுல்தானுக்கு உதவியாக இருந்த ஜம்மு அரசர் இராஜா பீம் என்பவரைத் தாக்கி, அவரைக் கொன்று அவரது நாட்டைக் கொள்ளையடித்தார். அதுபோது அவர் கைப்பற்றிய செல்வம் அவரது பலம் மேலும் பெருகத் துணைசெய்தது. பின்னர், தீபால் பூரையும் லாகூரையும் தாக்கினர். அப்போது லாகூர் ஆளுநராகப் பொறுப்பேற்றிருந்த சிக்கந்தர் துபா தக்க நடவடிக்கையை உரிய காலத்தில் மேற்கொண்டமையால், ஜஸ்ரத் தமது தாக்குதலின் முழுப்பயனை அடையவில்லை. அது மட்டுமன்றி, டில்லிப் படைகளை எதிர்த்துத் தனியாக நின்று போராடுதல் இயலாதென்றுணர்ந்த ஜஸ்ரத், தமக்கு உதவி புரியுமாறு காபூலில் ஆட்சி செலுத்தி வந்த மொகலாய உதவி ஆளுநர் ஷெயிக் அலீயை வேண்டினர். அப்போது வேறு பல காரியங்களைக் கவனிக்க வேண்டிய நிலையில் ஷெயிக் அலீ இருந்தமையால், ஜஸ்ரத்தின் அழைப்பை அவர் ஏற்கவில்லை. எனவே, அடுத்த ஐந்து ஆண்டுகள் வரை அவரால் டில்லி சுல்தான்களுக்குப் பெருந் தொல்லை ஏதும் ஏற்படவில்லை.

கி. பி. 1428ஆம் ஆண்டில் ஜஸ்ரத் மீண்டும் கலனூரை முற்றுகையிட்டார். முற்றுகையை முறியடிக்க லாகூர் அதிபதி சிக்கந்தர் துபா படையுடன் கலனூர் நோக்கிப் புறப்பட்டார். போரில் சிக்கந்தர் தோல்வி யடைந்தார். அவ் வெற்றியைப் பயன் படுத்திக்கொண்டு ஜஸ்ரத் ஜலந்தரைத் தாக்கினர். ஜலந்தரைத் தொடர்ந்து தம்வசம் வைத்திருக்க இயலாது என்பதறிந்த ஜஸ்ரத், கலனூர் திரும்பினர். மேற்கண்ட நிகழ்ச்சிகளையறிந்த முபாரக் ஷா சமானு அதிபர் ஜுரக் கானையும், சிர்ஹிந்து அதிபர் இஸ்லாம் கானையும் சிக்கந்தருக்கு உதவும்படி ஆணையிட்டார். அவர்களுடைய உதவிக்காகக் காத்திராமல் சிக்கந்தர் துபா, கலனூரைக் கைப்பற்றுவதற்காக லாகூரைவிட்டுப் புறப்பட்டார். காவ்ராவிற்கருகில் ஜஸ்ரத்துக்கும் சிக்கந்தருக்கும் போர் நடந்தது. ஜஸ்ரத் தோல்வியடைந்தார். தாம் ஜலந்தரில் கொள்ளை அடித்த பொருள்களை அவர் இழக்க நேர்ந்தது. மேலும், தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள மீண்டும் தல்வாராவிற்கு ஓடினர். வெற்றி வாகை சூடிய சிக்கந்தர் லாகூர் திரும்பினர். ஆயினும், ஜஸ்ரத்தினல் டில்லி சுல்தானியத்திற்கு ஏற்படவிருந்த

ஆபத்து இதனுல் நீங்கிவிட்டதாகத் தோன்றவில்லை. அதற்கு மாருக, மற்றுமோர் ஆபத்து டில்லி சுல்தானை எதிர்நோக்கி யிருந்தது.

கி. பி. 1430ஆம் ஆண்டில் தபாரிந்தாவின் (பாதிந்தா) ஆளுநரான சையத் சலீம் இயற்கை எய்தினுர். அவர் ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக டில்லி சுல்தான்களிடம் உண்மை ஊழிய ராகப் பணியாற்றி வந்திருந்தார், அவர் சிர்ஹிந்து மட்டுமன்றி இடைதுறை நாட்டில் பல இக்தாக்களுக்கும், சர்சுதி, அம்ரோஹா ஆகிய பகுதிகளுக்கும் அதிபராக இருந்தார். பேராசையுடன் கஞ்சத் தன்மையும் அவரிடம் குடிகொண்டிருந்த மையால், அவர் பெரும் பொருளை ஈட்டியிருந்தார். அவை யாவும் தபாரிந்தாக் கோட்டையில் பத்திரமாக வைக்கப் பட்டிருந்தன. முபாரக் ஷா இறந்துபோனவருடைய இக்தாக்களை யும் பர்காணுக்களையும் அவரது பிள்ளைகள் இருவருக்கும் பகிர்ந்து கொடுத்தார். தந்தையினுடைய பேராசைக் குணம் பிள்ளை களிடமும் காணப்பட்டது. எனவே, அவர்கள் கிடைத்ததைக் கொண்டு மனநிறைவு கொள்ளவில்லை. அவர்களுடைய தந்தை இறக்கும்போது சுல்தானுடைய பாசறையில் இருந்தமையால் செய்வதொன்றும் அறியாது இருந்தனர். இறுதியில் அவர் களுடைய தந்தையின் அடிமைகளுள் ஒருவரான புலாத் என்பவரை டில்லி அரசருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யுமாறு தூண்டினுர்கள். சையத் சலீம் இறந்த பிறகு, தபாரிந்தாவைக் கட்டியாளும் பொறுப்பு புலாத்திடம் விடப்பட்டிருந்தது. புலாத் துருக் பாச்சாக்களுள் ஒருவராவார். புலாத் கிளர்ச்சியில் ஈடுபட்டிருப் பதை அறிந்தவுடன் முபாரக், சையத் சலீமின் இரு பிள்ளைகளையும் சிறையிலடைத்துவிட்டார். பின்னர், மலிக் யூசுப் சர்வர், ராய் பானுபட்டி ஆகியோரைத் தபாரிந்தாவிற்கு அனுப்பி, புலாத்தைத் தம் பக்கம் இழுக்க முயன்ருர். சுல்தானின் உள்நோக்கை அறிந்துகொண்ட புலாத், எதிர்பாராத விதமாக டில்லிப் படை களைத் தாக்கி அவற்றைப் பின்னடையச் செய்தார். இத் தோல் வியை அறிந்த முபாரக், தாமே படை நடத்திச் செல்வதென முடிவு செய்தார். முபாரக் ஷா வேகமாக முன்னேறிச் சென்று சர்சுதியை அடைந்தார். புலாத் தபாரிந்தாவிற்குள் புகுந்து கொண்டு நீண்ட ஒரு முற்றுகையைச் சமாளிப்பதற்கு ஆயத் தமானுர். தபாரிந்தாவைக் கைப்பற்றுவதற்காக ஜூரக் கான், இஸ்லாம்கான், கமால்கான் ஆகியோரை முபாரக் ஷா அனுப்பி வைத்தார். இம் மூவரும் ஒன்றுசேர்ந்து தபாரிந்தாவை முற்றுகை யிட்டனர். அத்துடன் மன நிறைவு கொள்ளாத சுல்தான், மூல்தான் ஆளுநரான மலிக் உஸ் ஷர்க், இமாத்-உல்-முல்க் மாமூத்

ஹசன் என்பவரை டில்லிக்கு வரவழைத்து. மேற்கொண்டு செய்ய வேண்டுவனபற்றி ஆலோசனை நடத்தினர். இதற்கிடையில் புலாத், முற்றுகையின் கொடுமையைத் தாங்க முடியாமல் சுல்தானிடம் பேச்சு வார்த்தை நடத்த முற்பட்டார். தாம் இமாத் உல் முல்க்கிடம் மிக்க நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், தம்முடன் இமாத்-உல்-முல்க் வருவதற்கான ஏற்பாடு செய்தால் தாம் சுல்தானிடம் சரண் அடைவதாகவும் தூது விடுத்தார். ஆகவே, இமாத்-உல்-முல்க்கைத் தபாரிந்தாவிற்குச் சுல்தான் உடனடியாக அனுப்பி வைத்தார். இமாத் உல் முல்க் தபாரிந் தாவை அடைந்தவுடன் புலாத் கோட்டை வாயிலில் அவரைச் சந்தித்தார். மறுநாள் கோட்டையிலிருந்து வெளியேறிச் சுல்தானை நேரடியாகச் சந்திக்க இசைந்தார். இதற்கிடையில், இந்த ஏற்பாட்டில் ஏதோ ஒரு சூது இருப்பதாகவும், புலாத்தைக் கொல்லச் சுல்தான் திட்டமிட்டிருப்பதாகவும் புலாத்தின் படை வீரர்களுடன் சிலர் வதந்திகளைப் பரப்பிவிட்டனர். இவற்றைப் புலாத் நம்பினர். எனவே, அவர் கோட்டையிலிருந்து வெளி வராமல் மீண்டும் முற்றுகைக்குத் தயாரானர். ஆனல், சுல்தான் முடிவுகாணும் வரை தபாரிந்தாவில் இருக்க விரும்பவில்லை. நாட்டின் பிற பகுதிகளில் நிலைமை கட்டுக்கு அடங்கியிராமை யால், அங்கு அவர் தம் கவனத்தைத் திருப்ப வேண்டியதாயிற்று. மேலும், புலாத், தம்மிடமிருந்து பெருஞ் செல்வத்தைக்கொண்டு அன்னியர்களுடைய உதவியைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருக் கிறார் என்ற செய்தி சுல்தானின் காதுகளுக்கு எட்டியது. ஆகவே, சில காலம், பொறுத்திருந்து புலாத்தைத் தாக்குவது உசிதமாகும் என்று எண்ணி, முபாரக் ஷா டில்லி திரும்பினர். இமாத் உல் முல்க்கையும் மூல்தானுக்குத் திரும்பிச் செல்லுமாறு பணித் தார். ஆஸாம் இஸ்லாம் கான், கமால் கான், ராய் பிரூஸ் மியான் ஆகியோரை முற்றுகையைத் தொடர்ந்து நடத்துமாறு கட்டளையிட்டார். இமாத்-உல்-முல்க் மீண்டும் ஒருமுறை தபாரிந் தாவிற்குச் சென்று கோட்டையிலிருந்து ஒருவர்கூடத் தப்பிச் செல்ல இயலாத வகையில் முற்றுகையைத் தொடர்ந்து நடத்து வதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டு மூல்தான் திரும்பினர். முற்றுகை ஏறக்குறைய ஆறுமாதங்கள் நீடித்தது.

இதற்கிடையில் சுல்தான் எதிர்பார்த்தது போல புலாத், தமது ஆள்களைக் காபூலுக்கு அனுப்பி வைத்தார். வெகுமதி களையும் பொற்காசுகளையும் கொடுத்து, அவர்கள் ஷெயிக் அலீயின் உதவியைப் பெற்றர்கள். கி. பி. 1431ஆம் ஆண்டில் புலாத்திற்கு உதவும் நோக்கத்துடன் ஷெயிக் அலீ ஒரு பெரும் படையுடன் காபூலிலிருந்து புறப்பட்டார்.

கி. பி. 1431ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் ஜீலம் நதிக் கரையை அவர் அடைந்தார். ஆயீன் உத்தீன் என்ற கோக்கர் தலைவர் அவருடன் சேர்ந்து கொண்டார். அது மட்டுமன்றி ஷெயிக் அலீயினுடைய நெருங்கிய உறவினரான அமீர் முஸாபர் சியோரிலிருந்து ஒரு பெரும் படையுடன் புறப்பட்டு ஷெயிக் அலீயுடன் சேர்ந்துகொண்டு அவருடைய வலிமையைப் பெருக்கினார். ஷெயிக் அலீ கசூர் வழியாகச் சென்று, ராய் பிரூஸின் ஆட்சிப் பகுதியை அடைந்து அதனைச் சூறையாடினார். இச் செய்தியை அறிந்தவுடன் ராய் பிரூஸ், தபாரிந்தாவிலிருந்து தம் ஆட்சிப் பகுதியை நோக்கி விரைந்தார். தபாரிந்தாவை முற்றுகையிட்டு வரும் படைத்தலைவர்களின் ஆட்சிப் பகுதிகளை அழிப்பதன் வாயிலாக, அவர்களை முற்றுகையைக் கைவிடும்படி செய்ய இயலும் என்ற எண்ணத்தை ராய் பிரூஸின் செய்கை மெய்ப்பித்துக் காட்டியது. ஆகவே, அக் கொள்கையை மேலும் தீவிரமாகக் கையாண்டு அதில் பெரும் வெற்றியையும் ஷெயிக் அலீ கண்டார். அவர் தபாரிந்தாவிற்கு இருபது மைல் தூரம் வருவதற்குள் கமால்கானும், இஸ்லாம்கானும் முற்றுகையைக் கைவிட்டுத் தங்களுடைய ஆட்சிப் பகுதிகளுக்கு விரைந்து சென்று விட்டனர். அதனையடுத்துப் புலாத், கோட்டையைவிட்டு வெளியே வந்து ஷெயிக் அலீக்கு முன் கூறியபடி இரண்டு லட்சம் வெள்ளிக் காசுகளைக் கொடுத்தார். ஷெயிக் அலீ தபாரிந்தாவை விட்டுச் செல்லும்போது புலாத்தினுடைய குழந்தைகளையும், மனைவிகளையும் தம்முடன் அழைத்துச் சென்றார்.[1] அதன்பிறகு, இந்தியாவில் இருபது நாள்கள் தங்கி ராய் பிரூஸின் ஆட்சிப் பகுதிகள், ஜலந்தர் போன்ற பல இடங்களை நாசப்படுத்திவிட்டு லாகூர் வந்தடைந்தார். லாகூர் ஆளுநர் மலிக் சிக்கந்தர், ஆண்டு தோறும் வழக்கமாகச் செலுத்தவேண்டிய கப்பம் செலுத்துவதாகக் கூறி லாகூரைக் காப்பாற்றினார். பின்னர், ஷெயிக் அலீ லாகூரிலிருந்து புறப்பட்டுத் தல்வாராவை அடைந்தார். போகும் வழியில் அநேகரைக் கொன்று குவித்தார்; பலரைச் சிறைப் படுத்தினார். ஷெயிக் அலீயினுடைய அட்டூழியங்களைக் கேள்வியுற்ற இமாத்-உல்-முல்க் பொங்கி எழுந்தார். ஷெயிக் அலீயுடன் போர் செய்ய ஒரு பெரும் படையைத் திரட்டிக்கொண்டு அவர் துலம்பா நோக்கிச் சென்றார். ஆனால், முபாரக் ஷா அவரை ஷெயிக் அலீயுடன் போரிடாமல் மூல்தான் திரும்பி விடும்படி கட்டளையிட்டார். முபாரக் ஷாவினுடைய கோழைத்தனம் ஷெயிக் அலீயினுடைய அட்டகாசச் செயல்களுக்கு ஊக்கமளிப்பதாக இருந்தது. பல இடங்களைத் தாக்கிய பிறகு, அவர்

[1] A C H I., p. 652.

லாகூருக்கு அருகே வந்து சேர்ந்தார். அவரது முன்னேற்றத்தைத் தடுக்கச் சுல்தான் ஷா லோடி என்பவரை இமாத்-உல்-முல்க் அனுப்பி வைத்தார். எதிர்பாராதவிதமாகத் தாக்குண்ட சுல்தான் ஷா லோடி, ஷெயிக் அலீயிடம் படுதோல்வியுற்ருர். அவரது படையினர் பலர் கொல்லப்பட்டனர். அதையடுத்து ஷெயிக் அலீ, மூல்தானுக்கு அருகேயுள்ள குஸ்ருவாபாத் என்னுமிடத்தைக் கைப்பற்றினுர். பின்னர், லாகூரைப் பல முறை தாக்கினுர். ஒவ்வொரு முறையும் அவரது தாக்குதலை இமாத்-உல்-முல்க் முறியடித்து அவரது சேனைக்குப் பலத்த சேதத்தை விளைவித்தார். இதற்குள்ளாக டில்லியிலிருந்து உதவிப் படைகள் லாகூரை வந்தடைந்தன. அவற்றின் உதவியைக்கொண்டு இமாத்-உல்-முல்க் ஷெயிக் அலீயைத் தாக்கி அவரது படைகளுக்குச் சேதம் விளைவித்தார். ஆகவே, ஷெயிக் அலீ பின்னடைய நேர்ந்தது. சீனுப் நதிவரை டில்லிப் படைகள் அவரைத் துரத்திச் சென்றன. ஆற்றைக் கடக்கும் முயற்சியில் பலர் நீரில் மூழ்கி இறந்தனர், பலர் எதிரியின் கைகளில் சிக்குண்டு மடிந்தனர். ஒரு சிலரே சியோருக்குத் தப்பி ஓட முடிந்தது. இத்தகைய கேடு இதற்கு முன்னுல் வேறெந்தப் படைக்கும் வேறெந்த ஆட்சியிலும் ஏற்படவில்லை என்றும், நதியை நோக்கி ஓடியவர்கள் நதியைக் கடக்க இயலாமல் மூழ்கினர் என்றும், தப்பியோட முயலாமல் போரிட்டவர்கள் கொல்லப்பட்டனர் என்றும் யஹியா குறிப்பிட்டுள்ளார்.[1]

இமாத்-உல் முல்க்கும் ஏனையோரும் சியோர்வரை ஷெயிக் அலீயைத் துரத்திச் சென்றனர். ஆனுல், ஷெயிக் அலீ, அவர்களுடைய பிடியில் கிக்காமல் காபூலுக்குத் தப்பிச் சென்றுவிட்டார். அமீர் முஸஃபர் சியோர்க் கோட்டைக்குள் புகுந்துகொண்டார். இதற்கிடையில் சியோர் முற்றுகையைக் கைவிடுமாறு முபாரக் ஷா கட்டளை பிறப்பித்தார். அதையடுத்து மூல்தான் நிருவாக முறையைத் திருத்தி அமைக்கும் நோக்கத்துடன் இமாத்-உல்-முல்க்கிடமிருந்து மூல்தானை மீட்டுப் பெற்ருர். பின்னர், மலிக் காயிர் உத்தீன் கானி என்பவரிடம் அதன் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார். இமாத்-உல் முல்க் திறமை படைத்தவர்; விசுவாசமுள்ளவர். அப்படிப்பட்ட ஒருவரை மூல்தான் ஆளுநர் பதவியிலிருந்து நீக்கியது வியப்புக்குரிய நிகழ்ச்சியாகும். சியோர்க் கோட்டை முற்றுகையை இமாத்-உல்-முல்க் கைவிட்டமையால், சுல்தான் கோபமுற்ருர் என்று யஹியா கூறியுள்ளார்[2]. ஆனுல், அவரே மற்ருேர்

[1] T. M. S, pp. 221-222.
[2] K. S. Lal, Twilight of the Sultanate, p. 95.

இடத்தில் சுல்தானுடைய கட்டளைக்கிணங்க முற்றுகை கைவிடப் பட்டது என்றும் எழுதியுள்ளார்[1]. எனவே, சியோர்க் கோட்டை முற்றுகைபற்றிய செய்திக்கும் இமாத்-உல்-முல்க்கினுடைய பதவி நீக்கத்திற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. ஷெயிக் அலீயைத் தோற்கடித்த காரணத்தால் இமாத்-உல்-முல்க்கி னுடைய செல்வாக்கு நாள்தோறும் பெருகி வந்தது என்றும், அதனால் சுல்தான் அவர்மீது பொறாமை கொண்டார் என்றும், அதுவே அவரது பதவி நீக்கத்திற்குக் காரணம் என்றும் பிரிஷ்டா தமது நூலில் குறித்துள்ளார்[2].

அப்போது அரசவையில் இடம்பெற்றிருந்த சர்வர் உல் மூல்க், தமது செல்வாக்கினை அனைவருடைய செல்வாக்கி னுக்கும் மேலாகப் பெருக்கிக்கொள்ள எண்ணினார். எனவே, இமாத்-உல்-முல்க்கின் செல்வாக்குப் பெருக்கத்தை அவர் விரும் பாதது இயற்கையே. 1421ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பதவி மாற்றங்கள் அவரது தூண்டுதலின்பேரில் செய்யப்பட்டன என்பதை நாம் மனத்தில்கொண்டு பார்க்குமிடத்து, சர்வர் உல்-முல்க்தான் இமாத்-உல்-முல்க் மூல்தான் ஆளுநர் பொறுப்பை இழந்ததற்குக் காரணமாவார் என்ற எண்ணம் எழுகிறது[3]. காரணம் எதுவாயினும், இந்த நடவடிக்கை விவேகமானதாகத் தெரியவில்லை. இமாத்-உல்-முல்க் திறமையானவர். அது மட்டு மன்றி, அரசரிடம் உண்மையாகவும் நடந்து வந்திருந்தார். அத்தகைய ஒருவரை நெருக்கடிக் காலத்தில் மூல்தானிலிருந்து அகற்றிவிட்டது புத்திசாலித்தனமான காரியமாகத் தென்பட வில்லை. அவரது பதவி நீக்கத்திற்குப் பிறகு மூல்தான் குழப்பத் திற்கு இரையாகியது.

இக் குழப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஜஸ்ரத், டில்லி சுல்தானுக்கு மீண்டும் தொல்லை கொடுக்கத் தலைப்பட்டார். கி. பி. 1431ஆம் ஆண்டு இறுதியில் மலிக் சிக்கந்தர் துபா ஜலந்தருக்குப் போய்க்கொண்டு இருந்தபோது அவரை எதிர் பாராதவிதமாக ஒரு பெரும் படையுடன் வழிமறித்து நின்றார். போர் செய்வதைத் தவிர, வேறு வழி ஏதுமில்லாததால், சிக்கந்தர் துபா போருக்கு ஆயத்தமானார். போரில் ஜஸ்ரத் வெற்றி பெற்றார்; சிக்கந்தர் துபா கைது செய்யப்பட்டார். வெற்றிவாகை சூடிய ஜஸ்ரத், லாகூர் நோக்கிப் படை நடத்திச் சென்று லாகூரை முற்றுகையிட்டார். ஆனால், சிக்கந்தர் துபாவினுடைய படைத்தலைவர் ஸையத் நஸ்முத்தீன், அவரது

1 T. M. S. 223.
2 Vol. 1, p. 167.
3 K. S. Lal, op. cit. p. 95.

அடிமை மலிக் குஸ்க்காபர் ஆகியோரின் கடுமையான எதிர்ப்புக்கு முன்னுல் ஜஸ்ரத்தின் வீரம் செல்லுபடியாகவில்லை. இதற்கிடையில் ஜஸ்ரத், தமக்கு உதவி செய்ய வருமாறு ஷெயிக் அலீக்கு அழைப்பு விடுத்திருந்தார். அவ் வழைப்பை ஏற்று ஷெயிக் அலீ, மீண்டும் இந்தியாவிற்குள் நுழைந்து முல்தானை அடைந்தார். சுதீப்பூர் அவரது தாக்குதலுக்கு இரையாயிற்று. சீனுப் நதிக்கரையிலிருந்த கிராமங்கள் பல நாசமாக்கப்பட்டன. துலம்பா மக்களை மன்னித்துவிட்டதாகக் கூறிய போதிலும் அதனை அழிக்கும் பணியினை அவர் கைவிடவில்லை. 'இருதயமற்ற ஷெயிக் அலீ, அங்கு வசித்துவந்த முகம்மதியர்களைக்கூடத் துன்பத்திற்கு உட்படுத்தினுர்' என்று யஹியா மிக்க வருத்தத்துடன் கூறியுள்ளார்.[1] இளம் பெண்களும் சிறுவர்களும் அவர்களுடைய குடும்பத்தினர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு ஷெயிக் அலீயின் வீட்டிற்குப் பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டனர்; ஆண்களுள் சிலர் கொல்லப்பட்டனர்[2].

இந்த நேரத்தில் புலாத் துருக் பாச்சா தபாரிந்தாக் கோட்டையை விட்டு வெளியே வந்து ராய் பிரூஸினுடைய ஆட்சிப் பகுதியைத் தாக்கத் தொடங்கினுர். அப்போது ஏற்பட்ட போரில் ராய் பிரூஸ் கொல்லப்பட்டார். புலாத், கொலையுண்ட ராய் பிரூஸின் தலையைக் கொய்து, அதனைத் தபாரிந்தாவிற்கு எடுத்துச் சென்றுர். இவ்வாருகப் பஞ்சாப் முழுவதும் அன்னியப் படையெடுப்புக்காரர்கள், உள்நாட்டுக் கலகக்காரர்கள் ஆகியோரின் பிடியில் சிக்குண்டு சீரழிந்து கிடந்தது. அங்கு வாழ்ந்திருந்த மக்கள் சொல்லொணுத் துயரத்திற்கு ஆளாயினர்.

மேற்கண்ட நிகழ்ச்சிகள் சுல்தான் முபாரக் ஷாவை உலுக்கிவிட்டன. நிலைமையைச் சமாளிக்க உடனடியான நடவடிக்கையை அனைவரும் வியக்கத்தக்க வகையில் அவர் மேற்கொண்டது போற்றுதற்குரியதாகும். தமது வசீர் சர்வர் உல் முல்க்கை ஒரு பெரும் படையுடன் முதலில் அனுப்பிவிட்டுத் தாமே லாகூர் நோக்கிப் புறப்பட்டார். சுல்தானுடைய படைகள் சமானுவை அடைந்துவிட்டன என்ற செய்தியைக் கேட்டவுடன் ஜஸ்ரத், லாகூர் முற்றுகையைக் கைவிட்டுவிட்டுத் தல்வாராவிற்குச் சென்றுவிட்டார். போகும்போது மலிக் சிக்கந்தர் துபாவைத் தம்முடன் அழைத்துச் சென்றுர். ஷெயிக் அலீயும் டில்லிப் படைகளுடன் மோத விரும்பாமல் பர்தூத் என்னு

[1] T. M. S., p. 224.
[2] Ibid.

மிடத்தை நோக்கிப் பின் வாங்கினர்.[1] மேற்கண்ட நிகழ்ச்சிகள் சுல்தான் முபாரக் ஷாவிற்கு மன அமைதியை உண்டாக்கின. ஆகவே, மேலும் போர் செய்வதை அவர் நிறுத்திவிட்டார்.

அதையடுத்து வழக்கம் போல் இக்தாதார்களை மாற்றும் பணியினை மேற்கொண்டார். லாகூர் இக்தா இப்போது கான் - இ. ஆஜம் நஸ்ரத்கான் என்பவருக்கு வழங்கப்பட்டது. இதுவரை லாகூர் இக்தாதாராகச் செயலாற்றி வந்த ஷம்ஸ்-உல்-முல்க் கினுடைய குடும்பத்தினர் தலைநகருக்கு அனுப்பி வைக்கப் பட்டனர். நஸ்ரத்கான் லாகூர்க் கோட்டையுடன் ஜலந்தர் இக்தாதாவையும் பெற்றார். அதன் பிறகு, முபாரக் ஷா டில்லி திரும்பினர்.

கி. பி. 1432ஆம் ஆண்டில் ஜஸ்ரத் மீண்டும் லாகூர் நோக்கிப் படையுடன் புறப்பட்டார். அதை யறிந்த முபாரக் ஷா உடனே படை நடத்திச் சமானுவை நோக்கிச் சென்றார். இதற்கிடையில் நஸ்ரத்கான் ஜஸ்ரத்தைத் தோற்கடித்தார். இச் செய்தியை அறிந்த சுல்தான் தமது படையைப் பானிப் பட்டுக்குத் திரும்புமாறு கட்டளையிட்டார்.

கலவரங்கள் ஏற்படும் இடத்திற்கு விரைந்து சென்று உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும் எண்ணத்துடன் பானிப்பட்டில் தமது முகாமை அமைத்துக்கொண்டார். அவரது தாயார் மரணப் படுக்கையில் கிடக்கின்றார் என்ற செய்தி கேட்டு அவர் டில்லி திரும்ப நேர்ந்தது. இறுதிச் சடங்குகளை முடித்தவுடனேயே அவர் மீண்டும் பானிப்பட்டிற்குச் சென்றார். அங்கிருந்து கொண்டு தபாரிந்தாவிற்குச் சர்வர் உல் முல்க் தலைமையின்கீழ் ஒரு படையை அனுப்பி வைத்தார்.

ராய் பிருஸினுடைய ஆட்சிப் பகுதிகளில் புலாத் நடத்திய கொள்ளையின் விளைவாக அவருக்குக் கிடைத்த செல்வத்தினல் அவருடைய பலம் மேலும் பெருகியிருந்தது. எனவே, தபாரிந் தாவைக் கைப்பற்றுவது மிகவும் கடினமாகத் தோன்றியது. ஆகவே, இஸ்லாம்கான், ஜுரக் கான், மலிக் ராஜா ஆகியோரைத் தபாரிந்தாவில் விட்டுவிட்டுச் சுல்தானைக் காணச் சர்வர் உல் முல்க் பானிப்பட்டுக்குத் திரும்பினர். அதனல், முற்றுகையாளர் களுடைய வலிமை குன்றியது. ஆகவே, முற்றுகையில் யாதொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. சுல்தானும் அதனைத் தீவிரமாக நடத்த முயலவில்லை. தற்போதைக்கு ஆட்சியாளர்களை இடம் மாற்றுவதுடன் மனநிறைவு கொண்டார். லாகூரையும்

1 பேராசிரியர் ஹோடிவாலா அதனை மர்வாத் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜலந்தரையும் மலிக் இலாதாத் காகா லோடி[1]யின் பொறுப்பின் கீழ் விட்டுவைத்தார். இலாதாத், தம் பொறுப்பை ஏற்க ஜலந்தரை அடைந்தபோது ஜஸ்ரத், பியாஸ் நதியைக் கடந்து பஜ்வாராவை அடைந்தார். அதையடுத்து நடைபெற்ற போரில் இலாதாத் தோல்வியுற்றார். ஆகவே, அவர் கோதி மலைப் பகுதியை நோக்கிப் பின்வாங்க நேர்ந்தது.

சில காலத்திற்குப்பின், மீண்டும் ஷெயிக் அலீ புலாத்துக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் படையெடுத்து வந்தார். அப்போது தபாரிந்தாவை முற்றுகையிட்டு வந்த டில்லிப்படைகள் அவருடைய வருகையால் மனம் தளர்ந்து விடுமோ என முபாரக் பயந்தார். ஆகவே, தமது படைகளுக்கு உற்சாக மூட்டுவதற்கும், அவர்களுக்குத் தக்க உதவியை அளிப்பதற்கும் இமாத் உல் முல்க்கை அனுப்பி வைத்தார். வேகமாக முன்னேறி வந்த ஷெயிக் அலீ, யாதொரு கஷ்டமுமின்றி லாகூரை அடைந்தார். லாகூரைப் பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்றிருந்த மலிக் யூசுப் சர்வர், மலிக் இஸ்மாயில், மலிக் இராஜா ஆகியோர் கோட்டைக்குள் புகுந்துகொண்டு ஷெயிக் அலீயை எதிர்க்கத் தலைப்பட்டனர். இவ்வெதிர்ப்பு வெகு நாள் நீடிக்கவில்லை. ஒரு நாள் இரவோடு இரவாக அவர்கள் கோட்டையிலிருந்து ஓடிவிட்டனர். அவர்களுடைய செயலுக்குக் காரணம் என்னவென்பதை நாம் திட்டவட்டமாகக் கூறுதல் இயலாது. லாகூர் மக்கள், அவர்களுக்குப் போதிய ஆதரவளிக்கவில்லை என்பர் சிலர். வேறு சிலர், படைத் தலைவர்கள் தன்னம்பிக்கையை இழந்துவிட்டனர் என்பர். காரணம் எதுவாயினும், அவர்களுடைய செயல் ஷெயிக் அலீயினுடைய வேலையை எளிதாக்கி விட்டது. எவ்வித எதிர்ப்பும் இன்றி அவர் லாகூரைக் கைப்பற்றினார். மலிக் ராஜா கைது செய்யப்பட்டார்; லாகூர் முஸ்லிம்கள் பலர் சிறைப்பட்டனர்; மசூதிகள் களங்கப்படுத்தப்பெற்றன; நகர மக்கள் கொள்ளைக்குப் பலியாயினர். நகரத்தில் 2,000 படைவீரர்களை நிறுத்திவிட்டுத் தீபால்பூரைத் தாக்குவதற்குப் புறப்பட்டார். அச் செய்தியை அறிந்த மலிக் யூசுப் தீபால்பூரைவிட்டு ஓடுவதற்குத் திட்டமிட்டார். அந்த நேரத்தில் இமாத் உல் முல்க் தமது சகோதரரின் தலைமையின்கீழ் ஒரு படையைத் தீபால்பூருக்கு அனுப்பி வைத்தார். இமாத் உல் முல்க் ஷெயிக் அலீயை முன்னம் ஒரு முறை தோற்கடித்திருந்தமையால், இமாத் உல் முல்க்கின் படை நெருங்கி வருவதை அறிந்தவுடன் அவர் மனத்தில் அச்சம் தோன்றியதில் வியப்பேதும் இல்லை. எனவே, தீபால்பூரைத்

1 டாக்டர் K. S லால். இவரை அல்லா ஹாதாத் காலா லோடி என்று அழைத்துள்ளார்.

தாக்கும் நோக்கத்தைக் கைவிட்டார். ஆயினும், தீபால்பூர் லாகூர் ஆகியவற்றினுக்கு இடையேயிருந்த நகரங்களை அவர் கைப்பற்றினர்.

தமது அதிகாரிகளின் பலவீனத்தின் காரணமாகச் சுல்தானுக்குக் கிட்டிய தோல்விகள் அவரைக் கோபமுறச் செய்தன. தாமே நேரில் சென்று ஷெயிக் அலீயுடன் போரிடுவதைத் தவிர, வேறு வழியில்லை என்பதை முபாரக் தெரிந்து கொண்டார். எனவே, 1433ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் டில்லியிலிருந்து அவர் புறப்பட்டுச் சென்றார் சமாணவில் மலிக் கமாலுத்தீன் அவர் பக்கம் சேர்ந்து கொண்டார். பிறகு சுனம் வழியாகச் சென்று தல்வாந்தி என்னுமிடத்தை அடைந்தார். அங்கு இமாத்-உல்-முல்க்கும் இஸ்லாம் கானும் அவரைச் சந்தித்தார்கள். இமாத்-உல்-முல்க்கும், இஸ்லாம் கானும் அதுசமயம் தபாரிந்தா முற்றுகையை நடத்தி வந்தனர் என்பதை நாம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். முற்றுகை நடத்துவதைப் பற்றிய பேச்சு நடத்தவே அவர்கள் சுல்தானைச் சந்தித்தனர். தபாரிந்தா முற்றுகையை எக்காரணம் கொண்டும் நிறுத்தக் கூடாது என்ற முடிவு இப்போது மேற்கொள்ளப்பட்டது. அதே நேரத்தில் இவ்விரு படைத்தலைவர்களும் சுல்தானுடன் இணைந்து செயற்படவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆகவே, முற்றுகையை நடத்தும் பொறுப்பு ஏனைய அதிகாரிகளிடம் விடப்பட்டது மேற்கண்ட ஏற்பாட்டினைச் செய்து முடித்த பின்னர், சுல்தான் ரவி நதியை நோக்கிப் புறப்பட்டார். சுல்தானுடைய நடமாட்டங்கள், அவர் தம்மை ஒடுக்க மேற்கொண்ட ஏற்பாடுகள் ஆகியவற்றைக் கேள்வியுற்ற ஷெயிக் அலீ, நாடு திரும்பிச் செல்வதற்கான ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்யலானர். முபாரக் ஷா, தீபால்பூரை அடைவதற்கு முன்னரே ஷெயிக் அலீ சீனப் நதியைக் கடந்துவிட்டார். பின்வாங்கிச் செல்லும் ஷெயிக் அலீயை மடக்கி அவருடன் போர் செய்வதற்காகச் சுல்தான் இமாத்-உல்-முல்க்கை அனுப்பி வைத்தார். ஷெயிக் அலீ, தமது குதிரைகளையும் ஆயுதங்களையும் ஏனைய பொருள்களையும் கைவிட்டுவிட்டுக் காபூலுக்கு ஓடிவிட்டார். லாகூரில் ஷெயிக் அலீ விட்டுச்சென்ற 2,000 படைவீரர்களைத் துரத்தியடிக்கும் பொறுப்பு ஷம்ஸ் உல் முல்க்கிடம் ஒப்படைக்கப் பட்டது. முன்னர், மலிக் சிக்கந்தர் துபா என்றழைக்கப் பட்டவரே இப்போது இப் பட்டத்துடன் அழைக்கப்பட்டார். இவரை ஜஸ்ரத் கைது செய்து தம்முடன் அழைத்துச் சென்றார் என்று முன்பு கவனித்துள்ளோம். ஜஸ்ரத்திற்குப் பெரும் பணம்

கொடுத்து இவர் மீட்கப்பட்டார்[1]. சியோரிலிருந்து அமீர் முஸஃபரை வெளியேற்றும் பொறுப்பைச் சுல்தானே மேற்கொண்டார். ஒரு மாத முற்றுகைக்குப் பின்னர், முஸஃபர் சுல்தானிடம் சரண் புகுந்தார். சியோர்க் கோட்டையை ஒரு மாதத்திற்குப் பின் சுல்தானிடம் ஒப்படைப்பதாகவும், கப்பம் செலுத்துவதாகவும், தமது மகளைச் சுல்தானுடைய வளர்ப்பு மகனுக்குத் திருமணம் செய்து கொடுக்கவும் அமீர் முஸஃபர் ஒப்புக்கொண்டார்[2]. சியோர் படையெடுப்பு முடிந்த பின்னர், சுல்தான் தம்முடைய படையைத் தீபால்பூரில் விட்டுவிட்டு மூல்தான் சென்று அங்கிருந்த சமய ஞானிகளின் கல்லறைகளுக்குச் சென்று தமது அஞ்சலியைச் செலுத்தினார். பின்னர், எல்லைப் பாதுகாப்பிற்குத் தேவையான சில மாறுதல்களை நிருவாகத் துறையில் ஏற்படுத்திவிட்டு அவர் டில்லி திரும்பினார். இமாத்-உல்-முல்க் மீண்டும் லாகூர், தீபால்பூர் ஆகியவற்றின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். நாட்டின் வடமேற்குப் பகுதியில் தோன்றிய கலவரங்களை அடக்கி அங்கு அமைதியை மீண்டும் ஏற்படுத்திய பெருமைமிக்க செயலை, அவர் சாதனைகளுள் மிகச் சிறந்ததாகக் கொள்ளுதல் வேண்டும். 'இந்தியாவில் மொகலாயருடைய ஆட்சி ஏற்படுத்தப்படுவதை ஏறக்குறைய நூறு ஆண்டுகள் தள்ளிவைத்த பெருமை இவரையே சாரும்.'

நாட்டின் கிழக்குப் பகுதியில் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகளைப்பற்றி அறிவதற்கு முன்னர், ஒரு முக்கியமான பிரச்சினைக்கு நாம் தீர்வுகாண வேண்டியது அவசியமாகும். அதாவது, ஷெயிக் அலீ சாமர்க்கண்டில் ஆட்சி செலுத்தி வந்த மொகலாய அரசரின் அனுமதியின்பேரில் டில்லி அரசைத் தாக்கினாரா? இல்லையா? என்பதாகும். முபாரக் ஷா தமது முன்னோரைப் போன்று ஷா ருக்குவிடம் நட்புறவு கொண்டிருக்கவில்லை என்று பிரிஷ்டா கூறியுள்ளார். தாம் முழுச் சுதந்திரத்துடன் செயற்பட வேண்டும் என்று முபாரக் ஷா ஆசைப்பட்டார். அதுவே டில்லி சுல்தானுக்கும் ஷா ருக்குவிற்கும் இடையே ஏற்பட்டிருந்த நட்புறவு முறிவதற்குக் காரணமாகும் என்பர் சிலர். ஆனால், இக் கருத்தினை ஏற்றுக்கொள்வதில் சில சிக்கல்கள் உள்ளன. முபாரக் ஷாவும், அவரைப் பின் தொடர்ந்து ஆட்சி செலுத்திய முகமது ஷாவும், ஷா ருக்குவிடமிருந்து அரசருக்குரிய ஆடைகளையும் வெண்குடையையும் பெற்றதற்கு நமக்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன அதனால்,

[1] Ferishta, I, p 168.

[2] சுல்தானுக்குத் தம் மகளை மணம் செய்துகொடுக்கச் சம்மதித்தார் என்பது பிரிஷ்டாவின் கருத்தாகும்.

அவர்களிருவரும் தொடர்ந்து ஷா ருக்குவினுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டிருந்தனர் என்பது புலனாகும். மேலும், ஷெயிக் அலி படையெடுத்து வரும்வரை லாகூர் ஆளுநர் தொடர்ந்து ஆண்டுதோறும் கப்பப் பணத்தைக் காபூலில் ஆட்சி செய்துவந்த ஷா ருக்குவினுடைய ஆளுநருக்கு அனுப்பிவைத்தார் என்பதற்கும் நமக்கு ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இவற்றால் டில்லி அரசருக்கும் மொகலாய அரசருக்கும் இடையே நட்புறவு முறிதற்குரிய காரணங்கள் ஏதுமில்லை என்பதும் அறியப்படும். அவ்வாறிருப்பினும், ஷெயிக் அலி படையெடுத்து வந்தாரென்றால், அது தனிப்பட்ட முறையில் அவர் மேற்கொண்ட நடவடிக்கையேயன்றி, ஷா ருக்குவினுடைய அனுமதி பெற்றோ, அல்லது காபூல் ஆளுநரின் அனுமதியுடனோ நடைபெற்ற போர்ச் செயலன்று என்பது தெளிவாகும்.

இனி, மேற்கு உத்தரப்பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்ட அவர் மேற்கொண்ட முயற்சியைப்பற்றிக் கவனிப்போம். ஒரு காலத்தில் உத்தரப்பிரதேசம் முழுவதும் டில்லி சுல்தானின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. துக்ளக் அரசர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஜான்பூர் அரசர்கள் சிறிது சிறிதாகக் கிழக்கு உத்தரப்பிரதேசத்தைத் தங்களுடையஆதிக்கத்தின்கீழ்க்கொண்டு வந்துவிட்டனர். ஜான்பூரை அழித்தாலன்றிக் கிழக்கு உத்தரப் பிரதேசத்தை மீண்டும் டில்லி அரசர்களுடைய அதிகாரத்திற் குட்படுத்துவது என்பது இயலாத ஒன்று. முதலாவது. சையத்து அரசரான கிஸிர்கான், அதற்கு வேண்டிய வலிமையைப் பெற்றிருக்கவில்லை. முபாரக் ஷாவின் முழுக்கவனமும் பஞ்சாபில் ஏற்பட்ட கலகங்களை அடக்குவதில் செலுத்தப்பட்டிருந்தது. ஆகவே, அவ் விருவரும் கிழக்கு உத்தரப்பிரதேசத்தை மீண்டும் தங்களுடைய ஆளுகையின்கீழ்க் கொண்டுவரும் எண்ணத்தைக் கைவிட்டு மேற்கு உத்தரப்பிரதேத்தில் தங்களுடைய ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டுவதில் மட்டுமே கவனம் செலுத்தி வந்தனர். மேலும், முபாரக் ஷாவின் படைகளின் பெரும்பகுதி பஞ்சாபில் நிறுத்திவைக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தமையால், மேற்கு உத்தரப்பிரதேசப் பகுதியில்கூட, அவர் உறுதியான கொள்கையை எக்காலத்திலும் கடைபிடிக்க இயலவில்லை. முபாரக் ஷாவிற்கு எதிராகப் பஞ்சாபில் ஜஸ்ரத், கலகம் செய்ய முற்பட்டபோது, உத்தரப்பிரதேச ஜமீன்தார்களும் இராஜாக்களும் சுல்தானுக்குச் செலுத்தவேண்டிய கப்பப் பணத்தைச் செலுத்துவதை நிறுத்திவிட்டனர். ஜஸ்ரத்தின் கலகத்தை ஓரளவு சமாளித்துவிட்ட பின்னர், முபாரக் ஷா கதேஹாரை நோக்கி, கி.பி. 1423-ல் புறப்பட்டுச் சென்றார்.

தொடக்கத்திலிருந்தே அவருக்கு வெற்றி வாய்ப்புக் கிட்டி வந்தது. முன்பு, கிஸிர்கானுக்கு அடிபணியாதிருந்த பதோன் ஆளுநர் மஹபத்கான், இப்போது முபாரக் ஷாவிற்கு அடிபணிந்தார். அதுமன்றுமன்றிச் சுல்தான் நடத்தவிருந்த போர் நட்வடிக்கைகளுக்குத் தக்க உதவி அளிக்கவும் முன்வந்தார். தாமே படைகளை முன்னின்று நடத்த விருப்பம் தெரிவித்தார். முபாரக் ஷாவும் மஹபத்கானும் சேர்ந்து கங்கையாற்றைக் கடந்து ராதோர்களுடைய ஆட்சிப் பகுதியைத் தாக்கினார்கள். அநேக ராதோர்கள் அவர்களுடைய கத்திகளுக்கு இரையானார்கள். கிஸிர்கானுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாக தேவாராய் முன்பு ஒப்புக்கொண்டது நமக்கு நினைவிலிருக்கலாம். ஆனால், முபாரக் ஷாவினுடைய கொடுஞ்செயல்கள் இப்போது அவருக்கு அச்சத்தை விளைவித்தன. எனவே, அவர் இதாவாவிற்கு ஓடினார். இதாவாவினை முற்றுகை இடும்படி மலிக் காயிர் உத்தீன் துபாவிற்கு முபாரக் ஷா கட்டளையிட்டார். கப்பம் செலுத்துவதாக வாக்குறுதி அளித்து முற்றுகையினின்றும் இதாவாவைத் தேவாராய் காப்பாற்றினார். இனி, நல்லமுறையில் நடப்பதாகவும் வாக்குறுதி அளித்து, அதனைக் காப்பாற்ற தமது குமாரன் ஒருவனைக் காயிர் உத்தீன் துபாவுடன் அனுப்பிவைத்தார்[1]. காயிர் உத்தீனுடைய செயல்கள் சுல்தானுக்குத் திருப்தியளிக்கவில்லை. எனவே, முபாரக் டில்லி திரும்பியவுடன் அவரை அரிஸ்-இ-மமாலிக் பதவியிலிருந்து அகற்றிவிட்டு, அப் பதவியில் மலிக் மாமூத் ஹசன் என்பவரை அமர்த்தினார். முபாரக் ஷா மேற்கொண்ட சிறப்பான அரசியல் நடவடிக்கைகளுள் இஃதும் ஒன்றாகும். ஏனெனில், மலிக் மாமூத் ஹசன் நேர்மையானவராகவும் நம்பிக்கைக்குரியவராகவும் விளங்கினார்.

மாளவத்தின் அரசரான ஹோஷங் ஷாவும் முபாரக் ஷாவிற்குத் தொல்லை கொடுக்கலானார். ஹோஷங் ஷா பழி பாவங்களுக்கு அஞ்சாதவர்; துடுக்கானவர்; வலுச்சண்டையிடுவதில் கெட்டிக்காரர். எனவே, அவர் டில்லி சுல்தானுக்கு எதிராகப் போர் செய்ய முற்பட்டதில் வியப்பேதும் இல்லை. குவாலியர் சுல்தானுடைய ஆட்சிப் பகுதியாகக் கருதப்பட்டு வந்தமையால், முபாரக் ஷா, ஒரு பெரும் படையுடன் குவாலியர் நோக்கி உடனடியாகப் புறப்பட்டார். போகும் வழியில் பயானாவில் கிளர்ச்சி செய்துவந்த முகமதுகான் ஔஹதி (Auhadi) என்பவரை அடிபணியச் செய்தார். பயானாவைச் சூறையாடிவிட்டு அதனை மீண்டும் முகமதுவிடம் ஒப்படைத்தார். முகமது கப்பம் செலுத்தவும் சுல்தானுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் ஒப்புக்கொண்டார்.

[1] Ferishata I, 164.

இதற்குள்ளாக ஹோஷஸ் ஷா குவாலியரை அடைந்து அதனை முற்றுகையிடத் தொடங்கிவிட்டார். மேலும், சம்பல் நதியைச் சுல்தான் கடக்காதவாறு பார்த்துக்கொள்ளத் தமது வீரர்களைப் படகுத்துறைகளில் நிறுத்திவைத்தார். ஆயினும், சுல்தானுடைய படைத்தலைவர்கள் மலிக் மாமூத் ஹசனும், நஸ்ரத்கானும் ஆற்றைக் கடந்து ஹோஷஸ் ஷாவின் படைகளைப் பின்னுலிருந்து எதிர்பாராதவிதமாகத் தாக்கினார்கள். தாக்கப்பட்டவர்களுள் பலர் சிறைப்பட்டனர். ஆனால், அவர்கள் யாவரும் முகம்மதியர்கள் என்ற காரணத்தால், அவர்களை விடுதலை செய்யுமாறு சுல்தான் கட்டளையிட்டார்[1]. இந்த நடவடிக்கை முகமதியர்களுக்கு எதிராகத் தேவையற்ற போரை மேற்கொள்ள சுல்தான் விரும்பவில்லை என்பதை உணர்த்தியது. மேலும், மாளவத்தின் அரசரிடமும் இந்த மாதிரியான ஓர் எண்ணத்தைத் தோற்றுவித்தது, அதன் பயனாக, இரு சாராரும் சமாதானம் செய்து கொள்ளத் துடித்தனர். மாளவத்து அரசர் தம் நாடு திரும்ப ஒப்புக் கொண்டார். முபாரக் ஷா சம்பல் பகுதியில் சிலகாலம் தங்கி, அங்கிருந்த இந்துக்களிடமிருந்து கப்பப்பணம் பெற்றுக் கொண்டு 1424ஆம் ஆண்டு டில்லி திரும்பினார்.[2]

கி.பி. 1424ஆம் ஆண்டில் மீண்டும் அவர் கதேஹார் நோக்கிப் படை நடத்திச்சென்றார். அப் பகுதி மக்கள் ஒழுங்காகக் கப்பங் கட்டத் தவறிவிட்டமையே அதற்கு முக்கியக் காரணமாகும். கதேஹார் சூறையிடப்பட்டது. முபாரக் ஷா, குமாயோன் மலைப்பகுதிவரை கொள்ளை நடத்தினார் என்று யஹியா குறிப்பிட்டுள்ளார்[3]. ஆனால், ஃபெரிஷ்டா குமாயோனைப்பற்றிக் குறிப்பிடவேயில்லை. கதேஹார் கலகக்காரர்களைத் தண்டித்து விட்டு, முபாரக் ஷா உடனே டில்லி திரும்பிவிட்டார் என்று கூறியுள்ளார். ராய் ஹர்சிங் மூன்று ஆண்டுகளுக்குரிய வரியையும், கப்பத்தையும் செலுத்தவேண்டுமென ஏற்பாடு செய்யப்பட்டது[4].

பின்னர், முபாரக் ஷா இடைத்துறைப் பகுதிக்குச் சென்றார். அங்குப் பஞ்சம் தலைவிரித்து ஆடிக்கொண்டிருந்தமையால், அவர் அங்கிருந்து விரைவில் மேவாத் சென்றார். அச் சமயத்தில் மேவாத் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தனர். அங்கும் அவர் மிக்க லாபத்தை அடையவில்லை. ஏனெனில், மேவாத் மக்கள் தங்களுடைய சொத்துகளை அழித்துவிட்டுத் திஜாரா மலைப்

[1] K S. Lal, Twilight of the Delhi Sultanate p. 103.
[2] T. M. S. 203 ; Ferishta I, 165 II 238.
[3] Ferishta I, 165
[4] TMS p. 203 ; Ferishta I, 165;

பகுதிக்கு ஓடிவிட்டனர். அவர்களை அடக்குவது அரிது என்று எண்ணிச் சுல்தான், கி.பி. 1425ஆம் ஆண்டில் டில்லி திரும்பினார். அடுத்த ஆண்டில் அவர் மேவாத்மீது படையெடுத்துச் சென்றார். ஜலால்கானும், காதர்கானும் தமது நாட்டை அழித்துவிட்டு, இந்தூர் மலைக்கோட்டைக்குள் புகுந்துகொண்டனர். சுல்தான் இந்தூர் கோட்டையை முற்றுகையிட்டார். முற்றுகையின் கடுமையைச் சகிக்க இயலாமையால், அவர்கள் ஆல்வார் ஓடினர். இந்தூர் கோட்டையைத் தவிடுபொடியாக்கிவிட்டுச் சுல்தான் ஆல்வார் சென்று அதனையும் முற்றுகையிட்டார். சுல்தானுடைய படையை எதிர்த்துப் போராட இயலாது என்பதறிந்த ஜலால் கானும், காதர்கானும் சமாதானம் நாடினார்கள். சுல்தான் அவர்கள் இருவரையும் முதலில் மன்னித்தார். ஆனால், காதர் கான் இரட்டை வேடம் போடுவதாக அவருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. எனவே, அவரைமட்டும் சிறைப்படுத்திவிட்டு டில்லி திரும்பினார்.

கி.பி. 1426ஆம் ஆண்டில் பயனாவிற்குச் சென்றார். போகும் வழியில் மேவாத்தைச் சூறையாடினார். சுல்தான் பயனாவைச் சென்றடைந்தபோது முகமதுகான் ஔஹதி மலை உச்சியிலிருந்த ஒரு கோட்டையில் புகுந்துகொண்டு சுல்தானை எதிர்க்கலானார். ஆனால், அவருடைய படையிலிருந்து ஓடிவிட்ட சிலர், மலைப் பகுதிக்குச் செல்வதற்கு அமைக்கப்பட்டிருந்த ஓர் இரகசிய வழியினை முபாரக் ஷாவிற்குக் காட்டினார்கள். ஆகவே, எளிதில் அவர் மலையுச்சியை அடைந்துவிட்டார். அது முகமதுகானுடைய தைரியத்தைக் குலைத்துவிட்டது. ஆகவே அவர் சமாதானம் செய்துகொள்ள விரும்பினார். முகமதுகான் வசமிருந்த பொருள்கள் அனைத்தையும் அவர் கைப்பற்றினார். முகமது கானையும் அவரது குடும்பத்தினரையும் ஜஹான் நூமா அரண் மனையில் சிறைவைத்தார். பயானா இக்தாவை இரு கூறாக்கி, ஒன்றை மக்பில் கான் பொறுப்பிலும் மற்றொன்றை மலிக்காயிர் உத்தீன் துபாவின் பொறுப்பிலும் விட்டுவைத்தார். குவாலியர், தன்கிர், சந்த்வார் ஆகியவற்றின் ராய்களிடமிருந்து கப்பம் வசூலித்துக்கொண்டு கி. பி. 1427ஆம் ஆண்டில் டில்லி திரும்பினார்.

பயானாவில் மீண்டும் அமைதி குலைந்தது. முகமதுகான், ஔஹதி சிறையினின்றும் தப்பிச் சென்று சில ஆட்களைத் திரட்டிக்கொண்டு பயானாவைத் தாக்கினார். அந்த நேரத்தில் மலிக் மக்பில் கான், மஹாபனில் போர் செய்துகொண்டிருந்தார். காயிர் உத்தீன் துபாவிடம் போதிய படைகள் இல்லை. எனவே, முகமதுகான் எளிதில் காயிர் உத்தீனைத் தோற்கடித்தார். காயிர்

உத்தீன் செய்வதறியாது டில்லிக்கு ஓடினர். அச் செய்தியை அறிந்தவுடன் சுல்தான், மலிக் முபாரிஸ் என்பவரது தலைமையின் கீழ் ஒரு பெரும் படையை அனுப்பிவைத்தார். முகமதுகான் ஜான்பூர் அரசரின் உதவியை நாடினர். நிலைமை மோசமாகி விடவே 1427ஆம் ஆண்டில் மூபாரக்ஷா தாமே பயானு நோக்கிப் புறப்பட்டார். இதையறிந்த ஜான்பூர் அரசர் இப்ராஹீம் ஷர்க்கி, டில்லி சுல்தானுடன் போரிட இதுவே தக்க சமயம் என்றுணர்ந்து போருக்குரிய ஏற்பாடுகளைச் செய்ய முனைந்தார். தெற்கே கல்பியையும், வடக்கே பதோனையும் கைப்பற்றுவதே அவரது முக்கிய நோக்கமா யிருந்தது. அவரது நோக்கம் நிறைவேறியிருந்தால், இடைத்துறைப் பகுதி முழுமையும் அவர் ஆதிக்கத்தின்கீழ் உட்படுத்தப்பெற்றிருக்கும். அதிர்ஷ்டவசமாக முபாரக்ஷா, பயானு நோக்கிப் படை நடத்திச்சென்றிருந்த நேரத்தில் கல்பி ஆளுநர், தம்மை ஜான்பூர் அரசருடைய தாக்குதலிலிருந்து காப்பாற்றும்படி முபாரக்ஷாவை வேண்டினர். முபாரக்ஷா உடனே தெற்கு முகமாகத் தமது படைகளைத் திருப்பிக் கல்பியை ஜான்பூர் அரசரின் கைகளில் சிக்கவிடாமல் காப்பாற்றினர். இதற்கிடையில் ஜான்பூர் அரசர், போன்கேயோனைச் சூறையாடிவிட்டுப் பதோன் நோக்கிச் சென்றார். முபாரக்ஷா யமுனை ஆற்றைத் தப்பல் என்னுமிடத்தில் கடந்து சர்தோலியைக் கைப்பற்றினர். பின்னர், அத்ரௌலியை அடைந்தார். இஃது அலிகாருக்குப் பதினறு மைல் தூரத்தில் உள்ளது. இதற்கிடையில் இப்ராஹீம் ஆற்றங் கரை வழியாகவே சென்று பஹாஙுபாத்தை அடைந்தார். ஆகவே, முபாரக்ஷா அத்ரௌலியிலிருந்து புறப்பட்டு இப்ராஹீமைப் பின்தொடர்ந்தார். இப்ராஹீம் அப்போது அவருடன் போர்செய்ய விரும்பாமையால், ரப்ரி என்னுமிடத்திற்குச் சென்று, அங்கிருந்து தமது நட்பு நாடான பயானுவிற்குச் சென்றார். முபாரக்ஷாவும் சந்த்வார் என்னுமிடத்தில் யமுனையைக் கடந்து இப்ராஹீமினுடைய பாசறைக்கு முன்னல் தமது பாசறையை அமைத்தார். இருபத்திரண்டு நாட்கள் இரு படைகளும் குழிகளை வெட்டிக்கொண்டு தங்களுடைய நிலைகளை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்திவந்தன. இறுதியில் இப்ராஹீம் ஷர்க்கி போர்புரிவதென முடிவு செய்து தமது படைகளை அணி வகுத்து நிறுத்தினர். ஆனல், தக்க சமயத்தில் முபாரக்ஷா தைரியத்தை இழந்துவிட்டார். சிக்கந்தர் துபாவையும் வேறுசில படைத்தலைவர்களையும் போரிடுமாறு கட்டளையிட்டுவிட்டு அவர், போர்முனைக்குச் செல்லாது இருந்துவிட்டார். சர்வர் உல் முல்க் போன்ற முக்கியமான தலைவர்களும் அவருடன் பின் தங்கி விட்டனர். அதன் விளைவாகப் போர் எத்தரப்பினருக்கும் வெற்றி

தோல்வியின்றி முடிவுற்றது. இந்த வகையான முடிவு இப்ராஹீமுக்கு மனநிறைவை அளிக்கவில்லை. எனவே, அவர் மீண்டும் யமுனையாற்றைக் கடந்து தம் நாடு திரும்பினார். ஜான்பூர் அரசரின் உதவி கிடைக்காமல் முகமதுகான் ஔஹதியினுடைய நிலைமை மோசமாகிவிட்டது. எனவே, அவர் சுல்தானுடைய மன்னிப்பைக் கோரினார். சுல்தானும் அவரை மன்னித்து அவரது கோட்டையிலிருந்து வெளியேறி மேவாத்துக்குச் செல்ல அனுமதி வழங்கினார். முபாரக்ஷா பயானாவில் சில நாட்கள் தங்கியிருந்தார். மாமூத் ஹசனை அதன் ஆளுநராக நியமித்துவிட்டு 1428ஆம் ஆண்டு டில்லி திரும்பினார்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, மேவாத்மீது மீண்டும் படையெடுத்துச் சென்றார். காதர்கான், இப்ராஹீம் ஷர்க்கியுடன் இரகசியத் தொடர்பு வைத்திருந்தார். மேலும் அவ்விருவரும் பரிசுகளையும் தூதுவர்களையும் பரிமாறிக்கொண்டனர். அதையறிந்த சுல்தான், காதர்கானைக் கொன்றுவிடும்படி கட்டளையிட்டார். அவரது கோட்டைகளை அழித்துவிடும்பொருட்டுச் சர்வர் உல் முல்க்கை அப் பகுதிக்கு அனுப்பி வைத்தார். இவற்றையெல்லாம் கேள்வியுற்ற காதர்கானுடைய சகோதரர் ஜலால் கானும் ஏனைய தலைவர்களும் கோபமுற்றதில் வியப்பேதும் இல்லை. அதன் விளைவாக, மேவாத்தில் கலகங்கள் ஏற்பட்டன. கலகங்களை அடக்க சர்வர் உல்முல்க் விரைந்து சென்று இந்தூரை முற்றுகையிட்டார். ஆகவே, அவர் கிழக்குப் பகுதியில் தோன்றிய பிரச்சினைகளை நேரடியாகச் சென்று கவனிக்க இயலாமல் இமாத் உல் முல்க்கைப் பயனாவின்மீது ஏவி விட்டார். கி. பி. 1432-ல் அவர் மீண்டும் மேவாத்மீது படையெடுத்துச் சென்றார். மேவாத்தில் ஜலால்கான் புரட்சிக் கொடியை உயர்த்தியதே சுல்தானுடைய படையெடுப்புக்குக் காரணமாகும். விரைவில் அவர் தாவோருவை அடைந்தார். இந்தூர்க் கோட்டையை முற்றுகையிடச் சுல்தான் எண்ணினார். முற்றுகையைச் சமாளிக்க இயலாது என்றெண்ணி, ஜலால்கான் கோட்டைக்குத் தீ வைத்துவிட்டுக் கோட்லாவிற்கு விரைந்தார். இந்தூரில் ஜலால்கான் சேகரித்து வைத்திருந்த உணவுப் பொருள்களும், ஆயுதத் தளவாடங்களும் சுல்தானுடைய கைகளில் சிக்கின. சுல்தான் தாவோருவிற்குப் போவதற்குப் பதிலாக, திஜாராவிற்குச் சென்று அதனைத் தமது தலைமையிடமாக வைத்துக்கொண்டு மேவாத்தை அழிக்கும் பணியினைத் தொடங்கினார். இறுதியில் ஜலால்கான் சுல்தானுக்கு அடிபணிந்தார். இனி, ஒழுங்காக நடப்பதாக வாக்குறுதி அளித்தார். சுல்தானுக்குக் கப்பம், பரிசுகள் ஆகியவற்றை அளித்து அவருடைய மன்னிப்பைக் கோரிப்

பெற்ருர். அவர் தீஜராவிலிருத்தபோது இமாத் உல் முல்க் அவருடன் சேர்ந்து கொண்டார். அதன் விளைவாக அவரது படைப்பலம் பெருகியது. அது குவாலியர், இதாவா ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட கலகங்களை அடக்க உதவியது. கமால் உல் முல்க் இப்போர் ஏற்பாட்டினுக்குத் தலைமை வகித்தார். 1433-ல் சுல்தான் டில்லி திரும்பினார். இமாத் உல் முல்க்கின் பொறுப்பில் இருந்த பயானு ஷம்ஸ் உல் முல்க்கினுக்கு அளிக்கப்பட்டது.

இதற்கிடையில் சர்வர் உல் முல்க் சுல்தானை வீழ்த்தி விடுவதற்கான முயற்சியில் ஈடுபடத் தொடங்கினர். தீபால்பூர் இக்தாவை சர்வர் உல் முல்க்கினிடமிருந்து சுல்தான் மீண்டும் பெற்ருர் என்று முன்பே கவனித்தோம். அதுதான் அவர் சுல்தானுக்கு எதிராக மேற்கொண்ட சதித்திட்டத்தின் தொடக்கமாகும். அன்று முதல் அவர் தமது திட்டத்துக்கு ஆதரவு தேடத் தொடங்கினர். விரைவில் ஆதரவாளர் கூட்டத்தை ஏற்படுத்திக் கொண்டார். அவர்களுள் கன்னு, கஜோ கத்ரீ ஆகியோர் முக்கியமானவர்கள். இவ்விருவருடைய முன்னேர்கள் சுல்தானுடைய உப்பைத் தின்று வளர்ந்தவர்கள். இவர்கள் மிக்க பலம் பொருந்தியவர்கள்; ஏராளமான பணியாட்களை வைத்திருந்தனர். இவர்களும் இச் சதியில் கலந்து கொண்ட பலரும் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள். துரோகச் செயல்களுக்கு அஞ்சாதவர்கள். இஸ்லாம் மதத்தைச் சார்ந்த இராஜத் துரோகிகள் சிலரும் இதில் கலந்து கொண்டனர். அவர்களுள் மிரான் காதர், காஜி அப்துல் சமத் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

### முபாரக் ஷாவின் மறைவு

முபாரக்ஷா 1434ஆம் ஆண்டு. பிப்ரவரித் திங்கள் 19ஆம் நாள் கொலை செய்யப்பட்டார். இக் கொலைக்குரிய காரணங்கள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி விட்டன என்று சர் உல்ஸ்லி ஹெய்க் குறிப்பீட்டுள்ளார்.[1] கி. பி. 1422ஆம் ஆண்டு நிருவாகத்துறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஒன்று ஏற்பட்டது. அப்போது. சர்வர் உல் முல்க் திவானுகவும் சிக்கந்தர் துபா வசீராகவும் பொறுப்பேற்றிருந்தனர். அச் சமயத்தில் பஞ்சாபில் ஜஸ்ரத் கோகர், சுல்தானுக்குத் தொல்லை கொடுத்து வந்தார். ஆகவே அவரை அடக்குவதற்குச் சிக்கந்தர் துபா பஞ்சாப் செல்ல வேண்டியதாயிற்று. போர் ஏற்பாடுகள் பல நாள் நடைபெற்று வந்தமையால், அவர் டில்லியை விட்டு வெகு நாள் பிரிந்திருக்க நேர்ந்தது. சூழ்ச்சி மனப்பான்மையையும் பேராசையும் கொண்டிருந்த சர்வர் உல் முல்க், இந்த

1. C. H. I. III, 212

நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு, தமது செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ள முனைந்தார். அதன் விளைவாக, அவர் திவான் பதவியுடன் வசீர் பதவியையும் பெற்றுக்கொண்டார். மேலும். டில்லி ஆளுநர் பொறுப்பைத் தம்முடைய மகனான மலிக் யூசுப் புக்குப் பெற்றுக்கொடுத்தார். சிக்கந்தர் துபா லாகூர் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அதுவரை மிகச் சிறப்பாக ஆளுநர்ப பொறுப்புகளை நிருவகித்து வந்த முகமது ஹசன், ஜலந்தருக்கு மாற்றப்பட்டார். 1433ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் மலிக் கமாலுத்தீன் தலைநகருக்கு வந்தார். சாதனைகள் பலவற்றைப் புரிந்திருந்த கமாலுத்தீன் சுல்தானுடைய மனத்தை எளிதில் கவர்ந்துவிட்டதில் வியப்பேதும் இல்லை. மேலும், சுல்தானிடம் அளவுகடந்த விசுவாசத்தைக் கொண்டிருந்தார். அதே நேரத்தில் சர்வர் உல் முல்க்கினுடைய பலவீனங்கள் வெளியாகிவிட்டன.

அவர் தமது கடமைகளைச் சரிவர நிறைவேற்றுதற்குரிய திறமையைப் பெற்றிருக்கவில்லை என்பதும், அவரது செல்வாக்கு அதிகரித்துவிட்டது என்பதும் அனைவருக்கும் புலப்பட்டுவிட்டது. கமாலுத்தீனுக்குத் தக்க வெகுமதி அளிக்கவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்த சுல்தானுக்கு, இந்த நிலைமை சாதக மாக அமைந்துவிட்டது. அதுமட்டுமன்றிக் கிஸிர்கான் காலந் தொட்டு வசீரின் செல்வாக்குப் பெருகிவரத் தொடங்கியது. கிஸிர்கான், தமது வசீர் தாஜ் உல் முல்க்கை அநேகப் போர்ச் செயல்களில் ஈடுபடுத்தி வந்தார். முபாரக் ஷாவும் தமது வசீர்களான சிக்கந்தர் துபாவையும் சர்வர் உல் முல்க்கையும் போர்த்துறையில் பெருமளவு ஈடுபடுத்தினர். அதன் காரணமாக, வசீரின் அதிகாரமும் செல்வாக்கும் உயர்ந்துவிட்டன. மேலும், அவற்றை வளரவிடுவது ஆபத்தான காரியமாகும் என்று உணர்ந்த முபாரக் ஷா, தக்க நடவடிக்கையை மேற்கொள்ள விரும்பினர். மேற்கண்ட காரணங்களின் விளைவாக, வசீரின் பொறுப்புகளில் ஒன்று இப்போது கமாலுத்தீனுக்கு மாற்றப் பட்டது.

சதிக்கும்பலின் திட்டத்தைத் துரிதப்படுத்தும் வகையில் சில நிகழ்ச்சிகள் ஏற்பட்டன. கி.பி. 1433-ல் மலிக் கமாலுத்தீன், தமது படைகளுடன் டில்லி வந்தார். அவரிடம் சுல்தான் கொண்டிருந்த மதிப்பு அப்போது பெருமளவில் வளர்ந்திருந்தது. அதற்குச் சில காரணங்கள் உண்டு. முதலாவது, அவர் சுல்தா னுக்குப் பல நற்பணிகள் ஆற்றியிருந்தார். இரண்டாவது, அவர் சுல்தானிடம் மிகுந்த பற்றுடன் நடந்துவந்தார். மூன்றாவது, அறிவாற்றலும் அனுபவமும் பெற்றிருந்தார். எனவே,

அவருக்குத் தக்க வெகுமதி அளித்து, அவரைக் கௌரவிக்க சுல்தான் எண்ணியதில் வியப்பேதும் இல்லை. அதே நேரத்தில் வசீராகப் பணியாற்றி வந்த சர்வர் உல் முல்க்கினுடைய அதிகாரத்தைக் குறைக்கவேண்டும் என்ற எண்ணமும் அவரிடம் தோன்றியது. ஏனெனில், அவர் தம் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதில்லை. மேலும், அவர் சதியாலோசனையில் ஈடுபட்டிருந்தார். சர்வர் உல் முல்க், வசீராக (பிரதம அமைச்சராக) மட்டுமன்றித் திவானாகவும் (நிதி அமைச்சராகவும்) வரவு செலவுத் தணிக்கை அதிகாரியாகவும் செயலாற்றி வந்தார். அவற்றுள், வரவு செலவுத் தணிக்கை அதிகாரத்தைக் கமால் உத்தீனுக்குக் கொடுத்தார். சர்வர் உல் முல்க்கிடமிருந்த திவான் பதவியைத் தொடர்ந்து அவரே வகித்திருக்க அனுமதித்தார். ஆயினும், திவானுக்குரிய அதிகாரங்களைக் கமாலுத்தீனுடன் சேர்ந்து செலுத்திவர ஏற்பாடு செய்தார். தீபால்பூரைச் சர்வர் உல் முல்க்கிடமிருந்து திருப்பிப் பெற்றுக்கொண்டார். சர்வர் உல் முல்க்கிற்குச் சுல்தான் பல நன்மைகளை முன்னர் செய்திருந்தார். அவை யாவற்றையும் இந்த ஒரு சிறிய தீமையால் அவர் மறந்துவிட்டார். மிரான் காதர், காஜி அப்துஸ் சமத் ஆகியோருடன் இணைந்து சுல்தானைக் கொல்லுவதற்கான திட்டத்தை வகுக்கலானார்.

இதற்கிடையில் சுல்தான், புதிய நகர் ஒன்றினை நிர்மாணிப்பதற்கான திட்டத்தை நிறைவேற்றும் பணியில் தம் முழுக் கவனத்தையும் செலவிடலானார். 'முபாரகாபாத்' என்ற பெயருடன் விளங்கவேண்டிய நகருக்கு யமுனையாற்றங்கரையில் அடிக்கல் நாட்டப்பட்டது. சுல்தான் அடிக்கடி அங்குச் சென்று கட்டட வேலைகளை மேற்பார்வையிட்டு வருவார். அந்தச் சமயத்தில் மாளவத்திற்கும், ஜான்பூருக்கும் இடையே போர் ஏற்பட்டது. அதுபோது முபாரக் ஷாவிற்குச் சொந்தமாக இருந்த கல்பியை அவ்விருவரும் தாக்க இருப்பதாகச் செய்தி எட்டியது. ஆகவே, சுல்தான் போருக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஆணையிட்டார். போர்க் காரணத்திற்காகச் சுல்தான் டில்லியிலிருந்து வெகுதூரம் சென்றுவிட்டால், தங்களுடைய சதித்திட்டம் நிறைவேறாது போகுமோ எனப் பயந்து, சுல்தான் போருக்குப் புறப்பட்டுச் செல்லுமுன்னரே அவரைக் கொன்றுவிடுவதென்று முடிவு கட்டினார்கள். வழக்கம்போல ஒரு நாள் முபாரக் ஷா புதிய நகரத்திற்குச் சென்றார். அங்கு மாலை நேரத் தொழுகைக்காகத் தம்மை ஆயத்தம் செய்துகொண்டு இருக்கும்போது மிரான் காதர், காவலர்களை வெகு தந்திரமாக அங்கிருந்து அகற்றிவிட்டார். கங்கு காத்ரியின் மகனான சதாரன், சுல்தா

னுக்கு உதவி கிட்டாதவாறு வாயிற்படியில் நின்றுகொண்டார். அடுத்த விஞடியே அதுவரை அங்கு மறைந்திருந்த கங்குவின் பேரஞன சித்பால் என்பவன் முபாரக் ஷாவைத் தாக்கிஞன். அவனுடன் இருந்த அடிமை ஒருவன் சுல்தானைக் கொன்று விட்டான்.

மதிப்பீடு: முபாரக் ஷா, சற்றேறக்குறைய 13 ஆண்டுகள் அரசாண்டார்[1]. சையத்து அரசர்களில் இவரே மிகச் சிறந்தவராவார். ஒரு சிறந்த போர் வீரருக்குரிய பண்புகள் அவரிடமிருந்தன. அவர் பட்டமெய்திய காலம் முதற்கொண்டு இடைவிடாது பகைவர்களுடன் போரிடவேண்டியதாயிருந்தது. பஞ்சாபில் உள்நாட்டுக் கலகங்களை அடக்குவதிலும், அந்நியப் படையெடுப்புகளை முறியடிப்பதிலும் அவர் தம் காலத்தில் பெரும் பகுதியைச் செலவிட வேண்டியதாயிருந்தது. அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு மேவாத், குவாலியர், இதாவா போன்ற கிழக்குப் பகுதிகள் சுல்தானுடைய ஆதிக் கத்தைச் சிறிது சிறிதாக எதிர்க்கத் தலைப்பட்டன. மாளவம், ஜான்பூர் அரசர்கள் டில்லி சுல்தானியத்திற்குச் சொந்தமாக இருந்த பகுதிகளைத் தாக்கித் தங்கள் வயப்படுத்திக்கொள்ள முனைந்தனர். டில்லி சுல்தானியத்தைச் சூழ்ந்திருந்த இந்த இன்னல் களினின்றும் அதனைக் காப்பாற்ற முபாரக் ஷா தம்மாலான முயற்சியை மேற்கொண்டார். அவருடைய அதிகாரிகள் அவருக் குப் பாராட்டுதற்குரிய சேவையைச் செய்தனர். இறுதியில் கலகக் காரர்களையும், அந்நியப் படையெடுப்பாளர்களையும் ஒடுக்கி விட்டார். அதன்பிறகு, அவர்களால் நாட்டு மக்களுக்கு ஏற்பட் டிருந்த தீங்குகளை ஒழிக்கும் பணி எஞ்சியிருந்தது. அதற்கான திட்டத்தை உருவாக்குவதற்கு முன்பே அவர் கொல்லப்பட்டார். அதன் விளைவாக, அவரது இடைவிடா முயற்சிகளின் பலன்களை மக்கள் அனுபவிக்க இயலாமற் போயிற்று[2].

முபாரக் ஷாவைத் திறமையான நிருவாகி என்று கூற இயலாது. அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோர்களை நியமிப் பதில் அவர் கவனக்குறைவாக நடந்துகொண்டார். தம் அதிகாரிகளிடம் அவர் தேவையற்ற சந்தேகத்தை வளர்த்திருந் தார். ஆகவே, அடிக்கடி அவர்களுடைய பதவிகளையும் இக்தாக் களையும் மாற்றிவந்தார். இத்தகைய நடவடிக்கைகள் அவர் களுக்கு, மனக் கசப்பைத் தோற்றுவித்தன. இதுவே அவரது அழிவுக்கு ஒரு முக்கியக் காரணமாகும்.

[1] Dr. K. S. Lal, op. cit. p. 113
[2] ibid.

அவர் இஸ்லாமிய சமயத்தில் மிகுந்த பற்றுடையவர். ஆயினும், பிற சமயங்களை அவர் வெறுக்கவில்லை. அவர் காலத்தில்தான் முதல் முறையாக ஓரிரு இந்துக்கள் அரச வையில் இடம் பெற்றார்கள். டில்லியிலிருந்த கத்ரி குடும்பத் தினரை அவர் போற்றிவந்தார். ஆனால், அக் குடும்பத்தினரும் சதித்திட்டத்தில் சேர்ந்து அவரைக் கொன்றுவிட்டனர் என்பதை அறியும்போது, மனிதன் எந்த அளவு நன்றிகெட்டவனாக இருக் கின்றான் என்பது நன்கு விளங்கும். முபாரக்காபாத் அவருடைய கட்டடக் கலையார்வத்தை விளக்குகிறது. அக்கால வரலாற்றா சிரியரான யஹியா சிர்ஹிந்தியை அவர் ஆதரித்து வரலாறு, இலக்கியம் ஆகியவற்றில் தமக்கிருந்த ஆர்வத்தை வெளிப்படுத்தி யுள்ளார்.

## முகமது ஷா (1434–1445)

முபாரக் ஷாவைக் கொலை செய்துவிட்ட செய்தி சர்வர் உல் முல்க்கினுடைய காதுக்கெட்டியவுடன், அவர் முபாரக் ஷாவி னுடைய வளர்ப்புப் பிள்ளையான முகமதுவை அரியணையில் அமர்த்தினார். முகமது ஷா கிஸிர்கானுடைய மகனான பரீத் ஷாவினுடைய மைந்தராவார். முகமது ஷா புதா என்பவருடைய மைந்தன் என்றும், பரீத்தினுடைய பேரர் என்றும் 'தாரீக்-இ-முகமதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. முபாரக் ஷாவின் கொலையில் தமக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை என்பதைப் பிறருக்கு அறிவிக்கவே இத்தகைய ஒரு நடவடிக்கையை அவர் மேற் கொண்டார் என்று கூறப்படுகிறது. முகமது ஷாவை பெரும் பாலான மலிக்குகளும், அமீர்களும், இமாம்களும், உலாமாக் களும், ஸையத்துகளும், பிரமுகர்களும், மக்களும் சுல்தானாக ஏற் றுக் கொண்டனர். முகமது ஷா பட்டமெய்துவதற்குத் தாமே மூலகாரணம் என்று எண்ணியதால் சர்வர் உல் முல்க், மிக்க இறு மாப்புடன் நடந்துகொண்டார். அரசாங்கக் கருவூலம், ஆயுதக் கிடங்குகள், யானைகள் ஆகியவை அவரது கட்டுக்குள் வந்தன. தாம் அடைந்த மேலான நிலையை அனைவரும் உணரச் செய்வதற் காகக் கான்-இ-ஜஹான் என்ற பட்டத்தைத் தமக்கு அளிக்கும்படி செய்தார். தலைநகருக்கு அருகேயிருந்த வளமான பர்கானாக்களைத் தாமே எடுத்துக்கொண்டார். அதன் விளைவாக, அவரது பலம் பெருகியது. அரசருடைய கொலைக்குக் காரணமாக இருந்தவர் களுக்கும் தக்க வெகுமதிகளை அளித்தார். மிரான் காதருக்கு முயீன் உல் முல்க் என்ற பட்டத்தை வாங்கித் தந்தார். சித்தி பால், சதாரன் ஆகியோருக்கும் அவர்களுடைய உறவினர்களுக் கும் பயனா, அம்ரோஹா, நார்னு உல், குராம், தோவாப்பி லுள்ள செழிப்பான பர்கானாக்கள் ஆகியவை அளிக்கப்பட்டன.

சித்திபாலினுடைய அடிமையான ரானூ (Ranu) என்பவருக்குப் பயனுவின் ஒரு பகுதி (shiz) அளிக்கப்பட்டது.

அதையடுத்து அவரது பகைவர்களை ஒழிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த முற்பட்டார். முகமது ஷா பட்டமெய்திய மறுநாளே முபாரக் ஷாவினுடைய அமீர்கள், அடிமைகள் ஆகியோர்களுள் முக்கியமானவர்களை வரவழைத்து அவர்களுள் சிலரைக் கொன்றுவிட்டார். ஏனையோரைச் சிறையிலடைத்தார். அதன் பிறகு, அமீர்-இ-கோவாகப் (விவசாய அமீர்) பணியாற்றி வந்த மலிக் சுரா கொல்லப்பட்டார். மலிக் கரம் சந்த், மலிக் முக்பில், மலிக் புதூ, மலிக் பீரா ஆகியோர் சிறையிலடைக்கப் பட்டனர். சர்வர் உல் முல்க்கின் சர்வாதிகாரப் போக்குக் கமால் உல் முல்க்கிற்குப் பிடிக்கவில்லை. அரசரைக் கொன்றவனைப் பழி தீர்க்க, கமால் உல் முல்க் துடிதுடித்தார். ஆனால், அவரால் எதையும் அப்போதைக்குச் செய்ய இயலவில்லை. ஆகவே, தக்க சமயத்தை எதிர்நோக்கியிருந்தார். சுல்தான் முகமது ஷாவும் ஒன்றும் செய்ய இயலாது இருந்தார்.

சர்வர் உல்முல்கினுடைய கொடுங்கோலாட்சி வெகுநாள் நீடிக்கவில்லை. விரைவில் அவருக்குப் பல எதிர்ப்புகள் தோன்றின. பயனுவின் ஒரு பகுதியைப் பெற்ற ரானூ, அதன் கோட்டையைத் தம்முடைய அதிகாரத்திற்குட்படுத்த வேண்டிப் பயானு சென்றார். அதன் ஆளுநரான யூசுப்கான் ஆஹறி, அவரை எதிர்த்துக் கொன்றுவிட்டார். ரானூவின் தலையைக் கோட்டை வாயிலில் தொங்கவிட்டார். யூசுப்கான் ஆஹறி, முபாரக் ஷாவினுடைய விசுவாமுள்ள அதிகாரி. எனவே, அவரது செய்கை பல அமீர்களைப் புரட்சி செய்யும்படி தூண்டிவிட்டது. சம்பல் பகுதியின் ஆளுநரான மலிக் இலாதாத் காகாலோடி (Ilah Dad Kaka Lodi) பதோனின் ஆளுநரான மியான் ஜிமன், அமீர் அலி குஜராதி, அமீர் கங்கு துருக் பாச்சா ஆகியோர் கலகம் செய்யத் தொடங்கினர்கள். அக் கலகங்களை அடக்க கமால் உல்முக், கானி ஆஜாம் சையத்கான், சதாரன் கங்கு, தம்முடைய மகன் மலிக் யூசுப் ஆகியோரை அனுப்பி வைத்தார். கமால் உல் முல்க்கை அனுப்பி வைத்ததற்குச் சில காரணங்கள் கூறப்படுகின்றன. அவர்மீது அந் நேரத்தில் சர்வர் உல்முல்க் சந்தேகம் கொள்ள வில்லை என்பர் சிலர். சந்தேகம் அவர்மீது ஏற்பட்டதனால், அவரை அனுப்பி வைத்தார் என்பர் வேறு சிலர். தம்மீது வெறுப்புக் கொள்ளத் தொடங்கியவரை டில்லியிலிருந்து வெகுதூரம் அனுப்பி விடுவது மேலென்று அவர் எண்ணியிருக்கலாம். கமால் உல் முக்கும் தம்முடைய திட்டங்களைத் தீட்ட டில்லியி

லிருந்து சற்றுத்தூரத்தில் இருப்பது உசிதம் என எண்ணியிருக்கக் கூடும். ஆகவே, அவர் சர்வர் உல் முல்க்கினுடைய கட்டளைக் கிணங்க டில்லியை விட்டுப் புறப்பட்டார். பரன் சென்றடைந்த பிறகு, அவர் கலகக்காரர்களுடன் தொடர்பு கொள்ளத் தொடங்கினர். அவர்களைத் தம்முடன் சேர்ந்துகொள்ளும்படி அழைப்பு விடுத்தார். கமால் உல் முல்க்கினுடைய நடவடிக்கைகளைக் கண்காணிக்க சர்வர் உல் முல்க் தம் அடிமை ஒருவரை அவருடன் அனுப்பி வைத்தார். அவர் வாயிலாகக் கமால் உல் முல்க்கின் திட்டத்தை அறிந்துகொண்ட யூசுப்பும், சதாரனும் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள டில்லிக்குத் திரும்பி விட்டனர். அது கமால் உல் முல்க்கிற்குச் சாதமாகி விட்டது. சர்வர் உல் முல்க்கை வெறுத்த பலர், அவர் பக்கம் சேர்ந்துகொண்டு அவருடைய பலத்தைப் பெருக்கினர்கள். அந்த நிலைமையில் சர்வர் உல் முல்க்கைத் தாக்குவது மிக உசிதமாகத் தோன்றியது. கமால் உல் முல்க் டில்லி நோக்கிப் புறப்பட்டார். அதையறிந்த சர்வர் உல் முல்க், சீரிக்கோட்டை வாயில்களை மூடிவிட்டு நீண்ட ஒரு முற்றுகைக்குத் தயாராக இருந்தார். முற்றுகையின்போது முகமது ஷா, சர்வர் உல் முல்க்கிற்குச் சாதகமாக இருப்பதுபோல் வெளியில் காட்டிக்கொண்டார். ஆனல், உள்ளூற அவர் சர்வர் உல் முல்க்மீது வெறுப்புக் கொண்டிருந்தார். சர்வர் உல் முல்க்கும் அவருடைய ஆதரவாளர்களும் முகமது ஷாவை முழுமையாக நம்பவில்லை. அவர் தங்களைக் காட்டிக் கொடுத்து விடுவாரோ என்ற பயம் அவர்களுக்கு ஏற்பட்டது. ஆகவே, சுல்தானைக் கொன்றுவிடத் திட்டமிட்டு அவருடைய அறையில் நுழைந்தார்கள். முகமது ஷா ஆரம்பத்திலிருந்தே மிகவும் எச்சரிக்கையாக இருந்தமையால், சர்வர் உல் முல்க்கினுடைய திட்டத்தை நிறைவேருது தடுத்துவிட்டார். சர்வர் உல் முல்க் கொல்லப்பட்டார். அதையடுத்து, முகமது ஷா கமால் உல்-முல்க்கை கோட்டைக்குள் வரும்படி அழைப்பு விடுத்தார். சித்திபால் தம்முடைய வீட்டிற்குத் தீயிட்டுத் தம் குடும்பத்தினரை அதில் இட்டுக் கொன்ருர். அவர் இறுதிவரை போராடி உயிரிழந்தார். மீரான் சாதாருடைய பிள்ளைகள் சர்வர் உல் முல்க்குடன் சேர்த்துக் கொல்லப்பட்டனர். சதாரனும் அவருடன் சேர்ந்த ஏனைய காதிர்களும் முபாரக் ஷாவினுடைய கல்லறைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்குக் கொலை செய்யப்பட்டனர்.

அடுத்த நாளே ஒரு புதிய அரசு அமைக்கப்பட்டது. வசீர் பதவி, கமால் உல் முல்கிற்கு அளிக்கப்பட்டது. மலிக் ஜிமன் (Jiman) காஜி உல் முல்க் பதவியையும், அம்ரோஹா பதோன் ஆகிய இடங்களையும் பெற்ருர். இலாதாத் தமக்கென ஒரு

பட்டமோ பதவியோ வேண்டவில்லை. தம்முடைய சகோதர னுக்குத் தரியா கான் என்ற பட்டத்தைக் கொடுக்கும்படி அவர் வேண்டிக் கொண்டார். மலிக் கூன்ராஜ் முபாரக் கானி என்பவர் இக்பால்கான் என்ற பட்டத்துடன் ஹிஸார் பிரோஸாவையும் பெற்றார். மலிக் ஹாஜிக்கு ஹிசாம்கான் என்ற பட்டம் வழங்கப் பட்டது. அது மட்டுமன்றி, அவர் டில்லியின் கொத்வாலாக வும் நியமிக்கப்பட்டார். காலஞ்சென்ற சையத் சாலிமி னுடைய பிள்ளைகளுக்கும் பட்டங்கள் அளிக்கப்பட்டன. சர்வர் உல் மூல்க்கை ஒழிப்பதற்குத் துணையாக நின்ற ஏனைய மலிக்கு களுக்கும் அமீர்களுக்கும் பட்டங்களும் பதவிகளும், இக்தாக் களும் வழங்கப்பட்டன. சிலர் பதவியேற்றங்களைப் பெற்றனர்.

ஆட்சி முறையை ஒருவாறு ஒழுங்குபடுத்திய பிறகு, சுல்தான் புனித யாத்திரை ஒன்றை மேற்கொண்டு மூல்தானுக்குச் சென்றார், அங்குச் சென்ற பிறகு, ஜஸ்ரத் கோக்கர் டில்லி அரசுக்கு அளித்து வந்த தொல்லைகளைப்பற்றித் தெளிவாக அறியலானார். ஆகவே, அவர் டில்லி திரும்பித் தக்க போர் ஏற்பாடுகளைச் செய்துகொண்டு, 1436-ல் சமானா சென்றார். அங்கிருந்துகொண்டு, ஜஸ்ரத் கோக்கரை அடக்க ஒரு படையை அனுப்பினார். கலகம் அடக்கப்படும்வரை அங்கிருந்துகொண்டு போர் ஏற்பாடுகளை மேற்பார்வையிடுவதற்குப் பதிலாகச் சுல்தான் டில்லிக்கு வந்துவிட்டார். அதன் பிறகு, கலகத்தைப் பற்றிக் கவலை கொள்ளாது இன்ப வாழ்க்கையில் மூழ்கிவிட்டார். ஆகவே, ஜஸ்ரத் கோக்கரின் ஆட்சிப் பகுதிகள் அழிக்கப்பட்டன என்றாலும், அவரை அவர் முழுமையாக அடக்க இயலாது போயிற்று. சுல்தானுடைய செயலின்மை, ஏனையோர்களையும் கலகம் செய்யத் தூண்டிவிட்டது.

சிர்ஹிந்தில் கலவரம் ஏற்படலாயிற்று. அப்போதுதான் பஹ்லூல் லோடி சிறப்புப் பெறத் தொடங்கினார். முபாரக் ஷா வினுடைய ஆட்சிக் காலத்தில் இஸ்லாம்கான் லோடி சிர்ஹிந்தின் ஆளுநராக இருந்தார். அவர் காலத்தில் சிர்ஹிந்த் பஞ்சாப் அரசியலில் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றது. 1431-ல் அவர் காபூல் அரசருடன் போரிடும்போது உயிரிழந்தார். அவருக்குப் பின், அவருடைய மகனுக்குப் பதிலாக அவருடைய சகோதர ருடைய மகனை பாஹ்லூல் லோடி சிர்ஹிந்தின் ஆளுநரானார். ஆகவே, இஸ்லாம்கானினுடைய மகனை குதப்கான், சுல்தா னுடைய ஆதரவை நாடினார். பஹ்லூல், குதப் ஆகியோ ரிடையே ஏற்பட்டிருந்த பகை உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு, நாள்தோறும் வலிமை பெற்றுவரும் ஆப்கானியரைச் சுல்தான் ஒடுக்க முற்பட்டார். அதன் விளைவாக, மலிக் சிக்கந்தர்

துபாவின் தலைமையின்கீழ் ஒரு படை, பஹ்லூலைத் தண்டிக்கப் புறப்பட்டது. சிக்கந்தர் துபா, ஜஸ்ரத் கோக்கருடைய உதவியை நாடினார். அவ்விருவருடைய படைகளை எதிர்கொள்ள இயலாது, பஹ்லூல் சிவாலிக் குன்றுகளுக்குச் சென்றுவிட்டார். அதன் பிறகு, சிக்கந்தர் துபா பல அட்டூழியங்களைச் செய்ய லானார். அவற்றைக் கண்ட குதப்கான், தம்முடைய பேதை மையை எண்ணி மனம் வருந்தினார். எனவே, அவர் பஹ்லூல் லோடியுடன் சேர்ந்துகொண்டு டில்லிப் படைகளை எதிர்க்கலானார். இறுதியில் பஹ்லூல், சிர்ஹிந்தைக் கைப்பற்றிக் கொண்டார். ஹிசாம்கானுடைய தலைமையின்கீழ், சுல்தான் மற்றொரு படையை அனுப்பி வைத்தார். காரர் (Kharar) என்னு மிடத்தில் பஹ்லூல் அவரை 500 குதிரைவீரர்களுடன் சந்தித்து, டில்லி நோக்கிப் பின்வாங்கும்படி செய்தார். இந்த வெற்றி பஹ்லூல் லோடியினுடைய பெருமையை உயர்த்திவிட்டது. அதுமட்டுமன்றி, அவருடைய ஆசைகளையும் கிளறிவிட்டது. அவ்வெற்றிக்குப் பிறகு, பஹ்லூல், சுல்தானுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் ஹிசாம்கானைக் கொன்றுவிட்டு, ஹமீத்கானை வசீராக நியமித்தால் அரசவைக்கு வந்து சுல்தானுக்கு அடிபணி வதாக எழுதியிருந்தார். பஹ்லூல் லோடியினுடைய அன்பையும் ஆதரவையும் பெறுவதற்காக, முகமது ஷா எதை வேண்டு மானாலும் செய்யத் தயாராக இருந்தார். எனவே, தம்மிடம் உண்மையான விசுவாசத்துடன் பணியாற்றி வந்த ஹிசாம் கானைக் கொன்றுவிடச் சுல்தான் உத்தரவிட்டார். அதை யறிந்த ஏனைய பிரபுக்கள் சுல்தானிடம் தாங்கள் கொண்டிருந்த பற்றுறுதியை விட்டுவிடத் தொடங்கினார்கள். அதன் விளைவாக, நாட்டில் குழப்பநிலை உருவாகியது. தோவாப்பில் சுல்தானுடைய ஆதிக்கம் செயலற்றுப் போயிற்று. குவாலியர் கப்பம் கட்டு வதை நிறுத்திவிட்டது. மேவாதிகள் பயமின்றிக் கொள்ளை யடிக்கலானார்கள். இப்ராஹீம் ஷர்கீ, டில்லிக்குச் சொந்தமான பர்கானுக்களைக் கைப்பற்றலாயினர். மூல்தானில் லங்காக்கள் (Langhas) எனப்பட்ட ஆப்கானிய இனத்தவர்கள், ஆளுநருக் கெதிராகக் கலகம் செய்தனர். அவ்வளவையும் அறிந்துகொண்டு, சுல்தான் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாது ஊர் சுற்றி வந்தார். சுல்தானுடைய போக்கு, மக்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. உடனே அவர்கள், மாளவத்தை ஆண்டுவந்த மாமூத் கல்ஜியை டில்லிக்கு வந்து அரசைக் கைப்பற்றிக் கொள்ளும்படி அழைப்பு விடுத்தனர். அந்த அழைப்பையேற்று மாமூத் கல்ஜி, 1240-ல் டில்லி நோக்கிப் புறப்பட்டார். வழியில் யூசுப் இந்த்வி என்பவர், அவருடன் சேர்ந்துகொண்டார். நாகோர், ஹான்சி ஹிசார், பிருஸா ஆகிய இடங்களைக் கைப்பற்றிக்

கொண்டு டில்லியை அடைந்தார். நிலைமை மோசமாகிவிட்டது என்பது முகமதுவிற்கு அப்போதுதான் தெரியவந்தது. உடனே படையைத் திரட்டுவதற்கான கட்டளைகளைப் பிறப்பித்துவிட்டு, பஹ்லூல் லோடிக்கு உதவிகோரி ஆள் அனுப்பினார். பஹ்லூலும் மறுமொழி பேசாது, சிர்ஹிந்தைவிட்டு 20,000 பேர்களுடன் புறப்பட்டார். முகமது ஷா, தமது மகனை அலாவுத்தீனைப் படைக்குத் தலைவராக நியமித்தார். பஹ்லூல் முன்னணிப் படையின் தலைவராக நியமிக்கப்பட்டார். முகமது ஷா படை நடத்தி வராததை அறிந்த மாமூத் கல்ஜி, தாம் மட்டும் படையை நடத்திச் செல்வது தமக்கு இழுக்கை ஏற்படுத்தும் என்று கருதித் தம்முடைய இரு பிள்ளைகளின் தலைமையின்கீழ், டில்லிப் படைகளுடன் போரிடப் படைகளை அனுப்பிவைத்தார். இரு படைகளும் தீவிரமாக நாள் முழுவதும் போரிட்டன. ஆனால், அன்றைய போர் யாருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. அன்றிரவு மாமூத் கல்ஜி ஒரு கெட்ட கனவைக் கண்டார். குஜராத்தின் அரசர், தாம் தலைநகரில் இல்லாதபோது தம் நாட்டைத் தாக்க முனைந்திருப்பதாக மாமூத் கல்ஜியின் மனத்தில் பட்டது. ஆகவே, சமாதானம் செய்துகொள்ள துடித்தார். வறட்டுக் கௌரவம் அதற்குக் குறுக்கே நின்றது. அந்த நேரத்தில் சுல்தான் முகமது ஷாவே சமாதானம் நாடி வந்தார். டில்லி சுல்தானுடைய போக்கு, பஹ்லூலுக்கு எரிச்சலை ஊட்டியது. எனவே, மாமூத் கல்ஜி திரும்பிச் செல்லும்போது அவரது பின்னணிப் படையைத் தாக்கி, அவர்களுடைய பொருள்களைக் கொள்ளையடித்தார். அதுபோது பலர் கொல்லப் பட்டனர். அதையறிந்த சுல்தான் முகமது ஷாவிற்கு எல்லை யில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது. அதை வெளிக்காட்டும் வகையில் பஹ்லூலைத் தம் மகனாக ஏற்று, அவருக்குக் கான்-இ-கானான் என்ற பட்டத்தைச் சூட்டினார். பல பரிசுகளையும் அவருக்கு அளித்து அவரைச் சிர்ஹிந்திற்கு அனுப்பிவைத்தார்[1].

சிர்ஹிந்த் திரும்பிய பஹ்லூல் லோடியால் வாளாவிருக்க இயலவில்லை. போர்த் திறமையில் அவர் கொண்டிருந்த தன்னம்பிக்கை, சுல்தானுடைய செயலற்ற தன்மை ஆகியவை அவரைப் போர் செய்யும்படி தூண்டின. அதுமட்டுமன்றி, ஒரு நாள் ஷெயிக் சத்ருத்தீனை அவர் சந்திக்க நேர்ந்தபோது பஹ்லூல் சுல்தானாவார் என்று ஷெயிக் ஆரூடம் கூறினாராம். அந்த எண்ணம் அவருடைய மனத்தில் ஆழப் பதிந்துவிட்டது எனவே, சுல்தானுக்குச் சொந்தமாக இருந்த தீபால்பூர், லாகூர், சுநும் ஹிசார் ஆகிய இடங்களை அவர் கைப்பற்றி வரலானார். அதே

[1] Dr. K. S. Lal, Op cit. p. 119-120.

நேரத்தில் ஜஸ்ரத் கோக்கரும் சுல்தானுக்குத் தொல்லை கொடுக்கலானார். ஆகவே, தீபால்பூரையும் லாகூரையும் பஹ்லூலுக்கே கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக ஜஸ்ரத்தைத் தண்டிக்க வேண்டும் என்று பஹ்லூலைக் கேட்டுக்கொண்டார். பஹ்லூலினுடைய வலிமையை ஜஸ்ரத் நன்கறிவார். ஆகவே, அவருடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டார். அதன்படி ஜஸ்ரத்தினுடைய ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகளைப் பஹ்லூல் தாக்குவதில்லை என்று வாக்குறுதி கொடுத்தார். அதற்குப் பதிலாக டில்லியைப் பஹ்லூல் கைப்பற்றும் முயற்சிக்குத் தாம் தடையாக இருப்பதில்லை என்று ஜஸ்ரத் அறிவித்தார். 1442-ல் ஜஸ்ரத் இறந்தார். இருபது ஆண்டுகளாக டில்லி சுல்தானியத்திற்குத் தொல்லை கொடுத்துவந்த ஒரு பெரிய வீரரின் வாழ்க்கை அஸ்தமித்துவிட்டது.

டில்லி அரசைக் கைப்பற்றவேண்டும் என்ற ஆவலினால் தூண்டப்பட்டு, பஹ்லூல் 1443-44-ல் டில்லி நோக்கிப் படை நடத்திச் சென்றார். டில்லி முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டது. கோட்டை மிகப் பலமாகப் பாதுகாக்கப்பட்டு வந்தமையால், அவர் சிர்ஹிந்த் திரும்பிவிட்டார். திரும்பிவந்த பிறகு, அவர் சுல்தான் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். அவருடைய வழியைப் பின்பற்றி வேறு பல அமீர்களும் சுதந்தரமாகச் செயற்பட்டனர். முகமது ஷாவால் அவர்களை அடக்க இயலவில்லை. 1445-ல் அவர் உயிர் நீத்தார்[1].

### அலாவுத்தீன் ஆலம்ஷா (1445—1451)

முகமது ஷா இறந்தபிறகு, அவருடைய மகனை அலாவுத்தீனைச் சுல்தானாகத் தேர்ந்தெடுத்தனர். முகமது ஷா, தாம் இறப்பதற்கு முன், அலாவுத்தீனே தமக்குப் பின் பட்டமெய்த வேண்டும் என்று ஒரு விருப்ப ஆவணத்தை எழுதியிருந்தார். எனவே, அவரை எல்லோரும் சுல்தானாக ஏற்றுக்கொண்டு, அவருக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். இந்த வகையாக, ஒருவர் யாதொரு தடையும் இடையூறும் இன்றி, அமைதியான முறையில் அரசெய்துவது என்பது குழப்பம் மலிந்திருந்த அக்காலத்தில் மிகவும் அரிதான நிகழ்ச்சியாகத் தோன்றியது. ஆனால், அவ்வகையான செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டு, தம் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கு வேண்டிய திறமையும் எண்ணமும் அலாவுத்தீனிடம் ஏற்பட

[1] 1443-ல் இறந்தார் என்று சிலர் கூறுகின்றனர் (ACHI. p. 662)

வில்லை. சிற்றின்பத்தில் நாட்டங்கொண்டிருந்த அலாவுத்தீனுக்கு, மணிமகுடம் பெரும் பாரமாகத் தோன்றியது. அரச காரியங்களில் அவர் அக்கறை கொள்ளவில்லை. எனவே, டில்லி அரசினுடைய மதிப்பு, மேலும் குறையலாயிற்று. ஆலம் ஷா என்பதற்கு உலகப் பேரரசர் என்று பொருள். ஆனால், அவ்வுலகப் பேரரசரின் ஆதிக்கம் டில்லியிலிருந்து பாலம்வரைதான் பரவியிருந்தது[1]. குஜராத், மாளவம், ஜான்பூர் ஆகியவை பலம் பொருந்திய அரசர்களிடமிருந்தன. பஹ்லூல் ஏற்கனவே சுல்தான் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். அவருடைய ஆதிக்கம் பஞ்சாபில் ஏற்படுத்தப்பட்டுவிட்டது. பானிபட் வரையில் அவரது செல்வாக்குப் பரவியிருந்தது. டில்லியைச் சுற்றியிருந்த பகுதிகளில் ஆப்கானியர் தங்களுடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தியிருந்தனர். அவர்களுள் அகமதுகான் மேவாதியும் தரியாகானும் முக்கியமானவர்களாவர். அலிகாரில் இசாகான் துருக்பாச்சா ஆதிக்கம் பெற்றிருந்தார். இதாவா, சந்தாவார் ஆகிய இடங்கள் குதப்கான் கைவசமிருந்தன. கம்பில், பாடியாலி போன்றவை ராய் பிரதாப்சிங்கின் அதிகாரத்திற்குட்படுத்தப் பட்டிருந்தன. பயானாவில் தாவூத்கான் ஔஹாதி செல்வாக்குப் பெற்றிருந்தார், குவாலியரும், தோல்பூரும் டில்லியின் ஆதிக்கப் பிடியிலிருந்து நழுவிவிட்டன. அதுமட்டுமன்றி, அலாவுத்தீனுடைய நேரடி ஆதிக்கத்தின்கீழ் இருந்த பகுதிகளிலும், அமைதி நிலவியிருக்கவில்லை. இந்தச் சூழநிலையில் அரசாள அலாவுத்தீனுக்கு உற்சாகம் ஏற்படாதது விந்தையாகக் காணப்படவில்லை.

இந்நிலையில் 1447-ல் பஹ்லூல், டில்லியை நோக்கிப் படையெடுத்துவந்தார். சீரி முற்றுகையிடப்பட்டது. குதப்கான் லோடி, ராய் பிரதாப்சிங் ஆகியோர் தலையிட்டுப் பஹ்லூலைத் திரும்பிச் செல்லும்படி வேண்டிக்கொண்டார்கள்.

மேற்கண்ட சம்பவங்கள் சுல்தானுக்கு மன வேதனையை அளித்தன. ஒரு மாறுதல் பெற விரும்பி, அவர் 1448-ல் பதோனுக்குச் சென்றார். டில்லியிலிருந்துகொண்டு, அரச காரியங்களைக் கவனித்து வரத் தமது மைத்துனர்கள் இருவரை, நகர மேற்பார்வையாளராகவும், நெடுஞ்சாலைகள் மேற்பார்வையாளராகவும் நியமித்தார். டில்லியின் ஆதிக்கம் மேலும் பலவீனமடைவதற்கு, இந்த ஏற்பாடு துணை செய்தது. மேலும், அவர் நியமித்த அதிகாரிகள் இருவரும், ஒருவரோடொருவர் சண்டை

[1] பாலம் என்பது டில்லிக்குத் தெற்கே பத்து மைல் தூரத்தில் இருக்கிறது. இன்று இது சர்வதேச விமான நிலையமாக விளங்குகிறது.

யிட்டுக்கொண்டனர். அவர்களுள் ஒருவர் சண்டையில் இறந்தார். மற்றவரை மக்கள் கொன்றுவிட்டனர்.

மேற்கண்ட நிகழ்ச்சிகள் சுல்தானுக்கு மேலும் வேதனையை அளித்தன. எனவே, அவர் ஈசாகானையும், குதப்கானையும், ராய் பிரதாப் சிங்கையும் அழைத்து நிலைமையைச் சீராக்க யோசனை கூறும்படி கேட்டுக்கொண்டார். வசீர் ஹமீத்கானைக் கொல்லுவதாக இருந்தால், சுல்தானுக்குத் தாங்கள் உதவுவதாக அவர்கள் கூறினார்கள். ஹமீத்கான் திறமையாளர். அவரைக் கொன்றுவிட்டால், தங்களுடைய செல்வாக்குப் பெருக வழி உண்டாகும் என்று ஈசாகானும், குதப்கானும் எண்ணமிட்டனர். ஹமீத் கானுடைய தந்தை பிரதாப்சிங்கினுடைய ஆட்சிப் பகுதிகளைத் தாக்கி, அவரது தந்தையைக் கொன்றுவிட்டார். அதற்குப் பழி வாங்குவதற்காக இந்த யோசனையை அவர் கூறினார். அந்த யோசனையைச் சுல்தான் ஏற்றுக்கொண்டு, ஹமீத்கானைக் கொல்லும்படி உத்தரவிட்டார். அதை முன் கூட்டியே அறிந்து கொண்ட ஹமீத்கான், தம் நண்பர்களின் உதவியைக் கொண்டு சீரி கோட்டையைப் பிடித்துக்கொண்டார். சீரி கோட்டையில் அவர் பலம் பொருந்தியவராக விளங்கியிருந்தாலும் அரசப் பட்டத்தைச் சூட்டிக் கொள்ள விரும்பவில்லை. தம்முடைய கைப்பொம்மையாக இருந்து, அரசு செலுத்தக் கூடிய ஒருவரைச் சுல்தானாக அமர்த்தி விட்டுத் தாமே அரசகாரியங்களைக் கவனித்து வர ஹமீத்கான் திட்டமிட்டார். அத்திட்டத்தை அவர் நிறைவேற்றுவதற்குமுன் பஹ்லூல் டில்லியை நோக்கிப் படையெடுத்து வந்தார். 1450-ல் டில்லி முற்றுகையிடப்பட்டது. பஹலூலை எதிர்க்க இயலாதென்பதை அறிந்து கொண்ட ஹமீத்கான், பஹ்லூலுடன் சமாதானம் செய்து கொண்டார். பஹ்லூல் அரசராகவும், ஹமீத்கான் வசீராகவும் பதவி வகிக்கவேண்டும் என்றும், ஹமீத்கானே ஆட்சி அதிகாரத்தைச் செலுத்தி வரவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. பஹ்லூலுக்குப் போதிய ஆதரவு டில்லியில் கிடைக்காது என்பதற்காக இந்த ஏற்பாட்டினுக்கு இசைந்தார். அதையடுத்து, அவர் தமது தாயகத்திலிருந்து, (ஆப்கானிஸ்தானத்திலிருந்து) போதுமான ஆட்களை டில்லிக்கு வரவழைக்க முற்பட்டார். அதே நேரத்தில் ஹமீத்கானுக்குச் சந்தேகம் ஏற்படக் கூடாது என்பதற்காக அவரை மிகவும் மரியாதையுடன் நடத்திக்கொண்டு வந்தார். தினந்தோறும் அவர் வீட்டுக்குச் சென்று வருவார். ஒரு நாள் ஹமீத்கான், பஹ்லூலை விருந்துக்கழைத்த போது, தம் ஆட்களுடன் சென்று ஹமீத்கானைச் சிறை பிடித்தார். டில்லி மக்களின் நன் மதிப்பைப் பெற அவர்களுக்குப்

பணத்தை வாரி வழங்கினர். அதன் பின்னர், அலாவுத்தீனுக்கு ஒரு கடிதம் எழுதினர். 'நான் உம்முடைய தந்தையின் அன்பில் வளர்ந்தவன். நன்றி கெட்ட ஹமீத்கானைச் சிறையிலிட்டுள்ளேன். என்னை உம்முடைய பகர ஆட்சியாளராகக் (Regent) கருது கிறேன். நீர் இழந்த பேரரசை மீண்டும் உமக்குப் பெற்றுத்தர, நான் உதவி செய்வேன். உம்முடைய பெயரில் குத்பா வாசிப்பதை நான் தடை செய்யமாட்டேன் என்று அதில் குறிப்பிட்டார். அக் கடிதத்திற்கு அலாவுத்தீன் பின்வரும் பதிலை எழுதினர். என்னுடைய தந்தை உம்மை மகனே என்று அழைப்பதுண்டு. ஆகவே, நான் உம்மை எனது மூத்த சகோதரனுகக் கருதுகிறேன். ஆகவே, ஆட்சியை உமக்களித்துவிட்டேன். பதோன் பர்கானுவுடன் நான் திருப்தியடைகிறேன். உம்முடைய ஆட்சியின்கீழ் டில்லி வளம் பெறட்டும்'[1] என்பதே அக் கடிதத்தின் சாரமாகும். அலாவுத்தீனுடைய கடிதம் கிடைத்ததும் பஹ்லூல், முடிசூட்டு விழா ஒன்றினுக்கு ஏற்பாடு செய்து 1451ஆம் ஆண்டில் சுல்தான் அபுல் முஸாபர் பஹ்லூல் காஜி என்ற பட்டத்துடன் டில்லி அரியணையில் அமர்ந்தார்.

அலாவுத்தீன் ஆலம் ஷா, தமது வாழ்நாளைப் பதோனில் கழித்து வந்தார். அலாவுத்தீனுடைய செய்கையை வரலாற்றுசிரியர்கள் சிலர் குறை கூறியுள்ளார்கள். வெறுப்புக்குரியவர்; மகாமூடர் என்றவாறு அவரைக் குறித்துள்ளார்கள்[2]. வேறு சிலர், அவருடைய செய்கையைப் பாராட்டியுள்ளனர். தம்மால் அரசு செலுத்த இயலாது என்று அறிந்த பிறகு, அதனைத் திறம்படச் செலுத்தவல்ல ஒருவரிடம் அதை ஒப்படைத்து விடுவது விவேகமான செயலன்றோ? மேலும், அரசப் பட்டத்தைத் தவிர, வேறென்ன அவர் இழந்துவிட்டார்? அவர் பதவியேற்ற போது, டில்லியின் ஆதிக்கம் பத்துமைல் தூரத்திற்குமேல் பரவியிருக்கவில்லை. அத்தகைய ஓர் அரசை இழந்துவிடுவதால், அவர் பெரிய இழப்பை அடைந்துவிடப் போவதில்லை. அவ்வாறு பதவியை அவர் விட்டுக்கொடுக்கவில்லையென்றால், பதோனில் கூட அவர் ஆட்சி செலுத்த இயலாமல் போயிருக்கும். அவருடைய பெயரில் அவர் சாகும்வரை குத்பாவை வாசிக்க இயலாது போயிருக்கும். மேற்கூறியவற்றிலிருந்து, அவரது முடிவு சரியானதாகவே புலப்படுகிறது[3].

சையத்துகளின் ஆட்சி — ஒரு மதிப்பீடு

சையத்து அரசர்கள் 37 ஆண்டுகள் ஆட்சி செலுத்தி வந்தனர். அவர்களுள், முதலாவதாக ஆட்சி செய்தவர்

[1] மக்ஜன், 44 (a)

[2] Iswari Prasad, Medieval India, 468; Cambridge History of India III, p. 227.

[3] K. S. Lal, Op. cit., 128.

கிஸிர்கான். பஞ்சாபை அவரே டில்லி சுல்தானியத்துடன் மீண்டும் இணைத்தார். ஆனால், நாட்டில் எங்கும் கலக மனப் பான்மை தோன்றியிருந்தது. அதை ஒழிக்க அவரால் ஏதும் செய்ய இயலவில்லை. ஆண்டுதோறும் படைப்பலம் காட்டியே கப்பம் வசூலிக்க வேண்டிய பரிதாபநிலை ஏற்பட்டது. முபாரக்ஷா 13 ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர், பஞ்சாபிலும், கிழக்கு மாநிலங்களிலும் அவருக்கேற்பட்ட தொல்லைகளைச் சமாளிப்ப தற்கே அவருக்கு நேரம் சரியாகப் போயிற்று. அவற்றை எதிர் கொள்ள அவர் ஆப்கானிய பிரபுக்களுக்கு, உயர் அதிகாரங்களை வழங்கினர். அதன் விளைவாகப் பஞ்சாபிலும், மேற்கு உத்தரப் பிரதேசத்திலும் ஆப்கானியப் பிரபுக்கள் செல்வாக்குப் பெற்றுவிட்டனர். முகமது ஷா, 11 ஆண்டுகள் அரசாண்டார். அவரது பலமற்ற தன்மை, டில்லி சுல்தானியத்தைச் சீர்குலையச் செய்துவிட்டது. அலாவுத்தீன் ஷா ஆலம் பட்டமெய்தியபோது சுல்தானுடைய ஆதிக்கம் டில்லியிலிருந்து 10 மைல்களுக்குமேல் செல்லுபடியாகவில்லை. மேற்கூறியவற்றிலிருந்து சையத்து களுடைய ஆட்சி எந்த வகையான பயனையும் மக்களுக்கு அளிக்க வில்லை என்பது தெளிவாகும். அவர்களை அடுத்துவந்த லோடிகள் பேரரசைத் தோற்றுவிப்பதற்கான முயற்சியைப் புதிதாக மேற்கொள்ளவேண்டி இருந்தது.

# 6. லோடி அரசர்கள்
# (1451-1526)

**லோடிகளின் தோற்றம்**

டில்லி சுல்தானியத்தை இறுதியாக ஆண்ட அரச குலத்தவர்களை லோடிகள் என்று அழைக்கிறோம். இவர்கள் 75 ஆண்டுகள் ஆட்சி செலுத்தி வந்தனர். இவர்கள் கல்ஜிக்களை விட, அதிகமான ஆண்டுகள் ஆட்சி செலுத்தி வந்துள்ளனர். இவர்கள் ஆப்கானிய இனத்தைச் சார்ந்தவர்களாவர் பிந்திய துக்ளக்குகள், சையத்துகள் ஆகியோரைவிட, இவர்கள் மேலான காரியங்களைச் செய்துள்ளனர்[1]. இழந்துபோன பெருமையை டில்லி சுல்தானியம் இவர்களுடைய ஆட்சியின் போதுதான் மீண்டும் பெற்றது என்று கூறுவது மிகையாகாது.

லோடிகள் யார் என்பதைப்பற்றி வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேற்றுமை நிலவி வருகிறது. முதலாவது, லோடி சுல்தானை பஹ்லூல் லோடி (Buhlul Lodi), ஷாஹு கேல் (Shahu Khel) என்ற குலத்தைச் சார்ந்தவர். இது லோடி இனத்தின் ஒரு பகுதியாகும். லோடிகள் ஆப்கானியர்களுள் ஒரு பிரிவினர் ஆவர். ஆப்கானியர்கள் யார் என்பதுபற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவி வருகின்றன. ஆப்கானியர்கள், இஸ்ரவேலர் (Israelites) என்று சிலர் கூறுகின்றனர். ஆதமினுடைய வழியில் வந்த யாகூப் என்பவரின் 12 பிள்ளைகளின் வழி வந்தவர்களே இஸ்ரவேலர் ஆவர். அவ்வழியில் தோன்றிய சால் (Saul) என்பவருக்கு ஆப்கன் என்ற பெயருடைய மகன் ஒருவன் பிறந்தான் என்றும், அவனுடைய வழியில் வந்தவர்களே ஆப்கானியர் என்றும் ஆசிரியர்கள் சிலர் கூறியுள்ளனர். ஆப்கனுடைய வழியில் தோன்றிய கயிஸ் (Qais) என்பவர், தம்மைச் சார்ந்தவர்கள் பின்தொடரக், கோர் என்ற நகரில் குடியேறினர். கோரில் குடியேறிய பிறகு, நபிகள் நாயகத்தின் நண்பர்களுள் ஒருவ ரான காலிக் (Khalik) என்பவருடைய அழைப்பை ஏற்று, முகம்மது நபியினுடைய படையில் சேர்ந்தனர், அந்த நேரத்தில்

1. A comprehensive History of India, V, p-666.

தான், அவர்கள் முஸ்லிம்களாயினர். அவர்கள் செய்த தொண்டினைப் பாராட்டும் வகையில் முகமதுநபி, கயிஸுக்குப் 'பேதன்', (Pehtan) என்ற பட்டத்தைச் சூட்டினார். பேதன் என்றால், கப்பல் சுக்கான் (Rudder) என்று பொருள். இது நாளடைவில் 'பதான்' என்று திரிந்துவிட்டது. ஆப்கானியர்கள் 'பதான்கள்' என்று அழைக்கப்படுவதற்கு இதுவே காரணம் என்பர் சிலர். கயிஸினுடைய மகள் ஒருவருக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தனர் என்றும், அவர்களுள் பாடன் என்பவருடைய மகளுக்கு இப்ராஹீம் என்ற மகன் பிறந்தான் என்றும், அவனுடைய முகத்தில் வீசிய ஒளியைக் கண்ட கயிஸ், அவனை 'லோ தே' (Loi-dey) என்று அழைத்தார் என்றும் சிலர் கூறு கின்றனர். 'லோ தே' என்றால், பெருமைக்குரியவன் என்று பொருள். இதுவே நாளடைவில் 'லோடி' என்று மாறியது என்று கூறுகின்றனர். வேறு சிலர், இவர்களை எகிப்து நாட்டுக் கிறித்த வர்கள் என்று கூறுகின்றனர். ஜெருசலத்திலிருந்து இஸ்ர வேலர்கள் எகிப்திற்கு வந்தபோது, இவர்கள் இந்துஸ்தானத்திற் குச் சென்றனர் என்று கூறப்படுகிறது[1]. எகிப்து, இஸ்ரவேல் ஆகிய நாடுகளுடன் ஆப்கானிஸ்தானத்தை ஒப்பிடும்போது, ஆப்கானிஸ்தானம் எந்த வகையிலும் அவற்றைவிடச் சிறந்த தாகத் தோன்றவில்லை. மேலும், அஃது, இஸ்ரவேல் அல்லது எகிப்து நாட்டிற்கு வெகு தூரத்தில் இருக்கிறது. எனவே, அங்கிருந்து மக்கள் திரளாக ஆப்கானிஸ்தானத்திற்கு வர வேண்டிய அவசியம் என்ன என்பதை அனைவரும் ஒப்புக் கொள்ளக்கூடிய வகையில் விளக்க இயலாதவாறு இருக் கிறோம். ஆப்கானியர்கள், பாரசீக நாட்டு மக்கள் என்று சிலர் கூறுகின்றனர். ஆப்கானிஸ்தானத்தில் உள்ள இடங்களின் பெயர்கள் பலவற்றைப் பாரசீகப் புனித நூலாகிய, 'ஜென்ட் அவஸ்தா'வில் (Zend Avesta) காணலாம். ஆப்கானியர்களை எகிப்தியர்கள், யூதர்கள், பெர்சியர்கள் என்பதைவிடப் பல இனங்களின் சேர்க்கையின் விளைவாகத் தோன்றியவர்கள் என்று கூறுவது பொருத்தமாகும் என்ற கருத்து மிகப் பலமாக வரலாற்று ஆசிரியர்களிடையே நிலவி வருகிறது. 'ஆப்கன்', 'லோடி' போன்ற சொற்கள், யூதமொழியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளபோதிலும், அதைக்கொண்டு அவர்களை யூதர்கள் என்று சொல்ல இயலாது. அவர்கள் ஒரு கலப்பினத் தவரேயாவர். வரலாற்றுக் காலத்தில் ஆப்கானிஸ்தானத்தின் மீது நடத்தப்பட்ட பற்பல படையெடுப்புகள், இந்த வகையான கருத்தினை உறுதியாக்குகின்றன.

1 Dr. K. S. Lal, Twilight of the Sultanate, p. 323-324.

சுல்தான் நசீர் உத்தீன் மாமூத் காலத்தில்தான் ஆப்கானியர்கள் முதன்முதலில் இந்திய அரசாங்கப் பணிகளில், குறிப்பாக இராணுவச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர் என்பதைச் சமகால வரலாற்று நூல்களின் வாயிலாக அறிகிறோம். கி. பி, 1260-ல் உலூக்கான் வோத்திகள்மீது படையெடுத்துச் சென்றபோது 3,000 ஆப்கானியர்கள், படையில் சேர்த்துக்கொள்ளப் பட்டனர்.[1] அதையடுத்து, ஆப்கானியப் படைத்தளங்கள் டில்லி, ஜலாலி, கம்பில், படியாலி, போஜ்பூர் ஆகிய இடங்களில் நிறுவப் பட்டன[2]. இத் தளங்கள் ஆப்கானியருடைய பலமும் செல் வாக்கும் பெருகுவதற்கு உறுதுணையாக நின்றன[3]. அலாவுத்தீன் காலத்தில் சில ஆப்கானியர்கள், பிரபுக்களாக நியமிக்கப் பட்டனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர், இக்தியாருத்தீன் யல் ஆப்கனும், மலிக் மக் ஆப்கனும் ஆவர். இவ்விருவரும் கல்ஜி, துக்ளக் அரசர்களின் ஆட்சிக்காலத்தில், மிக்க செல்வாக் குடன் விளங்கினார்கள்[4]. ஆளும் வர்க்கத்தில் முக்கியமான இடத்தை ஆப்கானியர்கள் முகமது பின் துக்ளக்கின் ஆட்சிக்காலத் திலேயே எய்தி விட்டனர்[5]. அதுமட்டுமன்றிச் சுல்தானுக்கு எதிராக அப்போது ஏற்பட்ட கலகங்களிலும் அவர்கள் பெரும் பங்கு வகித்திருந்தனர். அவர்களுள் மலிக் ஷாஹு ஆப்கன், காஜி ஜலால் ஆப்கன், மலிக் மக் ஆப்கன், குறிப்பிடத் தக்கவ ராவர்[6]. மலிக் மக் ஆப்கன் கலகத்தில் ஈடுபடுவதுடன் நிறுத்திக் கொள்ளாமல் தௌலதாபாத்தில் தனி அரசொன்றை அமைத் தார் என்பதை நாம் அறியும்போது அவர்களுடைய வலிமை எத்தன்மையுடையதாக இருந்தது என்பது விளங்கும்.

நிருவாகத்திலும் அவர்கள் முக்கியமான இடம் பெற்று இருந்தனர். குறிப்பாகச் சத அமீர்களுள் பெரும்பாலோர் ஆப் கானியர்களாகவே இருந்தனர். இஃது அவர்களுடைய முன்னேற் றத்திற்குப் பெருமளவு உதவி செய்தது. ஏனெனில், சுல்தானு டைய நிருவாகத்திற்குச் சத அமீர்களே அக் காலத்தில் அடித்தள மாக இருந்தனர். சத அமீர்கள் என்ற முறையில் அவர்கள் நிரு வாகத்தில் வகித்திருந்த செல்வாக்குத்தான் பிற்காலத்தில் ஆப் கானியர்கள் பலர் ஜமீன்தார்களாவதற்குத் துணை செய்தது[7]. பிந்திய துக்ளக்குகளின் ஆட்சியின்போது ஆப்கானியர்கள் பலர், முக்கியமான பொறுப்புகளை வகிக்கத் தலைப்பட்டனர். தௌலத் கான் லோடி என்பவர். மியான் இ-தோவாப். (Miyan-i-Dovab) பகுதியின் பௌஜ்தாராகப் (Faujdar) பொறுப்பேற்றார். சையத்

[1] ACHI, V, p. 667. [2] Ibid. Ibid. [4] Ibid. [5] Ibid. [6] Ibid.

[7] Ibid, p. 668.

துகள் ஆட்சியின்போது. அவர்களுடைய அதிகாரம் மேலும் பெருகியது. சிர்ஹிந்தை ஆளும் பொறுப்பு மலிக் ஷா பஹ்ராம் லோடி என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மூல்தான் ராப்ரி ஆகிய பகுதிகளும் ஆப்கானியர்களின் ஆதிக்கத்தின்கீழ் இருந்தன[1].

இதுவரை ஆப்கானியர்கள் எவ்வாறு படிப்படியாக முன்னேறினர்கள் என்பதைக் கண்டோம். இனி, லோடி அரச குலத்தினர், எங்ஙனம் ஆட்சிப் பொறுப்பினைக் கைப்பற்றினர்கள் என்பதைக் கவனிப்போம். லோடிகள் முதன்முதலில் வாணிபம் செய்யும் பொருட்டு இந்தியாவிற்கு வந்தனர். அவ்வாறு வந்தவர்களுள் ஒருவர் பஹ்ராம் என்பவராவார். அவருக்கும் அவரது மூத்த சகோதரருக்கும் இடையே கருத்து வேறுபாடு தோன்றியிருந்தமையால், அவர் இந்தியாவிலேயே தங்கிவிட முடிவு செய்தார். மூல்தானின் ஆளுநரான மலிக் மர்தன் தௌலத் என்பவரிடம் முதன்முதலில் வேலைக்கமர்ந்தார். பஹ்ராம் இறந்த பின்பும், அவரது பிள்ளைகள் மூல்தானிலேயே வாழ்ந்து வரலாயினர். கிஸிர்கான் மூல்தானின் ஆளுநராகப் பொறுப்பேற்றபோது, பஹ்ராமின் பிள்ளைகளுள் ஒருவரான மலிக் சுல்தான் ஷாவைத் தம்மிடம் வேலைக்கமர்த்திக் கொண்டார். கிஸிர்கானுக்கும் மல்லூ இக்பாலுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையின்போது, சுல்தான் ஷா மிக்க வீரத்துடன் போர் புரிந்து மல்லூ இக்பாலைக் கொன்றார். இந்த மாபெரும் வெற்றியைப் பாராட்டும்வகையில் அவருக்கு இஸ்லாம்கான் என்ற பட்டமும் சிர்ஹிந்தின் ஆளுநர்ப் பதவியும் அளிக்கப்பட்டன. அவருடைய சகோதரர்களும் பதவி உயர்வுகளுடன் மானியங்களையும் பெற்றனர்[2]. அவர்களுள், ஒருவர், மலிக் காலா என்பவர். அவருக்குத் தௌராலா ஆளுநர் பதவி அளிக்கப்பட்டது. அவருக்குப் பிள்ளையாகப் பிறந்தவரே லோடி அரச குலத்தைத் தொடங்கி வைத்த பஹ்லூல் ஆவார். மலிக் கல ஆப்கானியர்களுடன் போரிட்டு இறந்தபோது, பஹ்லூல் சிர்ஹிந்திற்குச் சென்று இஸ்லாம்கானுடன் வாழலானர். பஹ்லூலிடம் காணப்பட்ட நற்பண்புகளும், திறமையும் இஸ்லாம் கானை வெகுவாகக் கவர்ந்துவிட்டன. எனவே, அவர், தம் மகளை பஹ்லூலுக்கு மணமுடித்து வைத்தார். பின்னர், அவரைத் தம் வாரிசாக நியமித்தார். இஸ்லாம்கான் இறந்த பிறகு, அவருடைய ஆட்களுள் சிலர் அவருடைய மகனை குதப்கானை ஆதரித்தனர். வேறு சிலர், இஸ்லாம் கானின் சகோதரனை மலிக் பிருஸை ஆதரித்தனர். மற்றும் சிலர் பஹ்லூலுவை ஆதரித்தனர்.

[1] Ibid.
[2] ACHI, Vol VI, pp. 668-69. [3] Ibid, p 669.

அந்த வாரிசுரிமைப் போட்டியில் மிகச் சாதுர்யமாக நடந்து கொண்டு இறுதியில் பஹ்லூல் வெற்றிபெற்றூர். அதைப்பற்றிய விவரங்களையும் அதையடுத்து அவர் எவ்வாறு சுல்தாஞக முடி சூட்டிக்கொண்டார் என்பதையும் முன் அத்தியாயத்தில் கண்டோம்.

பஹ்லூல் லோடி

கி. பி. 1451ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் நாள் பஹ்லூல், டில்லி அரியணையில் அமர்ந்தார். அப்போது, பழைய டில்லிப் பேரரசு முற்றிலும் மறைந்துவிட்டிருந்தது என்றே கூற வேண்டும். தக்காணம், குஜராத், மாளவம், ஜான்பூர், வங்காளம் ஆகியவை சுதந்தர நாடுகளாகச் செயற்பட்டு வந்தன. வடக்கே லாகூர், தீபால்பூர், சிர்ஹிந்து ஆகிய இடங்களிலிருந்து தெற்கே ஹான்சி, ஹிசார், பானிபட் வரையிலுமுள்ள பகுதிகள் பஹ்லூலுடைய ஆதிக்கத்தின்கீழ் இருந்தன. மெஹ்ராலியும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் அகமத்கான் மேவாதியிடம் இருந்தன. சம்பல் மாநிலம் தரியாகான் லோடி கைவசமிருந்தது. தோவாப்பகுதி பல சிறு படை மானியங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை ஒவ்வொன்றும் ஏறக்குறைய சுதந்தர நாடுகள் போன்று செயற்பட்டு வந்தன. ரேபரி, சந்தாவர், இதாவா ஆகியவை குதப்கானுடைய ஆதிக்கத்திலிருந்தன. இகாகான் துருக், கோல், ஜாலாலி, ஜலேசர் ஆகியவற்றை ஆண்டுவந்தார். தாலூத்கான் லோடி பயனுவில் ஆதிக்கம் பெற்றிருந்தார். பாடியாலி, கம்பிலா ஆகியவற்றை இராஜா பிரதாப் ஆண்டு வந்தார்[1]. பஹ்லூல் லோடி பட்டமெய்தியபோது பல பிரச்சினைகள் அவரை எதிர்நோக்கியிருந்தன. டில்லி சுல்தான்கள் இழந்துவிட்ட பகுதிகளை மீண்டும் பெற்று, டில்லி சுல்தானியத்தின் புகழை நிலை நாட்டுவது அவற்றுள் முக்கியமானதாகும். அந்தப் பணியை நிறை வேற்றும்போது பஹ்லூல், மிகவும் கவனத்துடன் நடந்துகொள்ள வேண்டி இருந்தது. மேலும், ஆப்கானியர்களுக்கு எதிராக மக்களிடையே பரவலாக ஏற்பட்டிருந்த உணர்ச்சி, பஹ்லூலுடைய ஆட்சிக்கு ஊறு விளைவிப்பதாக இருந்தது. ஆப்கானியர்கள் பண்பற்றவர்கள் என்பதால், அவர்கள் ஆட்சி அதிகாரத்தைச் செலுத்த அருகதையற்றவர்கள் என்று துருக்கியர் கருதிவந்தனர். மற்றும் சிலர், பதோனில் தொடர்ந்து ஆட்சி செலுத்திவந்த சையத்து அரசர்களிடம் பற்றுக்கொண்டிருந்தனர். அவர்களுக்குப் போதிய உதவி அளிக்க சையத்து மன்னரின் மருமகனும் ஜான்பூர் அரசருமான மாமூத் ஷா ஷர்க்கி தயாராகக் காத்திருந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக, ஆப்கானியர்களிடம் தோன்றி

1. Iswari Prasad, History of Medieval India, p. 476.

யிருந்த சுதந்திர வேட்கையையும் அவர்கள் தங்களுடைய குழுத் தலைவர்களிடம் கொண்டிருந்த விசுவாசத்தையும் ஒரு கட்டுக்குள் கொண்டுவந்த ஒரு பேரரசரின் கீழ்ப்படிதலுள்ள குடிமக்களாக மாற்றுவதென்பது மற்றொரு பெருங்காரியமாக இருந்தது.

அரசுரிமையைப் பெற்றதும் அவர் முதற்காரியமாகத் தமது நம்பிக்கைக்குகந்த ஆப்கானியர்களை முக்கியமான பதவிகளில் அமர்த்தினார். அதேபோன்று டில்லியைச் சுற்றியிருந்த இக்தாக்கள் யாவற்றையும் தமக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர்கள் கைகளில் ஒப்படைத்தார். ஆப்கானிய வீரர்களுள் மிகச் சிறந்தவர்களென்று கருதப்பட்டவர்களை டில்லி கோட்டையில் நிறுத்தி வைத்தார். நிருவாகம் முழுவதையும் ஆப்கானிய மயமாக்குவதில் அவருக்கு ஒரு சிரமம் ஏற்பட்டது. அதாவது, அவரிடம் போதிய அளவில் ஆப்கானியர்கள் இல்லை. எனவே, ஆப்கானிஸ்தானத்திலிருந்து புதிதாக ஆள் சேர்க்கத் தாமே மூல்தானுக்குப் புறப்பட்டார். அப்போது மூல்தான், டில்லியின் ஆட்சியிலிருந்து சுதந்தரம் பெற்று இருந்தது. அதனைக் கைப்பற்றுவதன்மூலம் அவர் ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்த எண்ணினார். புதிய படை திரட்டுவதற்குத் தக்க ஒரு வாய்ப்பை அளிப்பதுடன் இராணுவப் பாதுகாப்பையும் அஃது அளிக்கும் என்று அவர் எண்ணினார்.

அவர் மூல்தானுக்குச் சென்றுள்ளார் என்ற செய்தியைக் கேட்டதும் டில்லி பிரபுக்களில் சிலர், மாமூத் ஷா ஷர்க்கியை டில்லிக்கு வருமாறு கேட்டுக்கொண்டனர். அதே நேரத்தில் சையத்து குலத்தைச் சார்ந்த அவரது மனைவியும் அவரை டில்லி மீது படையெடுத்துச் செல்லுமாறு ஊக்குவித்தார். மேலும், மாமுத் ஷா ஷர்க்கீ போர் புரிவதில் மிக்க ஆர்வம் கொண்டிருந்தார். அதுமட்டுமன்றி, ஆப்கானியர்களுடைய வளர்ச்சியை அவர் விரும்பவில்லை. எனவே, டில்லியிலிருந்து அவருக்கு அழைப்புக் கிடைத்ததும், அவர் உடனடியாக டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றார். சம்பல் ஆளுநரான தரியாகான் லோடி அவருடன் சேர்ந்துகொண்டார். டில்லியினை முற்றுகையிடும் பணியில் தரியாகான் லோடிக்கு முக்கியப் பங்கு அளிக்கப்பட்டது. கோட்டையைக் காப்பாற்றுவது கடினம் என்ற நிலை ஏற்பட்ட போது, கோட்டையின் சாவிகளை தரியாகானிடம் ஒப்படைக்க பஹ்லூலுடைய அதிகாரிகள் தூதுவரை அனுப்பிவைத்தனர். அத் தூதுவர், தரியாகானைச் சந்தித்துச் சாவிகளைக் கொடுத்துவிட்டு, ஆப்கானிய இனத்திற்கு மட்டும் துரோகம் இழைக்கவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். அதைக் கேட்டதும் தரியா

னிடம் இனப்பற்றுக் கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. எனவே, சாவிகளைத் தூதுவரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, மாமூத் ஷாவிடம் திரும்பிச் சென்று டில்லிக் கோட்டையைக் கைப் பற்றுவது முக்கியமன்று என்றும், டில்லிக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த பஹ்லூலை வழியில் சந்தித்துத் தோற்கடித்துவிட்டால், டில்லி தானுக மாமூத் ஷாவிடம் விழுந்துவிடும் என்றும் சமாதானம் கூறினர். அதை உண்மையென நம்பி மாமூத் ஷா, 30,000 குதிரைகளையும் 40 யானைகளையும் கொண்ட படையை பஹ்லூலுடன் போரிட அனுப்பிவைத்தார். அதற்குள்ளாக பஹ்லூல் டில்லியிலிருந்து 17 மைல் தூரத்திலுள்ள நரேலா என்னுமிடத்தை அடைந்தார். மாமூத் ஷாவின் படைத்தலைவனை பதேகான் அப்போது நடந்த போரில் படுகாயமுற்றார். தரியா கானும் போர்க்களத்திலிருந்து சென்றுவிட்டமையால், பதேகானுடைய படைப்பலம் குறைந்துவிட்டது. பதேகான் கைது செய்யப்பட்டார். அவருடைய தலை கொய்யப்பட்டு, பஹ்லூலிடம் அனுப்பிவைக்கப்பட்டது. இச் செய்தியை அறிந்ததும் மாமூத்ஷா ஷர்க்கீ ஜான்பூருக்குத் திரும்பிவிட்டார். மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சி பஹ்லூலுக்குச் சில உண்மைகளைப் புலப்படுத்தியது. முதலாவது, ஜான்பூர் சுதந்திரமான நாடாக இயங்கும்வரை பேராபத்து டில்லிக்குத் தொடர்ந்து இருந்துவரும் என்பதாகும். ஆகவே, அதனை முழுமையாக அடக்கி, டில்லியின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர வேண்டுவது மிகமிக அவசியமென்பதை அவர் உணர்ந்தார். இரண்டாவதாக, ஆப்கானியர்கள் அதிக அளவில் படைப்பணியில் சேர்க்க வேண்டுவதன் அவசியத்தை அஃது உணர்த்தியது. ஆகவே, படைக்கு ஆள்திரட்டும் பணியினை விரைவில் மேற்கொள்ளலானர். ஆப்கானியக் குழுத் தலைவர்களை இந்தியாவிற்கு ஆட்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொண்டார். குறுகிய காலத்திற்குள் எறும்புக் கூட்டங்கள் போலப் பல்லாயிரக்கணக்கான ஆப்கானியர்கள் இந்துஸ்தானத்திற்கு வந்து குவிந்துவிட்டனர்[1]. மூன்ருவதாக, இவ்வெற்றி பஹ்லூலினுடைய புகழை வெகுவாக உயர்த்திவிட்டது.

இந்த வெற்றிக்குப் பிறகு, பஹ்லூல் லோடி, தமக்குக் கீழ்ப்படிய மறுத்த பிரபுக்களை ஒடுக்குவதில் தமது காலத்தைச் செலவிட்டார். மேவாத்தை ஆண்டுவந்த அகமது கான் மேவாதி முதலில் அவருக்கு அடிபணிந்தார். பஹ்லூல் லோடியினுடைய மேலாதிக்கத்தைத் தாம் ஏற்றுக்கொண்டதை அறிவிக்கும் வகையில் அவருக்கு ஏழு பர்கானுக்களை வழங்கினர்[2]. மேலும்,

[1] K. S. Lal, Twilight of the Delhi Sultanate, p. 137.
[2] Ibid.

தமது நெருங்கிய உறவினரான முபாரக்கான் என்பவரை, பஹ்லூல் லோடிக்குப் படைச் சேவகம் செய்யும்படி அனுப்பி வைத்தார்[1]. அதன் பின்னர், பஹ்லூல் பரனுக்குச் சென்றார். அங்குத் தரியாகான், பஹ்லூல் லோடிக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாக ஒப்புக்கொண்டார். ஜான்பூர் அரசருக்குத் தரியா கான் முன்பு பேருதவி செய்ததாக நாம் குறிப்பிட்டிருந்தோம். அதற்காக அவருக்குக் கடுந்தண்டனையை பஹ்லூல் அளித்திருக் கலாம். ஆனால், தக்க சமயத்தில் தரியாகான், ஜான்பூர் அரசரை விட்டு நீங்கியதால், நரேலா சண்டையில் தாம் வெற்றி பெற இயன்றது என்பதை பஹ்லூல் மறக்கவில்லை. எனவே, அவரைச் சம்பல் ஆளுநராகத் தொடர்ந்து பணி செய்துவர அனுமதி வழங்கினர். ஆயினும், அவரது இக்தாவிலிருந்து ஏழு பர்கானுக்களை எடுத்து அவற்றைத் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தார். அதன் பின்னர், அவர் கோலுக்குச் (Kol) சென்றார். அதன் ஆளுநரான இசா கான் (Isa Khan), அவருக் குக் கீழ்ப்படிந்து நடக்க ஒப்புக்கொண்டமையால், அவரை அந்த இக்தாவினைத் தொடர்ந்து ஆண்டுவர அனுமதி வழங்கினர். சகேத்தின் (Sakete) ஆளுநரான முபாரக் கானும், ராய் பிரதாப்பும் அவருடைய மேலாதிக்க உரிமையை ஏற்றுக் கொண்டனர். எனவே, அவர்களுடைய ஆட்சிப் பகுதிகளையும், தம் நேரடி ஆட்சிக்கு உட்படுத்த பஹ்லூல் முயற்சி செய்யவில்லை. ராப்ரி என்னுமிடத்திற்கு அவர் சென்றபோதுதான் அவருக்கு எதிர்ப்பு ஏற்பட்டது. அதனை ஆண்டுவந்த குதப்கான், ராப்ரி கோட்டைக்குள் புகுந்துகொண்டு அவரை எதிர்க்கலானர். கோட்டை எளிதில் அவர் கைவசமாயிற்று. குதப்கானை மன்னித்து, அவரைத் தொடர்ந்து ராப்ரியை ஆண்டுவர அனுமதித்தார். இதாவாவை (Etawah) ஆண்டுவந்த இக்தாதார் யாதொரு எதிர்ப்பையும் மேற்கொள்ளாது, அவரிடம் சரண் புகுந்தார். இவ்வாறாகத் தாம் பட்டமெய்திய ஓராண்டிற்குள் பஞ்சாப் தொடங்கி, ஜான்பூர் வரையிலுள்ள மத்தியப் பகுதியில் பஹ்லூல் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

டில்லி அரசினுடைய ஆதிக்கத்தை மத்தியப் பகுதியில் நிலை நாட்ட, அவர் மேற்கொண்ட முயற்சி, அவருக்கும் ஜான்பூர் அரசருக்கும் இடையே போர் ஏற்படக் காரணமாகிவிட்டது. பஹ்லூல் லோடி இதாவாவிற்குச் சென்றபோது, மாமூத் ஷர்க்கி பஹ்லூலுடன் போரிட இதாவாவிற்கு வந்தார். ஒரு நாள் சண்டைக்குப் பிறகு இருவரும் சமாதானம் செய்துகொண்டனர். கி.பி. 1421 முதல் 1434 வரை ஆண்ட முபாரக் ஷா, சையத்து

[1] ACHI, p. 676.

கைவசமிருந்த பகுதிகள் யாவற்றையும் பஹ்லூல் லோடி ஆண்டு வரவேண்டும் என்றும், அப்போது ஜான்பூர் அரசுக்கு உட்பட்டிருந்த பகுதிகள் யாவும் மாமூத் ஷர்க்கியின் ஆட்சியின்கீழ்த் தொடர்ந்து இருந்து வரவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. முன்பு பதேகானைத் தோற்கடித்தபோது பஹ்லூல் கைப்பற்றிய, ஜான்பூர் அரசருக்குச் சொந்தமான ஏழு யானைகளை அவர் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்றும், மலிக் ஜூனு விடம் இருந்துவரும் ஷம்ஸாபாத் பஹ்லூலுக்குச் சேரவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. ஷம்ஸாபாத்தை மலிக் ஜூனு, மாமூத் ஷர்க்கியின் சார்பில் ஆண்டுவந்தார் என்பதை நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட மனத்தாங்கல்கள் பஹ்லூலுக்கும் மாமூத் ஷர்க்கிக்கும் இடையே மீண்டும் போரை மூட்டிவிட்டன. நிபந்தனையின்படி பஹ்லூல், ஷம்ஸாபாத்தைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி மலிக் ஜூனுவைக் கேட்டார். அவர் மறுக்கவே, அதனைப் பலவந்தமாகக் கைப்பற்றி, ராய்கானிடம் பஹ்லூல் ஒப்படைத்தார். அதை அறிந்ததும், மாமூத் ஷர்க்கி, படையுடன் புறப்பட்டு ஷம்ஸாபாத்திற்குச் சென்றார். இருவரும் போருக்குத் தயாராகிக்கொண்டிருந்த நேரத்தில், குதப்கான் லோடியும் தரியாகான் லோடியும் பகைவரை ஒருநாள் இரவு தாக்கினார்கள். அப்போது குதப்கானுடைய குதிரை இடறி விழுந்தமையால், அவரைப் பகைவர்கள் எளிதாகக் கைப்பற்றி ஜான்பூருக்கு அழைத்துச் சென்று சிறையிலடைத்துவிட்டனர். எனவே, பஹ்லூல் லோடி மிகவும் கோபமடைந்து இரண்டில் ஒன்று பார்த்துவிடுவதென்று போருக்கான ஏற்பாடுகளைச் செய்தார். அந்த நேரத்தில் மாமூத் ஷர்க்கி திடீரென மரணமடைந்தார்.

மாமூத் ஷா இறந்தபின்னர், அவருடைய மனைவியான பீபி ராஜி என்பவர், மாமூத் ஷாவின் பிள்ளைகளுள் ஒருவரான பீகான் கான் (Bhikhan Khan) என்பவரை ஜான்பூரின் மன்னராக முடிசூட்டினார். புதிதாக அரசுரிமையைப் பெற்ற பீகான்கான், முகமது ஷா என்ற பட்டத்தைப் பெற்றார். முகமது ஷா, தம் முதல் வேலையாக, பஹ்லூல் லோடியுடன் நடைபெற்று வந்த போரை நிறுத்தினார். சுல்தான் மாமூத்திடம் இருந்த பகுதிகள் அனைத்தையும் முகமது ஷா தொடர்ந்து ஆண்டுவர அனுமதி பெற்றார். இந்தச் சமாதானம் வெகுநாள் நீடிக்கவில்லை. அதற்குக் காரணம், பஹ்லூல் லோடி, ஜான்பூர் மன்னரிடம் சிக்கிவிட்ட குதப்கானை விடுவிக்க யாதொரு முயற்சியும் மேற்கொள்

ளாமையேயாகும். பஹ்லூல் லோடியின் பிரதான மனைவியருள் ஒருவர், ஷம்ஸ்காதூன் என்பவராவார். குதப்கான் அவருடைய சகோதரராவார். தம் சகோதரனை மீட்க, பஹ்லூல் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாதது அவருக்கு மிக்க வருத்தத்தை உண்டாக்கியது. எனவே, அவர் குதப்கானை மீட்டு வரும்படி பஹ்லூல் லோடியை நச்சரித்தார். அவருடைய தூண்டுதலால் பஹ்லூல் ஜான்பூர்மீது மீண்டும் படையெடுத்துச் சென்றார். முகமது ஷாவும் போருக்குத் தயாரானார். முதலில் அவர் ஷம்ஸாபாத்தைக் கைப்பற்றி, அதனை ஜூனுகானிடம் ஒப்படைத்தார். அவருடைய வலிமையைக் கண்டு அஞ்சிய ராய் பிரதாப்பும் அவர் பக்கம் சேர்ந்துகொண்டார். சர்சுதி (Sarsuti) என்னுமிடத்தில் முகமது ஷா, தமது பாசறையை அமைத்துக்கொண்டார். இதற்கிடையில் சர்சுதிக்கு அருகேயுள்ள ராப்ரியை பஹ்லூல் வந்தடைந்தார்.

முகமது ஷா, இரத்த வெறிபிடித்தவர். பழிபாவத்திற்கு அஞ்சாதவர். தமது சகோதரர்களைக் கொல்லவும் அவர் தயங்கியதில்லை. அவருடைய கொடுமைக்குப் பலியானவர்களுள் அவருடைய சகோதரரான ஹசனும் ஒருவர். மேற்கூறியவற்றின் காரணமாக, அவருடைய தாயாரும் அவர்மீது வெறுப்புக் கொண்டு ஏனைய இளவரசர்களை அவருடைய பாசறையிலிருந்து விலகிச் சென்றுவிடுமாறு யோசனை கூறினார். அவருடைய சொல்லைக்கேட்டு ஹுசெயினும் ஜலால்கானும் முகமது ஷாவின் பாசறையிலிருந்து நழுவிவிட்டனர். ஆனால், ஜலால்கான், பஹ்லூல் லோடியிடம் சிக்குண்டார். மேற்கூறிய நிகழ்ச்சிகள் முகமது ஷாவிற்கு அச்சத்தை உண்டாக்கிவிட்டன. எனவே, அவர் போர் புரிவதைக் கைவிட்டுவிட்டு ஜான்பூருக்குத் திரும்பலானார். போகும்வழியில் ராஜ்கார் என்னுமிடத்தில் பீபி ராஜியும் ஜான்பூர் படைத்தலைவர்கள் சிலரும் முகமது ஷாவை எதிர்த்து, அவரைக் கொன்றுவிட்டனர். அவருக்குப்பின் பட்டமெய்திய ஹுசெயின்ஷா, பஹ்லூலுடன் சமாதானம் செய்துகொண்டார். இருவரும் அடுத்த நான்கு ஆண்டுகள் போர் புரிவதில்லை என்றும் குதப்கான், ஜலால்கான் ஆகிய போர்க் கைதிகளைப் பரிமாறிக் கொள்வதென்றும் முடிவு செய்தனர். நான்காண்டுகள் கழிந்த பின்னர், பஹ்லூல் லோடி, ஷம்ஸாபாத்தை மீண்டும் கைப்பற்றி ராய்கானிடம் ஒப்படைத்தார். பஹ்லூல் லோடி ஷம்ஸாபாத்தில் இருந்தபோது, தரியாகான் பழைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளவேண்டி பிரதாப் சிங்கினுடைய மகனைக் கொலை செய்தார். இந்தப் பெருங்குற்றத்தைச் சுல்தான் பஹ்லூல் தண்டிக்கத் தவறிவிட்டார். இந்தக் காரணத்திற்காகப் பிரதாப்

சிங்கும், ராப்ரி ஆளுநரான குதப்கானும் ஜான்பூர் மன்னர் பக்கம் சேர்ந்து கொண்டார்கள். எனவே, ஷம்ஸாபாத் வெற்றியைத் தொடர்ந்து ஜான்பூர்மீது படையெடுக்கும் எண்ணத்தை அவர் கைவிட்டு டில்லி திரும்ப நேர்ந்தது.

ஷம்ஸாபாத்தை, பஹ்லூல் லோடி கைப்பற்றிய செய்தி, ஹுசெய்ன் ஷர்க்கீயின் கோபத்தைக் கிளறிவிட்டது. ராய் பிரதாப்பும், குதப்கானும் அவர் பக்கம் சேர்ந்துகொண்டமையால், ஹுசெயினுடைய வலிமை பெருகியது. எனவே, பஹ்லூல் லோடி மூல்தானுக்குப் போய்க்கொண்டிருந்த சமயம் பார்த்து, ஹுசெயின் ஷர்க்கீ டில்லியைத் தாக்கினார். அதையறிந்ததும் பஹ்லூல் லோடி, உடனடியாக டில்லிக்குத் திரும்பினார். தமது பகைவரைச் சந்த்வார் என்னுமிடத்தில் சந்தித்தார். முன்னைப் போலவே இப்போதும், பஹ்லூல் முழுமையான வெற்றியைக் காண இயலவில்லை. இறுதியில், இருவரும் மூன்று ஆண்டுகள் வரை போர் புரிவதில்லை என்ற உடன்பாட்டை மேற்கொண்டு, அவரவர் தலைநகருக்குத் திரும்பிவிட்டனர்.

அடுத்த மூன்று ஆண்டுகளில் ஹுசெயின் தம்மைப் பற்பல வழிகளில் பலப்படுத்திக் கொண்டுவந்தார். இதாவாவைக் கைப்பற்றி, அதனைத் தம் நாட்டுடன் சேர்த்துக்கொண்டு[1], அதனைத் தமது போர்த்தளமாக அமைத்துக் கொண்டார். உள்நாட்டு நிருவாகம், போர்த்துறை ஆகியவற்றினைத் திருத்தியமைத்து அவற்றைப் பலப்படுத்தினார். பனாரஸ் கோட்டையைச் செப்பனிட்டார். குவாலியர்மீது படையெடுத்து, அதன் அரசைத் தம் பக்கத்தில் சேர்த்துக் கொண்டார். ஒரிசாமீது படையெடுத்துச் சென்று, அதன் அரசரை வென்று, தம்முடைய செல்வாக்கினைப் பெருக்கினார், அதன் விளைவாகப் பல ஆளுநர்களும் ராய்களும் அவர் பக்கம் சேர்ந்து கொண்டனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் கோல் (Kol) ஆளுநரான ருஸ்தும்கானும். பயனா ஆளுநரின் மகனான அகமதுகானும் ஆவார்கள்[2]. இவ்வாறாகத் தமது வலிமையையும் செல்வாக்கையும் பெருக்கிக் கொண்ட ஹுசெயின், கி.பி. 1466-ல் 1,000 யானைகளுடனும் 100,000 குதிரைகளுடனும் டில்லி நோக்கிப் புறப்பட்டார். பஹ்லூல் லோடி, தம் தலைநகரை விட்டுப் புறப்பட்டு, பட்வாராவிற்குச் சென்று, அங்குத் தம்பகைவருடன் போர் புரிந்தார். அதன்

1 மூன்று ஆண்டு சமாதான காலம் முடிவதற்குள் இந் நிகழ்ச்சி நடைபெற்றதாக நைஜாம் உத்தீன் கூறுகிறார். மூன்று ஆண்டுக்காலம் சமாதான காலம் முடிந்த பிறகே இது நடைபெற்றது என்று பிரிஷ்டா கூறுகிறார்.

2 அகமதுகான் பயனாவின் ஆளுநர் என்று குறிப்பிட்டுள்ளனர் (ACHI- p. 681)

பின்னர், சராய் லஷ்கர் (Sarai Lashkar) என்னுமிடத்தில் போர் நடந்தது. இவ்விரு சண்டைகளின் விளைவாக ஹுசேன், தம் நாடு திரும்ப வேண்டியதாயிற்று. அந்த நேரத்தில் ஹுசேனுடைய தாயார் மரணமடைந்தார். அந்த அரிய வாய்ப்பினைப் பயன் படுத்திக்கொண்டு, பஹ்லூல் லோடி, குதப்கானையும் கல்யாண் மல்லையும் சுல்தான் ஹுசேனிடம் அனுப்பிவைத்து அவர்கள் வாயிலாகத் தம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதன்மூலம் அவருடைய நட்பைச் சம்பாதிக்க முயலலானார். அம் முயற்சி தோல்வியில் முடிவுற்றது. எனினும், அடுத்த 10 ஆண்டுகள் இவ்விரு நாடுகளுக்கிடையே, போர் ஏதும் இன்றிக் கழிந்தன. இந்தப் பத்து ஆண்டுக் காலத்தில் ஹுசேன் டில்லியின்மீது படை யெடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தொடர்ந்து மேற் கொண்டு வந்தார்.

கி.பி. 1478ஆம் ஆண்டில் கடைசி சையத்து அரசரான அலாவுத்தீன் ஆலம் ஷா, பதோனில் இறந்தார். அவருடைய மறை விற்கு அனுதாபம் தெரிவிப்பதாகப் பாவனை காட்டிச் சுல்தான் ஹுசேன், பதோனுக்குச் சென்று அதனைக் கைப்பற்றினார். அங் கிருந்து புறப்பட்டுச் சென்று சம்பல் ஆளுநரை வென்று, அவரைக் கைது செய்தார். அதையடுத்து, அவர் டில்லியைத் தாக்குவதற் கான முயற்சியை 1479 ஆம் ஆண்டில் மேற்கொண்டார். அச் சமயத்தில், பஹ்லூல் லோடி சிர்ஹிந்தில் இருந்தார். மேற்கண்ட செய்தி அவருக்கு எட்டியதும் அவர் உடனே டில்லிக்குப் புறப் பட்டார். ஜான்பூர் படையானது டில்லிப்படையைவிட எண் ணிக்கையிலும் வலிமையிலும் பன்மடங்கு உயர்ந்திருந்தது. ஜான்பூர் படை, 1,40,000 குதிரைகளையும் 1,400 யானைகளையும் கொண்டிருந்தது. ஆனால், டில்லிப் படையில் 18,000 வீரர்கள் மட்டுமே இருந்தனர்[1]. எனவே, பஹ்லூல் லோடி, பயத்தால் நடுநடுங்கிப் போனார். ஆகவே, மீரத் ஆளுநருக்கும், மாளவ அரசருக்கும் உதவி கோரி ஆளை அனுப்பிவைத்தார். உதவி அவருக்குக் கிடைப்பதற்குள், ஜான்பூர் அரசர் டில்லியைத் தாக்க முற்பட்டார். அதிர்ஷ்டவசமாக அவருடைய முயற்சி தோல்வியுற்றது. அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு பஹ்லூல், சமாதானம் செய்துகொள்ள உடனடியாக நடவடிக்கையை மேற்கொண்டார்.

குதப்கான் லோடியை அழைத்துத் தமக்கும் ஜான்பூர் அரச ருக்கும் இடையே சமரசத்தை உண்டுபண்ணுமாறு வேண்டினார்.

1 Ferishta, II, p. 310.

குதப்கானும் அதற்கிசைந்து, ஜான்பூர் மன்னருக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில் மறைந்துவிட்ட பீபி ராஜியினுடைய அன்பைக் கவர்ந்த பணியாட்களுள் தாமும் ஒருவர் என்றும், தாம் ஜான்பூரில் சிறைவாசம் மேற்கொள்ள நேர்ந்தபோது, பீபி ராஜி தம்மை அன்புடன் கவனித்து வந்தார் என்றும், அப்போதைய சூழ்நிலையில் ஹுசேன் ஷர்க்கி, பஹ்லூலுடன் சமாதானம் செய்துகொண்டு, தம் நாடு திரும்புவதே மேலான செயலாகும் என்றும் குறிப்பிட்டிருந்தார். மேலும், அவ்வாறு அவர் சமாதானத்திற்கு இசைவாரேயானல், கங்கைக்கு அப்பாலுள்ள பகுதிகளுக்கு அவரே ஆட்சியாளராக இருக்கலாம் என்றும் அவர் அக் கடிதத்தில் கூறியிருந்தார். இவ் வகையான பணிவான கடிதத்தைக் கண்டதும், ஹுசேன் ஷர்க்கீக்கு எல்லையில்லா ஆனந்தம் ஏற்பட்டுவிட்டது. டில்லிக்கு வெகு அருகிலுள்ள பகுதிகளை அவர் ஏற்கெனவே வென்று விட்டதை அந்த மகிழ்ச்சியில் மறந்து விட்டார். அதன் விளைவாக இரு அரசர்களும் மீண்டும் சமாதானம் செய்து கொண்டனர். ஹுசேன் ஷர்க்கீ, ஜான்பூர் திரும்பி விட்டார். அதையறிந்ததும் பஹ்லூல், தமது வாக்கை மீறி, அவரைப் பின் தொடர்ந்து அவருடைய பரிவாரங்களைப் பின்னலிருந்து தாக்கினர். பல முக்கியமான பிரபுக்களையும் ஜான்பூர் படைக்குச் சொந்தமான உணவு, ஆயுதங்கள் போன்ற பொருள்களையும் அவர் கைப்பற்றினர். ஷம்ஸபாத், கம்பில், படியாலி, கோல், ஜலாலி ஆகிய பகுதிகளையும் அவர் வென்றார். இந்த அநியாயச் செயல் ஹுசேன் ஷர்க்கீயினுடைய கோபத்தைக் கிளறிவிட்டது. ராப்ரிக்கு அருகே கடுமையான போர் நடந்தது. ஹுசேன், போரில் தோல்வியுற்றார். அதையடுத்து ஏற்பட்ட சமாதான உடன்பாட்டின்படி, பஹ்லூல் கைப்பற்றிய பர்க்கானுக்கள்மீது தமக்கிருந்த உரிமையை, ஹுசேன் ஷர்க்கி விட்டுக் கொடுத்தார்.

கி.பி. 1479-ல் மீண்டும் போர் ஏற்பட்டது. சோனர் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில், ஹுசேன் மீண்டும் தோல்வியடைந்தார். பினவாங்கிச் சென்ற ஹுசேன் ஷர்க்கீயை ராப்ரிக்கு அருகே பஹ்லூல் மீண்டும் தோற்கடித்தார். யமுனையைக் கடந்து அவர் தப்பியோட முயற்சி செய்தபோது, அவருடைய அதிகாரிகள், மனைவிகள், குழந்தைகள் பலர் ஆற்றில் மூழ்கி இறந்தனர். குவாலியர் வழியாக அவர் ஜான்பூருக்குத் தப்பியோட முயன்றபோது, ஹத்கந்த் (Hathkant) என்னுமிடத்தில் அவர் இரஜபுத்திரர்களிடம் போரிட்டுத் தோல்வியடைந்தார். எனினும், அவர்களிடமிருந்து தப்பிக்கொண்டு அவர் குவாலியரை அடைந்தார். குவாலியரின் அரசர்

அவருக்குத் தக்க உதவியளித்துக் கல்பிவரை கூடவே சென்றார். இதற்கிடையில், பஹ்லூல் இதாவாவினை ஹுசேனுடைய சகோதரரிடமிருந்து கைப்பற்றி, அதனை முபாரக்கான் நூஹானியினுடைய மகனை இப்ராஹிம்கானிடம் ஒப்படைத்தார். பின்னர், பஹ்லூல் லோடி, கல்பிக்கு விரைந்து சென்று பாகேசரின் (Bogesar) அரசரான திரிலோக்சந்தினுடைய உதவியைப்பெற்று, ஹுசேன் ஷர்க்கீயுடன் போரிட்டு அவரை மீண்டும் தோற்கடித்தார். ஆகவே, ஹுசேன் ஷர்க்கீ, ஜான்பூருக்குச் செல்ல நேர்ந்தது. தப்பியோடிய பகைவரைப் பஹ்லூல் விடாது பின் தொடர்ந்து சென்று ஜான்பூரை அணுகினார். பகைவரிடமிருந்து தப்பிக்கொள்ள ஹுசேன் ஷர்க்கீ கன்னோசிக்குச் சென்றார். பஹ்லூலும் அவரைத் தொடர்ந்து சென்றார். அதனால், ஹுசேன் கன்னோசியை விட்டு செல்ல நேர்ந்தது. ராம் கங்கா நதிக்கரையில் அவரை வழி மறித்துப் பஹ்லூல் போரிடச் செய்தார். மீண்டும் ஹுசேன் ஷர்க்கீ பஹ்லூலிடம் தோல்வியுற்றார். ஹுசேனுடைய முதல் மனைவியான பீபி குன்ஸா பஹ்லூலிடம் சிக்குண்டார். ஆனால், பஹ்லூல் அவரை மிகக் கண்ணியமாக நடத்தி, மீண்டும் அவருடைய கணவரிடம் ஒப்படைத்து விட்டு டில்லி திரும்பினார்.

இனி, ஜான்பூரைக் கைப்பற்றி ஷர்க்கீ அரசினை முழுமையாக அழிக்கும் பணி மட்டுமே எஞ்சியிருந்தது. எனவே, அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டு, ஜான்பூர் நோக்கிப் பஹ்லூல் புறப்பட்டார். அதையறிந்த ஹுசேன் ஷர்க்கீ, பஹ்ரெய்ச்சிற்கு (Bahraich) ஓடினார். ஜான்பூர் எளிதாகப் பஹ்லூல் கைவசமாயிற்று. முபாரக்கான் நூஹானியை ஜான்பூரின் ஆளுநராக நியமித்துவிட்டுப் பஹ்லூல் டில்லி நோக்கித் திரும்பினார். அச் செய்தியை அறிந்த ஹுசேன் ஷர்க்கீ, தம்படையைத் திரட்டிக்கொண்டு, ஜான்பூர்மீது திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தினார். முபாரக்கான் நூஹானி, ஜான்பூரிலிருந்து பின் வாங்க நேர்ந்தது. இந்தச் சம்பவங்களை அறிந்த பஹ்லூல், மீண்டும் ஜான்பூருக்குப் படைகளை நடத்திச் சென்றார். அவரை எதிர்ப்பதால் யாதொரு பயனும் கிட்டாது என்று ஹுசேன் ஷர்க்கீ எண்ணியதால், அவர் பீகாருக்கு ஓடி விட்டார். இந்த முறை ஜான்பூரைப் பார்பக்ஷாவிடம் ஒப்படைத்து விட்டு டில்லிக்குத் திருப்பினார். இவ்வாறாக, ஜான்பூரை முழுமையாக வென்று, டில்லி அரசுடன் இணைத்து, டில்லி சுல்தானியத்தின் பெருமையை மீண்டும் நிலைநிறுத்தினார். இதற்காக அவர் ஏறக்குறைய 27 ஆண்டுகள் போர்புரிய வேண்டியதாயிற்று. சில சமயங்களில் வெற்றிச் செல்வி அவரைத் தழுவத் தயக்கம்

கொண்டாள். ஆயினும், மனந் தளராது போரிட்டு, இறுதியில் வெற்றி கண்டார். இஃது அவருடைய சாதனைகளுள் சிறந்த ஒன்றாகும்.

ஜான்பூரிலிருந்து அவர் திரும்பிச் செல்லும் வழியில், அவர் கல்பியைக் கைப்பற்றித் தமது பேரனிடம் ஒப்படைத்தார். பின்னர், தோல்பூருக்குச் சென்று, அதன் அரசரிடமிருந்து பொன்னையும் பொருளையும் பரிசாகப் பெற்றார். பரி (Bari) யினுடைய ஆளுநரான இக்பால்கானும் அவருக்கு அடிபணிந்தார்.

**ஏனைய போர்ச் செயல்கள்:** இதுவரை பஹ்லூல் லோடிக்கும் ஜான்பூர் மன்னருக்கும் இடையே ஏற்பட்ட போர்கள், அவற்றை யொட்டி பஹ்லூல் மேற்கொண்ட ஏனைய போர்ச்செயல்கள் ஆகியவற்றைப் பற்றிக் கவனித்தோம். இனி, அவருடைய மற்றப் போர்ச் செயல்களைப் பற்றியும் கவனிப்போம். அவற்றுள் ஒன்று, மூல்தானின்மீது நடத்திய படையெடுப்பாகும். பஹ்லூல் பட்டமெய்திய நாள் முதற்கொண்டு, மூல்தானில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டவேண்டும் என்று எண்ணமிட்டு வந்தார். ஜான்பூர் அரசருடன் அவர் மேற்கொள்ள வேண்டிய படையெடுப்புகளின் காரணமாக அவரது எண்ணம் வெகுநாள் நிறைவேறாதிருந்தது. மூல்தானை அப்போது ஆண்டுவந்த யூசுப் குரேஷி, தமக்கு நேரவிருந்த ஆபத்தைத் தடுக்கும்பொருட்டு அண்டையிலிருந்தவர்களுடன் நட்பை நாடினார். அவர்களுள் ராய் சேஹ்ரா (Sehra) என்ற லங்கா ஆப்கானியத் தலைவர் ஒருவராவர். அவர், தமது ஆதரவை மட்டுமன்றித் தமது மகளையும் யூசுப் குரேசிக்கு மணமுடித்து வைத்தார். இந் நிகழ்ச்சிக்குப்பிறகு, ராய் சேஹ்ரா தமது மகளைப் பார்க்கும் பொருட்டு அடிக்கடி மூல்தானுக்குத் தமது பரிவாரங்களுடன் வருவது வழக்கம். கி.பி. 1454ஆம் ஆண்டில் தமது படையுடன் சென்று மூல்தானைக் கைப்பற்றிக்கொண்டார். யூசுப் குரேஷி, டில்லிக்கு ஓடி பஹ்லூல் லோடியின் உதவியை நாடினார். ஜான்பூர் மன்னர், பஹ்லூல் லோடிக்கு அளித்துவந்த தொல்லைகளின் காரணமாக அவர் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள இயலாது போயிற்று. இறுதியில் மூல்தான்மீது அவர் படையெடுத்துச் சென்றார். மூல்தானை அவர் அடைவதற்குள் ஹுசேன் ஷர்க்கீ, டில்லி நோக்கிப் படையெடுத்து வரும் செய்தி அவருக்கு எட்டவே, அவர் உடனே டில்லிக்குத் திரும்பிவிட்டார்.

அவருடைய அடுத்த படையெடுப்பு உதயபூரின்மீது எடுத்த படையெடுப்பாகும். இதைப்பற்றி அகமது யாத்கர் மட்டுமே

நமக்கு முழு விவரங்களை அளிக்கின்றார். எனவே, இப் படையெடுப்பு நடத்தப்பட்டதா என்பதே சந்தேகமாக உள்ளது. அதே போன்று, அவருடைய சிந்துப் படையெடுப்புப் பற்றியும் ஐயம் எழுந்துள்ளது.

அவருடைய ஏனைய படையெடுப்புகளுள் முக்கியமான ஒன்று, குவாலியர் படையெடுப்பாகும். அதற்குக் காரணம், குவாலியர் அரசர் ஹுசேன் ஷர்க்கீக்கு உதவியதேயாகும். இப் படையெடுப்பு, 1486–1487-ல் நடந்தது. அப்போது புதிதாக முடிசூட்டிக்கொண்ட மான்சிங், 80 இலட்சம் டங்காக்களைக் கப்பம் கட்டுவதாகக் கூறி, பஹ்லூலுடன் போர் செய்வதைத் தடுத்துவிட்டார்.

அடுத்த முக்கியமான ஒரு படையெடுப்பு, மாளவப் படையெடுப்பாகும். அப்போது மாளவத்தைக் கியாஸ் உத்தீன் கல்ஜி என்பவர் ஆண்டுவந்தார். அவர் சிற்றின்பத்தில் மூழ்கிக் கிடந்தமையால், பஹ்லூலுவினுடைய பணி முதலில் எளிதாயிற்று. அப் படையெடுப்பின்போது அல்ஹன்பூர் அழிக்கப்பட்டது. இதையறிந்ததும் மாளவ மன்னர், தமது ஆளுகைக்குட்பட்டிருந்த சந்தேரி ஆளுநரைப் படையுடன் வந்து பஹ்லூலைத் தாக்குமாறு ஆணையிட்டார். ஆகவே, பஹ்லூல் டில்லிக்குத் திரும்பவேண்டியதாயிற்று. மாளவப்படை அவரை டில்லிவரை துரத்திச் சென்று, அவரிடம் பரிசுகளைப் பெற்றுத் திரும்பியது.

காஷ்மீர் விவகாரங்களிலும் பஹ்லூல் லோடி தலையிட்டார். அவருடைய ஆட்சிக் காலத்தில் காஷ்மீரத்தில் வாரிசுரிமைப் போர் நடந்துவந்தது. அப் போரில், பஹ்லூலுவினுடைய தூண்டுதலின் காரணமாகப் பஞ்சாப் ஆளுநர் தலையிட்டார். அதன் விளைவாகக் காஷ்மீரப் படைகள் பஞ்சாப்மீது படையெடுத்து வந்தன. பஞ்சாபின் ஆளுநரான தாதார்கான் (Tatar Khan) அவற்றைத் தோற்கடித்துச் சியால்கோட் என்னுமிடத்தைக் கைப்பற்றினார். அதன் பின்னர், தாதார்கான், தம் படையை ஸ்ரீநகருக்கு அனுப்பினார். ஆனால், அது தோற்கடிக்கப்பட்டது.

கி. பி. 1485ஆம் ஆண்டில் பஹ்லூல் தம்படைகளைத் தாதார்கானுக்கு எதிராக அனுப்பவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது அம்பாலாவில் ஏற்பட்ட போரில், தாதார்கான் தோல்வியுற்றுப் போர்க்களத்திலேயே மரணமடைந்தார்.

மதிப்பீடு: பஹ்லூல் நியாயமானவர்; தாராள மனப்பாங்குடையவர்; எளிமையானவர்; அன்புடையவர்; நேர்மை

யானவர்; கருணையுள்ளம் படைத்தவர்; மதப்பற்றுடையவர். ஆனால், மதவெறியர் அல்லர். இஸ்லாமிய சட்டதிட்டத்திற்குட் பட்டு நடப்பதில் அவருக்கு இணையானவரைக் காண்பது அரிது. நாள்தோறும் ஐந்துமுறை அவர் தொழுகை நடத்தி வந்தார். கற்றறிந்தோர்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவர்களோடு அளவளாவுவதில் மிக்க ஆர்வம் கொண்டிருந் தார். தரும சிந்தையுடையவர். தமது நண்பர்களிடம் சரள மாகப் பழகினார். அவர்களைவிடத் தாம் உயர்ந்தவர் என்ற எண்ணம் எப்போதுமே அவருக்கு ஏற்பட்டதில்லை. அவருடைய நண்பர்களில் எவரேனும் நோய்வாய்ப்பட நேரின், தாமே நேரில் சென்று, அவருக்கு வேண்டியதைச் செய்வார் என்று கூறப்படுகிறது[1]. வெளிப்பகட்டில் அவருக்குச் சிறிதும் ஆசை யில்லை. இடைக்கால அரசர்கள் போல, அவர் தம்மை உயர்ந்த ஆடைகள், ஆபரணங்கள் ஆகியவற்றைக்கொண்டு அலங்காரம் செய்து கொண்டதில்லை. தமக்கென அவர் சொத்துச் சேர்த்துக் கொண்டதில்லை. பணம் செலவு செய்வதில் அவர் மிகவும் சிக்கன மாக இருந்தார். பொதுப்பணத்தை வீணாகச் செலவிட அவர் அனுமதிக்கவில்லை. நகைச் சுவை ததும்ப அவர் பேசக்கூடிய வல்லமையையும் பெற்றிருந்தார்.

பஹ்லூல் ஒரு சிறந்த படைத்தலைவராக விளங்கினார். அவர் அரசராகப் பதவியேற்ற பிறகு, அவரை எவரும் வெல்ல வில்லை என்று வரலாற்றாசிரியரான அப்துல்லா கூறுகிறார்[2]. இந்த வகையான புகழ்மாலை சிறிது மிகையாகக் காணப்படினும் ஜான்பூருடன் அவர் நடத்திய போராட்டங்கள், அவருடைய போர்த்திறமையை மட்டுமன்றிச் சமயோசித புத்தியையும் தெளி வாக்குகின்றன. போரில் தோற்றவர்கள்மீது அவர் கடுமையாக நடந்துகொள்ளவில்லை. ஒருமுறை ஹுசேன் ஷர்க்கியினுடைய மனைவியை அவருடைய படைகள் கைது செய்தபோது, அவரை மிகக் கண்ணியத்துடன் நடத்தி, அவரை ஹுசேனிடம் அனுப்பி வைத்தார். தமது படைவீரர்களிடமும் அவர் அன்பாக நடந்து கொண்டார். அவர்களுடைய சேவையைத் தக்க முறையில் பாராட்டிப் பரிசளிப்பதில் அவர் எப்போதுமே பின்னடைந்த தில்லை: டில்லியை அவர் முதன்முதலில் கைப்பற்றியபோது, அங்கிருந்த செல்வத்தைத் தம் படைவீரர்களுக்குச் சமமாகப் பகிர்ந்தளித்தது மட்டுமன்றித் தம்மையும் அவர்களுள் ஒருவ ராகக் கருதி, ஒரு சாதாரண படைவீரருக்கு அளித்த தொகையை

1. K. S. Lal, op. cit, p. 160.

2. Tarikhl - Daudi., p- 12.

மட்டுமே தமக்கென வைத்துக்கொண்டார். இவ்வாருக, அவர் தம் படைவீரர்களுடைய பற்றையும் அன்பையும் பெற்ருர். போர்த்திறத்தில் சிறந்தவர்களையே அவர் தம் படையில் சேர்த்து வந்தார். ஆப்கானியர்களே சிறந்த வீரர்கள் என்பதில் அவருக்கு அசையா நம்பிக்கை ஏற்பட்டிருந்தமையாலும், துருக்கியர், இந்திய முஸ்லிம்கள் ஆகியோரிடம் அவருக்குப் போதிய நம்பிக்கை ஏற்படாமையாலும், அவர் ஆப்கானியத் தலைவர்களை இந்தியாவிற்கு வந்து ஆப்கானியப் பேரரசினுல் ஏற்படக்கூடிய நன்மைகளைப் பகிர்ந்துகொள்ளுமாறு வருந்தி அழைத்தார். அவருடைய அறைகூவலை ஏற்று இந்தியாவிற்குப் பல ஆப்கானியத் தலைவர்கள் வந்தனர்.

பஹ்லூல் சிறந்த போர் வீரராக மட்டுமன்றி, இந்திய ஆப்கானியப் பேரரசுக்கு அடிக்கல் நாட்டியவராகவும் விளங்கினுர். அவர் பட்டமெய்தியபோது, டில்லிப் பேரரசு டில்லி முதல் பாலம் வரை மட்டுமே பரவியிருந்தது. அவர் இறந்தபோது அது பஞ்சாப், உத்தரப் பிரதேசம் ஆகியவற்றை அடக்கிக்கொண்டிருந்தது. அவரது பேரரசு, மேற்கே பஞ்சாப் முதல் கிழக்கே பீகார் வரையிலும், தெற்கே தோல்பூர் வரையிலும், தென்மேற்கே அல்ஹறன்பூர் வரையிலும் பரவியிருந்தது. டில்லி, பதோன், பரன், சம்பல், ராப்ரி, கம்பில், பாடியாலி போன்ற முக்கியமான நகரங்கள் அதில் அடங்கியிருந்தன. இராஜஸ்தானின் ஒரு பகுதியும் அவருடைய ஆட்சிக்குட்படுத்தப்பட்டது. 87 ஆண்டுக் காலமாக நிலைத்திருந்த ஷர்க்கீ அரசை ஒழித்து, அதனை டில்லியுடன் இணைத்துத் தம் பெருமையை மேலும் பெருக்கினுர். குவாலியர், தோல்பூர், பரி, ஆகியவற்றின் அரசர்கள் அவருக்குக் கப்பங்கட்டி வந்தனர். அதிகாரப் போட்டிகள், தனியரசு அமைப்பதற்கான முயற்சிகள் நிறைந்த காலத்தில், இத்தகைய ஒரு பேரரசை நிறுவுவதென்பது எளிதான செயலன்று. அத்தகைய சூழ்நிலைகளுக்கிடையே அவ்வாறு நிறுவப்பட்ட பேரரசை 38 ஆண்டுகள் காப்பாற்றுவதென்பது அதனிலும் பெரிய காரியமன்ருே? அதுவே பஹ்லூல் லோடியின் சாதனைகளுள் மிகப் பெரியதாகும். ஒரு புதிய அரச குலத்தைத் தோற்றுவித்துத் தேய்ந்துகொண்டுவந்த டில்லி அரசரின் மதிப்பை மீண்டும் உயர்த்தி, இந்திய வரலாற்றிலே பஹ்லூல் லோடி நிலையான ஓர் இடத்தைப் பெற்றுவிட்டார்[1].

பஹ்லூல் லோடியைச் சிறந்த ஆட்சியாளர்கள் பட்டியலில் சேர்க்க இயலாது எனினும், அவரிடம் நிருவாகத் திறமையேயில்லை

1. Iswari Prasad, History of Medieval India, p. 484.

என்றும் கூற இயலாது. புதிய நிருவாகம் சார்ந்த நிறுவனங்களையோ சீர்திருத்தங்களையோ அவர் புகுத்தவில்லை. சையத்துகளுடைய ஆட்சிமுறையை அவர் அப்படியே பின்பற்றி வந்தார். ஆயினும், அவருடைய ஆட்சிமுறை சார்ந்த சில முக்கியமான அம்சங்களை இங்குக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. முதலாவதாக, டில்லி சுல்தானுடைய வல்லாட்சி முறையில், சில புதுமைகள் இவர் காலத்தில் புகுத்தப்பட்டன. அவற்றுள் முக்கியமானது, ஆப்கானிய இனக் குழுக்களுக்கிடையே நிலவி வந்த சமத்துவக் கொள்கையாகும். பஹ்லூல் லோடி தம்மை ஏனையவர்களைவிட மேலானவராகக் கருதவில்லை. அவர் சாப்பிடும்போது வாயிலில் காவல்காரர்களை நிறுத்தி வைப்பதில்லை. யார் வேண்டுமானாலும் அவருடன் உட்கார்ந்து உணவருந்த அனுமதிக்கப்பட்டனர். தம் அதிகாரிகளின் கூட்டங்கள் நடைபெறும்போதுகூட, அவர் அரியணையில் அமர்ந்ததில்லை. தமது அமீர்கள் நிற்பதற்கும் அவர் அனுமதித்ததில்லை. தர்பார் கூட்டங்களின்போது, அவர் ஒரு சிறிய விரிப்பின்மீது உட்காருவது வழக்கம். தமது அமீர்களுள் எவரேனும் தம்மீது அதிருப்தி கொள்ளத் தொடங்கினர் என்றறிய நேரின், பஹ்லூல் உடனே அவருடைய இல்லத்திற்குச் சென்று அவரிடம் மன்னிப்புக் கேட்பார். அதுமட்டுமன்றி, அரச பதவிக்கு அவர் அருகதை அற்றவர் என்று எந்த அமீரேனும் எண்ணுவாரேயானல், அதற்காக அவர் பதவியைத் துறக்கவும் தயாராக இருந்தார். சுருங்கக் கூறின், அவர் தம்மைச் சம அந்தஸ்துடையவர்களுள் முதலானவராகக் கருதினரேயொழிய, அனைவரினும் மேம்பட்டவராக அவர் தம்மைக் கருதவில்லை. இந்த மாதிரியான நடத்தை, திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதாகும் என்று வரலாற்றாசிரியர்கள் சிலர் கருதுகின்றனர். ஆப்கானியத் தலைவர்கள் ஒரு குறிப்பிட்ட நபரிடம் நிலையாகப் பற்றுறுதி கொள்வதில்லை. எனவே, பஹ்லூலினுடைய விரோதிகளை அவர்கள் எந்த நேரத்திலும் அணுகி, அவர்களை அரசராக்க அஞ்சமாட்டார்கள் என்று பஹ்லூல் எண்ணினர். ஆகவே, அவர் மேற்கண்ட வழிகளைப் பின்பற்றித் தம் பக்கத்தில் அவர்களை எப்போதும் சார்ந்திருக்குமாறு செய்துவந்தார். மேலும், ஷர்க்கி அரசருடன் அவர் பல ஆண்டுகள் போராட வேண்டியிருந்தது. அப்போராட்டத்தின்போது, அவர்களுடைய ஒத்துழைப்பும் ஆதரவும் அதிக அளவில் தேவைப்பட்டன. அவற்றைப் பெறுவதற்காகவே, மேற்கண்ட கொள்கையினை அவர் பின்பற்றி வந்தார் என்று கூறப்படுகிறது. பஹ்லூல் லோடியைச் சூழ்ந்திருந்த இன்னல்களிலிருந்து அவர் விடுபட, அக்கொள்கை பேருதவியாக இருந்தது என்றாலும், நாளடைவில்

[1] K. S. Lal, op'cit., p. 159.

அது சுல்தானியத்தைப் பலவீனமடையச் செய்துவிட்டது என்பதில், மாறுபட்ட கருத்து எழவாய்ப்பில்லை. அக் கொள்கையின் விளைவாகப் பிரபுக்களின் கை ஓங்கியது. சுல்தானின் பலம் குறைந்து விட்டது.

பஹ்லூல் லோடியின் காலத்தில், அரசு, ஆப்கானியர்களின் கைகளிலே இருந்தது. ஆப்கானியர் அல்லாதாருக்கு அரசாங்கத்தில் இடமில்லை. டில்லி சுல்தான், மக்களுடைய சுல்தானாகச் செயலாற்றவில்லை. ஆப்கானியர்களின் அரசராகவே அவர் செயலாற்றி வந்தார். இது மற்றொரு புதுமையாகும்.

நியாயம் வழங்குவதில் பஹ்லூல் பாரபட்சமின்றி நடந்து கொண்டார். தம் மக்களுடைய மனுக்களைத் தாமே கேட்டு ஆவன செய்தார், நியாயம் வழங்குவதில் அவர் காலதாமதம் செய்ததில்லை. பஹ்லூல் லோடியை 'அறிவும் இரக்கமும் ஒருங்கே பெற்ற, அடக்கமான, நீதிவழுவாத மன்னர்' என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறி அவருடைய வரலாற்றை முடிக்கலாம்.

## சுல்தான் சிக்கந்தர் லோடி. (1489-1517)

இதாவா படையெடுப்பை முடித்துக்கொண்டு, டில்லிக்குத் திரும்பும் வழியில், தற்போது மிலாலி என்று வழங்கப்படும் இடத்தில், பஹ்லூல் திடீரென நோய்வாய்ப்பட்டு 1489ஆம் ஆண்டு, ஜுலைத் திங்கள் உயிர் நீத்தார். அவருடைய திடீர் மறைவு, பஹ்லூலினுடைய பிள்ளைகளிடையே வாரிசுரிமைப் போராட்டத்தைத் தோற்றுவித்தது, பஹ்லூலுக்கு ஒன்பது பிள்ளைகளிருந்தனர். அவருடைய மூத்த மகனை குவாஜா பாயேஸித் (Khuaja Bayezid) தந்தை இறப்பதற்கு முன்னரே காலமானார். அவருடைய மகன் ஆஜாம் ஹுமாயூன் ஆவார். பஹ்லூலினுடைய ஏனைய பிள்ளைகளுள் குறிப்பிடத் தக்கவர்கள் நைஜாம்கான், பார்பக்ஷா, ஆலம்கான், பதேகான் என்பவராவர். பஞ்சாப், மூல்தான் ஆகிய இடங்களில் ஏற்பட்ட கலகங்களைத் திறம்பட ஒடுக்கிய காரணத்தால், பஹ்லூலுக்கு நைஜாம் கான்மீது பற்று ஏற்பட்டது. அதன் காரணமாகத் தாம் குவாலியர் மீது படையெடுத்துச் சென்றபோது, நைஜாம் கானிடம் டில்லியின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துவிட்டுச் சென்றார். அதுமட்டுமன்றித் தமக்குப் பின் நைஜாம் கானே பட்டத்திற்குரியவராவார் என்றும் அறிவித்தார். ஆனால், பஹ்லூல் இறக்கும் தருவாயில் இருந்தபோது, அவருடைய

மனத்தை ஆப்கானிய அமீர்கள் மாற்றி, ஆஜம் ஹுமாயூனைப் பட்டத்திற்குரியவராகத் தேர்ந்தெடுக்கச் செய்தனர். இந்த மாற்றத்தை, நைஜாம்கானுக்கு அறிவிப்பதற்காகப் பஹ்லூல், அவரை டில்லியிலிருந்து தமதிருப்பிடத்திற்கு வருமாறு அழைத்தார். அவ்வழைப்பையேற்றுப் பஹ்லூலிடம் செல்வதால், தமக்கு ஏதேனும் ஆபத்து விளையக்கூடும் என்று அஞ்சி, நைஜாம்கான் டில்லியைவிட்டுப் புறப்படுவதை வேண்டுமென்றே தாமதம் செய்தார். அதற்குள்ளாகப் பஹ்லூல் இறந்துவிட்ட செய்தி, டில்லிக்கு எட்டியது.

பஹ்லூல் இறந்த உடனே, அவருடன் பாசறையில் இருந்த பிரபுக்கள் ஒன்றுகூடி, அடுத்த சுல்தான் யாராக இருத்தல் வேண்டும் என்ற பிரச்சினைக்கு முடிவுகாண முற்பட்டனர். ஒரு சிலர், ஆஜம் ஹுமாயூனை ஆதரித்தனர். வேறு சிலர், பார்பக்ஷாவை ஆதரித்தார்கள். நைஜாம்கானுடைய தாயார், தமது மகனுடைய உரிமையை நிலைநாட்ட திரைமறைவிலிருந்து கொண்டு வாதாடினார். அந்த நேரத்தில் நைஜாம்கானின் நெருங்கிய உறவினரான ஈசாகான் லோடி, 'ஒரு பொற்கொல்லருடைய மகளின் மகனை நைஜாம்கானை அரியணையில் வீற்றிருக்கச் செய்ய இயலாது' என்று கூறினார். காலஞ்சென்ற சுல்தானுடைய விதவையை இக்கூரிய வார்த்தைகளைக் கொண்டு தாக்குவதை ஆப்கானிய அமீர்கள் விரும்பவில்லை. அவர்களுள் கான்-இ-கானன் ஒருவராவார். எனவே, அவர் ஈசாகானை வாய்க்கு வந்தபடி ஏசிவிட்டு, நைஜாம்கானுக்குத் தம்முடைய ஆதரவை அளிப்பதென முடிவு செய்தார். பஹ்லூலினுடைய பிணத்தை எடுத்துக்கொண்டு, தம்முடைய ஆட்களுடன் கான்-இ-கானன் ஜலாலிக்குப் புறப்பட்டார். அவருடைய அழைப்பினை ஏற்று நைஜாம்கான் டில்லியை விட்டு நீங்கி, ஜலாலி வந்தடைந்தார். அவர் ஜலாலி வந்ததும் அவருடைய எதிரிகள் கலைந்து விட்டனர். தமது தந்தையின் சடலத்தை டில்லியில், புதைப்பதற்காக அனுப்பிவிட்டு, 1489ஆம் ஆண்டு, ஜூலை 17ஆம் நாள் கலீநதி (Kali Nadi) கரையில் அமைக்கப்பட்டிருந்த பிரூஸ் ஷாவினுடைய அரண்மனையில், சிக்கந்தர் ஷா என்ற பட்டத்துடன் மணி மகுடத்தைச் சூட்டிக்கொண்டார்.

பட்டமெய்தியதும், அவருடைய பதவிக்கு ஊறு விளைவிக்கக்கூடிய எதிரிகளை அடக்குவதில் தமது கவனத்தைச் செலுத்தினார். அவர் முதலில் தமது இளைய சகோதரரான ஆலம்கான் லோடியை அடக்க ராப்ரி நோக்கிப் புறப்பட்டார். ராப்ரி, சந்தாவார் ஆகிய இரு கோட்டைகளும் முற்றுகைக்கு

உட்படுத்தப்பட்டன. முற்றுகையைச் சமாளிக்க இயலாது, ஆலம்கான் பாதுகாப்பைத் தேடிப் பாடியாலிக்குச் சென்று, ஈசாகானிடம் அடைக்கலம் புகுந்தார். எனவே, ராப்ரி எளிதில் சிக்கந்தர் கைவசமாயிற்று. அக் கோட்டையிளை ஆளும் பொறுப்பைக் கான்-இ-கானுனிடம் ஒப்படைத்துவிட்டுச் சிக்கந்தர், இதாவாவிற்குச் சென்று அங்கு ஏழு மாதங்கள் தங்கியிருந்தார். இறுதியில் ஆலம் கான் சிக்கந்தரிடம் சரணடைந்தார். ஆலம் கானை மன்னித்து, இதாவாவை அவரிடம் ஒப்படைத்து விட்டுச் சிக்கந்தர், பாடியாலி, ஹம்ஸா பாத் ஆகிய இடங்களை நோக்கிப் புறப்பட்டார். ஈசாகான், இறுதிவரை போராடிப் போர்க்களத்தில் ஏற்பட்ட படுகாயத்தின் விளைவாக உயிரிழந்தார். பாடியாலினுடைய ஆட்சிப் பொறுப்பு, ராய் கணேஷ் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ராய் கணேஷ், இதுகாறும் பார்பக் ஷாவை ஆதரித்து வந்தார். பாடியாலியை அவரிடம் ஒப்படைத்ததன் விளைவாகத் தமது பகைவர்களுள் ஒருவரான, பார்பக் ஷாவின் ஆதரவாளர் ஒருவரைத் தம் பக்கத்தில் இழுத்துக்கொண்டது, அவருடைய அரசியல் திறத்தினை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளது.

அடுத்துச் சிக்கந்தர், 1486ஆம் ஆண்டிலேயே தமது படைகளை பார்பக் ஷாவிற்கு எதிராக நடத்திச் சென்றார். பார்பக், ஜான்பூரில் தமது ஆட்சியை நிறுவியிருந்தார். குத்பாவைத் தமது பெயரிலேயே வாசித்து வரச் செய்தார். நாணயங்களும் அவருடைய பெயரிலேயே அச்சிடப்பட்டு வந்தன. ஆயினும், அவர் பஹ்லூலுடைய மேலாதிக்க உரிமையை எப்போதுமே நிராகரித்ததில்லை. சிக்கந்தருக்குப் பார்பக்குடன் போர் புரிய விருப்பமில்லை. எனவே, முதலில் இஸ்மாயில் கான் நூஹானியைத் தூது அனுப்பி வைத்தார். பார்பக் பெயருடன் சிக்கந்தருடைய பெயரையும் குத்பா, நாணயம் ஆகியவற்றில் சேர்த்துவிட பார்பக் விருப்பம் தெரிவித்தால், தாம் அவர்மீது போர் செய்வதை நிறுத்தி விடுவதாகச் சொல்லி அனுப்பினார். பார்பக் அதற்கிசைய மறுத்து விடவே, வேறு வழியின்றிச் சிக்கந்தர் போருக்காயத்தமானார். கன்னோஜிக்கருகே இரு படைகளும் மோதிக்கொண்டன. பார்பக்ஷா போரில் தோல்வியுற்றார். அவருடைய படைத்தலைவரான ஷெயிக் முகமது குர்பான் (காலா பஹார்) பகைவரிடம் சிக்கினார். அவரை மிகவும் மரியாதையுடன் நடத்தி, அவரைத் தம் பக்கத்தில் சிக்கந்தர் சேர்த்துக் கொண்டார். அது மட்டுமன்றிக் காலா பஹார், பார்பக்குடன் போர் செய்யவும் முடிவு செய்தார். இந்தச்

சூழ்நிலையில், பார்பக்குவிற்குப் போர்க்களத்திலிருந்து ஓடுவதைத் தவிர, வேறு வழி புலப்படவில்லை. எனவே, அவர் பதோனுக்கு ஓடினார். சிக்கந்தர் அவரை விடாது பின்தொடர்ந்து சென்றார். பார்பக், இறுதியில் சரணடைந்தார். பார்பக்கை மன்னித்து, அவரை மீண்டும் ஜான்பூருக்கு அரசராக்கினார். இந்த நடவடிக்கையின் வாயிலாகப் பார்பக்கினுடைய அன்பைக் கவர்ந்ததோடு, ஹுசேன் ஷர்க்கீ மீண்டும் ஜான்பூரைக் கைப்பற்றுவதிலிருந்து தடை செய்தார். அதே நேரத்தில், ஜான்பூரின் பர்கானுக்களைத் தமது நம்பிக்கைக்குரிய பிரபுக்களிடம் ஒப்படைத்துப் பார்பக் மீண்டும் கலகம் செய்யாதவாறு தடுத்தார்.

தமது ஆட்சியை எதிர்த்த நெருங்கிய உறவினர்களுள், மேலும் ஒடுக்கப்படாது எஞ்சியிருந்தவர், ஆஜம் ஹுமாயூன் லோடியாவார். சிக்கந்தர் அவரையும் அடக்குவதென முடிவு கட்டினார். எனவே, ஜான்பூரிலிருந்து நேராகக் கல்பிக்குச் சென்றார். அவரைத் தோற்கடித்துவிட்டுக் கல்பியை மமூத்கான் லோடியிடம் ஒப்படைத்தார். ஏனைய விரோதிகளை அடக்கிய பின்னர், அவர்களை மீண்டும் அவரவர் ஆட்சிப் பகுதிகளை ஆண்டு வருவதற்கு அனுமதித்து, அவர்களுடைய அன்பைப் பெறவும் அவர் முயன்றார் என்று முன்னர்க் கண்டோம். அந்தவகையான கொள்கையை ஆஜம் ஹுமாயூனிடம் அவர் கையாளவில்லை. கல்பியை ஆண்டுவரத்தக்க ஆற்றல் ஆஜம் ஹுமாயூனிடம் காணப்படவில்லை போலும்!

கல்பியில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய பின்னர், சிக்கந்தர், தாதர்கான் லோடியின்மீது தாக்குதல் நடத்தினார். தாதர்கான், அப்போது ஜைத்ராவின் ஆளுநர்ப் பொறுப்பினை ஏற்றிருந்தார். தாதர்கான் அவருக்கு அடிபணிந்து, அவருடன் போர் செய்யவேண்டிய கட்டாயத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார். அங்கிருந்து சிக்கந்தர், குவாலியருக்குச் சென்று, ராஜா மான்சிங்கிற்குக் கௌரவ ஆடையை அனுப்பிவைத்தார். சிக்கந்தரின் நோக்கத்தைப் புரிந்துகொண்ட மான்சிங், தமது நட்பைக் காட்டும்வகையில், தமது மைந்தனைச் சுல்தானிடம் அனுப்பி, அவருக்குச் சேவை செய்துவரும்படி பணித்தார். அதன்பின்னர், சிக்கந்தர் பயானாவிற்குச் சென்றார். பதினைந்காம் நூற்றாண்டின் இறுதியில் பயானா சுதந்திரம் பெற்ற நகராக விளங்கி வந்தது. அதனை, அப்போது சுல்தான் அஷ்ரப் என்பவர் ஆண்டுவந்தார். அவருடைய தந்தையான சுல்தான் அகமது ஜில்வானி, ஜான்பூருடைய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டிருந்தார். எனவே, ஜான்பூரை முழுமையாக அடக்கவேண்டு

மெனில், அதனுடைய அதிகாரத்திற்குட்பட்டிருந்த பயானு போன்ற அரசுகளை வீழ்த்தவேண்டிய நிலைமை லோடி அரசர்களுக்கு ஏற்பட்டது. அதுவே பயானு படையெடுப்பிற்கு முக்கியக் காரணமாகும். பயானுவைத் தம்மிடம் ஒப்படைத்து விட்டால், அஷ்ராப்பிற்கு ஜலேசர், சந்த்வார் போன்ற இடங்களைத் தருவதாகச் சிக்கந்தர் கூறினர். முதலில் அஷ்ராப் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டு, கோட்டைச் சாவிகளைச் சிக்கந்தரிடம் ஒப்படைக்கத் தம்முடன் சிக்கந்தரின் பிரபுக்களுள் ஒருவரை அழைத்துச் சென்றார். கோட்டைக்குச் சென்றதும் அவருடைய மனம் மாறிவிட்டது. கோட்டைக் கதவுகளை மூடிக்கொண்டு சிக்கந்தரை எதிர்க்கலானார். இதற்கிடையில், சிக்கந்தர் ஆக்ராவைக் கைப்பற்றுதற்குச் சென்றுவிட்டார். அஷ்ராப்பின் எதிர்பாராத நடத்தையைப்பற்றிக் கேள்வியுற்றதும் சிக்கந்தர், ஆக்ராவிலிருந்து பயானுவிற்கு விரைந்து சென்றார். கி.பி. 1492-ல் பயானு சிக்கந்தரின் கைவசமாயிற்று. அதனைக் கான்-இ-கானன் பொறுப்பில் விட்டுவிட்டுச் சுல்தான் சிக்கந்தர் டில்லி திரும்பினர். மேற்கூறிய போர் நடவடிக்கைகளின் விளைவாகச் சிக்கந்தர் ஷா இந்துஸ்தானத்தின் தன்னிகரற்ற தலைவரானர்.

டில்லி திரும்பிய ஒரு மாதத்திற்குள்ளாக, அவர் மீண்டும் போர்த்தொழிலை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. ஹுசேன் ஷர்க்கியின் தூண்டுதலின் பேரில், பக்கோடி (Backgotis) என்ற இராஜபுத்திர இனத்தவர், தங்களுடைய தலைவரான ஜுகோவினுடைய தலைமையின்கீழ்க் கலகம் செய்யத் தொடங்கினர்கள். 100,000 படை வீரர்களைத் திரட்டிக்கொண்டு ஜுகோ, முதலில் காராவின் ஆளுநரான முபாரக்கானைக் காராவிலிருந்து துரத்திவிட்டு, அவருடைய சகோதரரான ஷெர்கானைக் கொன்றுவிட்டனர். முபாரக் கான் தப்பியோட முயன்றபோது, பக்கோடிகளுடன் சேர்ந்துகொண்ட ரேவா நாட்டு அரசரான ராஜா பேத் (Bhed), முபாரக்கைக் கைது செய்து சிறையிலடைத்தார். நிலைமை கட்டுக்கடங்காமற் போகவே பார்பக்ஷா, தரியாபாத்திலிருந்த காலா பஹாரிடம் பாதுகாப்பு நாடிச் சென்று விட்டார். இந்தச் செய்திகளைக் கேட்டதும் சிக்கந்தர், டில்லியை விட்டுக் கிழக்கு நோக்கி வேகமாகப் படைநடத்திச் சென்று, ஒரு வாரத்திற்குள் காராவிற்கு அருகேயுள்ள தல்மோ (Dalmau) என்னுமிடத்தை அடைந்தார். அங்குப் பார்பக்ஷா அவருடன் சேர்ந்துகொண்டார். சிக்கந்தரின் படை வருகையை அறிந்ததும், ராஜா பேத், முபாரக் கானை விடுதலை செய்துவிட்டுத் தம் நாடு திரும்பிவிட்டார். விடுவிக்கப்பட்ட முபாரக், நேராகச்

சிக்கந்தரிடம் சென்று அவருடைய கைகளைப் பலப்படுத்தினர். ஜுகாவினுடைய படைகளைத் தாக்க சிக்கந்தர் விரைந்தார். கோமதி ஆற்றங்கரையில் நடைபெற்ற போரில், பக்கோடிகள் தோற்கடிக்கப்பட்டனர். ஜுகா போர்க்களத்திலிருந்து தப்பியோடிச் சோந்த் (Chaund) கோட்டையிலிருந்த ஹுசேன் ஷர்க்கியிடம் புகலிடம் நாடினர்.

இஸ்லாமிய மதத்தில் பற்றுக்கொண்டிராத இராஜபுத்திரர்களை ஆதரிப்பதற்குப் பதிலாகத் தம்மோடு சேர்ந்துகொண்டு அவர்களை அழித்துவிடவேண்டும் என்று ஹுசேன் ஷர்க்கியைச் சிக்கந்தர் வேண்டினர். ஆனால், ஹுசேன் அதற்கிணங்க மறுத்துவிட்டார். எனவே, ஹுசேனுடன் போர்புரிவதைத் தவிர, சிக்கந்தருக்கு வேறுவழி புலப்படவில்லை. கத்கர் (Katgarh) என்னுமிடத்தில் போர் நடந்தது. ஹுசேன் போரில் தோற்றுப் பீகாருக்கு ஓடிவிட்டார். அதன்பின்னர், சிக்கந்தர், ஜான்பூருக்குச் சென்று மீண்டும் பார்பக் ஷாவை அதன் ஆளுநராக நியமித்தார். ஆனல் பார்பக்கினுடைய ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த ஜமீன்தார்கள் அவரைப் பதவியிலிருந்து விரைவில் துரத்திவிட்டனர். அச்செய்தியை அறிந்ததும் சிக்கந்தர், காலா பஹாரையும் ஆஜம் ஹுமாயூனையும் ஜான்பூருக்கு அனுப்பினர். இந்தமுறை முபாரக் கான், முஜிகாயில் என்பவரிடத்தில் ஜான்பூரை ஆளும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. பார்பக் சிறையிலடைக்கப் பட்டார். இதற்கிடையில் சுல்தான் சிக்கந்தர், சூனருக்குச் சென்றார். அங்கு ஹுசேன் ஷர்க்கியினுடைய ஆட்கள் மிகக் கடுமையாக எதிர்த்தமையால், அதனை விடுத்துப் பாகேளா (படா) நாட்டிற்குச் சென்றார். பாகேளா அரசர், சிக்கந்தருக்கு அடிபணிந்துவிடும் நோக்குடன் அவரைக் கன்தாத் (Kantat) என்னுமிடத்தில் சந்தித்தார். தம்மை மன்னிக்கமாட்டார் என்ற எண்ணம் பாகேளா அரசருக்கு ஏற்பட்டமையால், இரவோடு இரவாக அவர் ரேவாவிற்கு ஓடிவிட்டார். எனவே, சிக்கந்தர் மிக்க கோபமடைந்து, ரேவாவை நோக்கிப் படை நடத்திச் சென்றார். பாகேளா இளவரசரான பீர்சிங்கைத் தோற்கடித்துவிட்டுப் பாகேளா அரசரைப் பின்தொடர்ந்தார். தப்பியோட முயன்ற பாகேளா அரசர் வழியில் உயிர்நீத்தார். சிக்கந்தர். மேலும் போர் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுவதை நிறுத்திவிட்டுக் காரா, தல்மோ, சம்பல் வழியாக டில்லி திரும்பினர்.

கி.பி. 1494–95ஆம் ஆண்டில் சிக்கந்தர் லோடி, மீண்டும் பாகேளா அரசருடன் போர்புரிவதற்கான ஏற்பாடுகளை மேற்

கொள்ளலானார். கரன் கடி (Kharan ghati) என்னுமிடத்தில் பாகேளா மன்னரான பேத்தினுடைய (Bhed) மகனை வஹாரராய தேவா என்பவரைச் சிக்கந்தர் தோற்கடித்தார். அதன் விளைவாகப் பாகேளர்கள் தங்களுடைய தலைநகரை விட்டுச் சர்குஜா நோக்கி ஓடவேண்டியதாயிற்று. பேத்தும், வஹாரராயரும் வழியில் இறந்துவிட்டனர். எனவே, அவர்களைத் துரத்திச் செல்லுவதை நிறுத்திவிட்டுச் சிக்கந்தர், பந்துகருக்குத் (Bandugarh) திரும்பினார். போதிய உணவுப் பொருள்கள் இல்லாமையாலும், கொள்ளை நோயினாலும் சிக்கந்தருடைய படைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. எனவே, சிக்கந்தர் தம் தலைநகர் நோக்கிப் பின்வாங்க நேர்ந்தது. இந்த நிலைமையைப் பேத்தினுடைய மகனை லட்சுமிசந்த், தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலானார். சிக்கந்தருக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களை ஹுசேனுக்கு அறிவித்து, அவர் உடனடியாகச் சிக்கந்தரைத் தாக்கினால் வெற்றி கிடைப்பது உறுதி என்ற செய்தியை அனுப்பிவைத்தார். அச் செய்தியை அறிந்ததும், ஹுசேன் படையுடன் புறப்பட்டுக் காசிக்கு அருகே வந்து சேர்ந்தார். அதுமட்டுமன்றி, பேத்துக்குப் பின்னர் பட்டா நாட்டிற்கு அதிபதியான சாலிவாகனரைத் தமக்கு உதவும்படி ஹுசேன் கேட்டுக் கொண்டார். ஆனால், அதற்குள்ளாகவே சிக்கந்தர், சாலிவாகனரைத் தம் பக்கத்தில் சேர்த்துக்கொண்டார். காசிக்கருகே நடைபெற்ற போரில், ஹுசேன் ஷர்க்கீ தோல்வியுற்றார். பீகார் நோக்கி ஓடிய ஹுசேனைச் சிக்கந்தர் விடாது பின்தொடர்ந்து சென்று, பீகாரிலிருந்து விரட்டியடித்தார். பீகாரிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட ஹுசேன், கோல்காங்கிற்குச் சென்றார். அப்போது கோல்காங் வங்காள அரசருடைய அதிகாரத்தின்கீழ் இருந்துவந்தது. பீகாரில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய பின்னர், சிக்கந்தர், தர்வேஷ்பூருக்குச் சென்றார். அங்குச் சாரன், திர்ஹுத் ஆகியவற்றின் தலைவர்கள் சிக்கந்தருக்கு அடிபணிந்து நடக்க இசைவளித்தனர். பின்னர் சிக்கந்தர், கோல்காங் நோக்கிப் புறப்பட்டார். அப்போது வங்காளத்தை, அலாவுத்தீன் ஆண்டுவந்தார். சிக்கந்தரின் படைகளின் நடமாட்டத்தைக் கண்காணித்து வரும்பொருட்டு அலாவுத்தீன், தம்முடைய மகனை தனியால் (Daniyal) என்பவரை அனுப்பிவைத்தார். தனியாலினுடைய படைகளும் சிக்கந்தருடைய படைகளும் பர் (Barh) என்னுமிடத்தில் மோதிக்கொண்டன. இறுதியில் இருவரும் சமாதானம் செய்துகொண்டனர். அதன்படி 'ஹுசேன் ஷர்க்கீக்குப் புகலிடம் அளிப்பதில்லை' என்று அலாவுத்தீன் வாக்களித்தார். 'ஒருவருடைய நாட்டை மற்றவர் கைப்பற்ற முனைவதில்லை,' என்றும் இருவரும் உறுதி கூறினார்கள்.

பீகார், திர்ஹூத், சாரன் ஆகிய பகுதிகளிலும், புதிதாகச் சிக்கந்தர் வென்ற பகுதிகளிலும் சிக்கந்தருடைய அதிகாரத்தை நிலைநாட்ட அலாவுத்தீன் ஒப்புதல் தெரிவித்தார்.

கி.பி. 1498-ல் பாகேளர் நாட்டின்மீது அவர் மீண்டும் படையெடுத்தார். லோடி ஆட்சிப் பகுதிகளைத் தாக்குமாறு, பாகேளா அரசர் ஹுசேன் ஷர்க்கியைக் கேட்டுக்கொண்டதாகச் சிக்கந்தருக்குச் செய்தி கிடைத்தது[1]. அதுமட்டுமன்றிப் பாகேளர்கள் சிக்கந்தருடன் திருமண உறவு கொள்ள மறுத்து விட்டனர்[2]. மேலும், தொடக்கத்திலிருந்தே அந் நாட்டை வெல்ல வேண்டுமென்ற ஆவல், சிக்கந்தருக்கு ஏற்பட்டிருந்தது[3]. படையெடுப்பின்போது பந்தூகர் முற்றுகையிடப்பட்டது. பந்தூகருக்குப் போகும் வழியில் சிக்கந்தருடைய படைகள் வழக்கம் போல் நாசவேலையில் ஈடுபட்டன. எனவே, அவற்றிற்குப் போதுமான உணவுப் பொருள்களைப் பெற வழியில்லாது போயிற்று. இறுதியில் பந்தூகரைக் கைப்பற்றுமலேயே சிக்கந்தர் திரும்பினர். டில்லிக்குப் போவதற்குப் பதிலாக, அவர் முதலில் ஜான்பூருக்குச் சென்று, அங்கு நிதி நிருவாக அமைப்பினைத் திருத்தியமைத்துவிட்டுச் சம்பல் சென்றார். சம்பலில் நான்கு ஆண்டுகள் தங்கியிருந்தார். அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு, நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்த 22 பிரபுக்கள் ஒன்றுசேர்ந்து, சிக்கந்தரை அரியணையிலிருந்து அகற்றிவிட்டு, பத்கானைச் சுல்தானாக முடிசூட்டுவதற்கு முயன்றனர். சதித்திட்டம் அம்பலமாகிவிட்டது. சதிகாரர்களுள் சிலர் கொல்லப்பட்டனர். மற்றும் சிலர், குவாலியர் வழியாக குஜராத்திற்கு ஓடிவிட்டனர். கி.பி. 1500-ல் ஹுசேன் ஷர்க்கீ இறந்துவிட்ட செய்தி சிக்கந்தருக்கு மன நிம்மதியை அளித்தது. கிழக்குப் பகுதியில் அவருக்கு ஏற்பட இருந்த ஆபத்து முற்றிலும் மறைந்துவிட்டது. எனவே, அவர் தம் கவனத்தை மேற்குப் பகுதியில் திருப்பலானார். அதன் விளைவாக, அவருக்கும் குவாலியர் மன்னருக்கும் இடையே போர் ஏற்பட்டது. அப்போது குவாலியரை மான்சிங் என்பவர் ஆண்டு வந்தார். அவர் போர்க்கலையில் மட்டுமன்றி, நிருவாகத்திலும், சிறந்து விளங்கினர். சமயப்பொறை அவரிடம் அதிகமாகக் காணப்பட்டிருந்தது. இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு சாராரையும் வேறுபாடின்றி நடத்தி, இரு இனத்தாரின் அன்பையும் ஆதரவையும் பெற்றிருந்தார். சுல்தான் சிக்கந்தரால் நாடு கடத்தப்பட்ட, சிக்கந்தரை வீழ்த்த முனைந்த சதிகாரப் பிரபுக்களுக்கு

[1] ACHI, p. 694

[2] Dr. K. S. Lal. Twilight of the Sultanate, p. 172

[3] Ibid

அவர் புகலிடம் அளித்து, சிக்கந்தரின் பகைமையைத் தேடிக் கொண்டார். தம்முடைய செய்கை, சிக்கந்தரின் கோபத்தைக் கிளறக் காரணமாய் இருந்தது என்பதை அறிந்தவுடன், தக்க பரிசுகளைச் சுல்தான் சிக்கந்தருக்கு அனுப்பி வைத்து, அவரைச் சமாதானம் செய்துகொள்ள முற்பட்டார். பரிசுகளைத் திருப்பி யடித்துவிட்டுச் சிக்கந்தர் போருக்கு ஆயத்தமானார். சிக்கந்த ருடைய வீழ்ச்சிக்காகச் சதித்திட்டம் தீட்டியவர்களுக்குப் புகலிடம் அளித்ததாலேயே போர் ஏற்பட்டது என்று நாம் கூற இயலாது. சிக்கந்தரின் நாடு பிடிக்கும் கொள்கையே முக்கியக் காரணமாக இருத்தல் வேண்டும்[1]. பீகார் முதல் பயானாவரையி லுள்ள பகுதிகளைத் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்த பின்னர். குவாலியரைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் சிக்கந்தர் மனத்தில் உதித்தது இயற்கையேயாகும்.

குவாலியர் மீதான படையெடுப்பின் முதற் கட்டமாகச் சுல்தான் சிக்கந்தர் தோல்பூரைத் தாக்கினார். தோல்பூர் குவா லியரின் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதிகளுள் ஒன்றாகும். அது குவாலியருக்கு வடமேற்கில் 37 மைல் தூரத்திலுள்ளது. அதனை அப்போது விநாயக தேவா என்பவர் ஆண்டு வந்தார். பயனாவின் ஆளுநரான இமத்-உல்-முல்க்கிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கலகத்திற்குத் தோல்பூர் அரசர் உதவியளித்ததாகவும், அது தோல்பூர் படையெடுப்பிற்கு ஒரு காரணம் என்றும் கூறப்படு கிறது[2]. தோல்பூரை வெல்ல சிக்கந்தர் மும்முனைத் தாக்குத லொன்றினுக்கு ஏற்பாடு செய்தார். மேவாத்திலிருந்து ஆலம் கானும், ராப்ரியிலிருந்து கான்-இ கானானும், டில்லியிலிருந்து கவாஸ்கானும் ஒரே சமயத்தில் தம்படைகளுடன் தோல்பூரில் சந்திக்க வேண்டுமென்று சிக்கந்தர் கட்டளையிட்டார். விநாயக தேவா வீரத்துடன் போரிட்டுப் பகைவர்களுக்குப், பலத்த சேதத்தை உண்டாக்கினார். அதையறிந்ததும் சிக்கந்தர், தாமே தோல்பூருக்கு விரைந்து சென்றார். அவருடைய வருகையை அறிந் ததும் விநாயக தேவா, தம்முடைய தைரியத்தை இழந்து குவாலி யருக்கு ஓடிவிட்டார். தோல்பூரும் அதைச் சுற்றி 14 மைல் தூரத்திலுள்ள இடங்களும் சூறையிடப்பட்டன. அங்கிருந்த கோயில்கள் பல இடிக்கப்பட்டன மசூதிகள் பல அங்கு எழுப்பப் பட்டன. தோல்பூரை ஆதம்கான் லோடியின் ஆட்சிப் பொறுப் பில் விட்டுவிட்டுச் சிக்கந்தர் குவாலியருக்குச் சென்றார். போகும் வழியில் ஆசி (Asi) நதிக்கரையில் அவர் தமது பாசறையை அமைத்

1 Ibid, p. 174

2 ACHI, p. 695

தார். அப்போது ஏற்பட்ட கொள்ளை நோயின் காரணமாக, அவருடைய படையின் எண்ணிக்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு, இராஜா மான்சிங், சிக்கந்தருடன் சமாதானம் செய்துகொள்ள முற்பட்டார். தமது மகனை விக்கிரமாதித்தியனைத் தக்க பரிசுகளுடன் தூது அனுப்பினார். தம்மிடம் புகலிடம் நாடிய சதிகாரர்களையும் சிக்கந்தரின் பகைவர்களையும் தம் நாட்டை விட்டுத் துரத்துவதாக அவர் செய்தி அனுப்பினார். அதற்குப் பதிலாகத் தோல்பூரை விநாயக தேவாவிடம் மீண்டும் ஒப்படைக்குமாறு சிக்கந்தரை வேண்டிக்கொண்டார். சிக்கந்தர் அப்போது ஏற்பட்டிருந்த சூழ்நிலையில் சமாதானத்தை மேற்கொள்ளுவதே மேலென்று எண்ணி, மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு பயணவிற்குத் திரும்பிவிட்டார்.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, மீண்டும் குவாலியர்மீது சிக்கந்தர் படையெடுத்துச் சென்றார். 1504-ல் மாண்ட்ரீலை (Mandril) முற்றுகையிட்டு அதனை எளிதில் கைப்பற்றி அங்கிருந்த கோயில்களை அழித்தார். அக் கோயில்கள் இருந்த இடங்களில் மசூதிகளை எழுப்பினார். அரண்மனையும், நகரமும் அதன் சுற்றுப்புறமும் சூறையாடப்பட்டன. மக்கள் பலர் தேவையின்றிக் கொல்லப்பட்டனர். அதன் விளைவாக, அவருடைய படை வீரர்களுக்கு ஏற்பட்ட பிணியின் காரணமாகச் சிக்கந்தர் மீண்டும் தமது தலைநகருக்குத் திரும்ப நேர்ந்தது. திரும்புவதற்கு முன்னர், மியான் மக்கன் (Mian Makhan) முஜாஹித் கான் (Mujahid Khan) ஆகியோரிடம் மாண்ட்ரீலைக் காக்கும் பொறுப்பினை ஒப்படைத்தார்.

கி.பி. 1505ஆம் ஆண்டில் சிக்கந்தர், மீண்டும் தோல்பூர் மீது போர் தொடுத்து அதனைக் கைப்பற்றினார். கம்ருத்தீனிடம் அதன் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தார். தோல்பூரைத் தமது தலைமையிடமாகக் கொண்டு, மீண்டும் குவாலியர்மீது படையெடுக்கலானார். குவாலியர்க் கோட்டையை எளிதில் வெல்ல இயலாத காரணத்தால், அந் நாட்டினை அழிக்கும் பணியில் தமது முழுக்கவனத்தைச் சிக்கந்தர் செலவிட்டார். அதன் விளைவாக, சிக்கந்தருடைய படைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் கிடைப்பது அரிதாயிற்று. எனவே, அவருடைய படைகள் திரும்பவேண்டிய அவசியம் ஏற்பட்டது. திரும்பிச் சென்றுகொண்டிருந்த சுல்தானுடைய படைகளைக் குவாலியர் படைகள், சதவர் (Chatawar) என்னுமிடத்திற்கருகே வழிமறித்துப் போரிட்டுத் தோற்கடித்தன.

கி.பி. 1506ஆம் ஆண்டில், குவாலியர் அரசரை அடக்கப் புதிய ஒரு வழியைச் சிக்கந்தர் கையாண்டார். அதாவது, குவாலியரை வெல்லுவதற்குப் பதிலாக, குவாலியரின் ஆட்சிக்குட்பட்டிருந்த கோட்டைகளை வெல்லுதலாகும். எனவே, இமத்கான் பர்மூலி, முஜாஹித்கான் ஆகிய தலைவர்களின்கீழ்ப் படையொன்றை உந்த்கருக்கு (Untgarh) அனுப்பிவைத்தார். பின்னர், சிக்கந்தரும் அப் படையுடன் சேர்ந்துகொண்டு அதனை முற்றுகையிட்டார். இறுதியில் கோட்டை பிடிபட்டது. அங்கிருந்த இராஜபுத்திரர்கள், தங்களுடைய மனைவிமார்களைத் தீக்குளிக்கச் செய்துவிட்டு வீரத்துடன் போரிட்டு உயிர்நீத்தனர். வழக்கம் போல அங்கிருந்த கோயில்களை அழித்துவிட்டு, அவ்விடங்களில் மசூதிகளை அமைக்கும்படி சிக்கந்தர் கட்டளையிட்டார். கோட்டையின் பாதுகாப்பைத் தம் அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட்டு, சிக்கந்தர் வேறு வழியாகத் தோல்பூர் திரும்பினார். தாகத்தால் தவித்து அவருடைய வீரர்கள் பலர் உயிரிழந்தனர். ஏறத்தாழ 800 பேர்கள் இவ்வாறு உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது[1].

கி.பி. 1506ஆம் ஆண்டிற்குள்ளாகக் குவாலியர், சிக்கந்தரிடம் பிடிபடவில்லை என்றாலும், தோல்பூர், மாண்ட்ரீல், உந்த்கர் ஆகியவற்றை அவர் பிடித்துக்கொள்ள இயன்றது. அதன் விளைவாகக் குவாலியரை, டில்லிப் படைகள் சுற்றி வளைத்துக்கொள்ள ஏதுவாயிற்று. குவாலியரை எளிதில் வெல்லுவதற்கு இது பேருதவியாக இருந்தது. கி.பி. 1507ஆம் ஆண்டில், சுல்தான் நர்வர் (Narwar) நோக்கிப் படை நடத்திச் சென்றார். ஜலால்கான் தலைமையின் கீழ், மற்றொரு படையும் நர்வரை நோக்கிச் சென்றது. நர்வர் அப்போது மாளவத்தின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது. நர்வர் முற்றுகை ஓராண்டுக் காலம் நீடித்தது. இறுதியில் நர்வர் பிடிபட்டது. நர்வரில் இருந்த கோயில்கள் இடித்துத் தள்ளப்பட்டன. அவையிருந்த இடங்களில் மசூதிகள் எழுப்பப்பட்டன. நர்வரிலிருந்து சிக்கந்தர் லஹாயெருக்குச் (Lahayer) சென்றார். அங்குத் தோன்றியிருந்த கலகக்காரர்களை அடக்கிவிட்டு அவர் ஆக்ரா திரும்பினார். இந்த முறையும் குவாலியரை அவரால் பிடிக்க முடியவில்லை.

நர்வர் படையெடுப்பு, சிக்கந்தருக்கும் மாளவ நாட்டிற்கும் இடையே பூசலை உண்டாக்கக் காரணமாக அமைந்துவிட்டது. மாளவத்தில் ஏற்பட்டிருந்த குழப்ப நிலையும், இந்தப் பூசல் தோன்றக் காரணமாயிருந்தது. கி. பி. 1500-ல் மாளவத்தின் அரியணை காலியாயிற்று. அதையடுத்துச் சுல்தான் நாசிர்

[1] Firishta, I, p. 184.

உத்தீன் மாளவத்தின் அரசரானார். அவர் ஒரு கொடுங்கோலர். எனவே, 1510-ல் மாளவப் பிரபுக்கள் ஒன்றுகூடி, நாசிர் உத்தீனுடைய மகனை ஷிஹாப்புத்தீனை ஆட்சிப் பொறுப்பினை ஏற்கும்படி வேண்டினார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கி, ஷிஹாப்புத்தீன் படையொன்றைத் திரட்டிக்கொண்டு தம் தந்தையை எதிர்க்கலானார். ஆனால், நாசிர் உத்தீன் எளிதில் அவரைத் தோற்கடித்துவிட்டதோடு நில்லாமல், தமக்குப் பின் தமது மூன்றாவது மகனை ஆஜம் ஹுமாயூனைத் தம் வாரிசாக நியமித்தார். ஆகவே, ஷிஹாப்புத்தீன் சிக்கந்தரின் உதவியை நாடினார். அவருடைய உதவியைப் பெற, சந்தேரியை அவருக் களிப்பதாகவும் ஷிஹாப்புத்தீன் கூறினார். சிக்கந்தரும் இந்த ஏற்பாட்டினுக்குத் தமது இசைவை அளித்தார். இதற்கிடையில், நாசிர் உத்தீன் காலமானார். உடனே ஆஜம் ஹுமாயூன் மாண்டுவில் சுல்தான் இரண்டாவது மாமூத் என்ற பட்டத்துடன் அரியணை ஏறினார். இந்தச் செய்தியை அறிந்ததும் ஷிஹாப்புத்தீன் டில்லிக்குச் சென்று சிக்கந்தரின் உதவியுடன் பட்டத்தைப் பெறும் எண்ணத்தைக் கைவிட்டுவிட்டு, நேராக மாண்டு வுக்குச் சென்றார். மாண்டு மக்கள் அவரை நகருக்குள் புக அனுமதிக்கவில்லை. சிறிது காலத்திற்குள் இரண்டாவது மாமூத், தம்முடைய ஆதரவாளர்களுள் மிக முக்கியமான முஹாபீஸ் கானைப் பகைத்துக்கொண்டார். முஹாபீஸ்கானுடைய உதவி யின்றித் தொடர்ந்து ஆட்சி செய்ய இயலாது என்பதால், இரண் டாவது மாமூத் சந்தேரிக்குச் சென்று, அதன் ஆளுநரான பஹஜத் கானுடைய (Bahjat Khan) உதவியை நாடினார். பஹஜத் அவருக்குதவ மறுத்துவிட்டார். எனவே, அவர் சிக்கந்தருடைய உதவியை நாடினார். தமக்குச் சந்தேரியை அளிப்பதாக இருந் தால், தாம் அவருக்கு உதவுவதாகச் சிக்கந்தர் கூறினார். எனவே, இரண்டாவது மாமூத் பலம் பொருந்திய இராஜபுத்திரப் படை யொன்றின் தலைவரான மெதினிராயின் உதவியை நாடினார். இதற்கிடையில் முஹாபீஸ்கான், மாளவ அரசுரிமையை, சாஹிப் கானுக்கு வழங்கினார். அதன் விளைவாக, மாளவ அரசுரிமைக்கு மும்முனைப் போட்டி யொன்று உருவாகியது. இந்தப் போட்டியில் சாஹிப்கான், மாமூத்தினிடத்தில் தோல்வியுற்றுப் பீரார் அரச ரிடம் தஞ்சம் புகுந்தார். முஹாபீஸ்கான் குஜராத்திற்கு ஓடி விட்டார். ஷிஹாபுத்தீன் 1511-ல் இறந்துவிடவே, இரண்டாவது மாமூத், மாளவத்தில் நிலையாகத் தமது ஆட்சியை நிறுவ வாய்ப்பு ஏற்பட்டது. அவருடைய வெற்றிக்குக் காரணமான மெதினி ராயின் செல்வாக்குப் பெருகியது. அவருடைய செல்வாக்கினை எதிர்த்துக் கலகங்கள் உருவாயின. அவற்றுள் பஹஜத்கான், சிக்கந் தர்கான், மன்சூர்கான் ஆகியோரின் தலைமையின்கீழ் நடத்தப்

பெற்ற கலகங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். மெதினிராய், சிக்கந்தர்கானைத் தோற்கடித்தார். இந்த நிலையில் மெதினிராயை எதிர்ப்பது கடினமென அறிந்த பஹஜத்கான், சுல்தான் சிக்கந்தரின் உதவியை நாடினார். சாகிப்கானை மாளவத்தின் அரசரான சிக்கந்தர் உதவி செய்வாரேயானால், சிக்கந்தருடைய பெயரில் குத்பாவை வாசிப்பதாகவும், நாணயங்களை அச்சிடுவதாகவும் பஹஜத்கான் கூறினார். அதே நேரத்தில் முஹாபிஸ்கானும் சாகிப்கானுடைய சார்பில் சிக்கந்தர் லோடியின் உதவியை நாடினார். சிக்கந்தர், அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, இமத் உல் முல்க், சையத்கான் ஆகியோரின் தலைமையின்கீழ் ஒரு பெரும் படையை மாளவத்திற்கு அனுப்பிவைத்தார். சாகிப்கானுக்குச் 'சுல்தான் முகமது' என்ற பட்டத்தையும் சூட்டினார். இவையனைத்தையும் அறிந்த மெதினிராய், தமது படைகளுடன் இமத் உல் முல்க்கை எதிர்க்க முடிவு செய்தார். மெதினிராயுடன் போர்புரிவது மிகக் கடினமென்று உணர்ந்த சிக்கந்தர், இமத் உல் முல்க்கைத் திருப்பி அழைத்துக்கொண்டார் என்பர் சிலர். பஹஜத்கான் தாம் சிக்கந்தருக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றவில்லை. எனவே, சிக்கந்தர் தம் படைகளைத் திருப்பி அழைத்துக்கொண்டார் என்பர் வேறு சிலர். ஆயினும், இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, பஹஜத்கானுக்கும் சுல்தான் முகமதுவிற்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளைப் பயன்படுத்திக் கொண்டு, சந்தேரியை பஹஜத்கானிடமிருந்து கைப்பற்றி, அதனை முகமதுவின் ஆட்சிப் பொறுப்பின்கீழ்ச் சிக்கந்தர் கொண்டு வந்தார். முகமது பெயரளவில் சந்தேரியை ஆண்டுவந்தார். ஆட்சி, உண்மையில் சிக்கந்தரிடமே இருந்துவந்தது. இவ்வாறாகக் கடும் முயற்சி ஏதுமின்றிச் சிக்கந்தர், சந்தேரியில் தம் அதிகாரத்தை நிலைநிறுத்தினார். இந்தச் சம்பவம் சிக்கந்தருடைய புகழ் மேலும் பெருக உறுதுணையாக அமைந்துவிட்டது. சூயி கோபர் (Sui Gopar) என்னுமிடத்தையும் அவர் கைப்பற்றி, அதனை அபுபக்கர் கானிடம் ஒப்படைத்தார். கி.பி. 1516-ல் ரன்தம்பார் கோட்டையின் ஆளுநர், சிக்கந்தருக்கு அடிபணிந்தார். ஆயினும், சிக்கந்தர் அக் கோட்டையைத் தம் கைவசமாக்கிக்கொள்ள இயலவில்லை. மாளவத்தின் அரசுரிமைப் போட்டியின்போது, சிக்கந்தருடைய ஆதரவைப் போட்டியாளர்கள் பெற முற்பட்ட காரணத்தால், சிக்கந்தர் அக் கால வட இந்திய அரசியலில் ஒரு முக்கிய அங்கத்தைப் பெற்றுவிட்டார். இஃது அவருடைய புகழுக்குச் சான்றாகும்.

கி.பி. 1509-ல் சுல்தான் சிக்கந்தர், நாகோரை வென்றார். அப்போது நாகோரை முகமதுகான் என்பவர் ஆண்டுவந்தார்.

அவருடைய இரு சகோதரர்கள், அவரை வீழ்த்திவிட சதித்திட்டம் தீட்டினர்கள். அது தோல்வியுறவே, அவர்கள் சிக்கந்தரிடம் புகலிடம் தேடினர்கள். சிக்கந்தர் அவர்களுக்கு உதவி அளிக்கக்கூடாது என்பதற்காக முகமதுகான், உடனே தமது தூதுவர்களைச் சிக்கந்தரிடம் அனுப்பி, அவருடைய மேலாண்மையை ஏற்றுக்கொள்ளும் வகையில் சிக்கந்தருடைய பெயரில், குத்பாவை வாசிக்கவும் நாணயங்கள் வெளியிடவும் விருப்பம் தெரிவித்தார். கரும்புத் தின்ன கூலியா வேண்டும்! சிக்கந்தர் உடனே அவருடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, அவருக்குத் தக்க மரியாதை செய்தார். இவ்வாருக, யாதொரு சிரமமும் இன்றி, நாகோரில் சிக்கந்தருடைய மேலாதிக்கம் நிறுவப்பட்டது.

கி. பி. 1517ஆம் ஆண்டில் சிக்கந்தர், மீண்டும் குவாலியர் மீது படையெடுப்பதற்கான முயற்சியை மேற்கொள்ளலானர். ஆனல், அப் படையெடுப்பைத் தொடங்குவதற்கு முன்னரே கி. பி. 1517ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21ஆம் நாள் அவர் இறைவன் அடியைச் சேர்ந்தார்.

மதிப்பீடு : லோடி அரசர்களுள் சிக்கந்தர் லோடியே மிகச் சிறந்தவராகக் கருதப்பட்டார். அழகு நிறைந்த பெண்ணொருத்திக்குப் பிறந்த சிக்கந்தர், மிக அழகான தோற்றத்தைப் பெற்றிருந்ததில் வியப்பேதுமில்லை. ஆடம்பரத்தில் அவருக்குச் சிறிதுகூட விருப்பமில்லை. அவர் போர்க்கலையில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தார். சிறந்த போர்வீரருக்குரிய ஆண்மை அவரிடம் அதிகமாகக் காணப்பட்டது. அவருடைய 29 ஆண்டுக்கால ஆட்சியில். அவர் இடைவிடாது போர் செய்துகொண்டே இருந்தார். அவர் இறக்கும் தருவாயில்கூடக் குவாலியர்மீது போர் நடத்துவதற்கான முயற்சியை மேற்கொண்டிருந்தார் என்பதை நாம் அறியும்போது, போர் புரிவதில் அவருக்கிருந்த ஆர்வம் நன்கு புலப்படுகிறதன்றே ?

சிக்கந்தர் காலத்தில் டில்லி சுல்தானியம், தான் இழந்த மதிப்பை மீண்டும் பெற்றுவிட்டது என்று கூறுவது மிகையாகாது. இதுவே அவருடைய பெரும்புகழுக்கு ஒரு காரணமாகும். ஜான்பூர் அரசை முழுமையாக அழித்தது அவருடைய சாதனைகளுள் ஒன்ருகும். பீகாரை டில்லிப் பேரரசுடன் இணைத்தது மற்ருேர் அரிய சாதனையாகும். அதுமட்டுமன்றி, அவருடைய மேலாதிக்கத்தைத் திர்ஹுத் போன்ற அரசுகள் ஏற்றுக்கொண்டன. அவருடைய மேன்மையை உணர்ந்துவிட்ட ஒரிசா, வங்காளம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த

அரசுகள், அவருடைய நட்பை நாடிநின்றன. ஆக்ராவைச் சுற்றி யுள்ள பகுதிகளில் அவருடைய ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. பயாறு, தோல்பூர், சந்த்வார் ஆகிய பகுதிகளிலும் அவருடைய அதிகாரம் செலுத்தப்பட்டது. மாளவத்தின் அதிகாரத்திற்குட் பட்டிருந்த சந்தேரி, டில்லி அரசின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. ரன்தம்பார், சிக்கந்தருக்கு அடிபணிந்தது. நாகோர் அரசர், சிக்கந்தரின் மேலாட்சியை ஏற்றுக் கொண்டார். குவாலியரைக் கைப்பற்ற இயலவில்லை யெனினும், அதன் வலிமையை அவர் குன்றச் செய்து, அதன் வாயிலாக டில்லியின் பெருமையை உயர்த்திவிட்டார். இவ்வாறாக, டில்லி சுல்தானியத்திற்குப் புத்துயிர் அளித்த சிக்கந்தர் லோடியை, லோடி மன்னர்களுள் மிகச் சிறந்தவராகக் கருதுவதில் தவறேதும் இல்லை அன்றோ?

தம்முடைய ஆட்சிக் காலத்தின் பெரும்பகுதியைப் போர் செய்வதிலேயே கழித்து வந்தமையால், நிருவாகம்பற்றிய செய்தி களில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கு அவருக்குப் போதிய நரம் இல்லாதுபோயிற்று. அவர் செய்த சீர்திருத்தங்கள் அதிகமில்லையென்றாலும், அவை சிறப்பாக அமைந் திருந்தன என்பதை மறுக்க இயலாது. எனவேதான், அவர் நிருவாகத்திறன் மிகுந்தவராகவும் கருதப்படுகின்றார். இந்தி யாவில் அமைக்கப்பட்ட ஆப்கானிய அரசுக்கு ஒரு புதுவிதமான திருப்பத்தை அளித்தவர் சிக்கந்தரேயாவர். ஆப்கானிய பிரபுக்களிடையே சமத்துவ உணர்ச்சி மேலோங்கியிருந்தது என்றும், அந்த உணர்ச்சிக்கு மதிப்பு அளிக்கும் வகையில் பஹ்லூல் லோடி, தம்மைச் சம அந்தஸ்து உடையவர்களுள் முதலான வராகக் கருதினாரேயன்றி, அவர்களுள் உயர்ந்தவராகக் கருத் வில்லை என்றும் முன்பு கண்டோம். சிக்கந்தர், அரச பதவிக்கு உயர் இடத்தை அளித்து, அரசர் ஏனையோரைவிட மேலானவர் என்ற நிலையை உண்டாக்கினார். அரசருடைய அதிகாரத்தையும் மதிப்பையும் உயர்த்தும் வகையில் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பலவாகும். அவற்றுள் சிலவற்றை நாம் இப்போது காணலாம்.

பஹ்லூல் லோடி, எப்போதுமே தரை விரிப்பின்மீது ஏனைய பிரபுக்களுடன் சமமாக உட்காருவது வழக்கம். சிக்கந்தர் லோடி, அவ் வழக்கத்தைக் கைவிட்டு, அரியணையில் அமரத் தொடங் கினார். அவ்வாறு செய்வதன் வாயிலாக ஏனைய பிரபுக்களைவிடத் தாம் மேலான நிலையில் இருப்பதாக அறிவுறுத்தினார். சுல்தா னுடைய மேம்பட்ட நிலையை அனைவரும் அறிவதற்காகச் சில விதிமுறைகளையும் நடைமுறைப்படுத்தினார். தலைநகருக்குத்

தூரத்திலுள்ள ஆளுநர்களுக்கு அனுப்பப்பட்ட அரச கட்டளைகளை ஏற்றுவந்த அதிகாரிகளை அவ்வாளுநர்கள் தங்களுடைய தலைமையிடங்களிலிருந்து ஆறுமைல் தூரத்தில் சந்தித்து, அவர்களைத் தக்க மரியாதையுடன் வரவேற்று, அவர்களுக்கென அமைக்கப்பட்ட மேடைகளில் அமரச்செய்து, அவற்றை அவர்களிடமிருந்து பணிவுடன் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சிக்கந்தர் கட்டளையிட்டார். அவற்றைப் பெற்றுக்கொண்ட பின்னர், அந்த ஆளுநர்கள், அவற்றைத் தங்கள் தலைமீது வைத்துக்கொண்டு, அங்கிருந்த மசூதிக்குச் சென்று அவற்றை மக்களுக்கு வாசித்துக் காட்டும்படி ஆணை பிறப்பித்தார். மேலும், பிரபுக்கள் யாவரும் சுல்தானுடைய பணியாளர்கள் என்றும், அவர்களுடைய அதிகாரமும் பதவியும் அரசருடைய கருணையால் பெறப்பட்டனவேயன்றிப் பிறப்புரிமையாகப் பெறப்படவில்லை என்றும், அரசர் விருப்பப்பட்டால் அவற்றை அவர்களிடமிருந்து பறித்துக்கொள்ளக்கூடும் என்றும் சிக்கந்தர் அறிவித்தார். எனவே, அவர்கள் அனைவரும் தங்களுடைய கணக்குகளை ஒழுங்காகத் திவானிடம் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் கட்டளையிட்டார். பொதுப் பணத்தைக் கையாடிய பிரபுக்களுக்கும், தப்புக் கணக்குக் காட்டியவர்களுக்கும் கடுமையான தண்டனைகளை விதிக்க அவர் தயக்கம் கொள்ளவில்லை[1]. ஒருமுறை முபாரக்கான் லோடியினுடைய கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டபோது, அவர் காட்டிய கணக்குச் சரியாக இல்லையென்று உறுதிசெய்யப்பட்டது. எனவே, அவர் கொடுக்கவேண்டிய தொகையில் எவ்வளவு பணம் குறைந்ததோ, அந்தத் தொகையை அவரிடமிருந்து வசூலிக்கும்படி ஆணையிட்டார்[2]. அஷ்கர், முஜாஹித்கான், ஷம்ஸ்கான் போன்ற பிரபுக்களும் இலஞ்ச ஊழல் போன்ற குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டனர். தம்முடைய சகோதரர்கள் கூடத் தம்மினும் அதிக வலிமை பெற்றுவிடக் கூடாது என்பதற்காக, அவர்கள் தங்களுடைய அதிகாரத்தை மற்றப் பிரபுக்களுடன் பகிர்ந்துகொள்ளச் செய்தார். பிரபுக்களின் நடத்தைகளைக் கண்காணித்துவர ஒற்றர்களைப் பயன்படுத்தினர். பிரபுக்களின் தனிப்பட்ட வாழ்க்கையைப்பற்றிய செய்திகளையும் அவ்வொற்றர்கள் சுல்தானுக்கு அனுப்பி வைத்தார்கள். சில சமயங்களில் சிக்கந்தர், மாறுவேடம் பூண்டு கொண்டு, நாட்டில் நடக்கும் விவகாரங்களை அறிந்து வந்தார். அமீர்கள் தங்களுடைய பாதுகாப்பிற்காக அமைத்திருந்த மெய்க்காவலர்களைக்கூடச் சுல்தானே தேர்ந்தெடுத்தார். இவ்வாறாகப் பிரபுக்களுடைய தனித்தியங்கும் போக்குகளை ஒடுக்கியும், ஆட்சித்

[1] Makhzan-in. Afghana, Dorn, p. 59.

[2] Tabavat-i. Akbari, I, p. 321.

தலைவர்களைத் தம்முடைய அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவந்தும் ஆட்சி அதிகாரங்களைத் தம்கைகளில் ஒருமுகப்படுத்தினார். இஃது ஆப்கானியருடைய ஜனநாயகக் கருத்துகளுக்கு முரணாக அமைந்திருந்தது. எனினும், நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட, இக் கொள்கை பேருதவியாக இருந்தது. சாலைகளில் திருடர் பயம் அறவே ஒழிந்தது. நாட்டின் பல பாகங்களில் நடைபெற்றுவந்த நிகழ்ச்சிகள், அவ்வப்போது அவருக்குக் கிடைத்து வந்தமையால், உடனடியாக எதிர் நடவடிக்கை மேற்கொள்வற்குச் சிக்கந்தருக்கு வசதியாக இருந்தது. அதன் விளைவாக, நாட்டு நிருவாகமுறை புத்தூக்கம் பெற்றுத் திறம்பட செயலாற்ற இயன்றது.

அரசருக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சிக்கந்தர் எப்போதுமே சளைத்ததில்லை. அவர் காலைமுதல் இரவுவரை ஓய்வு ஒழிச்சலின்றி அரசகாரியங்களைக் கவனித்து வந்ததாக நமக்குக் குறிப்புகள் கிடைத்துள்ளன. காலைத் தொழுகையையும் குரான் வாசிப்பதையும் முடித்தவுடனேயே அவர் ஆட்சி விவகாரங்களைக் கவனிக்கத் தொடங்கிவிடுவார். இரவு நேரத்தில் தான், அவர் ஆளுநர்களுக்கு அனுப்பவேண்டிய கட்டளைகளைப்பற்றிய முடிவை எடுப்பார். அவருடைய இராச் சாப்பாட்டை நடுநிசிக்குப் பிறகே முடிப்பது வழக்கம்.

நீதி வழங்குவதில் சிக்கந்தர் மிகுந்த அக்கறையைக் காட்டி வந்தார். பாரபட்சமற்ற வகையில் அவர் நீதி வழங்கி, எல்லா மக்களுடைய அன்பையும் பெற்றார். சுல்தானே சில வழக்குகளை நேரடியாக விசாரித்துத் தீர்ப்பு வழங்கினார். அவருடைய வக்கீலான தரியாகான் நூஹானி, விடியற்காலை முதற்கொண்டு இரவில் வெகுநேரம்வரை வழக்கு மன்றத்தில் உட்கார்ந்திருந்து பொதுமக்களுடைய மனுக்களைப் பெற்று வந்தார். அவர்களுடைய குறைகளையும் ஆராய்ந்து ஆவன செய்து வந்தார். காஜியும், 12 உலாமாக்களும் எப்போதும் அரண்மனையில் தங்கியிருந்தனர். நீதிமன்றத்தில் கொண்டுவரப் பட்ட வழக்குகளை அவர்கள் விசாரித்துத் தீர்ப்பு வழங்கினார்கள். அவர்களுடைய தீர்ப்புகள் உடனுக்குடன் அரசருக்கு எட்டுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. நீதிமன்றத்தில் நடக்கும் விஷயங்களை அறிய, சில அடிமைகளை அவர் நியமித்தார். நியாயம் வழங்கும் முறை மிகவும் எளிதாகவும், விரைவில் அளிக்கப்படத்தக்க வகையிலும் அமைக்கப்பட்டிருந்தது. கால தாமதமாக வழங்கப்படும் நீதியின் பயனற்ற தன்மையைச் சிக்கந்தர் நன்கு உணர்ந்திருந்தார். ஒரு சமயம் கயா மாவட்டத்

தைச் சார்ந்த ஜாகீர்தார்மீது தொடரப்பட்ட வழக்கு இரண்டு மாதங்களாக நடைபெற்று வந்தது என்ற செய்தி சிக்கந்தருக்கு எட்டியது. உடனே அவ்வழக்கு முடியும்வரை எவரும் நீதி மன்றத்தைவிட்டுப் போகக்கூடாது என்று கட்டளையிட்டார். இரவு வெகுநேரம் வரை நீதிபதிகள் உட்கார்ந்து அவ் வழக்கை முடித்த பின்னரே கலைந்து சென்றனர். வேட்டையாடும் போதும், குதிரைச் சவாரி செய்யும்போதும்கூட, அவர் பொது மக்களின் குறைகளைக் கேட்கத் தயங்கியதில்லை. அதுமட்டு மன்றி, அவர்களுடைய குறைகளை அவர் உடனடியாகக் கவனித்தும் வந்தார்.

மக்களுடைய நல்வாழ்வில் சிக்கந்தர் மிகுந்த ஆர்வத்தைக் காட்டி வந்தார். அவர் காலத்தில் நாடு வளம் மிகுந்து இருந்தது. விவசாய வளர்ச்சிக்கு அரசு போதுமான ஊக்கத்தை அளித்து வந்தது. இவர் காலத்தில்தான் கஜ்–இ–சிக்கந்தரி என்ற அளவு முறை புகுத்தப்பட்டது. உணவுத் தானியங்கள்மீது விதிக்கப் பட்டிருந்த இறக்குமதி வரி நீக்கப்பட்டது. வியாபாரிகளுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்கப்பட்டது. தொழிற்கூடங்கள் நிறுவ அரசு வேண்டிய அளவு உதவி செய்தது. எனவே, நாட்டில் பற்றுக்குறை ஏற்படவில்லை. பொருள்களின் விலைகள் மிகவும் மலிவாக இருந்தன. இன்றியமையாத பொருள்களின் விலைப்பட்டியலைத் தயாரித்து அதை ஒவ்வொரு நாளும் தமக்கு அனுப்பி வைக்கும்படி தம் அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டார். அங்காடிகளின் விவகாரங்களை அவர் மிகக் கவனமாகக் கண் காணித்து வரலானார். ஏழை மக்களின் கண்ணீரைத் துடைக்க அவர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். தலைநகரில் ஒவ்வொரு நாளும் ஏழைகளுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்தார். நாட்டிலிருந்த ஏழை எளியோருக்கும் திக்கற்றவர்களுக்கும் தினந்தோறும், அல்லது வாரந்தோறும், அல்லது ஆறுமாதத்திற் கொருமுறையும் உணவுப் பொருள்களை வழங்கினர்[1]. அவர் தம் உடைகளையும் படுக்கைகளையும் மாற்றும் போது அவற்றை விற்று அதில் கிடைக்கும் தொகையை அனாதைப் பெண்களுக்குச் சீதன மாக வழங்கினர்[2].

தம் மக்கள் ஒழுங்கீனர்களாக இருக்கக்கூடாது என்பதற் காகச் சில கட்டுப்பாடுகளை விதித்தார். மறைஞானிகளின் கல்லறைகளுக்குப் பெண்கள் செல்லுவதைத் தடை செய்தார். பஹ்ரெய்க் (Bahraich) ஊர்வலத்தின்போது, சில ஒழுங்கீனச்

[1] Tabagrat-i-Akbari, I, p. 336
[2] Tarikh-is-hahi, p. 49

செயல்கள் நடைபெற்று வந்தமையால், அவ்வூர்வலத்தையே தடை செய்துவிட்டார். சிக்கந்தரே மதுவை யாருக்கும் தெரியாமல் அருந்தி வந்ததாகவும், அவருடைய உடல் நலத்திற்காகவே மதுவை அவ்வாறு அருந்தினார் என்றும் கூறப்படுகிறது.

சிக்கந்தர் கல்வியிலும் கலையிலும் சிறந்து விளங்கினார். கல்விமான்களையும் கவிஞர்களையும் போற்றினார். அவர் கவிபாடும் திறமையையும் பெற்றிருந்தார். 'குல்-ருக்கி' (அதாவது ரோஜா முகத்தினன்) என்ற புனை பெயரில் பல கவிகளைப் பாரசீக மொழியில் அவர் இயற்றியுள்ளார். அரேபியா, பாரசீகம் ஆகிய நாடுகளிலிருந்து வந்த கல்விமான்களை அவர் தக்க வெகுமதி அளித்துக் கௌரவித்தார். ஒவ்வோர் இரவும் அவருடைய கட்டிலுக்குப் பக்கத்தில் 70 அறிஞர்கள் உட்கார்ந்துகொண்டு அவரிடம் கல்வி, சமயம் ஆகியவற்றைப்பற்றி விவாதித்து வந்தனர்[1]. அவர் காலத்தில் மியான் பூவா (Mian Bhua) என்பவர், மருத்துவக் கலையைப்பற்றிய வடமொழி நூல் ஒன்றைப் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார். அந்த நூலுக்கு திப்-இ-சிக்கந்தரி (Tibb-i-Sikandari) என்ற தலைப்பு வழங்கப் பட்டது[2]. சிக்கந்தருடைய அழைப்பின்பேரில் துலாம்பாவிலிருந்து இரண்டு தத்துவ ஞானிகள் டில்லிக்கு வந்து முஸ்லிம்களுக்கு அளிக்கப்பட்டுவந்த கல்வி முறையை மாற்றி அமைத்ததும் இவர் காலத்தில்தான் என்பது அறிதற்குரியது.

இசைக் கலையிலும் சிக்கந்தர் சிறந்து விளங்கினார். பாரசீகக் கவிதைகளை, அவர் மிக அழகாக ஒப்பிப்பார். ஷனாய் (Shah-nai) அவருக்கு மிகப்பிடித்தமான இசைக் கருவியாகும். தமது அரண்மனையில், அவர் இசைப்புலவர்கள் பலரை வைத்துப் போற்றி வந்தார்.

கட்டடக் கலையிலும் அவருக்கு ஆர்வம் இருந்தது என்பதற்கு அவர் அமைத்த ஆக்ரா நகரம் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந் நகரம் கி.பி. 1506ஆம் ஆண்டில் அமைக்கப் பட்டது.

இத்துணைச் சிறப்புமிக்க, ஒருவரிடம் ஒரு பெரிய குறையும் இருந்தது. அவர் ஒரு மதவெறியர். அவர் ஓர் இந்து தாயாருக்கு மகனாகப் பிறந்தார். அதுவே அவருடைய மதவெறிக்கு ஒரு காரணமாகும். தாம் முழுக்க முழுக்க ஒரு முஸ்லிம் என்பதைக் காட்டவே அவர் அவ்வாறு நடந்துகொண்டிருக்க

1 Wakiat-i-Mushtaqi, ff. 49a-b

2 Tarikh-i--Daudi, p. 43

வேண்டும் என்பது சிலருடைய கருத்தாகும்[1]. அவர் சுல்தானுகப் பதவி ஏற்பதற்கு முன்பே, குருக்ஷேத்திரத்தில் பல்லாண்டு காலமாக இந்துக்கள் நடத்திவந்த ஆற்றுக்குளியல விழாவினைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று எண்ணினுர். அத்தகைய ஒருவர் சுல்தானுகப் பதவியேற்ற பின்னர், பிற மதங்களிடத்தில் கண்ணியமாக நடந்துகொள்வார் என்று எண்ணுவது பேதைமையன்றே? அவர் இந்துக்களிடம் கடுமையாக நடந்து கொண்டார் என்பதற்குப் பல சான்றுகளைக் கூற இயலும். அவற்றுள் குறிப்பிடத்தக்கது, போதன் என்ற பிராமணர்பற்றிய நிகழ்ச்சியாகும். போதன், கனேர் என்னுமிடத்தில் வாழ்ந்துவந்தார். அவர் ஒருமுறை இஸ்லாம் போலவே, இந்துமதமும் உயர்வானதென்று கூறினுர். இதைக் கேள்வியுற்றதும் உலாமாக்கள் கொதித்தெழுந்தனர். எனவே, சுல்தான் பல இடங்களிலிருந்து சமய அறிஞர்களை வரவழைத்துப் போதன் என்ற பிராமணர் கூறுவது மெய்யா பொய்யா என்று அறிய அவர்களுடன் விவாதங்கள் மேற்கொண்டார். ஏறக்குறைய எல்லாச் சமய அறிஞர்களும் போதன் இஸ்லாமிய மதத்தைத் தழுவவேண்டும் என்றும், இல்லையெனில், அவர் உயிரிழக்கவேண்டும் என்றும் முடிவு தெரிவித்தார்கள். போதன் உயிரிழக்க முன்வந்தார். வடமதுரை போன்ற இடங்களில், கோயில்களை இடித்துவிட்டு, அந்த இடங்களில் மசூதிகள், முஸ்லிம்கள் தங்குமிடங்கள், கல்லூரிகள், பஜார்கள் போன்றவற்றை அமைத்ததாகக் கூறப்படுகிறது. இந்துக்களின் வழிபாட்டுச் சிலைகளை உடைத்து, அவற்றை இறைச்சி வியாபாரிகளிடம் கொடுத்து எடைக் கற்களாகப் பயன்படுத்துமாறு சிக்கந்தர் ஆணையிட்டதாகவும் நாம் அறிகிறோம்[2]. வடமதுரையில் இந்துக்களுக்கு க்ஷவரம் செய்யக் கூடாது என்று நாவிதர்களுக்குக் கட்டளையிட்டதாகவும் நமக்குச் செய்தி கிடைத்துள்ளது. இந்துக்கள் புனிதத் தலங்களில் நீராடுவதையும் தடுத்தார். இஸ்லாம் மதத்தினைத் தழுவிய இந்துக்களுக்கு, அவர் உயர் பதவிகளை அளித்தார். மதம் மாறும் இந்துக்களுக்குச் சிறைவாசத்திலிருந்து விடுதலை அளித்தார். இந்துக்களிடம் அன்பாக நடந்து கொண்ட முஸ்லிம்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. அவ்வாறு தண்டனைக்குள்ளானவர்களுள் அகமதுகான் லோடியும் ஒருவராவார். மேற்கூறிய நிகழ்ச்சிகளைக் கருத்தில் கொண்டு பார்க்குமிடத்துச் சிக்கந்தர், ஒரு பெரிய மதவெறியராக நமக்குக் காட்சியளிக்கக் கூடும். நைஜாமுத்தீன் அகமதுபோன்ற வரலாற்றுசிரியர்கள், சிக்கந்தர் சமய விவகாரங்களில் அளவு மீறி

[1] A. L. Srivastava, The Sultanate of Delhi, p. 224

[2] Tarikh-i-Daudi, p. 39.

நடந்துகொண்டார் என்றும், மதவெறியர் என்றும் குறிப்பிட்டுள்ளதை அடுத்துத் தற்கால ஆசிரியர்கள் பலர், அவருடைய மதம்பற்றிய நடவடிக்கைகளைக் கண்டித்துள்ளனர். ஆனால், அவருடைய சமயம்பற்றிய நடவடிக்கைகளை மிகக் கவனமாகப் பார்க்குமிடத்து, அவை மிகைப்படுத்திக் கூறப்பட்டதாக நமக்குத் தோன்றுகிறது. மேலும், சிக்கந்தருடைய ஆட்சிக் காலத்தில் இந்துக்களும், முஸ்லிம்களும் அரசியல் விஷயங்களில் ஒன்றுபட்டுச் செயலாற்றிவரத் தொடங்கிவிட்டனர். இராஜா திரிலோக் சந்த் போன்றவர்கள் லோடி அரசர்களுக்கு உதவி செய்து வந்ததை நாம் மறந்துவிட இயலாது. மேலும், இராஜா மான் சிங் போன்றவர்கள் இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு பெரும் மக்கள் பிரிவினரின் முழு ஆதரவையும் அன்பையும் பெற்றிருந்தனர் என்பதை முன்னரே கண்டோம். இந்துக்கள் பாரசீக மொழியில், புலமை பெறத் தொடங்கிவிட்டனர். அதே போன்று, வடமொழி நூல்களை மொழிபெயர்ப்பதில் முஸ்லிம்கள் ஆர்வம் காட்டிவந்தனர். கபீர், நானக் போன்றவர்களின் போதனைகளும், தைமூர் படையெடுப்பும் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்குப் பெரிதும் உதவின. அத்தகைய ஒரு சூழ்நிலையில் சிக்கந்தரின் புறக்கணிக்கத்தக்க சமய நடவடிக்கைகளை நைஜாமுத்தீன் அகமது போன்றோர் பெரிதளவில் சித்திரித்துக் காட்டியதில் வியப்பேதுமில்லை அல்லவா[1]? மேலும், சிக்கந்தர் இஸ்லாமியர் கோட்பாடுகளைச் சிறிதும் பிசகாமல் கடைப்பிடித்து வரவில்லை என்பதை நாம் இங்குக் குறிப்பிடுதல் அவசியமாகும். மதுவருந்துவதை அவர் முழுமையாக நிறுத்தவில்லை. இசைக்கலைஞர்கள் பலரை, அவர் தம் அரண்மனையில் வைத்துப் போற்றி வந்தார். அவர் தம் தாடியைச் சவரம் செய்து கொண்டார். சிற்சில நேரங்களில் அவர் நமாஸ் ரஸா (Raza) போன்றவற்றைக் கடைப்பிடிக்கத் தவறிவிட்டார். மேற்கூறியவற்றிலிருந்து அவரை மன்னிக்க முடியாத மதவெறியர் என்று கூறுவது தவறு என்பது விளங்கும். மேலும், அவர் வாழ்ந்த காலத்தில் மத சகிப்புத் தன்மையை அனைவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, தற்கால அளவுகோலைக் கொண்டு சிக்கந்தரை மதிப்பிடுவது சரியாகாது. எனவே, மதவிஷயங்களில் அவர் சில சமயங்களில் அருவருக்கத்தக்க முறையில் நடந்து கொண்டிருப்பினும் அதனைக்கொண்டு அவருடைய அருஞ்செயல்களை குறைவாக மதிப்பிடுவது விவேகமற்ற செயலாகும்.

1. For details see K. S. Lal, Twilight of the Sultanate p. p. 192-194

இப்ராஹீம் லோடி (1517 – 1526)

டில்லியை ஆண்ட கடைசிச் சுல்தான் இப்ராஹீம் லோடி ஆவார். அவர் சிக்கந்தர் லோடியின் மூத்த மகனுவார். இப்ராஹீம் கம்பீரமான தோற்றத்தைப் பெற்றிருந்தார். வீரம், புத்திச் சாதுரியம் போன்ற நற்குணங்கள் பல அவர் பெற்றிருந் தார். அவருக்கு ஜலால்கான் என்ற தம்பியொருவர் இருந்தார். அவரும் அரசருக்குரிய நற்பண்புகளைப் பெற்றிருந்தார். மேலும், பிரபுக்கள் ஆட்சி அதிகாரங்களை ஒருவரிடம் மட்டுமே ஒப்படைக்க விரும்பவில்லை. எனவே, அவர்கள் டில்லிப் பேரரசை இரு கூறுகளாக்கி அவ்விரு சகோதரர்களிடையே பங்கிட்டளிப்பதென முடிவு செய்தனர். ஜான்பூர் அரசின் மேற்கு எல்லை வரையி லுள்ள பகுதியை இப்ராஹீம் ஆளவேண்டும் என்றும், அதற்குக் கிழக்கிலுள்ள பகுதியை ஜலால்கான் ஆளவேண்டும் என்றும் அவர்கள் தீர்மானித்தார்கள். அத் தீர்மானத்தின்படி சிக்கந்த ருடைய அரசு, இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டது. அதையடுத்து ஜலால்கான், ஜான்பூருக்குப் புறப்பட்டார். போகும் வழியில் கல்பியில் அவர் சிலகாலம் தங்கி, அங்குத் தம் நேரத்தை வேட்டையாடுவதில் வீணுக்கி வந்தார்.

இதற்கிடையில் ராப்ரியின் ஜாகீர்தாரரான கான்-இ-ஜஹான் டில்லிக்கு வந்தார். டில்லி அரசை இரு கூருக்கியதை அவர் விரும்பவில்லை. அதனல், ஆப்கானியருடைய எதிர்காலம் பாதிக் கப்படும் என்று பிரபுக்களுக்கும் இப்ராஹீமுக்கும் எடுத்துக் கூறினர். நாட்டை இரு கூருக்க மேற்கொண்ட உடன் பாட்டினை உடனே இரத்துச் செய்வது அனைவருக்கும் நல்லது என்று அவர் வாதாடினர். இப்ராஹீம் லோடி இக் கருத்தினை ஏற்றுக்கொண்டு ஜலால்கானுக்கு உடனே ஒரு கட்டளையை அனுப்பிவைத்தார். அதில் ஜலால்கானுடன் தாம் ஒரு முக்கிய மான விஷயத்தைப்பற்றிப் பேசவேண்டும் என்றும், அவர் உடனே தலைநகருக்கு வரவேண்டும் என்றும் இப்ராஹீம் கூறினர். தமக்கு ஏற்படவிருக்கும் ஆபத்தை ஜலால்கான் புரிந்துகொள்ள வெகுநேரம் பிடிக்கவில்லை. எனவே, அவர் இப்ராஹீமினுடைய கட்டளையை நிறைவேற்ற முன்வரவில்லை. எனவே, ஜலால்கான் ஜான்பூருக்குச் சென்று அங்கு அவருடைய நிலையைப் பலப்படுத்திக் கொள்வதற்கு முன்பாக, அவரைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் இப்ராஹீம் உடனடியாக ஈடுபட்டார். ஜலால்கானுக்கு உதவி யாக இருந்த பிரபுக்களுக்குப் பரிசுகளை அனுப்பி, அவர்களைத் தம் பக்கம் சேர்ந்துகொள்ளும்படி அவர்களை இப்ராஹீம் வேண்டினர். அவருடைய வேண்டுகோளுக்கிணங்கி, தரியாகான் நூஹானி,

நாசிர்கான் போன்ற பிரபுக்கள் இப்ராஹிம் பக்கம் சேர்ந்து கொண்டனர். கி.பி. 1517ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாவது முறையாக இப்ராஹீம் முடிசூட்டிக்கொண்டார். இந்த முறை அவர் டில்லிப் பேரரசு முழுமைக்கும் சுல்தானுகப் பதவியேற்ருர். இதனை ஜலால்கான் ஏற்றுக்கொள்ள மறுத்தார். எனவே, இரு சகோதரர்களுக்கும் இடையே வாரிசுரிமைப் போர் நிகழலாயிற்று.

ஜலால்கான், கல்பியில் தமது முடிசூட்டு விழாவினை நடத்தினுர். அதுபோது அவர் ஜலாலுத்தீன் என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டு, அப்பெயரை நாணயங்களில் பொறிக்குமாறு கட்டளையிட்டார். குத்பாவை அவருடைய பெயரில் வாசிக்கச் செய்தார். பதேகான் என்பவரைத் தமது பிரதம மந்திரியாக நியமித்தார். தமது படையைத் திருத்தியமைத்ததோடு மனநிறைவு கொள்ளாமல், தம்முடைய ஆட்சிப்பகுதிகளைச் சுற்றியிருந்த இந்து இராஜாக்கள், ஜமீன்தார்கள் ஆகியோரின் நட்பையும் ஆதரவையும் பெறுவதற்குரிய முயற்சியையும் மேற்கொண்டார். இந்த நிலையில் தம்முடைய தம்பியைப் போர் செய்து அடக்குவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை இப்ராஹீம் உணர்ந்துவிட்டார். எனவே, ஆஜம் ஹுமாயூன் ஷர்வானியின் தலைமையின்கீழ்ப் படையொன்றை ஜலால்கானுக்கு எதிராக அனுப்பிவைத்தார். ஷர்வானி, முதலில் கலிஞ்சாருக்குச் சென்று அதனை முற்றுகையிட்டார். தமது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒன்ருன கலிஞ்சாரை ஷர்வானி கைப்பற்றுவதைத் தடுத்து நிறுத்த ஜலால்கான் கலிஞ்சாருக்குச் சென்ருர். கலிஞ்சாரை அடைந்தவுடன் ஷர்வானிக்கு ஒரு கடிதம் அனுப்பினுர். அதில் தாம் ஒரு தவறும் செய்யவில்லையென்றும், இப்ராஹீம்தான் தம்முடைய வாக்கை மீறினுர் என்றும், தமது தந்தையின் சொத்தில் தமக்குக் கிடைத்த ஒரு சிறு பகுதியைக்கூடத் தாம் அனுபவிப்பதற்குத் தம் தமையன் அனுமதிக்க விரும்பவில்லையென்றும், தமக்குத் தந்தை போல விளங்கும் ஷர்வானி தமக்கு வேண்டிய உதவி அளிக்க வேண்டும் என்றும் ஜலால்கான் குறிப்பிட்டிருந்தார். அதைப் படித்ததும் ஷர்வானியின் மனம் இளகிவிட்டது. மேலும், ஷர்வானியின் மகனுன பதேகான்தான் ஜலால்கானுடைய பிரதம அமைச்சராக இருந்துவந்தார். அதுமட்டுமன்றி, ஷர்வானிக்கு இப்ராஹீமிடத்தில் வெறுப்பு ஏற்பட்டிருந்தது. மேலும், ஜலால்கானை வெல்லும் அளவிற்கு அவர் படைப்பலம் பெற்றிருக்கவில்லை[1]. எனவே, அவர் ஜலால்கானின் பக்கம் சேர்ந்துகொண்டார். முதலில் ஜான்பூரில் ஜலால்கானுடைய ஆட்சியினை நிலை

1 Dr, K. S. Lal, Twilight of the Sultanate, p. 206.

நிறுத்தினால் அன்றி, நிலைமை அவர்களுக்குச் சாதகமாக மாற வழியில்லை என்று அவ்விருவரும் உணர்ந்தனர். ஆகவே, அவர்கள் அவுத்தின்மீது படையெடுத்துச் சென்றனர். அவுத்தின் ஆளுந ரான சையித்கான் அவர்களை எதிர்க்க இயலாது லக்னோவிற்கு ஓடி, அங்கிருந்து கொண்டு இப்ராஹீமுக்குச் செய்தியை அனுப்பிவைத் தார். ஜலால்கானுடன் போர் புரிவதைத் தவிர, இப்ராஹீமுக்கு வேறுவழி புலப்படவில்லை. ஆகவே, 1518ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் இப்ராஹீம் படையுடன் ஆக்ராவைவிட்டுப் புறப்பட்டார். அவர் போன்கயோன் (Bhongaon) என்ற இடத்தை அடைந்த போது ஷர்வானியும் பதேகானும் தம் பக்கத்தில் சேர்ந்து கொள்ளத் தம்மை நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர் என்ற செய்தி இப்ராஹீமுக்குக் கிடைத்தது. ஆகவே, அவர் மிக்க தைரியத்துடன் கன்னோசியைத் தாக்க முற்பட்டார். அங்கு, ஷர்வானியும் பிரபுக்கள் வேறு சிலரும் சுல்தான் இப்ராஹீமுடன் சேர்ந்துகொண்டார்கள். அதையடுத்து, ஜலால்கானைத் தாக்க இப்ராஹீம் படையொன்றை அனுப்பினார். அதையறிந்ததும் ஜலால்கான், கல்பியைத் தம் வளர்ப்புத் தாயிடம் விட்டுவிட்டு ஆக்ரா நோக்கிச் சென்றார். சுல்தான் இல்லாத சமயம் பார்த்து, அதைக் கைப்பற்றிக்கொண்டால், தமது வலிமை பெருகும் என்று ஜலால்கான் எண்ணினார். அச்செய்தியை அறிந்ததும், இப்ராஹீம் தம் தலைநகரைக் காக்க, ஆதம்கான் தலைமையின்கீழ், படையொன்றை உடனடியாக அனுப்பிவைத்தார்.

ஜலால்கான் கல்பியை விட்டு நீங்கிவிட்டமையால், இப்ராஹீ முடைய படைகள் அதனை எளிதில் கைப்பற்றிவிட்டன. ஜலால் கான் மீது தமக்கு ஏற்பட்டிருந்த வெறுப்புணர்ச்சியை இப்ராஹீம் கல்பியின்மீது காட்டினார். கல்பி அழிக்கப்பட்டது. அதையடுத்து இப்ராஹீம், மேலும் சில படைகளை ஆக்ராவிற்கு அனுப்பினார். ஜலால்கானிடம் 30,000 குதிரை வீரர்களும், 160 யானைகளும் இருந்தபோதிலும் இப்ராஹீமுடன் சமாதானம் செய்துகொள்ள முன்வந்தார். இந்தச் சூழ்நிலையை உருவாக்கிய பெருமை, ஆதம்கானையே சாரும். அதன்படி ஜலால்கான் அரச பதவிக் குரிய சின்னங்களை, ஆதம்கானிடம் ஒப்படைத்துவிட்டுத் தம் படைகளைக் கலைத்துவிட்டார். அதற்குப் பதிலாகக் கல்பியை ஜலால்கானுக்குப் பெற்றுத் தருவதாக ஆதம்கான் வாக்களித் தார். ஆனால், இப்ராஹீம் இந்த நிபந்தனையை ஏற்க மறுத்து விட்டார். எனவே, ஜலால்கான் குவாலியருக்குச் சென்று அதனுடைய அரசரிடம் அடைக்கலம் நாடினார். இந்நிகழ்ச்சி இப்ராஹீம் ஆக்ராவில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டப் பேருதவி செய்தது.

அதன்பின்னர், இப்ராஹீம் லோடி, குவாலியர்மீது படையெடுத்துச் சென்றார். குவாலியர் அரசர் ஜலால்கானுக்குப் புகலிடம் அளித்து, இப்ராஹீமினுடைய பகைமையைத் தேடிக் கொண்டார். அதுமட்டுமன்றித் தமது முன்னோர்களைப்போல, இப்ராஹீம் லோடியும் நாடுபிடிக்கும் கொள்கையினைக் கடைபிடிப்பதென முடிவு செய்தார். அனைத்திற்கும் மேலாக, குவாலியரில் அப்போது ஏற்பட்டிருந்த சூழ்நிலை, இப்ராஹீம் லோடிக்கு மிகச் சாதகமாக அமைந்திருந்தது. குவாலியர் அரசரான இராஜா மான்சிங் அப்போதுதான் காலமானார். இராஜா மான்சிங் வீரத்திற்குப் பேர்போனவர். அவருடைய மறைவு இப்ராஹீமை ஊக்குவித்ததில் வியப்பேதும் இல்லை. 30,000 குதிரை வீரர்களையும், 300 யானைகளையும்[1] கொண்ட படையுடன் ஆஜம் ஹுமாயூன் ஷர்வானீ குவாலியருக்குப் புறப்பட்டார். அவருக்குத் துணையாகக் கான்-இ-ஜஹான், சுலைமான் பர்மூலீ போன்ற தலைவர்களையும் இப்ராஹீம் அனுப்பிவைத்தார். குவாலியரை அப்போது ஆண்டுவந்த விக்ரமாதித்யர் வீரத்துடன் போரிட்டார் எனினும், இறுதியில் சுல்தானுக்கு அடிபணிவதைத் தவிர வேறுவழி அவருக்குப் புலப்படவில்லை. நிலைமை மோசமாகி வருவதை அறிந்த ஜலால்கான், மேலும் குவாலியரில் இருந்து கொண்டு விக்கிரமாதித்யருக்குத் தொந்தரவு அளிக்க விரும்பாமல் அங்கிருந்து மாளவத்திற்குச் சென்றுவிட்டார். எனவே, விக்கிரமாதித்யருக்கும் சுல்தானுக்கும் இடையே நட்புறவு நிலவ இது பெருந்துணையாக இருந்தது. விக்ரமாதித்யர் குவாலியரை விட்டுக்கொடுக்க இசைந்தார். அதற்குப் பதிலாக, அவருக்கு ஷம்ஸாபாத் ஜாகீர் வழங்கப்பட்டது. ஜலால்கான் தப்பியோடுவதற்கு ஆஜம் ஹுமாயூன் ஷர்வானீ துணை செய்திருக்க வேண்டும் என்று இப்ராஹீம் ஐயுறவு கொள்ளத் தொடங்கினார். எனவே, அவரையும் அவருடைய மகனையும் உடனடியாக ஆக்ராவிற்கு வரச்செய்து அவர்களைச் சிறையிலடைத்தார்.

அதன்பின்னர், இப்ராஹீம் தம் கவனத்தை மீண்டும் ஜலால்கான் பக்கம் திருப்பினார். இப்ராஹீமுடைய படைகள், குவாலியரை முற்றுகையிட்டபோது, ஜலால்கான் மாளவத்திற்குச் சென்றுவிட்டார் என்று முன்னர்க் கண்டோம். அந்த நேரத்தில் மாளவ அரசரான இரண்டாவது மாமூத்திற்கும் மெதினிராய்க்கும் இடையே பதவிப் போராட்டம் ஒன்று நடைபெற்று வந்தது. எனவே, ஜலால்கானைப் பொருட்படுத்தக்கூடியவர் ஒருவரும் அங்கில்லை. எனவே, அவர் கர்ஹ கதங்காவிற்குச் (Garha Katanga) சென்றார். அதன் அரசரான சங்ராம் ஷா

[1] Tabaqat-i-Akbari, I, pp. 347-48

அவரை உடனே கைது செய்து, இப்ராஹீமிடம் அனுப்பி வைத்தார். அதையறிந்ததும் இப்ராஹீம் பெரிய தர்பார் ஒன்றினுக்கு ஏற்பாடு செய்தார். கைகள் பின்னால் கட்டப்பட்டு, ஜலால்கான் தர்பாருக்கு அழைத்துவரப்பட்டார். ஹான்சிக் கோட்டையில் சிறைப்படுத்துமாறு இப்ராஹீம் கட்டளையிட்டார். ஹான்சிக்குப் போகும்வழியில் ஜலால்கான் நஞ்சிடப்பட்டுக் கொல்லப்பட்டார்.

இப்ராஹீம் லோடியின் காலத்தில் ஏற்பட்ட அடுத்த முக்கிய மான நிகழ்ச்சி, அவருக்கும் இராணா சங்காவிற்கும் இடையே ஏற்பட்ட போராகும். இராணா சங்கா மேவார் நாட்டு அதிபதி யாவார். அப்போது மேவார்நாடு, இராஜபுதனத்தில் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தது. மெதினி ராய்க்கு உதவி செய்து அதன் வாயிலாக மாளவத்தின் ஒரு பகுதியில் இராணா சங்கா தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினார். லோடி அரசர் களும் மாளவத்தின் விவகாரத்தில் தலையிட்டுச் சந்தேரி, நர்வர் போன்ற இடங்களைக் கைப்பற்றினார்கள். அதாவது, மேவார் இராஜபுத்திரர்களும், லோடிகளும் மாளவத்தில் தங்களுடைய அதிகாரத்தைப் பரப்பும் முயற்சியை மேற்கொண்டனர். இதுவே அவ்விருவரிடையே போர்மூள முக்கியக் காரணமாகும். அது மட்டுமன்றி, இப்ராஹீமுக்கும் ஜலால்கானுக்கும் இடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு, சுல்தானியத்தின் ஆட்சிப் பகுதிகள் சிலவற்றை இராணா சங்கா கைப்பற்றலானார். எனவே இப்ராஹீம், இராணா வுடன் போர்புரிய வேண்டியதாயிற்று. கதோலி (Khatoli) என்னுமிடத்தில் நடைபெற்ற போரில், இராஜபுத்திரர்கள் வெற்றிவாகை சூடினார்கள். கயாஸ் உத்தீன் என்ற லோடி இளவரசரை அவர்கள் கைப்பற்றினார்கள். ஆயினும், இராணா போரில் தமது இடக்கையை இழந்தார். அத்துடன் அவர் வாழ் நாள் முழுவதும் முடமானார்.

சில காலத்திற்குப்பின் இவ் விருசாராருக்கும் இடையே மீண்டும் போர் தொடங்கியது. இராணா சங்கா, தாம் கைப் பற்றிய கயாஸ் உத்தீனை டில்லி சுல்தானாக முடிசூட்டுவதெனத் தீர்மானித்தார். எனவே, கயாஸ்உத்தீனை எவ்வாறேனும் மீட்க வேண்டுமென்று தீர்மானம் செய்தார். அதற்காக மியான் மாகன் (Mian Makhan) தலைமையின்கீழ், ஒரு படையை மேவாருக்கு அனுப்பிவைத்தார். அப் படையில் உசேன்கான், மியான் மாருப் (Mian Maruf), உசேன் கான் பர்மூலீ ஆகியோரும் சேர்ந்துகொள்ளும்படி இப்ராஹீம் உத்தரவிட்டார். மியான்

மாகன் வயதில் சிறியவர். எனவே, ஏனைய படைத்தலைவர்கள் மனவேதனைப்பட்டனர். அதன் விளைவாகப் படைத்தலைவர் களிடையே ஒற்றுமை ஏற்படாது போயிற்று. இஃது இராஜ புத்திரர்களுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது. அனைத்திற்கும் மேலாக, மியான் உசேன் பர்மூலீ, இராணு சங்காவின் பக்கம் சேர்ந்துகொண்டார். மேற்கூறிய காரணங்களால், பல போர் களில் இராஜபுத்திரர்கள் வெற்றி கண்டனர். எனவே, இப்ராஹீம், தாமே போர்க்கோலம் பூண நேர்ந்தது. அவருடைய வருகை சுல்தானுடைய படையினருக்குப் புதிய ஓர் உற்சாகத்தை அளித்தது. மியான் உசேன் பர்மூலீ இராணு சங்காவை விடுத்து இப்ராஹீம் பக்கம் சேர்ந்துகொண்டார். இப்போரின் முடிவு என்ன என்பதில் வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேறுபாடு தோன்றியுள்ளது. இராஜபுத்திரர்களை எதிர் பாராத விதமாகத் தாக்கி, அவர்களுக்குப் பெருத்த சேதத்தை விளைவித்ததாகச் சிலர் கூறுகின்றனர்[1]. இராணு சங்கா டில்லி மாளவம் ஆகியவற்றின் அரசர்களுடன் 18 முறை நேருக்கு நேர் நின்று போரிட்டார் என்றும், அவற்றுள் இரு முறை அவர் இப்ராஹீமுடன் போரிட்டார் என்றும், அப் போர்கள் பக்ரோல், கதோலி ஆகிய இடங்களில் நடைபெற்றன என்றும், கதோலிப் போர் இராணு சங்காவிற்குச் சாதகமாக முடிந்தது என்றும், அப் போரின் முடிவில் டில்லி அரச குடும்பத்தைச் சார்ந்தவரொருவர் பிடிபட்டார் என்றும் டாட் (Tod) கூறு கிறார்[2]. மேவாருடன் மேற்கொண்ட போரின் விளைவாக இப்ராஹீம் தம் ஆட்சிப்பகுதிகளுள் சிலவற்றை (குறிப்பாகச் சந்தேரியை) இழந்தார் என்றும், அவருடைய புகழ் குறைய இவை முக்கியப் பங்கு கொண்டுள்ளன என்றும் K. S. லால் கூறியுள்ளார்[3].

இப்ராஹீம் லோடி, தம் பிரபுக்களின் வெறுப்பைத் தேடிக் கொண்டு, அதன் காரணமாக டில்லி சுல்தானியத்தின் அழிவிற்கு வழிவகை செய்துள்ளார். ஆப்கானியப் பிரபுக்கள், ஒருவரை யொருவர் சம அந்தஸ்துடையவராகக் கருதினார்கள் என்றும், அவர்களுடைய ஆதரவைப் பெறச் சுல்தான் பஹ்லூல் லோடி, தம்மைச் சம அந்தஸ்துடையவர்களுள் முதன்மையானவர் என்று அறிவித்து வந்தார் என்றும் முன்னர்க் குறிப்பிட்டுள்ளோம். சிக்கந்தர் லோடி, தம்மை அனைவரிலும் மேலானவராகக் கருதி வந்தமையால், பிரபுக்களைச் சற்றுக் கடுமையாகவே நடத்தி

[1] Ishwari Prasad, 'History of Medieval India', p. 506

[2] Annals and Antiquities of Rajasthan, Ed. by Crooke I, p. 349

[3] Op. cit, p. 211

வந்தார். அதைப்பற்றியும் முன்னர் விரிவாகக் கூறியுள்ளோம். சிக்கந்தருடைய மறைவிற்குப் பின்னர், பிரபுக்கள் எல்லா அதிகாரத்தையும் சுல்தானிடம் ஒப்படைக்க விரும்பாமைக்கு, அதுவே ஒரு காரணமாகும். ஆகவேதான், அவர்கள் டில்லி சுல்தானியத்தை இரு கூருக்க முயன்றனர். ஆனல், அவர்களுடைய திட்டம் முழு வெற்றி அடையவில்லை. முதலில் இப்ராஹீம் அத் திட்டத்தை ஏற்றுக்கொண்டார் என்றாலும், இறுதியில் ஜலால்கானை ஒழித்து, டில்லிப் பேரரசு முழுமைக்கும் அவரே சுல்தானுகச் செயற்படலானுர். இந்த நிகழ்ச்சி, பிரபுக்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டது.

இப்ராஹீம் லோடி கண்டிப்பானவர் ; முரட்டுச் சுபாவமுள்ளவர் ; கண்ணியமற்றவர்; அவருடைய தம்பிமார்களைக் குறிப்பாக ஜலால்கானை அவர் நடத்திய விதம் அவருடைய தீய குணங்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. பிரபுக்கள் விஷயத்தில் அவர் மிகக் கடுமையாக நடந்துகொண்டார். அவர் பட்டம் சூட்டிக் கொள்ளுவதற்கு முன்னர், லோடி இனத்தவர்களே ஆளும் தகுதி பெற்றவர்கள் என்ற கருத்து லோடிகளிடையே நிலவி வந்தது. ஆப்கானிய இனங்களுள் லோடி என்பது ஓர் இனமாகும். நூஹானீகள், பர்முலீகள், சர்வானீகள், யூசுப்காயில்கள் போன்ற ஏனைய ஆப்கானிய இனங்களை, லோடிகளின் பணியாள்களாக லோடிகள் கருதி வந்தனர்[1]. இப்ராஹீம், பதவியேற்றவுடன் அரசர்களுக்கு உறவினர்களே இல்லையென்ற கொள்கையை அறிவித்தார். அதாவது, லோடிகள் ஏனையவர்களைவிட மேலானவர்களாகத் தங்களைக் கருத இயலாது என்பதாகும். தம்முடைய அதிகாரிகள் எக்குலத்தைச் சார்ந்தவர்களாக இருப்பினும், அவர்கள் யாவரும் சமமானவர்களே என்றும், அவர்கள் அனைவரும் அரசரின் பணியாள்களே என்றும் கூறினுர். அரசவையில் ஆப்கானியத் தலைவர்கள் அரசருக்குச் சமமாக உட்கார்ந்திருக்க அவர் அனுமதிக்கவில்லை. அவர்களும் மற்றவர்களைப் போலக் கைகட்டி அரசர்முன் நிற்கவேண்டும் என்றும் அவர் ஆணையிட்டார். இது பிரபுக்கள், இப்ராஹீம் லோடியிடம் கொள்ளத் தொடங்கிய அருவருப்புக்கு மற்றொரு காரணமாகும்.

சில பிரபுக்களை இப்ராஹீம் நடத்திய விதம் பிரபுக்களிடம் தோன்றிய எரிச்சலுக்கு மற்றொரு காரணமாக அமைந்துள்ளது. ஜலால்கான் கலகம் செய்து ஆக்ராவை முற்றுகையிட்டபோது, ஆதம்கான் அவருடன் ஓர் உடன்பாடு செய்துகொண்டார்.

[1] Wakiat, i. Mushtqui, p. 63 (b)

அவ் வுடன்பாட்டினை இப்ராஹீம் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார். இப்ராஹீமை நம்ப முடியாது என்ற முடிவிற்கு அந் நிகழ்ச்சி பிரபுக்களைக் கொண்டுவந்து நிறுத்தியது. டில்லி சுல்தானுக்கு உண்மையாகப் பணியாற்றிவந்த ஆஜம் ஹுமாயூன் சர்வானீ, அவருடைய மகனை பதேகான் ஆகியோரை இப்ராஹீம் தக்கமுறையில் நடத்தத் தவறிவிட்டார். தொடக்கத்தில் ஆஜம் ஹுமாயூன் சர்வானீ, ஜலால்கானை ஆதரித்தார் என்பதும், ஜலால்கானுடைய பிரதம மந்திரியாகப் பதேகான் பணியாற்றினார் என்பதும் உண்மையே. ஆனால், அவர்கள் பிற்காலத்தில், இப்ராஹீம் பக்கம் சேர்ந்துகொண்டு ஜலால்கானை அடக்கப் பேருதவி புரிந்தனர். அத்தகையோர் ஜலால்கான் குவாலியரிலிருந்து தப்பித்துச் செல்லத் துணை செய்திருக்க வேண்டும் என்று இப்ராஹீம் தவறாகச் சந்தேகித்தார். எனவே, அவ்விருவரையும் தலைநகருக்கு வரவழைத்து அவர்களைச் சிறையிலிட்டார். இதே கதிதான் இப்ராஹீமுடைய வசீரான மியான் புவாவிற்கும் (Mian Bhua) ஏற்பட்டது. அக்கால வரலாற்றாசிரியர்கள், மியான் புவாவைச் சிறையிலிட்டதற்கான காரணங்கள் சிலவற்றை நமக்கு எடுத்து இயம்பி உள்ளனர். சுல்தானுக்குரிய மரியாதையை அவர் செலுத்தவில்லை. மூப்பின் காரணமாக அவரால் சரியாக நடக்க இயலவில்லை. கண்பார்வையும் மழுங்கி விட்டது. எனவே, அவருடைய பணிகளை அவரால் சரிவர நிறைவேற்ற இயலவில்லை. பஞ்சாபை ஆண்டுவந்த தௌலத்கான் லோடியுடன் அவர் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார். அந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்டு தௌலத்கான் லோடியைச் சுல்தானுக்கு அடங்கி நடக்குமாறு செய்யவில்லையே என்று இப்ராஹீம் குறைபட்டார். மேற்கூறிய காரணங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளத் தக்கனவாக இல்லை. எனவே, மியான் புவாவின் குடும்பத்தினரும், ஆப்கானியப் பிரபுக்களும் சுல்தான் மீது கோபங்கொள்ளலாயினர்.

மேற்கூறிய காரணங்களால், பிரபுக்கள் இப்ராஹீமிடத்தில் அதிருப்தி கொள்ளலாயினர். அதன் விளைவாகக் கலகம் ஏற்பட்டது. இக் கலகத்திற்கு ஆஜம் ஹுமாயூனுடைய புதல்வரான இஸ்லாம்கான் தலைமை தாங்கினார். கலகத்தின்போது, காராவில் சேகரித்து வைக்கப்பட்ட ஆயுதங்களையும் ஏனைய பொருள்களையும் இஸ்லாம்கான் கைப்பற்றினார். அவற்றைக் கொண்டு, தமது படைப்பலத்தை மேலும் பெருக்கிக்கொண்டார். அவரை அடக்க அகமதுகானைச் சுல்தான் காராவிற்கு அனுப்பிவைத்தார். அகமதுகான் எளிதில் தோற்கடிக்கப்பட்டார். இதற்கிடையில் சையத்கான் லோடி போன்றவர்கள்,

சுல்தானுடைய படையிலிருந்து விலகித் தங்களுடைய ஜாகீர் களுக்குச் சென்று, இஸ்லாம்கானுடன் நட்புறவு கொள்ள லாயினர். அதன் விளைவாக, காரா தொடங்கிக் கன்னோசி வரையில் இருந்த பகுதிகளில் சுல்தானுடைய ஆட்சியை எதிர்த்த கலகக்காரர்களின் கைகள் ஓங்கின. கலகங்களை ஒடுக்கச் சுல்தான் உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொண்டார். பெரிய படை யொன்றைத் திரட்டினார்; இளைஞர்களைப் படைத் தலைவர்களாக அமர்த்தினார்; பல்வேறு ஆப்கானிய இனக் குழுக்களைச் சார்ந்த வர்களிடம் படை நடத்தும் பொறுப்பினை ஒப்படைத்தார். அவர்களுள், குறிப்பிடத் தக்கவர்கள் அகமதுகான், திலாவர்கான், குதப்கான், பீகன் நூஹானீ சிக்கந்தர் ஆகியோராவர். சுல்தானுடைய படைகளைக் கன்னோசிக்கருகே கலகக்காரர்கள் சிலர் மறைந்திருந்து திடீரெனத் தாக்கிப் பெருத்த சேதத்தை விளைத்தனர். அச் செய்தியை அறிந்த சுல்தான், மேலும் சில படைகளை உடனடியாகக் கிழக்குப் பகுதிக்கு அனுப்பி வைத்தார். இதற்கிடையில் கலகக்காரர்களின் படைகளின் எண்ணிக்கையும் அதிகமாயிற்று. சுல்தானுடைய படைகளும், கலகக்காரர்களின் படைகளும் ஒன்றையொன்று எதிர்த்து நின்றன. அச்சமயத்தில் ஷெயிக் யூசுப் கட்டால் என்பவர், அவர்களிடையே சமாதானம் ஏற்படுத்த முயன்றார். ஆஜம் ஹுமாயூன் சர்வானீயைச் சிறையிலிருந்து விடுவித்துவிட்டால் கலைந்து சென்றுவிடுவதாகக் கலகக்காரர்கள் கூறினார்கள். ஆனால், இப்ராஹீம் இதற்கு உடன்படவில்லை. அதே நேரத்தில் பீகார் ஆளுநரான தரியாகான் நூஹானீயையும் மற்றும் சிலரையும் கிழக்கிலிருந்து கலகக்காரர்களைத் தாக்கும்படி கட்டளையிட்டார். இரு பக்கங்களிலிருந்து தாக்கப்பட்ட கலகக் காரர்கள் இறுதியில் சுல்தானிடம் தோல்வியுற்றனர். ஏறத்தாழ 10,000 ஆப்கானியர்கள் இப் போரில் இறந்துவிட்டதாக நாம் அறிகிறோம். போரில் இஸ்லாம்கான் கொலையுண்டார். சையத்கான் உட்படப் பலர் கைது செய்யப்பட்டனர். இந்த வெற்றியைத் தொடர்ந்து, இப்ராஹீம் ஐயத்திற்குரிய பிரபுக் களைத் தண்டிக்க முற்பட்டார். ஹுசேன்கான் பர்முலீ, மியான் புவா, ஆஜம் ஹுமாயூன் ஸர்வானீ ஆகியோரின் கொலைக்கு இப்ராஹீமே காரணமாவார். இந்தக் கொலைகள், பிரபுக்களின் அதிருப்தியை மேலும் வளர்த்தன. தரியாகான் நூஹானீ, கான் - இ - ஜஹான் லோடி போன்றவர்களும் கலகம் செய்ய முற்பட்டனர். தரியாகான் நூஹானீ இறந்த பிறகு அவருடைய மகனான பகதூர்ஷா, தமது தனிப்பட்ட ஆட்சியைப் பீகாரில் நிறுவினார். சுல்தான் இப்ராஹீமை எதிர்த்த பலர், அவர் பக்கம் சேர்ந்துகொண்டு அவருடைய கைகளைப் பலப்படுத்தினர்.

அவர்களுள் காஜிபூர் ஆளுநரான நாசிர்கான் நூஹானியும் ஒருவராவார். மேற்கூறிய நிகழ்ச்சிகளின் விளைவாகப் பீகார் தொடங்கிச் சம்பல்வரையிலுள்ள மேலைக் கங்கைச் சமவெளிப் பகுதி பகதூர் ஷாவின் கட்டுக்குள் வந்துவிட்டது. பகதூர்ஷாவை அடக்க மேற்கொண்ட முயற்சிகள் யாவும் வீணாயின. பல போர்களில் பகதூர்ஷாவே வெற்றிகண்டார். கிழக்குப் பகுதியில் நிலைமை மோசமாகி வருவதையுணர்ந்த இப்ராஹீம் லோடி, பஞ்சாப்பிற்கு ஆளை அனுப்பித் தௌலத்கான் லோடியைத் தம்மை உடனே வந்து சந்திக்குமாறு கட்டளையிட்டார். தௌலத்கான் சரிவர வரிப்பணத்தைச் செலுத்திவரவில்லை. மேலும், அவர் இப்ராஹீமைப்பற்றி நன்கு அறிவார். எனவே, ஆக்ரா செல்லுவதால், தமக்கு நேரவிருந்த ஆபத்தை அவர் ஒருவாறு அறிந்துகொள்ள இயன்றது. ஆகவே, தாம் செல்லுவதற்குப் பதிலாகத் தமது மகனை திலாவர்கானை அனுப்பிவைத்தார். அவருடைய செய்கை, சுல்தானுக்குச் சினமூட்டியது. தௌலத்கான், உடனே ஆக்ரா வரவில்லையென்றால், அவரைக் கடுமையாகத் தண்டிப்பதாகப் பயமுறுத்தினார். நிலைமையைப் புரிந்துகொண்ட திலாவர்கான் எப்படியோ தப்பித்துக்கொண்டு லாகூருக்குச் சென்றுவிட்டார். இப்ராஹீமிற்கும் திலாவர்கானுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தம் மகன் வாயிலாக அறிந்துகொண்ட தௌலத்கான், உடனே காபூலை ஆண்டுவந்த பாபரின் துணையை நாடினார்.

பாபர் தந்தை வழியில் தைமூரையும், தாய் வழியில் செங்கிஸ்கானையும் முன்னோர்களாகக் கொண்டவர். அவருடைய தந்தை மத்திய ஆசியாவிலுள்ள பர்கானா (Farghana) என்ற நாட்டின் அரசராவார். அவருக்குப் பதினொரு வயதாக இருக்கும் போது, ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வாய்ப்பினைப் பெற்றார். தொடக்கத்திலிருந்தே தைமூரின் தலைநகரான சாமர்கண்டைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தார். எனவே, அவர் பட்டமெய்தியதும், சாமர்கண்டின்மீது படையெடுத்துச் சென்று அதனை வென்றார். ஆனால், விரைவில் சாமர்கண்டு மட்டுமன்றி, பர்கானாவையும் அவர் இழந்து மலைப்பகுதிகளில் ஒளிந்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டது. பர்கானா, சாமர்கண்டு ஆகியவற்றை அவர் வெல்ல, அவ்வப்போது முயற்சி செய்து வந்தார். சிற்சில நேரங்களில் அவரது முயற்சி வீணாகவில்லை. ஆயினும், இறுதியில் பர்கானாவைக் கைப்பற்றும் எண்ணத்தை விடுத்துக் காபூலுக்குச் சென்று, அங்குத் தமது ஆட்சியை நிறுவினார். அப்போதும் அவர் சாமர்கண்டை மறந்தாரில்லை. முடிவில் சாமர்கண்டை வெல்லும் நோக்கத்தைக் கைவிட்டு,

இந்தியாவில் தம் ஆட்சியை ஏற்படுத்தும் முயற்சியை மேற்கொண்டார். அவர் ஐந்துமுறை இந்தியாவின்மீது படையெடுத்து வந்ததாகக் கூறப்படுகிறது.

அவருடைய முதல் இந்தியப் படையெடுப்பு, கி.பி. 1519-ல் நடைபெற்றது. அதுபோது அவர், சிந்து, ஜீலம் ஆகிய நதிகளைக் கடந்து பீரா (Bhira), குஷாப் ஆகிய இடங்களைக் கைப்பற்றினர். மேலும், அவர் டில்லிக்குத் தூது அனுப்பி, பஞ்சாப் பகுதியைத் தாம் பெறுவதற்காக முயன்றார். ஆனல், பாபரால் அனுப்பப்பட்ட தூதுவரைத் தௌலத்கான் லோடி, லாகூரிலேயே தடுத்து நிறுத்தினர். காபூலில் உருவாகிய நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்காகப் பாபர் உடனே காபூல் திரும்ப நேரிட்டது. அடுத்த படையெடுப்பு 1519-ல் நடைபெற்றது. கைபர் கணவாய் வழியாகப் புறப்பட்டு வந்த பாபர், தம் கவனம் முழுவதையும் யூசுப் ஷாயிகளை அடக்குவதில் செலுத்தினர். 1520ஆம் ஆண்டில், அவர் மூன்றாவது முறையாகப் படையெடுத்து வந்தார். பஜோர், பீரா ஆகிய இடங்களைக் கைப்பற்றிய பிறகு, அவர் சியால்கோட்டையும் தம் கைவசமாக்கிக் கொண்டார். பின்னர், சையித்பூரை வென்றார். நான்காவது படையெடுப்பு, கி.பி. 1524ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது திலாவர்கானுடைய அழைப்பினை ஏற்று மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பாகும். 1524ஆம் ஆண்டில் இப்ராஹீமுக்குப் பல பகுதிகளிலிருந்து தொல்லைகள் வந்தவண்ணமாக இருந்தன. பதோன் முதல் பீகார் வரையிலுள்ள பகுதிகளில் கலகக்காரர்களின் கைகள் ஓங்கியிருந்தன. ஆக்ராவிற்குத் தென்மேற்குப் பகுதியில், இராணு சங்கா செல்வாக்குப் பெற்றிருந்தார். பஞ்சாபின் ஆளுநரான தௌலத்கான் லோடி, இப்ராஹீமை வீழ்த்தினலன்றிப் பஞ்சாபில் தாம் தொடர்ந்து ஆட்சி செய்ய இயலாது என்று எண்ணினர். இப்ராஹீம் லோடியின் சிற்றப்பனுகிய ஆலம்கானை டில்லி அமீர்கள் குஜராத்திலிருந்து வரவழைத்து, அவரைச் சுல்தானகப் பதவி ஏற்கும்படி கேட்டுக்கொண்டனர். இந்தச் சூழ்நிலையில் பாபரின் உதவியைப் பல திறப்பட்டவர்களும் கோரத் தொடங்கினர்கள். தௌலத்கானுடைய மகனை திலாவர்கான் பாபரைச் சந்திக்கக் காபூல் சென்றார் என்று முன்னரே அறிந்தோம். இப்ராஹீம் லோடியைப் பாபர் தோற்கடித்துவிட்டால், தாம் பாபரைத் தமது மேலாட்சியாளராக ஏற்றுக்கொள்வதாகத் தௌலத்கான் லோடி தெரிவித்தார். அதே நேரத்தில், ஆலம்கானும் காபூலுக்குச் சென்று, பாபரின் உதவியை நாடினர். இப்ராஹீமை வீழ்த்திவிட்டுத் தம்மைப் பாபர் அரியணையில் அமர்த்துவாரேயானல், அவருக்குப் பஞ்சாபைக்

கொடுத்துவிடுவதாக ஆலம்கான் வாக்களித்தார். அதேபோன்று இராணு சங்காவும் பாபரிடம் தூதுவர் ஒருவரை அனுப்பி வைத்தார் என்றும், இப்ராஹீமை வீழ்த்த பாபர் உதவி செய்ய வேண்டும் என்று அவர் கோரியதாகவும் கூறப்படுகிறது. எனவே, பாபர் மேலும் காலதாமதம் செய்யாது இந்தியாவின்மீது நான்காவது முறையாகப் படையெடுத்து வந்தார்.

இச் செய்தியை அறிந்ததும், இப்ராஹீம் லோடி பகைவரைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டார். கிழக்குப் பகுதிகளில் அவர் மேற்கொண்ட போர் நடவடிக்கைகளை முழுமையாக நிறுத்திவிட்டுத் தம் கவனத்தை மேற்குப்பக்கம் திருப்பலானார். பீகார்கான், முபாரக்கான் லோடி, பீகான் நூஹானீ ஆகியோரைப் பஞ்சாபிற்கு அனுப்பி வைத்தார். இப்ராஹீமுடைய படைத்தலைவர்கள் லாகூரைக் கைப்பற்றிக்கொண்டு, தௌலத்கானை அங்கிருந்து விரட்டியடித்தனர். இதற்கிடையில் பாபர், லாகூர்வரையிலுள்ள பகுதிகளை வென்று லாகூருக்கு அருகே வந்து சேர்ந்தார். அவரை எதிர்த்த இப்ராஹீமுடைய படைகளைப் போரில் தோற்கடித்து, லாகூரைக் கைப்பற்றி அதனை அழித்தார். பின்னர் அவர், தீபால்பூரைத் தாக்கி, அதனையும் கைப்பற்றிக்கொண்டு, அதனைக் காவல் செய்து வந்த படைகளை அழித்தார். தீபால்பூரில் தௌலத்கான் பாபரிடம் வந்து சேர்ந்தார். தௌலத்கானிடம் பஞ்சாப் முழுவதையும் ஒப்படைப்பதற்குப் பதிலாகப் பாபர் அவருக்கு ஜலந்தர், சுல்தான்பூர் ஆகிய இடங்களை மட்டுமே அளித்தார். லாகூரைத் தம்முடைய பொறுப்பிலேயே வைத்துக்கொண்டார். எனவே, தௌலத்கான் பாபரைத் தாக்குவதற்காகத் திட்டம் வகுக்கலானார். அவருடைய திட்டத்தை அவருடைய மகனே பாபருக்கு எடுத்துக்கூறி அவரை எச்சரித்தார். உரிய நேரத்தில் தமக்குதவிய திலாவர்கானுக்குத் தக்க வெகுமதி அளிக்கவும், அதே நேரத்தில் தௌலத்கானைத் தண்டிக்கவும் பாபர் விழைந்தார். அதன் விளைவாகச் சுல்தான்பூரைத் தௌலத்கானிடமிருந்து பறித்துத் திலாவர்கானுக்குக் கொடுத்துவிட்டார். தீபால்பூரை ஆலம்கானுக்கு வழங்கினார். மேற்கூறிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டுப் பாபர் காபூல் திரும்பினார்.

பாபர் காபூலுக்குத் திரும்பிய பிறகு, தௌலத்கான் முதலில் தம் மகன்மீது போர் தொடுத்துச் சுல்தான்பூரை வென்றார். பின்னர், தீபால்பூரிலிருந்து ஆலம்கானை விரட்டியடித்துவிட்டு, அதனையும் கைப்பற்றிக்கொண்டார். அதன் பிறகு, அவர் சியால் கோட்டைத் தாக்கினார். ஆனால், அதனைக் கைப்பற்ற அவரால்

இயலாது போயிற்று. இந்தச் சூழ்நிலையிலும் லோடிகளுக் கிடையே ஒற்றுமை ஏற்படவில்லை. தௌலத்கான் லோடிக்கும் இப்ராஹீமுக்கும் இடையே ஏற்பட்டிருந்த பிளவு மேலும் பெரிதாயிற்று. ஆப்கானியர்களுக்கிடையே ஏற்பட்டிருந்த சண்டைகளைத் தீர்க்க அன்னியர்களுடைய ஆதரவை நாடுவது அறிவீனம் என்று இப்ராஹீம் தௌலத்கானுக்கு எழுதிய கடித மொன்றில் குறிப்பிட்டார். இந்த நிலைக்குக் காரணம் இப்ராஹீ முடைய தகாத செயல்களே என்று தௌலத்கான் இடித்துக் கூறினார். மேலும், தீபால்பூரிலிருந்து விரட்டப்பட்ட ஆலம்கான், நேராகக் காபூலுக்குச் சென்று பாபரின் உதவியைக் கோரினார். ஆலம்கானை டில்லிக்கு அரசராக்க பாபர் இசைந்தார். அதற்கு மாறாக, பஞ்சாப் முழுவதையும் பாபருக்கு அளிக்க ஆலம்கான் ஒப்புக்கொண்டார். இந்த ஏற்பாட்டினைத் தொடர்ந்து லாகூரில் பாபர் நிறுத்திவைத்திருந்த படைகளை ஆலம்கானுக்கு உதவி செய்யுமாறு பாபர் கட்டளையிட்டார். ஆலம்கான் பஞ்சாப் திரும்பியதும், தௌலத்கான் அவருடன் பேச்சுவார்த்தை தொடங்கி அவரைத் தம் பக்கத்தில் சேர்த்துக்கொண்டார். ஆலம்கானை டில்லி அரியணையில் அமர்த்தும் பொறுப்பைத் தௌலத்கான் ஏற்றுக்கொண்டார். அதற்குப் பதிலாகப் பஞ்சாபைத் தௌலத்கானுக்கு அளிக்க ஆலம்கான் ஒப்புக்கொண்டார். ஆலம்கானும் தௌலத்கானும் 40,000 குதிரை வீரர்களுடன் டில்லியை நோக்கிப் புறப்பட்டனர். முதலில் அவர்கள் வெற்றி கண்டனர். ஆனால், அடுத்தநாள் அவர்களுடைய படை வீரர்கள் கொள்ளையடிப்பதில் கவனம் செலுத்தியிருந்த சமயம் பார்த்து, இப்ராஹீம் அவர்களைத் தாக்கி, அவர்களைத் தோற்கடித்து விரட்டினார்.

மேற்கண்ட செய்திகளை அறிந்ததும் பாபர், ஐந்தாவது முறையாக இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார். கி.பி. 1525ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் தேதியன்று, அவர் 12,000 பேர்களுடன் சிந்துவைக் கடந்தார். மால்கோட் என்னுமிடத்தில் திலாவர்கான் அவருடன் சேர்ந்துகொண்டார். காஜிகானும் தௌலத்கானை விட்டு டில்லிக்கு ஓடிவிட்டார். இந்த இக்கட்டான சூழ்நிலையில் தௌலத்கான் பாபருக்கு அடிபணிந்தார். பீரா சிறைக்குக் கொண்டுசெல்லும்போது தௌலத்கான் காலமானார். ஆலம்கானும் பாபரிடம் தஞ்சம் புகுந்தார். இப்ராஹீமுடைய நடத்தையை வெறுத்த பல டில்லிப் பிரபுக்கள் பாபருக்கு உதவ முன்வந்தனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் முல்லா முகமது மஸ்ஹப், அராயிஷ் கான் ஆகியோர் ஆவார்கள். இராணா சங்காவும் பாபருடன் ஒத்துழைக்க முன்வந்ததாகக்

கூறப்படுகிறது. மேற்கூறிய நிகழ்ச்சிகள் பாபரை உடனடியாக டில்லியைத் தாக்குவதற்கான ஊக்கத்தை அளித்தன. இப்ராஹீமும் பாபருடன் போர்புரிவதென முடிவு செய்தார். டில்லி நோக்கி வந்துகொண்டிருந்த பாபரின் படைகளும் பஞ்சாப் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இப்ராஹீமுடைய படைகளும் பானிபட் என்னுமிடத்தில் சந்தித்தன.

பாபர் தம்முடைய சுய சரிதையில் 12,000 வீரர்களைக் கொண்டு, இப்ராஹீம் லோடியைத் தோற்கடித்ததாகக் கூறியுள்ளார். தற்கால வரலாற்றாசிரியர் ஒருவர், பானிபட் போரின் போது, பாபரிடம் 8,000 பேர்களுக்குக் குறைவாகவேயிருந்தனர் என்று கூறியுள்ளார்[1]. தபகாத்-இ-அக்பாரியில் பாபரிடம் 15,000 வீரர்கள் இருந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது[2]. தௌலத்கான் லோடியை ஒழித்துவிட்ட பிறகு, பாபரின் படையில் பல கூலிப் படையினர் சேர்ந்துகொண்டனர் என்றும் அதன் காரணமாக அவருடைய படையின் எண்ணிக்கை 25,000 ஆக உயர்ந்தது என்றும் A. L. ஸ்ரீவத்ஸவா கூறுகின்றார்[3]. பாபர் தம் படைகளைப் பானிப்பட்டிற்குக் கிழக்கே அணிவகுத்து நிறுத்தினார். அவற்றின் முன்னர் 700 கட்டை வண்டிகளை நிறுத்தினார். அவற்றை 350 ஜதைகளாகப் பிரித்து, ஒவ்வொரு ஜதை வண்டிகளின் சக்கரங்களை ஒன்றோடொன்று இறுகக் கட்டினார். ஒவ்வொரு ஜதை வண்டிகளுக்கிடையே 60 அல்லது 70 கஜம் இடைவெளி விட்டார். அவ் இடைவெளிகளின் வழியாகத் தம்முடைய குதிரை வீரர்கள் ஒருவர் பக்கத்தில் ஒருவராக ஏறத்தாழ நூறு பேர்கள் ஒரே நேரத்தில் முன்னேறிச் செல்வதற்காகவே இந்த ஏற்பாட்டினைச் செய்தார். பீரங்கிப்படைக்கு உஸ்தாத் அலியும், முஸ்தபாவும் தலைமை வகித்தனர். அவர்களுள் ஒருவர் படையின் வலப்பக்கத்திலும், மற்றவர் இடப் பக்கத்திலும் இருந்தனர். பீரங்கிப்படைக்குத் தனி வகையான மார்பளவு உயரமான பாதுகாப்பு அரண்களுக்கும் பாபர் ஏற்பாடு செய்தார். பீரங்கிப்படைக்குப் பின்னால் குஸ்ரு குகால் தஷ், முகமது அலி ஜங் ஆகியோரின்கீழ் முந்துபடை (Advance guards) நிறுத்தப்பட்டன. அதற்குப் பின்னால், மையத்தில் பாபரின்கீழான படை நிறுத்தப்பட்டது. மையப்படை இரு கூறுகளாகப் பிரிக்கப்பட்டது. பாபர் அவற்றினுக்கிடையே நின்று கொண்டார். படையின் வலப்பக்கக் கோடியிலும் இடப்பக்கக் கோடியிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட துருக்கியக் குதிரை வீரர்கள் நிறுத்தப்

1 Rushbrook Williams, An Empire Builder of the Sixteenth Century, p. 132,

2 II, p. 14.

3 History of India, p. 321.

பட்டனர். இவர்களைத் துலுக்மா (Tulughma) படையினர் என்று கூறுகிறோம். பகைவருடைய பக்கப்படைகளைத் துளைத்துக் கொண்டு முன்னேறிப் பகைவரைப் பின்னிருந்து தாக்குவதே இவர்களுடைய வேலையாகும். அனைவருக்கும் பின்னால், பொறுக்கி எடுக்கப்பட்ட குதிரை வீரர்கள் அப்துல் அஜீஸ் என்பவரின் தலைமையின்கீழ் நிறுத்தப்பட்டனர். பின்வாங்கும் படைக்கு இவர்கள் ஆதரவாக நிறுத்தப்பட்டனர். பானிப்பட் நகரம் ஒரு பக்கத்திலும், யமுனை நதி மறுபக்கத்திலும் படைகளுக்குத் தக்க பாதுகாப்பாக இருக்கும் வகையில் பாபரின் படைகள் அணி வகுக்கப்பட்டு நிறுத்தப்பட்டன.

இப்ராஹீம் லோடியின் படை,ஏறத்தாழ இலட்சம் பேர் களையும், ஓராயிரம் யானைகளையும் கொண்டிருந்ததாகக் கூறப்படு படுகிறது.[1] ஆனால், 50,000 பேர்களுக்கு மேலாகப் போருக்கு ஆயத்த நிலையில் உள்ள வீரர்கள் இருக்கவில்லை என்பது அகமது யாத்காருடைய கருத்தாகும்[2]. போர் மூளுவதற்கு முன்னர், இப் ராஹீம் பெரிய ஒரு தர்பாருக்கு ஏற்பாடு செய்து, தம்மிட மிருந்த அணிகலன்களையும் பொருள்களையும் தம் பிரபுகளுக்குப் பங்கிட்டளித்துப் பகைவரிடம் வீரத்துடன் போர்புரியுமாறு கேட்டுக்கொண்டார். போரில் வெற்றிபெற்றால், அவர்களுக்குத் தக்க வெகுமதிகள் வழங்குவதாகவும் அப்போது அவர் கூறினார். இப்ராஹீம் தம் படைகளை நான்கு பிரிவுகளாகப் பிரித்தார். முந்துபடை, மையப்படை, வல அணி, இட அணி என்பன அவை.

இருபடைகளும் எதிர்எதிராக ஏப்ரல் 12ஆம் தேதி முதல் 19ஆம் தேதிவரை எட்டு நாள்கள் அணிவகுத்து நின்றிருந்தன. மேலும் காலம் தாழ்த்துவதால், தமக்கு ஏற்படவிருந்த ஆபத்தை உணர்ந்த பாபர், 20ஆம் தேதி இரவு படையொன்றை அனுப்பிப் பகைவரைத் தாக்குமாறு கட்டளையிட்டார். இத் தாக்குதலை இப்ராஹீம் எளிதாக முறியடித்தார். இந்தத் தாக்கு தல் இப்ராஹீமுடைய கோபத்தைக் கிளறிவிட்டது. அடுத்த நாள் காலையில் பகைவரைத் தாக்கும்படி தம் படைகளுக்கு உத்தரவிட்டார். இருபடைகளுக்கும் இடையே ஏற்பட்டிருந்த 4 மைல் தூரத்தை மூன்று மணி நேரத்தில் இப்ராஹீமின் படைகள் கடந்து சென்று, பாபருடைய படையை நெருங்கின. பாபருடைய படைகளின் அணிவகுப்பைக் கண்டதும் இப்ராஹீ முடைய படைகள் தங்களுடைய வேகத்தைக் குறைத்துக்

[1] Tarikh-i-Daudi, p. 134.

Tarikh-i-Salatin-i-Afghana, p. 95.

கொண்டதோடு நிற்காமல் பாபரின் படைகளைத் தாக்க அஞ்சின. திடீரெனப் பகைவர்களைத் தாக்குவதால் விளையக்கூடிய நற்பயனை இப்ராஹீம் படைகள் இழந்துவிட்டன. பகைவரின் தயக்கத்தைக் கண்டதும், பாபர் உடனே தம் படைகளை முன்னேறும்படி கட்டளையிட்டார். ஏப்ரல் மாதம் 21ஆம் நாள் போர்மூண்டது. படை அணியின் இரு ஓரங்களில் இருந்த துலுக்மா படையினரைப் பாபர் முன்னேறிச் சென்று பகைவர்களைச் சுற்றி வளைக்குமாறு கட்டளையிட்டார். அதன் விளைவாக இப்ராஹீமின் படையில் குழப்பம் ஏற்பட்டது. அதே நேரத்தில் பாபரின் வல, இட அணியினர் முன்னேறிப் பகைவர்களைத் தாக்கினார்கள். இறுதியில் பாபரின் பீரங்கிப்படை தன் வேலையைச் செய்யத்தொடங்கியது. அதன் விளைவாகக் காலை 9 மணிக்குத் தொடங்கிய போர் உச்சி வேளைக்குள் முடிவடைந்துவிட்டது. இப்ராஹீம் போர்க்களத்திலேயே உயிரிழந்தார். அவருடன் ஏறத்தாழ 20,000 பேர் மாண்டனர். இப்ராஹீமுடைய மறைவுடன் டில்லி சுல்தான்கள் ஆட்சி முடிவுற்றது.

இப்ராஹீமுடைய தோல்விக்குப் பல காரணங்களை நாம் கூற இயலும். இப்ராஹீம் லோடி ஆப்கானியப் பிரபுக்கள்மீது அளவற்ற சந்தேகத்தினைக் கொண்டிருந்தார். மேலும், அவர்களைக் கடுமையாக நடத்தினார். எனவே, ஆப்கானியர் அனைவரும் அவருக்கு மனமுவந்து உதவி செய்ய முன்வரவில்லை. மக்களுடைய ஆதரவும் அவருக்குக் கிட்டவில்லை. எண்ணிக்கையில் அவருடைய படை, பாபரின் படையைவிட அதிகமாயிருந்தது என்பது உண்மையே. ஆனால், படை வீரர்களுள் பெரும்பாலோர் போர் அனுபவம் பெற்றிருக்கவில்லை. மேலும், பலதிறப்பட்ட இனத்தவர்கள் அதில் சேர்ந்திருந்தமையால், அவர்கள் ஒற்றுமையுடன் போர்புரியத் தவறிவிட்டனர். பாபருடைய படையினர் பல்வேறு இனத்தவர்களாக இருந்தபோதிலும், அவர்களிடையே ஒற்றுமையுணர்ச்சியைப் பாபர் ஏற்படுத்தியிருந்தார். மேலும், அவர்களுக்குத் தக்க போர்ப் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தது. பாபருடைய வெற்றிக்கு, அவருடைய பீரங்கிப்படை முக்கியக் காரணமாகும். அதற்கீடான பீரங்கிப்படையை இப்ராஹீம் வைத்திருக்கவில்லை. பீரங்கியைப்பற்றி முதல் முதலாக இந்தியர் பாபரிடமிருந்தே கற்றுக்கொண்டனர். பாபர் திறமைமிக்க படைத்தலைவர். ஆனால், இப்ராஹீமுக்குப் படை நடத்துவதில் போதிய அனுபவம் இல்லை என்று பாபரே தமது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார். எனவே, இப்ராஹீமைச் சில மணி நேரத்திற்குள் பாபர் தோற்கடித்ததில் வியப்பேதும் இல்லையன்றோ?

மதிப்பீடு

இப்ராஹீமுடைய தனிப்பட்ட வாழ்க்கையில் நாம் குறையேதும் காண இயலாது; நேர்மையானவர்; பயமின்றிப் போர்புரியும் தன்மையுடையவர். டில்லியை ஆண்ட பல சுல்தான்களுள் போர்க்களத்தில் உயிரைவிட்ட சுல்தான் இவர் ஒருவரேயாவார். இஃது அவருடைய வீரத்தை விளக்குகிறது. ஆனால், அவர் சிறந்த படைத்தலைவர் அல்லர். பாபரின் படை, எண்ணிக்கையில் இப்ராஹீமுடைய படையைவிடக் குறைவாக இருந்தபோதிலும், பானிப்பட் சண்டையில் பாபர் வெற்றி பெற்றதற்கு ஒரு காரணம், படைக்குத் தலைமை தாங்கி அதனை நடத்தும் விஷயத்தில் இப்ராஹீமுக்குப் போதிய அனுபவம் இல்லாமையேயாகும். அரசர் என்ற முறையில் அவரிடம் சில நற்பண்புகள் குடியிருந்தன என்பதில் ஐயமில்லை. மக்களுடைய நல்வாழ்வில் அவருக்கு மிகுந்த அக்கறையுண்டு. விவசாய வளர்ச்சிக்கு அவர் பெரிதும் உதவினார் என்று கூறப்படுகிறது[1]. அவர் காலத்தில் விளைச்சல் பெருகியது. உணவுப் பொருள்களின் விலை மிகவும் மலிவாக இருந்தது. மக்கள் பொதுவாக மகிழ்ச்சிக் கடலிலே மிதந்தனர். நியாயம் வழங்குவதிலும் அவர் சிறந்து விளங்கினார். ஆனால், அவரைச் சிறந்த ஆட்சியாளராகக் கொள்ள இயலாது. அவர் பிரபுக்களிடம் கடுமையாக நடந்துகொண்டு, அவர்களுடைய வெறுப்பைத் தேடிக் கொண்டார். அவர் ஆப்கானிய இனத்தைச் சார்ந்தவரென்றாலும், ஆப்கானியப் பிரபுக்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்கத் தவறிவிட்டார். சுதந்திர வேட்கை கொண்ட பிரபுக்களைக் கட்டுப்படுத்தி ஒரு வல்லாட்சியை ஏற்படுத்த அவர் மேற்கொண்ட முயற்சிகள் அவ்வரை மட்டுமன்றி டில்லி சுல்தானியத்தையே அழித்துவிட்டன.

1 K. S. Lal, op. cit., p. 225.

## Abbreviations

1. ACHI : A Comprehensive History of India, Volume V Ed. by M. Habib and K. A. Nizami
2. Barani : Tarikh-i Firuz Shahi by Ziauddin Barani, Ed. by Sir Sayyid Ahmad Khan
3. Briggs : Rise of the Mohammedan Power in India by Briggs
4. CHI : Cambridge History of India
5. HCIP : History and Culture of the Indian People, Ed. by R. C. Majumdar, Volume VI
6. JASB : Journal of Asiatic Society of Bengal
7. Rehla : by Ibn Battuta
8. TMS : Tarikh-i-Mubarak Shahi by Yahya

## பிழைதிருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 25 | 22 | லோதி | லோடி |
| 30 | 36 | Tarikhi Fimz guaki | Tarikh-i-Firuz Shahi |
| 30 | 37 | ஈஸ்வரி பிரசாத், Garuna Turks | Ishwari Prasad, History of the Qarannah Turks in India |
| 36 | 37 | loc. cit., p. 108 | Life and Times of Muhammad bin Tughluq. |
| 38 | 38 | Masalik-Ul-Apsar, Eng. tr. by Otto Sias | Masalik ul Absar, Eng. tr. by Otto Spies |
| 39 | 37 | Futuh us Sabatin, p. 449 | Futuh us Salatin, p. 449 |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 40 | 22 | கல்கஷத்தி Qualshaudi | கல்கஷந்தி Qalqashandi |
| 46 | 38 | Patham | Pathan |
| 47 | 38 | loc. cit | op. cit. |
| 48 | 36 | Fulish-us Salatin, pp 423-424 | Futuh us Salatin, pp. 423-424 |
| 52 | 37 | தாலீக் இ பிருஸ் ஷாயி | Tar kh-i- Firuz Shahi |
| 52 | 38 | HCI | HCIP |
| 54 | 37 | Rehba | Rehla |
| 55 | 38 | Rituh-us Salatui, 462-365 | Futuh us Salatin, 462-65 |
| 58 | 38 | Tutuh | Futuh |
| 62 | 37 | Mohamed pin | Muhammad bin |
| 67 | 37 | Husani | Husain |
| 70 | 39 | Habib, Tarikh-i Firusz Shai | Afif, Tarikh-i Firuz Shahi |
| 82 | 34 | குற்றங்களுக்கும் | குற்றங்களையும் |
| 86 | 39 | PIHC | HCIP |
| 97 | 38 | Eswari | Ishwari |
| 98 | 8, 29, 31, 37 | காஸ்க்ரா | கங்கரா |
| 99 | 5 | காஸ்க்ரா | கங்கரா |
| 100 | 11 | வெவெறைதயும் | வேவெறைதயும் |
| 106 | 3 | Farmans | Farmers |
| ,, | 11 | Mupti | Mufti |
| 106 | 26 | Iregulars | Irregulars |
| 108 | 37 | Elliot. V & III | Elliot, III, |
| 109 | 22 | தைமூர்-இ-லாஸ் | தைமூர்-இ-லாங் |

VERIFIED
2014-2015